412
2-19
5-MAY 1919

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ விநாயக சுப்ரதீபமெனும்

மன நிலைச்சூத்திர அனுபவச்சாத்திரமாம்

வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞானவிலாச

# சிவஞானப்பயோதரம்.

இஃது
சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
கி. ஷ. பா. கங்காதர நாவலரென்றியற்பெயரமைந்துள்ள
"சிவஞானப்பாதேசியாரென்னும்"
சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
இயற்றப்பட்டு

தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

—(*)—

கலியுகாப்தம் ௫௦௨௰ ௵க்கு காளயுக்தி ௵ கும்பரவி

Registered Copy-right.
1919.

Q24
N19

223235

உ

சிவமயம்.

COPYRIGHT ... 5-MAY 1919 ... MADRAS.



PMNP 99|8

## வஞ்சி விருத்தம்.

ஓம்! ஜெய விநாயகனே வுலகோடுயிர்ப் பரமன்
ஓம்! ஜெய விநாயகனே வுயர்தவ மெய்ஞ்ஞானம்
ஓம்! ஜெய விநாயகனென் றேதினவர்ப் பிறவார்
ஓம்! ஜெய விநாயகனென் றூழ்வினைக டீர்ப்பாம். (க)

ஓம்! ஜெய விநாயக னுபாசனையைக் கடவார்
ஓம்! ஜெய விநாயகனி னுண்மையதி னிலைப்பார்
ஓம்! ஜெய விநாயகனை யுணரில்முத்தி யதுவாம்
ஓம்! ஜெய விநாயகன்ற ளுகந்து யேத்துவமே. (உ)

ஓம்! ஜெய விநாயகனே வுயிரனைத்து நிறைவன்
ஓம்! ஜெய விநாயகனொ டொக்குந்தேவ ரிலையால்
ஓம்! ஜெய விநாயகனென் றுரைத்து சன்மங் கடந்தார்
ஓம்! ஜெய விநாயகன்சீ ரோங்க வாழ்துவமே

உ

சிவமயம்.

OFFICE OF THE ...
5-MAY 1919
BAUBAS




## ஐந்தடி ஆசிரியம்.

எண்டிசை யும்பணி காசி யேத்தலின் நீநத்
தொண்டுக் காசித்து சோதிடஞ் சொல்லி
விண்டுண்மை நிறை வேதியர்க் கோலங்கொள்
துண்டிராஜ விநாயகன் றடொழ
அண்டர் வாழல காள்வது ஆணையே.



சென்னை சேத்துப்பேடு, ஸ்ரீ ஜெய வினாயக சிவப்ரகாஸ மடாலயம்

**ஸ்ரீமத். சிவப்ரகாஸ தேசிக சுவாமிகள்**

இந்நூல் அரங்கேற்றஞ் செய்தல்.

**அர்ச்சகர். சிவப்ரகாஸ குமரகுரு தேசிகர்.**

காளயுக்தி ௵ ஆவணி ௴ 24 ௳ (9-9-1918).

...Publishing House, Madras.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ விநாயக சுப்ரதீபம் எனும்,

மனநிலைச் சூத்திர அனுபவ சாத்திரமாம்

வேதாந்த சித்தாந்த சமரச சுஞான விலாச

# சிவஞானப்பயோதரம்.

OFFICE OF THE ... MADRAS 5-MAY 191

## கதிநிலை சாதன சூசிகை.


| | கதிநிலை. | சாதனை | பக்கம். |
|---|---|---|---|
| 1. | வழிபடுதெய்வ வணக்க கதிநிலை | கடவுட்சாதனை | சஎ |
| 2. | சதுர்விதசாகை சமரச கதிநிலை | வழிபடுசாதனை | ருச |
| 3. | சருவசாட்சியின் சத்தோதய கதிநிலை | சகலாபரோட்சசாதனை | சுய |
| 4. | பொறிபுலன் சத்துவப் புகழின்கதிநிலை | பூதசாதனை | சுஉ |
| 5. | சரீரத்திரவிய பந்தமுத்திகதிநிலை | தேகசாதனை | சுச |
| 6. | தன்னையறிந்தோர்த்தனிமன கதிநிலை | தெளிவுறுசாதனை | எச |
| 7. | உபரதிவைராக்கிய முயர்தவ கதிநிலை. | நிலைப்படுசாதனை | எஎ |
| 8. | மனோதிடப்பட வகுக்குங்கதிநிலை | ஒடுங்குஞ்சாதனை | எஅ |
| 9. | கன்ம தன்ம வியாப்பியஸ்திரகதிநிலை | நலம்பொலச்சாதனை | அஉ |
| 10. | உணர்வுயர்பொருட்கண்டுரைமறைகதி | அபரோட்சசாதனை | உயந |
| 11. | சீவன்முத்தர்களின் சிறப்புயர் கதிநிலை | அதீதச்சாதனை | உநரு |
| 12. | முத்திவைராக்கியசத்திய கதிநிலை | உயர்தவச்சாதனை | உருஉ |
| 13. | அன்புசெயன்பரினனந்த கதிநிலை | உழைமனச்சாதனை | உருசு |
| 14. | பக்தியாற்சனனப்பறெருழிகதிநிலை | நம்பிக்கைசாதனை | உஅக |
| 15. | உள்ளதை யுணர்த்துமுத்தமக் கதிநிலை | யதார்த்தசாதனை | உஅச |
| 16. | சிந்தித்துழைக்கினுஞ்சித்தியா கதிநிலை | நயமிலாச்சாதனை | உஅஎ |
| 17. | நீங்காப்பழியுணிலைப்படு கதிநிலை | ஒழியாச்சாதனை | உகூய |
| 18. | பயன்றராக்கல்வியின்பரிதாபக்கதிநிலை | பலனென்னுஞ்சாதனை | உகூச |
| 19. | பகட்டுரைமாயப் படாடோபக்கதிநிலை | அஞ்ஞானச்சாதனை | நா |
| 20. | ஆபாசச்சாதக அவதான கதிநிலை | மித்தைசாதனை | நஉரு |
| 21. | சாதி சழக்குரை சத்திலாகதிநிலை [லை | மாயச்சாதனை | நஉக |
| 22. | குருவருளொருமொழிதிருநிறை கதிநி | அநுக்ரஹசாதனை | நசந |
| 23. | ஞானச்சமாதி நனிமுத்தி கதிநிலை | நிட்டைசாதனை | நசஎ |
| 24. | சைவமுஞ் சைவன் சமயநேர்கதிநிலை | பிரபலசாதனை | நருந |
| 25. | மதிதுதியொன்ருய் வாழ்த்துங்கதிநிலை | மங்களசாதனை | நருரு |

| | | |
|---|---|---|
| கணபதிப்பாமாலை | ... | ளயரு |
| விநாயகக் கண்ணிகள் | ... | சுகூஉ |
| அனுபவச்சாத்திரம் | ... | எநய |
| ஆகச்செய்யுள் | | கூநாஎ |

## விநாயகமான்மிய உபாசனகாண்டம்

[வசனரூபம்.]


| | | |
|---|---|---|
| 1. | சோமகாந்தன் பூசித்தது | ௮௮ |
| 2. | வேதவியாசர் பூசித்தது | ௮௯ |
| 3. | தக்ஷப்ரஜாபதி பூசித்தது | ௯௰ |
| 4. | பிரமதேவன் பூசித்தது | ௯௰ |
| 5. | விண்டு பூசித்தது | ௯௧ |
| 6. | வல்லாளன் பூசித்தது | ௯௨ |
| 7. | தக்கன் பூசித்தது | ௯௩ |
| 8. | வீமராசன் பூசித்தது | ௯௪ |
| 9. | உருக்குமாங்கதன் பூசித்தது | ௯௪ |
| 10. | இந்திரன் பூசித்தது | ௯௫ |
| 11. | கிருச்சமதன் பூசித்தது | ௯௫ |
| 12. | பலியெனுந் திரிபுரன் பூசித்தது | ௯௬ |
| 13. | தேவர்கள் பூசித்தது | ௯௮ |
| 14. | விமலர் பூசித்தது | ௯௯ |
| 15. | உமையம்மை பூசித்தது | ௱ |
| 16. | கர்த்தமன் பூசித்தது | ௱௯ |
| 17. | நளன் பூசித்தது | ௱௧௧ |
| 18. | இந்துமதி சந்திராங்கதனை பூசித்தது | ௱௧௩ |
| 19. | சண்முகர் பூசித்தது | ௱௧௪ |
| 20. | மன்மதன் பூசித்தது | ௱௧௫ |
| 21. | உருக்குமணிதேவி பூசித்தது | ௱௧௬ |
| 22. | பிரத்தியுமனன் பூசித்தது | ௱௧௭ |
| 23. | ஆதிசேடன் பூசித்தது | ௱௧௮ |
| 24. | புருசுண்டி பூசித்தது | ௱௩௩ |
| 25. | கிருதவீரியன் பூசித்தது | ௱௩௬ |
| 26. | கார்த்தவீரியன் பூசித்தது | ௱௫௧ |
| 27. | அங்காரகன் பூசித்தது | ௱௫௨ |
| 28. | சந்திரன் பூசித்தது | ௱௫௩ |
| 29. | தூர்வை மகத்துவம் | ௱௫௪ |
| 30. | தூர்வையருச்சனை | ௱௫௫ |
| 31. | ஜனகன் பூசித்தது | ௱௫௬ |
| 32. | திரிசிரன் பூசித்தது | ௱௬௪ |
| 33. | கவுண்டின்ய முனிவர் பூசித்தது | ௱௭௨ |
| 34. | வன்னிமகத்துவம் | ௱௭௨ |
| 35. | விண்டு வாமனராகப் பூசித்தது | ௱௭௫ |
| 36. | கீர்த்தியெனும் இராஜபத்தினி பூசித்தது | ௱௭௬ |
| 37. | வன்னி மந்தாரை விருக்ஷமானது | ௱௭௮ |
| 38. | க்ஷிப்ரப்ரசாதன் பூசித்தது | ௱௮௧ |
| 39. | கணபதிமனுவின் மகிமை | ௱௮௨ |
| 40. | சூரசேனன் பூசித்தது | ௱௮௩ |
| 41. | பரசிராமன் பூசித்தது | ௱௮௫ |
| 42. | இராவணன் பூசித்தது | ௱௮௭ |
| 43. | அகத்தியர் பூசித்தது | ௱௯௧ |
| 44. | காசிபர் பூசித்தது | ௱௯௬ |

| பூஜாநுசாரம் | பக்கம். |
|---|---|
| உமாதேவியார் சதுர்த்தி விரதம் | ௱௧ |
| கிருதவீரியன் விநாயக பூஜைவிபரம் | ௱௩௭ |
| காசிபரனுட்டித்த சகஸ்ற்றநாம பூஜை | ௱௯௬ |
| சித்தி புத்தி கலியாணத்தத்வார்த்த ரகசியம் | ௯௰ |


### இவற்றுள்

கலசபூஜை, த்வாரபீடபூஜை, அபிஷேகம், அலங்காரம், அங்கபூஜை ஆவரணபூஜை, பத்திரார்ச்சனை, புஷ்பார்ச்சனை, துவாதசநாம பூஜை, அஷ்டோத்தர சதநாம பூஜை, திருவாராதனை, ஏகாதச நாமாருச்சனை, தூர்வையருச்சனை, சந்திரபூஜை, ஆசாரியபூஜை, தியானம், நைவேத்தியம், பிரதட்சணம், நமஸ்காரம், முதலிய மந்திராநுட்டான பூஜைகள் அடங்கியிருக்கின்றன.

| விஷயம் | பக்கம். |
| --- | --- |
| விபூதியணியுமுறைமை | ௨௫௬ |
| திருநீற்றின்பெருமை | ௨௫௯ |
| பஞ்சாட்சர சொரூபலட்சணம் | ௨௬௧ |
| மூவகைஞானம், தசகாரியம் தீட்சை முதலியவை | ௱௩௪ |
| சரிதை, கிரியை, யோகம் | ௫௫ |
| சரீரத்ரவியமாக்கருமத்ரவீயம் | ௬௫ |
| பந்தமோட்சம் | ௬௬ |
| தத்துவானுபவம் | ௬௮ |
| ஆத்துமானுசந்தானம் | ௬௯ |
| சாக்கிரமுதல், துரியாதீதம் | ௭௧ |
| சிவமுத்தர்களின் லட்சணம் | ௭௨ |
| பிரமசாரி | ௱௬௫ |
| கிருஹஸ்தன் | ௱௬௬ |
| வானப்பிரசித்தன் | ௱௬௮ |
| சந்நியாசி | ௱௬௯ |
| பக்தர் | ௱௭௧ |
| பிரமவேதத்தன், மாகர்த்தன் | ௨௪௧ |
| மாபோகன், மாத்தியாகன், வரன், வரியன், வரிஷ்டன் | ௨௪௨ |
| சுத்தபிர்மநிலையின் பக்குவம் | ௨௪௯ |
| ஞானபோதவிளக்கம் | ௱௫௭ |
| அறுபத்துநான்குகலை[சித்து] | ௱௬௩ |
| ஞானநிட்டையினிலைமை | ௨௫௰ |

| விஷயம் | பக்கம். |
| --- | --- |
| ஆறுமுகவிபரம் | ௱௧௫ |
| முப்புரம் | ௯௮ |
| சுழுமுனை | ௯௬ |
| பஞ்சகோசம் | ௯௭ |
| உபாசனை | ௯௯ |
| வைதிகத்தேர் | ௱ |
| எண்வகைமணம் | ௱௭௯ |
| சாந்தி முகூர்த்தம் | ௱௭௯ |
| பன்னிருத்திருமுறை | ௨௮௩ |
| அட்சரம் | ௨௧௧ |
| பாடை | ௱௨௩ |
| காசி | ௱௨௬ |
| நந்தனவனம் | ௱௯௰ |
| அரும்பொன் அல்லது ஆயிரத்தெட்டு சிவலிங்கம் | ௱௩௨ |
| இராவணன், சிவலிங்கம் குண்டம் | ௱௮௮ |
| ஆதிசேடன் | ௱௧௮ |
| குடுமிதேவர் | ௱௨௮ |
| சதுர்யுகம் | ௩௨௮ |
| நவரசங்கள் | ௩௨௪ |
| அம்மணம் அல்லது நிர்வாணம் | ௱௨௩ |
| அடியார் எச்சிலையுண்டநாய் | ௱௮௩ |
| பழிசேர் மூர்த்திகள் | ௩௫௨ |


## உதாரண சாத்திரங்களின் பெயரகராதி


அகப்பைசித்தர்
அத்துவிதானுபவம்
அருணகிரியந்தாதி
அருணாசலபுராணம்
ஆச்சாதலப்புராணம்
ஆத்திசூடி
ஆத்மபோதம்
இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி
உண்மைவிளக்க சிந்தனை
உடலறிவிளக்கம்
உதயபாநு திராவிட மாபாஷியம்
உத்தமவாதநூல்
உபதேசகாண்டம்
உபநிடதம்
உபாக்ரஹண சந்த்ரோதயம்
ஒழிவிலொடுக்கம்
ஔவையார்க்குறள்
கடம்பவனபுராணம்
கடவுள்மாலை
கடவுளந்தாதி
கண்ணுடையவள்ளல்
கந்தரனுபூதி
கருவைக் கலித்துறையந்தாதி
கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி
கல்பதாந்திரயம்
காஞ்சிப்புராணம்
காலோலோபத்க்ஷத்
குணங்குடியார்
கைவல்யநவநீதம்
சகஸ்றரூபாசன சந்திரிகை
சங்கரபாஷ்யம்
சச்சிதானந்தவிளக்கம்

சத்பாஹிதபாஷ்யம்
சதசத்தேரபாக்கிரமணி
சந்நிதிமுறை
சரண்யமுனி சத்தகாண்டம்
சவுணகாந்த மஹோபநிஷத்
சவுபரிமுனி சாபத்ரயம்
சாந்தலிங்கசுவாமிகள்
சிவசிவ வெண்பா }
சோமேசர் முதுமொழிவெண்பா }
சிவஞானதீபம்
சிவஞானபோதம்
சிவபோகசாரம்
சிவஞானப்பிரகாச வெண்பா
சிவதருமோத்தரம்
சிவரகஸ்யபாஷியம்
சிவவாக்கியர்
சிவார்ப்பிதானுபந்தி
சிவானந்தபோதம்
சிவானந்தமாலை
சிற்றம்பலநாடிகள்
சீகாளத்திபுராணம்
சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்
சுப்ரமண்யர் ஞானம்
சூதசங்கிதை
சூதபுராணிகர்
சொரூபாசாரம்
சௌபாலபாடியம்
சௌனகல்பாதி
ஞானவாசிட்டம்
ஞானவெட்டி
ஞானிகள் நிலைமை
தணிகைப்புராணம்
தண்டபாணிசுவாமிகள் }
சிறப்புநூல், பொதுநூல் }
தண்டலையார் பழமொழி
தத்தாத்திரயபாஷியம்
தாயுமானசுவாமிகள்
திருக்குதிரிசியவிவேகம்
திருக்கூவப்புராணம் [தேவாரம்
திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
திருப்பாத்திருப்புலியூர் தேவாரம்
திருப்புலியூர் வெண்பா
திருமூலர் திருமந்திரம்
திருவருட்பயன்
திருவள்ளுவர் திருக்குறள்
திருவாதவூர்ப்புராணம
திருவாய்மொழி
திருவிளையாடற்புராணம்
திருவெவ்வுட்கலம்பகம்
தேவிகாலோத்திரம்
நன்னெறி
நிஷ்ட்டானுபூதி
நீதிவெண்பா
பகவத்கீதை
பட்டினத்துசுவாமிகள்
பதிபசுபாசவிளக்கம்
பத்திரகிரியார்
பாட்டமான்மியகரணம்
பாட்டமான்மியம்
பாம்பாட்டிசித்தர்
பாய்ச்சலூர்ப்பதிகம்
பிரபுலிங்கலீலை
பிரமோத்தரகாண்டம்
சிவலிங்கநாயனார் }
பூரணானந்தோதயம் }
பெரியபுராணம்
பேரூர்ப்புராணம்
மஹாவாக்கியம்
மாணிக்கவாசகசுவாமிகள் }
திருவாசகம் }
மூத்துறை முப்பத்தாறு
மௌனதரிசனம்
வசவரேணிய சூத்திரபாஷியம்
வள்ளலார் சாத்திரம்
வாக்கியசுதையென்னும் }
திர்க்குதிரிசிய விவேகம் }
வாயுசங்கிதை
விநாயகபுராணம்
விவேகசிந்தாமணி
விஸ்வப்ரஹ்மபுராணம்
வேதஸ்லோகம்
வேமநபத்தியம்
வேழமுகம்
வைபாடிக மஹாத்மியம்
வைபாடிக முமூட்சாஸ்ரயம்

OFFICE OF THE ... 5-MAY 1919 MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவஞானப்பயோதரம்.

## ஸ்ரீஜெய விநாயகக் கணபதிப்பாமாலை.

### காப்பு - சந்தயிசை விருத்தம்.

பண் - பழந்தக்கராகம்.

உலகெலாம் பணிந் தேத்திடவர முதவிய வைங்கர
வொப்பி லாதப்ர ணவனரியய னிந்திர ரண்டர்க
ணலமெலர் நிறை முனிவரர்மஹ னியர்களு நிட்டையர்
நவிலொ ணாதமெய் யடியருமறை முறைவழி வழுவிலா
திலகுந் தொண்டர்க ளுளமதிற்றிரு நடம்புரி கணபதி
யீச்சுரன் ஜெயவிநா யகன்கழலெழின் மலிதுதி மாலையை
கலனெனப் புகழ்ந் தினிதெனவுரைத் திடவவன் கருணையே
காப்பதாந்துணை நிலவிடசதாப் பணிகுவாஞ் சரணமே.

ஒலியிசை கலிநிலைத்துறை.

அத்திக் கணபதி யமரர்க் கணபதி யன்பர்கட்கு
சித்திக் கணபதி தேவர்க் கணபதி திருநிறையும்
பத்திக் கணபதி பரமர்க் கணபதி பதிஞான
புத்திக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (1)

ஆதிக் கணபதி யண்டர்க் கணபதி யகண்டிதமாஞ்
சோதிக் கணபதி தூயக் கணபதி சுத்தமறை
நீதிக் கணபதி நித்தியக் கணபதி நின்மலவி
பூதிக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (2)

வேதக் கணபதி விமலக் கணபதி விஞ்சையினன்
னாதக் கணபதி ஞானக் கணபதி நலமகன்றார்ப்
பேதக் கணபதி பெரியோன் கணபதி போறிவின்
போதக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (3)

மூர்த்தக் கணபதி முதல்வர்க் கணபதி முறைவழுவா
தீர்த்தக் கணபதி க்ஷேத்ரக் கணபதி தெளிந்தமன
மார்த்தக் கணபதி ஸங்கரக் கணபதி வருண்ஞானம்
பூர்த்தக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (4)

அருமைக் கணபதி வமலக் கணபதி யளவுபடாப்
பெருமைக் கணபதி பெம்மான் கணபதி பேரின்பத்தி
லொருமைக் கணபதி வோம் ஓம்!. கணபதி வுயர்துரியப்
புருவக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (5)

அண்ணற் கணபதி யசரர்க் கணபதி யருவுருவைப்
பண்ணுங் கணபதி பருதிக் கணபதி பாக்கியர்க
ணண்ணுங் கணபதி நாமக் கணபதி நமசிவயப்
புண்ணியக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (6)

ஆரக் கணபதி வஞ்சற் கணபதி யருட்கலையின்
நீரக் கணபதி தேவர்க் கணபதி தின்னயின்ப
சாரக் கணபதி சருவக் கணபதி சாற்றுமணிப்
பூரக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (7)

சாத்ரக் கணபதி சமயக் கணபதி சார்ந்தசிவக்
கோத்ரக் கணபதி குருவாங் கணபதி கும்பிட்டவர்
நேத்ரக் கணபதி நித்தியக் கணபதி நிறைதவச்சீர்ப்
பூத்தக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (8)

எங்குங் கணபதி யிறைவன் கணபதி யிகபரத்து
டங்குங் கணபதி தத்துவக் கணபதி சதுர்மறையின்
றுங்கக் கணபதி தோத்ரக் கணபதி தூயருளம்
பொங்குங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (9

திகழுங் கணபதி தேவர்க் கணபதி தெரிசித்தவர்
மகிழுங் கணபதி மகத்வக் கணபதி மன்னுமன்பர்ப்
புகலுங் கணபதி போற்றுங் கணபதி பொய்யகன்றார்ப்
புகழுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (10)

அருளே கணபதி வைங்கரக் கணபதி யன்புயர்மெய்த்
தெருளே கணபதி சின்மயக் கணபதி சிந்தைசெயார்க்
கிருளே கணபதி யெவைக்குங் கணபதி யெழின்ஞானப்
பொருளே கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (11)

ஆசைக் கணபதி யண்டர்க் கணபதி யருள்வழியாந்
தேசுக் கணபதி திவ்யக் கணபதி தினகரனு
மீசர்க் கணபதி யிமையோர்க் கணபதி யேதமறும்
பூசைக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (12)

ஆரணக் கணபதி வாச்சர்யக் கணபதி யருண்மழையாங்
காரணக் கணபதி கலைமுதற் கணபதி கருதரிய
வாரணக் கணபதி மதிதருங் கணபதி மண்ணும்விண்ணும்
பூரணக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (13)

மன்னுங் கணபதி மாசற்றக் கணபதி மறைதெரிந்தோர்ப்
பன்னுங் கணபதி பக்திக் கணபதி பாசமற்றால்
மின்னுங் கணபதி விகிர்தக் கணபதி விஞ்சைமிகு
பொன்னுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (14)

தங்கட் கணபதி நம்பிக் கணபதி நற்கலைஞர்ச்
சங்கக் கணபதி சாட்சிக் கணபதி சதுர்நெறியோர்
தங்கக் கணபதி தனிகர்க் கணபதி சாற்றுஞ்சைவப்
புங்கக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (15)

யோகக் கணபதி யூகைக் கணபதி யுணர்மறையுட்
சாகைக் கணபதி சாதகக் கணபதி தமனியம்போ
லேகக் கணபதி யெழிலார்க் கணபதி யிறைஞ்சினர்க்கு
போகக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (16)

நன்மைக் கணபதி நாட்டக் கணபதி நம்பிலர்க்குத்
தின்மைக் கணபதி திகட்டாக் கணபதி சென்மகன்ம
தன்மைக் கணபதி தாங்குங் கணபதி சங்கையுளார்ப்
புன்மைக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (17)

என்றுங் கணபதி யெங்குங் கணபதி யேத்திதொழு
மன்றுட் கணபதி மாணிக்கக் கணபதி வளர்ஞானக்
குன்றுட் கணபதி குண்டலிக் கணபதி குவலயத்திற்
பொன்றாக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (18)

ஆக்குங் கணபதி யாளுங் கணபதி யழியாவரந்
தேக்குங் கணபதி சேவைக் கணபதி திருவருட்க
ணோக்குங் கணபதி நோன்பிற் கணபதி நோய்வறுமைப்
போக்குங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (19)

ஏகாக் கணபதி யிறையாங் கணபதி யிவண்பிறந்துச்
சாகாக் கணபதி சமர்வக் கணபதி தனித்துசெத்து
வேகாக் கணபதி விஞ்சைக் கணபதி வேண்டிலர்பால்
போகாக் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (20)

மலரும் கணபதி மணக்குங் கணபதி வாஞ்சையுள்ளோர்க்
கிலகுங் கணபதி யேத்துங் கணபதி யிம்பரும்பர்க்
குலவுங் கணபதி குறைதீர்க் கணபதி குணத்திலுண்மைப்
புலருங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (21)

ஊட்டுங் கணபதி வுள்ளங் கணபதி வுயிரனைத்து
மாட்டுங் கணபதி யறிவாங் கணபதி யருளுருவைக்
காட்டுங் கணபதி கர்த்தன் கணபதி கலைநெறிக்குட்
பூட்டுங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (22)

ஏற்றுங் கணபதி யிறைவன் கணபதி யெழிலுடையார்ச்
சாற்றுங் கணபதி தந்திக் கணபதி சனனவினை
மாற்றுங் கணபதி மகிமைக் கணபதி வணங்கி யன்பர்ப்
போற்றுங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (23)

கனியுங் கணபதி கருத்துங் கணபதி கனமயலை
முனியுங் கணபதி முத்திக் கணபதி மூடநெஞ்சிற்
றனியன் கணபதி சகஸ்த்திரக் கணபதி சாதுக்களின்
புனிதக் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (24)

சாந்தக் கணபதி சமரசக் கணபதி சார்ந்தவரை
யேந்துங் கணபதி யிடர்த்தீர்க் கணபதி யெழிலருளை
யீந்தக் கணபதி யின்பக் கணபதி யேத்துமறைப்
போந்தக் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (25)

சீருங் கணபதிச் செல்வங் கணபதி சிவர்முதலி
யாருங் கணபதி யனைத்துங் கணபதி யடியவர்முன்
நேருங் கணபதி நிட்டைக் கணபதி நெடுமாயப்
போருங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (26)

மெய்யர்க் கணபதி விபூதர்க் கணபதி வேதமுணர்த்
துய்யர்க் கணபதி துரியக் கணபதி சுழுத்திநிலை
வுய்வர்க் கணபதி வொப்பிற் கணபதி வுண்மையர்க்குப்
பொய்யாக் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (27)

நேமகட் கணபதி நித்தியக் கணபதி நிகரிற்கலை
நாமகட் கணபதி நாரணர்க் கணபதி நான்முகனும்
பாமகட் கணபதி பரசிவக் கணபதி பகரரியப்
பூமகட் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (28)

இறையாங் கணபதி யெண்குணக் கணபதி யிறைஞ்சிலர்க்குக்
கறையாங் கணபதி காணுக் கணபதி கனிந்தவர்க்கு
மறையாங் கணபதி வல்லக் கணபதி வகையுணரிற்
பொறையாங் கணபதி ஜெயவிநாயகன்றாட் போற்றுதுமே. ()

தூர்வைக் கணபதி சுயம்பாங் கணபதி தூயவிழிப்
பார்வைக் கணபதி பக்திக் கணபதி பரமஞான
சீர்மைக் கணபதி செய்வக் கணபதி செப்பரிய
பூர்வக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (30)

சீர்த்திக் கணபதி செழுமறைக் கணபதி சேணுலகோ
ரார்த்திக் கணபதி யானந்தக் கணபதி யருள்பெற்றோர்க்
கீர்த்திக் கணபதி கிளரொளிக் கணபதி கிருபையினிற்
பூர்த்திக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (31)

தந்திக் கணபதி சதுரிதக் கணபதி சாற்றிடுமுச்
சந்திக் கணபதி சாஸ்விதக் கணபதி சகலருக்கும்
முந்திக் கணபதி மூலக் கணபதி முழுதுணர்ந்தோர்ப்
புந்திக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (32)

ஞானக் கணபதி நன்மைக் கணபதி நறவெனுந்தே
னனக் கணபதி யட்சரக் கணபதி யாசையற்றோர்
மோனக் கணபதி முத்திக் கணபதி முகட்டிலெட்டிப்
போனக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (33)

தஞ்சக் கணபதித் தருகுங் கணபதி தனையறிந்தோர்க்
கொஞ்சுங் கணபதி குலவுங் கணபதி குணமணமும்
மிஞ்சுங் கணபதி வேதக் கணபதி விஞ்சைமறைப்
புஞ்சக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (34)

வானவர்க் கணபதி வணங்கினர்க் கணபதி வல்லமன
தானவர்க் கணபதி சத்துவக் கணபதி சருவமற்ற
மோனர்க் கணபதி முதல்வன் கணபதி முதிர்ந்தஞானப்
போனகக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (35)

வல்லக் கணபதி மகிமைக் கணபதி வாழ்த்தினர்க்கு
நல்லக் கணபதி நாரையூர்க் கணபதி நம்பிக்குயர்
செல்வக் கணபதி சிற்பரக் கணபதி தேவர்தொழும்
பொல்லாக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (36)

நயந்தரு கணபதி ஞானியர்க் கணபதி நமன்வருநா
டுயரொழிக் கணபதி சூட்சுமக் கணபதி சுழுத்தியிலுள்
நயனக் கணபதி நலமலிக் கணபதி நவிற்சரணாம்
புயமருட் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (37)

பதுமக் கணபதி பாக்கியக் கணபதி பணிந்திலர்க்கு
அதமக் கணபதி யழிக்குங் கணபதி அடியருண்ணா
மதுரக் கணபதி மஹானியர்க் கணபதி வழுத்தவொண்ணாப்
புதுமைக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (38)

மந்திரக் கணபதி வள்ளல் கணபதி மகாதந்திர
சுந்திரக் கணபதி சோமக் கணபதி சுக்ஞானச்
சிந்தைக் கணபதி தீனர்க் கணபதி தேவகணப்
பொந்திக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே (39)

கனகக் கணபதி கயிலைக் கணபதி கருதரிய
வனசக் கணபதி வழுத்துங் கணபதி வஞ்சமிலா
மனநற் கணபதி மாண்புயர்க் கணபதி மதிஞானப்
புனலடர்க் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (40)

ஆடுங் கணபதி யமலக் கணபதி யன்பர்தினந்
தேடுங் கணபதி செல்வக் கணபதி சிந்தைதனை
நாடுங் கணபதி நவிலுங் கணபதி நமன்வலியைப்
போடுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (41)

அருவக் கணபதி யதிபக் கணபதி யளவுபடாச்
சொருபக் கணபதி துரியக் கணபதி தொம்பதத்தி
னிருபக் கணபதி சித்தியக் கணபதி நெற்றி நடுப்
புருவக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (42)

ஆரூர்க் கணபதி ஔவைக் கணபதி யருட்சுரக்கு
மூரூர்க் கணபதி யும்பர்க் கணபதி யோதரியப்
பேரூர்க் கணபதி பெம்மான் கணபதி பிறப்பிறப்பாம்
போரூர்க் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (43)

தலைமைக் கணபதி சைவக் கணபதி சதுர்விதமெய்
நிலைமைக் கணபதி நிசத்வக் கணபதி நியமமிகுங்
கலைமெய்க் கணபதி கருத்திற் கணபதி கல்விமன்னும்
புலைமைக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (44)

காணுங் கணபதி கமலக் கணபதி கடமுயிராய்த்
தோணுங் கணபதி சுமுகக் கணபதி துகளகலார்
நாணுங் கணபதி நம்பன் கணபதி ஞானமலர்ப்
பூணுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (45)

அரியக் கணபதி யானைக் கணபதி யனைத்தினுக்கு
முரியக் கணபதி மேவாம்ஓம் கணபதி வோதினர்க்குப்
பிரியக் கணபதி பிரியாக் கணபதி பீடுயர்முப்
புரிநூற் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (46)

மண்ணுங் கணபதி விண்ணுங் கணபதி மாண்புகலைக்
கண்ணுங் கணபதி கருத்துங் கணபதி கடவுளுரு
யெண்ணுங் கணபதி யெழுத்துங் கணபதி யிலக்கணமாம்
புண்யன் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (47)

பாசங் கணபதி பரமக் கணபதி பக்திமணம்
வீசுங் கணபதி வேதக் கணபதி விஞ்சையருட்
பேசுங் கணபதி பிர்மக் கணபதி பெரிதுணர்ந்துட்
பூசுங் கணபதி, ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (48)

தாதைக் கணபதித் தாயுங் கணபதி தமர்மனைய
ஞைதைக் கணபதி நடனக் கணபதி நம்பிலர்க்கு
வாதைக் கணபதி வரதக் கணபதி வளர்ஞானப்
போதைக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (49)

காகக் கணபதி கர்த்தன் கணபதி கமலமலர்
வாகைக் கணபதி வஸ்துக் கணபதி வணங்கினருட்
பாகக் கணபதி பற்றுங் கணபதி பாக்கியதவ
போகக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (50)

வானுங் கணபதி மதிகதிர்க் கணபதி வரைகடலூ
மூனுங் கணபதி வுடலுங் கணபதி வுயிர்க்கிறைவன்
றானுங் கணபதி சகஸ்த்திரக் கணபதி சாற்றுஞானப்
போனகங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (51)

சத்தியக் கணபதி தலைமைக் கணபதி சகசநிட்டை
நித்தியக் கணபதி நிமலக் கணபதி நெறிவழுவார்
அத்தியக் கணபதி தொம்பதக் கணபதி தொந்தமறும்
புத்திக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (52)

ஈசர்க் கணபதி யெங்குங் கணபதி யேத்தினறாண்
வாசக் கணபதி மன்னுங் கணபதி வல்லுனர்க்கு
நேசக் கணபதி நெறியாங் கணபதி நித்தநித்தம்
பூசல் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (53)

அறமுங் கணபதி யறிவுங் கணபதி யண்டிலர்க்கூழ்
மறமுங் கணபதி மயலுங் கணபதி மனந்திகைப் பன்
னிறமுங் கணபதி நியதிக் கணபதி நீசர்க்குவப்
புறமுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (54)

மறையுங் கணபதி மறைவுங் கணபதி வணங்கினறாள்
ஞறையுங் கணபதி வுயர்வுங் கணபதி வீண்மை தவ்
நிறையுங் கணபதி நெறியுங் கணபதி நிமலகுணப்
பொறையுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (55)

ஆண்டான் கணபதி யடியர்க் கணபதி யன்பிலரை
வேண்டான் கணபதி மேலாங் கணபதி வெய்யமனந்
தீண்டாக் கணபதி செழுமைக் கணபதி திகழ்மகிமைப்
பூண்டான் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (56)

போதங் கணபதி புனிதங் கணபதி புகழ்தருநன்
னீதங் கணபதி நேத்ரங் கணபதி நிலவுஞ்சதுர்ப்
பாதங் கணபதி பரமக் கணபதி பஞ்சகுணப்
பூதங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (57)

ஞபமுங் கணபதி நடனக் கணபதி நவிலரிய
ஜெயமுங் கணபதி தீரங் கணபதி செகமனைத்தி
வயமுங் கணபதி மலைவுங் கணபதி மதிகதிர்நீர்ப்
புயலுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே (58)

பரமுங் கணபதி பயனுங் கணபதி பணிமணியுந்
திரமுங் கணபதி செல்வங் கணபதி சிந்தித்தவர்
வரமுங் கணபதி வாழ்வுங் கணபதி வழுத்திடுமுப்
புரமுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (59)

பத்தர்க் கணபதி பரமர்க் கணபதி பதினெட்டுச்
சித்தர்க் கணபதி தேவர்க் கணபதி சிவஞான
முத்தர்க் கணபதி முனிவர்க் கணபதி முன்தொழுதப்
புத்தர்க் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (60)

தழைக்குங் கணபதி சருவங் கணபதி சாற்றுமன்பர்ப்
பிழைக்குங் கணபதி பிர்மங் கணபதி பெரிதுணர்ந்தோ
ருழைக்குங் கணபதி வோங்காரக் கணபதி வுயர்ஞானப்
புழைக்கைக் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (61)

நலமுங் கணபதி நாதன் கணபதி நவிலரியக்
குலமுங் கணபதி குணமுங் கணபதி குறைதீர்க்குந்
தலமுங் கணபதி சாமிக் கணபதி தனையறியைம்
புலனுங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (62)

சோமன் கணபதிச் சூர்யன் கணபதி சொல்லும்பல
நாமன் கணபதி நம்பன் கணபதி நாடிலர்க்கு
யேமன் கணபதி யெல்லாங் கணபதி யெங்குநிறைப்
பூமன் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (63)

பாவுங் கணபதி பாட்டுங் கணபதி பலவிசையில்
மேவுங் கணபதி விமலன் கணபதி விஞ்சையரைத்
தாவுங் கணபதி சமஸ்தங் கணபதித் தழைஞானப்
பூவுங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (64)

ஆர்க்குங் கணபதி யன்பர்க் கணபதி யடியரிடஞ்
சேர்க்குங் கணபதி திறமைக் கணபதி தீயர்கண்மேல்
வேர்க்குங் கணபதி விறட்டுங் கணபதி வியன்கருணைப்
பூர்க்குங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (65)

மதியுங் கணபதி வரமுங் கணபதி மகிழ்தொண்டர்த்
துதியுங் கணபதி சுகமுங் கணபதி துணைசெய்யும்
பதியுங் கணபதி பாக்கியங் கணபதி பணிஞானப்
பொதியுங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (66)

பகலுங் கணபதி யிரவுங் கணபதி பதடர்களை
யகலுங் கணபதி யளவில் கணபதி அன்பிலரை
யிகலுங் கணபதி யிறைவன் கணபதி யெழிலடியார்ப்
புகலுங் கணபதி ஜெயவிநா யகன்றுட் போற்றுதுமே. (67)

நிதியுங் கணபதி நிமலன் கணபதி நினைந்திலர்க்குச்
சதியுங் கணபதி தர்க்கக் கணபதி சார்ந்தவர்க்கு
கதியுங் கணபதி கடவுட் கணபதி காஞூர்க்குப்
புதியக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (68)

செய்கைக் கணபதி சிந்தைக் கணபதி திகழறிவின்
மெய்மெய்க் கணபதி விரதங் கணபதி வேண்டினர்க்கு
தெய்வக் கணபதி செற்றங் கணபதி திருஞானப்
பொய்கைக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (69)

நற்பூக் கணபதி நடனக் கணபதி நவில்மறையின்
சொற்பூக் கணபதி தொம்பதக் கணபதி துதித்திலர்க்கு
விற்பூக் கணபதி விமலக் கணபதி விலையில்லாப்
பொற்பூக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (70)

கலியுங் கணபதி கலையுங் கணபதி கருதார்க்கு
நலியுங் கணபதி நறவுங் கணபதி நான்மறைச்சொன்
மலியுங் கணபதி ஹஸ்தங் கணபதி மதியதனுட்
பொலியுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (71)

இதக்கங் கணபதி யின்பங் கணபதி யெழின்ஞானப்
பதக்கங் கணபதி பரிவுங் கணபதி பணியாரை
வதைக்குங் கணபதி வாட்டேங் கணபதி மண்ணுக்சிப்
புதைக்குங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (72)

களியுங் கணபதி களிறுங் கணபதி கலைஞான
அளியுங் கணபதி அறமுங் கணபதி அறிவதனுண்
ணொளியுங் கணபதி வுதவுங் கணபதி ஒட்டியொட்டாப்
புளியுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (73)

சதமுங் கணபதி சமயங் கணபதி சார்ந்திலர்க்கு
மதமுங் கணபதி மயக்கங் கணபதி மறைநான்குப்
பதமுங் கணபதி பயனுங் கணபதி பலபலவற்
புதமுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (74)

இதயங் கணபதி யிறைவன் கணபதி யீனரைக்கொல்
கதையுங் கணபதி கிலியுங் கணபதி கிளர்த்துநலோர்
வதையுங் கணபதி வாழ்வுங் கணபதி வளர்சைவப்
புதையல் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (75)

வாகன் கணபதி மகிபன் கணபதி மதிநிறைவி
வேகன் கணபதி வேகங் கணபதி விஞ்சைமலி
யூகன் கணபதி வுதயங் கணபதி யுளாசருவ
போகன் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (76)

காரங் கணபதி கடவுட் கணபதி கருதும் பல
நேரங் கணபதி நிலையுங் கணபதி நெறிவழுவார்
வீரங் கணபதி வீரன் கணபதி வினையொழிகத்
பூரங் கணபதி ஜெயவிநா உகன்றாட் போற்றுதுமே. (77)

கடிகைக் கணபதி கணமுங் கணபதி கலையறியா
முடியுங் கணபதி முதலுங் கணபதி முடிந்தகாலாம்
படியுங் கணபதி பரமுங் கணபதி பலமொழிவெண்
பொடியுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (78)

தெய்வக் கணபதி சிகமுங் கணபதி திருமறைசொல்
துய்யன் கணபதி சுகமுங் கணபதி துகடீர்க்கும்
பொய்கைக் கணபதி புனிதங் கணபதி பொய்யருக்குப்
பொய்யன் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (79)

பகட்டுங் கணபதி பார்வைக் கணபதி பருகினருள்
திகட்டுங் கணபதி செழும்பொன் கணபதி சிந்தியாரை
யகட்டுங் கணபதி யதிபன் கணபதி யன்பர்க்குமெய்ப்
புகட்டுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (80)

மார்க்கங் கணபதி வள்ளல் கணபதி வணங்கினரூழ்த்
தீர்க்குங் கணபதி தெரிவுங் கணபதி தெளிந்தவருட்
பார்க்குங் கணபதி பதியுங் கணபதி பணிவுடைமேற்
போர்க்குங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (81)

படைக்குங் கணபதி படையுங் கணபதி பத்தர்தொழக்
கிடைக்குங் கணபதி கேண்மைக் கணபதி கேடரின்வா
யடைக்குங் கணபதி யழிக்குங் கணபதி யகந்தையரைப்
புடைக்குங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (82)

காப்புக் கணபதி காப்புங் கணபதி கண்டவர்வாழ்த்
தோப்புக் கணபதி சுமுகக் கணபதி துதியார்வா
யாப்புக் கணபதி யனைத்துங் கணபதி யன்பர்மனப்
பூப்புக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (83)

அல்லுங்கணபதி பகலுங் கணபதி அடியர்கவிச்
சொல்லுங் கணபதி நூதியுங் கணபதி தொழுதார்வினை
வெல்லுங் கணபதி விமலன் கணபதி விஞ்சையர்கட்
புல்லுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (84)

அழிக்குங் கணபதி யாக்குங் கணபதி யகிலமெலாஞ்
செழிக்குங் கணபதி செல்வங் கணபதி சேவிதருண்
விழியுங் கணபதி வியப்புங் கணபதி விஞ்சைமழைப்
பொழியுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (85)

காட்டுங் கணபதி கரணங் கணபதி கனிவிலரை
வாட்டுங் கணபதி மறைவுங் கணபதி மனங்கசிந்தோர்ப்
பாட்டுங் கணபதி பக்திக் கணபதி பணிந்திலர்வாய்ப்
பூட்டுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே, (86)

சாந்தங் கணபதி தழைக்குங் கணபதி சார்ந்தவரை
யேந்துங் கணபதி யிறைவன் கணபதி யேதமகல்
காந்தங் கணபதி கண்ணுட் கணபதி கருதுநெறிப்
போந்தக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (87)

தாதைக் கணபதி தாயுங் கணபதி சற்குருசொற்
பாதைக் கணபதி பணியுங் கணபதி பலகலையி
ேனாதைக் கணபதி வுணர்வுங் கணபதி வுண்டவர்க்குட்
போதைக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (88)

சத்திக் கணபதி தந்திக் கணபதி சாற்றுமின்ப
முத்திக் கணபதி முதல்வன் கணபதி முழுதுணர்ந்தோ
ருத்திக் கணபதி வும்பர்க் கணபதி வொடுங்குநிலை
புத்திக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே, (89)

சித்திரக் கணபதி சிந்தூரக் கணபதி தேவர்த்தொழு
ருத்திரக் கணபதி வோம்ஓம் கணபதி வோதுவர்க்கு
மித்திரக் கணபதி விகிர்தக் கணபதி வியன்சிவஞர்ப்
புத்திரக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (90)

நகைக்குங் கணபதி நன்மறைக் கணபதி நாடிலரைப்
பகைக்குங் கணபதி பரமர்க் கணபதி பக்திசெய்யெவ்
வகைக்குங் கணபதி மந்திரக் கணபதி மதியிலர்கண்
புகைக்குங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (91)

நிரந்த்ரக் கணபதி நித்தியக் கணபதி நிட்டையதிற்
சிறந்தக் கணபதி தினகரக் கணபதி செகமனைத்துந்
துரந்த்ரக் கணபதி சோபிதக் கணபதி தூயநிலைப்
புரந்த்ரக் கணபதி ஜெயவிநா யகன்றூட் போற்றுதுமே. (92)

கார்த்தான் கணபதி கருவில் கணபதி ககனமதிற்
சேர்த்தான் கணபதி ஜெயித்தான் கணபதி திருவிழியாற்
பார்த்தான் கணபதி பார்ப்பான் கணபதி பரஞ்சுடராய்ப்
பூர்த்தான் கணபதி ஜெயவிநா யகன்றூட் போற்றுதுமே. (93)

சுகவழிக் கணபதி தொந்திக் கணபதி தொம்பதத்தில்
மிகுவழிக் கணபதி வித்தைக் கணபதி விதியகன்று
நகும்வழிக் கணபதி நாயகன் கணபதி நன்முத்திப்
புகும்வழிக் கணபதி ஜெயவிநா யகன்றூட் போற்றுதுமே. (94)

தொந்திக் கணபதி துரியக் கணபதி சுழுச்சியினில்
விந்தைக் கணபதி வேதக் கணபதி விஞ்சைமலிச்
சிந்தைக் கணபதி தேவர்க் கணபதி திருஞானப்
புந்திக் கணபதி ஜெயவிநா யகன்றூட் போற்றுதுமே. (95)

அக்கரக் கணபதி யக்கங் கணபதி யறிவதனு
டொக்குங் கணபதி தொம்பதக் கணபதி துதிப்பதர்க்கு
மிக்கக் கணபதி மேலாங் கணபதி விரும்பினர்க்குப்
பொக்கிஷக் கணபதி ஜெயவிநா யகன்றூட் போற்றுதுமே. (96)

உடலுட் கணபதி வுயிருங் கணபதி வுத்தமச்சீர்ப்
படருங் கணபதி பாமுங் கணபதி பணியடியார்த்
தொடருங் கணபதி துதியுங் கணபதி துரிசற்றபொற்
புடமுங் கணபதி ஜெயவிநா யகன்றூட் போற்றுதுமே (97)

திடத்துட் கணபதி சீர்மைக் கணபதி சிவஞானி
மடத்துட் கணபதி மந்த்ரக் கணபதி மதிமதியி
னிடத்துட் கணபதி யெங்குங் கணபதி யெழில்கனகப்
புடத்துட் கணபதி ஜெயவிநா யகன்றூட் போற்றுதுமே. (98)

மாதவர்க் கணபதி வசிவசிக் கணபதி மால்தொழும்வி
நோதக் கணபதி நாலுங் கணபதி நோன்புடன்செய்
சாதகக் கணபதி தற்பரன் கணபதி சன்மார்க்கப்
போதகன் கணபதி ஜெயவிநா யகன்றூட் போற்றுதுமே. (99)

சீமான் கணபதி செழுமைக் கணபதி செப்பரிய
நாமன் கணபதி நம்பிக் கணபதி நான்மறைக்குங்
கோமான் கணபதி குஞ்சரக் கணபதி குணம்வளரும்
பூமான் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (100)

அசைவுங் கணபதி யடக்கங் கணபதி யன்புளர்பால்
வசமுங் கணபதி வரமுங் கணபதி வணங்கினர்க்கு
நிசமுங் கணபதி நிலையுங் கணபதி நிலவிடுமெண்
புசமுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (101)

இடமுங் கணபதி யேவற் கணபதி யேசினர்மு
னடமுங் கணபதி யகற்றுங் கணபதி யறிவிலருண்
விடமுங் கணபதி வெகுளிக் கணபதி வியன்மறையுட்
புடமுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (102)

மண்ணுங் கணபதி வானுங் கணபதி மறையுணடம்
பண்ணுங் கணபதி பாக்கியங் கணபதி பக்திதரு
மெண்ணுங் கணபதி யெழிலுங் கணபதி யீனர்மனப்
புண்ணுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (103)

நலமுங் கணபதி நாதன் கணபதி நவில்பஞ்சப்
புலனுங் கணபதி புகழுங் கணபதி போற்றினர்க்குத்
திலகன் கணபதி சித்திக் கணபதி தெளிஞானப்
புலவன் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (104)

தெய்வங் கணபதி திருவுங் கணபதி செடியர்களை
வையுங் கணபதி மருட்டுங் கணபதி வாழ்த்தினர்க்கு
மெய்யுங் கணபதி வித்தைக் கணபதி வீணர்கண்முன்
பொய்யுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (105)

நவமுங் கணபதி நறவுங் கணபதி ஞானமுத்தித்
தவமுங் கணபதி தானங் கணபதி சார்ந்திலர்க்கு
அவமுங் கணபதி அன்புங் கணபதி யருணிறைமுப்
புவனங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (106)

திதியுங் கணபதி தினமுங் கணபதி திகழுடுகோள்
மதியுங் கணபதி மயலுங் கணபதி மஹான்களுணர்ப்
பதியுங் கணபதி பரமுங் கணபதி பணிந்திலர்க்கூழ்ப்
பொதியுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (107)

ஓம்ஓம் கணபதி வோங்காரக் கணபதி வுடற்குளுயி
ராம்அம் கணபதி யகண்டிதக் கணபதி யறிவினடங்
தாம்தாம் கணபதி சத்தியக் கணபதி சருவவினைப்
போம்போம் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (108)

இல்லுங் கணபதி யேகாந்தக் கணபதி யெமன்வரினே
வெல்லுங் கணபதி வேதக் கணபதி வியனடியர்ச்
சொல்லுங் கணபதி சூட்சுமக் கணபதி தூய்மையுடன்
புல்லுங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (109)

கலையுங் கணபதி கனகங் கணபதி கடவுளருட்
டலைவன் கணபதி தத்துவங் கணபதி சகசநிட்டை
நிலையுங் கணபதி நியமங் கணபதி நிபுணர்களின்
புலமைக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (110)

மோகிக் கணபதி முத்திக் கணபதி முதிர்ந்திடுமுத்
தேசிக் கணபதி சீவர்க் கணபதி திருதிசிவ
யோகிக் கணபதி யூகிக் கணபதி யுணர்சருவ
பேகிக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே (111)

வல்லக் கணபதி மகிமைக் கணபதி மறையுணர்த்துஞ்
செல்வக் கணபதி செழுமைக் கணபதி தேடினர்க்கு
நல்கக் கணபதி ஞானக் கணபதி நம்பிதொழு
பொல்லாக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (112)

அருவங் கணபதி யண்ணற் கணபதி யளவுபடா
வுருவங் கணபதி வுண்மைக் கணபதி வோதுமறைத்
திருவுங் கணபதி சிவமுங் கணபதி திகழுமணிப்
புருவங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (113)

காரணக் கணபதி கர்த்தன் கணபதி கருதரிய
வாரணக் கணபதி வளந்தரு கணபதி மங்களஞ்சூ
ழாரணக் கணபதி ஹராவோம் கணபதி யனைத்தினுளும்
பூரணக் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (114)

தனியன் கணபதி தனிகன் கணபதி தனையறிந்தோர்
முனிவன் கணபதி முதல்வன் கணபதி மூர்த்திநிலை
மனமுங் கணபதி வள்ளல் கணபதி வாழிமலிப்
புனிதங் கணபதி ஜெயவிநா யகன்றாட் போற்றுதுமே. (115)

## விநாயகக்கண்ணிகள்.

திருவே மறையுருவே தேடரியப் பாக்கியமே
அருவே வகண்டமய வறிவே விநாயகனே. (1)

சோதியுட் சோதியே சுகமே பெருந் துணையே
ஆதியே யெவ்வுயிர்க்கு மனேயே விநாயகனே. (2)

ஞானத் தடாகமே நம்பினர்க்கு நம்பியே
வானமழையே சூரு வளியே விநாயகனே. (3)

கொற்றவனே சைவக் குணமணியே கோமானே
நற்றவனே திகட்டா நறவே விநாயகனே. (4)

பண்ணே யிசையே பரமே பராபரமே
அண்ணுயெ னப்பாநல் லரசே விநாயகனே. (5)

தவமே தவமதற்குத் தலையே சாராதவர்க்கு
அவமே தரவருமைங் கரனே விநாயகனே. (6)

கருணா கரனே கங்கையனுஞ் சங்கரியு
முருபார்க்க வந்தயானை வோங்கார விநாயகனே. (7)

பஞ்சாக்கரமே பழம்பொருளே பத்தர்களி
னெஞ்சிற் குடியிருக்கு நிமலா விநாயகனே. (8)

எப்பொருட்கும் வித்தா யிருப்பவனே ஞானத்
தொப்பையப்பனே வுளவுச் சொல்லாய் விநாயகனே. (9)

அன்பே யருண்மழையே யானந்த வாரிதியே
துன்பமென்ப தில்லாச் சுயம்பே விநாயகனே. (10)

குற்ற மிலார் நெஞ்சத்துட் கூத்தாடுங் குஞ்சரமே
பற்றற்றோர்ப் பார்க்கும் பதியே விநாயகனே. (11)

சாகரமே ஞானத் தடாகமே யேழையின்புன்
றேகம்விழு முன்கருணைச் செய்தாள் விநாயகனே. (12)

மோனக் கலையே முத்திக்கு வித்தான
ஞானக்கண் ணுண்மணியே நம்பி விநாயகனே. (13)

மங்கா வொளிவிளக்கே வாழ்வே பெரும்பதமே
துங்கமெய்ஞ் ஞானியர்கட் சுகமே விநாயகனே. (14)

கங்குல் பகலற்றக் காரணமே காரியமே
எங்கு நிறைந்தபர மேசா விநாயகனே. (5)

விளங்கும் விளக்கொளியே வேதாந்தப் பொக்கிஷமே
களங்கமிலாமனத்துட் கண்ணே விநாயகனே. (16)

வாழாரை வாழவைக்கும் வள்ளலே நானெளியே
னுழத்திறங்காமு னாட்கொள் விநாயகனே. (17)

துத்தியமே சத்தியமே சொல்லிறந்த சுகமுடிவே
நித்திய நிராதரனே நிமலா விநாயகனே. (18)

செஞ்சிலம்பி னோசைச் செவிகேட்கின் மும்மலவூழ்ப்
பஞ்சுபோற் பறக்குநடம் பார்ப்பேன் விநாயகனே. (19)

சுந்தரமே ஜோபிதமே தூண்டாச் சுடர்விளக்கே
மந்திரமே மறையேநவ மணியே விநாயகனே. (20)

தின்னத் தின்னத்தெவிட்டாத் தேவாமிர்தமே கனியே
மன்னுஞ் சிவஞான வாழ்வே விநாயகனே. (21)

சித்திரத்தி லேயுதித்து சித்திபுத்தி போற்றவந்த
வத்திமுகத் தானேயெ னப்பா விநாயகனே. (22)

சுத்த மனத்திற் றோன்றுந் திருவுருவே
பத்தருக் குண்டாமுட் பார்வை விநாயகனே. (23)

பரமே பழம்பொருளே பண்ணவனே பரஞ்சுடரே
தரணிமுத லியாவுக்குந் தாயே விநாயகனே. (24)

பூரணானந்தப் புண்ணியனே கண்ணியனே
காரண கார்யங் கடந்தக் கண்ணே விநாயகனே. (25)

மாமணியே சைவ வள்ளலே விஞ்சையெனுந்
தூமணியே தெய்வச் சோதி விநாயகனே. (26)

கருணை மலையே கங்குட் பகலற்றதெய்வ
யுருவே யெனதுடற்கு ளுயிரே விநாயகனே. (27)

மூலச் சுழிமுனையே முத்திக்கோ ராதரவே
காலன் றனைவெருட்டிக் காப்பாய் விநாயகனே. (28)

எண்குணனே யெம்பரமே யேசற்ற நன்னிலையே
மண்ணும்விண் ணுந்துலங்கு மதியே விநாயகனே. (29)

தோன்றாப் பெருங்கருத்தே சொல்லரியத் தூவெளியே
ஏன்றா னெனைப்படைத்தா யியம்பாய் விநாயகனே. (30)

சகசநிட்டைத் தனிலே தாண்டவமாடுஞ் சிவமே
இகபர சுகமுனையன் றின்றே விநாயகனே. (31)

அக்கரமு நீயே வனைத்தந் தையுநீயே
யெக்குணமு நீயல்லா தெவரோ விநாயகனே. (32)

சொன்னமே ஞானச் சுயஞ்சோதியே சுடரே
நன்மைதர வேண்டுங்கழ னமஸ்து விநாயகனே. (33)

கல்விக் களஞ்சியமே கற்றோர்க் கணிகலமே
செல்வக் கணபதியே தேவே விநாயகனே. (34)

கட்டிக் கரும்பே கனியே கனிரசமே
யட்டளவில் லாமோன வாழ்வே விநாயகனே. (35)

தூண்டா மணிவிளக்கே துரியாதீதச் சுழியே
மாண்டார்த் தமையெழுப்பு மருந்தே விநாயகனே. (36)

பரமார்த்த நன்னிலையே பஞ்சவர்ணக் கிளியே
வரந்தந்துக் காக்கும் வள்ளல் விநாயகனே. (37)

தேனே மதுரமே தெவிட்டாதத் தெள்ளமிழ்தே
வானே மழையே சர்வவளமே விநாயகனே. (38)

சொல்லர்க் கரியச் சுகப்பொருளே சூக்ஷமயனே
வெல்லர்க் கரியஞான விளைவே விநாயகனே. (39)

தேவர்க் கிறையே தேவொரின் றெளிவே
மூவர்க்கு முன்னோய் முதல்வ விநாயகனே. (40)

சச்சிதானந்த சதானந்தமே சருவ
யிச்சையெல் லாந்தடுத்தா ளெந்தாய் விநாயகனே. (41)

அண்டபிண்ட மெல்லா மாக்கியாண் டழிப்பவனே
தொண்டருள் ளத்தோங்குந் துரையே விநாயகனே. (42)

கொற்றவனே நற்றவமே கூடாப் பெருந் தகையே
வற்றாச் சமுத்திரமே வாழ்வே விநாயகனே. (43)

பாவாதீதப் பொருளே பாக்கியமே மோக்கியமே
தேவாதி தேவருக்குந் தேவே விநாயகனே (44)

கருணாகர வடிவே கற்பகமே தற்பரமே
அருணோ தயமேயெ னன்பே விநாயகனே. (45)

பாரனைத்தும் படைத்துப் பாதுகாக்கும் பரமே
சீரனைத்து முன்செயலாய்த் தெரிந்தேன் விநாயகனே. (46)

கங்குல் பகலற்றக் கடவுளே வுன்னுருவை
மங்கா வுளத்திற்கண்டு மகிழ்வார் விநாயகனே. (47)

தூயவடிவே சொல்லரியப் பேரொளியே
மாயவடிவே மகத்தே விநாயகனே. (48)

களிப்பார்க் களிப்பே காண்பார்க்குக் காட்சியே
துளிர்க்கு ஞானப்பூவே துணையே விநாயகனே. (49)

அஞ்சலென்று நல்லோருன் றுள்ளடைந்தா ரருட்பெற்று
கெஞ்சி நின்று யேழைமிக விளைத்தேன் விநாயகனே. (50)

ஞானத் திவாகரனே நான்மறையின் பெட்டகமே
மோன நிலையின் முதலே விநாயகனே. (51)

வாருயருமன்பே மன்னுகின்ற சிற்பரனே
தேகமதில் வாழ்ப்ராண் சிவா விநாயகனே. (52)

ஓங்கார வட்டமதி லோங்கும் பிரணவமே
நீங்காது நீடசற்று நினையாய் விநாயகனே. (53)

தொந்தி வயிற்றோனே தூயமனோரதமேமுச்
சந்தியில்வாழ்ப் பிள்ளையரே சரணம் விநாயகனே. (54)

அருண்மணக்கு ஞான வரசே வனுதியனே
மருண்மணக்கும் பேதை யெங்ஙன் வாழ்வேன் விநாயகனே. (55)

சொல்லாகிச் சொன்முடிவாய்த் தூரஞ் சமீபமுமா
யெல்லாமாய் நிற்பதுனக் கெளிதே விநாயகனே. (56)

பத்திக்குவித்தே பரமாணு பவவெளியே
சித்தியெல்லாஞ் செய்யுந் தேவே விநாயகனே. (57)

மாணிக்க மாமலையே மரகதமே பச்சை
ஆணிப்பொன் னம்பலம்வா ழப்பா விநாயகனே. (58)

விலையிலாப் பொன்னே விற்பனமே கற்பனையே
கலைகளுக்குக் கண்ணேநல் கருத்தே விநாயகனே. (59)

அருவே வருவுருவே ஆரணமே பூரணமே
திருவே மெய்ஞ்ஞானச் சிவமே விநாயகனே. (60)

உன்னைப்போ லுற்றதுணை வுலகிலொருவருமில்லை
யென்னைப்போ லேழையரு மில்லை விநாயகனே. (61)

பந்தமறச் சந்தமும் பணியுந் தொழிடந்தால்
வந்தவழி யினிசனிக்க மாட்டேன் விநாயகனே. (62)

பிறவிக் கடனீந்தும் பெரியோர்த் தமையடைய
அறமொன்றுஞ் செய்திலனே? வந்தோ விநாயகனே. (63)

சாதனையை விட்டாற் ருன்வரா முத்தியெனும்
போதனை வழாதருட்செய் புண்யம் விநாயகனே. (64)

எங்குமொரு மயமா யிருக்கின்ற வுத்தமர்கட்
பொங்குவது மங்குவதும் பொய்யே விநாயகனே. (65)

பித்துப் பிடித்தவர்போற் பேசாதிருப்பர் நலச்
சத்துசித் தானந்தஞ் சார்ந்தார் விநாயகனே. (66)

உண்மையுடனே யறிவு வூடுருவிப்பாய்ந்து நின்ருற்
றிண்ணிய ஞானக்கடலிற் சேர்க்கும் விநாயகனே. (67)

நீங்காம னீங்கி நெறிநின்ருர் சருவமுமாய்த்
தூங்காமற் றூங்கிச் சுகிப்பார் விநாயகனே. (68)

பாசையதுப் போனுற் பசுகாணம் பதிஞானத்
தேசறிவாய்க் காணத் தெரியும் விநாயகனே. (69)

கண்டவர்க்கே யானந்தங் காணுர்க்கு முண்டுகொலோ?
விண்டவர்க ளெவ்வணந்தான் விதித்தார் விநாயகனே. (70)

அருகிருக்கு மண்டுகே மருந்தாது தூரமுள்ள
சுரும்பிவந்துத் தேனையுண்டுச் சுகிக்கும் விநாயகனே. (71)

உண்டவர்க்கே பசிபோ முண்ணுர்க்குத் தீர்ந்திடுமோ?
பண்டைவினைப் போனுல் பலிக்கும் விநாயகனே. (72)

மந்தியெனு மனத்தால் வாடிநெஞ்சம் புண்ணுகிக்
குந்தி யழுதகினுற் குணமோ விநாயகனே. (73)

பிறப்பிறப் பில்லாதப் பெருமானே நின்புகழை
யிறக்கின்றத் தன்மையனென் னிசைப்பேன் விநாயகனே. (74)

கட்டுப்படா மனமாங் காடதனைச் சீர்த்திறுத்தி
மட்டுப்படும் வரந்தா வாழ்வேன் விநாயகனே. (75)

தொல்லையற்றுச் சொல்லுமற்றுச் சுகதுக்க மிரண்டுமற்று
யெல்லையற்று வோய்ந்தென் றிருப்பேன் விநாயகனே. (76)

என்று வொழியுமோ யெவ்விடத்திலே விழுமோ
நன்றென்ற நாற்றவுட னவிலாய் விநாயகனே. (77)

உதவுமென் றெண்ணி வுழைத்தவைப் பாழாக
யிதயம் வருந்தமிக யினைத்தேன் விநாயகனே. (78)

சாகாப் பதவி சமாதியெனுஞ் சாயுஜ்ய
மேகாந்த முள்ளவர்க்கே யெய்தும் விநாயகனே. (79)

அகண்டபரி பூரணமா யதுவது வானார்தமக்கே
சகஞான முத்தியென்றுஞ் சொந்தம் விநாயகனே. (80)

கோதற்ற மெய்யடியார்க் கூட்டுறவு வந்துவிட்டால்
வாதற்று வோர்கதியில் வாழ்வேன் விநாயகனே? (81)

இருவினைக ளற்றார்க் கிடருமிலை யேமனிலைப்
பெரும்பயன் பேசாதப் பெருமை விநாயகனே. (82)

நல்லவரெல் லாம்போனாற் நாச மோசந் தடித்தப்
புல்லனியா னென்றுசெத்துப் போவேன் விநாயகனே. (83)

விட்டிலைப் போல விளக்கில் விழுந்திறக்கு
மட்டிபுத்தியை யெனக்கேன் வகுத்தாய் விநாயகனே. (84)

ஒழியாக் கவலை வோய்ந்திட்டா லியான்பிழைப்பேன்
கழிப்பிடிக்கு நாளில்வெகு கஷ்டம் விநாயகனே. (85)

எந்தயிடத்திலுயி ரேகிடுமோ யேதறிவேன்
வந்தவழி மாற்ற வரந்தா விநாயகனே. (86)

தன்னை யறிந்தார்த் தலைவனையுந் தானறிவ
ரென்னுமொழி யாவருக்கு மெளிதோ விநாயகனே. (87)

சூட்சநிலைக் கண்டோர்த் தூங்காமற் றூங்கிருப்பர்
காட்சிநிலை யவர்க்குவுட் கண்ணாம் விநாயகனே. (88)

மனக்கேடகன்றால் வஞ்சமிலைத் துஞ்சலிலைத்
தினகரனைப் போலெங்குஞ் சிறப்பார் விநாயகனே. (89)

ஒருநெறியி னின்றோ ரூமையைப் போலிருப்பர்
கருதுவதெல் லாம்பிர்மக் கலப்பே விநாயகனே. (90)

மாறுவதுங் கூறுவதும் மகிழ்வும் புகழிகழ்ச்சிச்
சீறுவது மவர்க்குவொன்றுந் தெரியா விநாயகனே. (91)

அண்ட மிடிந்தாலு மாகடியஞ் செய்தாலும்
விண்டவர்கண் மாறிவழி விலகார் விநாயகனே. (92)

எஞ்ஞான்று மோர்நிலையி விருப்பார் விதேக முத்தர்ப்
பஞ்சுபோற் பறப்பரென்போற் பாவி விநாயகனே. (93)

வீணாவார வெகுளியதைத் தான்பெருக்கி
காணாமற் கட்டுரைத்தக் கடையேன் விநாயகனே. (94)

சூதற்று வாதற்றுத் தொந்தமுடன் பந்தமற்ற
நாதர்க்களுக்கு சொந்தம் ஞானம் விநாயகனே. (95)

நிற்குநெறிப் போனு னேரடைவ தாச்சரியங்
கற்குநெறி விட்டவர்க்குங் கடினம் விநாயகனே. (96)

காஞ்சிரங்காய்த் தின்னக் காலமெல்லா முழைத்தேன்
வாஞ்சித்திலே னுன்றுண் மறந்தேன் விநாயகனே. (97)

காலமென்றுங் கோலமென்றுங் கன்மதன்ம சன்மமென்றுந்
தாலமிசைச் சொல்லியான் றழைத்தேன் விநாயகனே. (98)

செல்லைப்போலத் துளைக்குஞ் செகமாய்கைத் தன்னிலெனைப்
பல்லை யிளிக்கவிட்டுப் பார்த்தாய் விநாயகனே. (99)

தோற்ற மொடுக்கமிலாத் தொம்பதமே யென் குணத்தை
மாற்றவரந் தந்தால மடியேன் விநாயகனே. (100)

சாகாச் சமாதிநிலைச் சார்ந்தாரே சீவமுத்தர்ப்
போகா வினைச்சும்மாப் போமோ விநாயகனே. (101

கருப்பிணிக ணீங்கிக் கயிலைச் சுகமடையத்
திருப்பணிகள் முன்னோர்ச் செய்தார் விநாயகனே. (102)

ஏகாந்த மெய்ப்பதவி யெய்தினர் மெய்யடியர்
மோகாந்தந் தான்றருமோ முத்தி விநாயகனே. (103)

தரியலர்போல் வாதைத் தான்செயா தாட்கொள்வாய்த்
தெரிவரிய நிற்குந் தேவே விநாயகனே. (104)

சொன்னமறை யெங்கே சொல்லினவர் தானெங்கே
மன்னுநீ நானெங்கே வகுப்பாய் விநாயகனே. (105)

பறந்தாலு மூர்க்குருவிப் பருந்தாகா மனமொடுங்காத்
துறந்தார்க்கு யென்ன சுகந் தோன்றும் விநாயகனே. (106)

ஆழமறியா திறங்கி யவதிப்படுவான்போ
லேழைமதியா னேந் திளைத்தேன் விநாயகனே. (107)

வேசிதனைப் போல மினுக்கினே னன்றிமூல
வாசிதனைக் கட்டி வாழேன் விநாயகனே. (108)

பணியாதக் கோயில் பசியாதச் சோறுடனே
அணியாத நீறெனக்கென் றருள்வாய் விநாயகனே. (109)

மித்தைமனக் காட்டில் விளைப்பயிரெலாஞ்சாவி
செத்தபிண மானபினென் றெரியும் விநாயகனே. (110)

நெற்கதிர்போற் றாழ்ந்து நிலைமுத்தி வீடடைந்தாற்
சற்குண முதிக்குநன்மைச் சார்வேன் விநாயகனே. (111)

அழியாப் பதவியை யடைந்தனனே லெல்லையேய்க்கு
மொழியாக் கவலையின்கண் ணுறங்கும் விநாயகனே. (112)

மறையே மறைச்சுடரே மாதவர்க ளுட்கருத்தே
யிறையே யெனைப்பெற்ற யெந்தாய் விநாயகனே. (113)

தத்துவந்தொண் ணூற்றாறுந் தன்வலியைத் தானறிந்தாற்
சித்தமனம் புத்தியொன்றாய்த் திகழும் விநாயகனே. (114)

பாண்ட முடையாமற் பாதுகாத் தாற்பயனுண்
டாண்டனு பவிக்குமுயி ரழியா விநாயகனே. (115)

முட்டையைப் பொரித்தபின் முளைக்கா தனுபவம்போற்
கெட்டமனம் மட்டுபட்டாற் கிளைக்கா விநாயகனே. (116)

காடகன்று வீடடைந்தார்க் காற்றுமழைக் கஞ்சுவரோ
கேடகன்று பீடடைந்தார்க் கெலித்தார் விநாயகனே. (117)

பரிதாபம் பரிதாபம் பாவிபடு கண்கலக்க
மரிதரிது யெனக்கண் டடங்கல் விநாயகனே. (118)

குற்றமுள்ளக்காது குறுகுறெனுந் தன்மையைப்போல்
பற்றுளதீ தென்மனமும் பதைக்கும் விநாயகனே. (119)

பொத்த லடையாமற் போட்டபொரு ணின்றிடுமோ
அத்தகை தேகமறிவு வான்மா விநாயகனே. (120)

சுட்ட சட்டிக் கைவிட்டச் சோதனையைப் போல்வாதைப்
பட்டுவிட்டா லின்பநிலைப் பலிக்கும் விநாயகனே. (121)

போற்றித் துதியேன் புனலாடேன் விரதமிலேன்
கூற்றனையெவ் வண்ணந்தடுத்துக் கொள்வேன் விநாயகனே. (122)

தானந் தவஞ்செய்யேன் தத்துவமுந் தானெடுக்கேன்
மோனமுத்தி ஞான மெங்ஙன் முடியும் விநாயகனே. (123)

வேடங்கண் வேண்டேன் வீண்பேச்சுக் கற்றிலேன்
ஆடங்கம் வேண்டே னழியேன் விநாயகனே. (124)

தோற்றமொடுக்கத் தொல்லைகளை யான் வேண்டேன்
மாற்றுவதற் குற்றநீநன் மருந்தே விநாயகனே. (125)

மூவாசைக் கட்டில் முட்டிக் கிடப்பதனாற்
றேவாசை யென்பதெங்ஙன் றெரியும் விநாயகனே. (126)

மனம்போல மாற்றானும் வல்லுனரு நல்லவரு
மினமொன் றிருந்தார்த்தலை யெடுக்கேன் விநாயகனே. (127)

சோதனையும் வாதனையுஞ் சூட்சமுணர்த்துங் குருவின்
போதனை முன்னை நசித்துப் போகும் விநாயகனே. (128)

சாந்தபதவ் யோமநிலைச் சார்ந்தவர்க்கு மெய்க்குருவால்
போந்தநல் லறிவுமவண் பொலியும் விநாயகனே. (129)

நல்லவர்க ணேசம் ஞானமுத்தி நல்கிடுங்காண்
புல்லர்க டைமைதனைப் புகல்வார் விநாயகனே. (130)

காரணமுங் காரியமுங் கனகமொளி நகையதைப்போ
லாரணமு மறிபவனீ யன்றோ விநாயகனே. (131)

எண்ணுமெழுத்து மிலக்கண விலட்சணமுங்
கண்ணுங் கருத்துமெனக் கலந்தாய் விநாயகனே. (132)

சித்தஞ் சிவமாகத் தெளிந்தவரே சீவமுத்த
ரத்தவஞ் செய்திருந்தா லெய்தும் விநாயகனே. (133)

நீதியறிந் தோர்நிலையி னின்றவரே யனுபவிப்பர்
பீதியுடையே னென்னப் பெறுவேன் விநாயகனே. (134)

என்னை மறந்து யேகாந்தந் தன்னிலேயா
னென்றிருக்க தயைசெய்வா யியம்பாய் விநாயகனே. (135)

சூக்ம வறிவுடையத் தூயர்க ளின்பமதைத்
தேக்கி சதாகாலஞ் செழிப்பார் விநாயகனே. (136)

பிறந்தயிடந் தேடும் பேய்க்குண நீங்கிவிட்டா
லிறந்தயிட மிறக்குமிட மில்லை விநாயகனே. (137)

பார்த்ததெலாம் பாழாய்ப் பலிசமுறுமே யானால்
சீர்த்திமிகு ஞானமென்னுட் செழிக்கும் விநாயகனே. (138)

சந்தையின்கூட்ட சகசால வித்தையெல்லாஞ்
சிந்தையறிந் தாளரையொன் றுஞ் செய்யா விநாயகனே. (139)

ஆனது மாகாததெது வந்தோ பார்க்கப் பொழுதுப்
போனப்போ தன்றோ புலரும் விநாயகனே. (140)

உடைகின்றப் பாண்டத்தை வோகெடுவே னம்பியந்தோ
நடைப் பிணமாய் நாட்கழித்தே னன்றோ விநாயகனே. (141)

என்போற் பிறந்தவர்க ளொத்தனைப்பே ருன்கழலில்
மன்னுஞ் சுகம்பெற்று வாழ்ந்தார் விநாயகனே. (142)

நிஜமநேர மோர்வழி னிற்காதப் பேய்மனத்தா
லுமைமறந் தழியவைத்தா யுரையாய் விநாயகனே. (143)

சோம்பேறி யாகிச் சூதுவாதும் பேசி
நாம்பிரம மென்றுளரி நலிந்தேன் விநாயகனே. (144)

தொல்லை யகன்றார்ச் சுகமுத்திக்கு நிற்பதற்கோ
ரெல்லைக் கிடைக்கும்பிறப் பில்லையே விநாயகனே. (145)

சோற்றா லடித்தச் சுவரதுவு நிற்குவரைச்
சோற்றுக்கே வேதாந்தஞ் சொல்வேன் விநாயகனே. (146)

அஞ்சா வகங்கார வாணவப்பேய்த் தான்சாக
கெஞ்சி மருந்துனை நான் கேட்டேன் விநாயகனே. (147)

மணக்கோலங் கொண்டு வாழ்ந்தவாழ் வெல்லாம்போய்ப்
பிணக்கோலங் கண்டுமுன்றாட் பேணேன் விநாயகனே. (148)

சிங்காரமாகத் தெருசுற்றி யாடினவைப்
பொங்கி வழிந்தே வீணாய்ப் போச்சு விநாயகனே. (149)

வேதாந்தச் சித்தாந்த வேற்றுமைகட் பேசுபவர்ப்
பேதாந்தப் பேயரிலே பெரியோர் விநாயகனே. (150)

ஒருவேளைச் சஞ்சலத்தா லோங்கியே நானழுவேன்
கருணைநீ வைத்தாலியான் கலங்கேன் விநாயகனே. (151)

தொழுவே னொருவேளைத் துக்கிப்பேன் பூரித்து
விழுவேன் பசியினால் மெலிவேன் விநாயகனே. (152)

குடிகெடுக்கு மனத்தாற் கூத்தாடினே னடியார்க்
கடிமைய னீகவர மருளாய் விநாயகனே. (153)

வந்தி மகவைப்பெற்ற வருத்தமறி யாளவ்வணம்
பந்த மற்றோர் நிலையென் பார்த்தேன் விநாயகனே. (154)

ஆட்டுகின்றா யாடுகின்றே னடக்கினா லடங்குகின்றேன்
காட்டினா லன்றோநான் காண்பேன் விநாயகனே. (155)

பாட்டறியேன் பாட்டின் பயனறியே னின்மகிமைக்
கேட்டறியே னெனக்கென்னக் கிடைக்கும் விநாயகனே. (156)

உண்ணருசிக்கே வுழைக்கின்றே னாகெடுவேன்
பண்ணுந் தவமெங்ஙன் பலிக்கும் விநாயகனே. (157)

ஊருராய்ச் சுற்றி வொதியமர மாயுலுத்துக்
காரூரிற் கண்கலங்கிக் கசிந்தேன் விநாயகனே. (158)

சுகபோக முத்தித் தோற்றமெலா முத்தருக்கே
யிகழ்ச்சியிற் பிறந்திறப்பே னென்னே விநாயகனே. (159)

ஓடாமல் வீணி லுழைக்காதுப் புன்மனத்தால்
வாடாத நல்லவர்கள் வாழ்ந்தார் விநாயகனே. (160)

எங்குசென் றெத்தவங்க ளெய்திடினு மங்கெல்லாந்
துங்கநின் னுருவமதே தோன்றும் விநாயகனே. (161)

வெண்ணீறணியாது வீண்கதைகட் பேசுவர்க
ளெண்ணமது வென்னவோ வியம்பாய் விநாயகனே. (162)

சின்னமதைத் தானணியாத் தீயருட னுண்டுடுத்தி
மன்னுகலைப் பேசிதும்பி வளர்த்தேன் விநாயகனே. (163)

சச்சிதானந்தந் தழைத்தமெய்ஞ் ஞானியர்க்கு
மெச்சமயமு மொன்றா யிருக்கும் விநாயகனே. (164)

சமயப் பகுதிநெறிச் சாதனையோர் சார்த்திருப்ப
ரமரர்ப் பதியடையு மன்பால் விநாயகனே. (165)

தூக்கமற்ற யேக்கமற்றுச் சொல்லும்பல மோக்கமற்று
நீக்கமற்று நிற்பதெந்நாள் நிகழ்த்தாய் விநாயகனே. (166)

பாம்பின்வாய்த் தேரைப் படும்பாடாய்ப் பட்டுநொந்தேன்
சாம்பிணமாமுனரு டந்தாள் விநாயகனே. (167)

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவு நாணமின்றி
யேசுவதுங் கூசுவது மெளிதே விநாயகனே. (168)

பார்த்தவர்க ளுண்மைப் பறைவாரோ பறைந்தாலுந்
தீர்க்கமுட னுய்ந்தெவர்கடெரிவார் விநாயகனே. (169)

நானென்னுங் குரங்கு நங்குசெயப் பங்கமுற்ற
வூனென்று நற்குணத்தி லோங்கும் விநாயகனே. (170)

நன்மையினிற் றீமை நடுமுளைத்துக் கொல்லுதல்போ
லின்பமதி லிடர்வந்து யேய்க்கும் விநாயகனே. (171)

அசையா மனிவலிய ரன்றி மற்றோர் செயிக்கார்
பசைவாய்ப் பட்டிழிந்தார்ப் பயனே விநாயகனே. (172)

ஊனுறக்க மில்லா தொருநிலை வாய்த்தவர்க
ளேன்பிறந் தேநசிப்ப தில்லை விநாயகனே. (173)

அன்பர்க்கு வன்பனு யல்லார்க்கு வல்லானாய்
மன்னுகின்ற நின்மகிமை மறக்கேன் விநாயகனே. (174)

சித்தசுத்தமானாற் றெளியு முருத்தெரியும்
பெத்தமுத்தர்ப் போனநெறிப் பெரிதே விநாயகனே. (175)

மழையில்லாப் பயிர்ப்போல் வாடுகின்ற யென்னையருகே
அழைத்துனடிக் காளாக்க வரிதோ விநாயகனே. (176)

ஞானவிளக்கே நடுநிலையிற் கூத்தாடு
மோன விளக்கேவெண் முத்தே விநாயகனே. (177)

சகலாகமத்தின் றனிப்பொருளே யெல்லாச்
சுகபோக முன்னதென்றே சொல்வேன் விநாயகனே. (178)

அஞ்சுமொன் றாகுமொரு வந்தரங்கஞ் சொல்லிவிட்டாற்
கெஞ்சேன் பிறவியினுற் கிருபை விநாயகனே. (179)

ஆடிப் பறப்பதுபோ லங்குமிங்குமே யலைதல்
வாடிக்கையோ சனன வளமோ விநாயகனே. (180)

திருவுளமே தொண்டர்த் தேடித் தொழும் பரமே
கருவிலினி வாரர்கேற் கண்பார் விநாயகனே. (181)

நடைப்பிணமாக நாணமின்றியே திரிந்து
வுடைக்கலத்திற் குள்வுயிரியா ரோது விநாயகனே. (182)

நன்றெனலுந் தீதெனலு நானெனலு நீயெனலு
மென்றுவொன் றாய்த்தோன்று மெய்த்தாய் விநாயகனே. (183)

மணங்கொண் டிருவர் வாழ்ந்து மருவுதல்போல்
குணத்தினும் குலவுநாட் குணித்தாள் விநாயகனே. (184)

மெய்யென்னு முண்மை விளங்கிடினே நம்பினதின்
பொய்யெல்லா மன்றொழிந்துப் போகும் விநாயகனே. (185)

நில்லென் றெனையொருபா னிற்கவைத்து நிற்குநிலைச்
சொல்லாற் சொல்லின்மிகச் சூட்சம் விநாயகனே. (186)

தேடினதும் பாடினதுந் தியங்கினதும் மயங்கினதும்
வாடினதும் பார்த்திடிற்பொய் மாய்கை விநாயகனே. (187)

அளவு கடந்தா லமுதமுநஞ் சாவதினு
லுளங்கெடுமுன் பக்குவத்தை யுரையாய் விநாயகனே. (188)

ஏசுவதும் பேசுவது மிணங்கி வணங்குதலுங்
கூசுவதுங் கூத்தாகக் குணித்தாய் விநாயகனே. (189)

பிறந்தெடுத்தக் கஷ்டம் பெற்றவளே தானறிவார்ச்
சிறந்த தவத்தோரெணமச் சீரே விநாயகனே. (190)

எலிபூனை வாய்ப்பட்டு யேங்குதல்போ லேழையுயிர்க்
கலிவாய்ப்பட்டே மிகவுங் கலங்கும் விநாயகனே. (191)

பழியற்று மாயப் பற்றற்றுக் காணும் வெளி
விழியற்று வுள்ளொடுங்க விதிப்பாய் விநாயகனே. (192)

ஊனமுள்ளக் கோட்டை வுடையாமற் றானுகித்
தானுகுஞ் சத்துவத்தைச் சாற்றாய் விநாயகனே. (193)

வாக்குமன மற்று வாஞ்சைகளெலா மற்றுப்
போக்குவர வற்றநிலைப் புகலாய் விநாயகனே. (194)

முப்பாழுக் கப்பான் மூலைக்குஞ் சுயஞ்சோதி
யப்பா வுனையெவ்வா றடைவேன் விநாயகனே. (195

கற்பனை யெலாங்கடந்தக் காரணர்க டான்காண்ப
ரற்பனுக் கென்னகதி யறைவாய் விநாயகனே. (196)

வாட்டப்படாத மனக்குரங் கென்றனிட்
நாட்டத்திற் காட்படுநேர் நவிலாய் விநாயகனே. (197)

மாமணியே தூமறையே வற்றாச் சமுத்திரமே
பூமணியே சருவதுதிப் புகழே விநாயகனே. (198)

உலகமே வாயாகி வுரைத்திடினுந் தான்முடியா
நலம்பொல மொன்றுமிலா நாதா விநாயகனே. (199)

எல்லா முனதருளா யிருப்பதனு லையோமெய்க்
கல்லாதா னென்சொல்வெறுங் காதை விநாயகனே. (200)

அறிவின் றிரமே யனுபவிக்க வருவதனுற்
குறியுங் குலங்குணமக் கடற்றே விநாயகனே. (201)

அருண்மழையே சொல்லவொணு வானந்த மெய்ப்பரமே
தெருட்பொருளே ஞானச் சிவமே விநாயகனே. (202)

எவ்வளவு சொன்னலு மென்முடியு முடிவதில்லை
அவ்வவ் வுயிர்களையு மாட்டும் விநாயகனே. (203)

சூதறிந்து நீங்குஞ் சூட்சமதித் தாராயே
லேதறிவே னியான்மெத்த யேழை விநாயகனே. (204)

வானோர்ப் பணிபுரியும் வள்ளலே பாமுலகில்
நானே மிகதவித்து நலிந்தேன் விநாயகனே. (205)

பொல்லா யிடுக்கண்வந்துப் போர்க்கொடுக்க யான்றாங்க
வல்லாள னல்லவெல்ல மடிவேன் விநாயகனே. (206)

நினையாத யெண்ணமதி னெறிகளையே நேசமுற
வினையாய் முடிந்தது வேடிக்கை விநாயகனே. (207)

கானூறு போலக் கண்களிநீர்க் கசிந்துவழு
தூனூறுங் குப்பைக்கே வுழைத்தேன் விநாயகனே. (208)

அறிந்தா ரறியாரா யாகடியஞ் செய்வதற்குக்
குறிகளொன்று மில்லையேயென் குணித்தாய் விநாயகனே. (209)

எங்கு மறைந்திருப்பே னெவ்விடத்தி னுனிறப்பேன்
தங்குவதற் கேற்றயிடஞ் சாற்றாய் விநாயகனே. (210)

மனம்புத்திச் சித்த மமகாரம் போனவழிக்
கெனைத்தந் திளைக்கவைத்தா யென்னே விநாயகனே. (211)

சூதுசெய் மாந்தர்களைச் சொந்தமெனக் காட்டியே பின்
வாதுசெய் தொதுச்கினையென் மாயம் விநாயகனே. (212)

வாயினிப்புக் கைக்கசப்பு மனமுறிப்பா யுள்ளவர்பா
லுயினைப்போ லெனைவிட்டு நடித்தாய் விநாயகனே. (213)

அன்பென வீணேபேசி யடுத்தவரைத் தானபழிக்குந்
துன்பம்போ லேமனுண்டோ சொல்வாய் விநாயகனே. (214)

கோடிநூற் கற்றென்ன சுக்கல்போற் குரைத்தென்ன
மோடிச்செய் வார்க்குண்டோ முத்தி விநாயகனே. (215)

சொல்வார் மொழிநம்பிச் சோங்கேறியே யலைந்து
அல்லல்பட்டு நைந்தேனுனக் கழகோ விநாயகனே. (216)

வீண்டம்பம் பேசி வெகுளிச்செய் திகழ்வாரை
ஆண்பிள்ளை யென்பாரா ரந்தோ விநாயகனே. (217)

கொஞ்சம் படித்ததனாற் கொக்கரிக்குங் கோணருக்கு
அஞ்சுவரோ நல்லோ ரகல்வார் விநாயகனே. (218)

புலிபசித்தாலும் புல்லதனைத் தின்பதிலைக்
கலிகாலக் கூத்தெனவே கடப்பார் விநாயகனே. (219)

மான்றோல் புலித்தோல் வழுத்துங்குக்கி டாசனங்க
ளுன்றே டனக்குமே லுயர்வோ விநாயகனே. (220)

நாசியினில் வாசி நடங்கண்டா லியான் பிழைப்பேன்
காசி ராமேச்சுரத்தென் காண்பேன் விநாயகனே. (221)

சாதனைகள் விட்டாற் சனியானப் பேய் மனத்தின்
வாதனைகள் விட்டொழிய மாட்டா விநாயகனே. (222)

வாய்ப்பேசா மௌனம் வாய்ப்பதற் கெனைக்காக்குந்
தாய்நீ யன்றோ வுளவுச் சாற்றாய் விநாயகனே. (223)

பட்டமதைப் போலப் பறந்துப் பாழாகுமுனங்
கட்டைக் கடைத்தேரக் கணிப்பாய் விநாயகனே. (224)

எனதயு நினையாதோ ரிடத்திலுட் கார்ந்துவிட்டாற்
அனைத்குமன மெதைப்பற்றிப் பறக்கும் விநாயகனே. (225)

தொந்தங்க ளொன்றுமின்றிச் சும்மா யிருக்குநிலை
யெந்தவிதம் வந்தணுகு மியம்பாய் விநாயகனே. (226)

எல்லா முன்செயலென் றெண்ணுவே னோர்வேளை
யல்லாண்மை மனக்கேடான் மறப்பேன் விநாயகனே. (227)

திருநீ றணியான் சிவசமயத் துள்ளாகான்
பெருநூல் படித்தென்வீண் பெருமை விநாயகனே. (228)

இரவுபக னலம்பொலமற் றெதுவரையிற் பிடித்துளதோ
கரவுமனச் செயல்வினைகட் கடக்கா விநாயகனே. (229)

உண்ண லுடுத்தல்சுவை யுறவுபகைத் தெரியும் வரை
கண்ணும்விண்ணு மொருமயமாய்க் காணுர் விநாயகனே. (230)

ஆடங்கம் பேசி யறிவிழந்து நின்றதெல்லாங்
காடங்கம் போனல் கழியும் விநாயகனே. (231)

ஓடுங் கறித்துணியு முண்ணவு யெவ்விடத்துந்
தேடுவது வேறென்னத் தெரியேன் விநாயகனே. (232)

வாய்ஞானம் பேசி மகிழ்கின்றப் புல்லரிடம்
நாய்ப்போல வோடவைத்தாய் நன்றோ விநாயகனே. (233)

இருந்தாலு மென்ன யிறந்தாலு மென்ன மனம்
பொருந்தா விடிலெங்கே போகம் விநாயகனே. (234)

ஓர்நிலையுந் தங்கா துழல்கின்றச் சிந்தையினற்
சீர்ப்பெறுவ தெங்ஙன் செப்பாய் விநாயகனே. (235)

அருமையறியாத வற்பரிடஞ் சேர்ந்து பெற்றப்
பெருமையினுஞ் சிறுமைப் பெரிதே விநாயகனே. (236)

கோணல் முகங்காணக் கொடுமையென் செய்தனனோ
ஆணவலம் பெண்ணலல மன்றோ விநாயகனே. (237)

உன்றன் றிருவருட்கா யுடலுயிரும் வாடுவது
நன்றென்றுப் பார்ப்பதென்ன நவிலாய் விநாயகனே. (238)

மந்திரமென்றேயெழுதி வாயில்வைத்தாற் றித்திக்குமோ
பொதுநிலையென் றுரைப்பர்வெறும்பொய்யர் விநாயகனே. (239)

ஆர்க்கூடி யென்செய்ய வாருமுன் செயலின்றிச்
சீர்க்கூடு முண்மையற்றால் தெரியாய் விநாயகனே. (240)

பழிக்கஞ்சாப் பாபிகளைப் பாராது நீங்கிவிட்டா
லழிந்துவிடுந் தீக்குணங்க ளனைத்தும் விநாயகனே. (241)

வெளிவேஷக்கார வெய்யவரைச் சேர்ந்துழன்றக்
களிப்பெல்லாங் கடும்பகையாய்க் கண்டேன் விநாயகனே. ()

மெய்யென்றும் பொய்யென்றும் விந்தையுட னிந்தையென்று
மையோயெ னப்பனேநீ யறிவாய் விநாயகனே. (243)

மொத்தைக்கு யேத்த முரசடித்துக் கெக்கலிப்ப
தெத்தனைநாள் மட்டுமென்றோ டிருக்கும் விநாயகனே. (244)

நிலைவிட்டிழிந்து நீசக்குணமே படைத்துத்
தலைமொட்டைட் யானச் சடையன் விநாயகனே. (245)

நல்லோர் மனம்வருந்த நடிக்கின்றப் பதடரிடஞ்
சொல்லா தொழிவதுவே சுகங்காண் விநாயகனே. (246)

கற்றார் நெறியுணருங் கருத்தில்லார்த் தங்கண்முன
நிற்காது மறைவதுநன் னேர்மை விநாயகனே. (247)

புறச்சமய நிற்போர்ப் பொதுநூலென் றேபிடித்து
அறச்சமயப் பயனடையா தழிவார் விநாயகனே. (248)

சின்னமெனுஞானத் திருவெண்ணீ றணியாதா
ரென்படித் தென்பிதற்றி யென்னே விநாயகனே. (249)

நீறணியா நீசர் நேசமதை விட்டகலப்
பேறுயர் சைவாகமங்கட் பேசும் விநாயகனே. (250)

அன்னியஞ் சொந்தமென்ப தனுபவத்தில் வந்திருக்க
பின்னமதுப் பேசுவதுப் பிசகே விநாயகனே. (251)

இரந்துத் தின்றேனு மேகாந்த மாயிருக்க
வரந்தந்தா லெளியேன் சதா வாழ்வேன் விநாயகனே. (251)

அனியாய மனியாய மடிமைக்கு வந்ததெல்லாஞ்
சனியொழிவு நல்லநாட் சாற்றாய் விநாயகனே. (252)

மாதாப் பிதாகுருவை மதியாத் துரோகி நான்வீண்
சூதாட்ட மாடிகெட்டுச் சுகித்தேன் விநாயகனே. (252)

அடுத்தார் மனநோக வாகடியஞ் செய்தவரைக்
கெடுத்தார்க் கதுவதுவே கேட்டை விநாயகனே. (253)

பல்பாடைக் கற்றென் பாட்டிசைத்தென் பாடியுமென்
குலநலமே காட்டுங் குறிகாண் விநாயகனே. (256)

குணத்தினுக் கேற்றவரைக் கொண்டாடுவதுண்மை
மணந்தானே காரணமாய் மயக்கும் விநாயகனே. (257)

என்னையே நானம்பா தியற்கையே மற்றவர்க
டன்னையே நம்புவதென் சதிரோ விநாயகனே. (258)

பொல்லா மனவஞ்சப் போராட்டம் விட்டொழிந்தா
லெல்லாத் துயரங்களு மேகும் விநாயகனே. (259)

பேச்சென்னச் செய்யும் பேதிக்குங் காணமதா
லாச்சென்ற தெல்லா மழிவே விநாயகனே. (260)

உன்னைப்போ லுற்றதுணை யுலகிலெவ ரிலையுண்மை
என்னைநா னறியுவர மீவாய் விநாயகனே. (261)

டம்பத்தைவேண்டித் தானலையும் புலவர்கள்வீண்
வம்பைத்தான் விளைவித்து மகிழ்வார் விநாயகனே. (262)

கொடியேன் றனைப்படைத்துக் குணமென்னக் கண்டனையோ
அடியார்க் கடியனென வாக்கும் விநாயகனே. (263)

பலநெறியி னுட்போக்காப் புக்குவத்தைத் தந்திடினே
மலமூன் று வாசனைகண் மறையும் விநாயகனே. (264)

உருவத்தி னல்லவரை யுணர்வதற்காமோ வெறியர்க்
கருவத்தால் வேடமதிற் களிப்பார் விநாயகனே. (265)

சித்தாந்த நேர்மைத் தெரியாத மூடர்கட்பொய்ப்
பெத்தாந்தம் பேசிலென்னப் பெருமை விநாயகனே. (266)

அறமென்பது வறியா ரன்பில்லார்ப் பெரியோர்க்கு
மறஞ்செய்தே மனது மகிழ்வார் விநாயகனே. (267)

உட்சுவ ருதிர்க்க வுளங்கனியி லென்னபயன்
மட்சுவர்ச் சொல்லாதொருநாள் மறையும் விநாயகனே. (268)

கண்ணீரே காசிநீர்க் கருத்ததே தூபதீப
முண்ணலே யென்றுனக்கு வளிப்பேன் விநாயகனே. (269)

மனக்கோயில் கட்டி வள்ள லுனைத் தான்போற்றி
லெனக்கோயில் வேறெனக்கிங் கிருக்கும் விநாயகனே. (270)

புலைமகளென் செய்யும் புரவலர்க ளென்செய்வர்த்
தலைமைய நீயுன்னரு டந்தால் விநாயகனே. (271)

குருவின்முன் சீடன் கோலாட்டம் போடுவதைப்
பருவத்தி லப்பயனைப் பார்த்தேன் விநாயகனே. (272)

காலைமுன் கும்பிடுவார்க் காலமது வந்தவுடன்
சாலவே தலையரிவர்ச் சமர்த்தால் விநாயகனே. (273)

கள்ளவிசுவாசக் கபடரிடங் கூடியென
துள்ளந் தனைக்கெடுத்து வுழன்றேன் விநாயகனே. (274)

ஏசி மகிழ்கின்ற யீனப்புலையரிடம்
பேசிலென் பேசாதென் பீத்தை விநாயகனே. (275)

தனியே யிருந்துச் சஞ்சலங்க டானொழிய
யினியெந்த நாளோ யியம்பாய் விநாயகனே. (276)

சாத்திரமென் செய்யுஞ் சாதனைக ளென்செய்யுஞ்
சூத்திரத்தைக் காணாற் சுகமோ விநாயகனே. (277)

ஒட்டா விளங்கனிபோ லுள்ளதெல்லாம் விட்டு
விட்டாலன்றோ பொழுது விடியும் விநாயகனே. (278)

மூத்திரக் குழியதனால் மூடிநின்ற வென்மனது
காத்திரத்தினு னன்மைக் கலங்கும் விநாயகனே. (279)

உயிர்க்கொல்லி யென்று வுணர்ந்துமலந் தேனெங்கும்
மயிர்ப்பால வழியறிய மறந்தேன் விநாயகனே. (280)

உண்டுடுத்தி வாழ்வி லுயர்ந்ததெல்லா முடிவிற்
கண்டதவைக் கட்டுக் கதையே விநாயகனே. (281)

ஓயாக் கவலைக் குட்பட்டு வாடுகின்றேன்
றுயாகவந்துவரந் தந்தாள் விநாயகனே. (282)

வீணுக் குழைத்து விருதுகொடிக் கட்டினதைக்
காணும்போ தெல்லாங்கண் கலங்கும் விநாயகனே. (283)

எப்பாடைக் கற்றாலு மெத்தேசஞ் சென்றாலு
மப்பப்பா வருந்துயர்விட் டகலா விநாயகனே. (284)

உறவும் பகையும்பொய் யுண்மையுந் தானதவம்
மறமு முனையன்றி வருமோ விநாயகனே. (285)

கூப்பிட்டுங் கேட்காதக் குஞ்சரமே காய்ந்து விழும்
பூப்பிட்டுக் கேட்குமோமெய்ப் புகலாய் விநாயகனே. (286)

பஞ்ச புலனைச்சமைத்துப் பாழ்மனதை பலியிட்டு
மஞ்சுருவாய்ப் பாமாலை வழங்கேன் விநாயகனே. (287)

எந்தயிடஞ் சென்றே னேகாந்த மாவதிலை
மந்த மதியே யெனக்கு மாற்றான் விநாயகனே. (288)

கொடுப்பா ரன்புவக்கக் கொண்டாடிக் கும்பிட்டு
அடுத்துப்பல் காட்டவைத்தா யந்தோ விநாயகனே. (289)

என்னைநா னேயறியே னெனையறிவா ருண்டுகொலோ?
பின்னை யுணருங்குணம் பேய்க்காம் விநாயகனே. (290)

வாடுகின்ற வஞ்ச மனக்குரங்கு வோய்ந்துவிட்டா
லோடுகின்ற வெண்ணமெல்லா மொடுங்கும் விநாயகனே. (291)

ஒய்யாரக் கைவீசி யோகெடுவேன் பந்தமதா
லையகோ நான்பிழைப்ப தரிதே விநாயகனே. (292)

மனைமக்கட் சுற்றமதால் வாய்ந்ததுயர்ப் பார்த்திருந்து
மினுமென்னை வாதிப்ப தென்னோ விநாயகனே. (293)

பெருமைக் குழைக்கும் பித்ததனைத் தானகன்று
அருமையறி வாரிடத்தென் றடைவேன் விநாயகனே. (294)

வருநன்மைத் தீமைக்கு மற்றவரா ரென்னையன்றி
எருமைப்போல் வினையுளையி லிழிந்தேன் விநாயகனே. (295)

ஓயாமற் றின்று வுறங்கினாலுஞ் சுகமென்
னாயா யலைதல்மன நாட்டம் விநாயகனே. (296)

கடின மனத்திடத்தே கட்டுபட்ட வென்னறிவுப்
படிமிசைக் காண்பதெல்லாம் பழியே விநாயகனே. (297)

செத்துஞ் சாகாத சீவமுத்தருஞ் சித்தர்
பெத்தமுத்தர்ப் பத்தர்ப் பெரியோர் விநாயகனே. (298)

கொஞ்சுங் கிளியதைப்போற் கூத்தாடி நாட்கழித்தப்
பஞ்சைமுகங் கடைக்கண்ணாற் பார்த்தாள் விநாயகனே. (299)

கோபாக் கினியதிலே குணங்கெட்டுத் தானழிந்தாற்
சோபான முத்திரையிற் சூழேன் விநாயகனே. (300)

மரக்கலந் தனைப்போல மட்குடமுந் தானுடைந்தாற்
புரப்பதெங்கே போவதெங்கே புகலாய் விநாயகனே. (301)

சுத்த மனமின்றிச் சேம்பேறி வாய்ஞானம்
மெத்தப்படித்த தெல்லாம் விழலே விநாயகனே. (302)

சாக்கிர சொர்ப்பனத்திற் றான்சுழுத்தியை யடைந்தால்
மோக்கிய ஞானமதே முத்தி விநாயகனே. (303)

மனக்கோயி டன்னில் வள்ளனீ வந்துவிட்டா
லெனக்கோயி லென்முனே யிருக்கும் விநாயகனே. (304)

சீவனை வேருக்கிச் சிவம்வேரு யெண்ணுவதா
லாவதொன்று மில்லையறி வன்றே விநாயகனே. (305)

தவத்தி னளவே தான்வருவ தெப்பலனு
முவத்தால் முடிவனைத்து மழிவே விநாயகனே. (306)

கல்லேனுந் தெய்வமாங் கண்டவர்கட் கும்பிடுவேர்ப்
புல்லேனும் பூசைக்காமிப் புலையனென் விநாயகனே. (307)

சாலோக சாமீப சாரூப சாயுஜ்ய
மேலாக மியாவு மொன்ருய் விளங்கும் விநாயகனே. (308)

தொம்பதமுந் தம்பதமுஞ் சொல்லுகின்ற தத்வமசி
யெம்பதமு மெல்லவர்க்கு மெளிதோ விநாயகனே. (309)

ஆருதாரத்தி லடங்குநெறி நின்றவர்க்கு
வீருப்பும் வேடமும் வெறுப்பே விநாயகனே. (310)

கடுகடுத்துக்கோடி கனகங் கொடுத்திடினு
மடுத்தவர்க் கன்புசெய்த லறமாம் விநாயகனே. (311)

நானென் பதுவொழிந்தா ஞுட்டமும்போங் கேட்டையும்போம்
ஊனென்ப தற்குளுயி ரொடுங்கும் விநாயகனே. (312)

சத்துசித் தானந்தந் தாமாகி நின்றபெருஞ்
சித்துவித் தைத்தனையார்த் தெரிவார் விநாயகனே. (313)

நல்லதென்றும் பொல்லதென்று நாயினே னென்னறிவே
னெல்லா முனதன்பெ னிச்சை விநாயகனே. (314)

சமஸ்த சீவாதாரத் தற்பரனே நிட்டையிலே
அமர்த்திவைத் தடிமைதனை யாள்வாய் விநாயகனே. (315)

தேடாத் திரவியமே தீண்டப்படா வுருவே
வாடாவென் றெனையணைத்தாள் மகிமை விநாயகனே. (316)

ஆனந்த ஞானநிலை யானதிலே தூங்கிவிட்டா
லீனச் செயல்களெலா மேகும் விநாயகனே. (317)

சொச்சொரூபந் தன்னைச் சூழ்ந்துத் தானுகிடினே
லெச்சொரூபமும் வேண்ட லின்றே விநாயகனே. (318)

அகத்தி னழகுவதன மதிற்காணும் வாரதுபோற்
சுகதுக்க முத்தரிடந் தோன்றும் விநாயகனே. (319)

அவரவர் சுகதுக்க மவரவர்க்கே யன்றிமற்றோ
ரெவரெடுத்துக் கொள்ள வியலும் விநாயகனே. (320)

ஐங்காதம் போனாலு மகப்பையரைக் காசெனவே
யெங்கோடினுந் தனியே யிருப்பேன் விநாயகனே. (321)

ஓடிப் பதுங்கிடினு மோகோகோ வென்னை வினை
நாடிப் பிடித்தழிக்க நலிந்தேன் விநாயகனே. (322)

உற்றவரார்ப் பெற்றவரா ரோகெடுவே னேதறிவேன்
அற்றவரார்க் கற்றவரா ரழிநாள் விநாயகனே. (323)

ஊசியு நூல்போல வுயிருடலிற் றுன்சிக்கி
மாசிப்படர்ந்து கொல்லும் மரணம் விநாயகனே. (324)

தற்பெருமை வேண்டித் தானலையு மூடனுக்கு
யெற்பெருமை வருகினும்பின் னிழிவே விநாயகனே. (325)

படித்தப் படிப்பார்ப் பயனடையாமற் போனா
லிடித்தப்பின் மண்சுவரெங் கிருக்கும் விநாயகனே. (326)

சற்றும் பெரியோரைத் தான்மதியாமற் பேசக்
கற்றக் கலைமார்க்கக் கதியோ விநாயகனே. (327)

ஆக்கைசிலிர்த் தேவழுது வப்பாவென்றே கசிந்துப்
பூக்கைக்கொண் டுன்னடியைப் போற்றேன் விநாயகனே. (328)

உள்ளும் புறம்பு மொருநிலையாய்க் காண்பதற்கு
வள்ளலே சூட்சமொன்றை வகுப்பாய் விநாயகனே. (329)

பார்க்கின்ற வெப்பொருளும் பரமாகக் கண்டிடினே
வேர்க்கின்ற மனச்சேட்டை விளங்கா விநாயகனே. (330)

சச்சிதானந்தந் தழைத்திடினே சங்கற்ப
யிச்சையெல்லாஞ் சொல்லா தேகும் விநாயகனே. (331)

மனமொன்றதாகி வாசிநிலை நின்றவர்க
டினகரனைப் போலெங்குந் திகழ்வார் விநாயகனே. (332)

வேற்றுருவமொன்று விளங்கினு லக்குணத்தை
மாற்றுதற் காகாதுவது மாய்கை விநாயகனே. (333)

பேச்சற்று நின்றப் பெரியோரே மாதவர்க
ளேச்சற்று நாநிற்ப தெந்நாள் விநாயகனே. (334)

சொல்லிறந்து நின்றச் சூததனைக் கண்டுகொண்டா
லெல்லாத் தொடர்புந்தனி யிறக்கும் விநாயகனே. (335)

மோகதாக மற்ற முத்தர்களுக் கேசுகங்கா
ணுகமத்தை சொல்லிலென்ன வாகும் விநாயகனே. (336)

சின்னக் குழியிருந்தென் றேசாந்தாஞ் சென்றேன்
முன்னம்வினை வந்து கண்ணை மூடின் விநாயகனே. (337)

எல்லாங் கடந்தோ மெனிலென்னத் தனையறிந்து
வல்லமனந் தனையடக்கின் மாண்பே விநாயகனே. (338)

மத்தரொடு பேயர் மன்னுகின்றப் பாலரைப்போன்
முத்தர்க டானிருக்கு முறைகாண் விநாயகனே. (339)

சருவ வுயிர்க்குள்ளுந் தழைக்கின்ற வுனைப்பலவா
யருவுருவ மலியென்டா ரறிவென் விநாயகனே. (340)

தோற்ற மொடுக்கமதின் சூதறிந்து வீடுபெற்று
ஞற்றகட் மென்றெவர்க ணவில்வார் விநாயகனே. (341)

கடவுணீ தங்கயென்றன் கடங்கோயி லாய்விடினே
யிடம்பொரு ளேவல்மற்று மெனக்கேன் விநாயகனே. (342)

மாற்றிப் பிறக்கும் வண்மையது வந்துவிட்டாற்
கூற்றுமிலைக் கொள்கையிலைக் குணமே விநாயகனே. (343)

இரவுபகலாய்ப் படித்தென் னென்னென்னவோ பினத்தி
கரவுமனந் தானொடுங்கச் சல்லேன் விநாயகனே. (344)

கெடுமதி யூன்மிகவுங் கேடடைந் தேமெலிந்து
அடுத்தே னெனைத்தொழும்பிற் காட்கொள் விநாயகனே. (345)

என்னையன்றி யீன ரிரவருமிலை மன்னுயிர்க்கு
வுன்னையன்றித் துணையொருவ ருண்டோ விநாயகனே. (346)

சூட்சநிலை யாய்ந்துச் சுழுச்சியினிற் றூங்கிவிட்டால்
மாட்சிநிலை யவர்பிறப்பு மகிமை விநாயகனே. (347)

உண்மையதைக் கண்டு வோய்ந்துத் தன்னை மறந்தால்
பண்ணுந் தவமனைத்தும் பலிதம் விநாயகனே (348)

கட்டுபட்ட சிங்கங் கதவுடைத்தே வரல்போல்
மட்டுப்படா மனக்குரங்கவ் வணமே விநாயகனே. (349)

குற்றமென்ப தெங்கே கோணலெங்கே நாணலெங்கே
பற்றொழிந்த நல்லவர்க்கென் பயங்காண் விநாயகனே. (350)

ஆதியெங்கே வந்தமெங்கே வாசாரப் பூசையெங்கே
நீதியெங்கே நிட்டையினி னின்றால் விநாயகனே. (351)

மெய்வாய்கண் மூக்குசெவி விபரீத மொன்றாயின்
கையினெல்விப் போடன்னைக் காண்பார் விநாயகனே. (352)

சிவஞானந் தன்னிற் சிந்தைய தொடுங்கிவிட்டா
லவஞான மெங்ஙன்றலை யாட்டும் விநாயகனே. (353)

தூங்காமற் றூங்கிச் சுகம் பெறுவர் சாதுக்க
ளேங்கிமடி வாறென்போ லேழை விநாயகனே. (354)

குருவின் வழிநில்லார்க் கும்பிட்டேன் கோதகலார்
மருவு மணமில்லா மலர்நேர் விநாயகனே. (355)

சங்கற்ப வாசனையிற் றூன்றடித்து நாட்போனால்
துங்கமெய் நெறியெங்ஙன் றோன்றும் விநாயகனே. (356)

பலகோடி நூற்படித்தும் பாழ்மன மடங்கிலையேல்
தலந்தீர்த்த மூர்த்தமொன்றுந் தாரா விநாயகனே. (357)

சுத்த யிருதயமே சொந்தமெனக் கோயில்கொளு
மத்தனே நினையெவ்வா றடைவேன் விநாயகனே. (358)

ஊட்டுவனீ காட்டுவனீ வுள்ளதுநீ யல்லதுநீ
மாட்டுவனீ வேறெவரை வகுப்பேன் விநாயகனே. (359)

அழுவே னொருவேளை யானந்தங் கொள்வேன்பின்
றொழுவே னென்குணமென் சொல்வேன் விநாயகனே. (360)

கூட்டமு ணட்டமென்பேன் கொடுத்தாரைத் தஞ்சமென்பே
ஞேட்டமான தின்பினெலா முறக்கம் விநாயகனே. (361)

என்னைமறந்துத் தனியே யிருக்கவோ ரிடங்காட்டி
னன்மை யுனக்குசதா நமஸ்து விநாயகனே. (362)

ஆழிதனிலே திரும்பா யலைவதுபோ லெந்தன்மனம்
பாழி லலைவதென்னப் பாபம் விநாயகனே. (363)

குண்டலி சத்தியுடன் கூடி யணைந்துசுகங்
கண்டிருப்ப தெந்நாட் கணிப்பாய் விநாயகனே (364)

சகலாகம புராணஞ் சன்மார்க்கஞ் சொல்லுமல்லாற்
புகலும்பற் பேதமெல்லாம் பொருந்தா விநாயகனே. (365)

எச்சமய மெக்கலைக ளெத்தவமு மெய்நெறியு
மிச்சை யதன்வழியே யிழுக்கும் விநாயகனே. (366)

பெரியோர்த் துணைக்கொள்ளப் பேதைமன மெண்ணிலையே
அரிதன்றோ நினக்கடிமை யாதல் விநாயகனே. (367)

சான்றோ ரினத்திரெனச் சாற்றிய நேர்மை மறந்து
யென்று மிறக்காம லிருந்தேன் விநாயகனே. (368)

மனஞ்சோர்ந்துப் போனால் மற்றவரா லென்முடியுந்
தனஞ்சோர்ந்தா லெல்லாந் தளரும் விநாயகனே. (369)

பணத்தினுக்கே முழுதும் பாடுபட்ட தன்றி நல்லோர்க்
குணத்தினுக் குழைத்திலையென் குறையோ விநாயகனே. (370)

இட்டாரைப் போற்றி யிடார்களைப்பி னேசிமிழ்
நட்டாரை விட்டொழிதல் ஞாயம் விநாயகனே. (371)

வினையினால் வந்தமண் வீடது வுடைந்துவிட்டா
லெனையார்ப் பிணைப்படுப்ப தெந்தாய் விநாயகனே. (372)

வந்ததெங்கே வாழ்ந்ததெங்கே மாய்ந்ததெங்கே வோய்ந்ததெங்கே
பந்தமெங்கே நிந்தையெங்கே பகராய் விநாயகனே. (373)

தூரமெங்கே தீரமெங்கே சொந்தமெங்கே விந்தையெங்கே
பூரவீர சாரமெங்கே புகலாய் விநாயகனே. (374)

அன்னமயப் பிராணமயத் தாலிருக்குஞ் சீவமய
மென்னமயத் தாற்சாகா திருக்கும் விநாயகனே. (375)

நாடி யொடுங்கிடினே நாசமுறும் புன்குரம்பை
வோடிவுழைத் தெங்ஙனமோ வொழியும் விநாயகனே. (376)

சாரமற்றுப் போவதைப்போற் சமுசார வுவரியலை
வீரமற்றார்ச் சிந்தையொன்றும் வேண்டா விநாயகனே. (377)

உலகநிலை யின்னதென வுரைப்பா ருரைத்திடினு
மலகுபோல் வேறுசெய்த லரிதே விநாயகனே. (378)

சாப்பாடும் பீப்பாடுந் தான்பார்த்து நாட்போக்கின்
மூப்பாடு வந்தபினென் முடியும் விநாயகனே. (379)

அளவிலா மற்படிக்கு வாடியதோ ராட்டமெல்லா
முளவறிந்தப் போததுவே வொழியும் விநாயகனே. (380)

தன்னுயிரைப் போல சருவவுயிர் களைநினைக்கின்
மன்னுயிரெலாந்தாழ்ந்து வணங்கும் விநாயகனே. (381)

சகலசுக போகஞ் சாங்காலத் தென்வலிதா
மிகபர சாதனையின்பல னீயும் விநாயகனே. (382)

அன்பதுவே தெய்வ மறமாசை பக்தி முக்தி
நன்மையெனச் சைவமறை நாட்டும் விநாயகனே. (383)

வாய்ப்பேசா மௌனம் வாய்ப்ப தெளிதல்ல
காய்க்கனிபோன் மனம் பழுக்கக் காணும் விநாயகனே. (384)

திங்களிடமுங் களங்கஞ் சேர்வதுபோ னற்குணத்தி
டங்கும்வினை யாற்கிலது சங்கை விநாயகனே. (385)

உண்ணுமை லுண்டு வுறங்காமலே வுறங்குங்
கண்ணுள ரன்றிமற்றோர்க் கடையே விநாயகனே. (386)

ஆசாரம் போனு லநாசார மன்றிவேறென்
வாசா கயிங்கரிய வண்மை விநாயகனே. (387)

உண்டதையே வுண்டு வுடுத்தினதையே வுடுத்திக்
கண்டதைமெய் யென்றிளித்தேன் கன்மம் விநாயகனே. (388)

நான்பட்டப் பாடு நானிலத்தி லியாரறிவ..
ரூன்பட்டப் பாடொழிந்தா லோங்கும் விநாயகனே. (389)

செகசால தந்த்ர சித்துவித்தைத் தானகன்று
லகமொடுங்கு மானந்த மடைவேன் விநாயகனே. (390)

அங்குமிங்கு மோடி யலையாமெய் நிலைநின்று
லெங்குமுனை யெனையன்றி யின்றே விநாயகனே. (391)

பூசாத வெண்ணீறும் புகலாத மந்திரமு
மாசாட பூதியரெங் குறிவார் விநாயகனே. (392)

ஓட்டையுதை யடைத்தா லொழுக்கவிலை யன்றோமன
வேட்டை யடங்கிலுண்மை விளங்கும் விநாயகனே. (393)

கூட்டமென்னக் கோஷ்டமென்னக் கொண்டாட்டந்தானுமென்ன
வாட்டமென்ன மண்ணுக மாறின் விநாயகனே. (394)

பொன்னுக்கும் பூவையர்க்கும் பூமிக்கும் பட்டதுய
ரென்னென் றெடுத்துரைப்பே னிறையே விநாயகனே. (395)

திருப்பணித் தனைமுடிக்கச் செல்வமிலாமற் பலவூர்க்
கருப்பிணி யுடன்சென்றுக் கசிந்தேன் விநாயகனே. (396)

அருளும் பொருளொருவர்க் களிதவைப் புண்யமெனத்
தெருளுடையோர்ச் சொன்னமொழி ஸ்திரமே விநாயகனே. ()

வைகைப் பெருகிவரின் மாய்வரன்றிப் பிழையார்
பொய்யுடலு மவ்வழிதான் போமோ விநாயகனே. (398)

வினையொழிந்தால் தேக மேல்விளைவ தில்லையெனத்
தனையறிந் தோர்ப் புகன்றச் சத்யம் விநாயகனே. (399)

கள்ள விசுவாசங் கழுத்தினிற் செபமாலை
வுள்ளன்பிலா ருறவு மொன்றே விநாயகனே. (400)

ஊர்மெச்சப் பால்குடித்து ஆசாரி யானவென்றன்
சீர்க்கெட்டப் பின்னெவர்கட் சேர்வார் விநாயகனே. (401)

பொய்யை மெய்யாகப் புகன்று மகிழ்ந்த தெல்லா
மையகோ யென்றனைவிட் டகலா விநாயகனே. (402)

படித்தப் படிநடக்கப் படிக்காதப் பாபியுநான்
குடித்தனமுந் தடித்தனத்தின் குணமே விநாயகனே. (403)

இல்லாதவற்றை யிறைச்சலிட்டுப் பேசுகின்றப்
பொல்லாதா னென்றெழிந்துப் போவேன் விநாயகனே. (404)

கொண்டுவந்த மட்குடத்தைக் கூத்தாடிப் போட்டுடைத்தா
லண்டுமிடஞ் சீவனுக்கெங் கறியேன் விநாயகனே. (405)

இருப்பதுபொய் போவதுமெய் யென்றுரைத்த மேலவரின்
கருத்தை சிறிதுமுணராக் கடையேன் விநாயகனே. (406)

வாசனையும் போகயிலை மனக்குரங்கு நிற்கயிலை
நீசனெங்ங னேர்வழியி னிற்பேன் விநாயகனே. (407)

தோற்ற மொடுக்க மெங்கே தோம்பதமுந் தானெங்கே
மாற்றுங் கதித்தெரிந்தால் மாயேன் விநாயகனே, (408)

சச்சிதா னந்தமெங்கே சந்தமெங்கே சொந்தமெங்கே
யிச்சையற்று வோரிடத்தி லிருந்தால் விநாயகனே, (409)

வாசமெங்கே ஞான வரம்பெங்கே வாழ்வெங்கே
ஈசனுநீ நானெங்கே யியம்பாய் விநாயகனே. (410)

என்னென்னவோ களவு யிக்கடத்தி லுண்டாச்சு
சொன்னு லெவர்க்குமெய்ப்பொய்த் தோன்றும் விநாயகனே. ()

பசுவுண்ட நீரமுதம் பாம்புண்ட நீர்விடமே
விசுவாசப் பூனையாய் நான் மெலிந்தேன் விநாயகனே. (412)

கட்டுடைந்த தேகஞ்சுடு காடடையு முன்னமிந்தக்
கெட்டவனைக் கண்பார்த்தாள் கீர்த்தி விநாயகனே. (413)

சங்கற்பும் பேசுஞ் சண்டாளத் தன்மை யெல்லா
மிங்கநீப மெனத்தனியென் றிருப்பேன் விநாயகனே. (414)

பகவத் கீதைக்கேட்டப் பர்க்குணன் பின்னே சனிததுத்
திகழ்சிவ லிங்கப்பூசை செய்ததென் விநாயகனே. (415)

சுகர்வாமர் போகர்முதன் ரேன் னூற்றேன் பான் எழுவ
ரிகத்திற் பிறந்தவகை யென்னே விநாயகனே. (416)

கும்பமுனி புலிப்பாணிக் கொங்கணர் வள்ளுவருடனே
சம்பிரமமா யறுவர் வந்தச் சதிரென் விநாயகனே. (417)

திருமா லயன்சம்பு சித்தர்முத்த ருடன்பத்தர்
ஒருவா துதித்தவுள வுரையாய் விநாயகனே. (418)

ஒருமுக முதற்கொண்டு வொருகோடி வரையினிலே
திருமுகங்கொண் டுதித்ததென்னச் செப்பாய் விநாயகனே. ()

கணக்கிலாச் சீவருக்குட் கலந்துகூத் தாடுமுனே
பிணக்குளநா னுண்மைக்கண்டுப் பேசேன் விநாயகனே. (420)

வெக்கது வேகாதகையும் மென்றுதின் றுதிர்ந்து மனம்
வந்தபடிப் பேசுதற்பின் மாயம் விநாயகனே. (421)

சாருமிட மெங்கேகடஞ் சாகுமிட மெங்கே வினைத்
தீருமிட மெங்கே சற்று செப்பாய் விநாயகனே. (422)

வினையென்ப தெங்கே வினைப்பகுதித் தானெங்கே
யெனைமறப்ப தெங்கே யியம்பாய் விநாயகனே. (423)

சாத்திரங்க ளெங்கே சகலவிதச் சூத்திரமுங்
கோத்திரமுங் குலமெங்ஙன் கூறாய் விநாயகனே. (424)

தான தவமெங்கே தத்துவமும் யோகசுக
மோனமுத்தி யெங்ஙன் மொழியாய் விநாயகனே. (425)

ஆட்டமெங்கே பாட்டுயெங்கே யன்றுமின்று மொன்றுண
வோட்டமெங்கே வோய்வெங்ங னுரையாய் விநாயகனே. (426)

படித்தவர்க ளெங்கே படியாதா ரெங்கேமட
மிடித்தப்பி னூரெங்கே யியம்பாய் விநாயகனே. (427)

வாது வழக்கெங்கே மாருட்டந் தானெங்கே
தீதற்று நான்றனியே திரிந்தால் விநாயகனே. (428)

ஆசை யறுபதுநா ளதற்குமேல் முப்பதுநா
ளோசையற்றார்த் தானே வொழியும் விநாயகனே. (429)

எலும்பின்மேற் சூரி யெய்தாத வண்ணமனக்
கலக்கத்தா லுன்சொரூபங் காணேன் விநாயகனே. (430)

நானெங்கே நீயெங்கே நடுமுளைத்த ஆழெங்கே
ஆனெங்கே வுயிர்விடுநா ளுரையாய் விநாயகனே. (431)

உண்டதெங்கே கண்டதெங்கே யுறவுபகைத் தானெங்கே
மண்ணேகம்போற் கூவிசீவன் மறைநாள் விநாயகனே. (432)

பாலுநீர்ப் போலப் பரமனே நின்னோடெளியேன்
சாலக் கலந்திடிற்பின் சனிக்கேன் விநாயகனே. (433)

எங்கு மொருபடித்தா யிருக்குநா ளென்னாளோ
துங்கமுட னியானறியச் சொல்வாய் விநாயகனே. (434)

சரணார விந்தமதைச் சார்ந்தவரெல்லாம் பிழைத்தார்
பரனே யென்கதியென் பணித்தாய் விநாயகனே. (435)

பூமியுடன்வித்தே போகமும் யோகந்தருகும்
காமியுங்கன் மழுதன்மங் கதியே விநாயகனே. (436)

எந்தநிலத் தெந்தவித்து யிடப்படுமோ வவ்வகையிற்
சொந்தபந்த வந்தமுத்தித் தொடரும் விநாயகனே. (437)

மதித்தார்கள் வாழட்டும் மற்றவர்க டாழட்டுந்
துதித்தா லெனக்கன்றோ சுகங்காண் விநாயகனே. (438)

இகழ்ந்துப் புகழ்ந்தாலென் னேதுமிலை யின்பமிலை
பகவனே யுனக்குப்பட்டம் பகலே விநாயகனே. (436)

ஒப்புக் குறவாடி யூரையெலாந் தான்மயக்குந்
தப்பிலிபோ னியானொருவன் றழைத்தேன் விநாயகனே. (440)

உப்புச் சப்பில்லா வுடலுறவான் வாடினது
அப்பப்பா போதுந்தனி யாக்கும் விநாயகனே. (441)

கடனுக்கு யேத்தக் கடமெடுத் துழல்கின்றேன்
படமுடியா துனதுவிழிப் பாராய் விநாயகனே. (442)

நாலுபக்கஞ் சூளை நடுவிலுயிர்ப் பிழைத்திடுமோ
வேலைவிழி யார்மயலவ் விதமே விநாயகனே. (443)

தேனென் றெழுதினாற் றித்திக்குமோ வதுபோல்
நான்பிரம மெனின்ஞானம் நல்கா விநாயகனே. (444)

கண்ணீர்விட் டுன்பாதங் கழுவியே முத்தமிட்டால்
புண்ணீர் வினையொழிந்துப் போகும் விநாயகனே. (445)

ஆதரவு நீயே வடிமையின் முறைக்கேட்டுன்
பாதந் தனைத்தந்தாட் பதியே விநாயகனே. (446)

காதலினாற் சொன்னக் கவிமாலையைப் பூண்டு
நாதனே நின்னருடா நமஸ்து விநாயகனே. (447)

சொல்லவறியே னேழைத் துதிக்க வறியேனென் றுங்
கல்லாதவனைக் கடைக் கணித்தாள் விநாயகனே. (448)
வாயாரப் பேசினது மனமாற வெழுதினது
நாயகனே பொறுத்தாளு நமஸ்து விநாயகனே. (449)
மாலயன் றேவருமறையும் வணங்கியின்னுந் தேடுபவா
பாலனென்னத் தெரிந்துப் பகர்வேன் விநாயகனே. (450)
ஒன்றுந் தெரியாப்பேதை வுளறியப் புன்மாலை
நன்றென வணிந்தருடா நமஸ்து விநாயகனே. (451)
கட்டவிழ்ந்த மாடதைப்போற் கலைஞானம் பேசியிவண்
விட்டதென்ன விபரீதம் மெய்மெய் விநாயகனே. (452)
அடியார்ப் பணியு மாப்தர்களின் கேண்மையது
மிடியனைத்தையுங் கொல்லும் வேல்காண் விநாயகனே. (453)
அரவோம் பிரணவவோ மைங்கரனே வத்திமுகா
வரந்தா நின்பூம்பதம் வாழி விநாயகனே. (454)
சின்மயநற் சிவபிரான் திருவுமைசுப் பிரமணியன்
மன்னும்வள்ளி தெய்வயானை வாழி விநாயகனே. (455)
வேலுமயில் நவகணமும் விதிதுடைக்கும் வெண்ணீறும்
மாலகற்றும் ருத்ராக்கம் வாழி விநாயகனே. (456)
பணிதிகழுங் குமரகுரு பரன்ஞான சம்பந்தர்
மணிதிகழ் நாவுக்கரசர் வாழி விநாயகனே. (457)
காணரிய வாரூர் கவிஞ்மேயுஞ் சுந்தரரும்
மாணிக்க வாசகரும் வாழி விநாயகனே. (458)
அடியார்கள் வாழி அன்புசெய் பவர் வாழி
மடியின்றி நற்புலவர் வாழி விநாயகனே. (459)
சித்தர் முத்தர் வாழி சிவனடி பஜிப்பவர்கள்
வத்துவிற் கலந்த முத்தர் வாழி விநாயகனே. (460)
உள்ளமகிழ்ந் திந்நூ லோதினருங் கேட்டவரும்
வள்ளலரு ளாத்தொடையல் வாழி விநாயகனே. (461)
இதயமகிழ்ந் துதவிச்செய்தச் சிட்டவர்கள் தான்வாழி
மதிகதிர் புவியுஞ் சர்வம் வாழி விநாயகனே. (462)

—o—

விநாயகக்கண்ணிகள் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விநாயகக்கொத்து என்னும்

# மனநிலைச்சூத்திர அனுபவச்சாத்திரம்.

காப்பு.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அருமறைகட் காதிபனே யகண்டிதப் பிரணவமே
ஆப்தருளத் தமர்ந்துநடம் புரியும் பரத்துவமே
கருணைகனே சாஸ்விதமெய்க் காட்சியே சாட்சியமே
கங்குல்பக லற்றவனே கணபதி யீச்சுரனே
பெருமைநிறைப் பழம்பொருளே பேசரிய நிலையே
பெம்மானே யெம்மானே பிர்ம சுகார்ஜிதமே
மருவுமன நிலைச்சூத்திர அனுபவச் சாத்திரமன்
வளம்பெறுக வரந்தருவாய் நமவோம் விநாயகனே.

## நூல்.

முதலாவது.

### வழிபடுதெய்வ வணக்ககதிநிலை.

தாவுகோச்சகக்கலித்துறை.

வெண்செந்துறை. பண் – கௌசிக இந்தளம்.

அத்தி விநாயக வமரர் விநாயக வற்புதமாஞ்
சித்திவிநாயக தேவர் விநாயக சீரடியார்
புத்தி விநாயக பரமர் விநாயக பகரரிய
வித்தை விநாயக திருவரு டந்தாள் விநாயகனே. (1)

சுமுகாய யேகதந்தாய கபிலாய சுஜனமய
மமர்கஜ கர்ணிக லம்போ தராய வதிவிகட
தமவிக்கின ராஜ கணதிபதியெச் சமயத்தினு
விமலநீ யல்லான் வேறொருவரிலை விநாயகனே. (2)

நயதூம கேது கணதயட் சாய நலந்தருகுஞ்
செயபால சந்த்ர கஜாநவக்ர தூண்ட திகழ்நலயெண்
புயசூர்ப்ப கர்ணய ஹேரம்பா யஸ்கந்த பூர்வஜய
வியன்மலி தோத்திர வித்தகனே மெய் விநாயகனே. (3)

சாமள கர்ன விளம்பிதச் சூத்திரத் தந்திமுகா
கோமள நேத்ரனே குணபதி யாகியக் கொற்றவனே
நாமகட் பூமக ளுடுங் கணேச நவிலுதவ
மேமலிப் பிரணவனே விக்கினந்தீர் விநாயகனே. (4)

மூத்தித் தருபவா மூர்த்திக் கிறைவனே மூஷிகமே
லெத்திக்கும் பணிச் செயவலம் வருகுங் கணேச்சுரனே
பத்திமி குத்தந லுத்தமரு ணடம் பயில்பவனே
வித்தக ஞானியர் நத்தித் துதிக்கும் விநாயகனே. (5)

அரஹர வோம்சிவ சிவசிவ வோம்சிவ ஹரஹரவோம்
பரம தயாபர பாலசந்த் ரோதயப் பாசுரனே
சரணடைந் தேனருட் சித்திகணேசவோம் தற்பரனே
விரகநெஞ் சாளர்கண் வினைப்பொடி யாக்கும் விநாயகனே. (6)

சின்மய ஞானச் சிற்சுக லட்சணத் திருவுருவே
மன்னுங் கலைப்பனி ரண்டி னுறுதியில் வளர்ப்பிறையே
கன்னலங் கனிப்பல காரமுண் டருதந்தக் கணபதியே
மின்னிகர் வாழ்வை வெறுப்பதெஞ் ஞான்றில் விநாயகனே. (7)

சகல குணாகர சம்பன்னனே சர்வ சாட்சியனே
யிகபர சாதன மியாவுந்தந் தாட்கொளு மெம்பரனே
புகலருஞ் சத்தியப் பூஷணமே விஞ்சைப் போனகமே
மிகத் தவித் தேன்வினைத் தீர்த்தாள வேண்டும் விநாயகனே. ()

சுந்தரனே சுயஞ் சோதியனே யின்பத் தூவெளியே
மந்திர மாமறை யந்தண ரிந்திரர் வானவர்கட்
பந்த மகன்றிட வந்தித்து யேத்தும் பழம்பொருளே
விந்திய மாகிரி மேலொளிர் விளக்கே விநாயகனே. (9)

அனுதியு முத்த சித்துருவாமுத லாண்டவனே
தனுகிச்சை யாலே சருவமும் படைத்தாடந் தாவளனே
அனுகத விசுத்தி சுழுச்சியிற் கரனு மாதிபனே
வினுயக னெனவிக் கினமதைத் தீர்க்கும் விநாயகனே. (10)

ஓம்ஓம் கணபதி வோங்காரக் கணபதி வுயர்தவத்தார்த்
தாம்பணி கணபதி தத்சத் கணபதி தத்வமசி
யாம்பர கணபதி யறிவாங் கணபதி யசடுநிறை
வீம்புக ளொடுக்கின ர்டிதொழு தேத்தும் விநாயகனே. (11)

ஏகதந் தாய லம்போதராய யென வருந்தி
மோகாந்த காரக் கடல்கடந் தில்லா மூடனுக்குச்
சாகாந்த காலம் வருமுன முன்கழற் சாருவனோ?
வேக மொடுங்கிடின் வேட்டைப் படுமோ விநாயகனே. (12)

போத விநாயகப் புனித விநாயக புகலவொணு
நாத விநாயக நம்பி விநாயக நண்பருட்பிர
சாத விநாயக சகஸ்ற்றிர விநாயக சதுர்வித மெய்
வேத விநாயக விதிதவிர்த் தாள்வாய் விநாயகனே. (13)

தும்பிமுகனே துணைப்படும் பொருளே சுடரொளியே
அம்பலத் தாடு மழகனின் மகனே யகண்டிதனே
நம்பிய நம்பி மூனங்கனி யுண்டு நலங்கொடுத்தாய்
வெம்பிடு மேழையைக் கைவிடா தாளும் விநாயகனே. (14)

அகத்திய முனிவர்க் கமண்டலங் கவிழ்த்த வைங்கரனே
சுகதுக்கமென்னு மிருவினைச் சூழத் தொல்லையுற்றேன்
சகள மேனியனே சச்சிதா னந்தச் சதோதயனே
மிகவெளி யேன்றனைக் கண்பாரும் புண்யம் விநாயகனே. (15)

திருவுருவே சிவானந்த சிற்சுகமே தேவர்தொழுங்
கருணைக் கடலே கற்பகக் களிறே கணேச்சுரனே
பெருமித ஞானப் பேரறிவே யின்பப் பிரணவமே
வெருவல னென்றெனை நீக்கிட வேண்டாம் விநாயகனே. (16)

அண்ணலே தங்க வருட்பெருங் கடலே வாப்தர்கண்மு
னெண்ணருங் கோல வடிவங்கொண் டன்று யெழுந்தவனே
பண்ணிலேன் பூசைப் பாடிலேன் றுதிகட் பணிந்தறியேன்
விண்ணுமண் ணென்றாய் விளங்கிடுஞ் சுமுக விநாயகனே. (17)

ஆதியுமந்த மத்ய மென்பதிலா வாண்டவனே
நீதியே நிலையே நித்யாபரோட்ச நின்மலனே
ஞாதுரு ஞான ஞேயங்க ளென்னு நாடதனின்
வீதி நடுவில் விளங்கிடுந் தெய்ய விநாயகனே. (18)

கந்தன் கடம்பன் கதிர்வடி வேலன் கார்த்திகேயன்
சுந்தரத் தோகை மேல்வருகுஞ்சிவ சுப்ரமண்யன்
வந்திக்குந் தும்பித் தொந்திக் கணபதி மன்னுமறை
விந்தைக் கழலரு டஞ்ச மெனக்கே விநாயகனே. (19)

அண்ணா வரசே அப்பாயென் றன்றுளி லனுதினமுங்
கண்ணீ ரருவி யெனப்பாயச் சிந்திக் கடஞ்சிலிர்த்துப்
பண்மாலைச் சூடி வுள்ளங் கசிந்துப் பணிகுவனோ?
வெண்ணீ றணியும் விபூதர்க ளேத்தும் விநாயகனே. (20)

ஓம்ஹர ஹரசிவ வோம்சிவ கணேச வோமெனவுஞ்
சாம்பவி புத்திரா சாமளகர்ன சரணமெனத்
தேம்பி யழுதுக் கண்மலர் வைத்து சேவித்தனர்
வீம்புக் கிவணலேவென் றனையாட்கொள் விநாயகனே. (21)

சத்தி சடாதரி சங்கரிப் புங்கவி தடாதகையாள்
சித்தி யெலாநிறை யுத்தமிப் பார்வதி சிற்சொரூபி
பத்தி மலியபி ராமிநன் மனமகிழ்ப் பாலகனே
வித்தைக் கிறையவனே விழிசாய்த்தாள் விநாயகனே. (22)

அரனார் மகனே அத்திமா முகனே வஞ்சலென
பிரமனுங் கண்ண னளவில்லாத் தேவர்ப் பேசுபவா
சரண மடைந்தவர் விக்கினந் தீர்க்குஞ் சதோதயனே
விரகர்கண் ஞான்றும் வேண்டித் துதிக்கும் விநாயகனே. (23)

ஐங்கரனே யரு ளானந்தனே மஹா வற்புதனே
கங்கைதிங் கட்கொன்றைச் சடையுடை யீசன் கண்மணியே
மங்களந் தங்கு மனோகரனே சுக வாழ்வளிப்பாய்
வெங்கலி மிஞ்சின மிடியனைக் கண்பார் விநாயகனே. (24)

சித்தி கணேச்சுரனே யெங்கு மோங்குந் திவாகரனே
பத்திக் குகந்தப் பரிசளித் தாளும் பரம்பரனே
முத்தித் தரவரு முன்னவனே ஞான மூர்த்தியனே
வித்தென யெல்லா வுயிர்க்குளு நிறைந்த விநாயகனே. (25)

அருமா மறைப்பொரு ளாகியவத்தனே வாப்தர் தொழும்
பெரும்பயனே கலைப் பேரறிவே மறைப் பேசுகின்றக்
கருணைக் கடலே யனோரதமே யின்பக் கனிரசமே
விரும்பிநின் றருட்கடிமைக்கொள்ள வேண்டும் விநாயகனே. ()

கயமுகசூர னெனுமூஷிகத்தைக் கடாட்சித்தனை
செய செய வென்றடி யார்த்தொழ வூர்ந்துத் திருவடியி
னயமளித்தா யுன்ற னுமத்தைப் பூசிக்கு நாயினுக்கு
வியன்மலிப் பாதங் கொடுத்தருட் புண்யம் விநாயகனே. (27)

அமரர்க டேவர்க ளயன்மா லிந்திர ரரஹரவென்
றிமையது மூடாப் பஞ்சாக்கர மோதி யேத்துமலர்க்
கமழ்நலக் கழலை தொழும்பனுக் கருளிக் காத்தருளும்
விமலனே யன்பர் விக்கினந் தீர்க்கும் விநாயகனே. (28)

உமாதேவி யோடு மஹேஸ்வரர்ப் பார்வையா லுயர்மடத்தில்
நமாநம சிவவென தந்திமுகத்துட னயந்து வந்தோய்
சமாதானமே தெய்வ சற்குரு தாய்தந்தை சருவமுநீ
விமானமேற் சாரி வந்திடர்த் தீர்க்கும் விநாயகனே. (29)

அருளாளர் நெஞ்ச மெனுங்கோயி டன்னி லமர்ந்தவனே
தெருளாள ருண்மைக் கண்டுன்றன் சேவடிச் சிந்திப்பரால்
மருளாள னேந்த வகைத்தொண்டே செய்து வாழ்குவதே
வெருளாள னென்றக் கைவிடா தருட்செய் விநாயகனே. (30)

முக்கனி யதிரச மெள்ளவல் கடலை மோதகமுஞ்
சர்க்கரைத் தேன்பால் வடைபல காரந் தான் படைத்துப்
பக்குவமாய்த் தூப தீபங் கொடுத்துப் பணிபவர்க்கு
மிக்கவரந்தந்து விக்கினந் தீர்க்கும் விநாயகனே. (31)

மரகதப் பச்சை வைடூரியமே செம் மாணிக்கமே
சரணடைந் தாருக்கு சித்தியு முத்தியுந் தருபவனே
புரமூன் றினைசிரித்தே யெரித்த சிவன் புத்திரனே
விரக மிகுந் திருவடித் தஞ்சந் தந்தாள் விநாயகனே. (32)

கண்ணி னொளியே கைநிறைப் பொருளே மெய்க் கற்பகமே
பண்ணி னிசையே பாலின் சுவையே பகரரிய
யெண்ணு மெழுத்து மிலக்கண லட்சண யீச்சுரனே
விண்ணுமண் ணென்றாய் விளங்கு மோங்காார விநாயகனே. (33)

தேமாலை யோடுச் செழுமணிச் சூடிச்சிந்தை செய்துப்
பூமாலை யின்றிப் பாமாலைச் சாத்திப் போற்றியென்போர்
நாமாலைக் கல்வி ஞானமுஞ் சுழிச்சியி னொட்டமுடன்
மேமாலைப் பெற்று வாழ்வாருன் ருளில் விநாயகனே. (34)

அண்ணலே வைங்கர யானைமுகனே வாப்தர்கண்முன்
புண்ணிய வசப்படி பல்பல வடிவாய்ப் போற்றிநின்று
யெண்ணரிய வரந் தந்தசுரர்ச் செய்த யிடர் தவிர்த்தோய்
விண்ணில வெனயெங் கும்நிறைந் தவனே விநாயகனே. (35)

சுந்தர ஞானச் சுகப்பொருளே யெழிற் றூவெளியே
மந்திர தாரணை யோகசமாதி மன்னுகின்றச்
சிந்தைச் சிவோகமு நிட்டையுஞ் சாதனச் சித்தியெல்லாம்
விந்தைத் திருவருண் மகிமைகளன்றோ விநாயகனே. (36)

அமல கணேச வாப்த கணேச வகண்டிதனே
நிமல கணேச நித்திய கணேச நிஷ்களனே
கமல கணேச கயமுகனேச கசடனையாள்
விமல கணேச விதிதவிர்த்தாளும் விநாயகனே. (37)

அக்கர வத்துவே யகில பூரணமெய் யானந்தமே
சக்கரஞ் சங்குத் தனையுடையவனே சகடையினிற்
சிக்குப் பட்டுழல் கின்ற யென் றுயரைத் தீர்ப்பவரார்
மிக்கநா னேழைக் கடைவிழி சாய்த்தாள் விநாயகனே. (38)

ஆனைமுகத்துள வத்தனே நித்திய வற்புதனே
மோன முகத்தினில் முத்தி சுழுச்சியின் முதலவனே
ஞான முகத்துள நம்பனே நம்பின நாயனையாள்
மீனின் முகத்துள நாரணன் மகிழும் விநாயகனே. (39)

கும்ப முனிக்கருட் குணக்கடலேயிக் குவலயத்தில்
வம்பு செறிந்திடும் பற்பல வாதையால் வாடுகின்றேன்
அம்பலத்தாடிய வழகன் மகனே யாருயிரே
வெம்பிடு மேழைத் தன்முகம் பார்த்தாள் விநாயகனே. (40)

அளவு கடந்த மனோரதமே சச்சி தானந்தமே
களங்க மில்லாதவ ருள்ளத்தி லோங்குங் கனகொளியே
உளவு தெரிந்துன துயர்ப்பதம் போற்ற வுதவிச்செய்வாய்
விளங்கனி போலுள வித்தக ரேத்தும் விநாயகனே. (41)

சகல சுதந்தரத் தந்திமுகத்துளத் தற்பரனே
மிகபர சாதனை யாவுங்கொடுத்தாள் கணேச்சுரனே
புகலரும் ரேசக பூரக கும்பத்தில் பூர்த்தருளை
மிகக்கனி வாயடி யார்க்கரு ளீயும் விநாயகனே. (42)

பொன்னே மணியே பூஷணமேபரி பூரணமே
மன்னுமரகத பச்சை நீலோற்பல வைடூர்யமே
பன்னு மறைகளினுந்தேட நிற்கும் பராபரனே
மின்னிகர் வாழ்வி லயர்ந்தே னலந்தா விநாயகனே. (43)

கற்பகமே கருணாகரமே ஞானக் கலைக்கடலே
அற்புத தற்பர சிற்பரனே யகண்டித வுருவே
பொற்புய ரப்பனே போற்றினவர்க்கருட் புரிபவனே
விற்பனர் ஞான்றும் வேண்டித் தொழவரும் விநாயகனே. (44)

கந்தங் கமழ்மலர்ச் சந்தனஞ் சாத்திக் கசிந்தழுது
வந்தனஞ் செய்து மகிழுங் குணமென்று வாய்த்திடுமோ
பிந்துக்களை மூன்றினுக்கு மெட்டாதப் பிரணவமே
விந்தய மாகிரி முடியில் விளங்கும் விநாயகனே. (45)

ஐங்கரனே யகண்டித குண்டலயமே ஆனைமுகா
எங்குநிறைந் தனைத்தையுங் காத்தரு ளீயுமிறைபவனே
துங்கமெய்ஞ் ஞானியர்த் தோத்திரனே பலத் தொல்லைமிகு
வெங்குறைத் தீர்த்தரு ளுன்கழ டஞ்சம் விநாயகனே. (46)

எள்ளுருண்டைப் பயி றவல்கடலைத் தேன்கா யினியகனி
தெள்ளியப் பாகுத் திரளாக வைத்துத் தீபமெனு
முள்ளந்தனின் மன மாகுமாட்டைப்பலி யுவந்தளித்தோர்
விள்ளர்க் கரிய சுகமுத்திக் காணும் விநாயகனே. (47)

தங்கமே ஞானத் தடாகமே வினைநோய்த் தனையகற்றும்
வங்கமே முகரா மாமலரே சைவ மாணிக்கமே
திங்களவிர்ச்சடை யானுமை பார்வதிச் செல்வமே யூழ்
வெங்கலிப் பாசையை நீக்கிட வேண்டும் விநாயகனே. (48)

அருளே பழுத்த தீஞ்சுவையே ஞான வாரமிழ்தே
தெருளே பழுத்த தேவர்களேத்துந் திஞேயமே
மருளே பழுத்த மனத்தரு ளினது வரமிருந்தால்
வெருளா ரெமனுக்கும் வினைக்கெவா முண்மை விநாயகனே. (49)

அரஹர வோமர சிவகணேசவென்று னடிபணிந்து
வரமிகுந் தார்நலோர் வாழ்வடைந்தா ரந்த மாண்பதனின்
றிரமறிந் தவ்வழி நின்றரு ளெய்திடத் திருதியென
விரத மிருந்தவ ருளங்கோயிற் கொண்ட விநாயகனே. (50)

அமரர்கண் விஞ்சைய ராப்தர்க ளாரிய ரறமதனுற்
சமரச மாகுஞ் சுக்ஞான மதிற்காணுந் தக்திமுகா
கமழ்மலர்ச் சாத்திக் கண்ணீர்சிந் தத்தொழாக் கசடனையாள்
விமலனே யுன்னை யன்றி திக்கில்லை விநாயகனே. (51)

இரண்டாவது.

## * சதுர்வித சாதை சமரச கதிநிலை.

ஆலயஞ் சத்திரஞ் சாவடி மடங்க ளமைத்தலுடன்
சாலவே தங்கை மெழுகுத லும்மலர்ச் சாத்திடுதல்
மூலம தாகத் தேவாரங்க ளோதுதல் மூன்சரிதை
வேலவன் முன்னவ னுகவிளங்கும் விநாயகனே. (52)

திருவல கிடுதல் மெழுகுத லருண்மலி திருவிளக்கு
கருவினைக் கட்டற யிடுதலும் பக்தி கவிதையுடன்
பெரும்பய னுகமம் புராணங்கள் மொழிதற் புகழ்ச்சரிதை
விருதுட னடைவது வியன்மறை யன்றோ விநாயகனே, (53)

நந்தன வனங்க ளமைத்தலும் புண்ணிய ஞானமிகுஞ்
சிந்தை யுவந்திடுந் திருநீ றணிதலுஞ் செழுமையெனு
மந்தமிகுமுத் ராக்கங் காஷாய மணிச்சரிதை
விந்தைப் பதமருட் செய்திடும் விக்கின விநாயகனே. (54)

பஞ்சகௌ வியத்தி னுலபிடேகம் பலிதமுற
மஞ்சுருவா யைந்து சுத்திமு மட்சர மாண்புளநற்
செஞ்சிலம் போதையிலே மனந்தன்னைத் திறப்படுத்தி
விஞ்சைக் கிரியைப் பதிதர வருகும் விநாயகனே. (55)

ஆதன மூர்த்தியை மூலத்தினுலு மட்டமலர்ச்
சாதனையாலு மர்ச்சித்து யேத்திச் சனனமற
போதனை மன்னு மைந்தாவரணம் பொருந்திடுமெய்
வேதம்புகல் கிரியைப்பதமன்றோ விநாயகனே. (56)

சமயம் விசேடம் நிருவாண மூன்றுந் தானறிந்து
அமல பரஞ்சுட ரறிவைத் தருகுமா சாரியரின்
கமழ்நல வபிடேகமு மந்த்ரத் தாரணங் கனமிகுநன்
விமலக் குணகிரி யைப்பதி யாக்கும் விநாயகனே. (57)

இயமம் நியம முடன்சொல் சமாதி யெழிலதுசே
ருயர்மறைப் போத வுண்மையாய்த் தத்துவ முழுதுமுணர்ந்
தயர்கின்ற பிறவிக் காடதை வென்று யறிவதனுள்
வியன்மிகு யோகப் பதிமுத்தி யாமால் விநாயகனே. (58)

சத்தியமோடு தபசு சந்தோஷஞ் சாட்சிநிறை
சித்திரம்போ லசையாது யிருத்தலாஞ் செய்யமனப்
பித்துக ளொடுங்கிப் பிர்மச் சொரூபம் பிறங்கு மெழில்
வித்தக யோகப் பதவிய தன்றோ விநாயகனே. (59)

சீவனுக்கும் பரனுக்கு முண்டாகுந் திரிபுடிக
ளாவது மொன்றுமில்லாது யெல்லா மொன்ற தாகுநிலை
தேவரோ டொக்குந் திருவரு சமாதி செழுந்தவமாம்
மேவரிதானது புண்ணிய வாசனையே விநாயகனே. (60)

* சரிதையாவது—சிவாலயம், விஷ்ணுவாலயம், சாவடி, சத்திரம் முதலியவை நூதனமாகச் செய்வித்தலும், கங்கைமுதலாகிய புண்ணிய நதிகளில் ஸ்நானஞ்செய்தலும், சிவாலயங்களில் அதிகாலையில் திருவலகிடுதலும், திருமெழுக்கால் மெழுகுதலும், திருவிளக்கிடலும்; சுத்தமனத்தனாக நந்தவனத்திற்றெரிந்து புட்பமெடுத்துத் தேமாலையாதிகட்டி ஈசன் திருமேனியில் சாத்தலும், தேவாரம் திருவாசகம், பக்திகீதை, ஆகமம், புராணம், இவைமுதலியதை காலந்தவறாமல் ஓதுவித்தலும், வில்வமுதலான புட்பச்செடிகள் வைத்தலும்; விபூதி, ருத்திராக்ஷம், காஷாயம், இலிங்கம், பஞ்சாட்சரம் என்னும் இப்பஞ்சமுத்திரையில் ஒரு முத்திரையையாவது தரித்த சிவனடியார்களைக்கண்டால் பரமசிவத்தை வழிபடுதல் போலவணங்கி வந்தனவழிபாடுடன் ஏவல்முதலியவைசெய்தலும், ஆலயங்களில் அங்கப்பிரதக்ஷண முதலிய நூற்றெட்டு ஆயிரத்தெட்டென்னுந் தொகைப்படி வலம்வருதல் முதலிய நோன்புகளை மனஞ்சலியாது நிறைவேற்றுதலாம்.

தானத்தினால், விரதத்தினால், அத்தியயனத்தால், யாகத்தால் பயனில்லையென்றும், விபூதிதரித்தலால் ஒருவன் சிவகணமாவது நிச்சயமென்றும்,

சடையுடையனுயிருந்தாலும், முண்டிதனுயிருந்தாலும், பஸ்மத்தையணிந்த சரீரமுடையவன் சிவசொரூபத்தை யடைந்து சிவனோடு சந்துஷ்டியடைகிறானென்றும், விபூதிதரித்தற்கொப்பான புண்ணியமும், தவமுமில்லையென்றும், சடையும் பஸ்மமும் யாருடையனோ அவன் உலகத்தாரால் சொல்லப்படுகின்ற எல்லாவருணத்தினுஞ் சிவயோகியாயிருக்கின்றானென்று "பத்மபுராணத்தில்" கூறப்பட்டுள்ளது.

கிரியையாவது—சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியமாகிய இவ்வைந்தும் கோசலம், கோமயம், பால், தயிர், நெய் ஆகிய இவ்வைந்தும் வாழை, எலுமிச்சம், நாரத்தை, நெல்லிப்பருப்பு, இளநீராகிய வைந்தும் உபகாரணமான மற்றும் பூசாதிரவியஞ்சேர்த்து ஆத்மசுத்தி, பூசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி ஆகிய பஞ்சசுத்தியும் சவுரபூசையுஞ்செய்து, சிவத்தியானஞ்செய்து பட்சபிரம்மஷ்டங்க பஞ்சாட்சர மந்திர உச்சாடனத்தால் ஆவாகன, ஆஸ்தாபன, சந்நிதாபன, சந்நிரோதன, சகளீகரண, பரிமீகரண, அவகுண்டன, தேனுயோநி, அமுர்திகரண, லிங்கமுத்திராம்பரதரிஸ் என்று திக்குபந்தனுதி, மந்திரகிரியா பாவனைகளைக் குறைவில்லாமற்செய்து; ஆதனமூர்த்தியை மூலத்தினுலும், அஷ்டபுட்பத்தினுலும், அர்ச்சித்துப் பீடத்துவார குருபூசைகளும், ஈசானுதி முதலாவரணமும், அனந்தாதி இரண்டாமாவரணமும், நந்தியாதி மூன்றுமாவரணமும், இந்திராதி நான்காமாவரணமும், வஜ்ராதி ஐந்தாமாவரணமும், அந்தந்த தேவதாபாவனையுஞ் செய்து வில்வத்தினுல் நூற்றெட்டு ஆயிரத்தெட்டென்றும் நாமங்களை உச்சரித்து அர்ச்சித்து சமயம், விசேடம், நிருவாணம், ஆசாரியபிடேகமுஞ்செய்து ஆநந்தத்துடனே தோத்திரமும் இன்பமாக ஓமமுஞ்செய்து முறைப்படிசெய்த பூசையில் தனக்கொரு போகத்தையுங்குறியாமல் நிஷ்காமமாகச் சிவார்ப்பிதஞ்செய்து சண்டேஸ்வர பூசையுஞ் செய்தலாம்.

அஷ்டாங்கயோகமாவது—இயமம், நியமம், ஆதனம், பிராணயாமமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியாம். இவற்றுள் (இயமம்) பத்துவகைப்படும்—அவையாவன, அஹிம்ஸை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மசரியம், தயை ஆர்ஜவம், க்ஷமை, திரிதி, மிதாஹாரம், சவுசம் என்பனவாம். (அஹிம்ஸையாவது) யோகார்த்தம், திரிகரணத்தாலும் அன்னிய பிராணிகளுக்குத் துன்பத்தைச் செய்யாமலிருத்தல், (ஞானுர்த்தம்) ஆத்துமா அறுக்கப்படாதது, தகிக்கப்படாதது, நனைக்கப்படாதது, உலர்த்தப்படாதது எனவறிதல்.

(சத்தியமாவது) யோகம் எதார்த்த கேள்வியினுலும், பிரத்தியக்ஷப்

பார்வையினாலும் அறிந்ததைச் சொல்லுதல், (ஞா-ம்) எவற்றையும் சத்திய பிர்ம்ம மயமாய்ப்பார்த்தல், (அஸ்தேயமாவது) (யோ-ம்) அன்னியருடைய சொத்துகளைக் கிரகிக்கவேண்டுமென்று மனத்சாலும் நினையாதிருத்தல், (ஞா-ம்) ஆத்மாவை அனாத்மாவாக உச்சரியாமலிருத்தல், (பிர்ம்மசரியமாவது) யோ-ம் ருதுகாலமன்றி மற்றகாலத்தில் சுவஸ்ரீயையும் விரும்பாதிருத்தல், (ஞா-ம்) மனத்தினால் தன்னை பிரம்மசொரூபமாகத்தானே எண்ணிக்கொள்ளுதல். (தயையாவது) தன்னைப்போல் யாவரும் மோக்ஷமடைய மனதிற்கொள்ளுதல் (ஆர்ஜவமாவது) பெண்டீர்முதல் சத்துருவரையிலுஞ் சமமாயிருத்தல், (க்ஷமையாவது) சத்துருக்கள் தங்கள் திரிகரணங்களாலுஞ் செய்யாநின்ற துக்கங்களை மனத்தில் தரியாமலுங் கலங்காமலுமிருத்தல், (திரிதியாவது) யோ-ம் வேதவிசாரணையினால் சமுசாரத்திலிருந்து விடுபடுதலே சுகமன்றி வேறில்லையென்றறிதல், (ஞா-ம்) நான் பிரம்மமேயன்றித் தேகனல்லன் என்று நிச்சயித்தறிதல், (மிதாஹாரமாவது) அதிகமுங் கொஞ்சமுமில்லாமல் சமமாகப்புசித்தல், (சவுசமாவது) யோ-ம் காயத்தை மண்ணினாலும், சலத்தினாலுங்கழுவுதல் இதுபகிஸ்ஸவுசம், (ஞா-ம்) சொரூபத்தை மனனஞ்செய்தல், இது அந்தஸ்ஸவுசம்.

(நியமம். பத்துவகைப்படும்) அவை தபசு, சந்தோஷம், ஆஸ்திக்கியம், தானம், ஈஸ்வரபூசை, சித்தாந்தசிரவணம், லஜ்ஜை, மதி, ஜெபம், விரதம், என்பனவாம், (தபசாவது) யோ-ம் உபாசனத்தினால் தேகத்தைசுஷ்கப் பண்ணுதல், (ஞா-ம்) ஆத்மவிசாரம்பண்ணுதல், (சந்தோஷமாவது) யோ-ம் அற்பசிரமையினாலாவது பரவிச்சையினாலாவது கிடைக்கின்ற புசிப்பினிடத்திலே போதுமென்று திருப்தியடைதல் (ஞா-ம்) இகத்திலும் பரத்திலும் அடையாநின்ற போகங்களில் உபேக்ஷைபண்ணி ஆத்மாவினிடத்தில் பிரீதிவைத்திருத்தல் இதற்குப் பரமசந்தோஷமென்றுபெயர். (ஆஸ்திக்கியமாவது) சுருதி, ஸ்மிருதி, வாக்கியார்த்தத்தில் விசுவாசம் வைத்தல், (தானமாவது) நீதியில்நின்று சம்பாதித்த தனது பொருளைப் பிரம்ம நிஷ்டர்களுக்கு கொடுத்தல், (ஈஸ்வரபூசையாவது) திரிமூர்த்திகளையும், தங்கள் சக்திக்குத்தக்கபடி பூசித்தல், (சித்தாந்த சிரவணமாவது) வேத சித்தாந்தத்தைக் குருமுகத்தில் நிச்சயித்தல், (லஜ்ஜையாவுது) லவுகிகத்திலாவது, வைதீகத்திலாவது, பொல்லாங்கான காரியத்தில் வெட்கமடைதல், (மதியாவது) வேதத்திற்சொல்லிய புண்ணியங்களை விசுவாசித்தல், வேத சாஸ்திரத்தின் அர்த்தம் விசாரித்தல், (ஜெபமாவது) வேதஞ்சொன்னபடி மந்திரங்களை உறுவேற்றுதல், இதைப் பாசுபத விரதமென்றும், சிரோ விரதமென்றும், அத்தியா விரதமென்றுஞ் சொல்லுவார்கள். (விரதமாவது) காயத்தால் அன்னியரை யடித்தல், அன்னியருடைய ஸ்ரீயைப்பிடித்தல்

அன்னியருடைய பொருளைப் பலவத்காரமாக எடுத்தல் ஆகிய இம்மூன்றையுஞ் செய்யாதிருத்தல், வாக்கினால் கடூரமாக துஷ்டவார்த்தைகளைப் பேசுதல், பொய்சொல்லுதல், கோள் சொல்லுதல், அறிவீனருடன் கலந்து சாதுக்கள் நேசமும், சத்விஷயமுமின்றி வீண்பொழுது போக்குதலுமாகிய இவை நான்கையும் விட்டிருத்தல், மனசு அரிஷ்டவர்க்கத்தை விட்டிருத்தல், தேகமுழுவதும் விபூதி தூளிதம்பண்ணுதல் (ஆசனம் ஒன்பது வகைப்படும்) அவை ஸ்வஸ்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் என்பனவாம். (ஸ்வஸ்திகமாவது) துடைக்கும், முழங்காலுக்கும், நடுவே இரண்டு உள்ளங்காலையும், செலுத்தி இறுமாந்திருத்தல், (கோமுகமாவது) சகனபக்கத்தில் இருகால் பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல், (பதுமமாவது) இருதொடைமேலும் இரண்டு உள்ளங்காலையும்மாறித் தோன்ற வைத்தல், (வீரமாவது) வலத்தொடையில் இடக்காற்பரட்டைச்சேர்த்து இறுமாப்புற்றிருத்தல், (கேசரியாவது) பீஜத்தின்கீழ் ஜீவனியிடத்துப் பரட்டைவைத்து இடமுழங்கையை முழந்தாளில்வைத்து அங்குலியை விரித்து நாசியைப்பார்த்திருத்தல், (பத்திரமாவது) பீஜத்தின்கீழ் ஜீவனியிடத்து இருகாற்பரட்டையும்வைத்து அவ்விருபதத்தையும் இருகையால் இறுகப்பிடித்து அசையாதிருத்தல், (முத்தமாவது) இடக்கால் பரட்டால் ஜீவனியை அழுத்தி வலக்கால்பரடு அப்பரட்டின்கீழ் உந்தவிருத்தல், (மயூரமாவது) முழங்கையிரண்டும் உந்திப்புறத்திலழுந்தப் புவியிற்கையூன்றி கால்நீட்டி தலை நிமிர்ந்திருத்தல், (சுகமாவது) சுகமுந்திடமும் எவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறிருத்தல் இவ்வொன்பதும் முக்கியாசனமெனவே இருகுதிகாலுஞ் சீவனியிடத்திற்பொருந்த இருபுறவடியின் மீதிலும் இரண்டங்கையுஞ்சேர்த்து மார்புநெறித்தும் தலைநிமிர்ந்திருத்தலாகிய குக்குடாசனமுதலிய சிலவாசனங்களும் உளவென்க்கொள்க, (பிராணாயாமம் இரண்டுவகைப்படும்) அவை சகர்ப்பம், அகர்ப்பம், என்பனவாம் (சகர்ப்பமாவது) தியானத்துடன் மூச்சைப்பிடிப்பது, (அகர்ப்பமாவது) தியானமின்றி மூச்சைப்பிடிப்பது, இந்த இருவகையும் இரேசக, பூரக, கும்பகமாயிருக்கும், (இரேசகமாவது) பிராணாயாமத்தில் வாயுவைவிடல், அல்லது மூச்சைவிடுதல், (பூரகமாவது) மூச்சுள்ளே வாங்குதல், (கும்பகமாவது) கும்பித்தல் அதாவது மூச்சைநிறுத்தல்.

(பிரத்தியாகாரமாவது) யோ-ம், மனத்தை இந்திரிய விஷயங்களிற் செல்லவொட்டாமல் லக்ஷியத்தில் நிறுத்தல், (ஞா-ம்) சர்வம் பிரமமயமாய்ப் பார்ப்பதென பிரம்ம நிஷ்டர்கள் சொல்லுதல், வேதத்திற் சொல்லிய நித்திய நைமித்திய காமியகர்மங்களை பிரமாராதனமென்று செய்யுதல்,

தேகத்தை நானென்று நினைப்பதைத்தள்ளிச் சித்தாத்மாவே நானென்று நினைத்திருத்தல், (தாரணையாவது) யோ-ம்) தேகாகாசத்தை, வெளி ஆகாசமாகவும், தேகவாயுவை வெளி வாயுவாகவும், தேகத்தீயை வெளித்தீயாகவும், தேகநீரை வெளி நீராகவும், தேகமண்ணை வெளி மண்ணாகவும், நினைத்திருத்தலும், பாதமுதல் முழங்கால் வரையில் பிருதிவிபாகம் பிரமனாகவும், முழங்கால் முதல் தொப்புள்வரையில் சலபாகம் விஷ்ணுவாகவும், நாபி முதல் மார்புவரையில் அக்கினிபாகம் ருத்திரனாகவும், மார்புமுதல் புருவம் வரையில் வாயுபாகம் ஈஸ்வரனாகவும். புருவமுதல் சிரசுவரையில் ஆகாசபாகம் சதாசிவமாகவும், நினைத்திருத்தலும், மனத்திற்குச் சந்திரன், காதிற்குத் திக்கு, தோளுக்கு விஷ்ணு, புயத்திற்கு ஹரி, வாக்குக்கு அக்கினி, குதத்திற்கு மிருத்தியுவு, உபஸ்தத்திற்குப் பிரஜாபதி, தொக்குக்கு வாயு, கண்ணுக்குச் சூரியன், நாவுக்கு வருணன், மூக்குக்குப் பூமிதேவி, புருஷனுக்கு அந்தரியாமி, அதிஷ்டான தேவதையென்று புத்தியில் தரித்தலுமாம், (ஞா-ம்) தேகாதிப் பிரபஞ்சமாகிய பஞ்சபூதங்களை மஹாபூதங்களில் ஒடுக்கி, மஹாபூதங்களை மாயையில் ஒடுக்கி, மாயையை ஆத்மசொரூபத்திலொடுக்கி தான் சின்மாத்திரனென்று மனதிற்றரிப்பதுவும், நான் தேகாதிகளுமன்று, அதற்குரித்தாகிய மாயையுமன்று, நான் சின்மாத்திரனென்று ஒடுங்கி நிற்பதுவும் பரமதாரணையாம்.

(தியானமாவது) யோ-ம்) மனதை மூர்த்திவடிவமாக்கி மற்றொன்றிலும் பொருந்தாமற் செலுத்தல், (ஞா-ம்) ஞேயாதீதமாயும், திருக்கு ரூபமாயும், இருக்கிற சின்மாத்திரத்தை நானென்று தியானிப்பது பரமதியானமாம், இப்படி தியானிக்கிறவரை சாக்ஷாத் பரமசிவமெனப்படும்.

(சமாதியாவது) யோ-ம்) ஜீவனுக்கும் பரனுக்கும் ஐக்கிய அபேதக்யானம் பிறக்கின்றதேயாம், (ஞா-ம்) நான் சாக்ஷிஸ்வரூபனாகையினாலே நான் தேகாதிகளல்லன், நான் பரமசிவனென்கின்ற புத்தியும், பிரமாண்டபிண்டாண்டங்களை ஸ்தூலபஞ்ச பூதங்களிலொடுக்கி அந்தப் பூதங்களை அபஞ்சீகிருத பூதங்களிலொடுக்கி, அச்சத்தாதியாகிய தன்மாத்திரைகளை மாயையிலொடுக்கி, அம்மாயையைப் பிரத்தியேகாத்மாவிலொடுக்கி, அவ்வாத்மாவாகிய நானே பிரமம், நான்சமுசாரியல்லன், என்னைவிட வேறேயில்லையென்று அறிவதும், பிரணஸ்வரூபமான பரமேஸ்வரனை மூன்று வர்னங்களாகப்பாவித்து, அம்மூன்றுவர்னங்களையும்; பிர்மா, விஷ்ணு, ருத்திரர்களாகப்பாவித்து, அந்தவர்னத்தினுடைய நாதத்தைக் காரண ஈஸ்வரராகப் பாவித்து, அம்மூன்று வர்னங்களையும் மூன்று அக்கினியாகவும், மூன்று லோகமாகவும், மூன்று அவஸ்தையாகவும், மூன்று ஸ்தானங்களாகவும்,

மூன்று ஸ்வரங்களாகவும், மூன்று காலங்களாகவும் பாவித்து, அகாரத்தை உகாரத்திலொடுக்கி, உகாரத்தை மகாரத்திலொடுக்கி, மகாரத்தை நாதத்திலொடுக்கி, நாதத்தை மாயையிலொடுக்கி, மாயையை ஜீவனிலொடுக்கி, ஜீவனே ஈஸ்வரன், அவனே நானென்றுஞ் சர்திப்பது பர்மச்மாதியாம்.

### விருத்தம்.

சரிதையின் றொழிலினாலுஞ் சற்கிரியையினும் யோகம்
புரிதரு முயற்சியானும் பொருந்தொணா தென்பர் மேலோர்
உரியதேசிகனுரைக்கு மொருமொழி யுண்மையாலே
அரியமெய்ஞ் ஞானவீடுங் கடைவது திண்ணமாமே.

அருமையாகிய உண்மை ஞானத்திற்குரிய ஜீவன்முத்தியைச் சரிதைத் தொழிலினாலும், நல்லகிரியையினாலும், அஷ்டாங்கயோகஞ் செய்தலாகிய முயற்சியினாலும், அடையக்கூடாதென்று மேலாகிய ஞானவான்கள் சொல்லுவார்கள், (மற்றையாதினால் அடையலாமெனில்) உரிமையாகிய ஞானாசிரியர் அநுக்ரஹிக்கின்ற உண்மை பொருந்திய ஒரு மஹா வாக்கியத்தினால் அடைவது நிச்சயமாமென்றுங் கூறப்பட்டுள்ளது.

——o——

## மூன்றாவது
## சருவசாட்சியின் சத்தோதய கதிநிலை.

சருவ சாட்சியுந்தன் மாத்திரைக் காரணந் தத்துவத்தி
னுருகொண் டலவும் பிறவியும் வேட்கை யுததியெனு
மிருண்வந்து மூடா பரஞானந் தன்னோ டிலகிடினே
வெருவல னாது மெமவாதை யொழியும் விநாயகனே. (61)

சத்தோதயமே தத்சத் தெனாஉந் தத்சத்தினி
லொத்துயிருக்கு மிடமின்னதென்னு முளவறிந்து
மத்தரும் பேயர் பாலர்கடன்மை வாய்ந்து நல
வித்தக ஞான வீட்டினில் வாழ்வர் விநாயகனே. (62)

சாங்கியஞ் சதாக்கியஞ் சச்சிதானந்தஞ் சதோதயத்திற்
றாங்குயர் ஞான பம்ராட் சபரோட்சப் பயோதரமாய்
நீங்குதற் கரிய நிரதி சயானந்த நிட்டையின்முன்
வேங்கைபோற் சீறும் மனவேட்டை யொடுங்கும் விநாயகனே. ()

சச்சிதா னந்த சதானந்த யோக சகசநிட்டை
யிச்சைக ளெல்லாங் கடந்துத் தானேதானு யின்பமுற்றோர்
முச்சகங் கட்டில் முத்தேக மெத்தையாய் முடிந்தயிடம்
மிச்சமொன் றின்றி சருவமாய் நிற்பர் விநாயகனே. (64)

தத்சத் தென்னலுந் தத்வமசியெனுஞ் சதோதயமு
நித்திய வநித்திய சுத்த வசுத்தங்க ணிர்க்குணமாய்
வத்து விதத்தினிற் கலந்துக் கொண்டானந்த மனுபவிக்கின்
வித்தக சைவ விளக்கமெய்ஞ் ஞானம் விநாயகனே. (65)

தத்துவ சத்துவந் தொம்பத சித்தமுந் தொய்தபதஞ்
சத்துவ தீத்துவ சத்தவை நின்மலத் தனியிடத்தி
லொத்து பரத்துவ நித்தியப் பிரணவ வோமெனூஉம்
வித்தி லொளித்து நிலைத்தென்று மோங்கும் விநாயகனே. (66)

சாந்த பதவ்யோம நெறியினுட் கலந்து சகளமனம்
போந்த சதாக்கிய சாட்சிய ரூபத்தின் புண்ணியகட
மாந்தகைமைக்குண மனுபவந்தன்னி லரசு செயும்
வேந்தனுமாக விளங்கிடுமென்றே விநாயகனே. (67)

என்று மொன்றான தனிநிலைத் தன்னு ளேகாந்தமாய்
மன்றுளெனுஞ் சிதம்பரந் தன்னுட்கண்டு வாசிமுற்றி
பொன்றா வழியுடன் தொம்பத வறிவின் போதமதான்
வென்றிடு வாருலக காதியூழெல்லாம் விநாயகனே. (68)

சாந்தமே பிரமஞ் சாட்சி சதோதய தத்சத்ததுப்
போந்த நிருவாணம் பரிபக்குவத்தால் புனிதமிழ்தை
மாந்திக் களித்து யிருவினைநீங்கி மௌனமுடன்
வேந்த னெனத்துதித் திடநிற்பர் ஞானி விநாயகனே. (69)

தத்துவா தீத சுருதியுங் குருவுஞ் சாட்சியினி
லொத்து யிருக்கு மனுபவந் தானே வுயர்ப் பதவி
யெத்தவத் துள்ளு மிறைவன் மயமா யிருப்பதுவே
மெத்தவு மருமை விபரீத மில்லை விநாயகனே. (70)

சகலமுந் தன்னுள் வியாபித் திருக்குந் தந்திரத்தை
யிகபர சாதன மியாவு மொன்றாகு மிலக்கணத்தை
சுகப்படி கண்டு சொல்லரு நிட்டையிற் றூங்குவதே
மிகஞான முத்தி யிதுவே யொடுக்கம் விநாயகனே. (71)

நான்காவது

## பொறிபுலன்சத்துவப் புகழின்கதிநிலை.

——(*)——

தத்துவந் தொண்ணூற் றாறை யொடுக்கலுந் தனையறியப்
பத்திய மும்பரி க்ரமுங் காயகர்ப் பமுமுடித்து
சத்தசத் தோர்ந்தஷ்டச் சித்தியும் யோகச் சமாதிநிலை
வித்தக ஞானத் தின்முடி வன்றோ விநாயகனே. (72)

அஞ்சு மொடுங்கிடி லஞ்சுவதெங்ங னறிவுடனே
மஞ்சுருவாய் மன மஞ்சத்தின்மீது மகிழ்ந்து நித்ரை
யெஞ்சிடா மற்படி யிருவினை யற்றின்ப மெய்திடினே
மிஞ்சிடு மானந்தங் கொஞ்சும் பஞ்சக்கிளி விநாயகனே. (73)

சந்ததஞ் சிந்தை நிலைப்பெற்ற விடமே சமாதிவரும்
பந்த மகன்றவ ருள்ளமே கோயில் பற்றொன் றிலை
கந்தமும் பூவுங் கனகமு மொளிபோல் கடவுளேநின்
விந்தைக் கழலி லுயிர்வைத் திருப்பர் விநாயகனே. (74)

ஆரணங்கற்று வவ்வழி நின்றைந் தையுமொடுக்கிப்
பூரணா னந்த வுதயத்திற் பூர்த்திடும் பூவணிந்து
தாரணை தியானஞ் சமரச ஞானத்திற் றானிருந்தால்
வீரமும் பூரமுங் காரமும் வேண்டார் விநாயகனே. (75)

பழுத்தக் கனிரசமாஞ் சிவஞானப் பாலருந்தி
தழுதழுத் திடவே போற்றி மும்மலப்பேய்த் தலையுடைத்து
வழுத்தற் கரியச் சுழுச்சி சமாதியில் வாழ்ந்திருப்பர்
விழுமிதப் பஞ்சப் புலனொன்றதாயின் விநாயகனே. (76)

அகங்காரப் பேபசா சின்சிரங் கொய்தைம் புலனடக்கி
சுகபோக ஞானச் சுழுச்சியிற் றூங்காமற் றூங்கிவிட்டா
லிகபர மியாவுந் தனக்குளே காணு மின்பமுண்டு
விகற்பங்க ளில்லை மௌனமே முத்தி விநாயகனே. (77)

மனம்புத்திச் சித்த மகங்கார மொன்றாய் வயப்படினே
யினமும் தனகன மெவரோ நினைப்பவ ரெங்குமிலை
வனமென் றிருத்தலான் வேட்டைக ளுண்டவ் வணமினமே
வினையற்ற பேர்க்கே பொறிபுல னொடுங்கும் விநாயகனே. (78)

பாதாதி கேசம் பரவிடு மன்பிற் பற்றும் வண்மைத்
தூதாகு மைவர் சேட்டையொடுக்கி தொல்லைகட்போய்
வேதாவுங் காணு வெளியேறிநின்ற விபூதகுண
மேதாவியர்கட் கன்றோ விளங்கும் விநாயகனே. (79)

சாத்வித ராசத தாமத முக்குணச் சாட்சியுட
ணுத்தமம் பிராண னறிவுடன் சீவ னவைசிவமாய்
நேத்திரமாகு முட்கண்ணிணைப் பெற்று நெறியுற்றிடின்
வேற்றுமை யோய்ந்திடு மைந்துமொன்றாலல் விநாயகனே. (80)

சாக்கிர சொப்பனஞ் சுழுச்சி யெனுஞ்சிவ சாதனங்கண்
வாக்கு மனங்காய மொன்றாகி லெல்லாம் வயப்படுங்காண்
தீக்கிரையாமுன் குருமொழி யுண்டெனிற் சித்தியுண்டு
மீக்குணத் தழகுங் கலைஞான மொன்றும் விநாயகனே. (81)

சத்திருந்தா லஷ்டச் சித்தியுமுண்டுத் தனையுணரும்
பத்திமிகுந்தாற் பரஞ்சத்தி ஞானப் பால்கிடைக்கும்
முத்தியிருந்தால் முமூட்சுக டேவர்கண் முனிவருளர்
வித்திருந் தால்விளை வுண்டனுபோகம் விநாயகனே. (82)

புத்தி முதிர்ந்திடின் பூரணானந்தம் பொருந்தி நிற்குஞ்
சித்தி யடைந்தவ ரெவ்வுலகமுமொன் றாய்த்திகழ்வர்
சத்தியஞ் சாந்த மைந்துமொன் றானோர்க்கே தான்வசமாம்
வித்தியா தத்துவ விஞ்சையுள் வாழ்வர் விநாயகனே. (83)

ஐந்து மொடுங்கிடி னைம்பத்தொன் றொன்று யறிவினுக்குட்
சிந்தை நிலைத்திடுஞ் சென்ன மகன்றிடுந் திருவருளாற்
பந்த மொழிந்திடும் பக்தி மலிந்திடும் பார்மயக்க
விந்தையெல்லாம் பறந்திடும் விதிமாளும் விநாயகனே. (84)

இடைபிங் கலைச்சுழி முனைக்காந் தார மென்னுஞ் சதுர்ப்
படியொரு சிறிதும் வழாதவர் முத்திப் பயனடைவர்
மடைப்படு வெள்ளந் தடைப்படா துவரு மனச்செயல்போம்
விடையேறு மாமஹேஸ் வரனோ டுமைமகிழ் விநாயகனே. (85)

பஞ்ச தசப்பிர கரணங்க ணோர்மைப் பக்குவமாய்த்
தஞ்சங் கொடுத்தருட் சற்குரு வோர்சொல் தன்முனமே
மஞ்சுருவாகு மாயைக ளியாவும் மாய்ந்து விட்டால்
விஞ்சைக் கதிநிலை யதுபரிபூரணம் விநாயகனே. (86)

ஐந்தாவது

## சரீரத்திரவிய பந்தமுத்திகதிநிலை.

சருமத் திரவிய மெவ்வண மவ்வணக் கன்மமதா
லொருமைப் படும்பல சென்மங்க லான துடலெனவே
யுருகொண்டு வந்து நன்மையுந் தீமையு முற்பவித்து
வெருவல மாயை யதன்பா லொடுங்கும் விநாயகனே. (87)

மந்திரமுஞ் செப தியானமுந் தோத்திர வளங்குலவு
மெந்திரமு மெழுத் தொடயிலக்கண விலட்சணமுஞ்
சிந்தை யடக்கலுஞ் சித்திகட் செய்யலுஞ் செனனமது
விந்தை யடைதலும் விதிமதி யென்பர் விநாயகனே. (88)

சத்தியம் பக்தி சாந்தமுந் தெய்வந் தினையறியும்
புத்தியே ஞானம் பொறையதே மௌனம் பூஷணங்க
ளுத்தவ முந்தருந் தலந்தீர்த்த மூர்த்த யெழினினைவும்
வித்தி னடையா ளங்கனி மதுரம் விநாயகனே. (89)

ஆரணங் கண்டறி வோடயிருந் தறியாமையற்றுப்
பூரண ஞானம் பொருந்தி நித்தியானந்தப் புகழ்படைத்து
காரமுஞ் சாரமு மற்றுமூச் சொடுங்கியுட் கண்ணதனுள்
வீரசைவப் பயிர் விளங்கவே வாழ்வர் விநாயகனே. (90)

பேதங்க ளற்றுப் பிரியங்க ளற்றுப் பின்முனற்றுப்
போதங்க ளற்றுப் புகழிக ழற்றுப் பொய்மெயற்றுச்
சாதனை யற்றுத் தானென்ப தற்று சகசநிட்டை
வேதங்களின் கருத்தாய் நிற்றல் முத்தி விநாயகனே. (91)

ஆகார மறிவு யிச்சையிம் மூன்று மளவுபடும்
போகாதி போக மியாவினு ளுள்ளும் புறம்பெனலுந்
தேகாதியந்த நிலைகண்டு நிற்குந் திரமதனல்
மேகமு மின்னலும் போலாமு மூட்சுகள் விநாயகனே. (92)

பந்தமு முத்தி யிலக்கணந் தன்னைப் பக்குவமாய்ச்
சிந்தையிற் கொண்டு செய்கைக டானற்றுத தெய்வநிலை
யந்தம தாயுணர்ந் ததுவ துவாய்நிற்கு மறிவுடனே
வெந்தழி யாப்படி நிற்பதே முத்தி விநாயகனே. (93)

¶ முதலாவது சரீரத்திரவியமாகிய கருமத்திரவியம் :—அவையாவன,

(கருமம்) புண்ணிய கருமமென்றும், மிஸ்ரகருமமென்றும், பாப கருமமென்றும், மூன்று விதங்களாகும். இவைகளில் புண்ணிய கருமத்தினால், தேவதா சரீரமும், மிஸிர கர்மத்தினால் மானவ சரீரமும், பாப கருமத்தினால், பசு பட்சி மிருகாதி சரீரமும், பிராப்தமாகின்றது.

மேற்சொல்லிய புண்ணிய, மிஸ்ர, பாப, கருமங்கள் மூன்றும் ஒவ்வொன்று உத்கருஷ்டம், மத்திபம், சாமானியமென மூன்றுமூன்றாகி ஒன்பதாகும்.

இவைகளில், புண்ணிய உத்கருஷத்தினால் பிரமாதி சரீரமும், புண்ணிய மத்திபத்தினால் இந்திராதி சரீரமும், புண்ணிய சாமானியத்தினால் யக்ஷ பிசாசாதி சரீரமும், மிஸிர உத்கருஷத்தினால் ஜீவன்முக்தி சுகமுதிக்கும்படியான சரீரமும், மிஸிர மத்திபத்தினால், காமிய கருமங்களுக்குபயோகமான சரீரமும், மிஸிர சாமானியத்தினால், சண்டாள வியாதாதி சரீரமும், பாப உத்கருஷத்தினால், பாம்பு தேள் முதலிய விஷ ஜெந்துக்களினுடையவும், எட்டி முதலிய விஷவிருக்ஷாதிகளினுடையவும் சரீரங்களும், பாபமத்திபத்தினால், குதிரை, எருமை, ஆடு, கழுதை, முதலிய சரீரமும், நெல்லி, பலா, தெங்கு, முதலிய மரசரீரமும், பாப சாமானியத்தினால், பசு, யானை முதலிய சரீரமும், அரசு, வேம்பாதி மரசரீரமும், பிராப்தமாகிவரும்.

ஆகையினால், மோக்ஷாபேக்ஷையையுடைய விவேகிகள் முன்னதாக கருமபல தாரதம்மியத்தை விசாரித்து மிஸிரோத்கருஷகருமம் லப்பியமாகும்படி முயற்சிசெய்யவேண்டும்.

மேற்காட்டிய கருமங்களியாவும், மனம், வாக்கு, காயம், என்னப்பட்ட இந்த மூன்று கரணங்களினாற் செய்யப்படுகின்றன.

அஃதெப்படியென்றால், விஸிஷ்ட காரிய சிந்தனையும், நிர்விசேஷ சிந்தனையும், பரலோக சிந்தனையும், பரஹிதப் பிராப்தசிந்தனையும், பக்தி ஞான சிந்தனையும், ஆகிய இவை முதலியவைகள் மனதினாற்செய்யப்பட்ட புண்ணிய கருமங்களாகும்.

சருவதா விஷயங்களில் சிந்தனையும், பராஹித சிந்தனையும், வேத சாத்திராப்பிரமாண சிந்தனையும், தர்மாதர்மா பாவசிந்தனையும், பரலோகா பாவசிந்தனையும், ஆகிய இவைமுதலானவைகள் மனதினாற்செய்யப்பட்ட பாப கருமங்களாகும்.

சவிசேஷ, நிர்விசேஷ, தியான காலங்களில் செய்யப்பட்ட விஷயா நிநிந்தனை மனதினுற் செய்யப்பட்ட மிஸிர கருமமாகும்.

வேதாகம சாத்திரங்களோதுதலும், தோ சஹஸ்திர நாமாதிபாராயணங்களும், காயத்திரி, பஞ்சாக்ஷராதி மந்திரங்களும், கடவுள்நாம சங்கீர்த்தனங்களும், பரோபகார வார்த்தைகளும், ஆகிய இவை முதலியவை வாக்கினுற் செய்யப்பட்ட புண்ணிய கருமங்களாகும்.

பெரியோரை தூஷித்தல் அன்னியரைக்கெட்ட சொற்களால் திட்டுதல் இவை முதலியவைகள் வாக்கினுற்செய்யப்பட்ட பாபகருமங்களாகும். வேதாத்யாயன ஜபாதிகாலங்களில், லௌகீக வார்த்தைகளும், பிரமாணங்கள் செய்தலுமாகிய இவை முதலியவைகள் வாக்கினுற்செய்யப்பட்ட மிஸிரகருமங்களாகும்.

புண்ணிய தீர்த்தங்களில் முழுகுதலும், குரு, தேவபூசைகள் செய்தலும், பிறர்க்குபத்திரவஞ்செய்யாதிருத்தலும், தெய்வ குரு, கோயில், பர்வதம், விருக்ஷாதிகளை பிரதக்ஷிணஞ் செய்தலுமாகிய இவை முதலியவைகள் காயத்தினுற்செய்யப்பட்ட புண்ணியகருமங்களாகும்.

எப்போதும் பிறரைப்பீடித்தலும், பரஸ்ரீசங்கமும், பலாத்காரமாக பிறனுடைய தனத்தை அபகரித்தலும், திருடுதலும், அறிவீனருடன் கலந்து வீண்பொழுது போக்கித்திரிதலுமாகிய, இவை முதலியவைகள் காயத்தினுற்செய்யப்பட்ட பாபகருமங்களாகும்.

பிறருடைய திரவியத்தைப் பலவந்தத்தினுலேனும் அனியாயமாகவேனும், அபகரித்து கோயில், கோபுரம், மண்டபம், சத்திரம், முதலியவைகள் கட்டுவித்தலும், குளமாதிகள் முதலியவைகள் வெட்டுவித்தலும், இவை முதலியதுடன் சொத்துக்களை தேவாலயங்களுக்குச் சேர்த்தலும் காயத்தினுற் செய்யப்பட்ட மிஸிர கருமங்களாகும். இவைகளே கரணத் திரய சுபாசுபகிருத்தியங்கள்.

## இரண்டாவது பந்தமோட்சம்.

—(*)—

விதியெனவும், மதியெனவும், இரண்டுண்டு இவைகளில் விதியென்பதை பந்தகாரணமெனவும், மதியென்பதை மோக்ஷ காரணமெனவுஞ் சொல்லப்படும். (இவ்விரண்டும் ஒவ்வொன்று ஆகாமியம்) சஞ்சிதம், பிராரப்தமென மூன்றுமூன்ருகி ஆருகும் அவைகளில் விதையினிடத்

தில் விருட்சத்திற்கு முளையுற்பத்தியாவதுபோல, சுயஞ்சைதன்னியத்தில், ஜனன, மரண, மாயா விருட்சத்திற்கு மூலைபோலுண்டாகும் சங்கல்பமாகிற இச்சையே பந்த ஆகாமியமாம்.

இந்த இச்சை வெளிமுகப்பட்டு தனது சைதன்னிய பிரதிபலனமான விஷயங்களை எதிரில்கண்டு அனுபவிப்பதற்கு உண்முகத்திலபேக்ஷைகொண்டு அப்போதனுபவிப்பதற்குக் கூடாதிருந்த இச்சாபோகங்களைத் தனையுஞ்சேர்ந்து கட்டுப்பட்டிருப்பதே பந்த சஞ்சிதமாகும்.

இவ்வாறாகச்சேர்ந்து கட்டுப்பட்டிருக்கும் விஷயபோகங்களை சித்தின் பிரேரேபணையினால் பிறகு அனுபவமாகக்கொடுத்து அனுபவித்துவருதலே பந்த பிராரத்வமாகும்.

முன்பு சுயஞ்சைதன்னியத்திலிருந்து வெளிமுகப்பட்ட இச்சை பிறகு சைதன்னியமான தன்னைக்காண விருப்பங்கொண்டு, உண்முகமாகத் திரும்பியதே மோக்ஷ ஆகாமியமாகும்.

அது உண்முகத்தில் தனது சைதன்னியத்திற்சேர, உள்ளே அபேக்ஷைக்கொண்டு, அப்போது அனுபவித்தற்குச் சக்கியமாகாத, நிரதிசயானந்த சைதன்னியானுபவங் கட்டுப்படுவதே மோக்ஷ சஞ்சிதமாகும்.

இவ்விதமாகக் கட்டுப்பட்டிருக்கும் பிரமாநந்த போகத்தை சைதன்னிய பிரேரேபணையினால், அனுபவமாகக்கொடுத்து அனுபவித்து வருவதே மோக்ஷ பிராரப்தமாகும்.

முன் சொல்லியிருப்பதுபோல, பந்த ஆகாமியத்தாலாகிய சஞ்சிதமும் அதனால்வரும் பிராரப்தமும், ஜனன மரண துக்கங்களுக்குக் காரணமாக அதிக பாதையைக் கொடுத்துவரும், மோக்ஷ ஆகாமியத்தினால் வந்த சஞ்சிதமும், அதனாலுண்டாகும் பிராரப்தமும், ஜனன மரண துக்க நிவர்த்தியான நிரதிசயாநந்த சைதன்னியமாவதற்கு, ஹேதுவாய் சுகஸ்வரூபமாகவிருக்கும். இவ்விதமாக தன்னால் மதிக்கப்பட்ட அந்த ஆகாமியத்தை (மதியெனவும்) சஞ்சிதத்தினால் விதிக்கப்பட்டிருக்கிற பிராரத்வத்தை (விதியெனவும்) அந்த சஞ்சிதத்தை பூர்வ வாசனையெனவும், பந்த ஆகாமியத்தை அசாத்திரப் பிரயத்தினமெனவும், மோக்ஷ ஆகாமியத்தை சாத்திரப் பிரயத்தினமெனவும், பந்த சஞ்சிதத்தை அசுபவாசனையெனவும், மோக்ஷ சஞ்சிதத்தை சுபவாசனையெனவும், பந்த பிராரத்வத்தை விஷயானுபவ சாக்ஷாத்காரமெனவும், மோக்ஷப் பிராரத்வத்தை (ஸ்வரூபானுபவ சாக்ஷாத்காரமெனவும்) பெரியோர்களாற் சொல்லப்படுகின்றன.

ஆகையினல், மோக்ஷாபேக்ஷையுள்ள விவேகிகள் பூர்வஜன்ம வாசனையென்பது (விதியெனவும்) தங்களுடைய பிரயத்தினமே (மதியெனவும்) மனதில் திடமாக நிச்சயஞ்செய்துக்கொண்டு, இந்த விதிவருதலும், பின்கெடுதலும் மதியினிடத்தேயாகுமாகையினுல், இந்த மதிகொண்டு ஆத்மவிசாரமான சுத்தவாசனையையடைந்து, விதியினுல்வரும், அசுத்த வாசனையைக்கெடுத்து அபரோக்ஷ, நிர்மல சாக்ஷாத்காரமாகவேண்டும்.

——)*(——

## மூன்ருவது தத்துவானுபவம்.

——*——

**பிரமம், ஜீவன், அவித்தை, அந்தக்கரணம், இந்திரியம், விஷயம்,** என தத்துவங்கள் ஆருகும்.

இவைகளில், சர்வத்திலும், வியாபகமாகியும், மாதாவின் கருப்பத்தில் தங்கியிருத்தல், பிறத்தல், வளரல், முதிரல், தளரல், இறத்தல், எனச்சொல்லும். ஷட்பாவ விகாரங்க ளற்றதாகியும், சுத்த சத்வஸ்வரூபமாகியும், ஞானமொன்றினுல் மாத்திரமே அறியத்தக்கதாகியும், மனதினுல் இவ்விதத்ததெனவும், அவ்விதத்ததெனவுமூகித்தற்கும், வாக்கினுல், இவ்வாருகிபது அவ்வாருகியதெனச் சொல்லுதற்கும், புத்தியினுல், இவ்வகைப்பட்டதென நிச்சயித்தற்கும், சித்தத்தினுல் இந்த வஸ்துவாசயிருக்குமாவென்று சந்தேகித்தற்கும், ஊனக்கண்களினுற் காணுதற்குஞ் சக்கியமல்லாததாகியும், ஒப்புயர்வற்றதாகியும், இங்குதானுண்டு அங்கில்லையென்பதும், இந்தகாலத்துண்டு அந்த காலத்திலில்லை யென்பதும், இந்த வஸ்துவிலிருக்கிறது அந்த வஸ்துவினிடத்தில்லையென்பதும், இல்லாததாகியும், தனக்குத்தானே விளங்கிக்கொண்டிருப்பதாகியும், பந்தமோக்ஷங்கள், சுகதுக்கங்கள், மானுவமானங்கள், ஜெயாபஜெயங்கள், முதலிய துவந்துவங்கள் கடந்ததாகியும், சங்கல்பவிகல்பங்கள் கெட்டதாகியும், ஸ்தூல, சூட்சும, காரணதேகங்களற்றதாகியும், சத்து, சித்து, ஆனந்தமென்னும், இம்மூன்றுமே ஓர் வடிவமாகக்கொண்டு பிரகாசித்திருந்து தத்பிரகாசத்தில் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்ரஹம், என்னும், பஞ்சகிருத்தியங்கள் நடந்துவருமவைகளில், பற்ருென்றுமில்லாதொளிருங் கேவலாத்மாவே பிரமயாகும்.

இந்த. பிரமம், சூரிய சந்திராதிகள் மலின ஜலத்தில் பிரதிபலித்து ஜீவனுகும்.

இந்த ஜீவன் அவித்தையுடன்சேர்ந்துக்கொண்டு நித்திராவஸ்தையையும், அந்தக்கரணத்துடன் கூடிக்கொண்டு சொப்பனவஸ்தையையும், இந்திரியங்களுடன் கலந்துக்கொண்டு தேகாத்திர ஞானத்தையும், விஷயங்களுடன் சேர்ந்துக்கொண்டு சாக்கிராவஸ்தையையும், அடைந்து வருகிறது.

இவ்வாறான சாக்கிர மென்னப்பட்ட விழித்துக்கொண்டிருக்கும் அவஸ்தையில் பிரமவிவகார மெப்படியிருக்கிறதெனில், அந்தக்கரணம் விருத்திரூபமாக, இந்திரிய மார்க்கத்தில் வெளிப்பட்டு விஷயாகாரமாகத் தோற்றிக்கொண்டிருக்கும். இவ்விதந்தோற்றிக்கொண்டிருக்கும் விருத்தியை அவித்தைப் பாவித்துக்கொண்டிருக்கும்.

இந்த பாவனவிஷயாகாரத்தை ஜீவன் பின்னபின்னமாகக்கண்டு அவைகளின் விவகாரத்தினால், மகிழ்ந்திருக்கும். பிரமம் அகண்டமாய் சர்வசாட்சி மாத்திர மாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

---

## நான்காவது ஆத்துமாநுசந்தானம்.

---

ஆகாரம், அறிவு, இச்சை, என மூன்றாகும். இவைகளில்

ஆகாரம் என்பது உருவம்
அறிவு என்பது உருவாவுருவம்
இச்சை என்பது அருவம்.

இந்த உருவத்திற்கும், அருவத்திற்கும், மத்தியிலிருக்குமது அறிவு, இந்த அறிவு ஆகாரத்துடன் சேர்ந்து உருவமாகக் காணப்பட்டிருக்கும்.

இச்சையுடன் கலந்து அருவமாய் தோற்றமில்லாமற் போகும்.

ஆகையினால், அறிவாய்விளங்கும் ஆத்துமா, தரிசனமாகமாட்டாது.

ஆயின், ஆத்தும தரிசனமாவதுதானெப்படியெனில்? இப்போதிங்கு நமக்குத் தோற்றப்பட்டுக் கொண்டிருக்கும் விஷயாகாரங்களியாவும், தமக்குத்தாமே தோற்றமாட்டாது.

விஷயாகாரங்களாகத்தானே தோற்றிக்காணும் அறிவே தோற்று

கிறதினுல், இந்த அறிவைவிட ஆகாரம் எப்போதுமில்லவேயில்லே. எப்படி இல்லேயெனில்?

{ தான்பார்ப்பதற்குமுன் ஆகாரமில்லாமையினுல், முன்னுமில்லே
{ தான்பார்த்துவிட்டபிறகு ஆகாரமில்லாமையினுல், பின்னுமில்லே }

தான் பார்த்துக்கொண்டிருக்கும்போதுங் கடத்தோற்றத்தில் படமும், படத்தோற்றத்தில் கடமும், இப்படி ஒன்றிலொன்று தோற்றுதிருப்பதினுலும், அறிவிலேயே தோற்றிக்கொண்டிருப்பதினுலும், இப்போதும் ஆகாரமில்லே.

இப்படி மூன்று காலங்களிலும், கானலினிடத்து சலமெப்படி யில்லேயோ; அப்படி ஆகாரமில்லாமையினுல், முற்றுமுணர்ந்த பெரியோர்களால், (பிராக்கபாவம், பிரத்தோம்ஸாபாவம், அன்னியோன்னியாபாவம், அத்தியந்தாபாவம்.) என நான்கு காலங்களிலும், அறிவைவிட ஆகாரமில்லேயெனக்காட்டியபடி எப்போதும் ஆகாரமில்லவேயில்லே.

இலேதல்லாமல், ஆகாரந்தோற்றும்போதுமுள்ளது அறிவு;
ஆகாரந்தோற்றுதபோதுமுள்ளது அறிவு;
ஆகாரம் நசித்தபோதுமுள்ளது அறிவு;

இவ்விதமாக மூன்றுகாலங்களிலுமுள்ளது அறிவேயாமாகையினுல், எப்போதுமுள்ளது அறிவொன்றேயாகும்.

இந்த அறிவாகுங் கூடஸ்தனென்னும், வியஷ்டி சரீராத்மனேக் காணவிருப்பமுடைய முமூட்சுகளாகும் விவேகிகள், அறிவாகவே நிறைந்து பிரமமென்னும் சமஷ்டிசரீர, சர்வாத்மனுக விளங்கிக்கொண்டிருக்கும் குருஸ்வாமிகளினுடைய, கருணையினுல், மூவித தீட்சையுடன் உபதேசம்பெற்று அந்த ஞானக்கண்ணினுல், தானுகக்கண்ட அறிவை முன்னிட்டு தனதாகவும், அன்னியமாகவுங்கண்ட ஆகாரத்தைப் பார்க்கினப்போதே ஆகாரமுழுமையும், அறிவுமாத்திரமாய்க் கரைந்துபோகும்.

இவ்விதமாக, உண்முகத்திலறிவுமாத்திரமாகவிருந்து பார்க்குமது நிலேபட, அப்பியாசஞ்செய்து வரும்போதும், அறிவில் ஆகாரந்தோன்றும்.

அதேதென்றுல்? நெடுங்காலமாகப் பழகிவந்த பழக்கத்தினுல், முன்னேறியிருந்த ஆகாரதிருஷ்டி வாசனேயினுல் தோன்றும்.

தோன்றினுல் ஆங்கப்பொழுதே முன் கண்டபடி அறிவையின்றி ஆகாரமில்லேயேயென்று அறிவுமாத்திரமாகயிருந்து நோக்கினுல், அந்த

வாசனாகாரமும், சின்மாத்திரமாகவே கரைந்துவிடும்.

பின்னும் அறிவு மாத்திரமாகவேயிருந்து பழகிவரும்போதும், மறுபடியும், அறிவில் ஆகாரந்தோன்றும்.

இதேதென்றால், மூலாஞ்ஞானமாகிற இச்சை காரணமாகயிருந்து ஆகாரந்தோன்றும்.

இதெப்படி தோன்றுகிறதெனில், இச்சையில் ஆகாரமுற்பத்தியாகி அறிவில் ரூபமாகத்தோற்றி அந்தரூபமே ஸ்தூலமாகக் காணப்படுகிறதேயல்லாமல், இங்கு இச்சையைத் தவிர ஆகாரமில்லையேயென்று அந்த இச்சையை எதிர்நோக்கிக் காணும்போது ஆகாரமும், இச்சையுஞ் சேர்ந்து ஆகாரங்கரைந்து இச்சை அரூபமாய் தோற்றமில்லாமற்போகும்.

இவ்விதங் காணக்கூடாததாகயிருக்குமந்த அறியாமையைக்கண்ட அறிவாகயிருக்குந் தன்னைத்தான்கண்ட மாத்திரத்திலேயே, அறியாமையாகிற மூலாஞ்ஞானந் தனக்குத்தானே நிவர்த்தியாகி சுத்தசாட்சியறிவு மாத்திரமா யதுமிகுத்து நிறைந்து விளங்கிக்கொண்டிருக்கும் இன்னிலையே கேவலாத்மஸ்வரூபமாகவிருக்கு மனுபவநிலையதாகும். இதுவே மேதகத்திரயம்.

அவஸ்தாத்திரயம் அபிமானத்திரய முதலியவைகளுக்கு விலக்ஷணமாகயிருக்குந் துரிய சுகமுமாகும்.

| | |
|---|---|
| அறிவிலாகாரங் காணுதல் | சாக்கிரமாதும். |
| அறிவிலாகாரச்சாயை காணுதல் | சொப்பனமாதும். |
| அறிவிலாகார காட்சியின்றி சூனியமாகி பாழடைந்திருப்பது | சுழுத்தியாதும் |
| அறிவுமாத்திரமாக நிறைந்திருத்தல் அஃதாவது ஆகாரகாட்சியை அறிவுமாத்திரமாகக் கரைத்து சின்மயமாயிருத்தல். | துரியமாதும் |
| இவ்வாறு சின்மயமாக நிற்குநிலையு நழுவி பரிபூரணமாதல் | துரியாதீதமாதும் |

இந்த ஆத்மானுசந்தானஞ்செய்ய விருப்பங்கொள்ளும் விவேகிகள், அடியிற்கண்ட கிரமப்படி அனுஷ்டானஞ்செய்துவந்து, பிரமோகமென்னும் பூரணானுபவமாகவேண்டும்.

(1) இருவகைப் புறப்பற்றாகிய, உயிர்சார்பு, பொருட்சார்பென்னும் மமகாரத்தை யொழிக்கவேண்டும்.

(2) மேற்காட்டிய இருவகைச் சார்புகளின்மீதுள்ள ஆசாபாசங்களை நாசஞ்செய்யவேண்டும்.

(3) காணப்படும் விஷயங்களிற் செல்லவோட்டாமல் இந்திரிய நிக்கிரகம் பண்ணவேண்டும்.

(4) முன்னர் நெடுங்காலத்துப் பழக்கத்தினாலேறி தடித்திருக்கும் கரணவாசனையை யொழிக்கவேண்டும்.

(5) அலையுமனதையகத்தடக்குவதாகிய மனோலயஞ் செய்யவேண்டும்

(6) நனவிற் சுழுத்திநிலை பெறவேண்டும்.

(7) அஞ்ஞான நாசனஞ் செய்யவேண்டும்.

(8) ஆத்மதரிசனஞ் செய்யவேண்டும்.

(9) சாக்ஷிதரிசனஞ் செயயவேண்டும்.

(10) கூடஸ்த பிரமயிக் யானுபவானந்தத் தழுந்தி தானே தானாக வேண்டும்.

——)✻(——

ஐந்தாவது

## சீவமுத்தர்களின் லட்சணம்.

——✻——

பாஹியம், அனன்னியம், ஏகாந்த மென்கிற மூன்றுவித பத்திர சத்தினால் சித்திசுத்தியுண்டாகி, அந்த சித்தசுத்தியின் விவேக விசாரணையினால், பஞ்ச கோசங்களாகிற இருபத்துநான்கு தத்துவாசுத்தம் போம்படிக்கு குருஸ்வாமிகளால், ஞானஸ்நானஞ் செய்யப்பட்டு, தத்துவாதீதானுபவ ஞானத்தினால் பரிசுத்தராகி சாந்திவஸ்திரமுடுத்தி, நிராசாபரணம் பூண்டு, சாஸ்விதாலங்காரத்தினால், பூரணச் சந்திரனைப்போல நிறைந்து பிரகாசித்திருக்கும் பிரமஸ்வரூபானுபவமுடைய சீவமுத்தர்கள்

உற்பத்தி யில்லாமலும், தனக்கென்றோர் சொரூபமில்லாமலும் வெறுஞ்சொல் மாத்திரத்திலுண்டா யிருப்பதாயுமிருக்கிற மாயையினுடைய பிராந்திபாவங்களை பிரத்தியக்ஷ ஞானத்தினால் மாயமாக்கியும், பிராமணாதி வர்ணங்களில்லாமலும், பிரம சரியாதி ஆஸ்ரமங்களில்லாமலும், சத்பிரவர்த்தனாதி நியமங்களில்லாமலும், தருமாதி சாஸ்திரங்களில்லாமலும், இந்திரிய சுகத்தி லாசையில்லாமலும், பிராப்தாபிராப்தங்களி லிச்சையில்லாமலும், காமக்குரோதாதி, மனோவிகாரங்களில்லாமலும், தேகவாசனை, தனவாசனை, ஸ்ரீவாசனை, பிரபஞ்ச

வாசனை முதலிய வாசனைகளில்லாமலும், சுத்தாத்மனாகவிருந்து யாதொரு அவஸ்தைகளையுமுட்கொள்ளாது அவைகளினு லெவ்வவசரத்துங் கலங்காது சர்வசுதந்தர விலட்சணுதி சுகபோக, துகி, சுகி, யாதும்வேண்டாது அகப்பற்று, புறப்பற்று யில்லாது, நிட்டைக்குந் தேகத்திற்கும் நஷ்டமுண்டாகாது கிடைத்ததைப்பொசித்து எப்பற்றுமின்றி சலத்திற்பால் கலந்ததைப்போல சர்வமாய் விளங்கிக்கொண்டு யாசித்தும், அரசனாகவும், வியாபார முதலிய யெவ்விதத்தொழில்களேனுஞ் செய்தும், பந்த ஆகாமியங்களைத் தருவனவாகிய பாபகிருத்தியங்களைக் கிஞ்சித்தும் வேண்டாதவர்களாகி தனித்தோ, அன்றேல், சங்கமாகவோயிருந்து தனையறிந்தானந்த, நிட்டைகாமிய விரத்தர்களாக, சுயஞ்சைதன்னியமாகவும், தன்னையின்னுனென்றுக் காட்டிக்கொள்ளாது நித்தியாதீத சுழுச்சி நிரதிசயானந்தமாகிய, பரிபூரணராக விளங்கிக்கொண்டிருப்பார்கள்.

பின்னும் அதிகமாக விவரிக்கப்புகின் அந்த சாட்சாத்கார சிவசொரூப சுயம்பானது மனம், வாக்கு, காயத்திற்கும், திரிகாலங்களுக்கும், உட்படாது தனக்கு நிகருள்ளவஸ்து யெவ்விடத்துமில்லாது அகண்ட ஞான சொச்சொரூப, சுகசொரூப, அனுதிமுத்த சித்துருவாக சர்வாத்ம சீவமாகிற சிவமாக யென்றும், எங்கும் தங்கி அழிவாகிற பிறப்பிறப்பின்றி நிற்றலால், இதை நிக்ரஹிக்கும், வஸ்துயில்லாதபடியினுலும், இந்த அதீத நிலையானதை உள்ளபடியே அறிந்தடங்கினின்றூர், நிற்பார் யாவர்களோ அவர்களிடத்திற்ரு னிதனுண்மைப்பொருள் சாட்சியமாய்நிறைந்து 'அதனுனந்தத்தை அனுபவித்ததும், அனுபவிக்கக்கூடியதுவுமாக முடியும்.

இவ்வரிய ஞானதரிசனபோக விருத்தியாதீத சிவப்பிரகாசமான ரூ "மூத்தர் மனமிருக்கு மோனத்தே" எனவும், "நிறைக்குட நீர்த்தளும்பலில்" "திரிவிதவுலகத் தரிதோருஞானி" எனவும், இன்னுஞ் சரிவர கவனிக்கின்;

## சீவமுத்தரிலக்கணம்.

அளவுபடா தொருவித்தை பிரமவித்தை
அதுதானே சீவவித்தை சிவத்தின் வித்தை
உளவறிந்து சொல்லவொணு துயர்ந்த வித்தை
ஓதாதுள் ளுணர்ந்திடு மோங்கார வித்தை
களவுநிறை மனத்தினிடங் காணு வித்தைக்
கண்டவர்கட் பூரணமாய்க் கலக்கும் வித்தை
பளமெனவே யுண்டுபசி பாச மற்றுப்
பதியர்க வீற்குஞான வித்தை தானே.

என்றபடி ஆதியந்த மத்யமென்ற மூன்றுமற்று அகண்ட ஞானாத்மனாக விளங்கிக்கொண்டிருப்பவர்களே சீவமுத்தர்களாவர்.

இதனுளடங்கியவையும், அறியவேண்டியவையும், பக்குவமடைய வேண்டிய அபேட்சையுடைய விவேகிகள் குருமுகத்தினால் நிச்சயித்தறிந்துக்கொள்ளக்கடவர்.

---

## ஆறவது
## தன்னையறிந்தோர்த் தனிமன நிலைகதி.

---

உபதேச மானது மனமறி வின்றிவே றொன்றுமிலை
தபந்தான யோகந் தத்துவ சத்துவ தத்சத்தெனு
முபரதி வைராக்கிய மார்க்க சிவநிலை யுண்மைகொண்டால்
விபரீத யெண்ணமும் வேஃடங்கண் வேண்டார் விநாயகனே. (94)

* சோறு வடைந்தார்த் தொல்லை யகன்றார்ச் சுழுச்சிசுகப்
பேறு வடைந்தா ரருண்ஞானப் பாலுண்டுப் பிறவிவரா
கூறு வடைந்தார்க் கூற்றனை வென்றார்க் கொள்கைநெறி
வேறு வடைந்திலார்த் தன்னையே கண்டால் விநாயகனே. (95)

காரியம் பூஷணங் காரியம் பொன்னாகக் காண்பர்நலோ
ராரிய ரவ்வழி நீங்கா ததன்சுக மனுபவிப்பர்
† சூரியன் முன்னந் தோன்றாப் பொருளிலைச் சுத்தறிவின்
வீரியம் போலநின் சாழல் விளங்கும் விநாயகனே. (96)

ஆசை யிருந்தாற் பூசைநடக்கு மறிவிருந்தா
டேசுயர் ஞானமும் பக்தியும் விரதஞ் செழிக்குமுளம்
மாசற் றிருந்தான் மாய்கையண்டாது மனதொடுங்கும்
மீசை யிருந்தா டத்துவங் காட்டும் விநாயகனே. (97)

---

* சோறு முத்தி, ஆனந்தம், இருவினையற்ற சுகாதீதநிலை, தன்னை மறந்து தானே தானாகநிற்குமிடம், சர்வமாய் விளங்கும்பதி.

† சூரியன் ஞானாத்மா, பேரறிவு, சொச்சொரூபசாயையி னுண்மைத் திரவியமெனுமாசற்றவொளி, அஞ்ஞானமாகிற பிறப்பிறப்பை நிவர்த்திச் செய்துக்கொள்ளும் மார்க்கத்தைப்போதிக்கு மாசாரியன், உண்மைகுரு ஆத்மபோதம், இரட்சண்யவழியைக் காட்டுந்தீபம்

பூதங் கடந்துப் புலன்கட் கடந்துப் பொறிகடந்து
நாதங் கடந்து நன்மையுந் தீமையு நானீயெனும்
பேதங் கடந்துப் பேசாத மௌனம் பெரிதுணர்ந்து
வேதங் கடந்தவர்க் குள்ளே விளங்கும் விநாயகனே. (98)

செய்வினை மறந்துச் செய்கையு மறந்துச் செயன்மறந்து
ஐவரை யொடுக்கி யறிவினுள் முடங்கி யகண்டமதாய்த்
துய்யமெய்ஞ் ஞானச் சுழுச்சியிற் றூங்காம நீங்கிவிட்டால்
மெய்யும் பொய்யாகா நித்திய வாழ்வாம் விநாயகனே. (99)

தத்துவ சாத்திரஞ் சாதியுஞ் சமயஞ் சங்கமென்றுஞ்
சூத்திரங் கோட்பகை ஞானமஞ் ஞானங் குணயினமும்
பத்திரம் பூசை மந்திரந் தியானம் பகையுறவும்
வித்தக நெஞ்சுள முத்தர்கட் கொன்றே விநாயகனே. (100)

இருவினை யற்று யேகாந்த நிலையி னின்பமுற்றுக்
கருவழி தன்னை யடைத்துப் புலன்பொறிக் கரணமதை
ஒருவழி நிற்கும் படிமனத் துறவோ டோய்ந்து நிற்பார்
மிருத்துவ மில்லை விதிமதி யொன்றும் விநாயகனே. (101)

ஒன்றே சருவமு மொன்றென வேத மோதுதலான்
நன்றென் றிருக்க வுலகம் வழிவிடா நாட்டமெல்லாம்
பொன்றுத் தனியே யாவையும் வெறுத்துப் புலனடத்தை
வென்று சுகத்தை விரும்புதன் முத்தி விநாயகனே. (102)

தபங்களைச் செய்தனர் வாழ்வைத் துறந்தனர் சாதுசங்க
வுபய நெறிகளைக் கைக்கொண் டுழைத்தன ருன்னடியை
அபய மடைந்தன ராசாரமற்றன ரறிவினிற்பர்
விபரீத புத்தியில் மேவாத நல்லோர் விநாயகனே. (103)

சாந்த மிருந்த மனங்கோயி லீசன் ருனதுவாய்ப்
போந்த குணத்தழகே பக்தி ஞானம் பூத்திடலாற்
ருந்தனியாகி யிருந்திடுஞ் சித்தித் தான் பலிக்கும்
வேந்தனுமோர்த்துரும் பென்பர்முத்தருக்கே விநாயகனே. (104)

பேதங்க ளற்றுப் பீதிக ளற்றுப்பிர பஞ்சமதின்
சோதனை யற்றுச் சுகதுக்க மற்றுத் தூக்க மற்றுச்
சாத்தனை யற்றுத் தானென்ப தற்றுச் சனன மற்று
வேதனை யற்று நிலைத்தலே முத்தி விநாயகனே. (105)

வேதங்க ளென்றும் பேதங்க ளென்றும் வெய்ய வினைப்
பாதங்க ளென்றும் பணிமணி யென்றும் பகாரிய
சாதக மென்றுஞ் சாத்திரஞ் சமய தர்க்க மென்றும்
மேதகுஞ் சிவ முத்தர்கள் வேண்டார் விநாயகனே. (106)

குற்றங்க ளில்லைக் குறையென்ப தில்லைக் கொடுமையில்லைப்
பற்றென்ப தில்லைப் பசுபாச மில்லைப் பதியதன்முன்
சுற்றங்க ளில்லைத் தோற்ற மொடுக்கமுஞ் சொல்லுமில்லை
வெற்றியுந் தோல்வியு மில்லை பேச்சறுால் விநாயகனே (107)

ஒன்றற் றிரண்டற் றுபாதானமு முப மேயமுற்று
நன்றற்று தீதற்று நானென்ப தற்றிடை நடுவுமற்று
ஒன்றித் திருக்கு முபரதி வைராக்கிய மோங்கி மாயை
வென்றுத் தனியே யிருப்பார்கண் ஞானி விநாயகனே. (108)

பற்றுக ளற்றுப் பாவமொழித்துப் பத்தி நிலைச்
சற்றும் வழாது சங்கேதம் பேசார் சனனம் வரு
மற்பச் செயல்களை நீங்கினர்த் திருவரு ளாதீனராம்
விற்பன ருள்ளமும் விஞ்சையு மொன்றும் விநாயகனே (109)

பொய்யை யகன்றனர்ப் பூசுர ராயினர்ப் புனிதமதான்
மெய்யை யுணர்ந்தனர் வேட்கைகள் விட்டனர் மிலேச்சகுணச்
செய்கை வெறுத்தனர் சிந்தை யொடுக்கினர் தேகந்தரும்
வெய்ய நோயைக் களைந்தவர்களே மேலோர் விநாயகனே. (110)

பத்தி முதிர்ந்தனர் சருவமுந் தன்னுளே பார்த்திருப்பர்
சித்தி யடைந்தன ரெவ்வுலகமுமொன் றுய்த்திகழ்வர்
முத்தி யெனும்பரி பூரண நிலையில் மூழ்கினர் நல்
வித்தியா தத்துவ விஞ்சைக் கண்ணுளர் விநாயகனே. (111)

நாலெட் டறங்க டனைமுடித்தே மெய்ஞ் ஞானமுற்று
காலெட் டடைநான் கையுங் கட்டியேவுட் கண்ணை பெற்று
கோலெட் டிடிற்வொருட் கூடுங்குணமே குற்றமில்லை
வேலெட் டிடி லுயிர்ப் பிழையாத நேர்மை விநாயகனே. (112)

காரண கார்ய மிரண்டு மொன்றுகுங் கனகமுமண்
பீரதின் வாழ்வுத் தாழ்வுமவ் வண்ணம் பற்றவர்கட்
பூரண ஞானப் பேரின்பந் தன்னைப் பொருந்திதலால்
வீரமுங் காரமுஞ் சாரமும் வெஃகார் விநாயகனே. (113)

———o———

ஏழாவது.

## உபரதிவைராக்கிய முயர்தவகதி நிலை.

—(*)—

ஒன்றினி லொன்று வொடுங்குவதே தவத்துயர் கதியாம்
நன்றுடன் தீது யிரண்டென்றென் றெண்ணார் ஞானியர்கள்
என்று மொருபடி நின்றுதன் னிலையி னிட்டை கொள்வார்
வென்றனர் மரணமாஞ் சாக்காடு தன்னை விநாயகனே. (114)

பொய்யதை நீக்கி மெய்நிலை யோர்ந்துப் புனிதமறை
ஐயந் திரிப்றக் கற்றறிவாய்நின் றதுவதுவாய்ச்
செய்கையுஞ் சிந்தையும் வேறுகா வுண்மைத் திறம்வரினே
மெய்யழியாத வைராக்கியமே முத்தி விநாயகனே. (115)

ஆசாரமோடு வாதேய சூக்ம வறிவதனூற்
பேதாந்த களங்க மனைத்தையு நீங்கிப் பேச்சடங்கி
மூதாக்கட் சொன்ன முமூட்சு யிலக்கண முத்தியெனும்
வேதாந்த சைவ விளைவே வைராக்யம் விநாயகனே. (116)

சத்தொடு சித்து வானந்த மூன்றுந் தன்னிடத்து
ளொத்திசை யெத்தவ யெந்நிலை யெய்திடி வியாவுமதாய்ப்
பித்துக ளனைத்து மகன்று ஞானதிபப் பேரின்பத்தின்
வித்தும் விளைவுமொன் றனதே தவமாம் விநாயகனே. (117)

ஐம்பூத மொன்று யடங்கிடு முறைமையு மவைநிலையா
வம்புகட் சூது வாதுக ளொடுங்கும் வண்மை யதுஞ்
சம்பிரம ஞான மனோலய மொன்றாய்த் தழைத்திடலும்
வெம்பிற வித்துய ரின்றி வாழ்வதுவாம் விநாயகனே. (118)

சத்தியம் சாந்தம் பொறுமை விவேகஞ் சாத்திரங்க
ணித்திய வநித்தியக் தெய்வமுந் தொம்பத நிருவிகற்பம்
பத்தியும் பத்தியந் தவந்தானம் பாசம் பசுபதியும்
மித்திரர் சத்துரு விபர மோர்ந்தடங்கல் விநாயகனே. (119)

நன்மையுந் தீமை நடுவு நிலைமையும் ஞானமுட
னின்பமும் வீடு மெழிலறம் பொருளு மெதிருக்தமுஞ்
சன்மமுங் கன்ம தன்மமுஞ் சாகாச் சதுரிதமு
மென்மே லுணர்வதே வைராக்கிய முத்தி விநாயகனே. (120)

பொற்பூவு வாசம் பொலிவதுபோற் பூர்வப் புண்ணியத்தால்
கற்போரு மக்கலைப் போதித்த வண்ணங் காண்பதுவு
நெற்போ ரவைகட் பொன்ஞ கினதின்சீர் நிசழ்த்துவரார்
விற்பன வுபரதி வைராக்கிய விஞ்சை விநாயகனே. (121)

வாதனை சோதனை வீண்வழக் காரு மமைதை யெலாம்
பேத மனத்தினிலே யெழும் பீதியும் பிரமையென
சாதனையாலே வுபாதிக ணீங்குஞ் சாத்திரத்தின்
மேதகு வுளவை யறிதல் வைராக்கியம் விநாயகனே. (122)

சகச நிட்டையெனும் வைராக்கிய நிலைத் தனிற்படிந்து
யிகபர சாதனை வேறென்று யெண்ணு மெண்ணமின்றி
அகமெலி யின்ன லனைத்தையும் பொடியா யாக்கி நின்று
மிகசுக ஞான முத்தி வீடடைதல் விநாயகனே. (123)

தேவருஞ் சிவரும் வேறென் றுணராச் சிந்தையுடன்
தாவரிய சுகந் தன்னை யடைவர் சதோதயத்தின்
பூவகத்தே மணமுந் தேனைப் போலப் பூரிப்பரே
மேவரி தான வைராக்கிய முத்தர் விநாயகனே. (124)

தன்னை மறந்து யிருக்கும்படி யதைத் தான்பிடித்து
பின்முனு நடுவது மற்றுஞ் சர்வாங்கமும் பேதமின்றி
மன்னுங் கலைநெறி போன்மன நிற்றல் வைராக்கியமாம்
மின்னிகர் வேட்கை வேண்டிலார் முத்தர் விநாயகனே. (125)

——(*)——

எட்டாவது.

## மனோதிடப்பட வருக்குங்கதி நிலை.

——*——

போற்றவும் வேண்டும் புனிதனே யுன்றன் புகழைச்சதா
சாற்றவும் வேண்டுஞ் சமய நெறிநிலார்த் தமதுறவை
மாற்றவும் வேண்டும் பரம்பலித் துன்றன் மலரடியில்
வீற்றிருக்கும் புண்யந் தரல்வேண்டு நன்மை விநாயகனே. (126)

சாத்திரம் வேண்டுஞ் சமயமும் வேண்டுஞ் சாதித்திடுங்
கோத்திரம் வேண்டுங் குருநெறி வேண்டுங் குணமிகுசற்
பாத்திரங் கண்டு வுதவிசெய் நற்பணி பலித்திடவும்
மீத்தகு பக்தி செயும் வரம் வேண்டும் விநாயகனே. (127)

படித்திடல் வேண்டும் படித்தப் படிநடைப் பயின்றுநிலைப்
பிடித்திடல் வேண்டும் பிடித்து விடாமற் பின்பற்றி சீர்
முடித்திடல் வேண்டும் முன்னவர்ச் சொன்ன முறையனைத்தும்
வெடித்தப்பூ வன்றே மணமெங்கும் வீசும் விநாயகனே. (128)

சாந்தமும் வேண்டுந் தனையுணர்ந் தடங்குஞ் சாத்திரங்கண்
வாய்ந்திட வேண்டும் வாய்மையும் வேண்டும் மமைதையதைப்
போந்தவ ருறவைப் போக்கிடல் வேண்டும் புத்தியுணீ
வேந்தனு மறிவாய் விளங்கவும் வேண்டும் விநாயகனே. (129)

ஆசையும் வேண்டு மடியார்க ணேசமு மருவெண் ணீறுப்
பூசவும் வேண்டும் போற்றவும் வேண்டும் பொய்யகற்றிப்
பேசவும் வேண்டும் பெரியோ ருரைகொளார்ப் பெருமைகளை
வீசவும் வேண்டும் வெகுளியனைத்தும் விநாயகனே. (130)

பொருளுட ஞவி யுடலையுந் தந்துப் போற்றிசெயுங்
கருதரு முண்மை பக்தியும் வேண்டுங் கண்மயக்கால்
மருண்டவ னுக்கிருட் பேயெனு மாய்கை மடிந்திடவும்
விருதுஞ் செயலுஞ் சித்தியும் வேண்டும் விநாயகனே. (131)

கவலைக ளற்றுக் கரணத்தின் வாதைக் கட்டறுத்துப்
புவனத்தின் வாழ்க்கை போகங்க ளற்றுப் பொய்மையற்று
நவநாத பேதமு மெனக்குளே தங்கு நலமும் வேண்டும்
விவகார வேளை சமாதி யுண்டாமோ விநாயகனே. (132)

மந்திர தந்திர மன்னுங் கிரிகையு மாசகலாச்
சிந்தைக ளியாவு மொடுங்கிடல் வேண்டுந் திறமுடனே
விந்துட னுதம் விராவி மலையில் விளங்குநிலை
வெந்தழியாமுன மருளவே வேண்டும் விநாயகனே. (133)

பிறக்கவும் வேண்டும் பிறந்துவிட் டால்வினைப் பிணைப்பட்டதா
விறக்கவும் வேண்டு மிறவா திருக்கவு மிடமுண்டென
மறக்கவும் வேண்டு மறவாது நின்னடியில் வாழ்க மலம்
வெறுக்கவும் வேண்டு மன்றலோ முத்தி விநாயகனே. (134)

ஐந்தை யடக்கிட வாதாரம் வேண்டு மறிவுநிலை
வந்து சனித்திட வரமது வேண்டும் மனச்செருக்கி
னிந்தை யகன்றிடல் வேண்டு நிரதி சயானந்தமும்
விந்தை நிறைச்சுக முந்தரல் வேண்டும் விநாயகனே. (135)

சாய்ந்தனக் கோடி சனனக் கடலதிற் றத்தளித்து
வோய்ந்தனக் கோடி வுறவினர்க் கோடி வுடலிற்பிணி

வாய்ந்தனக் கோடி மாய்ந்தனக் கோடி மறலியுயிர்
மேய்ந்தனக் கோடி யெனவெண்ணல் வேண்டும் விநாயகனே. ()

ஆழ மறிந்திலான் பள்ளத்திறங்கி யவத்தைப்பட
தாழ விருந்தவன் கண்டு நகைக்குஞ் சமையம் வரும்
ஊழலி லுலலை யுடல்விட் டுயிர்ப்போகா வுள்வு சொல
வேழமுகனே நின்றயை வேண்டும் விநாயகனே. (137)

ஓடி யுழைத்தலு முட்கார்ந் திருத்தலு மொன்றதுவோர்
தேடிப் புதைத்தலுந் திருப்பணிக் கீதலுஞ் சிந்தைமகிழ்ந்
தாடிப் பணிதலு மடியவரைக் கூடலு மருளிழக்கும்
வேடிக்கை நீக்கலும் விரதமும் வேண்டும் விநாயகனே. (138)

சமய நெறிநிற்கக் கல்லா ருறவதைத் தானகன்று
யிமையவர் வாழ்வை யடைதலே முத்தி யெனவுரைத்தார்
நமன்வந் தணுகினு மென்செய்ய லாகுமுன் னாட்டமிகு
விமல குணத்துடன் விஞ்சையும் வேண்டும் விநாயகனே. (139)

குட்டிச் சுவரொன்கினு மூறைவுத் தருங் கொடியக்குண
மட்டிப் பயல்களவரோ டெண்மர் வாஞ்சை யற்று
கட்டிக் கரும்பிற்கு மேலா யினிக்குநின் கழலதனை
விட்டிங் கலையாப் படிவரம் வேண்டும் விநாயகனே. (140)

கட்டுப் படாத மஹான்களெல்லா முனுட் கட்டுபட்டார்
மட்டுப் படாத வத்துக்க ளியாவு மட்டடைய
தொட்டன ருன்கழல் தொடர்ந்ததொருநிலைத் தொல்லையதை
விட்டுக் கெட்டாரிலை யெனுநெறி வேண்டும் விநாயகனே. (141)

உண்டவர் கட்பசி வோய்ந்தனர் நினதரு வுட்புறம்புங்
கண்டன ரொன்றாய்க் களித்தன ரானந்தங் கலந்து வுண்மை
விண்டன ரவர்கட் சீவ முத்தரென விளங்கினர்ச்சீர்
மிண்டுடையேன் பெற கருணையே வேண்டும் விநாயகனே. (142)

கருத்துக் கிசைந்தப் பொருளது வேகண் காட்சியென
வுருத்தரித்தே தோன்றி நிற்பதனுபவ வுயர்மொழிபோ
லொருத்த ரறிந்து வுரைக்கொணு மனவலி யொடுங்கி நிற்கும்
விருப்பமும் பக்தி விரதமும் வேண்டும் விநாயகனே. (143)

பார்த்த விடங்களெலாம் பராபரமாய்ப் பலித்திடலான்
மூர்த்தமுந் தீர்த்த க்ஷேத்ரத்தைக் கண்டருண் மூழ்கினர்போல்
கீர்த்தித் தருகுஞ் சிவஞானச் செல்வத்தைச் சேர்ந்துவுடல்
வேர்த்துத் துதிசெய் தொடங்கிடல் வேண்டும் விநாயகனே. (144)

சொல்லள வாகக் குணமு நடையுஞ் சுழுச்சியினி
னெல்லை யடைந்தங் குள்வுருக் கொண்டு யின்பமுற்றுத்
தொல்லைக ளற்றுத் தூங்காமற் றூங்கிச் சுயம்புநிறை
வெல்லத்தில் மூழ்கிட நன்வரம் வேண்டும் விநாயகனே. (145)

கனங்கெட்டுப் போனார்க் காலத்தைப் போலக் கௌரவமு
மினங் கெட்டுப்போனா லெவைக்கேற்ற வகையி லேந்திக்கொள்வார்
முனங்கெட்டுப் போனா லியாரிதை மாற்றுவர் மனமோய்ந்தவூழ்
வினைக் கெட்டப் பின்னே பிறப்பற்றுப் போகும் விநாயகனே. ()

## வியாத்திகபடலம்.

—(*)—

மனோதிடப்பட வதுக்கீங் கதிநிலையினி லுரைத்தவைகளைத் தெளிந்தால் சனனத்தை யொழிக்கும் வகையைத் தேடயேற்படும். ஆதலின் அவற்றை ஸ்திரப்படுத்துவான்வேண்டி இங்ஙனம் தேக கன்மாம்ஸ வியாப்பியமெனுங் கருத்தை வெளிப்படுத்துகின்றது. அஃதாவன,

பாவ மரக்கலமெனு மாயப்புலாலாகிய மாம்சமெனும் ஊனிறைந்திழியுங் கடமானதிடத்து சதா நீங்காது வியாப்பியஞ்செய்து அடுத்ததைக் கெடுப்பதற்கே துடைதட்டி, மீசையைமுறுக்கி, கண்மிறட்டி, நவீன கற்பனாக் கதைகளாகிய வெறும் பொய்மலிந்துளதென, அறிய, தெரிய, கவனிக்க, விசாரிக்க, தெளியநோக்க, கிஞ்சித்து மெண்ணமின்றித் தலையாட்டித்திரியும், மாயையாகுங் கன்மமானது,

அநாதிமுத்த சித்துருவாகுங் கடவுளின் திருவருட் சமுத்திரமாகிய காருண்யக் கடலினிடத்தேமூழ்கி சுகபோக ஞானாகாரமாக (ஆனந்தபதவ்யோம கரணபூதாதிகளுடையனவுமுள்ளயாவும் சலத்தில் சீதளமும், கரும்பில் இனிப்பும், பூவில் வாசமும், நெருப்பிற்சூடும், கலந்துளதை வேறாகப் பிரிக்கப்படாதபடி நிலைபெற்றுத் தன்னை விரும்பினார்க்கு யெத்தன்மையினாலும் மாற்றமுடியாது அதனதன் குணத்தைத் தருவதைப்போல பாசநீங்கிய பசுக்களாகிய ஆன்மாக்களை இறைவனாகியக் கர்த்தா தனக்குள்ளொடுக்கிக்கொள்ளும் புண்ணியம் வாய்க்காமல் பிறவியாகுஞ் சனனப் புணரியெனுந் தேகமாகிய, மரக்கலத்தின் வாசனையும், மண்ணால் சித்திரித்து விளங்காநின்ற அம்மரக்கலத்திற் பழைய வினைப்படி கொண்டுவந்த கன்ம தன்ம சரக்குகளும், எத்திறத்தும், ஒழிவில்லாமல் வாதிக்குமன்றி யாதொரு லாபத்தையுந் தரமாட்டாதென முடிவுயேற்பட்டு நிற்ற

லுண்மையாதலான், அனுபவாதி காரண காரியங்களில் (வெறுப்புண்டாக்கலே) ஈஸ்வரபக்தி, சித்தாந்தசிரவணம், முழுட்சுயிலக்கணம், பெத்த மூத்த சீவேஸ்வர யிலக்கணம், தன்னை ஒடுக்குமுறைமை, பேசாநிலை, தெய்வபீடமெனும் நிரதிசயானந்த விதேகபதயோக சமாதி, எல்லா வ்யாகமுமற்று யேகாந்தமாய் நிற்றல், தானே யெல்லாமா யிருத்தல்.

இவை முதலாய சுதந்தர சுந்தர தேகத்தைப் பெற்றுக்கொள்ளுஞ் சருவ சாதாக்கிய சடஜஸ் தாஞதிபத்தியநிலை யென்பனவற்றின் பலநாம ரூப சிந்தனைகளையும், விசிட்டாதிக்ய, ப்ரபாவ, மனோவாச்சல்ய, விகார, நிர்விகார, சட்சுபாதிகளையும், அதனதன் வயப்படுந் தன்ம, கன்மங்களையும், பலதுறைகளாக யெடுத்து கூறப்படுகிறது.

இதனுல் பக்குவத்திற்காட்பட யெண்ணுவோன் போசிப்புநிமித்தம் ஏதாவதொரு நிமித்தகாரணத்திற்காளாகி உழைத்து இறுதியாகிய முடிவின் பதமுத்திசாதனை வாய்க்கும் வரையினும், அனுபவத்து நிற்றல்வேண்டும்.

அவை கைக்கூடினவிடந்தான் (உண்ணுமலுண்டு, பேசாதுபேசி, நடவாது நடந்து, காணுமற்கண்டு, விழியாது விழித்து, தூங்காது தூங்கல்) என வேதாகம சுருதி, குரு, சுவாநுபவச் செல்வர்களால் சத்திய சாதனமாக வரையப்பட்டது.

இவை புண்ணியம், பக்குவம், நிஜத்வ, நுபநாம, காணுதிக்யம், முழுட்சுயிலக்கணத்தால் ஒடுங்குங்குணத்தவர்களே ஒப்புக்கொண்டுழைத்து அதனுண்மைப் பயனையடையக் கூடியதெனச் சொல்லாமலே விளங்கும்.

---

ஒன்பதாவது.

## கன்ம, தன்ம, வியாப்பிய வ்ஸ்திரகதி நிலை.

—o—

ஐங்கரனே யரு ளான ருளத்தம ரானைமுகா
யெங்கு நிறைந்தடி யார்மன மேத்த யிலகுபவா
மங்கள ஞானா னந்தத்தில் வாழாமல் வலிமிகுந்த
வெங்கலி நீங்கிடா நீங்கக்கண் பாரும் விநாயகனே. (147)

ஆத்தும போத மநாச்சார நீக்கு மறிவுவரும்
காத்தக முள்ள கபோல மதத்தின் கட்டழிக்கும்
பாத்திரங் கண்டறஞ் செய்தருட் பாலிக்கும் பதவிதரும்
மேத்தகை யாளர்கட் கண்டுள்ளம் பூர்ப்பர் விநாயகனே. (148)

வருவதும் போவதும் போல்பிறப் பிறப்போர் வாணிபமாய்க்
கருவூரி னின்றுமா யாபுரி வந்துமுன் கன்ம தன்மம்
பெரும்புண் ணியவசத் தின்படி பெற்றுழல் பேதையின்மேன்
விருப்பஞ் சற்றேவைத்தால் வினைப்பறந் தோடும் விநாயகனே. ()

அண்டமும் பிண்டமு மொன்றுக்கு ளொன்று வடங்கிடலான்
கண்ட மகண்ட மெனும்பத மவ்வணங் காட்சியதே
பண்டைச் சுருதியின் கருத்ததை நம்பிப் பணிபுரிந்தார்
விண்டன ருண்மைக் கொண்டனர் மேன்மை விநாயகனே ()

கனக மில்லாது நகையதைப் பூண்பரார்க் காட்டுவரார்
மனபேத மின்றி மற்றெவை யாற்பேதம் வளருதுங்காண்
தனபேதங் காண லாபரண மலாற் றூனுளதோ
வினைபேதந் தானே பலசன்மம் வந்தன விநாயகனே. (151)

பழுத்தக் கனிரச மாஞ்சிவ ஞானப் பாலருந்தி
தழுதழுத் திடவரு மும்மலப் பேயின் றலையுடைத்து
வழுத்தற் கரியப் பேரின்ப முத்தியில் வாழ்ந்திருப்பர்
விழுமி யக்குணச் செல்வர்க ளென்றும் விநாயகனே. (152)

அழல்படு வெண்ணெ யெனகின்பூந் தாண்மே லாசைமிகு
பழமெனக் கனிந்து ரசமது வொழுகும் பான்மையுடன்
மழலையின் குணத்தைப் படைத்தார் மஹான்கள் மமைதையினுல்
விழலுக் குழைத்தால் விதிவிட்டிடுமோ விநாயகனே. (153)

தொழிலென்ப தின்றிச் சும்மாயிருக்குஞ் சுகம்வரினே
அழிவென்ப தின்றி யகம்பிரம பாவனை யகன்றுவிடும்
பழிதருஞ் சன்ம கன்மங்க ளொன்றும் பலித்திடாது
* விழியுள்ளவன்கண் டடைவது வுண்மை விநாயகனே. (154)

* அகக்கண் = ஞானக்கண். தன்னை யறிந்துத் தலைவனோடு கலந்து விட்டகாலத்து, முன்னே வெளியி லனுபவித்தன வெல்லாம் பின்னுல் தனக்குள்ளே யாவையும் பார்த்து அனுபவித்துக்கொண்டு ஆனந்தத்திற் கலந்து நித்தியமாயிருக்கும் நிலையைத்தருகும் மனக்கண்.

சத்திருந்தா லஷ்டச் சித்தியு முண்டுத் தன்னையுணரும்
பத்தி யிருந்தாற் பரஞ்சத்தி ஞானப் பால்கிடைக்கும்
முத்தி யிருந்தால் முமூட்சுக டேவரு முனிவருளர்
வித்தின் பயன் கன்ம தன்மமுஞ் சன்மம் விநாயகனே. (155)

"காய்த்தனக் காய்கட் கண்டவர்க் கண்ணுங் கல்லடியும்
வாய்த்ததவ் வண்ணம் மனம்புத்திச் சித்தம் மாய்கையினுற்

றெய்த்தனத் தேகம் விளைந்தனக் கன்மஞ் சீவனற்றால்
மேய்த்தது மாய்த்து சாய்த்தன வனைத்தும் விநாயகனே (156)

சிந்தைச் சிவமா யறிந்தொடுங் குந்தவஞ் செய்தவர்கட்
பந்தத் துழன்ற விருவினைப் பாசப் பற்றுவரோ
புந்தி நிலைத்தருட் பொலிதன்ம நோக்கம் பொருந்தினவர்
வெந்தழியார் கன்மம் விட்டொழிந் திடுமே விநாயகனே. (157)

கல்லொன் றுப் போது மாயிரங் காக்கைக்குக் கானவர்க்கு
வில்லொன் றுப் போதும் பலவேட்டை யாட விற்பனர்க்குச்
சொல்லொன் றுப் போதுஞ் சுழுத்தியேபோதுந் தொல்லை யற்றால்
வெல்லமென் றெழுதி னலினித் திடுமோ விநாயகனே. (158)

எத்திக்கு மோடி யென்னசெய் தாலு மேது பயன்
சத்தியஞ் சாந்த மெனுந்தெய்வந் தன்னைச் சாராதவர்க்கு
மித்திர பேத மதுகன்மந் தன்னை மிகப்படுத்தும்
வித்தக தன்ம மதுசன்மம் போக்கும் விநாயகனே. (159)

நினைப்பது வொன்று முடிவ தொன்றாக நிலைப்பதனு
லெனையறிந் தோய்ந்து யெனதென தென்னு மிடுக்கணற்றால்
உனையெனக் குள்ள படிதரும் புண்ணிய முற்பவித்தால்
வினைப்பனி மூடா கன்மங்கண் மாயும் விநாயகனே. (160)

தன்னிழ டன்னைத் தானளந் தேயவைத் தானவனாய்
மன்னுங் கலைநிலை வழிக்கண்டு நின்ற மஹானியரை
யென்செய்ய லாகு மெவரோ வறிவரவ் வின்பமதை
மின்னல்போல் கன்ம மொடுங்கில் விளங்கும் விநாயகனே. (161)

கட்டுக் கடங்கா பட்டிமா டென்னக் கழுமலுற்று
சுட்டியே நாளைக் கழித்திடி னெங்கே சுகமுதிக்கும்
சட்டியுஞ் சுட்டது விட்டது கையெனத் தானிருந்தால்
¶ வெட்டிமை யுண்டு விலகிடுங் கன்மம் விநாயகனே. (162)

¶ வெட்டிமை - உழுது பயிர்செய்தொழில், தானமாகக் கொடுத்த நிலம். இதைப்போல் ஞானபூமியில் அறிவாதீத திரிசிய பதார்த்தத்தை விளைவித்ததன் போகமாகிய இரண்டற்ற சுகத்தை அனுபவிக்கக்கூடிய ஸ்திரத்தை விளக்கியது.

வெட்டியென்பது வெற்றியெனவும் சித்தாந்தஞ் செய்யப்படும்.

கண்ணது பார்த்துங் காதது கேட்டுங் கருத்திலையே
லெண்ணு மெழுத்து மிலக்கணம் வேதங்க ளென்னசெயும்

உண்மையும் புண்ணியச் செயலே நலந்தரு மூழ்வினைப்போம்
விண்மனென் றுயெனுந் தன்மைய ருணர்வர்விநாயகனே. (163)
மண்ணினுட் பொன்னும் மறைந்துக் கிடக்கின்ற வண்ணமென
வெண்ணிலா சீவர்க் குள்ளுயிரா யம ரெழின்வடிவைப்
புண்ணிய வசத்தினர்க் கண்டுவானந்த போக முற்றார்
விண்ணாம் பேசிடின் கன்மஞ் சன்மந்தரும் விநாயகனே. ()
உற்றதைச் சொலி னுற்றது வாய்க்குமென் றுரைத்த நெறிப்
பற்றின ரப்பயன் றன்னையடைந்தார்ப் பக்குவநூல்
கற்றவ ருண்மைக் கலந்தனர்க் கன்மம்போல் கையகன்றார்
‡ விற்றவ ரின்றேல் வாங்கின ரியாரே விநாயகனே. (165)

‡ வாணிபஞ்செய்து அதன்பயனை யடையலாமென வெளிவந்த வ்யாபாரியானவன் யேதாவதொரு பொருளை விற்பனைச்செய்யானேல், வாங்குவார் எப்படி கிடைப்பதற் கருமையாய்விடுமோ அதைப்போல, ஆன்மாக்களெனுஞ் சீவர்களாகிய் பசுக்கள் பூர்வ வாசனையின்படி கொண்டுவந்துள்ள கன்ம, தன்ம, சாக்துகளை விற்பனையாகும்வண்ணம் பலவித தந்திர குயுக்தி, பார்த்தோர்மனம் வெறுப்படையாது இச்சிக்குஞ் சிந்தை முதலாய தோரணங்களால், நிலைப்படாதிருக்கினும், பொய்யை மெய்யாகத்தானே கூறி விரும்புவாருடன் (வெறுப்பினும் வேண்டாதார்களையும் மயக்கி, தங்களது வாசாகயிங்கரியத்தினுக் காட்பட்டுக் கெடுமாறு வலிய போதித்து) மாய்மாலமாகி பிறப்பினைத்தருகுங் கபட நாடக பலசால சோலித்து ஆளாக்கும்படி கன்மத்தையே போசிப்பாதும் உணவாக விற்பவர்களாகிய (அநாசாரர்கள்) கற்பனைகளை மீறியிகழ்ந்து சமயாசாரம், சமயநெறி, சமயநடை, சமய அடையாளமாகியும், பாவத்தைப்பொடிபடுத்தும் திருவெண்ணீறு முதலிய சிவசின்னங்களின்றித் திரிந்துழலுபவர்களால் பகட்டி வீசாநின்ற ஆபாசமாகிய மாய வலையின்றேல் (பழி, பாவம், சன்மங்களைத்தரும் இழிவுள்ள சரக்கை வலியத்தேடிவாங்கி அதன் வயப்பட்டுக் கெடுவார் ஒருவருமிரார்.

அப்படி வீணாரவார பொய்ப்பிலுக்கான மாயச்சரக்கை விற்பவரேற்படினும், (அதனைத் தரம்பார்த்து உண்மையைக்கண்டுபிடித் தகற்றுவாரையொத்த மதிப்பாளனைப்போன்ற ஞானாசிரியரைத் தேடியடைந்து கன்ம, தன்மத்தை உள்ளபடித் தெளிந்து பிறவிக்கேற்றப் பயனை யடைதல் வேண்டுமெனு நன்னோக்கத்தை பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனால் பொய், மெய்யை, (சுருதி, தரு, சுவாநுபவத்தை, கிரமத்தின்படி தெளியாதானியரோ, பாவமான தூர்ப் பதார்த்தமாகிய பயன்றரா சரக்கை வாங்கி யெங்கும் விற்பனைச் செய்பவனாகவும், (நன்மைக்

கடைப்பிடி)யென்பதற்கு மாறானவர்கள் அம்மித்தையைவாங்கி, முதலிற் சுகமும், முடிவில் துக்கமாகிய சன்மத்தையும் அடைவாரெனத் தீர்ப்பாயினவென்பது வேதத்தினிறுதியின் கருத்து. இதைவிவேகிகளுணர்வர்.

பலபலக் கொள்கைக் கிடந்தந்த தாலே பாழுமுடற்
கலகலத் தந்தோ கருவிகட் டேய்ந்துக் கட்டுடைந்துக்
குலநலம் பேசி கன்மத்தைத் தாங்கின் குணந்தருமோ
விலகிடு மூழ்வினைப் புண்ணியச்செயலால் விநாயகனே. (166)

இருவி தப்பய னும்பிறப் பிறப்பு யிவைகளின்றி
வருகின்ற சன்ம கன்மமுந் தன்மமும் வகுத்த தெங்ங
னருள்வழி நின்றவ ரவையுணர்ந் தவ்வின்ப மனுபவித்தார்
மிருகமும் பறவையும் மக்களுள் விளங்கும் விநாயகனே. (167)

———o———

## வியாத்திகபடலம்.

———(*)———

சகலான்ம வியாப்பியமாகுங் கன்ம தன்மங்கள், கடபடபதார்த்தங்களாகத்தானே தோன்றி; ஆன்மாக்களாகிய பசுக்கள் விளங்கி நிற்றலான் அக்கன்ம தன்மங்களும், ஒன்றுக்கொன்று மாறுபாடுடன் முரண்பாடெய்தி உள்ளவிதமான சுகாதார சொச்சொரூபமாய், என்றுமொருபடித்தாய், அழியாதனவாய், அகண்டமாய், முக்காலத்து முடையனவாய், புண்ணிய கருமமாகிய, விரதம், தவம், தானம், பக்தி, சத்தியம், சாந்தம், எல்லாசீவரிடத்துங் காருண்யமெனுந் தயாளச்சிந்தை, உள்ளபடி தானேதையடையவேண்டியதோ அவை சித்திக்கும் வரையினும், அவற்றின்மேல் இரவுபக லொழிவிலாயெண்ணம், எதை நீக்கிக்கொள்ளவேண்டியதோ அவற்றின்மேலுஞ் (சட்டிசுட்டது கைவிட்டுவிட்டது) என்பனவாய்ப் பக்குவங் கைக்கூடி வருகின்றவரையினும் (புலிபதுங்கி நிற்றலைப்போலும், அப்புலி பசித்தாலும் புல்லைத் தின்னாதென்பதைப் போல் கன்மவசத்தினாலேதோ சங்கற்பங்களைத்தரும் விகற்பச் சிந்தனைகளுதித்திடினும் அவற்றினுக்காட்படாது நீக்கிக்கொள்ள, அப்புண்ணியத்தினிடத்துத்தோன்றி எங்கும் விளங்காநின்ற பிரணவாதீத (பிராண சத்வதாரகஸ்ய தேய்விகாம்ஸ தாரகமாகிய) கணபதி மூர்த்தமான ஓம்! என்னுமதீத பாரமார்த்திக சொரூப விஞ்ஞானமயத்தினிலொடுங்கி அவனுதிக்கும் ஞானப்பாலினையருந்தி பிறவியின் மயக்கமற்று யாதொரு பற்றுக்களிடத்துந் தன்னைக் கலந்துக்கொள்ளாது நிலைப்படுத்துதற்குரித்தானது மேற்கூறியுள்ள புண்ணியமேயாம்.

அவ்விதப் புண்ணியத்தை யனுபவிக்கச்செய்யாதுத் தன்னை முற்றுங் கெடுக்கக்கூடிய ஸ்திரம்பெற்றுள்ளதும், அவைக்கு மாறானதுமான கன்மத்திற்கு (தான்கெட விடமுண்டு சாவான்போல) எல்லாவித தந்திர குயுக்தி முதலான பாபச்செயலுடன் சன்மத்தைத்தரும் வலிமையுடையது கன்மமேயாதலான், அவற்றினை முற்றுமொழித்து, தன்மச்செயலாகிய சத்கருமத்தி லீடுபட்டுழைத்து, அதனது நன்மைத்தீமை யிரண்டினையுங் குருமூர்த்தானுக்ரஹத்தினாற் சரிவரத்தெளிந்து: எடுத்துள்ள தேகமாகிய மெய்யழியாது சத்தியம், சாந்தம், தீவிரதரம், அதிதீவிரதரமாம் பக்தவம், துநநெறி, தன்னையுணர்ந்தடங்கல், நித்தியானந்தமாகிய சிவத்துடன் கலந்து, பிறப்பிறப்பற்றிருத்தலானப் பயனைத்தரும் அழியாத தேகமாகிய மெய்யை) நிலைப்படுத்தியதை யீண்டுகூறுகின்றது.

அஃதாவது கன்மத்தையும், அதனது உருவும், செயல், குணம், வன்மை, பயன், இவைகளின் லட்சணங்களையும், அகற்ப, விகற்ப, சங்கற்பங்களையும், ஆன்மாக்களாகிய பசுக்களுணர்ந்துத் தெளிந்துய்யும்வண்ணம் சுருதி, குரு, சுவானுபவாதிக் கார்ப்பிதங்களால் விவரிக்கப்படுகின்றது.

இதனாற் பூரதமாகிய கன்மநீங்கப் பசுக்களாகிய ஆன்மாக்கட் பதியாகிய, யிறைவனென்னும் முழுமுதற் கடவுளாகிய கணேசப்பெருமானை வழிபடுகின்றதே சிறந்த தன்மத்தி னிறுதியான வாக்கியார்த்த சொரூபமாம் ஞானார்த்தத்தின் லாபமெனப்பெறப்படுகின்றது. இவ்வுண்மையை நிலைப்படுத்துவான் வேண்டியே :

“ மூவருந் தேவருஞ் சீவரு மியாவரும்
பாவனைப் படியே பகரநும் பிரணவ
சேவைசெய் தனரேனிற் றெளிதலென் றெளிவே”

என மஹா (சகஸ்ந்றேபாசன சட்சூபிலக்கண வைவேதயிக்கம்) எடுத்துக்கூறலான் (“பாபகன்மத்தைக்கைவிட புண்ணியத் தெளிவுண்டாக”) அதனாற் கடவுளினுபாசனைவிரத மனுட்டான மந்திரோபாசனை, விஞ்ஞானக்கிரியையாதியின் பலனாகிய யோகம், சமாதி, முதலாய ஞானவிர்த்தியின் பயனுடைத்து யெனக் கேட்கப்படுவதனால், எத்திறத்தும், எவ்வகைத்தும், எப்பதத்தும், எந்நிலைக்கும், தெய்வானுகூலச் சிந்தையிலாட்பட்டதனாலேயே சகல நன்மையுமடைந்தனரெனவும், அவைகளைக் கேட்டும், உணர்ந்தும், சிந்தித்தும், ஆன்மாக்களாகிய சீவர்களியாவரும், அச்சுகானந்தமெனும், கிரதிசயானந்தப் போகமாகியப் பேரின்ப வாழ்வாகு மிரண்டற்ற ப்தவியை யடைந்துய்ய வேண்டுமெனும் பெருநோக்கத்தை

ஸ்தாபிப்பான்கருதி அவற்றினைச் சுருதியினால், விளக்குதலேயென்றும், சத்தியாம்ஸ யிலக்கணமேன தருமார்த்தத்தினிடமாகவும், பெரியோர்க ளிடத்துங் கேட்டுத்தெளிந்தவண்ணம், ஆன்மாக்களெல்லாம் புண்ணிய வழியினிலைக்கும்படி யதார்த்த மான்மியமாகிய, (பார்க்கவ புராண மென்னும், விநாயக மான்மியத்துள்) இனிதுதோன்றி நன்மையைப் பெற்றுள்ள சரித்திரங்களை மூலமாக, காரண கார்யமாக, ஆதரவாக, வெடுத்து கன்மதன்மத்தை ஸ்திரப்படுத்து முறைமைகளைச் சொல்லப் படுகின்றது.

---

## கன்மதன்மத்தினு லேற்பட்டுவரும்
### தேகசுகாசுக விஷயார்ப்பித விளக்கம்.

---

## சோமகாந்தன் முத்திப்பெற்றது.

---

தேவநகரத் தரசனாகிய, சோமகாந்தன் றனது முன் சனனத்தில், விந்தகிரிக்கடுத்த கொல்லமாநகரத்தில், சித்ரூபனுக்கும், சுலோசனைக் கும், (காமந்தனென்னும்) பெயருடையவனாகப்பிறந்து, குடும்பினியென் னும், பெண்ணைக் கலியாணஞ்செய்து வாழ்ந்தகாலத்து, தனது தாய்த் தந்தை யிறந்துவிட அவர்கட் செல்வத்தையெல்லாந் தீமையைத்தருகின்ற பஞ்சமாபாதகங்களின் வழியிற் செலவழித்து வறுமைமேலிட, தனதுத் தீயக்குணத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பொருளின்மையால், பலவித யிடும்புகளைச்செய்து அதனாதியத்தால் விர்த்தியடைந்து முடிவில், தன் மஞ்செயல்வேண்டுமென யெண்ணமுதித்துவழைக்கவும், அத்தானத்தைப் பெறும்படியாகவந்த பிராமணர்கள், காமந்தனென்பதாகத் தெரிந்தமாத் திரத்தில்; (அவனாற்கொடுக்கப்படுவதை வாங்கினாலும். அவன்செய்துள் ளப்பாபத்திற்குப் பங்காளிகளாகிப் பாபப் பங்கடையவேண்டிவரும், அல் லது வேண்டாமென்றுத் தடுத்தாலும், அவனாற் கொலைசெய்யப்படுவோம் என்பதாக பயந்தவர்களாகித் தாங்கள் தப்பித்துப் போகவேண்டியதற்குத் தகுந்தவாலோசனைப்படி சொல்லியவார்த்தைக்கிணங்கி,) விநாயகாலய மமைத்தப் புண்ணியமொன்றினால், மறுசன்மத்தில், முதற்குறித்த அரச னாகப் பிறந்து, (முன்சனனத்தி னிறுதியிற் கேட்டுக்கொண்டபடி) இள மையிற் சுகத்தையும், முதுமையில் ஆற்றுநோயினால் துக்கத்தையும், அள விறந்த கஷ்டத்தையுமனுபவித்துத் தனது குமாரனாகிய, ஏமகண்டனுக்கு, அரசையளித்துத் தனது மனைவியாகிய, சுதன்மை, மந்திரிகளாகிய, சுப

லன், ஞானகெம்மியன், இவர்களுடன் காட்டில் தவஞ் செய்யுநாள், பூசைக்கு சலங்கொள்ளவந்தப் (பிருகுதச்சு முனிவரின் குமாரனாகிய, சிவனன்,) என்னுஞ் சிறுவனால், தெரிந்து அழைக்கப்பெற்று அம்முனிவரை யடைய, அவர்சொல்லிவந்த முன்சனன கன்மதன்மத்தைப்பற்றிக் கேட்ட வரசன் சந்தேகித்தவுடனே, 'தான்முன்செய்த பாபங்களெல்லாம் ஆயிரம் வலியான் குருவிகளாகத்தோன்றி வாதனைப்படுத்தத் தாங்காது அபய மடைய, முனிவர் கமண்டல சலத்தால், அக்குருவிகள்மாறி மஹாகொடிய அகோர ரூபத்துடன் பைசாசமானது யெதிர்த்து விழுங்கவர பயந்த அவ்வரசனுக்காக, அப்பைசாசை அம்முனிவரதட்டிவெருட்ட உடனே யெதிரிலுள்ள பசியமரப்பொந்தினுழைய, அம்மரந்தீப்பற்றியெரிய பைசாசமானது தன்னுருமாறி அழகிய பெண்ணுருப்பெற்று ஆகாயத்தினிடமிருந்து வந்துள்ள விமானத்திலேறி கைலையடைந்தது.

இவற்றைக் கண்ணாரக்கண்ட அரசன் (பூர்வகன்மமின்னது யென்றுணர்ந்து ) நம்பி வழிபாடுச்செய்து அம்முனிவரின் கமண்டலசலத்தால் தீராப்பிணிநீக்கி விநாயகப்பெருமானதியாற்புத மான்மியத்தைப் பாபமறக் கேட்டப் புண்ணியத்தால், தனது மனைவி, மந்திரிமார், குமாரன், தேவநகரவாசிகளாகியத் தனது குடிகளியாவரும், ஒருங்கே சிவகணங்களாக வடிவம்பெற்றுக் கைலையை யடைந்தனர்.

—*—

## வேதவியாசர் பூசித்தது.

பசுக்களாகிய ஆன்மாக்கட்செய்த பிராரத்வ கன்ம சம்பந்தத்தினால், வேதங்களனைத்துந் தடுமாறிப்போய் பாவங்களிற்றலைப்பட்டு தங்கடங்கள் மனதிற்றோன்றியவண்ணம் நடந்து வருவதைக்குறித்து விஷ்ணுவானவர் பிரமதேவனோடு, கைலைக்குச்சென்று, சிவபெருமானிடத்திற்பெற்ற ஆக்கியாபனையின்படி தமது கலைகளி லொன்றைக்கொண்டு, சிதறிய வேதங்களை நான்குவகைப்படுத்தி இருடியர்க்கு போதிக்கவும், (அபக்குவிகளுக்கு பரமசிவத்தினிடம், நந்திதேவர், ஜனற்குமாரமுனிவ ருபதேசிக்கப்பெற்ற, புராணங்களை, அவர்களிடங் கேட்டுணர்த்தவும், வேதத்தை நான்கு கூறுகப் பிரித்ததால், வேத வியாசரெனும் பெயரையும், பராசமுனிவருக்கு ஓடமோட்டிய மச்சகந்தியை, யோசனைகந்தியாக்கிக்கலந்து தண்டகமண்டலத்துடனுதித்தமையினால், வாதராயணரென்னும், பெயரையும் பெற்றனன்.

—(*)—

## தக்ஷப்ரஜாபதி துன்பநீங்க பூசித்தது.

—(*)—

சிவபெருமானை மதியாது பிர்மாவின் மகனாகிய தக்கன் செய்தயாகம் அப்பெருமானுடைய நெற்றிக் கண்ணினின்றுதித்த, வீரபத்திர மூர்த்தியா லழிவுற்றது முதலாக அடைந்தத் துன்பம் நிவர்த்தியாகும்படி மூந்கல முனிவரா லுபதேசிக்கப்பெற்ற, விநாயக மகத்வத்தை, விசேட பத்தியாய்க்கேட்டுவந்த பலனாற் சகல மிடிகளும் நீங்கி சாரூப பதம் பெற்றனன்.

——o——

## பிரமதேவன் சிருட்டித் தொழிற்பெற பூசித்தது.

—(*)—

விநாயகக் கடவுளாகிய வக்கிரதுண்ட மூர்த்தியெனும், கணபதியை வணங்காது சிருட்டித்தொழிலைத் தொடங்கின பிரமாவானவன் வெருளும்படி தான் நினைத்த வண்ணமே சீவர்களுண்டாகாது, விகார வுருவங்களையுடைய, அகோர பைசாசங்களுதித்து, துன்பத்தைச்செய்ய பயந்தவனாய் ஏகாக்ஷர மந்திரத்தை செபித்து, அம்மந்திர வல்லபத்தினால், சித்தி, புத்தி, கிரியாசத்தி, ஞான சத்தியை யடைந்து வரங்களைப் பெற்றனன்.

——(*)——

## சித்தி புத்திகளாகிய கிரியாசத்தி ஞானசத்தியர்களை கணேசப் பெருமான் மங்களக் கலியாணங்கொண்ட ஞானானந்தத் திருவிளையாடல்.

சகல சொரூபாம்ஸ, சத்திய, சாந்த, மனோக்யான, விஞ்ஞானமய தத்வாதீத, பிரணவாட்சர மூர்த்தமாகிய ஓம்! என்னுங் குண்டலி சத்தியினிடமாகத்தானே யியக்கப்பெற்ற சர்வமங்கள கலியாணகுண அபரோட்ச ஞானச் சிந்தையினால், பரமாணுபவாதீத விசிஷ்ட நாமரூப வற்புதலலித,

"ஒமெனும் பிரணவத் துதித்தது வுலகம்
ஒமெனும் பதத்து ளுற்பவஞ் சருவமும்
ஒமெனும் பதத்து ளொடுங்கின யாவும்
ஒமெனும் பதத்தினை யுணர்ந்தனர் முத்தர்"

என்னுஞ் சருவ வல்லமையுடைய அக்கர வத்துவினாலியாவு மொளிரப் பெற்று யினிது விளங்குதலே ஆன்மாக்கள் பக்குவப்படுந் தன்மையையும்,

அதனது த்த்வார்த்தங்கள் ஒன்றிலொன்றுக் கலந்தும், வியாபித்தும், தொழில்பட்டும், பலபல ரேகைகளாக நின்றும், தரிசனார்த்தமொன்றினாலேயே, தன்னைக்காட்டியும். (அபக்குவமாகிய காமபந்த குரோத டம்பாகார வீனாரவார மமைதையைத்தரும் பொய்மயக்கமென்னும், அறிவின்மையாற் றெளிந்து வணங்கி பூசித்து நற்கதியாகும் புண்ணிய வரத்தையடையாது வாளாய்ப் பொருளற்றதையுளறித் திரிவான் அற்ப அறிவில், சொற்பநூலில் கண்டடைய ஒருபோதுங்கூடாத) நிலையினைக்கொடுத்தும் சருவாதீன, சுகாதர ஞானத்மனாக எல்லாத் தொழிலையுநடத்தி சித்தி, புத்தியாதுஞ் சத்தியோசாதன வுருக்களாகத் தன்மயத்தை வெளிப்படுத்தலும், காத்தலும், அழித்தலும், (பத்திவிநயத்தா லுபாதிகளாகிய கன்ம பாபத்தைநீக்கித் தொழுதார்க்கு அநுக்ரஹித்தலும், இவைமுதலிய சட்பாவகரணங்களுக் கதீதயாய்நின்றுத் திருவிளையாடற் செய்வான்வேண்டி (வருந்தினவர்க்கு வாழ்வளிப்பவன், சிந்தித்தவரைத் திருமணங்கொண்டவன், அறிவினிலையையு மானந்தவள்ளல், ஐங்காத்தாலே வினைத்தையு நடத்துவன், ஐம்பொறி யொடுங்கிடி லறியத்தக்கவன், சருவமுமொடுங்குந் தந்திமுகத்துள் தன்னையறிந்தா ரன்றிமற்றெருவர் இன்னதென்றுரைக்க வியலாததுவே.) என்பனவற்றிற் கதீட்டான மஹாமந்திர சொரூபமாய் மங்களாகர வத்துவாய் திருவிளையாடற் புரியுங் கோலமாய் எல்லா தேவர்களுடன் பிரமாவின் விருப்பத்தின்படி, சிருட்டித் தொழிலின் சிறப்பைப் பெறப்பட்டன.

இதனது உண்மையினை, ஞானசாரியரிடத்தே ஓதியுணர்ந்தொழுகு முறையின்படி, பக்குவன் கேட்டுத் தெளிதல்வேண்டும். அவையும், தனது புண்ணியவசத்தின்படி கிடைக்குமென்பது ஆன்றோர்கள் சுருதியின் முடிவு.

இப்புண்ணியமில்லாதார் (பாப கிருத்தியத்திற்றலைப்பட்டுத் தானழியுஞ் செயலாகிய, காமத்தளவை மேற்கொண்டு, உளறி வுலகை மயக்குவரென்பதும், அவையினை மெய்யென்றுக் கெடுவாரும், அன்னோர்களின் பலனிற்குப் பங்காளிகளாவரெனவும் வேதங்களாற்றீர்மானிக்கப்பட்டது.

———*———

## விண்டு, மதுகைடவர், மர்த்தனமாக பூசித்தது.

பிரமனிடம்பெற்ற வரத்தின் வலிமையினால், மது, கைடவன், என்னுமிரண்டு வசுரர்கள், தேவர்கண்முதற் சகல வுயிர்களுக்குஞ் செய்து வந்த துன்பத்தைத் தாங்கமுடியாதவர்களாய் வருந்துங்கால், ஆய்னின்,

விண்ணப்பத்திற்கிரங்கிய விஷ்ணு, அவ்வசுரரை செயிக்கமுடியாமல், கைலையையடைந்து காந்தர்வ வடிவமாகி, யாழேந்தி வாசிக்க, சிவபெருமான் திருவாய்மலர்ந்த சடாக்ஷர மனுவை, தியானஞ்செய்ததற்கிரங்கி, வக்கிரதுண்ட விநாயக மூர்த்தியாகத் தரிசனையும் வரமுங்கொடுக்க, அம்மூர்த்தத்திற் காலய பிரதிஷ்டையுஞ்செய்து அவ்விரண்டு வசுரரையுஞ் சக்கராயுதத்தா லவர்களைக்கண்டித்து வெற்றியடைந்தனன்.

(அசுரரிருவர்) பாவம், புண்ணியம், பிறப்பிறப்பு, மோட்சம், நரகம், (விட்ணு.) காக்குந்தொழிலுடையவா, (சக்கரம்.) ஆளுகை, (வக்கிரதுண்டர்.) சருவத்தையுந் தனக்குளொடுக்கிக்கொள்ளுங் கர்த்தாவென மூமூட்சுகளுரைப்பர்.

## சிறுவனை, வல்லாளன் பூசித்தது.

. சிந்து தேயத்திற் பல்லியெனும் பட்டணத்திற் கல்யாணனுக்கு, இந்துமதிபாற் பிறந்த, வல்லாளனாகிய, சிறுவன் றனைச்சேர்ந்த பிள்ளைகளோடு, சிற்றிற்புனைந்து விளையாடுவர்போல ஆலயமமைத்து அன்போடு பூசித்துச்செய்துவரும் ஆராதனையை, (கன்மங் கண்ணைமூடும், தன்மந் தலைவனைக்காட்டி யொன்றிக்கச்செய்யும்,) என்பனப்போல், தனதுத் தந்தையாகியக் கல்யாணன் பின்னாலே வடையப்போகிற துன்ப சனமத்தை, கன்ம பந்தத்தினா லுணரப்பெறாதவனாய், ஆராதனையாகிய பூசையைக்கெடுத்தும், தடுத்தும், வைதும், உதிரங்காணவடித்தும், மரத்திற் கட்டிவிட்டுப் போதலுமாகிய, துர்க்கிருத்தியத்தைச் செய்ததினால், அச்சிறுவன் வருந்தியதற்கிரங்கி விநாயகக்கடவுள் பிராமண வடிவமாகி கட்டவிழ்த்து அன்னோன் றுயரத்தைக் களைந்து அருட்சுரந்து வலிமையினாலும், (விநாயகாலயப் பணிவிடையைக் கெடுத்தவன்) அதனது பயனையடைவது கிரமமென வேண்டிக் கொண்டமையாலும், அவைப்பிறழாது, பாபகிருத்தியத்தைப் பழிக்கஞ்சாதுச்செய்த அக்கல்யாணன், தனது வீடுபோவதற்குட் குருடு, செவிடு, ஊமையாகவும், தொழுநோயால் வருந்தவும், சாபமாகிய சன்மத்தைப் பெற்றான். வல்லாளன் பக்தி விசேட்னாயிம்மூர்த்தத்தைப் பூசித்திருந்து கணேச மூர்த்தியினது சாயுஜ்யப்பதவியை யடைந்தனன்.

பிராம்மணராகவந்த விநாயகரும், வல்லாள கணபதியெனும், பெயரைத்தரித்து யாவரும் பூசிக்கும் மூர்த்தமாய் விளங்கினர்.

இதனால், ஒருவேளைத்தவரின பூசையினாலேற்படுங் கன்மத்வைத பின்னுற் செய்யப்படும் பலகோடி தன்மச்செயலானது, நிவர்த்திச்செய்து நன்மையைத் தரமாட்டாதென்பது முக்கலு முண்மையாம். ஆதலாற்றான், (காத்திருந்து பூசைப்பண்ணுவ கவேரிப்பண்டாரம்) முதுமொழி சத்தியத்திற் காதரவாக, மலையின்மேலிட்ட தீபம்போல பிரகாசிக்க ஆஸ்பதமாயிற்று. இதை நிச்சயிக்கவே; "ஒருகாலமன்றிச் சதாகாலப் பூசையா யொப்புவித்தேன் கருணைகூர்" என்றார் சித்தாந்த சைவபிரசாரணக்கண்மணியாகியத் தாயுமானர்.

இதைத்தான், (சீவனென்னுஞ் ஸ்வாகிய ஆன்மா, என்றமழியாது வரம்பெருமாறு பக்திச்செய்து முதிர்ந்தனமாகிய ஆட்டை பலியாகக் கொடுக்க, பஞ்சபூதங்களைப் பலகாரங்களாய்ப் படைக்க, அறிவை தூப தீபமாகக்கொடுக்க. கவிகளை மாலையாகச் சாத்த, இருதயத்தைக் கோயிலாகச்சமைக்க, அன்பே ஆபரணங்களாகப்பூண், நடத்திவந்த திருப்பணியெனுங் (காவு - பலி) காவேரி இரணடற்ற அதிசயானந்த போகத்தை யடைந்தவரைப் பழமையான, முதிர்ந்த, அதிதீதமெனுங் காரணப் பெயரான் பண்டாரமென வழைக்கப்பட்டது (பண்டாரி - சிவயோகி) (பண்டரிபுரம் - கடவுள் மூர்த்தங்கொண்ட டண்ணை, க்ஷேத்திரம், பண்டம் - பலகாரம், பண்டை - பூர்வீகம், பழமை. தாயானரென்பதுத்தான் அன்பினிடத்தெழும் பக்தியினுண்மைப்பொருளாகப் பேசப்படும்.

—✻—

## தக்கனெனும், அரசகுமாரன் பிணிநீங்க பூ..தது.

முன்சனனத்தில், சிவபூசைக்கு இடுக்கண்செய்து குருடு, செவிடு, ஊமையாகித் தொழுநோயனுங்கும் சாபம்பெற்ற, கலியாணன், மறுசனனத்தில், பானுநகர் வல்லாளராஜனுக்கு, கமலையெனு மனைவியினிடம் தக்கனெனும், பேருடையவனாகப் பிறந்து, அச்சாபத்தினை யடைந்து வருந்துங்கால் (பூர்வ சன்மத்தில், இந்துமதிச்செய்த விசேடப்புண்ணியத்தாலும், குமாரனாகிய வல்லாளன் கணேசபக்தியால் மேலானகதியடைந்த மகிமையினாலும்) எதிர்ப்பட்ட முற்கல முனிவரது, திருமேனியிற்படிந்த காற்றின்வாடையினால், தொழுநோய்நீங்கி, வாய்பேச, செவிகேட்க, கண் தெரியவுமாகப்பெற்று, மறையவராலடைந்த விநாயகர் அஷ்டாக்ஷர மந்திரத்தை செபித்து, பூசித்துவந்தப் புண்ணியத்தினால் கவுண்டின்யநகரை அரசாட்சிச் செய்யப்பெற்றனன்.

மஹான்களின் பாததூளிதத்தாலும், பார்வையினாலும், சக... ...வங்க ணசித்துப் போய்விடுமென்றேற்பட்டது.

## வீமராசன் பூசித்தது.

விகற்பதேச கவுண்டின்யக ராசனாகிய, வீமராசன், புத்திரப்பேறில்லா மனவருத்தத்தினால், அரசைவெறுத்து தனது நாயகியாகிய, சாருகாசினியுடன், காட்டிற்சென்ற விசுவாமித்திரரால், குலதெய்வமான விநாயகரைப் பூசிக்காமற் கைவிட்டதினால் இக்குறைவுயேற்பட்டதெனத் தெரிந்து, தன்னகரையடைந்து முன் தக்கனாற்பூசித்த விநாயகரை, மந்திரமுறையுடனாராதித்து சொரூகாந்தியாக உருக்குமாங்கதனென்றோர்ப் புத்திரனைப்பெற்று அப்புத்திரனுக்கு அரசையளித்து பரமார்த்த நிலையினின்ற அந்தியநாளில் கணேசருகில் மேலானபதவியடைந்தனன்.

பூசித்ததைக் கைவிடினதுவே, சகல விக்கினத்தையு முண்டுபண்ணுமெனப் பெறப்பட்டது. ஆதலால் விவேகிகள் கன்மத்திற்கஞ்சி, தன்மத்தில் மிஞ்சினவர்களாய் நன்மையிலீடுபட்டு, சுகமுத்திசாதனை யடைந்தனர்.

---

## உருக்குமாங்கதன் பூசித்தது.

—(*)—

வீமராசன் மகனாகிய, உருக்குமாங்கதன், கபில முனிவர்க்குத் தொண்டுபுரிந்து பெற்றசகலகலை தேர்ச்சியினாலும், தன் தந்தையுபதேசித்த விநாயக மூர்த்தியின் ஏகாக்ஷர மந்திரத்தை, இடைவிடாது பூசித்து வரும் வேளையினாலும், அரசாண்டு குடிகள் விருப்பத்திற்கிணங்கி வேட்டையாடக் களைத்துத் தாகந்தணிக்கும்படி, சலம்வேண்டிநின்ற அவ்வரசனின் அழகினைக்கண்டு மோகித்த (கவி முனிவரின் மனைவி முகுந்தை யின் புணர்ச்செயலுக்கிணங்காமையினால்) அம்முகுந்தை கோபித்து சபித்தபடியடைந்த வெண்குட்டத்தினால், அரசன் வருந்தி நாரத முனிவர்த் திருவுளம் பற்றினபிரகாரம், கதம்பநகர், கணேசகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து அச்சாபப்பிணியுடன் சகலவினைகளுந்தீர்ந்து, சிந்தாமணி விநாயகரைப் பூசித்து மாதா பிதா சுற்றத்தினர்க்குமந்த ஸ்நானபலனிற்சிறிது தத்தஞ்செய்து அவர்களும் புனிதர்களாயுடன்வர அவண்வந்த விமானத்தூர்ந்த சாலோகபதவி யடைந்தனன்.

பாபச்செயலுக்கு அஞ்சிநிற்றலே புண்ணியத்திற்குத் தலைமையுடையது. அவையுங் கன்மத்தின்படிமாறி வலியநேரிட்டுக் கெடுக்கும், வறுமை, பிணி, துன்பம், இவை முதலியவைகளை யனுபவித்து தன்மார்த்தநெறிப்படி நீங்குங்கால் அருட்சொரூபியாகிய, ஞானாசாரியற் சொல்லாமற்சொல்லும் உபதேசத்தாலும், தெய்வப்பணி மந்திரித்தாலுஞ் சுகமடைவரெனப் பெறப்பட்டது.

## இந்திரன் சாபநீங்கினதற்காகப் பூசித்தது.

—(*)—

கௌதம முனிவரின் மனைவி அகலிகை விசேஷ அழகினையுடையவளென *மகதியாழ்த் தலைவரென்னும், நாரத முனிவராற் கேள்வியுற்ற தேவேந்திரன், அம்முனிவரைப்போல வடிவங்கொண்டு, அவர் ஸ்நானத்திற்குப் போனவேளையில் பன்னக சாலையுணுழைந்து, அகலிகையுடன், கூடிக்குலாவிய பின்னர் மீறுபாடுணர்ந்து வைது நிற்கவும், ஆச்சிரமமடைந்த முனிபுங்கவர்த் தெரிந்து அகலிகையைச் சிலையுருவாகவும், (பயந்து பூனையுருக்கொண்டு, வெளிச்செல்லும் இந்திரனைத்தன்தேகமுழுவதும், புண்மைக் குறிகளுடையவும்,) பெற்ற சாபத்தை, நாரத முனிவராலறிந்த பிரகஸ்பதி, தேவகணங்களுடன் கௌதமரைப் பிரார்த்தித்துப் பெற்ற விநாயக சட்டாக்ஷர மந்திரத்தை, இந்திரனுக் கனுக்ரஹஞ்செய்துபதேசிக்க, அவ்விந்திரன் ஆலயமமைத்து சடாக்ஷரமனுவை ஆயிரம் வருடம் வரையில், செபித்து விநாயகர் தரிசனையுடன் பிணிநீங்கி சகல வரத்தையும் பெற்றனன்.

### அகலிகை சாபநிவர்த்திக் கேட்டது.

கல்லாகச் சாபம்பெற்ற அகலிகையும தனக்குநேரிட்ட சாபநிவாரணத்தைப்பற்றிக் கேட்க, இலங்கை மன்னனாகிய இராவணன், செய்கின்ற துன்பத்தை நீக்கும்படி தேவர்கள் வேண்டுதலுக்கிணங்க, தசரத மஹாராசனுக்கு, கௌசலையினிடம் பிறந்த ஸ்ரீ ராமச்சந்திரரின், பாததூளிப்பட்டமாத்திரத்தில், பாறையாய்க் கிடக்கின்ற உன் சாபம் நிவாரணமாகி முந்தியவடிவம் பெற்று நம்மைச்சேர்ந்து வாழ்ந்திருப்பாயென, தன்பத்தாவாகிய கௌதம முனிவர் கல்லாகச்சாபமடைந்த அகலிகைக்கு, சாபத்தீர்வு கூறினாரெனப் பெறப்படுகிறது.

---

* யகதி என்றது பேரியாழ் ஆயிரநரம்புதொடுத்து நடப்பது. ஆயிர நரம்பிற் றொதியாழாகும் என நாடகத்தமிழ் நூற்சூத்திரம். இசையிற்பெரியோன் நாரதமுனி.

—*—

## கிருச்சமதன் பூசித்தது.

---

கவிமகா முனிவர்த் தேவியாகிய முகுந்தை, உருக்குமாங்கத வரசன் மேலுற்ற, யெண்ணத்தை யறிந்த இந்திரன், அவ்வரசனுருக்கொண்டு, கலந்தமையினாற் பிறந்த, கிருச்சமதனென்பவனை, அம்முனிவர்த் தனது

புத்திரனுகக் கருதி வளர்த்து, சகல கல்வியுடன், கணுனுந்துவா! மந்திரோபதேசமுஞ்செய்த சாமர்த்தியத்திருல், மகரிஷிகணங்கட்கூடி சாஸ்திரப்பிரசங்கம் நடத்துஞ் சபையிற்சென்று; அந்திரி முனிவரை! வாதில் ஜெயிக்க; தோல்வியடைந்த அத்திரி முனிவர்! வேறுவகை யாதொன்றினுலும், வெல்லமாட்டாமையினுல், நாணமுற்று அக்கிருச்சமதனை, § இகழ்ந்துரைக்கவாலோசித்து, நீ! முனிகுமாரனல்லை உருக்துமாங்கத வாசன் மகனென, சினந்துரைக்க அசனுல்வருந்தித் தன்தாயாகிய முதந்தையை, விசாரித்து உண்மையை யறிந்து அவளை காட்டில் இலந்தை மரமாக சபித்து, மனவருத்தமுற்றிருக்கையில், அசரீரி! வாக்கினுல், தான் இந்திரன் புத்திரனென்றுணர்ந்து, புட்பக வனத்தில், பதினையாயிரவருடம் கணுனுந்துவா! மந்திரத்துடன் அரியதவஞ்செய்து சகல முனிவர்கள், தேவர்கள், தன்னைத்தொழுது ஏவல்செய்யும் மாட்சிமையோடும், யாகாதிகட்கெல்லாம் உபாத்தியாகி, தான்வரம்பெற்றவிடத்தில், ஆலயமமைத்து வரதகணபதி, யென்றோர் மூர்த்திப் பிரதிஷ்டைசெய்து துதித்திருந்து சிவஞானசொரூபனுயினன்.

## பலியெனுந் திரிபுரன் பூசித்தது.

சிவயோகஞ் செய்துக்கொண்டிருந்த கிருச்சமத முனிவர்ப் பார்வையினின்றுமுதித்த, பலியெனு மவுணன், தன்பிதாவாற்பெற்ற கணேசர் மந்திரத்தின் வலியினையடைய, புட்பகவனத்தில், தன் தந்தையைப் போலவே, தானுமொருகாலை நிலத்திலூன்றிப் பஞ்சேந்திரியங்களையுமொருவழிப்படுத்தி; (* சுழுமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி,) என்னுந் தசநாடிகட்கு முற்பத்தி ஸ்தானமாகிய, மூலாதாரத்தினின்றுந் தேகமத்தியமாகிய, இதய கமலத்தில் பிருதுவி தத்துவமுதல், நாததத்துவமீருக, ஓராதனங் கற்பித்து, அவ்வாதனத்தில் சோதிமயமான கணேச சொருபத்தைப் பிர

---

§ நியாயவாயிலாய், தர்க்கரீதியாய், சாத்திரோக்தமாய், ஜெயிக்க முடியாதார் இகழ்ந்துரைத்த லன்னோர்கட் சுபாவ கன்மமாத லனுபவத்திலேற்படுவ துண்மைப் பொருளாம்.

* சுழுமுனை, ஆதாரமாறினு மூடுருவி நிற்பது. இடைபிங்கலை, இரண்டுங் கத்திரிக்கோல்போற் பின்னி நிற்பது. காந்தாரி, நாபியிற்றோன்றிச் சத்தமேழுக்கு மேழுநாடியாய்க் கண்டத்துறுவது. அத்தி, சிங்குவை, இரண்டும் பத்து நாடியுற்றுக் கண்ணினிற்பது. அலம்புடை, புருடன், இரண்டுஞ் செவியி னூற்றிருபது நரம்புற்றிருப்பது. குரு, நாபியுறைந்து குய்யம்பற்றி நிற்பது. சங்கினி, உபத்தத்தைப் பற்றியிருப்பது.

திஷ்டைசெய்து, அந்தச் சொரூபத்தில், விநாயக மூர்த்தியை, ஆவாகனஞ்செய்து, அம்மூர்த்திக்கு அருளென்னுந் திருமஞ்சனத்தையாட்டி, சாந்தமென்னுஞ் சந்தனத்தைச்சாத்தி, ஞானம், மோனம், தவம், தருமம், மனவூக்கம், கல்வி, கேள்வி, என்கின்ற் அட்டபுட்பங்களைக்கொண்டருச்சித்து, † அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், என்கின்ற பஞ்சவிதான்னங்களையும் நிவேதித்து, அகங்காரமென்கின்ற தூபங் கொடுத்து, அபிமான மென்கின்ற தீபங்காட்டி, ‡ சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியென்னும், பஞ்சாலாத்தி தீபங்காட்டி, ஆன்ம சொரூபமாகிய, ஒப்பில்லாமாலையைச் சாத்தி, ஆன்மாவானது விநாயகப் பெருமானுடைய மேலான பரிபூரண ஞானப்பிரகாசத்தை விநாயகப் பிரசாதமாகிய திருவருளாலறிந்து, அந்நிலையிலழுந்துவதாகிய ஆவாகனத்தையு மேனையவற்றையுஞ்செய்து விநாயக வியாபகம் ஆன்மாவில் விளங்குதல், காரணமாகச் செய்யப்படும் பிரதக்கிணத்தையும், தற்போதம் என்னுமதிகாரத்தை நடாத்தும் பிரம, விட்டுணுக்களாலே, சூக்குமஞானக் கிரியைகளை நீங்கிப் பரமபதியாகிய விநாயகக் கடவுளது, அடிமையால்நின்று அவருடன் அத்துவிதமுற்று நிற்றலைக் குறிப்பதாகிய நமஸ்காரத்தையும், அந்தர்முகத்திற்செய்து, கேவல சகலாவத்தைகளிலும், அவைநீங்க விளங்கும் அகம்பிரம ஞானத்திலும், பொருந்தாமல் பரமஞானசாரிய மூர்த்திகளது அநுக்கிரக ஞானத்திலே தற்பூரண மெல்லாம் அடங்கப்பெற்று, தற்செய்தி யெல்லாம் அவரது அநுக்கிரக ஞானசத்தியின் செய்தியாய் அறிதற்கரிய பரமானந்தத்தை, யெவ்விடத்துங்கண்டநுபவிப்பதாகிய, விநாயக தரிசனஞ்செய்து, பூசித்து இந்திரபதவிபெற்றும், சுவர்த்தி, சுப்பிலம், சுக்கிலம், சுவர்ண, இராஜித, அயமயமா, யளவற்ற அற்புத சம்பத்துக்களுடன், ¶ மூன்று புரங்களையும் தனது புத்திரர்களாகிய, வச்சிரதமிஷ்டிரன், வீமகாயன், காளகூடனென்னு மூவர்கள் நினைத்தபடி நடத்தி அரசுபெறச்செய்து, பிரமலோகத்தையும், வைகுண்டத்தையும், ஆளும்படி தனதாணையைச் செலுத்திவரவும், வங்காளமென்னு நகரில், சர்வாதிகாரப் பிரதனாய் திரிபுரனெனும், உபநாமமுடன் வாழ்ந்திருந்தனன்.

---

† உடல், அன்னமயம். கருமேந்திரியமும், பிராணனும், பிராணமயம். கருமேந்திரியமும் மனமும், மனோமயம். ஞானேந்திரியமும், புத்தியும், விஞ்ஞானமயம். அவித்தை ஆனந்தமயம். இவையேபஞ்சகோசம்.

‡ உயிர்க்கொளியாக நிற்பது, சிற்சத்தி. பிராணன் முதலிய வாயுவாக நிற்பது, பராசத்தி. பஞ்சபூதமாகநிற்பது, இச்சாசத்தி. ஐம்பொறியுணர்ச்சியாக நிற்பது, ஞானசத்தி. மற்றை வினைத்துணையாக நிற்பது கிரியாசத்தி.

¶ கற்பகவிருக்ஷம், காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, முதலிய பொருள்களோடு, அளவற்ற அற்புத சம்பத்துகளு நிரம்பியிருப்பது மூன்று புரங்கள், அவ்வையே முப்புரமென்னப்படும்.

இரும்பாலாகிய புரத்திற்கு, சுக்கிலமென்றும், வெள்ளியாலாகிய புரத்திற்குச்சுப்பிலமென்றும், பொன்னாலாகியபுரத்திற்கு சுவர்த்தியென்றும், சுக்கிலம் பாதல லோகமாகவும், சுப்பிலம் மத்திய லோகமாகவும், சுவர்த்தி சுவர்க்க லோகமாகவும், சொல்லப்படும்.

முப்புரங்களானவை, அவண்வசிக்கு மதிகாரிகள் எவ்வெவ் விடங்களிற் செல்லவேண்டி நினைத்தாலும், அவ்வவ்விடங்களுக்கெழும்பி யவற்றினடிக்கீழகப்படு முலகங்க ளெல்லாவற்றையு மழித்து, வெற்றிக்கொள்வதும், ஏதேது வேண்டினு மவைகளைத் தடையில்லாமற் கொடுக்கக் கூடியனவாம்.

☞ முப்புரமாகிய, இத்திரிபுர மென்பனவற்றையும், இவற்றைச் செயித்து சருவலோக சரண்யனாக வியாபகமாய்நிற்றல் என்பனவாகிய, ஞானோதய விலாசர்களாகிய, சீவேஸ்வர பெத்தமுத்த முமூட்சுகள், மூவிதமாயை, மூவிதபாசம், மூவிதவாசனை, மும்மண்டலமாகிய முத்தேகம் இவைகளையெல்லாந் தனதாசிரியப்பெருமான் கருணைமேலிட்டகாலத்து, ஞானாக்கினியினாற் சுட்டெரித்து பசு, பாசமற்றுத் தற்சுதந்தரர்களாக, பிரணவாகாரத்தைப் போசித்து, சருவான்ம சொரூபமுடைத்தாய் எல்லாவற்றையுந் தனதுத் திருவடிக்கருகராக்கி, நித்திய பூரணானந்த சுகத்திலிருவினையற்றிருத்தலே, முத்தி யெனவும், பாசபந்த வினைகளே அசுரராக்கதர்களெனவும், அவைகளை நசிக்கசெய்வதே தானம், தவம், விரதம், மந்திரங்களெனவும், இவைகளைத் தேகமாகச் சுமந்துநிற்பதே முப்புரமெனவும், அவற்றையழித்து தானாகவிளங்குதலே; சிவஞானசொரூபமாகிய விநாயகமூர்த்தமெனவும், வேதாகம புராண, சுருதிஸ்மிருதி, குரு, சுவானுபவத்தால் தெளிவுற்ற பெரியோர்களாற் கணிக்கப்படும்.

—o—

## தேவர்கள் பூசித்தது.

பலியெனு மவுணன், திரிலோகங்களையுங் கைப்பற்றியதனால் விளைந்தத் துன்பத்துடன், வருந்துகின்ற தேவர்கள், நாரத முனிவரா லனுக்ரஹித்த, அஷ்டாக்ஷர மந்திரத்தை, முறைமைப்படி செபித்து உபாசித்துக் கருணாநிதியான விநாயகக் கடவுள் தரிசனையுடன் வேண்டும் வரங்

களையும்பெற்று, கயிலாயபதியிடத்தும் தங்களாபத்து நீங்கலாக வரம்பெற்றும், பூர்வரீதியாய்த் தத்தம்பதங்களையடைந்து சுகிக்கப்பெற்றனர்.

---

உபாசனையென்பது, பலவாசனை கணடுவில் மனநசுங்கி சனனவாசனையாற் கட்டுப்பட்டொழியாப்படி; நிலைப்பெறு மவித்தைகளை நாளுக்கு நாள் நீங்கி சுத்தவாசனையாகிய, பக்தி ஞானேசயச் சுடரிலொளித்து, தலைவனுரிய, ஓங்காரப் பிரபுவின், ஆனந்தத்திலே கலந்து; சனனமற்றிருக்கின்ற நிலையைத் தருவனவாகிய படிக்கிரமாம்பக்குவம், சருவ நன்மையைக் கொடுக்ககூடியஇதன விவேவிகள், புண்ணிய வசத்தின்படி சித்திக்க; அனுபவித்ததை உபாசனுமூர்த்த இலக்கண விலட்சணமாக, உபாசனுகாண்டத்தால் வகுத்துள்ளதென யேற்பட்டது.

—(※)—

தந்தைத் தாயெனு முபசார உலகவழக்கினைமீண்டுந்
சிவஞ்சத்தியாஞ் சத்வாம்ஸ தனுதீச்சைவடிவிற் பரிணமித்தும்
பஞ்சகிர்த்திய சட்சுயிலக்கண லட்சணூர்த்தத்தின்
திரிசிப விரதாப்த ஞான வுடன்பாட்டைத் தோதுத்தல்.

## விமலர் பூசித்தது.

---

கலாதரனென்னும், பெயருடன் பிராமண வடிவமாக கணேசப்பெருமான், தம்மைவழிப்பட்டுகின்ற, தேவர்களின்மீ திரக்கமுற்றவராகி, அவர்கள் வேண்டியவற்றை முடிக்க யெண்ணங்கொண்டு; பலியெனுமசுரனிடஞ்சென்று, உருத்திர மூர்த்திகளிடத்திருக்குஞ் சிந்தாமணி விநாயகரைத் சருவித்துக் கொடுக்கும்படி சங்கற்பித்து மீண்டபின்பவன் கேட்டனுப்பியப்படியே, உதவாமையினால், சினங்கொண்டு சைனியத்துடன் யுத்தத்திற்கு கைலையை நெருங்க ; அத்திரிபுரனைச் சங்கரித்தற்காக உருத்திரமூர்த்திகள் திருவுளங்கொண்டு, தியானயோகத்தினின்று, பிரார்த்தித்தவுடன் தனது திருமுகத்தினின்று ஐந்துமுகமும், பத்துக்கைகளுமுடையவராக, கணேசப் பெருமான்றோன்றி; பீஜாக்ஷரத்தோடு கூடிய மஹாமந்திரத்தை யுபதேசிக்கப்பெற்ற, விமலரும், பூதகணங்கள், தேவகணங்கள், புடைசூழ, சந்திரசூரியர்களை, சக்கரங்களாகவுடைய * வைதீகத்தேரி லாரோகணித்து, அப்பலியெனுந் திரிபுரனோடு, முப்புரத்தையுந் தமது முத்தலைச் சூலத்தாற் சாம்பராக்கி, வெற்றியடையப்பெற்று பூதகணங்களுடன், கைலாயமடைந்து அடியவர்கட்கெல்லாம் அருள்வழங்கிய சிவபெருமானுக்கு, விண்டு முதலிய தேவர்களால் திருவிழா நடத்தித் துதிக்கப்பெற்றது.

* வைதீகத்தேரென்பன, சூரிய சந்திரர்களைத் திகிரிகளாகவும், இருதுக்களை உட்பரப்புகளாகவும், சமயங்களை உள்ளிடமாகவும், பிரகிருதியென்கின்ற மாயையை முகப்பாகவும், காஷ்டை முகூர்த்த முதலிய காலங்களை மச்சாகவும், பூவுலகத்தைத் தட்டாகவும், சுவர்க்க லோகத்தை ஆதனமாகவும், கலைகளை மூளைகளாகவும், மந்திரகிரியைகளை மேல்வட்டமாகவும், இமயகிரியைக் கொடிஞ்சியாகவும், உதயகிரியைக் கூம்புகளாகவும், மற்றைய பர்வதங்களையெல்லாம் தூண்களாகவும், தத்துவங்களைக் குடமாகவும், மேகங்களைச் சுற்றுமரங்களாகவும், கன்மேந்திரிய ஞானேந்திரியங்களை ஆபரணங்களாகவும், அண்டங்களை மாலைகளாகவும், புராண சாத்திரங்களை மணிவடங்களாகவும், நட்சத்திரங்களை விதானங்களாகவும், சமுத்திரங்களை யலங்கார வஸ்திரங்களாகவும், மருத்துவர்களைப் படிகளாகவும், கங்கைமுதலிய தெய்வநதிகளைச் சாமரைகளாகவும், மற்றைய நதிகளையெல்லாம் பதாகைகளாகவும், திதிவாரமுதலிய நாட்களை நடக்கின்ற வேகமாகவும், சோடித்துள்ள ரதத்திற்கு; வேதங்களைக் குதிரைகளாகவும் வசுக்களை யக்குதிரைகட்டும் வடிகயிறுகளாகவும், கன்மகாண்டம் ஞான காண்டத்தை நுகத்தடியாகவும், உபநிடதங்களை குதிரைகட்கு ஆபரணமாகவும், பிரணவ மென்னும் *மத்திகையைக் கைக்கொண்டு; பிரமனைச் சாரதியாகவும், மகமேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், விண்டுவைப் பாணமாகவும், யமனை அலகாகவும், வாயுவை இறகாகவும், வடவாமுகாக்கினியைக் கூராகவுங் கொண்டுள்ளதெனக் கூறப்படும்.

---

# சத்தியோசாந்த சமத்வ நிருபணத் திருவிளையாடலைக் கணித்தல்.

## உமையம்மை பூசித்தது.

---

சகலலோக நாயகியாகிய உமாதேவியைப் புத்திரியாகப் பெறும்படி தவஞ்செய்தவன்னவீம் பிரமகுமாரனும், வேதவல்லி, நாயகனுமான தக்கனுக்கு, தாட்சாயணி யென அம்மையார்த் திருநாமங்கொண்டவதாரஞ் செய்து (சிவஞ்சத்தியெனு மிருவித பாகுபாடுகள் ஒன்றெனக்கலந்து, சர்வான்மாக்களையும் பஞ்ச கிருத்தியத்தா லாட்கொள்ளுகின்ற வழிபடுநெறியை விருத்தியாக்கும் வியாபகமாய், சகளமேனியாக சதாசிவனைத்தாட்படும் பக்தர்களியாவர்கட்கும், தத்தம் புண்ணிய வசத்தின்படி விளங்கின்ற விளையாடாகின்ற மங்கள கலியாணகுணமாந் திருக்கோலத்கொள்வதென நிச்சயிக்கப்படும் பரிணமப் பரிணயத்தை) மஹாதேவரைத் திருக்கலியா

ணைத் திருவிளையாடலைக்கொண்டு வந்தகாலத்தில் அத்தக்கன் பரமசிவத்தை; (தனது பூர்வகர்மமானது யேற்பட்டு நிற்றலான், அவை நிறைவேறும்வண்ணம்) பின்வருவதை யுணராதவனாய் நிந்தித்தமையை, உமாதேவியார்ச் சிறிதுந் தாங்கமாட்டாது; தமது சரீரத்தை யோகாக்கினியால் விடுத்து பர்வதராசனெனும் மலையரசன் குமாரத்தியாகத் தோன்றி வளருநாளில், தன் தந்தையை நோக்கி நினைத்த வெண்ணத்தை யினிது முடித்து கைக்கூடச்செய்து அதன்பயனைத் தருகின்ற சிறந்த விரதங்களேதாவதுளதேல் அவற்றைச் சொல்லுகவென்றுப் பார்வதி தேவியார்க் கேட்டதற்கவரிதங்கி மனம்கிழ்ந்து ஆவணி மாதம் பூர்வபக்ஷத்தில் வருகின்ற விநாயக சதுர்த்தி விரதமே யெல்லாநன்மைகளையுந் தரக்கூடியதெனச் சொல்லக்கேட்டு அச்சதுர்த்தி விரதத்தை உமாதேவியார் பூசித்தனர்.

---*---

## உமாதேவியார் விநாயக சதுர்த்தி விரதத்தை, பூசித்த விபரம்.

---

பார்வதி தேவியாரும், விதிப்படி தெய்வகங்கையிலாடி பூசைக்கு, வேண்டு முபகரணங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு, அலங்கரித்திருந்த, பூஜாமண்டபமடைந்து விபூதி, உருத்திராக்ஷ கண்டிகையணிந்து சிரசாதி பாதம்வரையில் நியாசஞ்செய்து ஆசமனம்புரிந்து பிராணாயாமத்திலிருந்து பூதசுத்தி முதலானவைகளை நடாத்தி,

ஏவங்குண விசேஷ மானவசிஷ்டாயாம் சுபதிதௌ அஸ்மா கம்ஸகுடும்பானாம் க்ஷேமஸ் தையர்ய விஜயா யுரா ரோக்கி ஸயஸ் வர்யாணாமுத்தரோத்தரா பிவ்ருத்யர்த்தம் தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பலபுருஷார்த்த சித்யர்தம் ஸ்ரீ சித்திவிநாயக தேவதா முக்தியஸ்ப ஸ்ரீ சித்திவிநாயக ப்ரீத்யாத்தம் கல்போக்த ப்ரகா ரேணத்யாண வாஹனாதி ஷோடசோபசார பூஜாங்கரிஷ்யே, என்று சங்கற்பங்கூறி,

சந்தன மரத்தாலாகிய ஓர் வேதிகை வைத்து அதன்மீது தண்டுமபரப்பி சொர்ண வஸ்திரமொன்றை விரித்து, அதன்மீது இலைசுற்றி நீர் பரப்பியிருக்கின்ற பொற்கும்பத்தை ஸ்தாபித்து, அதில் அத்தித்தளிர், ஆலந்தளிர், அரசந்தளிர், மாந்தளிர், நாவற்றளிர், என்னும் ஐவகைத் தளிர்களோடு, சுகந்தி, பொன், மாகதம், மாணிக்கம், முத்து யெஃனும் பஞ்சரத்தினங்களையும் பெய்து அதற்குச் சந்தனம், புஷ்பம், அக்ஷமத முதலானவைகளைத் தரித்து.

கலசஸ்யமுகே விஷ்ணு கண்டேருத்ர ஸமாஸ்ரதமூலே தத்ரஸ்திதோ ப்ரம்ஹ மதயே மத்ர கணஸ்மிரதா குக்ஷோது சாகராஸர்வே ஸப்தத்வீபாவ சுந்தரா ருக்வேதோ தயசுர்வேத சாமவேத அதர்வண அங்கைகஸ்ஸசஇ தாசர்வே கல்சாம்புஸ மாஸ்ரித அயேந்து ஷணேச பூஜார்த்தம் துரிதக்ஷயகாரக கங்கேச யமுனேசைவ கோதாவரி சரஸ்வதி நர்மதே சிந்து காவேரி சலேஸ் மிஸ்ஸந்திங்குரு, என்று கும்பபூசைசெய்து;

அக்கும்பத்திற்கு மேற்றிசையில் யந்திரமிட்டு அதன்மீது தெய்வகமியர்களால் சொர்னத்தினலும், பிருதுவியினலும் செய்துவைத்திருக்கின்ற இரண்டு மூர்த்திகளிற் சொர்னமூர்த்தியை யெழுந்தருளச்செய்து மற்றொரு வேதிகையின்மீது, பிருதுவிமூர்த்தியை யெழுந்தருளச்செய்து சங்கு முதலிய பூசாகருவிகளைச்சுத்திசெய்து, குங்குமம், பச்சைகர்ப்பூரம், புட்பம், அறுகு, முதலிய பரிமளத் திரவியங்களையும்பெய்து, மணிவட்டிகைகளைப்பரப்பி, ஜலம், அரிசி, பால், தருப்பைநுனி, மலர், வெண்கடுகு, நெல், என், முதலிய திரவியங்களை விதிப்படி யமைத்து, அருக்கியம், பாத்தியம், ஆசமனம், என்னும் மூவகை நீர்களையும் மந்திர பூர்வகமாக, உண்டாக்கி கரத்திற் புஷ்பமும், அக்ஷதையுங்கொண்டு,

த்யாயேத்கஜானனம் வேதம் தப்தகாஞ்சன ஸந்நிபம் சதுர்ப்புஜம் மஹாகாயம் ஸர்வாபரண பூஷிதம் தண்டாக்ஷ மாலாபரசு பூர்ணமோதக தாரிணம் பாசாங்குசதரம் தேவம் த்யாயேத் சித்திவிநாயகம் ஸ்ரீ சித்தி விநாயகாயநம தியானம் ஸமர்ப்பயாமி, என்று சிந்தித்து,

விநாயக நமஸ்தேஸ்து கௌரீபல ஸமுத்பல—இமாம்க்ருதாம் மயாம் பூஜாம் க்ருஹாண கணநாயக, ஸ்ரீ கணநாயகாயநம - ஆவாகனம் ஸமர்ப்பயாமி, என்று ஆவாகனத்துடனே ஸ்தாபனஞ்செய்து,

மௌக்திகை புஷ்யராகஸ்ய நாநாரத்ந விராசிதம் திவ்ய ஸிம்ஹாசனம் சாரு ப்ரீத்யர்த்தம் ப்ரதிக்ருய் ஹதாம் ஸ்ரீ விநாயகாயநம ஆஸனம் ஸமர்ப்பயாமி என்று பீடமிட்டு,

அர்க்யமக்ருஹாணதேவேச கணாதிப கஜானன கந்ததூர்வாக்ஷதையர்யுக்தம் கங்காஜல மிதம் சுபம் ஸ்ரீகஜானனயநம அர்க்யம்ஸமர்ப்பயாமி கௌரிபுத்ர நமஸ்தே நமஸ்து. சங்கரப்ரிய நந்தன பக்தயா பாத்தியம் க்ருஹாண சுரசத்தம் கௌரீபுத்ராயநம, பாத்யம் சமர்ப்பயாமி அநாதநாத சர்வேச கீர்வாணசுரபூஜித நிர்மலம் கந்தஸம்யுக்தம் க்ருஹாணசமனம் விபோ ஸ்ரீஸர்வேசநாயநம ஆசமனீயம் ஸமர்ப்பயாமி,

என்று அருக்கியம் பாத்தியம் ஆசமனங்கொடுத்து,

ததிக்ஷீ ரஸயுக்தம் மத்வாஜயேன ஸமந்விதம் மதுவர்க்கம் க்ருஹாணேதம் கஜவக்த்ர நமோஸ்துதே, ஸ்ரீ கஜவக்த்ராயநம மதுவர்க்க நைவேத்தியம் ஸமர்ப்பயாமி,

என்று தேன்கலந்த பால்பழ முதலியவைகளைக் கொடுத்து

ஸ்நானம் பஞ்சாமருதோ திவ்ய குருஷ்வசுர ஸத்தம் பக்த்யா துப்யம் மயாதர்த்தம், விக்நராஜ நமோஸ்துதே, ஸ்ரீ விக்நராஜாயநம, பஞ்சாம்ருத ஸ்நானம் ஸமர்ப்பயாமி,

என்று ஐந்தமிர்தத்தையும் கங்கை முதலியதிவ்விய தீர்த்தங்களையும் ஸ்நானஞ்செய்வித்து,

ரத்நவஸ்த்ரம் த்வயமதேவ கௌரீ பவபவப்ரபோ க்ருஹாணேதம் மயாதத்தம் விக்னராஜ நமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜநம: வஸ்திரயுக்மம் ஸமர்ப்பயாமி, என்று இரண்டு பீதாம்பரங்களை யுடுத்தி,

உபவீதம் ப்ரம்ம சூத்திரம் ப்ரம்ஹணா நிர்மிதம்புரா, நாகயக்ஞோபவீதேதம் க்ருஹாண கணநாயநம, ஸ்ரீ கணநாய நாயநம் யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி,

என்று பூணூல் தரித்து,

சந்தன கருகற்பூரம் க்ருநாத ஸமன்விதம், கந்தம் தாஸ்யாமி விக்நேஸ ஸர்வாமீஷ்டப்ரதாயக ஸ்ரீ விக்னேஸாயநம கந்தாந்தாரையாமி,

என்று திருமேனி முழுவதுஞ் சந்தனத்தையப்பி,

அக்ஷதான் தவளாம் சுப்ரான் ஹரித்ரா மிஸ்ரிதானபி மஸானமர்ப்பிதான் தேவக்ருஹாணத் விரதானன ஸ்ரீ ஸர்வாபீஷ்ட ப்ரதாயகாயநம அக்ஷதாம் ஸமர்ப்பயாமி,

என்று மஞ்சளரிசி, பொற்சுண்ணம், பூந்தாது, முதலியவைகளை அதன்மீதட்டி,

சுகந்தினி சுபிஷ்பாணி ஜாதீகுந்த முகர்னிஸ ஏகவிம்சதி புஷ்பாணி க்ருஹாணத்வம் விநாயக ஸ்ரீ விநாயகாயநம புஷ்பாணி பூசையாமி,

என்று மலர்களைச் சாத்தி,

ஓம் கணேசாயநம: ... பாதௌபூசையாமி
" விக்னராஜாயநம: ... ஜானுநீபூசையாமி
" ஆகுவாகனாயநம: ... ஊரும்பூசையாமி
" ஏரம்பாயநம: ... கடிம்பூசையாமி
" தேவதேவாயநம: ... நவிம்பூசையாமி
" லம்போதராயநம: ... உதரம்பூசையாமி
ஓம் கணநாயகாயநம: ... ஹிர்தயம்பூசையாமி

ஓம் ஸ்தூலகண்டாயநம: ... கண்டம்பூஜையாமி
" ஸ்கந்தாக்ரஜாயநம: ... ஸ்கந்தௌபூஜையாமி
" சதுர்ப்புஜாயநம: ... புஜௌபூஜையாமி
" பரசுஹஸ்தாயநம: ... அஸ்தான்பூஜையாமி
" கஜவக்திராயநம: ... வக்த்ரம்பூஜையாமி
" விக்ன அந்திரேநம: ... நெத்திரேபூஜையாமி
" சூர்ப்பகர்ணாயநம: ... கர்ணௌ பூஜையாமி
" ஏகதந்தாயநம: ... தந்தம்பூஜையாமி
" குமாரகுருவேநம: ... சிரம் பூஜையாமி
ஓம் சர்வேஸ்வராயநம: ... சர்வாங்காநீபூஜையாமி

என்று, பாதம், முழந்தாள், தொடை, நிதம்பம், நாபி, மயிர், இதயம், கண்டம், குழுத்தடி, தோள், உள்ளங்கை, நாசி, கண், காது, தந்தம், சிரம், சர்வாங்கம், என்னுமிப் பதினாறுயிடங்களிலும், அங்கபூசைசெய்து,

ஓம் சுமுகாயநம: ... மாசிபத்ரம் பூஜையாமி
" கணாதிபதியேநம: ... பிர்ங்காரபத்ரம பூஜையாமி
" உமாபுத்ராயநம: ... வில்வபத்ரம் பூஜையாமி
" கஜாநனாயநம: ... தூர்வபத்ரம் பூஜையாமி
" லம்போதராயநம: ... பத்ரீபத்ரம் பூஜையாமி
" அரகுனுவேநம: ... துத்தூரபத்ரம் பூஜையாமி
" கஜகர்ணாயநம: ... துளசிபத்ரம் பூஜையாமி
" குகாக்கிரசாயநம: ... கரமஞ்சரிபத்ரம் பூஜையாமி
" ஏகதந்தாயநம: ... புரஅதீபத்ரம் பூஜையாமி
" கஜவத்திராயநம: ... சமிபத்ரம் பூஜையாமி
" சுராக்ரகண்யாயநம: ... தேவதாரபத்ரம் பூஜையாமி
" பாலசந்திராயநம: ... மருவபத்ரம் பூஜையாமி
" விகடாயநம: ... கரவீரபத்ரம் பூஜையாமி
" விநாயகாயநம: ... துருமோற்பலபத்ரம் பூஜையாமி
" கபிலாயநம: ... அர்க்கபத்ரம் பூஜையாமி
" பின்னதந்தாயநம: ... அர்ச்சுனபத்ரம் பூஜையாமி
" பத்கிஹினாயநம: ... விஷ்ணுகிராந்தி பத்ரம் பூஜையாமி
" வடவேநம: ... தாடிமபத்ரம் பூஜையாமி
" சூர்ப்பகர்ணாயநம: ... ஜாசீபத்ரம் பூஜையாமி
" மூஷிகவாஹனாயநம: ... கண்டலேபத்ரம் பூஜையாமி
ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம: ஏகவிம்சதிபத்ராணி பூஜையாமி,

என்று; மாசிப்பத்திரம், கரசராங்கனி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, துளசி, நாயுருவி, சிறுவழுதலை, வன்னி, மந்தாரை, மருவு, அலரி, கோங்கு, வெள்ளெருக்கு, மருதம், விஷ்ணுகிராந்தி, மாதுளை, சாதிமல்லி, தாழை, என்னு மிவ்விருபத்தொரு பத்திரங்களால், அருச்சித்து,

ஓம் விநாயகாயநம:
" விக்னராஜாயநம:
" கணநாதாயநம:
" கஜானனாயநம:
" மகோதராயநம:
" மகாதேவாயநம:
" ஸ்னித்காஞ்சனஸமத்யுதயேநம
" ஏகதமஷ்டோத்கடாயநம:
" தேவாயநம:
" கஜவக்தராயநம: (௧0)
" மகாபலாயநம:
" நாகயக்ஞோபவீதினேநம:
" நாகாபரணபூஷதாயநம:
" ஸர்வார்த்தஸம்பதாதாராயநம:
" கணாத்யக்ஷாயநம:
" வரப்ரதாயநம:
" ருத்ரஸ்யதன்யாயநம:
" உதாராயநம:
" நாயகாயநம:
" ப்ரமதாதியாயநம: (௨0)
" பத்மராகத்வதயேநம:
" ஸோமாயநம:
" ரக்தமால்யானுலேபனாயநம
" அபலாயநம:
" பாலரூபிணேநம:
" சுமுகாயநம:
" சுப்ரயாயநம:
" ப்ரபவேநம:
" புண்யாயநம:
" பூர்ணாயநம: (௩0)
" பூர்ணோதராயநம:
" புண்யகீர்த்தயேநம:
" புராதனாயநம:
" பர்த்ரேநம:
" சிவாயநம:
ஓம் சாந்தாயநம:

ஓம் ஜகந்நாதாயநம:
" சாஸ்வதாயநம:
" ஸ்வேதபரிதாநாயநம:
" த்ரயக்ஷாயநம: (௪0)
" கணகசுப்ரபாயநம:
" சிவஸாம்யாயநம:
" மகாதேஜஸேநம:
" மகாபலபராக்ரமாயநம:
" ஸர்வக்ஞாயநம:
" க்ஞானசம்பன்னாயநம:
" ஸர்வாபரணபூஷிதாயநம:
" பாபாபஹ்னோதனாயநம:
" சண்டவிக்ரமாயநம:
" அலக்ஷ்மீமலநாசனாயநம: (௫0)
" குமாராயநம:
" காரணாயநம:
" காரிதாயநம:
" ஸர்வசித்திப்ரதாயகாயநம:
" விபவேநம:
" ஈசாயநம:
" ஈசபுத்ராயநம:
" ஈஸ்பிதார்த்தப்ரதாபகாயநம:
" ஸ்ரீதாயநம:
" சுபாயநம: (௬0)
" ஏகதந்தாயநம:
" ஏகவீராயநம:
" அநேகதாயநம:
" ஏகஸ்மைநம:
" ஏகப்ரதேநம:
" விஸ்வப்ரதேநம:
" விஸ்வபூஜேநம:
" விஸ்வஸ்மைநம:
" விஸ்வக்ஞாயநம:
" ஸர்வபாதனாயநம: (௭0)
" பாக்யதாயநம:
ஓம் பவதாயநம:

ஓம் பாபிநேநம:
" போக்தாயநம:
" போகபாவினேயநம:
" கலயேநம:
" சர்யாயநம:
" கனீனேயநம:
" கர்த்ரேயநம:
" க்ரதவேநம: (௮0)
" க்ருதினேநம:
" ச்ருத்யவிதேயநம:
" அத்யுக்ராயநம:
" காந்ததர்சிநேநம:
" க்ருதாந்தகாயநம:
" ஸ்துத்யாயநம:
" ஸ்தோத்ரேநம:
" ஸ்தோதகாயநம:
" ஸ்தோத்ராயநம:
ஓம் த்ரயீமயர்யநம: (௯0)

ஓம் வேதாயநம:
" வேதாந்தக்ருதேநம:
" வேத்யாயநம:
" விதுஷாம்புத்திதாயநம:
" புதாயநம:
" ஓங்காராயாநம:
" ப்ரம்ஹவிதேநம:
" ப்ராமஹணேயநம:
" ப்ரம்ஹணேநம:
" ப்ரம்ஹபராயநம: (௧00)
" பராயநம:
" ஸர்வக்ஞாயநம:
" ஸக்த்தயேநம:
" ஸர்வலோகவேத்யாயநம:
" ஸர்வதாயநம:
" சுபகாயநம:
" அவ்யயாயநம:
ஓம் சித்திவிநாயகாயநம: (௧0௮)

என்று அஷ்டோத்தரசத திவ்யநாம பூஜைசெய்து,

---

தசாங்கம் குங்குளம் தூபமுத்தமம் கணநாயக க்ருஹாண ராஜேந்த்ர விக்ன ஹாரின் னமோஸ்துதே, ஸ்ரீ கணநாயகாயநம: தூபமாக்ராபயாமி ஸர்வக்ஞ சர்வலோகேச ஸர்வபூத ஹிதேரதா — க்ருஹாணமங்களம்—தீபம் ருத்ரப்ரிய நமோஸ்துதே, ஸ்ரீ சர்வக்ஞாயநம: தீபம் தர்சயாமி-நைவேத்யம் ஸட்ரசோபேலம்பலலட்டுசம்யுதம் - மோதகம் பரமான்யம்ச நமசதே விக்னநாசனே ஸ்ரீ விக்னநாசனேயநம: நைவேத்யம் ஸமர்ப்பயாமி, தாம்பூலமுத்தமஞ் தேவக்ருஹாண சுரபூஜித கர்ப்பூர சூரண சம்ரக்கம் மயாதத்தமி தம்விபோ ஸ்ரீ ருத்ரப்ரியாயநம: தாம்பூலம் ஸமர்ப்பயாமி, ஸதாந்தன விக்னேச புஷ்டலானி தனுச்ச - பூம்யாஸ்திதாணிபகவன், ஸ்வீகுருஷவவிநாயக ஸ்ரீ விக்னேசாயநம: ஸ்வர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி,

என்று தூபங்கொடுத்துத் தீபங்காட்டி நைவேத்யஞ்செய்து, தாம்பூலமும் ஸ்வர்ணபுட்பமுங்கொடுத்து,

விக்னராஜ நமஸ்துய்யம் பாபக்ஞானபரஞ்சன புனர்க்யம் ப்ரதாஸ்யாமி, க்ருஹாண சுரசத்தம ஸ்ரீ விக்னராஜாயநம: புனர்க்யம் ஸமர்ப்பயாமி, என்று அர்க்யம் கொடுத்து,

ஓம் கணாதிபாயநம: ... தூர்வாயுக்மம் ஸமர்ப்பயாமி
" உமாபுத்ராயநம: ... "
" அகநாசாயநம: ... "

| | | |
|---|---|---|
| ஓம் விநாயகாயநம: | ... | தூர்வாயுக்மம் ஸமர்ப்பயாமி |
| " ஈஸ்வர்புத்ராயநம: | ... | " |
| " விக்னராஜாயநம: | ... | " |
| " ஏகதந்தாயநம: | ... | " |
| " இபவக்திராயநம: | ... | " |
| " ஆகுவாகனாயநம: | ... | " |
| " குமாரகுருவேநம: | ... | " |
| " சுமுகாயநம: | ... | " |
| " சூராக்கிரகண்யாயநம: | ... | " |
| " ஸ்தூலகண்டாயநம: | ... | " |
| " குகாக்ரசாயநம: | ... | " |
| " லம்போதராயநம: | ... | " |
| " பின்னதந்தாயநம: | ... | " |
| " விசாலாக்ஷிணேநம: | ... | " |
| " காமரூபியேநம: | ... | " |
| " பாலசந்த்ராயநம: | ... | " |
| ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம: | | " |

ஏகவிம்சதி தூர்வாயுக்மம் ஸமர்ப்பயாமி,

என்று சந்தனத்திற்றோய்த்த, இரண்டிரண்டு அறுகினால் இந்த இருபத்தொரு திருநாமங்களையுஞ்சொல்லி அர்ச்சித்து,

நமஸ்தே தேவதேவேச நமஸ்தே கணநாயக நீராஞ்சனம் ப்ரயஸ்யாமி ப்ரஸன்னோபவ மேப்ரபோ, ஸ்ரீ தேவதேவாய்நம: நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி, என்று ஆலத்திசுத்தி,

ஆகுவாஹன தேவேச விஸ்வவ்யாபின்கஜானன ப்ரதக்ஷிணம் கரோமித்வாம் மமத்வம் ஸங்கீதம்குரு ஸ்ரீ ஆகுவாஹனாயநம: ப்ரதக்ஷிணம் ஸமர்ப்பயாமி,

என்று வலம்வந்து,

நமஸ்தே கஜவக்த்ராய நமஸ்தே கணநாயக, நமஸ்தே தேவதேவேச கௌரீபுத்ர நமோஸ்துதே, ஸ்ரீ கௌரிபுத்ராயநம; நமஸ்காரம் ஸமர்ப்பயாமி,

என்று தீர்க்கதண்டன்செய்து,

தேவதான வகோடீர மணிரஞ்சிதபாதக ஷமன்வதேவ தேவேச புத்ராக்னீர்த்திஞ் சதேஹிம, ஸ்ரீ கஜவக்த்ராயநம: ப்ரார்த்தனம் ஸமர்ப்பயாமி,

என்று பிரார்த்தித்து,

க்ருதவர்த்தி ஸ்ஹாஸ்த்ரேஸ்ச கர்ப்பூர சகலஸ்ததா நீராஞ்சனம் மயா தத்தம் க்ருஹாண வரதோபவ ஸ்ரீ கணபதிபாயநம: நீராஞ்சனம் ஸமர்ப்ப யாமி,

என்று ஆலத்திசுத்தி,

தேவதேவ கணாத்யட்ச சுராசுரவராச்சிதா அவிக்னம் குருமேதேவ ஸர்வகார்யேஸ்து ஸர்வதா விநாயக நமஸ்தேஸ்து ஸத்தம்மோது கரப்ய அவிக்னம் குருமேதேவ ஸர்வகார்யேஸ்து ஸர்வதா:

என்று க்ஷமாபந்தனஞ்செய்து,

ஏவங்குண விசேஷண வசிட்டாயாம் சுபதிதௌ ஸ்ரீ சித்தி விநாயக முததிஸ்ய ஸ்ரீ சித்தி விநாயக் ப்ரீர்த்யர்த்தம், ஸ்ரீ சித்தி விநாயக பூஜாஞ் சோபாயன தானங்கரிஷ்யே,

என்று சங்கற்பங்கூறி, சந்தன புஷ்பாக்ஷதைகளைக்கொண்டு, ப்ராம் மணபூஜைசெய்து,

கணேசா பரதிக்ருண்ஹாதி கணேசோவைத் தானிசம் கணேசஸ் தார கோபாப்யாம் கணேசாய நமோநமே:

என்று வாயனதானஞ்செய்து,

எல்லாப் பூசைகளையுங் குறைவர நடாத்தி, விதிப்படி நியாசஞ் செய்து, இயானுதிகளை முடித்து தருப்பண ஓமாதிகளையுங் கிரமப்படி நிறைவேற்றி,

கவரி குடை முதலிய சின்னங்களுடன் வாத்தியமொலிக்க நெய், பழம், வாசம், சர்க்கரை, பருப்பு, இவைகட் கலந்துள்ள பொங்கல், பொரிக்கறி, பண்டங்கள், எள், பயிறு, தேங்காய்கட்கலந்த உருண்டை, மோதகங்கள், சிற்றுண்டிகள், காய், கனி, நீர், பாயாசம், முதலான பலகார வகைகளை சுத்த பாத்திரங்களி லமைத்து, மந்திரபூர்வகமாக நிவேதனஞ் செய்து பஞ்ச தூபங்களைக்கொடுத்து, கணாநந்துவா! வென்னு மனு வைச்சொல்லி, மந்திரபுட்பஞ்சாத்தி சியசாத மந்திரத்தால் கர்ப்பூர நீராஞ் சனஞ்சுழற்றி, வலம்வந்து சோடச தானங்களையும் வழங்கி, கணேசமூர்த்தி யைத் தமது இதயகமலத்திலிருத்தி பொன்னாற்செய்த மூர்த்தியையுங் கும்பத்தையும் பலதிரவியங்களோடு புரோகிதருக்களித்து, பிருதவி மூர்த் தியைப் பலவித மங்கல வாத்தியத்தோடு ஜோபிதாலங்கார விமானத்தி லெழுந்தருள்ச்செய்து நதியிற் சலவாசமாகவைத்துத் தன தாரண்மனையைச் சேர்ந்து சுற்றத்துடன்விரதத்தைமுடித்து; உமாதேவியார்த்தன்னுடைய (சத்தியார்த்த மனோவாச்சல்ய நிஷ்கிரயப்படி சிவத்துடன் கலந்து உல காதியந்தமும்பணிந்து சர்வசுதந்தா மோட்சசுகத்தை சர்வான்மாக்களு

மனுபவிக்கும்படி கருணாம்பரியாக பினிது விளங்கித் திருமங்களாகர ஞானானந்தத் திருவிளையாடலை நிறைவேற்றிய அற்புதலாவண்யவிலாசம் பூர்த்தியாயிற்று.)

இத்திருவிளையாடலாகிய ஞானநாடகத்தில் அமைந்துள்ள சௌடபான முத்திரை சகசநிட்டை, சருவான்மாக்கள் பக்குவப்படும், ஆசமனமுதலிய தெய்வம், பக்தி, தந்திரம், விரதம், உபாசனாமூர்த்தம், இருவினை மலபரிபாகங்களொடுங்குநிலை, பரார்த்தலிங்கம், மானுடலிங்கம், தெய்வலிங்கம், காணலிங்கம், சுயம்புலிங்கம், அதாவது பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், ஆகிய பஞ்சலிங்காதாரனை மனோலயப்படும் ஆன்மசோதனை, (உள்ளபடி தன்னை விசாரித்த முமூட்சுகளி னபிப்பிராயத்தின் முடிவாகிய, அறிவாதீத, திருக்குதிரிசய, நிரதிசயானந்த சாட்சிமாத்திரையாக வுழைத்தவளவு படித்தநிலை, பிடித்தகதி, முடித்த தியானவிரதம், சம்பூரணமான யிடத்திற் கலந்து சர்வமய பிரபுவாக விளங்கும் பிரணவமூர்த்தியினுடைய ஞானசொரூபமாகிய ஓம்! என்னும் முத்தியின் வியாபகத்தினுண்மைச் சாதனமாம் பெருமான்மிய விளக்கமென வேதாகம குருசுவாநுபவத்தினரா லுணர்த்தப்படும்.)

இவைகளி னந்தரங்க தத்வார்த்த சொரூப இலக்கண லட்சணார்த்தத்தைப் பக்குவன், உண்மை ஆசாரியினிடமாகத்தன்னை உள்ளவிதமாகத் தத்தஞ்செய்துக் கேட்டுத்தெளிந்து அவ்வண்ணநடந்து நிலைவழாதுழைத்து, இரண்டற்றபதவியை யடையக்கடவன். இவைகள் தம்தம் புண்ணியவசத்தின்படி வாய்க்குமெனப் பெரியோர் கூறுநிற்பர்.

---

## கர்த்தமன் பூசித்தது.

—(*)—

கர்த்தமனென்னு மரசன் தன்னிடத்திற்குவந்த பிருகு முனிவரை, வணங்கி வுபசரித்தானபின் தான் செல்வபோக முதலானவைகளைப் பெற்றுள்ள காரணத்தைப்பற்றி வினவ? அதற்கப்பிருகுமுனிவர்! பூர்வ ஜன்மத்தில் வைசியகுலத்திற் பிறந்து, சொற்ப பாக்கியவந்தனாக விருந்தமையினால், சுற்றத்தாருன்னைத் தூஷித்து வெறுக்க, அவைகளைத் தாங்காது மனத்தாங்கலுடன் வறுமையிற் பிணைப்பட்டுத் துக்கிப்பதினும், உயிரை யொழிப்பதே நலமெனக் காட்டிற்சென்றவிடத்தில், சிவபாராயண வேதாத்தியானக் கூட்டத்துடன் விளங்கிய சௌபரி முனிவரைச் சந்தித்து வணங்கி யுனது மனக்குறைகளியாவையுங் கூறினதற்கிதங்கி கணேசமந்திரத்தை யுபதேசித்து, விநாயக சதுர்த்தி தினத்தில்; அவ்விரதத்தைக்

கூடவிருந்து விதியுடன் முடிப்பித்த விரதமகிமையினால், அகண்டைசுவரியம்பெற்று வாழ்ந்திருந்து இச்சனனத்திலும், அச்சேஷபலனை யனுபவிக்கின்றனையாதலாலவ் விநாயக சதுர்த்தி விரதத்தை, யனுஷ்டித்துவரக்கடவை யென்றுகூறி தமதிருப்பிடஞ் சென்றனர். பிறகவ்வரசன் வருடந்தோறு மவ்விரதத்தை யனுஷ்டித்து; அந்தியகாலத்தி லவரனுக்ரகத்தினாற் பேரின்பமுத்தி யடைந்தனன்.

---

"இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு" "எரிதிரைக்கட ணிகர்த்த செல்வமிக வல்லலென்றொருவர் பின்செலா தில்லை" எனவும் "இல்லானை இல்லாளும் வேண்டா ளீன்றெடுத்தத் தாய்வேண்டாள் செல்லா தவன்வாய்ச்சொல்" "செல்வமான பொருட் சேர்க்கையா மளவிற் சேர்ந்திடாதவர்களில்லை" எனவும் பலவிதார்த்த வாக்கியங்கள் அனுபவ சாட்சியமாதலானும், அவற்றை நீக்கி சோடசபாக்கியங்களைத் தருவது விரதத்தின் பலனென ப்ரத்தியட்சமாகலானும், எல்லாவித சுகபோக யோக முத்தியைக் கொடுக்கக்கூடியது விரதமேயெனப் பெரியோர்களாற் கணிக்கப்பட்டது.

ஆதலாற்றான் விவேகிளான்வர்கள் (காப்பது விரதம்) விரதத்தை முன்னமே கைவிடாதுக் காப்பாற்றினவனை; அவ்விரதமும் அவ்விரதத்தை யேற்றுக்கொண்டக் கடவுளே காப்பதாகும், காக்கும் எனுந் திடச்சித்தத்துடன் எவ்வகையினும் விடாது ஆச்ரித்து அதன்பலனை யடைந்தார்களென்பது முச்காலு முண்மைப் பொருளாக நிலைப்பெற்றுள்ளது.

ஏதோ பூர்வ புண்ணிய வசத்தினாற் செல்வங் கிடைக்கப்பெற்றவன் மாதா, பிதா, குரு, தெய்வம், பெரியோர், சுற்றம், பக்தி, விரதம், தானம் தவம், தருமம், இவை முதலாய சத்கருமங்களி லீடுபடாது, கண்டதே காட்சி கொண்டதே கோலம், என, உன்மத்தனாய் வாளாய்த் திரிந்துழன்றுத் தன்வரையினுஞ் சுகபோகியாய் நிற்பவன், தனக்குமுன்னரே தோன்றியுள்ள (அங்கவீனம், வறுமை, பிணி, செல்வமிருந்துந் தானனுபவியாது பாபகிருத்திய சண்டாளவகையிற் செலவழித்து அதனாற் றீராப்பழியை யேற்றுக் கொள்ளுதலென்னும், அனந்த வினைகளுக் கீடுபட்டிழிவுறன் முதலிய ) சென்மங்களாற் றெளிந்து யெடுத்தயிப் பிறவிக்கேற்றப் பலனைத்தருவது மேற்கூறியுள்ள தன்மார்த்தங்களே சிறந்ததெனக் கடைபிடித்தொழுகுவது புண்ணியவசமேயாம். இவற்றை யிகழ்ந்துரைப்பது கன்மபாவத்தின் சுபாவமேயாமென சுருதிகளின் முடிவுரை.

---

## நளன் பூசித்தது.

நிடத தேசத்திலுள்ள விந்தமெனு நகரத்தில் பத்மாஸ்தனென்ற வமைச்சனோடு, அகண்ட மண்டலாதிபதியாய்ச் செங்கோற்செலுத்திய நளனென்னுமரசன், தமயந்தி யெனும், அரசியை மணந்து வாழ்ந்திருக்கின்ற நாளில், அவண்வந்த கௌதம முனிவரை வணங்கி கிர்தார்த்தனாகத் தகுந்தவோர் விரதத்தைத் திருவாய் மலர்ந்தருளும்படி பிரார்த்தித்ததன்மேல், முற்சனனத்தில் நீ! கௌடதேசத்திற் கரசனாய் சதுரங்க சேனைகளுடன் சத்துருக்களை ஜெயிக்க வனத்திற்காய்ச் சென்றப்போது அங்ஙனங்கண்ட கௌசிக முனிவரா லுபதேசிக்கப்பெற்ற, விநாயக சதுர்த்தி விரதத்தை, அவர் சமுகத்திற்றனே யனுட்டித்து சகல திக்கு விஜயமும் சம்பத்தும்பெற்று வாழ்ந்திருந்து அவ்விரதப் புண்ணிய விசேடத்தினால், இச்சனனத்திலு மரசனாகப்பிறந்து எல்லா சுகபோகத்தையும் அனுபவித்து வருகின்றனையாதலான் அவ்விநாயக சதுர்த்திவிரதமே கிருதார்த்தமானதாகும். அதனையே அனுட்டித்துவரக் கடவையென் றம் முனிவராக்கியாபித்தவாறே வருடந்தோறு மவ்விரதத்தை சக்கரவர்த்தியாத நளனனுட்டித்துவந்து காலாந்தரத்தில் பேரின்ப சுகத்தையடைந்தனன்.

சுகாசுக மிவையிரண்டு மான்மாக்களுடைய விரதானுட்டான மந்திர தாரண வைக்கிய மனோதிட பக்தி வைராக்கிய நிர்ச்சிந்தையினாலேயே, வாய்க்குமெனத் தெள்ளென விளங்குமென வேதபாஷிய வுபாயத்தீர்மானம்.

---

இயற்கை செயலென்றும், சேர்க்கைசெயலென்றும், பெரியோர்களாகிய, அனுபவிகளா லெடுத்தாளப்பட்டுவரும் வாக்கியமானதை யதார்த்தவடிவமாக, வாராய்ந்துணருங்காலம், குரு, உண்மை, உழைப்பு, எதுவரையினு மேற்படவில்லையோ அதுவரையினும் ( தேத்தாங்கொட்டையின்றி சலத்தினழுக்கு வெவ்விதம் வேருக்கப்படமாட்டாதோ) அதைப்போல உள்ளவுள்ளவைக் தண்டுப்பிடிக்க முடியாமையினாலும். ஒவ்வொன்றும் கன்மதன்மப்படி (புலிபிடித்துண்ணவருவதை ஆடு அறியாது அகப்பட்டிறத்தலையொப்ப) நரை, திரை, வினை, மூப்பு, சாக்காடு, இவைகளுடன் ஆணவம், காமியம், மாய்கை, யென்னும் திரைமூடி இச்சைமலிந்து மனோசஞ்சலக்கடலில், உலகவ்யாபார சரக்குகளாகிய தத்துவப் பொருள்களை மாயக்காரியாகும் அஞ்ஞானப் பெண்ணுடன்கலந்து மூன்

சனனத்தில்விட்டதையே யெடுத்துள்ள சனனத்திலும் அக்கன்ம ஆசாரியை சிநேக பந்துவாகத் தொட்டுக்கொண்டு மலக்கன்மறைக்க அம்மலமாகியப் பாசமே பசுவாகிய ஆன்மாவைக்கலந்தமைப்போல மயக்குவித்து பதியாகியதன்னை(அஃதாவது இரண்டற்றசொச்சொரூபமாகியசிவத்தை) அறிந்ததனுடன் கூடி (கூடிப்பிரியேல், ஔவை, (கூடுதலுடன் பிரிதலற்று, தாயுமான சுவாமியேனும், சித்தாந்த சிவபோத குருவின் வாக்கியம்) எவ்வவசரத்தும் நீங்காதிருக்கும் அருணிலை வாய்க்கச் செய்யாது முற்றுங்கெடுத்தலே தொழிலாகிய யெமகாதக மரணபாசத்திற் காட்டிக்கொடுத்து; சனனத்தை வாளாய்ச்செய்வதனாலும், அப்பெருங்காட்டை சத்கரும குருவுபதேச விரதமுதலாய நற்பேறுகளாலன்றி யெத்தன்மையினுஞ் சிறிது நீக்காவாம்.

இதனால் சனியென்னுங் கன்மம்பீடிக்க தமயந்தியெனுமங்கையுடன் (துணைவி – சதாத்தன்னுடன் எல்லா சுகாசுகத்தையுமனுபவிக்குஞ் சாயப்பெண்) வினைத்துணைவி – காமப்பெண், இச்சை, யெதிர்ப்பட்ட வங்கோரமே துன்பவசத்திலாட்டுபடுத்திக்கெடுக்கு மாயரூப மணப்பெண்.)

முனிவருத்தரவின்படி நடத்திவந்த விரதத்தால் கன்மச் சனியனை வென்று சன்மமற்று முத்திநாட்டிற்கரசனாக விளங்கினான்.

நளன் சரித்திரங் கூறுகின்ற விபரீத வரலாற்றின்படி:—

"மண்டலத் தோர்கட் செய்த பாவம் மன்னவரைச் சேரும்
திண்டிறன் மன்னர் செய்தத் தீங்கு மந்திரியைச் சேரும்
தொண்டர்கட் செய்த தோஷந் தொடர்ந்துதன் குருவைச் சேரும்
கண்டனன் மொழியாள் செய்த கன்மமுங் கணவர்க் காமே"

எனும் வெளிப்படையின்படி முன்வலி புலியாகிப் பொசித்தது என்று அத்தர்முக விசாரணையில்லாதார்க் கருதுவர்.

இங்ஙன நிகழுவதற்கானவலி, கன்மத்திற்குண்டெனப் புண்ணியவசத்தாற் றெளிந்தவர்கள் சாத்திரவாராய்ச்சியினால் பாபச்செயலை, நாளுக்குநாள் பக்குவமாகக் கொஞ்சங் கொஞ்சமாக (பார்த்தும் பாராமல்) அதாவது தன்கண்முன்னொருபொருள் தோன்றப்படுவதை, அகக்கண்ணாகிய, அறிவாகுஞ் சிவமானதைச் சாராது நிற்றல்போலும், (உண்டும் உண்ணாமல்) தேகத்தைப் போஷிப்பதற்காக விரும்பினதொன்றுளதென வெண்ணாது கிடைத்தவற்றைப் பொசித்தல்போலும், குருதரிசனம், ஆத்மஞான சிவதரிசனம். வாய்க்கும்படி அபரோக்ஷ சிந்தனையினால், பக்குவப்பட்டு சதாநிலைபெறும் நிரதிசயானந்த புண்ணியதேகத்தையடைவர்.

---

## இந்துமதியும், சந்திராங்கதனும் பூசித்தது.

---

சகல வளங்களுங் குலவாநின்ற மாளவ தேசத்தைச்சார்ந்த கன்ன நக
ரத்தில் ஏமகாந்தராஜன் புத்திரனான சந்திராங்கதனென்னுமரசன் இந்து
மதியென்னு மரசியோடு, சகலபோக வைபவத்துடன் வாழ்ந்திருந்த கா
லத்தில், மந்திரிகள் வேண்டுகோட்படி அவர்களுடன் காட்டுக்குச்சென்று
வேட்டையாடி மீள்கையில் அவனெதிர்த்த இராக்கதர்களைத் துண்டித்
ததைக் கேள்வியுற்ற, வோரரக்கிவனெதிர்த்துத் தனது காத்தையவள்
பற்றும்படி நெருங்கின தன்மேல் வலியிழந்தவனா யடுத்த மடுவிற் பாய்ந்த
வளவில் அங்கு நீராடவந்திருந்த நாகலோக ஸ்திரீகள் அவ்வழகினைக் கண்
டித் தங்களிருப்பிடத்திற் கொண்டுபோய்த் திவ்யாமுத முதலாயூட்டி அள
வற்ற வுபசாரங்களுடன் பாதுகாத்து, தங்களது விருப்பத்திற்கிணங்கு
மாறுவேண்ட அவ்வரசன் தூர்த்தனுயிராமல் ஏகபத்னி விரதனாதலான்
அம்மாதர்கள் பிரார்த்தித்தவாறு, ஓர்தினமேனும் அவர்கட்கிணங்காமல்
மறுத்தும் அவர்கள் தமகள் மனோபீஷ்ட நிறைவேறும்படியான இனிமை
களைப் புகட்டி உபசாரமாகவே நிறுத்தப்பட்டிருக்கையில்.

இந்துமதியென்னும், அவ்வரசன் மனைவி வேட்டைக்குடன்சென்ற
பரிசனர்களால், தனது நாயகனிறந்துவிட்டதாய்க் கேள்வியுற்று, மிகுந்த
துயரப்புணரியில் மூழ்கி மாங்கல்ய விசர்ச்சனஞ் செய்யத்தக்க கருமாதி
களையுஞ் செய்துமுடித்து பன்னிரண்டு வருடமாய் மிகவுந் துக்கித்திருக்
கையில், அவண்வந்த நாரத முனிவரைப் பணிந்துத் தன்குறையைச்
சொல்ல, அதுகேட்டம்முனிவ ரனுக்கிரஹித்த கணபதி மஹாமந்திரத்தை
முறையோடு சதுர்த்தி தினத்திலுபாசித்து வருகையில், கணேசமூர்த்திக்
கிருபையுண்டாக அக்கிருபையினால் நாகலோக ஸ்திரீகளுக்கு மனதிரங்கி
அவ்வரசனைக் குதிரைமீதேற்றி; ஆபரணமுதலிய அளவற்ற திரவியங்க
ளுடன் தாங்கட்சந்தித்த மடுக்கரையிற் கொணர்ந்து விட்டுவிட, அவ்வர
சன் தன்னகரடைந்து; யாவராலுங் கொண்டாடும்படி அரசையேற்று,
தன்னைப் பிரிந்தமையினால் நடந்தேறிய காரியங்களுக்கு பதிலாக, ஒருங்கு
படும்படியான ஆசார சடங்குகளைச் சரிவரநடத்தி மனைவியுடன் கலந்தி
ருக்கையில், அவன் நாரதமுனிவரால் கிடைத்த சதுர்த்தி விரதத்தால
டைந்த அனுகூலமுணர்த்த மகிழ்ந்து அதுமுதலவனுமதையிடைவிடாமல்
அனுட்டித்திருந்து அந்தத்தில் அத்தம்பதிகள் பேரின்பவீடடைந்தனர்.

(முனிவர் தரிசனம், கணபதி மந்திரம், சதுர்த்தி விரதம், இம்மூன்
றும்,) இறந்ததாக வெண்ணி துக்கங்கொண்டாடி மாங்கல்ய மகன்றும்,

மறுக, தனது பத்தாவைக்கண்டு கலந்தமையினால், பெரியோர் தரிசனம், மந்திரம், விரதம், இவைகளினாலடையும்பலன் சிறந்ததென புண்ணியச் சிந்தையுடையோர் சதா மனோலயப்படுத்தி யிறுதியிலதன்பயனை யடைவார்களென்பது முடிவு. அதனுடன் பதிவிரதா தன்மமும் இனிது விளங்கும்.

---

## சண்முகர் பூசித்தது.

—(*)—

தேவேந்திரனாலாளப்பட்டிருந்த ஆயிரத்தெட்டண்டங்களையுங் கவர்ந்து, தேவர்களுள் இந்திரன், பிர்மன், விஷ்ணு, நீங்கலாக மற்றைத் தேவர்களைச் சிறைப்படுத்திய தாருகாசுரனாதியரை யொழிக்கவெண்ணிய அம்மூவரும், மன்மதனால் யோக நிஷ்டையைத் தவிர்த்த பின்னர் மஹாதேவர், அம்மன்மதனைச் சாம்பராக்கி உமாதேவியாரின் விருப்பத்தின்படி அக்கினிதேவனால், சரஹணப்பொய்கையிற்கலந்த அனலாக்ஷவீரியத்தினாலுதித்து, அம்மையாரால் பாலூட்ட, கார்த்திகை முதலிய ஸ்திரீகளால், வளர்ந்தும், கைலையில் சண்முகத்துடன் திருவிளையாடற் செய்திராகின்ற சுப்ரமண்யப் பெருமானை, அவுணராதியரை வெல்லும்படி அமரர் வேண்டுகோளுக்கிணங்கினவராகி, கிருஷ்ணாநதி வட பாரிசத்திலோர் வனத்தில், விநாயகக் கடவுளை, மனதிற்றியானித்து சடாக்ஷர மந்திரத்தை, முறையுடனுபாசித்து பலவரங்களோடவர் மயில்வாஹனத்தையுந் தரப்பெற்று, அவ்விடம் மயூரேசமெனுந்தலமாக ஆலயமமைத்து, அதனுள் இலக்க விநாயகரெனவோர் மூர்த்தப்பிரதிஷ்டைசெய் தாராதித்து மீண்டு கைலையையடைந்து சிவபெருமானிடத்தும் வேல்முதலிய பலவாயுதமும்பெற் றவ்வசுராதியரோடெதிர்த்து அவர்களைச் சங்கரித்து வெற்றியடைந்தனர்.

---

பாபக்குணத்தை மாற்றும்படியான் குருவும் போதனையும், அறிவும் பக்தி விரதமும், ஏற்படாமற்போனாலெப்படிப் பயன்றரமாட்டாதோ அதைப்போல, அக்ரமச்செயலைத் தடுப்பாரில்லாமற்போகுங்கால், வினையென்னு முட்புதரானது விர்த்தியாகி விஷசெந்துக்களாகிய, பாபப்பூச்சிகளாலான்மாக்கணசுக்குண்டுப் போகும்வண்ணம், அகடிதனாகிய தாருகனால், தேவர்களிடுக்கத்தால் வாதையுற்றும், அதைத்தடுக்க சண்முகக் கடவுள், மூலாதாரப் பிரணவமூர்த்தியை வழிபட்டு, நசிக்கச்செய்து தம்மையடைந்த தேவர்களுக்கநுக்ரஹஞ் செய்தாரென்பது புராண சகிதம்.

இவற்றுள் தாருகன், பாபாத்மா, இப்பாபாத்மாவைப் புண்ணியாத்மாவைக்கொண்டு, விலகச்செய்யவேண்டியதானால், தவஞ்செய்ய வேண்டும், தவத்திற்குரியவர் மஹாதேவன், தவத்தைக்கெடுப்பவன் மன்மதன், மன்மதனுகிய காமத்தை, சாம்பராக்காது தவஞான தத்துவமாகிய, ஞானேந்திரியம் வசமாகாது. அவைக்கைக்கூடியயிடம் சண்முகானந்த அறுகாற்பீடம். (ஆறுமுகம்.) பன்னிரண்டு கலை (பன்னிரண்டு புயம்) வீரியம் ஜனனபௌதிக விதானம், இலிங்கதாரணம், உமாதேவி, சத்தியின் விலாடபுரம், மகமேரு, குண்டலிசத்தி, தேவர்கள், தொழும்புச் செய்பவர் அகாரபீடம், ஆயிரத்தெட்டண்டம், மயூரவிநோதம், மாய்கைக்கூற்று, வேல் சங்காரத்துவஜ ஆயுதவெற்றி. தவம், பக்தி, விரதம், யோகம், அனுட்டானம், மந்திரம், போகம், வெற்றி, இவைகண்முதல் மற்ற அணிமாலகிமா, முதலியவையும், கொடுக்கக்கூடியவனீ ஸ்ரீ விநாயகக் கட்வுளாதலினல், அவரையே தேவர்நண்முத லியாவரும், வழிபட வேண்டுமென, ஞானபராதீன பெத்தமுத்தர்களாலும், வேதங்களாலும், வரையப்பட்டது.

மற்றவை ஆசிரியர் முகத்தில் ஞானுர்த்த தத்துவங்களை விசாரித்துணர்தல்வேண்டும்,

---

## மன்மதன் பூசித்தது.

தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சற்றுங் கவனியாதுச்செய்த அபசாரத்தால் சாட்சாத்கார சிவபெருமானுடைய பார்வையினுற் சாம்பரான மன்மதனைப்பற்றித் தனது மனைவியாகிய இரதி தேவியானவள் மாங்கல்யபிச்சையருள வேண்டிநிற்க அதற்கிசைந்த பாசிவம், தனக்கு உருவமாகவும், மற்றவர்க்கருவமாகவும், கடைக்கணிக்க யெழுந்த மன்மதனும், பழைய வடிவத்துடன்றுதித்துகெஞ்ச அவ்வகை விநாயக மூர்த்தியாலடைகவென அவரது ஏகாக்ஷரமனுவை முறைமையுடனுபதேசிக்கப் பெற்றவண்ணம் சண்முகக் கடவுளாற் பூசித்த மயூரதலத்தையடைந்து ஆயிரம் வருடம்வரையினுந் தவம்புரிந்து ஐங்கரக்கடவுள் தரிசனையினுல், மஹாவிஷ்ணுவானவர் கண்ணனுக வவதரிக்குங்காலத்தில் நீ அவர்க்கு மகவாயுதித்து பழையத் திருமேனியுடையவனுக விளங்குவாயென்றுத் தெளிந்த அவ்விடத்தில் பளிங்கினுலாலயமமைத்து மகோற்கட விநாயகரென்றோர் மூர்த்ததீகை ஸ்தாபித்து இடைவிடாமல பக்தி பூர்வகனுய் பூஜித்து வருகையில் அக்கடவுட் பெருங்கருணையால் அந்த சன்மத்திற்

ருனே இடையினின்ற நெடுங்காலமளவு முன்போலவே சர்வ லோகங்களி னும் தனது பழைய நிஜவுருவுடன் தனதாக்கினையைச் செலுத்தி இரதி தேவியுடனினிது வாழ்ந்திருந்தனன்.

---

சாம்பரேன்னும் விபூதியாகிய திருநீற்று லள்வில்லாத மகிமைகளை யனுபவிகளாகிய உண்மையடியா ரன்புசெய்தனரெனும் வேதாகமத்தின் படி இரதி தேவியின் விருப்பத்திற் கிணங்கி சாம்பரான மன்மதனைப் பழைய நிலைமையையடைய கருணாநிதியாகிய சிவபெருமான் கடைக் கணித்தாரெனப் பெறப்பட்டன.

கொளுத்தப்பட்ட அத்தி யென்னும் எலும்பும் அங்கம்பூம்பாவை யென உயிர்ப்பெற்றெழுந்ததும், அர்வமுண்டப் பிள்ளையும், வணிகனும், முதலை விழுங்கியச் செல்வனும் பதிகத்தாலெழுந்ததும், சாம்பராந் திரு வெண்ணீற்றின் மகிமையெனு மேதாவியரின் உண்மைச்சித்தாந்தம்.

சாம்பரான சடமெழுந்ததற்கு யேற்படவேண்டிய மகிமையையும், அங்ஙனமின்றி வேகாதொழிந்தப் பல்லுக்கும், பாதத்திற்கும், ஏற்பட நியாயமில்லாத வீண்சம்பிரதாய மகிமையையும் விவேகிகளுணர்வ தின்றி யமையாதக் கடமையேயாம்.

---

## உருக்குமணி தேவியார் பூசித்தது.

—o—

விஷ்ணுமூர்த்தியாகியத் திருமால், கண்ணனாகவும், மஹாலட்சுமி, உருக்குமணி தேவியாகவும், அவதாரஞ்செய்த காலத்தில், மன்மதன் அழகுடையப் புத்திரனாகப் பிறந்து பிரத்தியுமனன் யெனப் பெயர்க் கொண்டு சகல சாத்திரப் பாண்டித்யனாயிருக்க இரதிதேவி தனித்திருப் பதை யறிந்த சம்பரனுமசுரன் தேவருலகிற்சென் றெடுத்துவருகையில் அவள் நழுவிக் கடலில் வீழ்தலும்,) அக்கடலிலேலோர் பெரிய மச்சமாண தவளை விழுங்கிவிட, பின்பவ்வசுரன் கடலிலிறங்கித் தன்னாலானமட்டுஞ் சோதித்துங் கிடையாதவனாகத் தன்பதியைச்சேர்ந்த சின்னாட்பின்னர், அவ்விரதிதேவியை விழுங்கியுள்ள மச்சமானது, வலையிலகப்பட, அதனை வலைஞர், அவ்வாசனுக்குக் கொடுத்தமாத்திரத்தி லவனம்மீனத்தைச் சேதிக்கும்போது அதன்வயிற்றிலோர் பெண்மகவிருக்கக்கண்டு, அதைத் தனக்கோர் குமாரீத்தியாகப் பாராட்டி வளர்த்து வருகின்றானென (பிரத் தியுமன்னனாகப் பிறந்துள்ள மன்மதன், நாரதமுனிவரால், சொல்லக் கேட்டு) அவ்வசுரனிடஞ் சென்று வெகுநாள் போர்புரிந்துக்கொண்டிருக்

குங்குமாரனாகிய, பிரத்தியுமன்னன் வரக்காணாமல் மனம்வருந்தி நிற்கும் உருக்குமணி தேவியாரிடம் வந்த நாரத முனிவரிடந் தன்குறையைத் தெரிவித்ததன்பேரி லம்முனிவரார் கொடுக்கப்பெற்ற கணேச மந்திரத்தை, விநாயக சதுர்த்தி தினத்தில் விர்தானுஷ்டையாய் விதியுடன் ஜெபித்துவந்த ஆருவது நாளில் அவ்விரதபலத்தால் தன் குமாரனாகிய பிரத்திய மன்னனென்னும் மன்மதன், அச்சம்பராசுரனைச் சங்கரித்து இரதிதேவியுடன் தனது தாய்தந்தையிடம் வந்துசேர்ந்தனன்.

---

புண்ணியமென்னுந் தவந்தானம், பக்தி, விருத்தியாக பாபச் சமுத்திரம்வற்றி, அதனுள் மறைந்துகிடக்கின்ற கன்மசென்மமாகிய, மீனை, அறிவென்னும் பூரணஞானப் பண்டிதன், சேதித்து, அதனுள் மலிந்து கிடக்காநின்ற அழுக்காருகியப் பாசபந்த மாயவேட காமப்பெண்ணை யழித்து அம்மாயையை வளர்த்துயிடங்கொடுத்த அஞ்ஞான கிருத்தியமுடைய அசுரனாகிய, (தெய்வகணம், மனுஷகணம், ராட்சதகணமாகிய,) இம்மூன்றின் கடையாகவிருந்து யாவற்றையுங்கெடுக்காநின்ற ராட்சதனை வென்று சுயம்பிரகாஸ தத்போதமாகிய, நெறிகுலையாது குண்டலி சத்தியோடு, சத்திசிவத்துடன் கலந்து என்றுமழியாதயிரண்டற்ற முமூட்சு நிலையை யடைவதென வாப்தர் கூறுவர்.

---

## பிரத்தியுமனன் பூசித்தது.

பிரத்தியுமனன் குமாரனான, அனிருத்தனது, காளைப்பருவத்தையும் பேரழகினையுங் கனவிற்கண்ட வாணாசுரன் குமாரியாகிய உஷையென்பவள் தனதுயிர்ப் பாங்கியாகிய, சித்திர்ரேகை யென்பவளைக்கொண்டு, அவன் நித்திரைசெய்யுஞ் சமயத்தில், மாயையாற்றருவித்து, தனது விருப்பத்திற்கிணங்க நாட்கழித்து சூலுண்டானதைத் தன் தந்தையாகிய அவ்வாணாசூரன்றெரிந்து அவ்வனிருத்தனை, யருஞ்சிறையில் வைத்திருக்கையில் மனந்தாங்காது யெங்குந்தேடியுங் குமாரனாகிய, அனிருத்தனைக் காணாது அளவற்ற துக்கத்திலாழ்ந்துள்ள பிரத்தியுமனைத் தன்தாயாகிய உருக்குமணி தேவி கண்டுதான் சம்பராசுரனோடு, யுத்தஞ்செய்யச்சென்று வராதப்போது யனுட்டித்த விநாயக சதுர்த்தியின் மகிமையைச் சொன்னபடி அப்பிரத்தியுமன்னுமவ்விரதத்தை விதிப்படி யனுட்டித்த விசேடத்தால் பிதாமகனான கிருஷ்ணமூர்த்தியினால், அவ்வாணாசுரனைவென்று அக்கன்னிகையுடன் அனிருத்தன் தன்னகரையடைந்து வாழ்ந்திருந்தனன்.

ஒவ்வொரு நன்மையும் அவரவர்ச் செய்துள்ள விரதானுட்டானத்தின் பலனென்பதாக அனுபவிகளுரைத்துள்ளதைநம்பி யவ்வழிக்குழைத்தவர்களு மதன்லாபத்தை யடைவார்களென்பதைஸ்திரப்படுத்தியதுடன் கன்மவசத்தினர்க் கைவிட்டுத் துன்பத்தை யடைவார்களென முடிவாக்கியது.

—(*)—

## ஆதிசேடன் பூசித்தது.

—*—

வெள்ளியங்கிரியெனும், ஸ்ரீ கைலாயத்திற் சாம்பவமூர்த்தி பார்வதி சஹிதராய் சிங்காசனத்தில் வீற்றிருக்க, அளவற்ற தேவர்கள், முனிவர்கள், பிரார்த்தித்து நமஸ்காரஞ் செய்துநிற்பதைக்கண்ட சேடன், இப்பெருமையுடைய சிவபெருமான் திருமுடியிலிருக்கின்றேமென்ற கர்வத்தைக் கர்த்தனறிந்துத் தண்ணென்றிழுத்து நிலத்தில்மோத, வோர்சிரமாயிரம்பிளவாகி உலகத்தைத் தாங்குகின்றவலியும், தவங்களாற்கிடைத்த மகத்வங்களுமிழந்துத் துன்புற்று, பழைய நிலைமையை யடைவதற்கேதுவான வுபாயமொன்றுந் தோன்றாதுத் திப்பிரமைக் கொண்டிருக்க, அவண்வந்த நாரத முனிவரா லநுக்கிரகிக்கப் பட்ட ஷடாக்ஷரமந்திரத்தை ஜெபித்து சதுர்த்தி விரதத்தை யனுட்டித்து வருகையில் விநாயகமூர்த்தி பிரசன்னமாகி சிவபெருமான் ஜடாபாரத்திலேந்துசிரங்களோடமர்ந்திருக்கவும், பிளந்தபிள வாயிரமும், ஆயிரஞ் சிரங்களாகி முன்போலவே பூமியைத் தாங்கியிருக்கவும், அதுபோதிருந்த வோர்சிரசுடன் தமக் குதரபந்தனமாக விருக்கவும், அனுக்ரகிக்க அவ்விதமே தனதோரம்சங்கொண்டு விநாயகக் கடவுளிடத்தமர்ந்து மற்ற அம்சங்களோடு, பிரவாள நகரத்தில் ஓராலயஞ்சமைத்து விநாயக மூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து பரிமள திரவியங்களா லபிஷேகித்து திவ்விய புட்பங்களா லர்ச்சனைசெய்து ஆராதித்துப்பெற்ற வரத்தினால், சிவபெருமான் திருமுடியில் முன்போல வசிக்கவும், உலகினைத் தாங்கவும் பெற்றகமகிழ்ந்திருந்தனன்.

---

தனக்கு மேற்பட்டா ரொருவரிலையெனு மமதையும், தானெனுமாணவநிறைந்த செருக்கும், வலிமையும் ஒருவராலடக்கப்பெறாமற்போனாலெங்ஙனம் நன்மை, அடக்கம், வாய்மை, உண்டாகமாட்டாதோ அதைப்போல, ( ஆயிரங்கதிர்களை யுடைத்தானதாயிருக்கினும்; அது சாட்சாத்கார சிவபெருமானின் (சூரியன், சந்திரன், அக்கினி,) இம்மூன்றிலொரு விழியாகவிருந்து சருவான்மாக்களுக்கு நன்மைப் பயில்வித்தலெனு முபசாந்த வழக்கைப்போல, ஏகேஸ்வரபத்தியத்தைக்கொண்டு விளங்காநின்ற

ஈச்சுரனை யளாவியிருக்கிறேமெனு மிழுக்குடையத் தன்மையைக் களைதல் (அதாவது உடலிற்கு சிரசும், பக்திக்கு சாந்தமும், தவத்திற்கு அடக்கமும், தியானத்திற்கு அன்பும், தானத்திற்கு தயையும், மௌனத்திற்கு பொறுமையும், பிரதானமாதல்போல,) பாவகன்மத்திற்கு அகங்காரமும், தலையாய் நிற்றலால், அத்தலையைப் பொடிபடுத்தினாலல்லாமல், அக்கன் மஞ்சிதையாதெனப் போந்தநிமித்த காரணத்தின்படி; சேடனெவ்வளவு மேலான யிடத்தை வகித்துக்கொண்டவ னென்கினும், மமதை முன்னின்றுக் கெடுத்தலால் அப்பதவிநீங்கி ஆயிரம் பிளவுகளடைந்தானென்பதும், பின்னரே அக்கர்வநீங்கித் தானெண்ணியது குற்றமெனத்தனது யிழிகுணத்தைத் தானேவுணர்ந்து விரதம்புரிந்து அக்கர்வத்தாலடைந்தத் துன்பநீங்கி பழைய நிலையையும், பெருமையையும், அடைந்தனனென்பது புராணசகிதம்.

பசுக்களாகிய ஆன்மாக்கள் ஏதோ பூர்வபுண்யவசத்தினால் (அரசு செல்வம். கல்வி, வண்மை, தானம், தவம், கீர்த்தி, வாழ்க்கை, சிறப்பு, பெருமை, மகிமை, நல்லினம், பக்தி, இன்னுமளப்பரிய நன்மைகள் ஓர்கால் வாய்த்தபோதினும், அவைகளை எவ்வகையிலே அனுபவித்தும் செலவழித்ததனுடைய லாபத்தையும், கீர்த்தியையும் உள்ளவிதமாய் அனுபவிக்கவேண்டியதோ அவ்வகையில் சத்தியம், சாந்தம், இதக்கம், புண்ணியசிந்தை, விரதானுசார வழிபாடு, நல்லோர்க்கீதல், செய்யத்தகுந்த திதுவென உணர்ந்துச்செய்யுந் தானம், முதலாயபல சத்கருமத்தி லீடுபட்டதன்பலனையடைவர். அங்ஙனம் புண்ணியமில்லாது கன்மத்திற்கெனப் பிறந்தார் பாபச்செயலிற் றலையாட்டி பெரியோராகிய. சிவஞானிகளை, பக்தர்களை, நல்லவர்களை, அவமதிப்பாயெண்ணி; தானத் தருணத்திலடையப்பெற்ற செல்வகர்வத்தால் (குரங்குத்தன்புட்டத்தை தானே மெச்சுதல்போலும், தன்மையிற்பட்ட புண்ணானது அழுகி நாற்றமெடுத்துத் தான் சாகின்றவரையினும், பிடித்தப்பிடியைவிடாது பிடித்தல்போலும்) பின்னால் இழிவு, சாபம், பழி, நிந்தை, இன்னும் பலவித பாபந்தன்னையடுத்துக்கெடுக்குங்கால் தான்நத்தியிருந்த, தனைநம்பிசுற்றியிருந்த; ஒன்றேனுமியாதாமொரு நன்மையுந்தாராது சொல்லாப்படி வொழியுநாள் வந்தனையுமெனநினைக்க நேரமில்லாதவனாய் (ஆடையைக் களைந்தால் ⁕ அம்மணம் ஓடையைத்துத்தா லுயரம் அல்லது உப்பரிக்கை, பாடையி லேறினான் பரமஞானியெனப் ‡ பாடையை உள்ளபடிக் கற்றுத்தெளிந்து வல்லவனாகி, அதிற்சொல்லியுள்ள நீதியாசார மோனதியான பக்திசிரவண விரதானுட்டான பொறுமை, சத்தியமிவைகளைச்சரிவர யதார்த்தநிலையினைக்

கடைசிவரையினுங் கைப்பற்றித் தன்னை நல்லவனுக்கி, யெவ்வுயிரு மெவ்வுருவு மீசன்மயந்தானே யென நிரபராதியாய் சர்வசுதந்தரமு மவனுடையதேயன்றி; நம்முடையது அனுபவித்ததெதுவோ! ஆண்டதெதுவோ! அதுவரையினுந்தானே அதினும், எத்தனைக் குறைவு நிறைந்துளதோவெனக் கண்டாராயும் விழியின்றி (குருடனை இராஜமுழி விழியென்றால் எங்ஙனங்கூடாதோ அதைப்போல) கண்டுத்தெளிய விவேகமின்றி பாபச் செயலுக்குத் தலைவனாய் (தான்சாக மருந்துண்பானைப்போன்றும், உடல் மெச்சப் பால்குடிக்கின் தேகம் வலுவுபெறும், அங்ஙனமருந்தாது ஊர் மெச்சப்பால்குடித்து, பெற்றத்தாய் பட்டணத்தில் பட்டினிகிடக்க காசியில் பிறர்மெச்ச ஆயிரமாயிரமாய் அன்னதானஞ்செய்ய காவடிச்சுமந்து † காசிக்குச் சென்றான் போல, செல்வான் போல, வீணாடம்பரம், தற்பெருமை, பிறர்மதித்துமெச்சிக் கொண்டாடிப்புகழ; இன்னும் பலவித ஆடங்கத்தினுக்கே தன்னை தத்தஞ்செய்து நாளையிழக்கின் அக்கன்ம சன்மத்தின் கர்வத் தலையுடைந்து தான்செய்த குற்றத்திற்காகத் துக்கித்து கடவுளிடத்தில் முறையிட்டு அவர் கருணையினால் இவன் பாவமன்னிக்கப் படுகிற வரையினும், இவன் புண்ணியாத்மாவென்றதற்குத் தடையென்னே? அவையேதோ தவத்தினாலொழியுமெனலால் அத்தகைய தவம், விரதம், தானம் செயல்வேண்டும். அவைகளும் யதார்த்த வழியாக யிருத்தல் வேண்டும் மாறுபடின், ஒருபயனுந்தரமாட்டாதென்பதுசத்திய வார்த்தையாம். உள்ளத்தைக்கழுவாது உடலைக்கழுவி மேலூத்தையைப் போக்குபவனும், தான்செய்த குற்றத்தையும் தன்னையும், அதாவது தனதுச் சிந்தைச்செயலையு மறிந்தடங்காது வியர்த்த ஆபாசக்கொள்கைக்கே யிரவு பகலொழியாது வுழைப்பவனும், புண்யவசத்தாற் செல்வங்கிடைக்கின் அதை நீதிவழியில் செலவழிக்காது பாபயிடுக்கணில் செலவழித் துதவி அதனுடைய சாபத்தைத்தலையேத்தி (நஞ்சுண்டவ னிருண்டக்கண்ணோடு மயங்கிக் கிடப்பானையொத்து மனமேட்டிமையினாற் றனைச்சிங்காரித்துத் திரியுஞ் சண்டாளனும்,) நாற்றவுடலிற்கு வாசனை யூட்டுதலைப்போலும், (தினைதினை சேகரித்த ஒருபிடி தினையோ அரிசியோ மற்றெப் பதார்த்தங்களோ, முடிவிற் பிடியென்றச் சொல்லானது மாறுபட்டு படி, மரக்கால், கரிசை, கலம், வென்றெப்படி யேற்படுவதற்குந் தடையிராதோ அதைப்போல, நன்மையேனுந் தீமையேனும், தன்மமேனுங் கன்மமேனும், பாபமேனும், புண்ணியமேனும், ஏதாவதொன்று, வந்தணுகுவதே சான்றாம்.

இவற்றை ஞானசாரியரிடம் (பிரபுவின்முன் தரித்திரனைப்போலத் தாழ்ந்து எவ்வளவுத் தெரிந்தப் போழ்தினுந் தெரியாதவனைப்போலத்

தன்னையடக்கி விசாரித்து, அதனுடையப் போதனைப்படியிலேறி முழூட்சுவாகக்கடவன். ஏனெனின் மமதையெனுஞ் செருக்கைப்போல, பாப விருட்சம் வேறின்மையா லவையொழிதல்வேண்டும் அங்ஙனமின்றேல் ஆதிசேடன் போலத் தலையுடைந்துத் துன்பமுற்றப்பின் விரதஞ்செய்தவைப்பலிதமாகி சிவபதசுதந்தரமடைதல்வேண்டுமெனல் முக்கிய பதார்த்தம். இது விவேகிகளபிப்பிராயமென மேதாவியர்க்கொள்ளுவர்.

ஆதிசேடன் சர்ப்பமெனலா லவற்றிற்குரியது விடமென்பார், அவ் விடமாகிய நஞ்சையருந்தினர் அல்லது அதன்பல்பட்டார்ப் பிழைத்தலரிதெனலனுபவமுடைத்தாதலின் அப்பாம்பைக் கொல்லுவதே குணமென்பார். (பாம்போடு பழகேல், அரவமாட்டேல்) என்பது ஔவை மொழி அவ்வரவத்தின் விடமுள்ளப்பற்களைப் பிடுங்கியப்பின் நஷ்டஞ் செய்யாதென அஞ்சக்கொண்டு பிழைப்பாருமுளர். ஆயினும், பாம்பெனின் படையுநடுங்குமென்பர் இவைகளையாதரித்தே () பாம்பைப்போன்ற விடமுடைய சொற்களைப் பொருந்தியக் குணமுடைத்தாரைக் காணுது, சிநேகியாது, நிற்றலே சிறந்ததெனப் பெரியோர் கூறுகிற்பர். புல்லைக் கொடுக்கப் பசித்த பசுவானதுப் பாலைத்தரும், அப்பாலைக் கடவுளபிஷேகத்திற்குத்தரின் முத்திலாபத்தைத்தரும் அல்லதுத் தானருந்தின் பசியையாற்றி வலிமையை யுண்டுபண்ணும். பாம்பிற்கீந்தால் கொல்லுகின்ற விடத்தைக்கொடுக்குமென்ப துண்மை யனுபவ சித்தாந்தம்.

பசுவருந்திய சலமுழுதும் பாலாகவே சொரியும், அதைப்போல, சற்குணர்க்குச்செய்த அற்பவுதவியும், பெரும்பயனையோர்காலருளுநேர்மையேற்படும். விடமென்பது கன்மபாவமாய் நிலைநிற்றலாலதை யகற்றினுலல்லாது நிரதிசயானந்தபோக சத்திய மனோலய திடசித்தசுத்த ஞானமுண்டாகமாட்டாது. ஆனால் § மஹேஸ்வரராகிய, பரமசிவன் ஆலகால விடத்தை யருந்தினுரெனின், உலகாதியந்த தேவர்முத லெல்லாசீவர்களுடைய கன்மபாவத்தைத் தான்பொசித்துக் காப்பாற்றினு ரென்பதே; திடச்சித்தநிலை. ஸ்ரீமத்-திருநாவுக்கரசு நாயனுர் முதலாய சைவாசாரியர் மற்றுமன்பர் விடங்குடித்தா ரென்பதும், பாவத்தை நசித்து மகிமை பெற்றுரென்பது உள்ளக்கிடை; ¶இராக்ஷதன் மனிதவேடத்துடன் கள்ளத்தனமாகிய, கபடக் குணத்தால் மாய ஆடெனவும், சிவவேடத்தைத் தாங்கிய வாதாவி வில்வளன், என்பவர்களின் மாயவேட வுருவமாகிய, நஞ்சை, அகத்தியர்ப்போசித்து, நசுங்கச்செய்தாரன்றே; உள்ளத்தில் நஞ்சுரும் பாப கிருத்தியத்தையும், வெளியில் மானிட தேகத்தையும் பொருந்தியுளாரென்பதை ஸ்திரப்படுத்துவான் வேண்டியும், பாலூட்டி

வளர்த்தார்க்கு நன்றிபாராட்டாதுத் தீமையைத்தருவதின்னதென்பதைப் பற்றியும், கூறுகின்றது.

நீதிவெண்பா.

() ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கனரவுக்கு விடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழுதும் விடமே—யாம். எனவும்;

கொம்புளதற் கைந்து குதிரைக்கு பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல—நெறி.

மஹாதேவன் விடமுண்டதைப்பற்றிக் கூறுகின்றது,

அருணகிரியந்தாதி.

§ வானவரு மிந்திரனு மாலயனுமே செத்துப்
போனவிடம் புன்முளைத்துப் போகாதோ—ஞானபிரா
னத்தனருணேச னன்புடனே நஞ்சையுமே
சித்தமுடன் கொள்ளாதிருந்தக்—கால்.

கள்ளவேடத்தைப்பற்றிக் கூறுகின்றது-நீதி வெண்பா,

¶ கர்ப்பூரம் போலக் கடலுப்பிருந்தாலுங்
கர்ப்பூரமாமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப்போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியராவாரோ—புகல்.

எனும் பலநூலாராய்ச்சியினுல் மற்றவைத்தெளிக.

(ஆதிசேடன்) பூர்வ வினைப்பாம்பு, சேடன் - சர்ப்பம். (சேடம்) வினைத்திரட்சி, வினைச்செயல், கன்மக்குழி, மலபந்தப் படுபள்ளம் கருக்குழி, (விசேடம்) பெருங்காரியம், திரண்டவிபரபத்தியம், நீடியச் செயல், நெடும்போக்கு, இன்னும் பல கருத்துக ணிரம்பியுளதென லாஸ்த்ரயம்.

---

சர்ப்பத்தை ஈச்சுரன் மாலையாகவணிந்துக்கொண்டாரெனவும், காள மெனும் பாம்புத் தன் மாணிக்கத்தை விளக்காகவமைத்து துதித்து முத் தியடைந்ததெனவும், சத்தியாகிய உமாதேவி, கணையாழியாக அரவத் தைப்பூண்டதாகவும், விஷ்ணுமூர்த்தி சயனபீடமாய்க் கொண்டாரென வும், புராணசகிதம். இவை கன்மதன்மைப்படி யேற்பட்டதெனத்தெளிக.

* அம்மணம் மானுபிமான முணராத நாளும், நிருவாணதிசையை மக்களாடையின்றியிருத்தலையும், இறந்தப்போழ்து யாவையுங் களைவதை யுணர்த்தும், பஞ்சஸ்கந்தத்தையும், தனைமறந்த முமுட்சுகளி னிலைமைக்கும், நிருவாணமெனப்படும். இவை நிற்க;

அம்மணம் – அந்தவாசனை; அதாவது பூர்வ சன்மத்தில்விட்டதை யெடுத்த சன்மத்தில் தொட்டுக்கொள்வது. (உருவின்றி வாசனைவந் தடைதலும், அடைந்தபினுருப்பெற்று மானுபிமானமெனு மழுக்காற்றிற் றள்ள, அவண்விழுந்து ஸ்மரணைதப்பிக் கிடப்பதொப்ப, வினையெனு மணத்தை முகர்ந்ததனால் பாசபந்தஞ்சூழ்ந்திறத்தலை யடைவதெனவும், அவ்வாசனையாகிய கன்மமியாது மனுகாது தோஷ சிந்தனை, அச்சம், வெகுளி, மனமேட்டிமை, முதலாய துர்க்கிருத்தியமற்று, தான் முன் பழகி, அனுபவித்தவைகளையு மறந்தவனாகி, சமாதிநிலையி னிற்றலே பரி நிருவாணமெனவும், முமுட்சுகள் கூறுகிற்பர்.

அமணமென்றலும், சமணமென்றலும், ஒருசார்புடைத்து; அப்படியே அமணர் என்றலும், சமணர் என்றலும் ஒருசார்பினராவார்.

இப்பெயருடைய மார்க்கம் சைவாகமத்தினின்று நீக்கப்பட்ட புறச் சமயமெனவும், புறச்சமயிகளெனவுந் தீர்ப்பாயினவெள, சிவசமயப் பற்றுக்கோடுடையரா லெண்பித்து, மார்க்கானுசார விதிகளில் வரையறுத்து நிச்சயிக்கப்பட்டது.

கடவுள், பக்தி, விரதம், ஆசாரம், முத்தியாகிய மோக்ஷானந்த மிவைகளை வேண்டாது ஒருபொருளின் குணத்தைமாத்திரம் பொருளாகக்கொண்டவரே சமணராவாரென்ப தன்னோர் நூலின்முடிவுரை.

எஞ்சியவை யன்னோர்சுருதியினுண்மைகளைப் பெரியோரிடத்துணர்க

‡ பாடை – பாஷையென மருவுமியலிணமாம், இவை எழுத்தாலும், சப்தத்தாலும், உருவடிவம். ஒலிவடிவமாயெழுந்தது. இவற்றைக் கல்வியெனுஞ் சிறத்த மகுடமுடைத்தானதாக யினிது சகலநலமுமெய்தி நின்றன; இவை நிறைந்தவைகளே வேத சுருதி ஸ்மிருதி புராணாகம மஹாவாக்கிய உபநிட்த தன்ம கன்ம நீதியாசார முதலிய முத்திவழி, சாதன சதுஷ்டய மனோபல சித்தசுத்த சீவமுத்த தத்துவானுபவ பக்தி முதலாயதும், மந்திரதந்திர சித்துவித்தை சோதிடாதிகளுடன் அதனதன் சொருப யிலக்கணங்களைத் தனது யிருப்பிடமாகக்கொண்டு விளங்கற் பாலனவாம்.

இங்ஙனமெடுத்தாண்ட பலகலையினும் பிரபல சுருதி அற்ப சுருதி யென இருவகையாகப் பெரியோரால் எடுத்தாளப்பட்டது.

அவ்வகை வரையறுத்துக் கூறியவையுள் (பிரபலசுருதி பக்திகாண்டத்தை யனுசரித்து அனுபவித்ததன் முடிவு பதமாகிய ஞானகாண்டத்தினால் சகலபற்றுகணீங்கி உள்ளபடி தனைவிசாரித்தொடுங்கி நிரதிசயானந்த சிவமுத்தனாய் என்றுமொருபடித்தாய் ஈஸ்வரனோடு கலந்து ஆனந்தப்பதமுற்றிருக்கு முண்மையை ஆசாரியர் புண்ணியவசப்படி கிடைத்துத் தெளியுமாறு புலப்படுத்தும்) அப்பசுருதி உலகநிலையிடத் தாழவைத்து பாசபந்த வேட்கையி லுழலும்படியாக பலதந்திர குயுக்தி மந்திரார்ப்பண சடரோகாதிபத்திய ஆபாசம்நிறைந்த யிடம்புகளில் மிகச்செய்து ஆசை வேடத்தராய் பலசோலிகளிற்படிந்து, தனதுச்செயலான் சிந்தையாலுண்டாகின்ற நலம்போல மின்னதென்றுணர்த்தாது மனதை பாகிய விஷயங்களிற்செலுத்தி கண்டதேகாட்சி கொண்டதேகோலமென, வாளாவொழிதலுக் கிருப்பிடமாகிய மாயவினோத நாடக விலாச சகசால வீணாடம்பரங்களிலீடுபடுத்தி வந்த சனனத்திற்கியாதாமொரு பலனையுந்தாராது மாயையில்மயங்கி சரசசல்லாப வுல்லாச வுல்லங்கத்தைக் கொடுத்துத்தனைமகிழச் செய்தலாகிய கன்மகாண்டத்தைத் தெரிவிக்கும்.

இக்காண்டங்களையுடைத்தான கல்வியானது எழுத்தாலாய சொரூபத்தையுடைத்து அச்சொரூபமே ஈஸ்வரமயமாய் அவ்வீஸ்வரமூர்த்தியை பக்திசெய்து ஞானகரண்டியாகி அப்பரமானந்த சந்தோஷமாகிய இரண்டற்ற சுகத்தையடைதலான்மாக்கட்குரிய முக்கியபயனென்பார். அவ்விறைவனே பரமுங்குருவும், இலிங்க வடிவமென்பதால் (குருலிங்க சங்கம பக்தி,) சைவாகமத்திற்கு முதன்மையாக விதித்துளது.

"விண்ணே விண்ணுதியாம் பூதமே நாதமே வேதமே வேதாந்தமே
மேதக்கக்கேள்வியேகேள்வியாம்பூமிக்குள்வித்தேயவ்வித்தின்முளையே
கண்ணே கருத்தே எண்ணே யெழுத்தே கதிக்கான மோனவடிவே"

எனச் சைவ பிரசாரண குருமூர்த்தியாகிய நந் தாயுமான சுவாமிகள் முதல் இன்னும் அளவிறந்த மஹான்களின்திருவாக்கெழுந்தபடி அக்கலையாகியக் கல்வியெனுமெழுத்தின்பெருமை நிர்ணயிக்கப்பட்டன.

கற்றும் பயனடையார்க் கல்வியைப் பற்றியே தெய்வப்புலமை ஸ்ரீமத் - திருவள்ளுவ நாயனாரென்னும், பெருந்தேவனார்த் தமது திருக்குறளில்,

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழா ரெனின். எனவும்,

கைலாயச் சித்தரான ஸ்ரீமத் - திருமூலநாயனார்த் திருமந்திரத்துள்

"நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பூற்றினற் பண்பின் பயன்கெடும்

கோலொன்று பற்றினற் கூடாப் பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின்றாரே" எனவும்;

குணங்குடியார்த் தமதரிய நூலில்,

"பாடையிலே துறவடைந்து பரமடைந்தகுணங்குடியார்ப் பகர்ந்தஞானம்
பாடையிலே துறவடைந்து பரமடைந்தா னந்தசுகம் படைத்திடாரைப்
பாடையிலே போட்டுமிடு காட்டிவிடப் படுமுனையும் பலருமந்தப்
பாடையிலே போட்டெடுக்க நாள்வருமென் றறிந்திலையேபாவிநெஞ்சே

எனவும்; "பாடையேறினு மேடு கைவிடேல்" என ஔவை பிராட்டியாரும், ஞானசாதனை, தெய்வ வழிபாடு, பக்தியடையாரின் சிறுமையும் படியேறினரின் படிப்பின் பெருமையும், வரையறுத்துக் கூறப்பட்டது.

இது பாடையெனும் பாஷையாகிய எழுத்தாமிறைவனின் சிறப்பை வியந்தது. இங்ஙனமின்றி;

முற்றுந்துறந்தப் பட்டினத்தடிகளாற் றமதரிய நூலில்,

" காம்பிணங் கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங் காசினுக்குந்
தாம்பிணங் கும்பல வாசையும் விட்டுத் தனித்துச் செத்தும்
போம்பிணந் தன்னைத் திரளாகக்கூடிப் புரண்டினிமேற்
சாம்பிணங் கத்துதையோ யென்செய்வேன் தில்லைச் சங்கரனே"

எனவும்;

ஸ்ரீமத் – சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப்பதிகத்தில்,

" ஓவுநாளுணர் வழியுநா ளுயிர்ப் போகுநாளுயர்ப் பாடைமேற்
காவுநாளென் றிவையலால் கருதேன் கிளர்ப்புனற் காவிரி
பாவுதண் புனல் வந்திழிப் பரஞ்சோதிப் பாண்டிக்கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே"

எனச் சொல்லியபடி; முன் செய்த கன்மதன்மத்தைப் பின்வந்து ஆண்டு மாண்டுப்போன பிணத்தை யிறந்தயிடத்தினின்று,

ஸ்ரீமத் – திருநாவுக்கரசு சுவாமிகள்

" கடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை வாழ்வது சொற்பிரமாணமே" என்று நிர்ணயித்தப்படி

சுடலைக்குத் தூக்கிச்செல்லுங் கொம்பு, (அவதிக்கொம்பு – அகத்திக் கொம்பு, அவத்தைக்கொம்பு, அவைகளைப் பிணிக்கு மேழுமுளை, பூட்டாணி, இவற்றுருக்கொண்ட தூக்கேணி–தூக்கயேணி, கடைசியாகத் தூங்குமேணி, யென்பனவற்றிற்கும் பாடையெனப் பெயரமைக்கப்பட்டுள்ளது. இவைப் பூர்வீக வாசாரத்தைப் பின்பற்றியனவாம்.

ஆடையில்லாதா னரைமனிதனென்றற்போல் பாடையேதிலான் பாதி மனிதனென்பார். மானாபிமானமறிந்து ஆடையைத் தேடுவான்போல ஞானஞ்ஞானந் தெரியக் கல்விமுதலான பாஷைகள் கற்று வல்லுனராதல் வேண்டுமென முடிவுரை.

† காசி - காசி, வாரணாசி, அவிமுக்தம், ஆனந்தவனம், அல்லது ஆனந்தபுரி, உருத்திரவாசம், மாமசானம், கௌரி, இவை முதலாயப் பல பெயர்களால், வழங்கப்பட்டுவரும் புண்ணிய க்ஷேத்திரம்.

பஞ்சநதி, மணிகர்ணிகை, காசிபிரயாகை, ஞானவாவி, கங்கை என்னுஞ் சிறந்த தீர்த்தங்களை யுடையது. வந்தனை வழிபாடுடைத்தானவர்களின் பாபத்தைப் போக்கி, முத்தியாகிய மோக்ஷத்தைத் தருகும் க்ஷேத்திரம், மூர்த்தம், தீர்த்தங்களை யுடையனவென யிப்பதியின் அதி மகிமைகளை, ஸ்கந்தபுராணத்தின் காசிகாண்டம் ஐந்து அத்தியாயங்களும், பதுமம், இலிங்கம், பிரமாண்டம், தீர்த்த சிந்தாமணி, திருத்தலி சேது, ஸ்மிருதி மோக்ஷநிர்ணயம், காசி மகத்துவம், என்னும்பல நூல்களும் விரிவாய்ப் புலப்படுத்தும்.

வருணை, அசியென்னு மிரண்டு நதிகளுக்கிடையாயிருத்தலால் வாரணாசி யென்றும், இச்சேத்திரத்தைவிட்டு நீங்கியிருக்க மனமில்லாதவராய் சிவபெருமான் ஒருலிங்கத்தில் மறைந்திருத்தலால் அவிமுக்த க்ஷேத்திரமென்றும், பிரம்மாதிகள் தபசுசெய்து இஷ்டசித்திகளை யடைந்ததும், அகத்தியர் முதலான ரிஷிகள் சச்சிதானந்தமுற்றதும், தேவர் மக்கள் சகல சுகபோகங்களை யடைந்ததும், இத்தீர்த்த மூர்த்த க்ஷேத்திரத்தின் மகிமையும் பலனுமென்பார்.

பிர்ம விஷ்ணுக்களுக்குண்டான அகம்பூர்வம் என்ற விவாதமானது மாறும்படி ஜோதி ரூபத்தைக்காட்டிய அனுதிமுத்த சிவரூபமானதால் (காசி) எனும் பரிநாமப்பெயரினிது பெறப்பட்டன.

மஹாதேவனுடைய ( அருண்மேனியையுடைய காசியெனுந் திருப்பெயரையுடைய இவ்விரண்டக்ஷரங்களை ஸ்மரிக்கின்றவன் சிவலோகத்தையும், இரண்டுதரஞ் சொல்பவன் பரிசுத்தத்தையும், மூன்றுதரஞ் செபிக்கிறவன் பரமயோகியி னிலமையையும் அடைகிறார்களெனவும் புராணாகம சுருதிகள் நிச்சயப்படுத்துகிறது.

திருவிளையாடற்புராணம்.

" மந்தரங் காசியாதி பதிகளில் வதிந்து நோற்கத்
தந்திடும் பயனிற் கோடி தழைத்திடு மதுரை தன்னி

லிந்தநல் விரத நோற்போர்க் கதிகம்யா தென்னிற்சோம
சுந்தரற் குரியவார மாதலாற் சோமவாரம்"

சூதசங்கிதை.

"பரசிவன் றனக்கொப் பாகிய தேவும் பகருமுத் தமமறையோனுக்
குரவினுப் பாகு நரனும்வாலன்னவுணவினுக் கொத்ததோருணவும்
வரமுறு கங்கைக் கொப்புறுநதியும் வளம்பொலி காசியையொத்த
புரவறப் புரியும் சற்குரவனுக்குப் பொருந்தற வொத்த தாரகனும்"

அருணசல புராணம்.

"தில்லையைக் காணக் காசியி லிறக்கச் சிறக்கு மாரூர்தனிற் பிறக்க
வெல்லையில் பெருமை யருணையை நினைக்க வெய்தலா முத்தி"

"காசியென்று மொருதலமிக் கயிலையினுஞ் சிறப்புளது கங்கை தீர்த்தம்
வீசுதிரைக்கொழுந்தோட்டிப்பரகதிக்கு வேரோட்டும்வியந்துமூழ்கின்
மாசினுடலதிலிறந்தான் மரமேனும் விலங்கேனும் மனிதரேனு
மீசனருளுபதேசஞ் செவிப்புகலா லிறைவனென விருக்கலாமே"

எனுஞ் சுருதியாஸ்பத ஸ்லோகாதி பத்தியப் பலனினிது பிரகாசமாகும்.

(காசி) எனுமிரண்டட்சரம் (அட்சரமென்பது அமலன் சொரூபம்) முதலெழுத்து (கா) சகல சீவாத்துமாக்களையுங் கருணைபாலித்துக் காக்கின்றவன், இரண்டாமெழுத்து (சி) சிவபெருமான் என்பதாம் - பாசமகல பரமாத்துமனை நினைப்பித்தல் (கா) எல்லாவற்றையு மவரவர்கள் கன்மதன்மப்படிக் கொடுத்து மீண்டுத்தனையுள்ளபடி வருந்துவார்க ளிடர்ப்போக்கி ரட்சிக்கவல்லவன் (சி) சிவமெனும் பூரணனந்த, சச்சிதானந்த, மூர்த்தமாகிய மஹேஸ்வரனும், அறிவாதிதனுமாமென்பதாம்.

இது தபசுநிலையொன்றித்து தனையாராய்ந்து நிலைப்பித்தல், பரிபக்குவங் கைக்கூடுதல்.

(கா) எல்லாஞ் சிவசொரூபமெனத்தெளிந்துத் தன்னையடைந்தாரை குருமூர்த்தியாக யெழுந்தருளி உபதேசஞ்செய்து பிறகியில் தனது மயமாகச்செய்து சதானுனந்த நிலையிலே நிற்கும்வண்ணம் காப்பாற்றுங் கர்த்தா. (சி) சிவபெருமானே யாவன் (ஞானச்சமாதியி னயிக்கியநிலை) யென முமூட்சுகளிலக்கணம்.

(சிவா சிவா சிவா) எனு மந்திரத்தை எண்ணளவாக வுருவேத்தி செபித்துவரின் அவை (வாசிவா வாசிவா வாசிவா) யெனப்போந்த மாத்திரையாக நிற்கும்; அவையின் கருத்தும் வாசியெனுந் தாரகத்தைக்

கைவரும்படி யனுக்ரஹித்து அடயோக நிலையுணிற்குஞ் சமாதியினது கைவரயேற்படும் அங்ஙனம் (காசிகாசிகாசிகா) எனு மாத்திரையானது அவ்வவசரமுடிவில் (கா – காத்துரட்சித தென்னுடல் பொருளாவி யிம் மூன்றினையுந் தத்தமாகக்கொண்டு தனது யதார்த்தவடிவினிலைபெறச் செய்வது.

(சி) சிவமாகவும் அகாரத்திலேற்பட்ட வுருவமாகவும், உகாரத்திலேற்பட்ட சீவனாகிய வுயிராகவும், மகாரத்திலேற்பட்ட மாய்கையாகிய பாசபந்தத்தில் மயக்கமுற்ற தேகமாகிய வுலகமாகவும், சிகாரத்திற் றெளிந்து முத்தியெனும் பரமானந்ததீத யிலக்கணமாகிய லட்சணங்களுக்கு முடியாய் நிற்றலால் (சி-கா) தேகத்தின் றலைமையுடையனவாதலான், சிகரம்-ஆகாயம், விண், முடி, வெட்டவெளி, மோனநிலை, உச்சியென்வும், அவைமூடிநின்ற மேகங்கங்கை முசலாயது சடைமுடியெனவும், அவணிலகுஞ் சூரியனக்னி சந்திரன், விழிகளெனவும், அண்டாண்ட கோளகையெலாந் தேகமெனவும் பெறப்படுமெனப் பெரியோர்களால், யூகிக்கப்படும். இன்னுமளவில்லா சுருதியாகமத்தினலிக் (காசி) யென்பதின் பெருமை யினிது புலப்படும்.

இதை யனுபவிகள் தேகமே, காசி, சிவாலயம், கடவுளிருப்பிடம், எனக்கொண்டு, சிகரமாகிய (சிரமுடி, சடை, குடுமி,) இவற்றையாதரித்து சமயப்பொறுப்பையுந் தெய்வ லட்சணத்தையும், நிலைப்படுத்தப்பட்டது.

கண்ணப்ப நாயனாராக வவதரித்த அர்ச்சுனன், (பக்திமலையேறி பாபாத்மாக்களாகிய கன்மப்பிராணிகளைத் துரத்திச்சென்ற பக்குவங் கைவருமிடத்திற் கண்டது.

(குடுமிதேவர்) அதாவது ஞானசாரியனுக யெழுந்தருளிய காளத்தீசன் (ஊனைநிறைந்த பாபக்கண்ணாகிய வெனிடம்பத்தை, சனனத்திற்கு வலியுடைத்தான வுதிரத்தை, வெளிப்படுத்த அதையகற்றி (அகக்கண்ணாகிய உள்விழியைக் கலந்தது அதாவது சிவத்துடன் கூடினது.

(குடுமியெனும் மகுடத்தின் உள்ளுரைக் கருத்து.)

கு – இருள், பாவம், நரகம், அஞ்ஞானம், டு – அடைதல், சேர்தல் புணர்தல், இச்சித்தல், மாயை, அகழி. மயக்கல், முதலானவைகளை மி – அகற்றுதல், அவை நிலைக்காதுச் செய்தல், இல்லாது, அடையாது, வருத்தாது நீக்கக்கூடியது. இவைப்போல, (சாமியென்பன) சா-நரை திரை, வினை, மூப்பு, சாக்காடாகிய மரணம், மி–இல்லாது செய்துக் கொள்ளக்கூடியவன். இவையாது மற்றவனெனப்போதரும்,

கடவுளாகிய, சிவத்தை, ஞானிகள் ஏகமாகவும், எல்லாமாகவும்,

சமயிகள், மும்மூர்த்திகளாகவும், திரிபுண்டரம், திரிசூலம், என்பன அடையாளமாக, முண்டிதமாக, ஒத்தையாக, மூன்றாக, சடையாக, சி-சிவத்தினிறுதியைக் காட்டுவது கா்னபரம்பரையாக யேற்பட்டதும், வேதத்தில் நிச்சயித்ததேயாம்.

சமயாசாரியராகிய ஸ்ரீமத் - மாணிக்கவாசக சுவாமிகட்கு, (சோளக் கலியாணஞ் செய்யப்பட்டதாக அதாவது குடுமி வைத்ததாக,

திருவாதவூர்ப் புராணம்.

காயமொடு னுயிர்முயலுங் கருமமெலாம் பரனருளாற்
றூயமனத் துணர்ந்துவினைத் தொகையெழுதி நாடோறு
மாய துயர் சுகமளிக்கும் யமன்கணக்கி லரும்பாவத்
தீயசிகை யில்லார்க்குச் சிறந்தசிகை வருவித்தார். எனவும்,

மொட்டையடித்தலை சடைமுதலானவைகளைப்பற்றி,

திருக்குறள்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்" எனவும்,

ஸ்ரீமத் - திருவள்ளுவ நாயனாரின் துதியிலவரைச் சிறப்பித்த செய்யுளில்,

"திருமுடி மிசையார் மயிர்முடி யழகுந் தீர்க்கபுண் டரநுத லழகும்
திகழ்நெடுந் தாடியி னழகும்" எனவும்,
"சிரந்தனி லணிந்த லிங்கத்தி னழகுஞ் சிறந்தமெய்ப் பூதியினழகுங்
கரந்தனி லமைத்த முத்திரை யழகுங் கதிதரு கண்டிகை யழகும்"

எனவுங் கூறுகின்றது.

சைவாகமத்தின்படி விரக்தர், துறவிகள், தெளிந்தோர், பெரியோர், உபவாசிகள், முண்டகம், சடைமுடி, குடுமி, இவற்றிலொன்றை லலாடமாகிய சிராபரண சிகாரமண்டலாதிபத்துள் அனலாசுரனாகிய தீ மேலிட்டு தாமரைத் தடாகமாகு மறிவாகிய சிவப்பிழம்பான தெவ்வனமவி யப்படுமோ; அவற்றால் மூலாதார சுழுமுனை காந்தாரந்தணியாது விகற்ப மேலிட் டழியுமோ வெனவும் (சடை) மாயை முதலான சருவத்தையு மூடிக்கொண்டு சிகாரகுண்டலியால் மௌனசத்திஞானபீடத்திற்றன்னை மறைத்தலைக் குறித்தலும் (கா்மபாகம், ஞானபாகமெனும் பிரிவினையால் இயமாதி முதலாய நெறிகளை நிலைப்பித்தலும், ஜீவகாருண்யமேலிட்டு அறந்தாங்கி முண்டித்தலுமாம்.

கணவனை யிழந்தப் பெண்களும், (தாய்தந்தை, உடன்பிறந்தார், மனைவி முதலானவர்களை யிழந்த ஆடவர்களும்,) யாவுக்குந் தலைவரா யிருந்து ரட்சித்து சுகாசுகமுதவினர், அன்னோருக்கும் நமக்குமிருந்த

சுதந்தர பந்தத்துவமின்று நீங்கினதென, இழந்துவிட்டோமெனு மடையாளமாக (தலையை மொட்டை யடித்தல், தத்துவமாகும் மீசையைச் சிரைத்தல்) முதலான துக்க இழவைக் குறித்தலும், (உலகமானது கட்டு முட்டு நாடகசாலையெனலால் அவற்றை விளக்க வேடதாரிகளாகி ஆடி நடிப்பாரில் பெண்ணாகத்தன்னைக் காட்டிக்கொள்ள; ஆண்மகன் சிரைத்துக்கொள்ளலும், தேசப்பிரிவினால், சமயப்பிரிவினால், (வெறும் பொய்யான ஆபாசக்கட்டுக் கதையாகுஞ் சாதிப்பிரிவினால், அனந்தவிதமாகத் தோன்றியுள்ளதி னபிப்பிராயமும், ஒன்றுக்கொன்றவசியகரமாயேற்படு மோரவசரமும், தக்கவிசாரணையி லிவைகளினுண்மையேற்படும்.

—(*)—

## விஷய சங்கற்ப நிலை.

உள்ளபடி யதார்த்தமாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்படும் புருஷார்த்த தன்மத்தின் லட்சணஞ் சரிவரமுடித் ததன்பயனை யடைவார்களே மானிடதன்மத்தைக் கைக்கொண்டவராவர்.

அங்ஙனமின்றி வீணாரவார டம்பாகார படாடோப மாயத்ந்திர குயுக்தியைச்சேர்ந்த வெளிவேடதாரிகளாய் கன்மந் தலைமேற் சுமப்ப (மருண்டவனுக்கு யிருண்டதெல்லாம்பேய்) என மலைவுற்று, தாய் தந்தை குரு, தெய்வம், சுற்றம், ஆதிலர், முதலாய அரும்பொருட்களை பூசித்து அவைகளாலடையும் லாபத்தைப் பெறாது; மேற்கூறியவைகட்கு மனத் தாங்கலுண்டுபண்ணி (மனைவியைத் தன்னுடன் குதிரைமே லேற்றிக் கொண்டு; தாய் தலைமேற் புல்சுமையை வைத்து (தன்னைக் கருவில் சுமந்ததற்குத் தண்டனையாய்) தாய் சுமந்துவரமகிழ்ந்தவன், தன்னைமதித்துப் புகழ்ந்தார் தனக்கு சாபம்வருவழியேனு மதைநினைக்க நேரமில்லாதவனாய் ஆடாதுமாடி மமகாரமெனு மலகைத்தலைக்கேறி மனம்பேதலித்து செருக்குற்று நடத்திய பாபகிருத்தியன் காசிதீர்த்தத்தில் முழுகினாலும் (காணுமாலயத்தைவிட்டு) காணாவாலயங்களுக்குச் சென்று பல தானதன் மஞ்செய்கினு மென்பயனடைவான். இதை மஹான்களாகியப் பெரியோராதரித்தே யாவரும் வழிபடும்படி.

அகப்பைசித்தர்.

"காசிக்குப் போனாலும் அகப்பேய் கர்மந் தொலையாதே"
"தீர்த்த மூழ்கினும் - அகப்பேய் - தீவினைத்தீராதே."

ஸ்ரீமத் – திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரம்.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொக்கு தண் குமரித்துறை யாடிலென்

ஓங்கு மாகட லோத நீராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே.

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடினாலு மரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே; எனவும்,

பட்டினத்தடிகள்.

"நீற்றைப் புனைந்தென்ன நீராழம் போயென்ன நீ மனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தா யில்லை" நீ பழகின, செய்த காரியத்தையுணர்ந்து, துக்கித்து, அதற்காக யிறைவனை கெஞ்சி மன்னிப் படைந்து அக்குற்றத்தினின்று நீங்கி நற்குண, நன்னடை, நற்செயலிவைகளாற் புதுமனிதனாய் (முந்தியிருந்த தீக்குணமொழித்துவிட வழியறிந்திலையே) நீ நீறணிந்து தீர்த்தத்தில் முழுகியும் பயனென்; எனவும்,

ஞானவெட்டி.

வாசியைக்கண்ட தாரையிலூதி மருவி மனம்
ரேசித்து பூரித்து கும்பித்து வாசினின்றிடவும்
பேசிடும்பேசா திடமுனக்கெய்தும் பிரபல்யங்காண்
காசிக்கும் ராமேச்சுரத்துக்கும் வாசி காண்கிலரே, எனவும்,
இன்னும் பலவித மகாந்தரங்களைக்கொண்டும் பெரியோர்களாற் கண்டித்துள்ள யதார்த்தநிலைமையை சரிவர வுணரவேண்டிய தவசியகரமாய் நிற்றலா லவைகளை யிங்ஙனமுணர்த்துதும்.

அங்ஙனம் விசாரிக்கின் எல்லாக் காரியக்காரணங்களுக்குந் துணையாகநிற்பது மனமும், அம்மனதை யவ்வழிக்காட்படுத்தவேண்டுவது பக்குவமும், சாத்திய வாராய்ச்சியும், அப்பக்குவத்தி னிலைபெறச்செய்வது குருவிசுவாசம், ஆசாரம், பக்தியும், இவையாவுக்குங் கருவியாகநிற்பது அன்பு ஒன்றேயாம். இவ்வன்பு யார்மாட்டில்லையோ அன்னோர்செய்யும் வழிபாடுகளியாதொரு பலனையுந் தாராதென்று முன்னோர்களால் ஸ்திரப்படுத்தப்பட்டது.

ஸ்ரீமத் - திருமூலநாயனர் திருமந்திரம்.

அன்பும் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்திலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தானே. எனும் போந்த ஆதார

வினாலும், "அரும்பொன்னே மணியேயெனன்பே" எனத் தாயுமான தயாபரமூர்த்த அருள்வாக்கினாலும், "அன்புடையா ரறமுடையா ரருளுடையா ரானவரோ டமர்ந்திட்டானே" என, சிவப்ரகாசமெய்ஞ்ஞான விளக்கத்தாலும், இன்னு மளவிடற்கரிய சுருதி ஸ்மிருதிகளினாலும், ஏற்பட்டதின்படி, அன்புடையார்கட்செய்யுஞ் சர்வமும் பயன்றரக்கூடியதென நிர்ணயிக்கப்பட்டது.

ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகளின் அரிய வாக்கின்படி

அரும்பொன், அருமையான, கிடைத்தற்கரியகனகம், பசும்பொன், தங்கம், சாமானியமாக அனுபவிக்கக்கூடாத அபராஞ்சிதம், மாற்றிலுயர அவை ஆயிரத்தெட்டென்பார். இக்கனகமே ஈச்சுரதேகம், (சுந்தரமூர்த்தி நாயனாரால், பொன்னார் மேனியனெனக் கொண்டாடப்பெற்றபடி) அண்டம் ஆயிரத்தெட் டென்பதைப்போல் (காசியில் சிவலிங்கம் ஆயிரத்தெட்டென யினிது விளங்கி அர்ச்சிக்கப்பட்டுள்ளது.

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேனெனப் பொன்னைமாதரையிற் கூறிய சிவப்பிரசாரண குருமூர்த்தமாகிய, தாயுமான சுவாமிகள் சாட்சாத்கார சிவபெருமானை, வழங்கும்பொன்னிலொன்றாக அழியுந்திறத்தோடொன்றித்துச் சொல்லினாரென்பது பாபத்தைப் பின்னுஞ்சம்பாதித்து அருளையிழப்பவன் கருத்தைப் போன்றதென்பது உழைத்த அனுபவிகளால் முற்றுப்பெற்றது. (ஆயிரத்தெட்டு சிவலிங்கத்திடத்தும் மணியென்ற வோசையாகிய திருவுளச் சப்தம் கேட்கப்படும்.

சிவலிங்கமூர்த்தத்தை ஆராதிக்கவோசையுண்டாம். அவைகேட்க, அன்பதிகரிக்கும், அவையிடம் அறிவுதிக்கும், அவைமுற்றி இரண்டறக் கலக்கும் ஆனந்தமுண்டாகும். இதையே பரிநிருவாணமெனவும், சிவத்தோடு கலத்தலாகிய சமாதியெனவும், முமூட்சுகளாகிய பெத்த முத்தர்கட் கூறுகிற்பர்.

(பொன்னம்பலம், கனகசபை, அம்பலவாணன், கனகசபாபதி, என்னுமளப்பரிய நாமரூபத்தாலினிது கொண்டாடப்படும்.)

"கண்ணிற் காண்பதுங் காட்சி கையாற்றொழில்
பண்ணற் பூசை பகர்வது மந்திரம்
மண்ணோ டைந்தும் வழங்குயி ரியாவுமே
அண்ணலே நின்னருள் வடிவாகுமே." எனத் தாயுமான சுவாமிகள் கருத்தின்படி யிங்ஙனமேற்பட்ட விஷய சங்கற்பங்களைக் கண்டுத் தெளிக. மற்றவை குருமுகத்தில் கேட்டுணர்கவேண்டியது பக்குவர்களின் கடமையேயாம்.

ஸ்ரீமத் - தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரின் தேகமாமிசத்தைப் பொசித்தப் பறவைகள் பொன்மயமாக விளங்கியதென அன்னவர் சரிதையில் முடிவுற்றது.

தெய்வம், பக்தி, ஆசாரம், சமயநெறி, சின்னமுதலிய அடையாளங்களியாதினும், அன்பில்லாதவன், அவைகளைச் செய்துக்கொள்ளாதவன், அதனருமையை யறிந்தனுசரியாதவன், முதற்கூறியுள்ள தீர்த்த வாக்கியங்களை வாளாயெடுத்து உபயோகிப்பதனால் கன்மபாபத்தைச் சுமப்பவனேயாகுவன். இவைகளை உபயோகித்துத் தான்கெட்டது மின்றிப் பிறரையுங் கெடுப்பானைப்போல, அற்பயெண்ணத்தால் மஹான்கள் எழுதினாரில்லை. எவைக்கும் அன்பும், பக்தி, சிரத்தை, விசுவாசமுற்றி உள்ளநிலையாகிய சுகபோக சிவஞானத்தை, யாவருமடையுமாறு அன்பின்பெருக்கால் வற்புறுத்தப்பட்டதென மேதாவியரொப்புக்கொள்ளுவர்.

———*———

## புருசுண்டி பூசித்தது.

தண்டகவனத்திலே நந்தரமெனு நகரத்தருகிலுள்ள வேடச்சேரியில் வசிக்கும் விப்பிரதனென்னும்வேடனோர்நாள் வனமார்க்கமாகவந்தமுற்கல முனிவரைக் கண்டவுடன் தன் வழக்கப்படி வாளாற்றுணிக்கச் சமீபிக்கையில், அவருற்ற நோக்கினவளவில் நல்லறிவுதிக்கப்பெற்று உடனே கீழ் வீழ்ந்தவர்ப் பாதங்களைப்பற்றி பணிந்து விடாதிருத்தலா லவனிடத்தி லிரக்கமுண்டாகி, முந்தி அவன் மனோவுறுதியை யறியவேண்டி; ஓம் கணேசாயநம: என்னுங் கணேசமூர்த்தி நாமத்தைமாத்திரமவனுக்குப தேசித்து ஒருலர்ந்த கொம்பைநட்டு, அது துளிர்க்கின்றபரியந்தம் நீர் விட்டு அம்மந்திரத்தை தியானித்து வருதியென் றம்முனிவர் சென்ற பின்பு ஆயிரம் வருடம்வரையிலதற்கு நீரைவிட்டு ஜெபித்துவர, அது துளிர்த்துப் பூத்திருப்பதை, மீண்டம் முனிவர்கண்டுவியந்து கமண்டல நீரைத்தெளித்து அதுகாறுஞ் செய்த பாபங்களை விமோசனமாகப்பட்டவன் புருவமத்தியிற் றுதிக்கையுமுண்டாகக்கண்டு வியந்து, கணேசாதுஏகாக்ஷரத்தை யுபதேசஞ்செய்து அவண் துளிர்த்தமாமுங் கற்பகவிருட்சமாக்கிச் சென்றபின்னர் (புருவநடுவில் சுண்டந்தாங்கிநின்ற காரணத்தாற் புருசுண்டியெனும், பெயருடன் அவ்வேகாக்ஷரமந்திரத்தை இடைவிடாமல் ஜபித்ததன்மேற் பிரசன்னமான விநாயகக் கடவுள் பரிபூரண கடாக்ஷம்பாலித்து அவனருகமர்ந்து * மூவகைஞானம் சரிதைமுதலாய

ஞானமும், பதி பசு பாசமாகிய வஸ்துத்திரவியம், தத்துவத்திரயம், தசகாரியம், தீட்சை முதலியனவாய வேதாகம ரகசியங்களேயும், தீர்க்கமாக உபதேசித்தருளினர். அதுமுதலவைகளே யனுட்டித்து ஜீவன் முத்தனுயினன்.

அன்றியுமப் புருசுண்டி முனிவன், சங்கட சதுர்த்தீ விரதத்தை, விதிப்படி யனுட்டித்து முற்றின பலனேக் கணேச மூர்த்தியின் றிருக்கரத்தில் தத்தஞ்செய்து நரகத்தில் வீழ்த்தப்பட்டிருந்த தனதுபிதுர்களேயும் புண்ணியலோகத்திற் சேர்ப்பித்தனன்.

---

* மூவகை ஞானம்:—உலகம்யாவை, ஆன்மயாவை, பரம்யாவை, என உணர்தல்.

‡ வஸ்துத் திரயமாவன:—பதி பசு பாசம் என்பன; (இவற்றிற் பதியாவன;) ஆதியந்தமின்மை. ரூபமின்மை, குணங்குறியின்மை, அவா வெறுப்பின்மை, ஒப்புயர்வின்மை, எங்கும் பூரணமாயிருக்கை, மனுதி தத்துவாதீதமாயுண்மை, ஆத்மாத்மகமாயிருத்தல், என்னும் அஷ்ட மங்கள குணத்தினை வாய்ந்த நிட்களபொருளாயிருப்பன.

பசுவாவன; அளவிடற் கரியதும், நித்தியத்துவமுள்ளதும், மலவிருளிலழுந்தியிருப்பதும், இறைவன்றிருவருளால் இருவினைக்கீடான சரீரமெடுத்துப் பலவாகிய புவனபோகங்களே அனுபவித்து இதனுற் புண்ணிய பாபங்களேச் செய்து பிறப்பிறப்புள்ளதும், புண்ணியமேலீட்டால் இருவினையொப்பு மலபரிபாகமுண்டாகுங் காலத்தில் குருவருளால் முத்தியின்பத்தைச் சேர்வதுமாம்.

பாசமாவன, ஏகத்துவமும், நித்தியத்துவமும், அளவிறந்த வல்லமையுமுள்ளதும், செம்பிற் களிம்புபோலச் சீவனேப்பற்றி அறிவு முழுவதையும் மறைப்பதும், புண்ணியமேலீட்டால் பக்குவப்படுவதும், இராவின் இருளினும் அதிக இருளாயிருப்பதுமாம்.

(திரயம் மூன்று) தத்துவத்திரயமாவன; ஆத்துமதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம், என்பன இவற்றுள் (ஆத்தும தத்துவமாவன) பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், என்னும் பூதம் ஐந்தும், சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம், என்னும் ஞானேந்திரியம் ஐந்தும், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்னும் தன்மாத்திரை ஐந்தும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், என்னுங் கன்மேந்திரியம் ஐந்தும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்னும்,

அந்தக்கரணம் நான்கும், ஆகிய இவ்விருபத்து நான்குமாம். இவற்றில்,

பிரிதிவு—உரத்துத்தரிக்கும், அப்பு— குளிர்ந்து பதஞ்செய்யும், தேயு—சுட்டொன்றுவிக்கும், வாயு—சலித்தெவையுந் திரட்டும், ஆகாயம் - நிரந்தரமாயிடங்கொடுக்கும், சோத்திரம் – சத்தத்தையறியும், தொக்கு - பரிசத்தையறியும், சட்சு-ரூபத்தையறியும், சிங்குவை - ரசத்தையறியும், ஆக்கிராணம் - கந்தத்தையறியும், வாக்கு - வசனிக்கும், பாதம்—கமனம் பண்ணும், பாணி – இடேதலும் ஏற்றலுஞ்செய்யும், பாயுரு - மலவிசர்க்கத்லைத விடும், உபத்தம் – ஆனந்தத்தைவிடும், மனம் – பற்றும், புத்தி - நிச்சயிக்கும், சித்தம் - சிந்திக்கும், அகங்காரம் – கொண்டெழுப்பும்.

வித்தியாதத்துவமாவன:—காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை, என்னும் ஏழுமாம். இவற்றுள்; (காலம்) நிகழ்காலம் இறந்தகாலம், எதிர்காலம் என்னும் முக்காலத்தையுங்குறிக்கும். (நியதி) கன்மத்தை நிச்சயித்து அநேக சாதி நாமத்துவங்களையுண்டாக்கும்.

(கலை) ஆணவத்தை சிறிதேநீக்கி அந்தந்த சாதிகளுக்கேற்ற கருமங்களைப்பற்றுவிக்கும். (வித்தை) அறிவை யெழுப்பிக் கிரியையோடு ஞானத்லைத ஓர்விக்கும். (இராகம்) பெற்றதைச் சிறிதாக்கிப் பெறாததில் இச்சையுண்டாக்கும். (புருடன்) பஞ்சேந்திரியங்களின் வழியாக விடயத்திலே யழுத்துவிக்கும். (மாயை) தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம், என ஐவகையாயிருந்து மயக்கும். இவற்றில்,

(தமம்) சீவசைதன்னியத்தை மறைத்தலும், (மாயை) சகத்ரூபமான அன்னிதாத் தோற்றத்திற்குக் காரணமாயிருத்தலும், (மோகம்) விபரீத ஞானமுண்டாக்கலும், (அவித்தை) உணர்வழித்தலும், (அநிர்தம்) சகத்ரூபத்துக்கன்னியமாதலுமாம்.

சிவதத்துவமாவன:—சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்தாம். இவற்றிற் (சுத்தவித்தை) முதலிய சிவதத்துவங்களுள், ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும். (ஈச்சுரம்,) ஞானங் குறைந்து கிரியையேறியிருக்கும். (சாதாக்கியம்) ஞானமுங் கிரியையும் ஒத்திருக்கும். (சத்தி) கிரியையாயிருக்கும். (சிவம்) ஞானமாயிருக்கும் என அறிக. இவற்றுள் சிவம்-சிவனுக்கிடம் நாதமென்றுபெயர். சத்தி—காருண்யத்திக்கிடம் விந்துவென்றும்பெயர். சாதாக்கியம்—அநுக்கிரகத்துக்கிடம், சதாசிவமென்றும் பெயர். ஈச்சுரம் – திரோபவத்துக்கிடம், மஹேஸ்வரனென்றும் பெயர். சுத்தவித்தை—சங்காரத்துக்கிடம், உருத்திரனென்றும் பெயர்.

தசகாரியமாவன:—தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூபம், ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், என்பனவாம். இவற்றுள் தத்துவரூபமாவது; அவற்றின் குணங்களைக்காண்கை, தத்துவதரிசனமாவது; அவை தன்னிடத்திலேநின்று சிவித்தமுறைமையைக் காண்கை. தத்துவசுத்தியாவது அவைதனக்கு வேறென்றறிந்து நீங்குகை. ஆத்மரூபமாவது; ஆத்மஞானம் அறிவே வடிவெனவறிகை. 'ஆத்மதரிசனமாவது; தத்துவங்களையறிந்துநீங்கி நீங்கினவறிவு தானெனவறிகை. ஆத்மசுத்தியாவது; பந்தமுத்தியிரண்டிலும், சிவனுபகரிக்கின்றானென்று தன்னுடைய சுதந்தரஹானியை யறிகை. சிவரூபமாவது; தத்துவமுப்பத்தாறிற்கும், அப்பாலாய் வாக்கு மனோதீத கோசரமாய் ஞானமே வடிவமாயிருப்பதென வறிகை. சிவதரிசனமாவது; தத்துவ முப்பத்தாறையும் நீங்கி நிற்கும் ஆத்மாவையுந் தரிசித்து நிற்கின்ற ஞானமென வறிகை. சிவயோகமாவது; இந்தஞானந் தன்னைவிட்டு நீங்காதென்றறிந்து தான் அதுவாய் நிற்கை. சிவபோகமாவது; தான் அந்த நேயத்திலே நின்றழுந்திச் சிவத்தைப்பெறுகையென வறிக.

* தீட்சை யென்பன:—சமயதீட்சை, விசேடதீட்சை, நிருவாணதீட்சை, என்பனவாம். இஃது ஆசாரியனால் பக்குவாதாரமாகச் செய்யும், வைதீக தர்மமென்க, மேற்கூறிய வுபாயங்களையுங் கடைப்பிடித்து மனதில் ஆசிரியருடைய உருவத்தைப்போல, தியானஞ்செய்து சோடசவுபசாரங்களையும் நடத்துவதாகிய ரூபபாவனையையும், ஆலயங்களிற் பூசித்துவரும் வடிவங்களைப்போல மனதிற்றியானித்து, அபிடேக முதலியவைகளை நடத்துவதாகிய சொரூபபாவனையையும், ஆசிரியர் சொல்லிய குறிப்பைப்பார்த்து மனதைப் பஞ்சேந்திரிய வழியிற் செலுத்தாமலிருத்தலாகிய, பூரணபாவனையையும் ஒன்றையுஞ் சுற்றிப்பாராமல் மனதைத் தற்போதத்தில் சேர்ப்பதாகிய அதீதபாவனையையும், அனுசரித்திருப்பதேயாம்.

—(*)—

## கிருதவீரியன் பூசித்தது.

——*——

உலகமுழுவதுந் தொழுதேத்தும்படியாகக் காலந்தவறாமல் நீரைச் சுரந்தளிக்கின்ற காவிரி நதிக்கு ஒருறைவிடமாகிய, சையாத்திரிசாரலிற் கருகேயுள்ள நகரத்தரசனான, கிருதவீரியன் புத்திரப்பேறுவேண்டி வனத்திற் றவஞ்செய்கையில், பிதிர்தேவனுயிருக்கு மவன்றந்தை நாரதரா

லறிந்தவாது செய்தியைக்குறித்து பிரமனிடஞ்சென்றுவணங்கி வினவின தன்மேல் அக்கிருதவீரியன், பூர்வஜென்மத்தில், அரசவம்சத்தில் சாமனெனவுதித்துக் கணேசனெனுமோர் புத்திரனோடு வாழ்கையில் நிகரற்ற துன்பமும், வறுமையும் நேர்ந்து, ஒருநாளவன் பசிக்கொடுமையால், வழிதடுத்துப் பன்னிரண்டு பிராமணர்களைக்கொன்று அவர்கள் பொருள்களைக்கவர்ந்துகொண்டு வீட்டிற்குப்போயன்று சங்கட சதுர்த்தி தினமாகையால் முன்னாட்டொடங்கி அன்னமில்லாம லிறந்திருக்கக்கண்ட தன் பிள்ளை விநாயக லோகத்திற்சேர, அவ்விசேஷ தினத்தில் மூன்றுதரங் கணேசா! கணேசா! கணேசா! வென வவன்பெயரைக் கூவியழைத்த மகிமையினால், உடனே யிறந்த அந்த சாமன் உனக்குப் புத்திரனாக வுதித்து, அரசுரிமையை யிப்போதடைந்தனன். ஆதலால், அப்பிரமஹத்தியொழியுமாறு; மாசிமாத அமரபக்ஷத்திற் செவ்வாய்க்கிழமைகூடிய சதுர்த்தியில், அவ்விரதத்தைத்தொடங்கி, கணேசமூர்த்தியின், பாதபத்மங்களை மனதிலிருத்தி ஏகாக்ஷர சடாக்ஷர மந்திரமோடு, திருநாம மந்திரத்தையுந் தியானித்து அன்னபானாதிகளைநீத்து சந்திரோதயமானவுடன் விநாயக மூர்த்தியை யெழுந்தருளச்செய்து, பூஜைமுடித்தபின் சந்திரனுக்கும் அர்ச்சனையை நடாத்தி வேதியருக்கு அறுசுவை யுண்டியளித்து அன்றிராமுழுதும் நித்திரை தவிர்த்து அக்கடவுட் சரித்திரங்களைக்கேட்டு இவ்வகை யோர்வருடம்வரையில், சதுர்த்திதோறும் பூஜித்தால் புத்திரப்பேறுண்டாகுமென்று; அவ்விரதத்தின் சகல மகத்துவமும் பிரமனாற் சொல்லக்கேட்டபடியே புத்தகமாகவெழுதி தனது புத்திரன் கனவிற்சென்று, அதைவாசிக்கும் விதிகளைத்தெரிவித்து அவன் கையில் அப்புத்தகத்தைக் கொடுத்துச் சென்றபின்னர்; அவனவ்விதமே அவ்விரததினம் வரக்கண்டு; ஆரம்பித்து தன்குல குருவாகிய, அத்திரி மூனிவர் முன்னிலையில் கும்பமுடன் கணேசமூர்த்த முதலாக விதிப்படி யமைப்பித்து ஆராதித்து புத்திரப்பேறடையப்பெற்றனன்.

—(*)—

## கிருதவீரியன் விநாயக பூஜாரம்பம்.

—*—

தனது குலகுருவாகிய, அத்திரி மஹாமுனிவருடைய வருட்பிரசாதத்தினால், அபிஷேகத்திற்குரிய திரவியங்களியாவையுஞ் சித்தப்படுத்திக்கொண்டு மாசிமாதம் கிருஷ்ணபக்ஷ, அங்காரக சதுர்த்தியி லுதயத்திலெழுந்து நீராடி கிரமப்படி விபூதியணிந்து உருத்திராட்சம்பூண்டு, நித்திய கருமமுடித்து, திருவுருவம் அமைத்து, வேதபாராயணம் நடத்தி

சிவாகம முறைப்படி நியாசம்செய்து, ஆசமனம், பிராணாயாமம், பூசுத்தி முதலானவைகளை நடாத்தி, சங்கற்பங்கூறி கும்பமமைத்து சந்தனம், புட்பம், அக்ஷதை முதலானவைகளை சாத்தி கலச பூஜைசெய்து, சுத்த தீர்த்தம், அரிசி, பால், தருப்பைநுனி, மலர், வெண்கடுகு, நெல், எள், முதலிய திரவியங்களை விதிப்படி அமைத்து அருக்கியம், பாத்தியம், ஆசனம் முதலியவைகளை மந்திரபூர்வகமாகச் செய்து கரத்திற் புஷ்பமும், அக்ஷதையுங்கொண்டு,

——✳——

## த்வாரபீட பூஜை.

ஓம் பூர்வத்வாரேதவர ஸ்ரீயைநம:
" தக்ஷணத்வாரேத்வார ஸ்ரீயை நம:
" பச்சிமத்வாரேத்வார ஸ்ரீயை நம:
" உத்தரத்வாரேத்வார ஸ்ரீயை நம:
" தேஹளீன்யை நம:
" த்வாரசோபாயை நம:
" பீடமத்யே வாஸ்துபுருஷாய நம:
" மஹாமண்டூகாய நம:
" காலாக்கினிருத்ராயநம;
" கூர்மாய நம:
" வராஹாயநம:
" அனந்தாய நம:
" ப்ருத்திவ்யே நம:
" அங்குசாயநம:
" ஸப்தத்வீபேப்யோநம:
" ஸப்தஸமுத்ரேப்யோநம:
" கந்தாயநம:
" நாளாய நம:
" பதப்ரேப்யோ நம:
" கெஸ்ரெப்யோ நம:
" கர்ணிகாயை நம:
" ரத்நசிம்ஹாசநாய நம:
" இலட்சுசமுத்ராய நம:
" ஸ்வர்ணத்வீபாய நம:
" ரத்நமண்டபாய நம:
" கல்பவ்ருக்ஷாய நம:
" காமதேனுவே நம:
" க்ஞாநாய நம:
" வைராக்யாய நம:
ஓம் ஐஸ்வர்யாய நம:

ஓம் தர்மாய நம:
" அக்ஞானாய நம:
" அவைராக்யாயநம:
" அநைஸ்வர்யாய நம:
" அதர்மாய நம:
" தீப்தாய நம:
" மத்யேசந்த்ரோ மாஸ்ரித சங்கடஹரணகணபதயே நம:
" ரஜஸேய நம:
" தமசேய நம:
" அக்கினிமண்டலாய நம:
" அக்கினிமண்டலாதிபதயேநம:
" வஹ்ன்யே நம:
" அர்க்கமண்டலாய நம:
" அர்க்கமண்டலாதிபதயே சூர்யாய நம:
" ஸோமமண்டலாயநம:
" ஸோமமண்டலாதிபதயே சந்த்ரமஸே நம:
" க்ரகமண்டலேப்யோ நம:
" க்ரகமண்டலாதிபதிப்ய ஆதித்யாதி நவக்ரகேப்யோ நம:
" தன்மத்யேத்ருவ மண்டலாய நம:
" த்ருவமண்டலாதிபத்யேத்ருவாய நம:
" மாயாதத்வாய நம:
" ஆத்மதத்வாயநம:
" வித்யாதத்வாய நம:
" சிவதத்வாய நம:
" ஆத்மனே நம:
" அந்தராத்மனே நம:
ஹ்ரீம் சிவாத்மனே நம:

ஓம் பரமாத்மனே நம:
ஓம் மத்யேருத்ராய நம:
ஓம் பகவதை நம:

ஓம் தேஜோவதை நம:
ஓம் மத்யே விக்னநசினே நம:
ஓம் சர்வசங்கடநிவாரிணே நம:

என்று த்வாரபீட பூசைசெய்து,

சிந்தனை.

த்யாயேத் கஜானனம், தேவம், சப்தகாஞ்சன ஸந்நிபம், சதுர்ப்புஜம், மஹாகாயம், ஸர்வாபரணபூஷிதம், தண்டாக்ஷ மாலாபாசு, பூர்ணமோதக தாரிணம், பாசாங்குசதரம், தேவம், த்யாயேத் சித்திவிநாயகம், ஸ்ரீசித்தி விநாயகாயநம: தியானம் ஸமர்ப்பயாமி என்று சிந்தித்து,

ஸ்தாபனம்.

விநாயக நமஸ்தேஸ்து, கௌரி மலஸமுத்பவ, இமாம் க்ருதாம் மயாம் பூஜாம், க்ருஹாண் கணநாயக, ஸ்ரீ கணநாயகாயநம, ஆவாஹனம் ஸமர்ப்பயாமி, என்று ஸ்தாபனஞ்செய்து,

பீடம்.

மௌக்திசை, புஷ்யராகஸ்ச, நாநாரத்ந விராஜிதம், திவ்ய ஸிம்ஹாசனம், சாருப்ரீ தயர்த்தம்ப்ரதி க்ருய்ஹதாம், ஸ்ரீ விநாயகாயநம: ஆஸனம் ஸமர்ப்பயாமி என்று பீடமிட்டு,

பாத்தியம்.

கௌரீபுத்ர நமஸ்தேஸ்து, சங்கரப்ரியநந்தன, பக்த்யாபத்ய மயாதத்தம், க்ருஸாணசுரஸத்தம், ஸ்ரீ கௌரீபுத்ராயநம: பாத்யம் ஸமர்ப்பயாமி. என்று பாத்யம் கொடுத்து,

அர்க்கியம்.

அர்க்யம் க்ருஹாண தேவேச, கணாதிப கஜானன, கந்ததூர்வாக்ஷதைரயுக்தம், கங்காஜல மிதம்சுபம், ஸ்ரீ கஜானனாயநம: அர்க்யம் ஸமர்ப்பயாமி, என்று அர்க்கியம் கொடுத்து,

ஆசமனம்.

அநாதநாத சர்வேச கீர்வாணசுரபூஜித, நிர்மலம் கந்தஸம் யுக்தம், க்ருஹாண ஸமனம்விபோ. ஸ்ரீ சர்வேசாயநம: ஆசமனம் ஸமர்ப்பயாமி, என்று ஆசமனம் கொடுத்து,

சாமான்ய நிவேதனம்.

ததி க்ஷீரஸமாயுக்தம், மத்வாஜ்யேன ஸமன்விதம், மதுபர்க்கம், க்ருஹாணேதம், கஜவக்த்ர நமோஸ்துதே, ஸ்ரீ கஜவக்த்ராநம: மதுபர்க்க நைவேத்யம் ஸமர்ப்பயாமி, என்று தேன், பால், பழம், முதலியவைகளைச் சாமானியமாக நிவேதித்து,

# அபிஷேகம்.

## பஞ்சாமிர்தம்.

ஸ்நானம் பஞ்சாம்ருதைர் திவ்ய குருஷ்வசுர சத்தம், பக்த்யாத் தப்யம் மயாதத்தம், விக்னராஜ நமோஸ்துதே. ஸ்ரீ விக்னராஜாயநம: பஞ்சாமிர்த ஸ்நானம் ஸமர்ப்பயாமி, என்று தேன், பால், வாழைப்பழம், சருக்கரை, நெய், இவ்வைந்துங் கலந்த பஞ்சாமிர்தவபிடேகஞ்செய்து,

## பால்.

ஸ்வ்ரபேயம் மகாதிவ்யம், பவித்திரம், புஷ்டிவர்த்தனம், ஸ்நாநாயதே மயாதத்தம் க்யஹீஷ்வசுரதத்தமம், க்ஷீரஸ்நானம் ஸமர்ப்பயாமி, என்று பாலபிஷேகஞ்செய்து,

## தயிர்.

மஹஸ்வாது சமாயுக்தம், ப்ரஸித்தம், மஹாற்புதம், ஸ்நாநாயதே மய்ாதத்தம், ததிதம் ப்ரதிக்ருய்ஹதாம், ததிஸ்நானம் ஸமர்ப்பயாமி என்று தயிர் அபிஷேகஞ்செய்து,

## நெய்.

தெவர்ஷீணும், ப்ரயம் புண்யம் பவித்ரம் புஷ்டிவர்த்தனம், ஸ்நாநாயதே மயாதத்தம், க்ருஹணுஜ்யம் நமோஸ்துதே க்ருதஸ்நானம் ஸமர்ப்பயாமி, என்று நெய் அபிடேகஞ்செய்து

## தேன்.

அநேக வ்ருக்ஷயநிசயகு சுமோற்பூத மற்புதம் ஸ்நாதாயதோ மயாதத்தம், கணேசப் சதிக்ருய்ஹதாம் மதுஸ்நானம் ஸமர்ப்பயாமி, என்று தேன் அபிஷேகஞ்செய்து,

## சர்க்கரை.

இட்சிகண்ட ஸமுத்பூதா, பராஸ்வாத்ய தராசுபா சர்க்கரேயாம், மயாதத்தம், ஸ்நாநார்த்தம் பரதிக்ருய்ஹதாம் சர்க்கரா ஸ்நாணஞ் ஸமர்ப்பயாமி, என்று சர்க்கரை அபிஷேகஞ்செய்து,

## சுத்தோதகம்.

கங்காதி ஸர்வதீர்த்தேஸ்து, ஆனீத்யைர் நிர்மலேஸ்சுபை, வாவிதைருதகைர்தேவ, ஸ்ஞபயாமி கஜானன, ஸ்ரீ கஜானனுயநம: சுத்தோதக ஸ்நானம் ஸமர்ப்பயாமி, என்று கங்கைமுதலிய சுத்தசலத்தால் அபிஷேகஞ்செய்து,

## அலங்காரம்.

—※—

### பீதாம்பரம்.

ரக்தவஸ்த்ரம், த்வயம்தேவ, கௌரீபவ பவப்ரபோ க்ருஹாணேதம் மயாதத்தம், விக்னராஜ நமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜயநம: வஸ்திர யுக்மம் ஸமர்ப்பயாமி, என்று நல்ல இரண்டு பீதாம்பரங்களையுடுத்தி,

### யக்ஞோபவீதம்.

உபவீதம் ப்ரம்ம ஸூத்ரம், ப்ரம்ஹணா, நிர்மிதம்புரா, நாகயக்ஞோபவீதேதம், க்ருஹாண கணநாயக ஸ்ரீ கணநாயகாய நம: யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி, என்று பூணூல் தரித்து,

### சர்வாபரணம்.

கோடிசூர்யப்ரகாதீச ரக்தவண்ண சதுர்ப்புஜ மயாஸமர்பிதானீஹா பூஷணா, நிக்ருஹணபோ ஸர்வாபரணானி, ஸமர்ப்பயாமி, என்று ஆபரணாலங்காரஞ்செய்து,

### கந்தம்.

சந்தன கருகற்பூர, ம்ருகநாபி ஸமன்விதம், கந்தம் தர்ஸயாமி விக்னேச, ஸர்வாபீஷ்ட ப்ரதாயக ஸ்ரீ விக்னேசாயநம: கந்தம் ஸமர்ப்பயாமி, என்று திருமேனி முழுவதும் சந்தனத்தை அப்பி,

### அக்ஷதை.

அக்ஷதான் தவதிரம் சுப்ரான், ஹரிஸ்ரிதானபி, மயாஸமர்ப்பிதான் தேவ, க்ருஹாணத் விரதானன ஸ்ரீ ஸர்வாபீஷ்ட ப்ரதாயகாயநம: அக்ஷதாம் ஸமர்ப்பயாமி, என்று அக்ஷதை (மஞ்சள் அரிசி) பொற்சுண்ணம், பூந்தாது, முதலியவற்றைச் சாத்தி,

### புஷ்பம்.

சுகந்தினி சுபுஷ்பாணி, ஜாஜீகுந்த முகானிச, ஏகவிம்சதி புஷ்பாணி, க்ருஹாணத்வம் விநாயக, ஸ்ரீ விநாயகாயநம: புஷ்பாணி பூஜையாமி, என்று (உக) இருபத்தொரு மலர்களைச் சாத்தி,

### மால்யம்.

சுகந்தினிச மால்யானி க்ருஹாண கணநாயக விநாயக நமஸ்துப்யம், சிவஸூனோ நமஸ்துயத மால்யானி ஸமர்ப்பயாமி, என்று மால்யம் தரித்து

### அருச்சனை. (அறகு)

ஒவ்வோர் மந்திரத்தின் முடிவிலும், "தூர்வாயுக்மம் பூஜையாமி" என்றுசொல்லி அருச்சிக்கவேண்டும்.

ஓம் கஜானனாய நம:
" விக்னராஜாய நம:
" லம்போதராய நம:
" சிவாத்மஜாய நம:
" வக்ர துண்டாய நம:
" சூர்ப்பகர்ணாய நம:
" குஜ்பாய நம:
" கணேசாய நம:
" விக்னநாசினே நம:
" விகடாய நம:
ஓம் வாமதேவாய நம:

ஓம் சர்வதேவாய நம:
" சர்வாத்ரி நாசினே நம:
" விக்னஹர்த்ரே நம:
" தூம்ராய நம:
" உமாபுத்ராய நம:
" க்ருஷ்ண பிங்களாய நம:
" பாலசந்த்ராய நம:
" சந்த்ரார்த்ததாரிணே நம:
" கணாதிபாய நம:
ஓம் சங்கர கௌரீ சூனவே நம:

என்று இரண்டிரண்டாக இருபத்தோரறுகை யெடுத்து அருச்சித்து,

## அங்கபூஜை.

| | | | |
|---|---|---|---|
| ஓம் கணேசாய நம: | பாதௌபூஜையாமி | ... | பாதம் |
| " விக்னராஜாய நம: | ஜானுநீபூஜையாமி | ... | முழந்தாள் |
| " ஆகுவாஹனாய நம: | ஊரும் பூஜையாமி | ... | தொடை |
| " ஏரம்பாய நம: | கடிம் பூஜையாமி | ... | நிதம்பம் |
| " தேவதேவாய நம: | நாபிம் பூஜையாமி | ... | நாபி |
| " லம்போதராய நம: | உதரம் பூஜையாமி | ... | வயிறு |
| " கணநாயகாய நம: | ஹிருதயம் பூஜையாமி | ... | இருதயம் |
| " ஸ்தூலகண்டாய நம: | கண்டம் பூஜையாமி | ... | கண்டம் |
| " ஸ்கந்தாக்ரஜாய நம: | ஸ்கந்தௌபூஜையாமி | ... | கழுத்தடி |
| " சதுர்ப்புஜாய நம: | பூஜௌபூஜையாமி | ... | தோள் |
| " பாசஹஸ்தாய நம: | ஹஸ்தான்பூஜையாமி | ... | உள்ளங்கை |
| " கஜவக்த்ராய நம: | வக்த்ரம் பூஜையாமி | ... | நாசி, அல்லதுமுகம் |
| " விக்னஹந்த்ரே நம: | நேத்ரேபூஜையாமி | ... | கண் |
| " சூர்ப்பகர்ணாய நம: | கர்ணௌபூஜையாமி | ... | காது |
| " ஏகதந்தாய நம: | தந்தம் பூஜையாமி | ... | தந்தம் |
| " குமாரகுருவே நம: | சிரப்பூஜையாமி | ... | சிரம் |
| ஓம் சர்வேஸ்வராய நம: | சர்வாங்கானிபூஜையாமி | ... | சர்வாங்கம், |

என்று அங்கபூஜை செய்து,

## ஆவரணபூஜை.

ப்ரதமாவரணம்

ஓம் கணாதிபாய நம:
ஓம் உமாபுத்ராய நம:
ஓம் அகனாசனாய நம:

ஓம் ஏரம்பாய நம:
ஓம் லம்போதராய நம:
ஓம் கஜவக்த்ராய நம:

ஓம் ஏகதந்தாய நம:
" தூமகேதுவே நம:
" பாலசந்த்ராய நம:
ஓம் ஈசபுத்ராய நம:

ஓம் இபவக்த்ராய நம:
" குமாரகுருவே நம:
" மூஷிகவாஹனாய நம:
ஓம் சங்கடனாசனாய நம:

## த்விதீயாவரணம்.

ஓம் விக்னகணபதயே நம:
" விநாயக கணபதயே நம:
" தீரகணபதயே நம:
" வரதகணபதயே நம:
" இந்த்ரகணபதயே நம:
ஓம் லம்போதர கணபதயே நம:

ஓம் ஏகதந்த கணபதயே நம:
" சூரகணபதயே நம:
" சூர்ப்பகர்ன்ன கணபதயே நம:
" க்ஷிப்ரப்ரசாதகணபதயேநம:
ஓம் சித்திகணபதயே நம:

## த்ரிதீயாவரணம்.

ஓம் ரமாயை நம:
" ரமேசாயை நம:
" உமாயை நம:
" வ்ருஷாங்காய நம:
ஓம் ரத்னை நம:

ஓம் புஷ்பபாணாய நம:
" மாயை நம:
" வராஹாய நம:
ஓம் ஸதாசிவாய நம:

## சதுர்த்தாவரணம்.

ஓம் ஆதித்யாய நம:
" ஸோமாய நம:
" அங்காரகாய நம:
" புதாயநம:
ஓம் சுக்ராய நம:

ஓம் சனேஸ்வராய நம:
" ப்ரகஸ்பதயே நம:
" ராகுக்ரஹாய நம:
ஓம் கேதுக்ரஹாய நம:

## பஞ்சமாவரணம்.

ஓம் த்ரத்தைய் நம:
" சமர்த்தைய் நம:
" காந்தைய் நம:
ஓம் மதத்ரவாயை நம:

ஓம் சுதாதாராயை நம:
" த்ராவிண்யை நம:
" வசுமத்தையை நம:

## சஷ்டாவரணம்.

ஓம் இந்த்ராயநம:
" அக்னயே நம:
" யமாயநம:
ஓம் நிருதயே நம:

ஓம் வருணாய நம:
" வாயவே நம:
" குபேராய நம:
ஓம் ஈசானாய நம:

என்று ஆவரண பூசைகளைச் செய்துமுடித்து பின்னர்,

## பத்திரார்ச்சனை.

ஓம் சுணதிபாய நம: — மாலதீபத்ரம் ஸமர்ப்பயாமி
" சுமுகாய நம: — ப்ருங்கராஜபத்ரம் ஸமர்ப்பயாமி

| | |
|---|---|
| ஓம் உமாபுத்ராய நம: | வில்வபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, கஜவக்த்ராய நம: | தூர்வாபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, லம்போதராய நம: | பதரீபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, ஹரஸூனவே நம: | துத்தூரபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, குஹாக்ரஜாய நம: | துளசீபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, கஜகர்ணகாய நம: | அபாமார்க்கபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, ஏகதந்தாய நம: | ப்ருஹதீபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, இபவக்த்ராய நம: | சமீபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, மூஷிகவாஹனாய நம: | கரவீரபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, விநாயகாய நம: | வேணுபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, கபிலாய நம: | அர்க்கபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, பின்னதந்தாய நம: | அர்ச்சுனபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, பத்னீஹிதாய நம: | விஷ்ணுக்ராந்தீ பத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, விஷ்ணவே நம: | தாடிமபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, பாலசந்த்ராய நம: | தேவதாருபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, ஏரம்பாய நம: | மருதபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, சுராக்ரகண்யாய நம: | ஜாஜீபத்ரம் ஸமர்ப்பயாமி |
| ,, சித்திவிநாயகாய நம: | சிந்துவாரபத்ரம் ஸமர்ப்பயாமி: |
| ஓம் சங்கடநாசினே நம: | ஏகவிம்சதி பத்ராணி ஸமர்ப்பயாமி |

என்று சிறுசண்பகம், கரசராங்கணி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, துளசி, நாயுருவி, சிறுவழுதி, வன்னி, அலரி, மூங்கில், வெள்ளெருக்கு, மருதம், விஷ்ணுகிராந்தி, மாதுளை, மந்தாரை, மருவு, சாதிமல்லி, வெண்ணொச்சிலி, என்னுமிவற்றின் பத்திரங்களைக்கொண்டு அருச்சித்து,

## புஷ்பார்ச்சனை.

—(*)—

| | |
|---|---|
| ஓம் சுமுகாய நம: | ஜாதிபுட்பம் ஸமர்ப்பயாமி |
| ,, ஏகதந்தாய நம: | சாமந்திபுட்பம் ஸமர்ப்பயாமி |
| ,, கபிலாய நம: | மல்லிகாபுட்பம் ஸமர்ப்பயாமி |
| ,, கஜகர்ணகாய நம: | சம்பங்கிபுட்பம் ஸமர்ப்பயாமி |
| ,, லம்போதராய நம: | கல்லாரபுட்பம் ஸமர்ப்பயாமி |
| ,, விகடாய நம: | கேதகீபுட்பம் ஸமர்ப்பயாமி |
| ,, விக்னநாசினே நம: | வகுளபுட்பம் ஸமர்ப்பயாமி |
| ஓம் விநாயகாய நம: | சதபத்ரபுட்பம் ஸமர்ப்பயாமி |

ஓம் தூமகேதுவே நம: — புந்நாகபுட்பம் ஸமர்ப்பயாமி
" கணத்யக்ஷாய நம: — துத்தாரபுட்பம் ஸமர்ப்பயாமி
" பாலசந்த்ராய நம: — மாலதீபுட்பம் ஸமர்ப்பயாமி
" பத்னீஹீனாய நம: — விஷ்ணுக்கிராந்திபுட்பம் ஸமர்ப்பயாமி
" உமாபுத்ராய நம: — கிரீகர்ணிகாபுட்பம் ஸமர்ப்பயாமி
" க்ஞானனாய நம: — நாகபுட்பம் ஸமர்ப்பயாமி
" ஈசபுத்ராய நம: — மந்தாரபுட்பம் ஸமர்ப்பயாமி
" சர்வசித்திப்பிரதாயகாயநம: — கோவிதாரபுட்பம் ஸமர்ப்பயாமி
" மூஷிகவாகனாய நம: — துருமோற்பல புட்பம் ஸமர்ப்பயாமி
" குமாரகுரவே நம: — ரக்தபுட்பம் ஸமர்ப்பயாமி
" தீர்க்கதுண்டாய நம: — அர்க்கபுட்பம் ஸமர்ப்பயாமி
" இபவக்த்ராயநம: — முணிபுட்பம் ஸமர்ப்பயாமி
ஓம் ஸங்கடநாசினே நம: — ஏகவிம்சதி புட்பாணி ஸமர்ப்பயாமி

என்று, சிறுசண்பகம், சாமந்தி, மல்லிகை, சம்பங்கி, செங்குவளை, தாழை மகிழம், தாமரை, புன்னை, ஊமத்தை, முல்லை, விட்ணுகிராந்தி, வெள் ளைக்காக்கணம், நாகை, மந்தாரை, சூரா, தோங்கு, செம்பிரத்தம், வெள் ளொருக்கு, அகத்தி, என்னுமிவற்றின் புட்பங்களைக்கொண்டு அருச் சித்து,

## துவாதசநாம பூஜை.

——(✻)——

ஓம் சுமுகாய நம:
" ஏகதந்தாய நம:
" கபிலாய் நம:
" கஜகர்ணிகாய நம:
" லம்போதராய நம:
ஓம் விகடாய நம:

ஓம் விக்னராஜாய நம:
" கணாதிபதியே நம:
" தூமகேதுவே நம:
" கணாதயக்ஷாய நம:
" பாலசந்த்ராய நம:
ஓம் கஜானனாய நம:

## அஷ்டோத்தர சதநாமபூஜை.

——(✻)——

ஓம் விநாயகாய நம:
" விக்னராஜாய நம:
" கௌரிபுத்ராய நம:
" கணேஸ்வராய நம:
" ஸ்கந்தாக்ரஜாய நம:
" அவ்யயாய நம:
ஓம் பூதாய நம:

ஓம் தட்சாய நம:
" அத்யக்ஷாய நம:
" த்விஜப்பிரியாய நம: (௧0)
" அக்கினி கர்ப்பச்சிதே நம:
" இந்த்ரப்ரதாய நம:
" வாணிப்ரதாய நம:
ஓம் ஸர்வசித்திப்ரதாய நம:

ஓம் ஸர்வதனயாயநம:
" ஸர்வப்ரயாய நம:
" ஸர்வாத்மகாய நம:
" ஸிருஷ்டிகர்த்தே நம:
" தேவாயநம:
" அநேகார்ச்சிதாயநம: (௨0)
" சிவாயநம:
" சுத்தாய நம:
" புத்திப்பிரியாய நம:
" சாந்தாய நம:
" ப்ரம்மசாரிணே நம:
" கஜானனாய நம:
" த்வைமாத்ரேயாயநம:
" முனிஸ்துத்யாய நம:
" பக்தவிக்னவிநாசாய நம:
" ஏகதந்தாய நம: (௩0)
" சதுர்ப்பாஹவே நம:
" சதுராய நம:
" சத்திஸம்புதாய நம:
" லம்போதராய நம:
" சூர்ப்பகர்ணாய நம:
" ப்ரம்மவித்தமாய நம:
" கபிலாய நம:
" க்ரஸ்பத்யே நம;
" காமினே நம:
" சோமசூர்யாக்கினி லோசனாயநம: (௪0)
" பாசாங்குசதராய நம:
" சண்டாய நய:
" குணாதீதாய நம:
" நிரஞ்சனாய நம:
" அகல்மஷாய நம:
" ஸ்வயம்சித்தாய நம:
" சித்தார்ச்சிதபதாய நம:
" அவ்யயாய நம;
" பீஜபூரபலாஸக்தாய நம:
" வரதாய நம: (௫0)
" சாஸ்வதாய நம:
" க்ருதினே நம:
" பராய நம:
" வீதபயாய நம:
ஓம் கதினே நம:

ஓம் சக்ரிணே நம:
" இட்சுசாபத்ருதே நம:
" அஜாய நம:
" உத்பலதராய நம:
" ஸ்ரீதாய நம: (௬0)
" ஸ்ரீபதயே நம:
" ஸ்துதிஹர்ஷிதாய நம:
" குலாத்ரிபேத்ரே நம:
" ஜடிலாய நம:
" சந்த்ரசூடாய நம:
" காந்தாய நம:
" பரமஹரிணேய நம:
" சமாஹிதாய நம:
" ஆஸ்ரிதாய நம:
" ஹவராய நம: (௭0)
" ஹரயே நம:
" பக்தகர்மட்சிதாய நம:
" ஓஷதிபத்யே நம:
" அமயதாய நம:
" கைவல்யாய நம:
" சச்சிதானந்தவிக்ரகாய நம:
" க்ஞானினே நம:
" தயாயுதாய நம:
" தாந்தாய நம:
" ப்ரம்மத்வேஷவிவர்சிதாயநம:
" ப்ரம்மத்தைத்யபயதாயநம:
" அமரேஸ்வராய நம:
" நாகயக்ஞோபவீதனே நம:
" ஸ்ரீகண்டாய நம:
" விதயே நம:
" ராமார்ச்சிதாய நம:
" ஸ்தூலகண்டாய நம:
" ஸ்வயங்கர்த்தே நம:
" சாமகோஷப்ரியாய நம:
" பரஸ்மை நம: (௯0)
" சௌம்யாய நம:
" ஸ்தூலகண்டாய நம:
" அக்ரண்யாய நம:
" தீராய நம:
" வாகீசாய நம:
" சித்திதாயகாய நம:
ஓம் தூர்வாபில்வப்ரியாய நம:

ஓம் வியக்தமூர்த்தயே நம:
,, ஆமூர்த்திபதே நம:
,, பாவதத்துதுஸ்தங் கேலனே
ஸ்துகமாணசாய நம: (௧00)
,, சங்கரோஸ்தங் கேலனேஸ்
துகமானஸாய நம:
ஓம் சமஸ்தஜகதாதாய நம:

ஓம் ஹர்ஷாய நம:
,, மூஷிகவாஹனாயநம:
,, ஹருஷ்டாய நம:
,, துஷ்டாய நம:
,, ப்ரவஸ்னுக்மதே நம:
ஓம் சர்வசித்திப்ரதாயநம: (௧0அ(

என்று அஷ்டோத்தர சதநாமபூஜைசெய்து,

## திருவாராதனை.

---

### தூபம்.

வனஸ்பத்துப் பதளம் தூபம், தசாங்கா கருஸம்யுதம், க்ருஹாண மங்களதிவ்யம் மயாதத்தம், விநாயக ஸ்ரீ உமாசுதாய நம: தூபம் ஸமர்ப்பயாமி, என்று தூபாராதனைசெய்து,

### தீபம்.

க்ருதாக்த வர்த்திசம்யுக்தம் தீபம் சர்வப்ரகாசம் க்ருஹாணே மயா தத்தம் தேசோராசேஜபத்பதே, ஸ்ரீ ருத்ரப்ரியாய நம: தீபம் ஸமர்ப்பயாமி, என்று தீபாராதனைசெய்து,

### நைவேத்தியம்.

அன்னைஸ் சதுர்விதைஸ்வாது ரஸைஷட்பிஸமன்விதம், பத்தியாகி வேதிதம் வேதநைவேத்யம் ப்ரதிக்ருய்ஹதாம், போஜைர் நாரிகாவிதைர் யுக் தோன்மோதகான் க்ருதபார்சிதான் க்ருஹாண விக்னராசேந்த்ர சர்வ கார்யார்த்தசித்தயே ஸ்ரீ விக்னநாசினே நம: நைவேத்யம் ஸமர்ப்பயாமி என்று நைவேத்தியஞ்செய்து,

### பூர்ணபலம்.

பலானீ மானிரப்யாணிஸ், காபிதர் நிதவாக்ரத மேனமேசபலா வாப்தி, பவேசன்ம விசயன்மனி ஸ்ரீ சங்கடநாசினே நம: பூர்ணபல சமர்ப்பணம் ஸமர்ப்பயாமி, என்று பூர்ணபலஞ்செய்து,

### தக்ஷிணை.

ஸ்தாந்தனூத விக்னேச புஷ்டலா நிதஞநிச, பூம்யாம்ஸ் தீதானிபகவன், ஸ்வீகுருஷ்வ விநாயக, ஸ்ரீ விக்னேசாய நம: ஸ்வர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி, என்று தக்ஷிணை வழங்கி,

### தாம்பூலம்.

பூகிபல சமாயுக்தம் நாகவல்லி தளைர்யுதம், கற்பூரசூர்ண சம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருய்ஹதாம் ஸ்ரீ சித்திவிநாயகாய நம: தாம்பூலம் ஸமர்ப்

பயாமி என்று தாம்பூலமிட்டு,

## புஷ்பம்.

பூசாபல சம்ருத்யர்த்தம், ஸ்வர்ணபுஷ்பம், மயேஸ்வரஸ்தாபிதம், தேனமேப்ரீத்யைபூர்ணுக் மருமனோரதான். ஸ்ரீ வீக்னேசாய நம: ஸ்வர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி, என்று தாம்பூலம் ஸ்வர்ணபுஷ்பம் என்னுமிவைகளைக்கொடுத்து,

## அர்க்கியம்.

விக்னராஜ நமஸ்துப்யம் பாபக்னான ப்ரணுசன, புனரார்க்யம் ப்ரதாஸ்யாமி க்ருஹாண சுரசத்தம, ஸ்ரீ விக்னராஜாய நம: புனரர்க்யம் ஸமர்ப்பயாமி என்று அர்க்கியங் கொடுத்து,

## ஏகாதச நாமாருச்சனை.

---

ஒவ்வொரு தியானத்தின் முடிவிலும் "தூர்வாயுக்மம் ஸமர்ப்பயாமி" என்று சொல்லவும்,

| | |
|---|---|
| ஓம் கணுதிபாய நம: | ஓம் விநாயகாய நம: |
| " உமாபுத்ராய நம: | " ஈசபுத்ராய நம: |
| " அகநாசினே நம: | " சர்வசித்திப்ரதாயகாய நம: |
| " ஏகதந்தாய நம: | " குமாரகுரவே நம: |
| " இபவக்த்ராய நம: | ஓம் சர்வசங்கடநாசனுயநம: |
| ஓம் மூஷிகவாஹனுய நம: | |

என்று ஏகாதச நாமங்களாற் றூர்வை யருச்சனைசெய்து,

## தியானம்.

கணுதிப நமோஸ்தேஸ்து உமாபுத்ரா கஜானனு ஏகதந்தே பவக்ரே திததா மூஷிகவாஹன விநாயக கேஸ்புத்ரேதி சர்வசித்திப்ரதாயக குமாரகுரவே துட்யம் சர்வசங்கடநாசன இதயேகாதச தூர்வாயுக்ம பூஜாம் ஸமர்ப்பயாமி என்று தியானஞ்செய்து,

## தூர்வையருச்சனை.

---

ஒவ்வொரு தியானத்தின் முடிவிலும் "தூர்வாயுக்மம் ஸமர்ப்பயாமி" என்று செபிக்கவேண்டியது.

| | |
|---|---|
| ஓம் கணேசாய நம: | ஓம் ஏகீத்யேயாய நம: |
| " வக்ரதுண்டாய நம: | " சுத்தகுணுய நம: |
| " உமாபுத்ராய நம: | " மகாகாயாய நம: |
| " விக்னராஜாய நம: | " சித்திதாய நம: |
| ஓம் கௌரிமலசமுத்பவாய நம: | ஓம் மகோதராய நம: |

ஓம் கஜவக்த்ராய நம:
" பீமாய நம:
" பரசுதாரிணே நம:
" கரிகும்பாய நம:
" விஸ்வமூர்த்தயே நம:
ஓம் சித்திகணேசாய நம:

ஓம் உக்ரதேஜஸே லம்போதராய [நம:
" காமதாய நம:
" விக்னேஸ்வராய நம:
" சிமுகாய நம:
ஓம் சக்திசமயுக்தாய நம:

என்றுமீட்டும் இவ்விருபத்தொரு நாமங்களாற் றூர்வையருச்சனைசெய்து

### தியானம்.

கணேசா வக்ரதுண்டஸ்ச உமாபுத்ரஸ்த்தைவச விக்னராஜா காமதஸ்ஸ விக்னேஸ்வரயிதிஸ்மூர்தா சிவமுதஸ்சக்தி சம்யுக்தோ கௌரீமலஸ்மத்பவா ஏகித்யேயஸ்த சுத்தகுணோ மகாகாய யிதிஸ்மூர்தா நதிஸ்சசித்திதா ப்ரோகதோ மகாதாயிதிஸ்மூர்தா கஜவக்த்ரஸ்த பீமஸ்ச ததாபரசுதார்யபி கரிகும்போ விஸ்வமூர்த்தி உக்ரதேஜாஸ்ததைவயச லம்போதரஸ்தத் சித்திகணேச சஹைகவிம்சதி இத்யேவிம்சதி தூர்வாயுக்மம் பூஜாம் ஸமர்ப்பயாமி, என்று தியானஞ்செய்து,

### நைவேத்தியம்.

காமானிரம்ணீயானீ, ஜபேதயிஸ் சபூசயேத் கணேசாத்தஸ்ய வஸ்யந்தி சங்கடானி மகாநத்யபி மகாசங்கட தத்கோஹம் கணேச சரணம் கதம் தஸ்மான் மனோரதம் பூர்ணம் குருவிஸ்வேஸ்ப்ரயோ ததஸ்வர்ணமயம் புஷ்பம் விக்னேசாய நிவேதயேத் ஸ்ரீ கணேசாயநம: நைவேத்யம் ஸமர்ப்பயாமி, என்று நைவேத்தியஞ்செய்து,

### ஆலாத்தி.

கணபதி நமஸ்தேஸ்து சத்ய ஞானப்ரகாசக நீராஞ்சனம் ப்ரதாஸ்யாதே ஜோராஜே நமோஸ்துதே ஸ்ரீ கணபதிபாய நம: உத்தர நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி, என்று ஆலாத்தி சுத்தி,

### பிரதக்ஷணம்.

யானிகானி சபாபாணி ஜன்மாந்தரக் குருதாஹனிச தானிதானி விநஸ்யந்திப்ர தட்சணபதேபதே பாபோஹம் பாபகர்மாஹம் பாபாத்மா பாபசம்பவா தராஹிபாங் க்ருபயாதேவ சரணாகதவஸ்தல அன்யதாசரணம், நாஸ்திதவமே சரணம், மாதஸ்மாத் காருண்யபாவேன ரட்சரட்ச கணபதி ஸ்ரீ கணத்யட்சாய நம: ப்ரதட்சணம் ஸமர்ப்பயாமி, என்று ப்ரதட்சணஞ்செய்து,

### நமஸ்காரம்.

நமோஸ்து தேவதேவேச பக்தானும் பயப்பிரதா விக்னானும் நாசகர்த்ரேதே அ்ராத்மஜ நமோநம: ஸ்ரீ விக்னநாசினே நம: நமஸ்காரம் ஸமர்ப்பயாமி, என்று நமஸ்காரஞ்செய்து,

### பிரார்த்தனை.

வக்ரதுண்ட மகாகாய சூரியகோடி சமப்ப்பவ ஸ்திரீ விக்னம் குருமே தேவ சர்வகார்யேஷு ஸர்வதா ஸ்ரீ வக்ரதுண்டாயநம: ப்ரார்த்தனும் ஸமர்ப்பயாமி, என்று பிரார்த்தனை செய்து.

### அர்க்கியம்.

கணேஸ்வர நமஸ்துப்யப் சர்வசித்திப்ரதாயக சங்கஷ்டம் ஹரமே தேவ க்ருஹணார்க்யம் நமோஸ்துதே ஸ்ரீ கணேசாய நம: ஹிதமர்க்யம் ஸமர்ப்பயாமி,

க்ருஷ்ணபக்ஷ சதுர்த்தயாந்து பூஜிதோஸிவிதூத்யே, க்ஷிப்ரப்ரசதா தமைதேயிக்ரு ஹரணார்க்யம் நமோஸ்துதே ஸ்ரீ விக்னாசினே நம: ஹித மர்க்யம் ஸமர்ப்பயாமி,

திதிஞமுத்தமேதேவி கணேசப்ரய பல்லவே சங்கஷ்டம் ஹரமே தேவி க்ரஹணார்க்யம் நமோஸ்துதே ஸ்ரீ சதுர்த்திதேவை நம: ஹிதமர்க்யம் ஸமர்ப்பயாமி, என்று அர்க்கியங்கொடுத்து,

## சந்திர பூஜை.

—*—

### அர்க்கியம்.

க்ஷிரோதார்ண வசம்பூத லட்சுமி பந்தோறி சாகர க்ருஹணார்க்யம், மயாதத்தம் ரோஹிண்ராசஸ்திரீ தஸ் கசின்ரோணீஹித சாத்ராயநம: ஹிதமர்க்யம் ஸமர்ப்பயாமி,

போமாயத் விசவர்யாய தேவராசாய சீலீனே, ரோஹிணீச ஹிதா யர்பி க்ருஹார்க்ஞயம் நமோஸ்துதே ரோஹிணீ சஹித சந்த்ராய நம: ஹிதமர்க்யம் ஸமர்ப்பயாமி, என்று அர்க்கியங்கொடுத்து,

### நமஸ்காரம்.

ககனும் கணசம்தீப க்ஷிராப்தி மதனோத்பவ பாபாசித்தி கந்தாத சோமராஜ நமோஸ்துதே ஸ்ரீ சந்த்ராய நம: நமஸ்காரம் ஸமர்ப்பயாமி, என்று சந்த்ரபூஜைசெய்து,

## ஆசாரிய பூஜை.

—(*)—

மோதகாமஸ்த பலாம்ஸ்தஸ்யபரி பூர்த்தயே ஸ்ரீ சற்குரவே நம: உபாய்தானம் ஸமர்ப்பயாமி,

ப்ரதிமாங் குரவேதத்யா தாசார்ய யசதட்சிணும் வஸ்ரம் கும்பசமா யுக்தா மாதெளமந்த்ரமி மம்படேத் கணேஸ்வர ப்ரசாதேனமமசம் தூம

ஸோரதா துப்யம்சம் பரதேவதேவ ப்ரதிமாம்து கஜானன இஷ்டகாமார்த்த ஸித்யார்த்தம் புத்ரபௌத்ர ப்ரவர்த்தன கணாதிராசதேவேச விக்னராச விநாயக தவமூர்த்திப்ரஸாதேன ப்ரசன்னோ பவசர்வதா ஸ்ரீ சற்குரவே நம: கலசப்ரதி மாதானம் ஸமர்ப்பயாமி, என்று ஆசிரியபூஜை செய்தனர்.

விநாயகபூஜை சம்பூர்ணம்.

---

## கார்த்தவீரியன் பூசித்தது.

---

கணேசப் பிரசாதத்தினாலுதித்த புத்திரனுக்குக் காலுங்கையுமின்றி, முண்டமாயிருக்கக்கண்ட சுகந்தையெனுந் தாய் வருந்துவதறிந்து அவள் காந்தனான கிருதவீரிய ராஜன், வந்துபார்த்து வருந்தினபின் விநாயகர் விரதபலத்தினாலுண்டான இப்புத்திரனுடற்குறையை, அக்கடவுளே! விலக்கியருளுவரென்று சொல்லி, அவளுடைய மனதைத்தேற்றி; அக்குழந்தைக்குக் கார்த்தவீரியனென, நாமகரணஞ்சாற்றி வளர்த்துவருகையில், அக்குமாரனுக்கு பன்னிரண்டு வயதானபின்பு அங்குவந்த தத்தாத்ரேய முனிவரிடந் தனது மகனுடற் குறையை விண்ணப்பஞ் செய்ய அதற்கவரிரக்கமுடன் தீக்ஷைசெய்து, ஏகாக்ஷர மந்திரத்தை யுபதேசித்தபடி கார்த்தவீரியன் வனத்தில் பன்னிரண்டு வருடம் வரையில், அம்மனுவை தியானித்து அருந்தவஞ் செய்கையில், அதேத்தவோர் தடாகத்தினிடமாக விநாயக மூர்த்தி பிரத்தியக்ஷமாகலும், அவனெழுந்து வணங்கக்கூடாமையால் மனத்தாலனந்தமுறை வணங்கிநிற்கையில், அவனுக்கிரண்டு கால்களையும், ஆயிரங்கைகளையும், அதற்கேற்ற வலிமையையும், ஐஞ்ஞூறு பாணங்களையு மநுக்ரகிக்க, அப்போதங்குவந்திருந்த பிரமன் முதலியோர்களாலும், ஆசீர்வதிக்கப் பெற்றவனு யக்கடவுளைப் பேருவகையுடன் றுதித்துப் பவளவொளியோடு தனக்குக் காட்சிக்கொடுத்த அவ்விடத்தில் பொன்னாலு மணிகளாலு மோராலயமமைத்து பவளத்தினாற்செய்த கணேச மூர்த்தியை யதிற்றாபித்துப்பூசித்து மீண்டு தனது நகரமடைந்தபின்னர், உலகமுழுவதும் தனதாஞ்ஞைசெல்லச்செலுத்தித் தேவர்களெல்லா மேவல்கேட்க, சக்கரவர்த்தியாய் சுகித்தரசாண்டனன்.

மேற்கூறின மூர்த்தமும் வனமும், பிரவாள விநாயகர், பிரவாள வனமென்னும் பெயராய் வழங்கி வருகின்றன.

பின்பொருகாலத்தில் ஆதிசேடனும் பூபாரந் தாங்கமாட்டாதவனாய் அப்பிரவாள கணேசமூர்த்தியையடுத்து, அன்போடுபூசித்து வேண்டின வரங்களைப்பெற்று அவ்வனத்தின்கண் தரணீதரமெனவோர் நகரமுண்டாக்கியதில் தரணீதர விநாயகரென மற்றோர் கணபதிமூர்த்தப் பிரதிட்டையுஞ் செய்தனன்.

அவ்விநாயகரை இராவணன் பூஜித்து இலங்காதிபத்தியமும் பாண்டவர்கள் பூசித்துத் துரியோதனாதிகளை ஜயித்தராசாட்சியும் பெற்றனர்.

---

முன் சனனத்தில் சூரவீரியன் சாமனெனப் பிறந்து செய்தக் கொலைப்பாதகமானது, மறுசனனத்திற்பிடிக்க, அங்கவீனனாகப் பிறந்து அப்பழியையும், கைகால் முடத்தையும் நீக்கிக்கொள்வதற் குபாயந் தெரிந்து முனிவர்களுபதேச வழிபாட்டின்படி தவஞ்செய்து காட்சியும், வரமும் பெற்றனன். இதனால் அவரவர் கன்மமானது எவ்விதத்துந் துணைக்கொண்டு வாதிக்குமேயன்றி, ஒருவரையும்விட்டு நீங்காதெனும் பிரமாண முன்னின்றன.

எவ்வித கன்மமும் பெரியோருபதேசத்தாலும், தெய்வ விரதத்தாலும், நசித்துப்போய்விடுமெனப் பெறப்பட்டது. ஆதலான் விவேகிகள் கன்மத்தை விசாரணையாற் றெளிந்து அவை நீங்கும்படியான முயற்சியிலேயே சிரத்தையுள்ளவர்களாக யிருப்பர்.

—(*)—

## அங்காரகன் பூசித்தது.

——(*)——

நருமதை நதிதீரத்தில், பரத்துவாச ரிஷியானவராற் சனித்த, சிறுமகவை பூமிதேவியெடுத்து வளர்த்து, அம்முனிவரிடஞ்சேர்த்தபின்னர் அங்காரகனென, நாமகரணஞ்சாற்றி உபநயனாதிகளை முடித்து வேதாகமங்களுடன் கணேச மந்திரத்தையு முபதேசித்தவண்ணம் அச்சிறுவன் அம்மந்திரத்தை யனுட்டித்ததற்கிரங்கி யானைவதனமும், துதிக்கையும், தசபுஜங்களுடன் பிரசன்னமான கணேச மூர்த்தியால், தேவர்களோடு கூடி அமுதுண்ணத்தக்கவுறவும், கோள்களோடொன்றாகவிதியும்பேறும் மங்களனென்னும் நாமமும், அந்நாமவாரஞ்சேர்ந்து, அமரபக்ஷத்தில் வருகின்ற சதுர்த்தி, ஏனைய சதுர்த்திகளைவிட சிறந்ததா யனுட்டிப்போர்க்கு, சர்வசங்கடங்களும் நீங்கவும், அவ்விரததினம் சங்கடசதுர்த்தியென வழங்கவும், அநுக்ரகிக்கப்பெற்ற பின்னர், அந்நிலமகனாலயஞ்சமைத்து,

சிந்தாமணி விநாயகரென்றோர் மூர்த்தப் பிரதிட்டைசெய்து, பூசித்து வருநாளில்; அக்கடவுட் பேரருளால்வந்த விமானத்திலாரோகணித்து, உம்பருலகஞ்சேர்ந் தமுதுண்டு, நவக்கிரகங்களி லொருவனாகப் பெற்றனன். அவ்வங்காரகன் அம்மூர்த்தியை, அவந்திமாநகர மேற்புரத்தில் பிரதிட்டைசெய்து பூசித்தது. காமதமென்னுந் தலமாயவிடத்தி லது முதல் யோகிகள், சித்தர்கள், முதலாயினோரும் வந்துபாசிக்கவிருக்கின்றது.

---

விநாயகக் கடவுளை, விதிப்படி உபாசிப்பவர்களுக்கு, கோள், பகை, பிணி, முதல்யனவும், நவக்கிரகங்கள் முதலியனவும், யாதுஞ் செய்யமுடியாதெனவும், ஏதோ வோரவசரத்தி னெருங்கினும், அவருடைய மந்திரத்தாலவை நசுங்கிவிடுமெனவும் பெறப்பட்டது. ஆதலினால் பத்தர்களின் பாவநாசனெனும் பெயருடன் "சர்வவிக்னோபசாந்தே" எனவும் வழங்கி வருகின்றன. இதனாற்றான் "அஞ்சுவது மில்லை" எல்லாம் நல்லதேயென, அன்பர்கணிச்சயித்துள்ளாரென்பதே சான்றாம்.

---

## சந்திரன் பூசித்தது.

—(*)—

கைலாயத்திற் சிவபெருமான், கணேசர், சுப்பிரமண்ணியருடன், வீற்றிருக்க அவண்வந்த நாரதமுனிவர் ஒருகனியையவைத்துப்பணிய, அக்கனியை மருங்கினுற்ற விருவரிலியாவர்க்குக் கொடுப்பதென்றவர்வினவப் பிரமன் இளைய பிள்ளையார்க்கென்றபடி கொடுத்துவிட்டமையால், கணேசமூர்த்தி, சீற்றங்கொண்ட அபசாரத்தை மன்னித்தருள்கென பிரமன்தேவகணங்களுடன் வணங்க, அவனுக்கருட்புரியுஞ் சமயத்தில் சிறிதவமதிப்பாக, நகைசெய்த சந்திரனை, பிரகாசமின்றி மறைவுபட சபித்தருள அக்குற்றத்தை மன்னிக்கும்படி இந்திரன் அப்பிரணவ சொரூபரைத் துதிசெய்ய. அதற்கிரங்கி, ஆவணி மாதம் பூர்வபக்ஷ சதுர்த்தியில்மாத்திரம் ஒருவரும் பாராதிருக்கவும், மற்றைய நாட்களில் முன்போலக் காணலாகுமெனப் பரிகார வாக்கருளப்பெற்று, இந்திரனால், சடாக்ஷர மந்திரோபதேசம்பெற்று, கங்காநதியருகில், சர்வஸித்தி நகரத்தில், அம்மனுவையுபாசித்து விநாயகர் காட்சியுடன், கலையிலொன்றை முடிமேலணியும் வரமும்பெற்று, பாலசந்திர விநாயகரென, மூர்த்தப் பிரதிஷ்டை செய்து துதித்து, பழையபடியே, பரிசுத்தப் பிரகாசனாகவும் அமர்ந்து விளங்கினன்.

—*—

## தூர்வை மகத்துவம்.

—)*(—

அவந்தியெனும் பட்டணத்தில், சுபுத்திராதேவி நாதனான, சுலபனெனும் வேந்தன், அரசியற்று நாளில், சிவபக்தியிற் சிறந்து மிகவுந் தாரித்திரனாய்ப் பிச்சைக்குவந்த, மதுசூதனென்னும் வேதியனை, அரசனவமதிப்பாக நகைக்க, அவ்வேதியன்கோபித்தரசனை எருதாகச் சபிக்க, அதற்கவ்வரசன் மனைவி அவ்வேதியனைக் கழுதையாகவும், அவ்வேதியன் அவ்வரசியைப் புலைச்சியாகவு மொருவர்க்கொருவர் சபித்தவாறே; அரசன் உழவரிடத்திலும், வேதியன் வண்ணானிடத்திலும், இராஜ பத்தினி புலைச்சேரியிலுமாக வுதித்திருக்கு நாளில், அம்மூன்று பிராணிகளும், மிகுந்த மழையடைவால், அவ்வூர்க்கடுத்த விநாயகராலயச் சார்பாகச் சந்தித்து, ஒன்றினையொன் றதைத்தலாலு முட்டினதாலுமுண்டான வமலைக்காற்றாது, அன்று விநாயக சதுர்த்தியாதலால், சந்தியா பூசை, நிறைவேற்றி, ஜபஞ்செய்திருந்த முனிவர்கள் ஆலயப்புறம்பாக அடித்துத் தூரத்தியும், மழைத்தடையால் அவைகள், அக்கோயிற் பிரகாரத்துட் சுற்றிவருகையில், அவ்வெருதுங் கழுதையும், அப்புலைச்சியின் சுமையினின்றும் பிடுங்கி வாயிற்குதட்டுகையிற் சிந்தின புல்லும், அவள் கையிற்கொண்டிருந்த புல்லுங் காற்றினாலெழும்பி, அச்சன்னிதிக் கடவுட்டிருமேனியிற் சாத்தப் படலும், அதுகண்டு, அவ்வாராதியர்கள் விழுப்புநேர்ந்துவிட்டதென்று, அக்கடவுளுக்குக் கும்பாபிடேகஞ் செய்தனர்.

மூன் காற்றினாற்படிந்த மூன்றுபுற்களும், பின்னாக நேர்ந்த வபிஷேகமும், அப்பிராணிகள் செய்ததாகவும், பிரகாரத்துள் வெருண்டு சுற்றியோடினது வலம்வந்ததாகவும். ஆகாரமில்லாதிருந்தது உபவாசமாகவும், ஒப்புக்கொண்ட அக்கடவுளது பெருங்கருணையால், அச்சதுர்த்தி தினத்தில், உயிரிழந்த அம்மூன்று பிராணிகளுந் தேவவுருவம்வாய்ந்து விமானாருடம்பெற்று புண்ணியலோகமடைந்தன.

---

பூர்வ சன்ம கன்மத்தின்படி யேற்படுங்குணமானது, பிற்காலெவ்வித சிறப்புகளடைந்தார்களெனினும், அவர்களையத்தருணத்தில் மயக்குவித்து வினைவசத்திற்காளாக்கி சனனயீனத்தைத்தருந் திறமையுடையதாதலான் அவற்றைப்பரியாலோசித்து, தங்கடங்கட் குணத்தையே மாற்றிக்கொள்ளவேண்டியே, ("நல்லாரிணக்கம் நின்பூசைநேசம் ஞானம்") எனவும் "மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை" எனவும் பட்டினத்தடிகளால், வகுத்துரைக்கப்பட்டன.

எவ்வித பாபசென்மத்தையும், பூசையினாலாவது, பெரியோர் சேவையினாலாவது நீக்கிக்கொள்ளலா மென்பதும், இருவினை வாசனையைப் போல, நல்ல சேர்க்கை, தீய சேர்க்கையிவற்றால், நல்ல சேர்க்கையினால் பாப நசித்தலும், தீயசேர்க்கையினால் பாபம் விர்த்தியாதலும், உள்ளத் தன்மையென அனுபவிகட் கூறுகிற்பர்.

ஒருவர்க்கொருவர் சாபத்தின்படி அரசன் எருதாக, வேதியன் கழுதையாக, அரசி புலைச்சியாக, சன்மமெடுத்திடினும், அச்சாபமனைத்தும் ஸ்ரீ விநாயகராலயத்தையடைந்த புண்ணியவசத்தினால் நிவர்த்தியாயின வென்ப திவணேற்பட்ட சருதியினாஸ்பதமாயினும், ஆலயத்தின் மகிமை ஸ்திரப்பட்டன. தன்னையுள்ளபடி ஆராய்ந்தடக்கும் வரையினும், ஆலயவழிபாடு, முதற்கருவியாக விளங்கிநிற்றலென முடிவுரை.

—(*)—

## தூர்வை யருச்சனை.

எமனென்னுங் கூற்றனிடம் வெளிப்பட்ட அகோர சொரூபனென்னும் அனலாசுரன் மண்ணுலக ஜீவர்களை வதஞ்செய்து விண்ணுலகை யழிக்க நெருங்குகையில் தேவேந்திரன் மனந்தளர்ந்து திருமாலிடஞ் சார்ந்து முறையிட்டதன்மேல், அப்பரந்தாமன் கணேச மூர்த்தியை தியானித்து துதிசெய்ய சர்வஜீவகோடிகட்கும் புகலிடமாயுந் தாரகப்பிரமமாகவும், விளங்குமக்கடவுள் பிராமண பிரமசாரியாய் பிரத்தியக்ஷமாகி அவரவர்கட்கபயாஸ்தந்தந்து அவ்வனலாசுரனை யெடுத்தோர் கவளமாய்விழுங்க அவ்வெப்பம் சராசரங்களினும் பீடிக்கப்பட்டு துயருழந்தாற்றகிலராய் நிற்க, சந்திரன் அமுததாரைகளால் அபிடேகித்தும், பிரமன் வேண்டுகையாற் சித்திபுத்திகளுந் தமது குளிர்ந்தவவயங்களை திருமேனியிலொற்றியும், மஹாவிஷ்ணு தாமரை மலர்களை யொற்றியும், வருணன் சீதள நீரைக்கொண் டபிஷேகித்தும், சிவபிரான் தமது திருமேனியிலணிந்த ஆதிசேடனையெடுத்து தரித்தும் அவ்வெப்பம் நீங்காது, நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள் பத்திமையாகத் துதிசெய்து அவரவர்கள் தனித்தனியாக இருபத்தோ ரறுகுகளைக்கொண்டு, சிரசுமுதற் பாதமளவுஞ்சாத்த அவ்வனல் குளிர்ந்ததன்மேல், மற்றவர்களு மவ்வனல் நீங்கி யாவரும் வேதாகமங்களாற் றுதித்தார்கள். தேவர்கள் புஷ்பவருடஞ் சொரிந்தார்கள். திரிலோகமுந் தழைத்து மகிழ்ச்சியடைந்தன.

விநாயகமூர்த்தி அம்முனிவர்களைப்பார்த்து எமக்குச் செய்யப்பட்ட உபசாரங்கள் பலவாயினும், அறுகுகொண்டு பூஜிப்பதே முக்கியப் பிரீதியாமெனத் திருவாய்மலர்ந்து வேண்டிய வரங்களையுந்தந்துத் தமது திருவுருவத்தைக் கரந்திட்டபின்னர், அவ்விடத்தில் தேவர் ரிஷிகள் முதலானவர்கள் ஓராலயஞ்சமைத்து கணேச மூர்த்தப் பிரதிட்டை செய்து, அனலாசுரனை விழுங்கின காரணத்தால் காலானலப் பிரசமனென்றும், அக்கினியுமஞ்சத்தக்க வசுரனை விழுங்கி சந்திரனையொப்ப வெல்லாவுயிர்கட்குங் குளிர்ச்சிதந்தமையால் பாலசந்திரனென்றும், திருநாமமிட்டு அபிஷேகமுடித்து அறுகினைச் சாத்தி அதுமுதல் அவ்வறுகினையே சிரேஷ்டமாகக்கொண்டு துதித்து விளங்கினர்

---

அனலானது யெவைகளையுஞ் சுட்டெரிக்குந்தன்மைத் தனது சுபாவமாயினு மவற்றையடக்குதலே நலமென்பதுத்தோன்ற (பாபக்குணத்தையடக்கியாட்கொள்வதே தெய்வ கடாக்ஷம்) என்பதைப்போல துஷ்டரை நிக்ரஹிப்பதே அரசுரிமையும், முட்செடி முதலிய களைவாங்குதலே பயிர் வர்த்திக்காமெனவும், சகசநிட்டை முதலிய, தவந்தான விரதமே; பிறப்பிறப்பினை யகற்றுமெனவும், யாதொரு பற்றுமில்லாது நிர்ச்சிந்தையாயிருத்தலே சகலகேவலமுங் கடந்திகின்ற சிவானந்த யோகமோக முதிர்ச்சியினுலெழும் மௌன சாதகாஸ்ய சமாதிநிலையெனவும், அதாவது சிவத்துடன் கலந்து சர்வமாய் நிற்றல் (சிவமாகுதல்) என்பன முதலிய, புண்ணியவழிபாடடையச்செய்தல், கடவுள், குரு, பெரியோர், விரக்தர் இவர்களாற் றரக்கூடியதாதலான்; இவர்களுடைய கருணையின்றி, மற்ற சாமானியமான வேறெவ்விதத்தினு மடையக்கூடாதாதலான், (கடவுட் சற்குரு நல்லோரின் கருணையாலடைவர் ஞானம்.) என, வைபாடிக ஸ்லோஹம் கூறயெழுந்தது.

இவைக்காதரவாக, தேவர், முனிவர், பக்தர், இவர்களது தவம், யாகம், யோகம், பக்தி, விரதம், இவற்றைத் தடுத்தும் கெடுத்துள்ள, அசுரராக்கத பைசாசக் குணமுடைய பாபாத்மாக்களை, நசித்துத் தன்னையடுத்தாரை இரட்சிக்கிறது கடவுட் காருண்யமாதலான் இவை நிலைநிற்பான்வேண்டி விநாயகப் பெருமான் அசுரர்களைத் தசித்து அநுக்ரஹத் தொழிலை யினிதுமுடித்தாரென சம்பூரணமாயின.

---

## ஜனகன் பூஜித்தது.

மிதுலாபுரியில், ஜனகராஜன் தானே கடவுளென்கின்றவெண்ணத்துட னரசாண்டு வருகின்ற காலத்தில், அங்குவந்த நாரத முனிவரை,

அவ்வரசன் வணங்காது மமதைமேலிட்டவனாயிருத்தலைக் கண்ட முனிவர், அரசனே! உனது நன்னடைக்கான செல்வத்தைக் கடவுட் கொடுத்தருள்வரென, கடவுள் தானல்லது வேறேதெனச்சொல்ல, அதுகேட்ட நாரத முனிவரும், சர்வ சக்தியுடைய கடவுளுண்டென்பதை, நீ நாணங்கொண்டே, உன் பிரமையுள்ள மயக்க வீண்ஞானமகன்று, அவ்வெண்ணம் நசித்துப் பாழாகும்படி உன்னெதிரிற்றானே காண்பாயென்று அவணீங்கி கவுண்டின்ய முனிவரின், ஆச்சிரமஞ்சேர்ந்து அவர் பூஜிக்கின்ற கணேசர் சந்நிதி யடைந்து, அக்கடவுட் டிருவுளங் களிகூர, யாழிசைக் கூட்டி, பாடித் துதித்தபின், ஜனகன், தேவரீர் பரத்துவமாவது நினையாது, அகம் பிரமமென்று மதித்து பெரியோர்களைச் சற்றாயினு மதியாதிருக்கின்றானென விண்ணப்பஞ் செய்ததற் கிரங்கிய, கணேசப்பெருமான் (சருவமுந் தனக்குளொடுக்க மென்பதை வெளிப்படுத்துவான் வேண்டிய வோரவசர மேற்பட்டமையினால்,) தொழுநோய் கொண்ட வோரந்தணராக அவ்வரசனிடஞ் சென்றுத் தனது பசி தணிய வமுது படைக்கவேண்டுமென, அவனுற் கூடியவுணவுகளைப் படைத்தும் மற்றும் பசிதணிந்திலராகக்கூற, அதுகேட்டு அக்குறைவயினி நீக்கத்தக்கவரிடத் தெழுந்தருளலாமென்றரசன் சொல்ல, தன்னிடம்வந்த வொருவரின் பசியைநீக்க வல்லபமில்லாத நீயோ பிரமமென்று கோபித்து, அவ்விடம்விட்டு, நீங்கிப்போனவுடன் * திரிசிரனென்னு மோரேழை யந்தணன் வீட்டில் பலவற்புதங்கள்) நடக்கக்கண்டு, ஆச்சரியமடைந்து, வந்தவர் கடவுளாமென நிச்சயித்து அக்கணமே, விரைந்தெழுந்துபோய் அப்பிராமணன் கிரகத்திலிருக்கக் கண்டு, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து எனதறியாமையால் அகம்பிரமமென்று கர்வங்கொண்ட குற்றத்தை, க்ஷமித்து இனி தேவரீர் நிர்மல ஞானத்தை யடியேன் றெளியுமாறநுக்ரகிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, கணேசப் பெருமான் அவனது சித்தபரிபாகத்தை யறிந்து, மீட்டும் ஜெனனமெடாதவிதமாய் ஆகமவிதிப்படி தீக்ஷைசெய்து, () ஞானபோதத்தை சாங்கியமா யவனுக்குபதேசித்தருளலும், ஜனகராஜன் அவ்வுபதேசமார்க்கத்தினின்று, நிஷ்டைகூடி யாவருமெய்ஞ்ஞானியென்று சொல்லும்படியாக உலகில் நெடுங்காலம்வரையில் அரசாட்சியுஞ் செய்துகொண்டு ஜீவன்முத்தனாயிருந்தனன்.

## () ஞானபோதத்தின் விளக்க சுருக்கம்.

—*—

பதி, பசு, பாச, விலக்கணமாகிய, கடவுள், ஆன்மா, (ஆணவம், கன்மம், அசுத்தமாயை, சுத்தமாயை,) நான்காகிய பாசம், ஆணவமலஞ் சட

மாதலால், தானேவந்து பொருந்தமாட்டாமல், ஆன்மாக்களே ஆணவமலத்தை பிடித்ததெனு மாயைய யுற்பவம். ஆணவமலம் இயற்கை செயற்கையெனு மிரண்டுமின்றி, நெல்லுக் குமியும், செம்புக்குக் களிம்பும், கடல்நீருக்கு உப்பும்போல, ஆன்மாக்களுக்கு ஆணவமலம், அநாதி செயற்கை, அநாதி சையோகமெனும், மாயை கற்பிதம். பசியுள்ள குழந்தையைப்போல ஆணவமலம், பசியையடக்கும் பாலைப்போல கன்மமலம், பசியறிந்து தானேயெடுத்துகுடிக்கமாட்டாத குழந்தைக்கு, இரக்கத்தினலே பாலடையில் விட்டு வாயிலே வைத்துப் புகட்டும் தாயைப் போலும்.

குருடனைப்போலும் ஆன்மா, குருடைப்போலும் ஆணவமலம், கோலைப்போலும் சரீரம், குருடன் தானே கோலையெடுத்துக்கொண்டு யிச்சித்தவிடத்திற்குப் போகமாட்டான், இச்சிக்கப்பட்ட கோலுங் குருடன்கையில்வந்து பொருந்தாது, இதையறிந்த தனக்குரிமையானவிரக்கத்தினலே கோல்கொடுத்திழுத்து அவன் நினைத்தவிடத்திற்கொண்டு போய்விடும் அன்பனைப்போலும்.

குலாலன் பாண்டங்களை தனது நினைவின்படி வனைவானுயின் ஒரே வடிவமாகவனைவன், அவ்வாறின்றிப் பலவடிவங்களாய் வனைதலால் பிறர் நினைவின்படியே வனைவான். இவற்றுள் மண்ணைப்போலும் மாயை, பாண்டத்தைப்போலும் தனு, பிறரைப்போலும் ஆன்மா, இவைகளின் விருப்பத்தைப்போல வனைவதில் குலாலனைப்போலும்,

படிகமலை, அம்மலைக்கொளி, அவ்வொளிக்குப் பற்றுங்குணம், பற்றுந்தொழில், வன்னம், வன்னத்தைப் பற்றுவிக்கின்றவன், என அறுவகைப்படுவதில், மலையைப்போல ஆன்மா, ஒளியைப்போல ஆன்மபோதம், பற்றுங்குணம்போல ஆன்மபோதத்திற்கு அறியுங்குணம், தொழிலைப்போல ஆன்மபோதத்திற்கு அறியுந்தொழில், வன்னத்தைப்போல மாயா கருவி அதைப் பற்றுவிக்கின்றவரைப்போலும்,

உள்ள இந்நான்கு விதத்திற்குங் காரணராய் நிற்கின்றவர்ப் பதியாகிய இறைவனேயெனும் உபமானங்கள்.

சந்திராதித்தர்களை இராகுக் கேதுக்களும் நெருப்பை நீரும், ஆகாயத்தை மலையும், மறைப்பதுபோல, ஆணவவிருள் ஆன்மாக்களை மறைக்கும், கடவுள் நிரவயரென்பதை மறந்து அவயவர் என்னுங்கருத்தால் கன்மமும். கன்மத்தால் மாயையும், மாயையால் தனு கரண புவன போகங்களுண்டானதால், ஆன்மா மலமாதியால் மறைவுபடும் வகை.

ஆன்மாக்களை முத்தியிற்சேர்க்கவேண்டுமென்பதே இச்சை, அவை யிச்சித்த கன்மங்களை யறிவதே ஞானம், அக்கன்மங்களையூட்டி யுறக்கித் தொலைப்பித்தலே கிரியை, இவற்றுள் பண்டபதார்த்தங்களிற் சென்று பற்றுதலே இச்சை, அவைகளைப் பகுத்தாராய்தலே ஞானம், சர்வத்தையுந் தனதென்றழுந்துதலே கிரியை, என, இறைவன் ஆன்மாக்களுக்கு கன்மங்களைப் புசிப்புக்கு முறைமை.

தூலம், சூட்சுமம், அதிசூட்சுமமாகிய, கன்ம மூன்றும், வினையும், வினைகளுக்குப்பின் பலனாகவரும். புண்ணியபாவங்கள், அப்புண்ணிய பாவங்களுக்குப்பின் பலனாகவரும். இன்ப துன்பங்கள் இவைகளே, ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவமாகி, பயிரிடுமிறவனைப்போல் இருவினைகளும், அப்பலனைக் களஞ்சியத்திற் கட்டிவைப்பதுபோல புண்ணியபாவங்களும், அதிற் சிறுகச்சிறுகவெடுத் துண்பதுபோல, இன்ப துன்பங்களை, ஆன்மாக்கள் அனுபவிக்கும் கன்மபலன்.

விளைத்தப் பலன்களாகிய நெற்களஞ்சியந் தீப்பட்டுவெந்தும், உண்ணவைத்தநெல் உண்டு செலவழிந்தும், விதைத்த நெல் மழையின்றிக் காய்ந்தும்போனதுபோல, பக்குவம்வந்தகாலத்தில் ஞானாசாரியருடைய திருவருணோக்கால், கன்மங்கள் வெந்துபோய்விடுமெனும், கன்மங்களொழியு முறைமை.

கேவலம், சகலம், சுத்தம் எனுமூன்று அவித்தையில், காரணகாரியமிருவகையால், நெற்றி, கண்டம், இதயம், நாபி, மூலம் எனும் ஐந்திடத்திலும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், ஆகிய கீழாலவத்தையடைந்து நீங்கி அருள் தரிசனத்தால் பிரமானந்தத்தை யனுபவிக்கவேண்டிய அவத்தை மூன்று.

மாயாகருவிகளைப் படைத்து அறிவையுண்டாக்குதல் சிருஷ்டி, அவைகளை நிறுத்தி, அறிவை நிலைபெறச்செய்தல் திதி, அவைகளை ஒடுக்கி அறிவைப்போக்குதல் சங்காரம், அறியுந்தொழில்களை அருளைக் கொண்டு அவரவர்கள் கன்மங்களைத் தக்கபடி நிலைநிறுத்தல் திரோபவம், இருவினைகளை யறுத்தல் அனுக்கிரகம், எனும் பஞ்ச கிருத்தியம்.

ஆன்மாக்கள் மாயா கருவிகளைப் பற்றி யறிந்திருத்தலே பிறப்பு, அவைகளைநீக்கி யறியாதிருத்தலே இறப்பு, ஆபாசமுற்றிருத்தலே நரகம், அவைப்பற்றிருத்தலே மோக்கமெனும். பிறப்பிறப்பு, மோக்கநரகம்.

விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர், எனு மூன்றுவித ஆன்மாக்கள் செயல் கதி.

ஆன்மாக்களுக்கு இருவினையொப்பு வந்தகாலத்து வண்ணான் வத்திரத்திலுள்ள அழுக்கை உழவுமண்ணைக்கொண்டு, நீக்குவதுபோல மாயாகருவிகளைக்கொண்டு நீக்கி ஆன்மாக்களை இறைவனுட்கொள்ளுவகை.

மலநிவர்த்திக்குக் காரணமாகிய சிவபுண்ணியங்கள், உபாய சரிதை, உபாய கிரியை, உபாய யோகம், உபாய ஞானம், உண்மைச் சரிதை, உண்மைக் கிரியை, உண்மையோகம், உண்மை ஞானம், எனும் பத்தில் முந்தின ஒன்பதும் மலமிலை, அவைகள் ஆன்மாக்களாற்செய்யப்படுவன. பிந்தின ஒன்று அருணிலை அஃது தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவ சுத்தி, ஆத்மரூபம். ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், எனும் பத்தையும், இறைவனே ஆசாரியனாக யெழுந்தருளி பரிபக்குவனானவனுக்கு மலபரிபாக முண்டாக்கி முத்தியிற் சேர்ப்பித்தல்.

விரும்பப்பட்ட பதார்த்தங்களையும், வெறுக்கப்பட்ட பதார்த்தங்களையும் கண்டால், விருப்பும் வெறுப்புமற்ற பதார்த்தங்களை கண்டாற்போல நல்வினைப் பயனும், தீவினைப் பயனும் வந்தால் அவ்விரண்டினிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நிற்றல்.

இருவினையொப்பு:—விரும்பப்பட்ட பதார்த்தங்கள் பொன், வெள்ளி, முதலாயின, வெறுக்கப்பட்ட பதார்த்தங்கள் தரித்திரம், வியாதி.

**வியாபகம், வியாத்தி, வியாப்பியம்,** எனுமிம் மூன்றில், பதியாகிய கடவுள் சிவம் வியாபகம், அதாவது எங்குமாய் எல்லாமாய் நிறைந்திருத்தல். பசுவாகிய ஆன்மா, சீவன், வியாத்தி. தண்ணீர் அதாவது, மலத்திரவியங்களாலும், கன்ம தன்ம யிருவினைப் புண்ணிய பாவத்தினையடைந்தனுபவித் திரண்டில், நன்மையேனும், தீமையேனும், ஏதாவதொன்றிலீடுபடுங் கருவிகாரணமாகும் பிராணனாகியவுயிர். பாசமாகிய கன்ம சன்ம பழிபாவவாசனை வியாப்பியம், குணமாகிய உப்பு, அதாவது ஆணவம், காமியம், மாயையாகும் கன்மபந்தமே பசியாகவும், அப்பசியாகிய வினையாந் தீச்செயலுக்கு அவையே ஆகாரமாகிய பெருசிப்பாகுதல்.

இதனது சத்தியோசாதன நிலையை, வேதாகமத்திலும், குருமூர்த்தத்திலும் தெளிந்தோரிடத்தும் விசாரித்துத் தெளிக.

ஆகாரமொழிய வறிவொடுங்கும், அறிவு வொடுங்க நிலைதெரியும், நிலைத்தெரிய யிடங்காணும், இடமாகிய ஓய்ந்திருக்குஞ் சுழுத்தித்தோன்ற, அந்தயிடமாகிய முத்திக்கதிகாரியாகுஞ் சிவஞ் சத்தியென்று

மோங்கார குண்டலி யார்ச்சித ஓம் என்னு மூலாதார கணேச சொரூப சோதியுட் கலந்தகாலத்து அதனது வியாபகமாக, என்றும், எக்கும், எல்லாம் ஒருபடித்திறமாகக் கலந்தனுபவிப்பர் முமூட்சுகளாஞ் சீவேஸ்வரரென, ஒழிவிலொடுக்க கைவல்யமாம்.

பாசபந்தத்தினைக் கடந்தார்களே, பசு, பாசமாகிய பசியற்று நிரதிசயானந்த வாழ்வையடைவர். அவ்வரமில்லார், பிறப்பிறப்பதைத்தரும் பழி, பாவமாகிய, பசிக்கிரைதேடி வாளாய் மடிவரெனப்பேறப்பட்டது.

பசியில்லாதவனை யாதொருபாதியுமணுகி வாதிக்காதொடுங்குவதெப்படியோ அப்படியே, பாசபந்தமற்று நிர்ச்சிந்தையாயிருக்கு மஹாத்தும பிரபுவாகுஞ் சிவஞானச்செல்வரை, காலமுதலிய, கோட்பகை, வெகுளி, கிரகம், தோஷம், பழி, மரணக் கூற்றாகு மெவ்வாதினை யாதுஞ்செய்ய முடியாதென்பனந்தோன்ற; ஜனகராஜன்முன்னே விளங்கிய கணேசப் பெருமான், பசியென்பதை; முதலாவது ஐக்குவப்படுஞ் சுருதியாகக் காட்டியும், அதன்பின்னர் மகிமையாகிய அற்புதத்தால் தனது சொரூப ஞானமயத்தைத் தெரிவித்து முடிவாகத் தன்னையறிந் தொடுங்கும் நிலையைப்போதித்து ஆட்கொண்டாரென்பதே; இதனது ஞானசுதந்தர தற்போத யிலக்கணமெனச் சொல்லாதமையும்.

இதனாற்றான் பசியற்ற நிலையே பாசமற்ற நிலையென முடிவுரை யேற்பட்டதை யாதரித்து,

மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துப் போம். எனவும்,

"அன்ன விசாரமதுவே விசாரம்" எனவும்,

"பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்லப் பூவையரைக்
காணும் பணிக்கல்ல நின்பணிக் கல்ல காட்சிக் கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்ல வென் சிந்தைக்கெட்டு
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர்ச் சற்றல்லவே"

என முற்றுந்துறந்தப் பட்டினத்தடிகளும்,

"யோசிக்கும் வேளையிற் பசிதீரவுண்பது வுறங்குவதுவாக முடியும்"

எனத் தாயுமான சுவாமிகளும்,

"திண்டிக்கே கும்பிடாய்த் தீர்ப்பாயிற்றே நம்பாற்
பிண்டிக்குப் பின்னன்றோ சேர்பதவி" என உத்தமவாத நூலும்

இன்னுமனந்த நூலுமெழுந்தது.

இவை ஞானானுபவங் கைவராவரையிலும் வாதித்து மேற்கொண்டு நிற்கும். இவைக்காதாரமாயுள்ள வினையென்னுங் கன்மப் பசியானது, தெய்வம், குரு, சாத்திரவிசாரணை, மெய்த்தெளிவு, இவைக்கூடி நிரதிசயானந்தத்தே யழுத்துவித் ததனது பரிபக்குவமேலிட்டுள்ள நிலையிலொடுக்க முற்றியகாலத்தில் யாதொன்றுந் தங்களுக்கு வேண்டாதவர்களாய்,

"வேர்த்தாற் குளித்து பசித்தாற் புசித்து விழித்துயின்று" எனவும்,

"உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவுக்
கடைக்கா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டரும்வழிக்கே
விடையேறு மீசன் றிருநாம முண்டு" எனவும்,

இருக்குமிடந் தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகே னரனேயென் றேக
மிளைத்தாலும் போகே னினி. என, முற்றுந் துறந்தப்

பட்டினத்தடிகளும்,

"கனியேனு மழியசெங் காயேனு முதிர்சருகு கந்தமூலங்க ளேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துயான் கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினேன், எனவும்,

"பாசா டவிக்குள்ளே செல்லாத வர்க்கருட் பழுத்தொழுகுந் தேவ தருவே" என, சைவபிரசாரண சித்தாந்தக் களஞ்சியக் கண்மணியாகிய, தாயுமான சுவாமிகளும், மற்று மஹான்களின் றுறவற, சிட்சயார்த்த விஷயார்ப்பணைகளும், பூர்த்தியாயுணர்த்தும்.

வைபாடிக மூழட்சாஸ்ரயம்.

"பசியற்றான் பாசமற்றான் பரமேயானான்" எனவும்,

பாட்டமான்மீயகரணம்.

பசிமாறும் வரையினும் பாசம் போகா
நிசிமாறும் வரையினு நிலவு தோன்றா
சிந்தழுது மிறைவனைக் கண்டபேர்க்கு
நசிந்துவிடும் வினைக்கூற்று நாடலன்றே. எனவும்,

கூறியவற்றின்படி, பசியே பாசம், பசை, பாசை, என நன்கு விளங்கும்.

பசியினாற் சிலவுயிர்க ளொன்றையொன்று ஆகாரமாகக் கொல்லுகிறதும், கன்மச்செயல்களிற் பிரவேசித்துக்கெடுவதும், ஒருவருக்கொரு

வர்க் கீழ்ப்படிந்துத் தொழில் புரிவதும், மேதாவியாகநின்று சகலபோகத்துடன் சருவயோஜனப் பிரியராகநிற்றலும், அரசுபுரிதலும், முழூட்களெனினும், பக்குவங் கைகூடுகின்றவரையி லியாதொரு வியாபார முதலிய காரியங்களை நடத்துவதும், சமாதி கூடும் வரையில் பசிக்குணவுதாசங்கம், சீஷர்களை சேர்த்து போதித்துவருவதும், இவைகளூற்றுனென யூகிக்கில் விளங்கும்.

இவர்கள் பஞ்சாக்கரத்தையே, ஆகாரமாகப் பொசித்தும், வாயுவைப் பருகியும், சுவாசத்தை யுள்ளடக்கியும், சத்தற்றதைப் பொசித்தும்,

" காலையிலகார மாலையி லுகாரங் கவ்வுபகலிற்
சாலமகாரந் தன்னை யாகாரமாய்த் தான்புசித்து
மாலயன் காணு மலைமருந் துண்டு மகிழ்ந்திருப்பர்
தாலமெல்லாந் தெய்வமென்றப் பணியுஞ் சத்தியமே "

எனப்போதரும்.

இச்சனகன் சரித்திரமானது, பாவ கன்ம சன்ம பசியைக்காட்டி, அவற்றைநீக்கித் தன்மயமாக்கிக்கொள்ள தொழுமேனிக் காட்டித் திருமேனியாக்கும்படி விநாயகப் பெருமான் எழுந்தருளியது பரிபக்குவங் கைகூடினபிட முற்றுப்பெற்றதென, மலைமேலிட்ட தீபம்போன்று, ஸ்திரப்படுத்தப்பட்டது.

" காலையுபாதி மலஞ்சலமாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாக மாகுமுற் சஞ்சிதமாம்
மாலையுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
ஆலமுகந்தரு ளம்பலவா வெனை யாண்டருளே " என

வருந்தியுள்ளதே சான்றும்.

---

## அறுபத்துநான்கு கலைகளின் விபரம்.

---

மாயாசம், பிரதம், தத்துவசம்பிரதம், யோகினிசாலம், மாலினிவித்தை, மகாசம்மோகனம், மனோபேதம், தந்திரபேதம், குய்யதந்திரம், கலாவாதம், கைலாசாரம், குண்டிகாமதம், அஞ்சனவித்தை, பாதுகை, பானபாத்திரம், பரகாயப்பிரவேசம், இரசவாதம், இவைமுதலாயின.

இவற்றுள், (மாயாசம்பிரதம், ஒரிடத்திலூர்போல, வனம்போல, மலைபோல, நதிபோலத் தோற்றுவித்தல், தத்துவசம்பிரதம், ஒருபூதத்தில் ஒருபூதம் தோற்றுவித்தல், இதனை, மகேந்திரசாலமென்றுஞ் சொல்

வர். யோகினிசாலம், மயானத்தில் உபாசித்து யோகினிகளைக்காண்பது மாலினிவித்தை-சமுத்திரங் கடக்கச்செய்வது, மகாசம்மோகனம்-விழித்திருக்கின்றவர்களை, மெய்மறந்து நித்திரைக்கொள்ளச்செய்வது, மனோபேதம்-மனத்தைப் பேதிக்கச்செய்வது, தந்திரபேதம்-ஓரிடத்தும்வெளிப்படாத மந்திரத்தை வெளிப்படச் செய்வது; குய்யதந்திரம்-வெளிப்பட்டதை மறைப்பிப்பது, கலாவாதம்-மன்மதவித்தை, கலாசாரம்-வருணத்தை அதிசப்படுத்துவது, குண்டிகாமதம்-குளிகையினாலே இளமையடைவது அஞ்சனவித்தை-மறைப்பட்ட பொருளை, காண்பிப்பது, பாதுகை-செருப்பைத்தொட்டு, நினைக்கில் நினைத்தயிடத்தில் விடுவது, பானபாத்திரம்-ஓரதரத்தில் நினைத்த பானமெல்லாந் தருவது, பரகாயப்பிரவேசம்-பிராணனில்லாத உடம்பிலே புகுவது, இரசவாதம் - உலோகத்தை பேதிக்கச்செய்வது. இவ்வாறே அறுபத்துநான்கு கலைகளையும் அறிக.

* திரிசிரனென்னும் பிராமணன் அறுகினாலடைந்த லாபத்தை, தூர்வை யாசகத்திற் றெளிக.

---

## தூர்வை யாசகம்.

# திரிசிரன் பூசித்தது.

---

மிதிலாபுரியில், திரிசிரனென்னு மோரேழைப் பிராமணன், விரோசனை யென்னுந் தேவியுடன் * நான்குவித ஆச்சிரமத்துள் இல்வாழ்வானென்னும் கிருஹஸ்த தன்மத்தைக் கைப்பிடித்து கணபதிமூர்த்தத்தை யாத்மார்த்தமாகவைத்து, பூஜித்திருக்குநாளில், (ஜனகராஜனிடம் நாரதமுனி வேண்டுகோளின்படி யெழுந்தருளிய கணேசர்) அப்பிராமணன் வீட்டிற்குத் தொழுநோய்க்கொண்ட வோரந்தணராக வரக்கண்ட அவ்வேதியன் அவரை எதிர்கொண்டுவந்து, † சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து உபசரித்து நிற்க; தாம் பசியாக வந்ததாய்க் கூறலும், அதுகேட்டவ்வந்தணன் றேவியான விரோசனை, யாசகஞ்செய்தும், இன்றையதினமெங்குமொன்றுங் கிடையாமலிருக்கின்றது. ஆயினும், கணேசமூர்த்தியைப் பூஜித்து மீதியானவோ § ரறுகுமாத்திரமிருக்கிறதென்ன, அதுவே நமக்கு மேலானதென்றதன்மேல், அப்பிராமணோத்தமியன்புடனதைக்கொண்டுவந்தளிக்க, தமது திருக்கரத்தினால் அவ்வறுகைவாங்கி, வாய்மடுத்துமென்றுதின்றேப்பமிட்ட வெல்லையில், நிஜசொரூபத்துடன் அக்கடவுள் பிரத்தியக்ஷமாகி, (அவ்வூர்க்கரசனும். தானே பிரமமென்றுவெறுமெண்ணத்தால் ஒருவரையுமதியாதிருந்த ஜனக மன்னனுடன்,) மற்றயாவருங்

கண்டு பிரமித்து ஆச்சரியப்படும்படியாக, மாடமாளிகை முதலாய அனந்த பதவிகளையுடைய, மகிமைகளுடன், ‡ பக்தர்களுடைய வறுமையை நீக்கி, நிகரற்ற பாக்கியங்களையும் தமது திருவடிப்பேறுமுண்டாக அவர்கட்கனுக்கிரகித்தனர்.

---

* ஆச்சிரமம் :—வேத முதலிய கலைகளில் சொல்லப்பட்ட, அறம், பொருள், இன்பம், வீடுகளுள், அறமாவது, ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூன்று வகைப்படும. அவற்றுள் ஒழுக்கமாவது தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட ஆச்சிரமங்களில்நின்று அவ்வவைகளில் விதிக்கப்பட்ட தருமங்களில் தவறுமல் ஒழுகுதல். அவ்வாச்சிரமம் நான்கு வகைப்படும்.

அவையாவன, பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசங்களாம். இனி அவைகளை அநுசரிப்பவர்மேல்வைத்து ஷெ நான்கு ஆச்சிரமங்களையுஞ் சுருக்கமாகச் சொல்வாம்.

## பிரமசாரி.

உபநயனஞ் செய்துக்கொண்டு ஆசாரியனிடத்தில், ஓதுதலும், விரதங்காத்தலுமான ஒழுக்கத்தைப் பெற்றிருப்பவன். பிரமசாரியானவன், எல்லா நற்குணங்களையும்பெற்று, ஆசாரியனிடத்தில், வேத முதலான நூல்களை வாசித்தல்வேண்டும். சுக்கில பட்சத்தில் இருக்கு முதலிய வேதங்களையும், கிருஷ்ண பட்சத்தில், சிட்சை முதலிய வேதாகமங்களையும், ஓதல்வேண்டும்.

வேதங்களை, அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, பிரதமை, அயனம், விஷுவ முதலிய விலக்கப்பட்ட தினங்களும், சந்தியா காலங்களிலும் ஓதப்படாது. வேதாகமங்கள் ஸ்மிருதிகள், புராணங்கள், முதலிய நூல்கள் அமாவாசை, பௌர்ணமி, இந்தத்திதிகளில் வாசிக்கப்படாது. மற்றைய நாட்களில் வாசிக்கலாம்.

சந்தியாவந்தனம் முதலிய நித்தியகருமங்களுக்குரியவைகளும், நித்திய பாராயணத்துக்குரியவைகளும், எந்தக்காலத்திலும் ஓதலாம்.

பிரமசாரி: சந்தனம், புட்பம், தாம்பூலம், முதலிய போகப்பொருள்களை அனுபவித்தல்கூடாது. பெண்களுடனிருத்தலும், அவர்களுடன் கலந்துபேசுதலுங் கீதங்கேட்டலும், கூத்துப்பார்த்தலும், ஆகாவாம்.

பிரமசாரி: பௌதிகப் பிரமசாரியெனவும், நைஷ்டிகப் பிரமசாரியெனவும் இருவகைப்படுவர்.

பாலிய வயசுமுதல் விவாக காலம் வரையில், விரத நியமத்தோடு, துறவிபோலிருப்பவன் பௌதிகப் பிரமச்சாரி, விவாகஞ்செய்துக்கொள்

ளாமல் ஆயுட்காலமுழுவதும் ஷை நியமத்தோடு துறவிபோலிருப்பவன் நைஷ்டிகப் பிரமசாரி.

பௌதிகப் பிரமச்சாரி: ஆசாரியனிடத்தில் ஓதத்தக்க வேத முதலிய சாஸ்திரங்களை அவற்றின் பொருள் தெரிகிறவரையில், ஓதி பின்பு, அவருக்குத் தட்சணைகொடுத்து அவரிடத்தில் உத்தரவுபெற்று, சமாவர்த்தனமென்னும் விரதத்தை நிறைவேற்றிப் பின்பு, விவாகஞ்செய்துக்கொள்ளல் வேண்டும்.

வேத முதலிய கலைகளை யெவ்வளவு படித்தாலும், அவைகளின் பொருளை, அறியாவிடில் பிரயோசனமில்லை. விவாகமில்லாமலே என்றும் பிரமசாரியாயிருக்கும் நைஷ்டிகப் பிரமாச்சாரி, காம சம்பந்தமாய்ப் பெண்களுடைய பெயரையுஞ் சொல்லப்படாது. அவர்கள் வடிவத்தையும் நினைக்கப்படாது. எப்போதும் ஜிதேந்திரியனாகவே யிருக்கவேண்டியது. ஷை நைஷ்டிகப் பிரமாச்சாரிக்கு, ஸ்திரீயின்விஷயமான எண்ணந்தோன்றுமானால், உடனே ஆசாரியனிடத்திற் சென்று, உண்மையான விண்ணப்பஞ்செய்து நைஷ்டிக விரதத்தையிறக்கி, பிராயச்சித்தஞ்செய்துகொண்டு, அவரதுமதியின்பேரில் விவாகஞ்செய்துக்கொள்ள வேண்டும். இப்படிச்செய்தால் குற்றமில்லை.

## கிருகஸ்தன்.

கிருகஸ்தனாக விரும்புகிறவன் தன்கோத்திரமல்லாத அந்நிய கோத்திரத்தில் பிறந்த பெண்ணை விதிப்படி விவாகஞ்செய்துகொள்ளவேண்டும். விவாகஞ்செய்யப்படுங் கன்னிகை, தன்வருணத்திற் பிறந்தவளாயும், மகள், தங்கை, என்கிற முறையிற் சேராதவளாயும், தனக்கு இளையவளாயும், ரூபமுள்ளவளாயும், இருத்தல்வேண்டும்.

பெண்களில் மலடாகுங் குலத்திலும், பெண்ணேபெறுங் குலத்திலும், பெருவியாதி முதலிய நோயுள்ள குலத்திலும், பிறந்தவளை விவாகஞ் செய்தல் கூடாது.

கன்னிகையைக் கொடுப்பவரும் நற்குணமில்லாதவனுக்கும், நன்னடையில்லாதவனுக்கும், தீராப் பிணியனுக்கும், அவலட்சணமுள்ளவனுக்கும், அங்கவீனனுக்கும், வீரியமில்லாதவனுக்கும், நித்திய தரித்திரனுக்கும், கல்வி யில்லாதவனுக்கும், திறமையில்லாதவனுக்கும், கொடுக்கலாகாது. கன்னிகைக்குப் பொருள்வாங்கி கொடுப்பது கூடவே கூடாது.

(மணமகளும், மணமகனும், சம்மதியையறிந்து விவாகஞ்செய்தலே சிரேஷ்டம்) விவாகமானபெண் தன்கணவனுக்கும், மாமன்மாமி முதலிய

வர்களுக்கும் பிரியமாய் நடந்துகொண்டு, அன்போடு உபசாரஞ்செய்து, கிருகஸ்தாச்சிரமத்தைச் சரியாய் நடத்தல் வேண்டும். (கணவனும் மாமன்மாமி, முதலானவர்களும், அப்பெண்ணுக்குச் சிறிதாயினுந் துன்பஞ் செய்யாது, தங்கள் வளமைக்குத் தக்கவாறு போசனம், ஆடை, ஆபரண முதலியவைகளினாலே அவளைச் சந்தோஷப்படுத்திக்கொண்டு வரவேண்டியது. (எந்தக்குடியிலே யொருபெண் தனது கணவன், மாமிமாமன் முதலியவர்களால் துன்புற்று ஆதரிக்கப்படாமல் மனம் நொந்து கண்ணீர்விடுவாளோ அந்தக்குடி நாசமாய்ப்போம்.

எந்தக் குலத்திலே மனைவியினது பணிவிடை முதலியவற்றால் கணவன் பரஸ்திரீயை நினையாமலும், ஒருவரோடொருவர் மிகவொற்றுமையுள்ளவர்களாய் இருக்கின்றார்களோ அந்தக்குலம் தழைத்தோங்கும்.

கணவன் தன்காரியத்தின்பொருட்டுத் தேசாந்தரம் போகும்போது, தான்போய் வருமளவும், மனைவியின் சீவனத்துக்கு வேண்டும் பொருள் கொடுத்துவிட்டுப் போதல் வேண்டும். அப்படிச் செய்யாதொழியின் அவள் மேன்மையுடையவளாயினும், சீவனத்தின்பொருட்டு, இழிவான காரியமுஞ் செய்தல்கூடும்.

பிறன் மனையாளையும், விதவையையும், விலைமாதரையும், விரும்பாதவனும், தன் மனையாளையும் விதிக்கப்பட்ட நாள்களிலே யல்லாமல், விதிக்கப்படாத நாட்களிலே கூடாதவனுமு முள்ளவன், கிருகஸ்தனேயாயினும், விவேகிகளால் பிரமசாரியாகவே மதிக்கப்படுவான். அவன் இம்மையிலே நோயில்லாச் சரீரத்தையும், நீண்ட ஆயுளையும்பெற்று, பகைவர்களும் திக்குநோக்கிவணங்க வாழ்ந்திருந்து மறுமையிலே நற்கதியடைவான்.

தன் மனைவியைவிட்டுப் பிறன்மனைவியிடத்தாயினும், விலைமாதரிடத்தாயினும், கலந்தவனும், தன்மனைவிமேல் அன்புவைத்து அவளைப் போசனம் ஆடையாபரண முதலியவைகளினால் ஆதரியாமல், அவளுக்குத் துன்பஞ்செய்தவனும், தன்மனைவி கொண்டுவந்த சீதனப்பொருளை அழித்தவனும், அனேக வருஷகாலம் நரகங்களிலே விழுந்து துன்புறவதோடு, பிறவிதோறும் பலபல வியாதிகளால் வருந்துவார்கள்.

கிருகஸ்தாச்சிரமி, மற்றைய ஆசிரமத்தாருக்கெல்லாம் ஆதாரமாய் நிற்பவன். தருமநிலையும், உலகநிலையும், அவனால்தான் உண்டாகின்றன.

இல்வாழ்வான் தன்வீட்டிற்கு அதிதிகள், வந்தால் அவர்களுக்கு இன்

மொழிகூறியுபசாரணைசெய்து அன்னமளிக்கவேண்டும். நெறியிற் பிசகாத பிரமசாரியும், சந்நியாசியும்வந்தால் அவர்களை எதிர்கொண்டழைத்து அன்னமளிக்கவேண்டும். (சிநேகிதர்களையும், பந்துக்களையும், புசிப்பித்தல்வேண்டும். புதிதாக வீட்டுக்குவந்த மருமகளையும், சிறு பிள்ளைகளையும், வீட்டிலுள்ள வியாதியஸ்தர்களையும், கருப்பந்தரித்த பெண்களையும், விருத்தாப்பியமுள்ள மாதா, பிதாக்களையும், முன்னே புசிப்பித்தல் வேண்டும்.

ஸ்நானஞ்செய்யாமலும், கடவுள்பூசை செய்யாமலும், ஜெபஞ்செய்யாமலும், புசிக்கப்படாது. கிருகஸ்தன் இப்படி இல்லறத்தைக் கூடிய மாத்திரம் நடத்தி, பின் வானப்பிரஸ்தாச்சிரமத்தில் பிரவேசிக்கலாம்.

## வானப்பிரஸ்தாச்சிரமம்.

கிருகஸ்தன் கிருகஸ்தாச்சிரமத்திலிருந்து இந்திரியங்களையடக்கிக்கொண்டு,வானப்பிரஸ்தாச்சிரமத்தையடைந்து தபோவனத்தில்வசிக்கவேண்டியது. இவன் மனைவியை, பிள்ளையினிடத்து ஒப்புவித்தாவது, அவளுக்கு கூடவர இஷ்டமிருந்தால் இட்டுக்கொண்டாவது போகலாம். மான்தோல் முதலியவற்றையாவது, மரவுரியையாவது, தரித்துக் காலையிலும், மாலையிலும், ஸ்நானஞ்செய்து, மீசை, தாடி, நகம், இவைகளை வளர்க்கவேண்டியது. குளிர், பனி, காற்று. வெய்யல், முதலியவைகளைப்பொறுத்து எல்லாப்பிராணிகளிடத்தும், கருணையுள்ளவனாக யிருக்கவேண்டியது.

பரிசுத்தமான அன்னம், அடை, புஷ்பம், கிழங்கு, காய், பழம், மணிப்புங்கு, தேன், இவைமுதலியவைகளைப் புசிக்கலாம். காய், கிழங்கு, முதலியவைகளை நெருப்பில் பாகஞ்செய்தாவது, தானே பழுத்தபின்பாவது, கல்லினால் நெருக்கியாவது, பற்களாற் கடித்தாவது புசிக்கலாம்.

தனக்குபயோகமான ஆகாரத்தைத் தினந்தோறுமாவது, ஒருமாதத்திற்காவது, ஒருவருஷத்திற்காவது, சம்பாதித்துக்கொள்ளலாம். மேற்சொன்ன ஆகாரங்களைச் சம்பாதித்து. இரவிலாவது, பகலிலாவது, நாலாவது பாகத்திலாவது, ஒருநாள் உபவாசமிருந்து மறுநாள் சாயங்காலமாவது தன் சக்திக்குத்தக்கபடி புசிக்கலாம்.

எப்படியாவது விஷய இச்சையை அடக்குதற்கு வேண்டியவாறு, செய்துகொள்ளலாம். வானப்பிரஸ்தாச்சிரம நியமப்படி மரத்தில்தானாய்ப்பழுத்த பழங்களினாலும், தானாகவுதிர்ந்த புஷ்பங்களினாலும், தானாகவுலர்ந்த கொடியுள்ள கிழங்குகளினாலும், விரதத்தைக்கெடுக்காமல் தினந்

தோறுஞ் சீவிக்கலாம். நல்லஆகாரஞ் சாப்பிடவேண்டுமென்றும், குளிர் பனி, வெய்யில், காற்று, இவைகளில்லாமல் சுகமாய் வசிக்கவேண்டுமென்றுங் கருதப்படாது. தோன்றுகிற சுகப்பிரயோசனத்தில், விருப்பமில்லாதவனும், ஸ்திரீ புணர்ச்சியில்லாதவனும்; தரையிற் படுக்கிறவனும், நேரிடுகிற மரத்தடியில் மமதையில்லாமல் வாசஞ்செய்கிறவனும், இருக்கவேண்டியது. காய் கிழங்கு, முதலியவை அகப்படாவிட்டால் மற்ற வானப்ரஸ்தர்களிடத்திலாவது, இல்லாவிடில் வனவாசஞ்செய்கின்ற கிருகஸ்தர்களிடத்திலாவது, வேண்டியமட்டும் பிட்சையெடுத்துக்கொள்ள வேண்டியது.

அவர்களும் இல்லாவிடில் ஊரில்போய் இரண்டு கையிலாவது, மரப்பாத்திரத்திலாவது, தொன்னையிலாவது, அன்னம்வாங்கிப் புசிக்கவேண்டியது. இப்படிப்பட்ட பற்பல விரதங்களை அனுஷ்டித்து ஞானநூல்களை வாசித்துப் பரமாத்துமாவைத் தியானித்துக்கொண்டிருக்கவேண்டியது. இவ்வகையாய் வானப்பிரஸ்தாச்சிரமத்திலிருந்து ஆசையொழிந்தபின், சம்சாரபந்தங்களை முற்றுந் துறந்துவிட்டுச் சந்நியாசாச்சிரமத்தை அடையவேண்டியது.

## சந்நியாசாச்சிரமம்.

விதிப்படி சந்நியாச ஆச்சிரமத்தைப்பெற்று மோக்ஷத்திற்கேதுவான காரியங்களையே செய்யவேண்டியது. சந்நியாசி பரிசுத்தமான கமண்டலம், தண்டம், இவைமுதலியவைகளைக் கிரகித்துக் காவிவுஸ்திரந்தரித்து விஷயபோகங்களில் விருப்பில்லாதவனாய் மௌன விரதத்தோடு ஏகாக்கிரசித்தமுள்ளவனா யிருக்கவேண்டியது. அக்கினியில் பாகஞ்செய்யாதவனும், வீடில்லாதவனும் இருந்துகொண்டு நாடோறும் பிட்சைக்காக ஊரிற் பிரவேசிக்கவேண்டியது. ஒருபொருளிலும் விருப்பமில்லாதவனும், பரமாத்தும சிந்தனையுடையவனுமிருக்கவேண்டியது.

மண்பாத்திரம் வைத்துக்கொள்ளுதல், மரத்தினடியில் வசித்தல், கந்தைத்துணியைக் கட்டிக்கொள்ளுதல், ஏகாங்கியாயிருத்தல், சத்துரு, மித்துருகளில்லாமல் யாவரையுஞ் சமமாய்ப்பார்த்தல், இவையெல்லாம் மோட்சத்தை விரும்பினவனுக்கடையாளம். நடக்கும்போது ஜீவஜெந்துக்களில்லாதபடி பூமியைப்பார்த்துக் காலெடுத்து வைக்கவேண்டியது.

தண்ணீரைப் பூச்சி முதலியனவில்லாமல் வடிகட்டிச்சாப்பிடவேண்டியது. உண்மையைப் பேசவேண்டியது. அந்தராத்துமாவுக்குச் சந்தோஷமான காரியத்தைச் செய்யவேண்டியது.

ஒருவன் அக்கிரமமாகத் தன்னைத் திட்டினாலும், பொறுக்கவேண்டியது. ஒருவனையும் தான் அவமானஞ் செய்யக்கூடாது. அநித்தியமா

யும், ரோகத்துக்கிருப்பிடமாயுள்ள இந்தச்சரீரத்தைக்குறித்து ஒருவருடனும் விரோதிக்கக்கூடாது. தன்னை ஒருவன் கோபித்தாலும், தான் கோபிக்கலாகாது. ஒருவன் திட்டினாலும் தான் நல்ல வார்த்தையாகப் பேசவேண்டியது.

பஞ்சேந்திரியம், மனம், புத்தி, இவைகளினாலறியப்பட்ட உலகவிவகாரத்தையும், அழிவுள்ளதான தருமார்த்த காமவிஷயமான வார்த்தையையும் பேசக்கூடாது. பிரம ஞானியாயும், தண்டகாஷாயத்திலும், அதிக விருப்பமில்லாதவனாயும், யோகாசனமுள்ளவனாயும், விஷய சம்பந்தமில்லாதவனாயும், தன்தேகத்தைமாத்திரம் சகாயமாக விற்றுக்கொண்டு மோட்சத்தை விரும்புகிறவனாயும், உலகிற் சஞ்சரிக்கவேண்டியது.

சோதிடம், வைத்தியம், குறி, முதலியவைகளால் ஜீவிக்கப்படாது. ஒருவீட்டில் பிரமசாரி, வானப்பிரஸ்தன், இவர்கள் பிட்சைக்கு வந்திருக்கிறபோதும், பட்சி, நாய், இவைகள் சோறு தின்னும்போதும், அந்த வீட்டில் சந்நியாசி பிட்சைக்குப் போகப்படாது.

தேங்காய்ப்பாத்திரம், சுரக்காய்; மரப்பாத்திரம், தொன்னை, மண்பாத்திரம், மூங்கிற்படி, இவைகள் சந்நியாசியின் பாத்திரமென சுவாயம்புமநு கூறியிருக்கின்றார், ஒருவேளை பிட்சையெடுக்கவேண்டியது அதையும் அதிகமாக எடுக்கக்கூடாது. சந்நியாசி அதிக பிட்சையெடுத்துப் புசித்தால் ஸ்திரீ முதலிய விஷயத்திலுஞ் சம்பந்தப்படுவான்.

தன்னையொருவன் பூசித்துப் பிட்சையெடுத்தால் அதைத் தடுக்கவேண்டியது. அந்தப்பூசையில் சந்நியாசி விருப்பங்கொண்டால் மோட்சமடையுஞ் சமயமாயிருந்தாலுஞ் சன்மார்க்கரத்தையடைவன்.

கொஞ்சமாகப் புசிப்பதினாலும், ஏகாந்தத்தில் வசித்தலினாலும், விஷயங்களா லிழுக்கப்படுகிற இந்திரியங்களை நல்லவழியில் திருப்ப வேண்டியது. இந்திரிய நிக்ரகத்தாலும் ராகத்துவேஷமில்லாமையாலும், ஜெந்துக்களை இம்சை செய்யாமையாலும், மோட்சமடைகிறதற்கு யோக்கியனாவான்.

இரவிலாவது, பகலிலாவது, தனக்குத்தெரியாமல் ஜெந்துக்களிறந்துபோவதினிமித்தம் சந்நியாசி தினந்தோறும் ஸ்நானஞ்செய்து ஆறு பிராணாயாமஞ் செய்யவேண்டியது. பிராணாயாமத்தால் இந்திரிய தோஷங்களையும், பரமாத்துமாவினிடத்தில் மனதை வைப்பதினால் பிராரத்துவ கர்மத்தையும், இந்திரிய நிக்கிரகத்தால் விஷய சம்பந்தங்களையும், பிரமத்தியானத்தினால் காமக்குரோதங்களையும் போக்கவேண்டியது.

இவ்விதமாய் விரதங்களை அநுஷ்டித்துப் பரமாத்தும ஞானத்தை, எவன் அடைகின்றானோ? அவன் சகல பாபங்களையும் நீக்கிவிட்டு மேலான நிரதிசயானந்த மோட்சத்தை யடைகின்றான்.

"தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்" (குறள்.)

"அற்றது பற்றெனில் உற்றது வீடு" (திருவாய்மொழி)

† சாஷ்டாங்க நமஸ்காரம் :—சிரம் ௧, கை ௨, முழந்தாள் ௨, மார்பு ௧, ஆக ஆறு அங்கங்களும், பூமியிற்படும்படி வணங்குதலென்ப.

§ அறுகு (அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெருகியொரு வாகமாகியோர் பாலரூபமாயவரொரு பெரியோநாய்) எனுமபிதானத்தின்படி சர்வான்மாக்களுக்குளுயிராகிய, சிவமாஞ் சிவமாக யினிது விளங்காநின்ற (விந்து) அதாவது இலிங்காதாரண வாஸ்த்ரய தேகரட்சண்யமெனும், (இந்திரியம்) இவை சத்தியாகிய இச்சையோடு, பகிர்முகத்திற் றோன்றியபடி, அந்தர்முகத்திற் செறிந்து நீங்காது காயப்பெண்ணுடன் சம்மதித்துக் கலந்தானந்தித்த வவ்வசரத்தில் தடித்து மாயக்காரிய (சிங்குவடன்) தழுவியன்ன, சன்மதன்மப்படி வுருப்பெற்று சிவமென்னும், பூரண ஞான நாடகப்பண்டிதனு லாக்கப்பட்ட ஆக்கையைப்பெற்று, நோக்கும் பார்வை கேட்கும் செவி, பேச, உண்ண நாவு, நடக்கக்கால், செயலைமுடிக்க கை மணத்தை முகர நாசி, இவை முதலாய தத்துவ காயதேக க்ஷேத்திரமாக வேற்பட்டது.

‡ பத்தர் :—சிவனடியாரை வணங்குதல், சிவபூசைத் தொழிலிற் சந்தோஷித்தல், இறைவனையும், அவனடியாரையும், விதிப்படி அருச்சித்தல், தங்களாற்செய்யப்படும் புண்ணியங்களனைத்தையும், இறைவன் திருவடிக்கே கொடுத்தல், சிவசரித்திரங்களையே அன்போடுகேட்டல், இறைவனையே வணங்கி மனம் நெக்குருகி, தேகம் நடுக்குற்று, உரோமமும் புளகிதமாகி, ஆனந்த பாஷ்பம்பொழிந்து நாத்தழும்பப் பரவசமாதல், எச்செயலினுஞ் சிவசிந்தை மாறாதிருத்தல், பொய்வேடமுறாமை, ஆகிய, இவ்வெட்டிலக்கணங்களையு முடையோரே பத்தரென்பர்.

ஞான முற்றியவர்கட்கு இயமமுதலாகிய, எட்டுவிதயோகங்கட் கைவல்யமாகி, நிரதிசயானந்த வாழ்வித் கலக்கச்செய்வனப்போல், சரியாதி கிரியை முதலாய வநுட்டான ஆசார பக்தி மார்க்கத்தி லீடுபட்டதன் உண்மைப்பொருளாய சிவஞானத்தி லைக்யமுறுபவர்கட்கு மேற்கூறிய எட்டிலக்கணமும், இரண்டற்ற பதவியைக் கொடுக்குமென விளக்கப்படுகிறது.

## தூர்வை துலையேற்றல்.

## கவுண்டின்ய முனிவர் பூசித்தது.

—(*)—

கணேச மூர்த்தியை தமதாச்சிரமத்தில் பிரதிட்டைசெய்து, தினம் பதினாயிரம் அறுகினைக்கொண்டு அர்ச்சனை செய்துவரும் கவுண்டின்ய முனிவரின், பத்தினியாகிய, ஆசிரியை மிதிலாபுரி யந்தணனுக்கோர் தூர்வையால், அகண்ட பாக்கியத்தை உதவினைக்கடவுள் அவனினும் விசேடமாய அத்தூர்வைகொண் டர்ச்சித்தும், நம்க்கவ்வா றளியாதிருப்ப தேனென வினவ, அதற்கம் முனிபுங்கவர் புன்னகைகொண்டு தூர்வையின் மகிமையை பலருமுணர்ந்து பவித்திராகும்படி, தாமர்ச்சித்தவற்று ளோர் தூர்வையை யெடுத்து இதனை, இந்திரனிடத்திற் றந்து, அவன் றருமத னிடைக்கான பொன்னை, கொண்டுவாவென் றனுப்ப, அதனை யேந்தி சொர்க்கத்திற்சென் றவ்வரசனோ டுரைத்தவுடன், பத்திமை மிக் காணுயவ்விருவழி பத்தினியை, மிகவும் பூஜித்து, தூதுவருடன் தூபோ ஷிட்டத்தீற் கனுப்ப, அவ்வளசேசன் பணிந்து அவ்வறுகினையோர் துலையி விட்டு அதனிடைக்குத் தன்பாலுள்ள பொற்குவையோடு, தன்னகரத் துள்ள பொருள்களையுமிட்டுந் துலையோவ்வாமல், மனைவியுந்தானு மத் துலையிலேறியும் அத்தூர்வைதட் டெழாமையாக, அவ்வற்புதத்தைக் கேள் வியுற்று ஆங்கடைந்த இந்திரனும், தன்னகரத்துள்ள பொருள்களையு மிட்டு, இந்திராணியுடன் தானுமத்துலையிலேறியும், அஃதவ்வாறாகவே கண்டு அவன் றியானித்தழைக்க திரிமூர்த்திகளுந் தம்பதி சமேதராய் தத் தம் பரிஜனங்களுடன் அத்தட்டி லாரோகணித்தும் அத்தூர்வைதட்டு, நிலத்தூடிருக்கக கண்டதற்பின் அக்கவுண்டின்ய முனிவரிடத்திற்கனை வருமாகச்சென்று, அவர் தவத்தின் மகிமையையும், அறுகின் பெருமை யையும் புகழ்ந்து, அத்தூர்வையையணியும் விநாயகமூர்த்தி பத்தர்களில், நீரே சிரேஷ்டருமெனத் திரிமூர்த்திகளுங் கொண்டாடி, அவர்க்குக் கற் பகவிருக்ஷம், காமதேனு, முதலியவெல்லா மேவல்செய்யத் தக்கதாக அமைத்ததுடன் தங்கள் தங்கள் சுயேச்சையா யனந்த வரங்களையுமனுக்கி ரகித்துச் சென்றனர்.

—*—

## வன்னி மகத்துவம்.

—)*(—

விதற்ப தேசாதிபதியான புண்ணிய கீர்த்தியெனு மரசன்வேதாக லங்களிலும், கொடையிலும், யாகங்களிலும், சத்துருக்களை வெல்லுவதி

லும், சிறப்பும், வெற்றியையுடையவனாகவுமிருந்தனன்.

அவன் தனவதி யெனும் நாயகியுடன் வாழ்ந்தாசாண்டு, புத்திரப் பேறில்லாமல் வாழ்நாள் முடிவெய்தி, அனுமரணஞ் செய்ததன்மேல் அமைச்சர் அவ்வரசன் ஞாதியெனும் பங்காளியான, துத்திரிடராஜன் மனைவி, சோரத்துவமா யோர்வலைஞனுடன் கூடிப்பெற்ற குமாரனான சாம்பனை, அரசனாக வைத்ததன்மேல், அவன் பஞ்சமாபாதகங்களைச் செய்து செங்கோன்மையிற்றவரித் தீயவொழுக்கத்திற்கிணங்காத அமைச்சர்களைச் சிறையில்வைத்து, தனது துற்செயலுக்கிணங்கி நடந்த துற்புத்தியெனு மந்திரி முன்னிலையில் சர்வாதிகாரமும் நடத்தி வருகையில், ஓர்நாளீ மந்திரியுடன்சென்று வேட்டையாடி மீள்கையில் வசிஷ்ட முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாயும், தசரதராஜன் தசாக்ஷர மந்திரத்தை யுபாசிக்கப் புத்திரப்பேறருளினதாயும் விளங்கும் வரத கணபதி சன்னிதானத்துள் நுழைந்து அவண் பூஜித்துக்கொண்டிருக்கும் அன்பர்களைக்கண்டு, தானும் மந்திரியுமாகக் காட்டிற்பறித்துவைத்த காய்கனிகளை, விளையாட்டாய்க் கணேச மூர்த்திக்கெதிரே வைத்து நிவேதித்துப் பிரதக்ஷணஞ்செய்து நகரிற்சேர்ந்த பின்னாட்பின்னரிறந்து அனந்தவிதமான யமதண்டனைக்குள்ளாக வருந்தியனுபவித்து நின்ற பாபசேடத்தினால், * அவ்விருவர்களு மொருவர்க்கொருவர் சத்துருத்துவமான வகையாய்ப் பக்ஷி, மிருகமுதலான பல்வகைப்பட்ட ஜனனமெடுத்து, கடையில் அவர்களிலொருவன் விதர்ப்பதேசத்தைச்சார்ந்த ஆதேய நகரில், வீமனெனும் வேடனாகி, தீமையேயன்றி நன்மையென்பதைச் சிறிதுமறியாதவனாய் எந்நாளும் வழிபோக்கர்களை யெல்லா மடக்கிப் பொருள்பறித்தும், மிருகங்களை யலறக்கொன்று விலைக்குமாறியும், வாழ்ந்துவருகின்ற நாளையில், அவ்வூர்த் திருவிழாவிற்குவந்து திரும்பின பிராமணர்களை வழிமறித்துப் பொருள்களைப் பறித்துக்கொண்டு கொலைசெய்தவுடன், மற்றொருவன் அவ்வந்தணரைக்கொன்ற பிரமஹத்தி அவனைப்பிடித்ததுபோலவும், மானைத் தொடர்ந்துசெல்லும் வேங்கையைப்போலவும், ஓரிராக்கதன், அவ்வேடனைத் துரத்த; அதுகண்டு அவனஞ்சி ஓர் வன்னிமரத்தேறின விசையாலுதிர்ந்த வோரிலை யம்மரத்தடியி லெழுந்தருளியிருந்த வாமன விநாயக மூர்த்தி திருவடியிலும், பின்றொடர்ந்தேறின அரக்கனுதிர்ந்த மற்றோரிலை யவர் முடியிலுமாகவீழ, அவ்விருவர்களுமொருவரோடொருவர் இறுகப்பிணித்துக்கொண்டு தரையில்வீழ்ந்திறந்தவுடன் வன்னிபத்திரத்தாற் றம்மை யர்ச்சித்ததாகப் பாவித்த கணேசர்த் திருவருளால் அவர்கள் விமானரூடராய் விநாயக சாலோகமடைந்தனர்.

இதனால் விநாயகக் கடவுளைப் பூஜித்தற்கு பலவகை பூஜாதிரவியங்களிருந்தபோதிலும், அறுகே சிரேஷ்டமெனவும், அவ்வறுகு அகப்படாத காலத்தில் வன்னி, மந்தாரைகளாமெனவும், அவற்றுள் ஒன்றினையன்றி பூசித்தால் அப்பூஜை பயன்படாதெனவுங் குறித்தன.

ஆதியிலரசனுமிருந்தபோது, ஓர்நாள் மந்திரியுடன் வரத கணபதி கோயிலை வலம்வந்த புண்ணியம், இச்சென்மத்திலவர்களை ஒன்றிமாத் தேற்றுவித்து சிவபதமடைதற்கேதுவாயின.

---

இயற்கையினாலுஞ் செயற்கையினாலும், கன்ம தன்மங்கள் வலிய வந்துசேர்ந்து, அவைகட்குத் தகுந்த சன்மங்களையும், சுகதுக்கங்களையும் பிறப்பிறப்புகளையுந் தந்து வாதிக்குமென்பதும், அவ்வித சனனமரண வாதனைகளை, பெரியோர் தரிசனத்தாலும், ஆலயப் பணிவிடையாலும், சாந்தமாகுமென்பது யேற்படுகின்றது.

இவற்றுள் உண்மையாக வழிபாடுசெய்துகொள்ளும் பிராப்தியாகிய புண்ணியமில்லாது துர்ச்செயலை நடத்திவந்த வழியிலியாதுங் கவலியாது உன்மத்தனுக்குக் காய்க்கனிகளை யளித்தும், பிறர்செய்வதைக் கண்டு ஆலயத்தைச் சுற்றியுஞ்சென்ற முன் சென்மச்செயலின் நற்கதி பின் சனனத்தில் * அரசனுக்குப்பகைஞன் மந்திரியும், மந்திரிக்குப்பகைஞன் அரசனும் (புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி, கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்) எனுந்தமிழ்வேதமாகிய திருவாசகத்திற்கிணங்கப் பிறந்து (பகை, நீச்சம், உச்சம், அரசு,) எனும் விதிப்படி அததற்கேற்றவண்ணஞ் சுகாசுகத்தை யனுபவித்து, புண்ணியம் வளரப் பாபந்தேயுமென்பதுபோல, நற்சார்பினால் பாப நசிக்க, முத்தியுண்டாகுமென்பதாம்.

அரசனால் குடிகளும், குடிகளாலரசனும், மனைவியால் புருஷனும், புருஷனால் மனைவியும், மக்களால் தாய்த்தந்தையும், தாய்த்தந்தையால் மக்களும், குருவால் சீடனும், சீடனால் குருவும், புலிக்கு சிங்கம், ஆட்டிற்கு ஓநாய், பாம்புக்கு கீரி, எலிக்குப் பூனை, எப்படி பகைமேலிட்டழியக்கூடுமாப்போல் வாய்க்குமென்பது கன்மவலியென முடிவுரை.

## விண்டு, இரண்ணியகசிபனை சங்கரிக்க பூசித்தது.

காசிபமுனிவர்ப் பத்தினியாரிருவரில் அதிதி யென்பவள் தனது புத்திரராகிய, இந்திரன் முதலிய தேவர்கட்குதவியாக விஷ்ணு தனக்குப்

புத்திரனாய் வரவேண்டுமென்று அரிய தவங்களைச் செய்துகொண்டிருக்கையில், அதனையவள் மாற்றாளான திதி யென்பவளறிந்து, திரிலோகங்களையுங் காக்கவல்ல திறமும், தேவர்களினுஞ்சிறந்த மேன்மையுமுடைய புத்திரர்களைத் தானும்பெறுதற்குயோசித்து அந்திவேளையில் தனது நாதனிடஞ்சேர்ந்து இரண்யகசிபன், இரண்யாக்கனென, இரண்டு புத்திரர்களைப்பெற, அவரில் இரண்யகசிபன், தபஞ்செய்து தனக்கு மரணமுண்டாகாதிருத்தன் முதலிய வரங்களைப்பெற்று வேதவொழுக்கத்தினைக்கடந்து திரிலோகங்களையும் அரசாண்டிருக்குநாளில், அவ்வவுணனைச்சங்கரிக்கவெண்ணங்கொண்ட விஷ்ணுவானவர், பூமியின்கணெழுந்தருளியோர் வன்னி விருக்ஷத்தடியில் விநாயகரைப் பிரதிட்டைசெய்து பூசனைபுரிந்து சடாக்ஷர மந்திரத்தை ஜபித்துத் தவஞ்செய்தருகையில் கணேசமூர்த்தி பிரத்தியக்ஷமாக வந்தளித்த வரபலத்தால் (வராகாவதாரங்கொண்டு இரணியாக்ஷனை முன்னமிதித்துக் கொன்றவிதமே) இரண்யகசிபனையும், நரசிங்கமாய் நகப்படைகொண்டுகிழித்துச் சங்கரித்து உதிரபானஞ்செய்து தேவர்கள் குறைமுடித்தார்.

விண்டுவால் வன்னி விருக்ஷத்தடியில் பூஜிக்கப்பெற்றதாலும், அவ்விண்டுவிற்கு வரங்களையளித்தமையாலும், விண்டு விநாயகர் வன்னி விநாயகரெனவும், வழங்குகின்றன.

—(*)—

## விண்டு வாமனராக பூசித்தது.

—*—

சூரியனிடத்திற் றவத்தாற்பெற்ற சொர்ன கிரீடத்தரித்து இரண்யகசிபனுக்குப் பின்னர் அரசாண்டிருந்த இரணியாக்கன்பேரனான மாவலியென்பவன் தனது பிதாவான விரோசனன் காலமடைந்த பின்பு, மனுநீதி தவறாது செங்கோற்செலுத்தி வருகையில், ஞாதியாகிய தேவேந்திரனையொப்ப * (சதக்கிருது) முடிக்கிற் போகபாக்கியங்களை யனுபவிக்கலாகுமெனச் சுக்கிரனாற்சொல்லக்கேட்டு, அவ்வாறே தொண்ணூற்றொன்பது யாகமும் நிறைவேற்ற அதை இந்திரனறிந்து மனங்கலங்கி வைகுண்டபதியாகிய விஷ்ணுவை வணங்கி முறையிட்டுக் கொண்டதன்மேல், அதற்கவர் நேர்ந்து அக்குறையை முடிக்கவேண்டி தம்மைப்புத்திரனாகப் பெறத் தவஞ்செய்திருந்த அதிதி வயிற்றில் சதுர்ப்புஜங்களும், காயாம்பூ நிறமுடன் வாமனராயவதரித்து வளர்ந்து பிதாவால் விநாயகர்சடாக்ஷர மந்திரோபதேசம் பெற்று, விதர்ப்ப தேசத்தைச் சார்ந்த ஆதேய நகரத்

தில் முன் தம்மாற் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த வன்னி விநாயகரை யடைந்து ஓர் வருட பரியந்தம் உபாசித்து வருகையில், கஜமுகராய் தசாஸ்தம் விளங்க மயில்வாகனத்தின்மேற் கணேசர் பிரசன்னமாகி வேண்டின வரங்களைத்தரப்பெற்று மீண்டு, நூறுஸ்வமதே யாகத்தைச் செய்துக்கொண்டிருக்கும் அம்மாவலியிடஞ் சென்று தவஞ்செய்சதற் கென்றிரந்து மூன்றடி நிலம் தானமாக வழங்கப்பெற்று, திரிவிக்கிரமராய் விஸ்வரூபங்கொண்டு விண்ணையுமண்ணையு மீரடியாகவளந்து மற்றோரடிக்கு அம்மாவலி சிரசில் பாதத்தைவைத்து அவன் பாதல லோகத்திற்செல்லும்படி யழுத்தி இந்திரன் குறைவைய முடித்தனர்.

விஷ்ணு விநாயக மூர்த்தியிடம் வாமனராகச்சென்று பூசித்ததால் வாமன விநாயகரெனவும் வழங்குகின்றன.

* சதக்கிருது நூறுயாகம்.

———*———

## கீர்த்தியெனும் இராஜபத்தினி பூசித்தது.

விண்ணுடர் மதிக்கத்தக்க மண்ணுலகத்தில் அளவிலா தானதருமங்களைச் சதாவியற்றி, வறியார்க்கெல்லாம் வரையாதுக்கொடுத்துப் பகையாயினரையும் பணிப்பிக்கவல்ல பராக்கிரமத்தோடு சகல நற்குணங்களினுஞ் சிறந்தவனாய் மநுநீதி தவறாமலரசு புரிந்து மகா கீர்த்திமானாயிருந்த பிரியவிரதனென்னு மரசன், கீர்த்தி, பிரபை யென்னு மனைவியரிருவருடன் வாழ்நாளில், அரசன் மூத்தாளை யொறுத்து இளையாளிடத்திற்றனே கேவலம் பிரியம் வைத்துப் பதுமநாபனென்றோர் புத்திரனைப் பெற்று அவன் பருவமுற்றகாலத்திலவனுக்குப் பாஞ்சாலன் குமாரத்தியை விவாகஞ்செய்வித்து சிறப்போடுங்கூடி யிருக்கும்போது, ஓர்நாள் மூத்தாளை இளையாள் திரணமாக மதித்து நிரேதுவாய்க் காலாலுதைக்க, அம்மூத்தாள், நாயகன் தன்பட்சத்தில் சர்வதா நிஷ்பிரியனாயிருப்பதையும், கண்ணிற்கெதிராக நடந்த அக்கிரமத்தைக் குறித்தவன் கேளாதிருந்து விட்டதையும் யோசித்து மனவருத்தமாற்றாது விடமுண்டேனும் *வரையுருண்டேனும் குளத்தில்விழுந்தேனும் உயிரையொழிக்குமாறு துணிந்தவளா யரண்மனையைவிட்டு வெளிப்படுஞ்சமயத்தில் சந்தித்த புரோகிதன் அவ்வரசி மனோவியாகுலத்தை யறிந்து பல தேறுதலையான வார்த்தைகளைச் சொல்லிமுடித்தபின் கணேசரைப்பூசிக்கில் சர்வாபீஷ்டமும் வித்தி

யாமென்று அக்கடவுளை யர்ச்சிக்கு முறைமையுஞ் சொல்லக் கேட்டு; மனந்தேறி அவ்வாறே ஸ்நானமுடித்து மந்தார விருக்ஷத்தினடியில்ரா கின்ற கணேசர்க்கு அபிஷேகஞ்செய்து, அறுகினால் மந்திரமுறையாக அர்ச்சித்து வருநாளில் ஓர்நாள் அறுககப்படாமல் வன்னிப் பத்திரத்தால் அர்ச்சிக்க நேர்ந்ததன்மேல் அதுகுறை நீங்குமாறு அன்றுணவுதவிர்த்த வளா யிரவில் நித்திரைசெய்திருக்கையில், கனவில் கணேசரெழுந்தருளி நீ வன்னியாற்செய்த அர்ச்சனையை யாமேற்றுக்கொண்டனம். அஃது நமது முடியிதிருக்கின்றது பார், இனியக்கவலையை யொழித்துவிடென்று கூறி புத்திரப்பேறு முதலான வரமருளினதன்றியும், இனிபிறக்குமப் புத்திரனுக்கு மாற்றாளால் நேரிடவிருக்கு மிடையூறும் அது நீங்கத்தக்க ஹேதுவு மனுக்கிரகித்துக் கரந்தருளினவுடனே கண்விழித்து மனமகிழ்வாக மறுநாளுதயத்தினும்தன்னியமப்படி அக்கடவுளைப்பூசித்துத் துதித்து தன திருக்கையைச் சேர்ந்த சின்னாட்பின் மாற்றாட்கு வெப்பநோயுண்டாகக் கண்டவரசன் அவளை வெறுத்து அக்கீர்த்தியிடத்தில் அன்போடளாவுங் காலையில் ஓர் புத்திரன் பிறக்க அவனுக்கு க்ஷிப்ரப்ரசாதனென, நாமகரணஞ்சாற்றி வளர்த்து வருங்கால் நான்காம் வயதில் அப்பிள்ளைக்கு மாற்றாளூட்டின விஷந்தலைக்கேறி மூர்ச்சித்ததுகண்டு அரசன் வருந்துகையில், பட்டத்தரசியாகிய கீர்த்தியானவள் விநாயகக் கடவுள் வாக்கியத்தை நினைந்து மைந்தனை யெடுத்துக்கொண்டு கிருச்சமத முனிவ ராச்சிரமத்திற்குச் செல்லும்போது மார்க்கமத்தியில் புத்திரனுக்குயிர்மோசம் நேர்ந்ததாகக்கண்டு, அவணின்று பிரலாபித்திருக்கையில் ஞானநோக்கினா லவையாவுமுணர்ந்த கிருச்சமதமுனிவ ரவணடைதலும், உடனே யெழுந்து பணிந்த அவ்வரசியின் மனதை யவர்தேற்றி கணேசமூர்த்தியை யவளோர்நாள் வன்னிப் பத்திரத்தால் பூஜை செய்த பலனை அப்புத்திரன்கையில் தத்தஞ்செய்விக்கலும், அக்கணமே உயிர்ப்பெற்றெழுந்த புத்திரனுடன் தானுமவரை வணங்கி; விடைபெற்று மனமகிழ்வுடன் தனது நகரையடைந்தனள்.

இஃது எல்லாப் பத்திரங்களைவிட வன்னிப் பத்திரத்தில் கணேச மூர்த்திக்கு அதிகவிழைவுண்டான காரணம் வினவிய உமையவட்கு சிவபிரான் திருவுளம்பற்றினது.

* வரையுருளுதல் - மலைமீதேறி புரண்டு விழுதல்.

---

ஏதாவதொரு காரியத்தி லொருவர்க்கு, சிறப்பு, மேன்மை, அரசு, ஊதியம், ஒன்று கிடைப்பதாயின் அன்னோர்க்குப் பின்வருங்காரிய ஆனி பழி, பாவம், துன்பம், இவைகளைப்பற்றி கிஞ்சித்தும் யோசியாதவராய்

அடுத்தார்க்கும், பெரியோர்க்கும், தீமையைவிளைவித்து அதுவிர்த்தியாக இறுதியில் தீராக்கவலை யடைந்து சாபமேற்றுக்கொள்ளுதல் முதலாய விக்கைக்கானாவது துன்மவாசனையும், சன்மவாசனையுமாம்.

கீர்த்தியென்பாள், மலைமேலிருந்து விழுந்தேனும், நஞ்சுண்டேனும், தன்னுயிரை மாய்த்துக்கொள்ளலாமென வெண்ணியது, தனக்கு சரியற்றவளாக வாழ்விலும், வயதிலுமில்லாத சிறியாளிடம் அவமதிப்புறுவதினும் (மானமழிந்தபின் வாழாமை முன்னினிது) எனத் தன்னை மறைத்துக்கொள்ளுதற் சிறந்தக் கொள்கையாம். ஆயினும், கடவுளை நம்பினோர்க்கைவிடப்படார். எனவும், நல்லவர்க்கு வருந்தீமை நன்மையாக முடியுமெனு முபசாரவார்த்தை சொல்பவர்க்கெல்லாஞ் செல்லுவது அசத்தியம். ஆனல், பெரியோர்களுள்ளத்தை யெவ்வித வவசரத்தும் நோகவையாது, சத்தியத்தை பரிபாலித்தவர்க்கே; இவைப் பொருந்துமென அப்பெண்ணரசியின் கற்பு, அத்துன்பத்தைத் தடுக்க போதனுசிரிஙராகவும், பக்திவழி காட்டவுங் கைவல்யமாயினவெனத் தெளிதல்வேண்டும்.

---

## புருசுண்டி முனிவரை நகைத்த சமியும், மந்தாரனும், வன்னி, மந்தார விருக்ஷமானது.

---

நந்திகோத்திரமுனி புத்திரனும், சுமேதையென்பவள் நாதனுமான அவுரவ முனிவருடைய ஏக புத்திரியாகிய சமீ யென்பவளை, தவுமிய முனிவர்ப் புத்திரனும், சௌனகரிஷி சிஷியனுமான மந்தாரனுக்கு, § எண்வகை மணத்தினுட் சிறந்த பிரம மென்னும் முதன் மணமாகுந் தன்ம மணத்தின் விதிப்படி விவாஹஞ் செய்துக்கொடுத்த சின்னுட் கழித்து † சாந்தி முகூர்த்தஞ்செய்யுதியல்பினைமுடித்தபின்பு, மந்தாரன் தன் மனைவியை யீழைத்துக்கொண்டு, தன் பிதா வாச்சிரமத்தை நாடி வனத்திற் செல்லுகையில் ( கணேச மூர்த்தியினுடைய சாரூபத்தைப் பெற்று துதிக்கையுடன் தொந்தி வயிற்றையு முடையவரா யெதிராகவந்த புருசுண்டி முனிவரை நோக்கி ) தொல்வினைத் தொடருங்காலம் நேரிட்டவர்களாய் ) இருவருமாக நகைக்க, அம்முனிவர்கண்டு சினங்கொண்டு மந்தாரனை, மந்தார விருக்ஷமும், சமியென்பவளை, வன்னி விருக்ஷமுமாக சபித்தனர்.

இவ்வரலாற்றை யுணர்ந்த மந்தாரனுடைய குருவும், சமியின் பிதாவும் அத்தம்பதிகள்பொருட்டாகக்கணேசரைநோக்கி, தவஞ்செய்ததற்கு

பிரத்தியக்ஷமாகி அவர்களம்மரமாகவேயிருந்து யெய்துமாறு அப்பத்திர புஷ்பங்கொண்டுத் தம்மை வழிபடுவோர்க்குச் சகல துன்பங்களையுநீக்கி இஷ்டகாமியஸித்திகளையளித்தருள்வதாய்த் திருவாய்மலர்ந்து அவ்வுபய விருக்ஷநிழலின்கணெழுந்தருளினர்.

அதுமுதலறுகில்லாக்குறையை மந்தாரமலர் நிரப்புவதாலும், அறுகு மந்தாரமுமில்லாக்குறையை வன்னிபத்திரம் நிரப்புவதாலும், யாகாக்கினி அவ்வன்னியில் சார்வதாவாசமாயிருத்தலானும், உலகின்கணுள்ள வெல்லாப்பத்திரங்களினும் வன்னிப்பத்திரம் விசேடமெனச் சிவபிரானு முடிமேற்சூட்டினர். ஆதலால் வன்னியென்று வாக்காலுரைத்தாலும், அதை நினைத்தாலும், வலம்வந்தாலும், தரிசித்தாலும், தொழுதாலும், தவம்தானத்திலுஞ் சிறந்தபலனுண்டாகுமென்பதனால் அறுகு, மந்தாரை வன்னி, இம்மூன்றுமொன்றற்கொன்று குறையாதத் தன்மையனவாம்.

---

§ எண்வகைமணம்:—பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசமென்பதாம். இவற்றன்,

பிரமமணம் பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பது. பிரசாபத்யமணம் தலைமகனினத்தார்வேண்டத் தலைமகளினத்தாருட்பட்டு அவளைத்தீமுன்னர்க்கொடுப்பது. ஆரிடமணம் ஒன்றிரண்டு பசுவும், அல்லது எருதும் வாங்கிக்கொண்டு; கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது. தெய்வமணம் வேள்வியால்வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது. காந்தருவமணம் கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவருந் தனியிடத்தெதிர்ப்பட்டுத்தாமே கூடுவது. அசுரமணம் பெண்ணுக்குப் பொன்சூட்டிச் சுற்றத்தார்க்குப் பொன்வேண்டுவன கொடுத்துக் கொள்வது. இராக்கதமணம் பெண்ணும், பெண்ணினத்தாரும், உடன்படாமல் வலிதிற்கொள்வது. பைசாசமணம் துயின்றுளைச்சென்றுக் கூடுவது.

† சாந்தி முகூர்த்தமாவது:—மாதர்கட் புட்பவதியாகிய மூன்று நாளும், ஞாயிறு, செவ்வாய், சனி, பூரணை, அட்டமி, அமாவாசியை, இருத்தை, ஜன்மநக்ஷத்திரவாரம், பரணி, திருவாதிரை, ஆயிலியம், மகம், முப்பூரம், சித்திரை, சோதி, விசாகம் நீங்கிய சுபகாலவோரையில் கேந்திரசுத்தமும், சுபக்கிரகபார்வையும், சிரராசியும், லக்கின சுத்தமும் நோக்கி மணாளன் மணாளிக்கு, விதிப்படி நடத்திவிக்குமோர் சடங்கு. இதனை, நிஷேக முகூர்த்தமென்பர்.

சமியென்பவள்தாயாகிய சுமேதை வன்னி விருக்கத்திலெழுந்தரு

ளிய கணேசமூர்த்தியைப் பூசித்து அவரது லோகத்திற்சேர்ந்து வாழ்வுற் றிருந்தாள். அதையறிந்த அவுரவமுனிவர் தமது யோகத்தினால் * பிராணவாயுவைக்கும்பித்து சூக்ஷும சரீரத்தால் அவ்வன்னியின் கருப்பத்திற் புகுந்து விண்ணுலகத்தார்க்கெல்லாம் § அவி வாங்கியளிக்குந்தொழிலில் அகலாதிருந்தனர். அதுமுதலவரைச் சமீகருப்பரென்று சான்றோரழைத்துவந்தனர்.

* பிராணவாயுவைக் கும்பித்தலாவது:—வாசியோகமுடையார் மூச்சை ரேசக பூரகஞ்செய்தபின்னர் தம்பித்திருப்பது. இது அட்ட யோகத் தொன்றின் நிதித்தியாசனமாம். § அவி — தேவருணவு.

மனிதர் செய்யத்தக்கவைகளைச்செய்யாது, பெறவேண்டிய நன்மையைப்பெறாது அவரவர்களின் கன்மமானது கண்ணைமறைக்க, பாபக் குணம்பலிக்க, உத்தமகுணமொதுங்கிவொளிக்க, அகந்தை மேலிட்டுப் பின்னாலனுபவிக்கப்போகிற தின்னதென்றறியா மமதைமேலிடப் பெரியோரைத் தாங்களிருக்கிற தற்போதிப்பிலமையிலிழிந்து நகைத்து பழியுடன் கன்ம ஜன்மத்தையுமெடுப்பரெனச் சித்தாந்தம்.

—*—

தேவர்களால் அர்ச்சனைப்புரிந்த

## வன்னி மகிமை.

பலவளங்களுமிருந்து முனிவர்களாலாஸ்ரயிக்கப்பட்ட சையாத்திரி சாரலில் பிரமனுமவன் றனது மனைவியராகிய காயத்திரிதேவி, சாவித்திரி தேவி என்னுமிருவருள் காயத்திரி தேவியைமாத்திரமழைத்துக் கொண்டுசென்றவனுடத்திய வேள்வியைப்பற்றி சாவித்திரிதேவியறிந்து யாகசாலையையடைந்து அங்ஙனம் விஜயமாயிருந்த திருமால், இந்திரன் முதலானவர்களை ஜலவுருவாகச் சபித்ததைக்கண்ட பிரமன் வருந்தித் துதித்ததற்கிரங்கி பிரத்தியக்ஷமான சிவபெருமானால் கணேசரை முதலில்வணங்காமையினாலுண்டாயினவெனத் தெளிந்து, அத்தேவர்களின் காதலிகள் தத்தங்காதலர்கட்குநேர்ந்த விபத்தையுணர்ந்து வந்துவருந்தியவர்களின் மனந்தேறப் பிரமன் கூறினவிதமே யவர்களும் நன்னலம் பொருந்தியருட்சுரக்குமாறு, கருநாடதேயத்தில் மந்தாரமரநிழலில், அரக்கர் குறும்பினையடக்கும்படி விஷ்ணுவினால் ஸ்தாபித்து பூஜிக்கப்பட்டிருக்கும் வக்கிரதுண்ட விநாயகரை, நெடுநாள் துதித்தும், பூசித்தும்,

அருட்கிடனுகாமையாய்ப் பின்னராகாயத்தெழுந்த அசரீரி! வாக்கின்பிரகாரம் வன்னிப் பத்திரத்தால் அர்ச்சித்ததற்கு காட்சியான கணேசர்ப் பேரருளால் அச்சாபம் நிவர்த்தியாகியெழுந்த தேவர்களியாவரும், மற்றோர் மரத்தடியில் ஏரம்ப விநாயகரோனப் பிரதிஷ்டைசெய்து அவ்வன்னிப்பத்திரத்தாலர்ச்சித்து சகல நன்மையுமடைந்தனர். அதுகண்ட பிரமனுந்தனது வாசஸ்தானத்தில் மந்தார விருக்ஷத்தையுண்டாக்கி அதனடியிற் கணேசரை ஸ்தாபித்து தனதுபய தேவியருடன் அர்ச்சித்து வந்த நன்மையினுல் மேற்படி யாகத்தைமீட்டுந்தொடங்கி நிறைவேற்றிக் களிப்புற்றனன்.

---

இதனுல் "அங்கைகொடு மலர் தூவி" என்றும் "செய்யுந் தவஞ்சற்றுமில்லாத நானுன் றிருவடிக்குக், கொய்யும்புதுமலரிட்டு" எனத் தாயுமானசுவாமிகளும் "கண்ணுண்டுகாணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப் பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையா, வெண்ணுண்டு சாத்த" எனப் பட்டினத்தடிகளும் "பீடுறுமானிடப் பிறப்பைவேண்டிக லேடவிழ் மலரினு லிறையைப் பூசியார், பாடமை நாளெலாம் பாழ்க்குழைப்பவர், மூடரையெண்ணுங்கால் முந்தி நிற்பரே" என்றும் "பூசனை செய்யாதகைப் புராந்தகன் புகழ்ப், பேசுத விலாதவாய்ப் பெற்றுழன்றிடு, நீசரானவர்தமில் நெடுவனத்திடைக், கூசுதவிலாதபுன் குரங்குநன்றரோ" எனப் பிரபுலிங்கலீலையில் சிவப்பிரகாச சுவாமிகளும், இன்னுமநேக மஹான்கட்கூறியுள்ள சுருதிகளைக்கொண்டு வழிபடுதல் பூர்வ புண்ணிய வசமெனவினிதுபெறப்பட்டன.

—— * ——

பாசுபாணியெனும் க்ஷிப்ரப்பிரசாதன் பூசித்த

## அறுகு, வன்னி, மந்தார மகிமை.

———

முனிவருட்சிறந்த கிருச்சமதமுனிவரைத் தனது புத்திரனுகிய க்ஷிப்ரப்பிரசாதனுக்கு, விரைவில் விசேஷ அனுகூலத்தைத் தாத்தக்கதாயும், எளிதாயுமுள்ளவோர் கணேச மந்திரத்தை யனுக்ரகிக்கும்படி கீர்த்தியேனும் இராஜபத்தினி வணங்கி விண்ணப்பஞ்செய்ததற்கிதங்கியுபதேசித்த நாலெழுத்து மந்திரத்தை தன்தாயுடன், அருளும் மகிமையும் வாய்ந்த காசிஸ்தலமடைந்து மாசிமாத அமரபக்ஷ சதுர்த்திதினத்தில் துண்டிவிநாயகரை விதிப்படி பூசித்து அம்மந்திரத்தை ஜெபித்து அறுகு, வன்னி,

மந்தாரத்தால் அர்ச்சித்ததற்கு கணேசர் பிரத்தியக்ஷமாகி, அக்கிப்ரப்பிரசாதன் எக்காலத்தும் ஒரிடையூரினும் வருந்தாமல் தீர்க்காயுள், கல்வி, செல்வமுதலியவைகளைப்பெற்று அரசாண்டபின்னர், தமது பதஞ்சேரத்தக்க வரமும், திரிபுவனமுமஞ்சத்தக்க வஜ்ராயுதத்தினையுமளித்து, பாசுபாணியெனவோர் நாமமுநல்கப்பெற்றபின் தன்னகரடைந்து பிதாவால் அரசுரிமைப்பெற்று, இரத்தினத்தினால் விநாயகமூர்த்தி திருவுருவஞ்சமைத்து அதைத்தனதுகண்டத்தில்தாரணஞ்செய்துக்கொண்டு வருடத்திற்கொன்றாக ஆயிரமகத்தையுமுற்றினவனாய் சுகமுடன் வாழ்ந்திருந்தபின் தெய்வவிமானமேற் கணேசரின் சாரூபமடைந்தனன்.

விநாயகப்பெருமானை வழிபடுவோர் எல்லாசுகபோகங்களையுங் குறைவின்றியனுபவித்து அப்பெருமான் மந்திரோபதேசபலத்தின்படி தங்களாயுளினிறுதியில் யாவருங்கொண்டாடி வணங்கத்தக்கதாக இரண்டற்ற முத்தியானதையடைவதுந் திண்ணமெனவும், மோட்சானந்த சுகத்தை வேண்டியவர்களியாவருங் கணேசப் பெருமானையே வழிபடலத்தியந்தவவசரமெனவும், அங்ஙனநினைந்தொழுகார் எத்திறம், எத்தவம், எச்கலை எச்சிறப்புவாய்ந்தோரெனினும் அவைகள் கானனீர்சலம்போலாகுமென்பதுண்மையென சைவாகமமுடன் குருமூர்த்திகளும், மேதாவியராகிய மஹான்களாம் முமூட்சுகளுஞ் சீவர்கள்பக்குவிகளாவான்வேண்டியெடுத்தோதாநிற்பர்.

—§—

## கணபதி மனுவின் மகிமை.

வங்காள தேசத்தரசன் குமாரத்தியும், சித்திரனென்னும் இராஜன் மனைவியுமாகிய, சுந்தரி யென்பவள் புருஷன்காவற்குளடங்காதவளாய் தூர்த்தியாகி தன் கொழுநனையுங்கொன்ற தோஷத்தால் சேதிக்கப்பட்டிறந்து, யமபுரத்திலும் அருநரகங்களையுமனுபவித்து, மறுஜனனத்தில் புலைச்சியாய்ப் பிறந்ததுமுதலோர்புண்ணியமுஞ் செய்தறியாளாயிருந்தும் விநாயக சதுர்ந்தி தினத்தில், அவ்விரதமனுஷ்டித்தவர்கள் கணேசருக்கு நிவேதித்த பதார்த்தங்களில் தாங்கள் புசித்துத்தெருவிலெறிந்த இலையிற்கிடைத்த சேஷத்தைப் பொசித்தானவுடன் அவர்கள் துதிசெயக் கேட்டபடி, தானும் கணபதி! கணபதி!! கணபதி!!! என்றவ்விசேஷதினத்தில் முக்காற் கூறினதன்மேல் விநாயகக் கடவுள் கிருபையால் தெய்வவுருப்பெற்று அவண்வந்த விமானத்தாரோகணித்து அக்கடவுட்சாலோகபதவியடைந்தனள்.

இங்ஙனம் முன்னிட்டோர் திருஷ்டி தோஷத்தினாற் கதிதப்பி நிலத்திறங்கின இந்திரவிமானம், தெய்வவுருப்பெற்றுச்சென்ற மேற்படி புலைச்சி நோக்கால் உடனே ஆகாயமார்க்கத்தெழும்பிச் சென்றதென்பத னால், விநாயக சதுர்த்தியினைப் பெருமையையும், அதையனுஷ்டிக்கும் விரதசீலர்ப்பலவிசேடத்தையும் உலகில் யாவராலும் அளவிட்டுரைத்தற் கரிதேயாம்.

---

சிவனடியார்கள் எச்சிலையுண்ட நாயானது, (அதாவது முன் சன னத்தில் தனதாசைப் புருடனுடனுண்டுக் களிப்புற்றிருந்தவோர் தாசியா னவள், தன்னிடம் பிச்சைக்குவந்த சிவனடியாரை சிவமாகமதித்து உப சரித்தாசீர்பெறும் புண்ணியமில்லாமையினால், தாமுண்ட சாதத்தை, எச்சிலெனவெண்ணாது அங்ஙனந் தானமாகயிட்ட பாபத்தால் மறுசன னத்தில் நாயாகப்பிறந்து அடியாருச்சிட்டத்தைப் புசித்ததனாலும், சிவ னடியார்பின்னே திரிந்தமையினாலும், அவர்கட் பாததூளிதத்தாலும், மோட்சமடைந்ததெனப் பட்டினத்தடிகட் சரிதங் கூறுகின்றதும்.

அவரவர் கன்மத்தின்படி சன்மம்வருவதும், மந்திரத்தாலும், விப தத்தாலும், சிவனடியார் சேவையினாலும், அவர்களுச்சிட்டத்தினாலும், பாபந்தேய்ந்து புண்ணியமுண்டாகுமென இதனால் ஸ்திரப்படுத்தப்பட் டது.

---

## சூரசேனன் பூசித்தது.

---

எல்லாவளமைகளும்பொருந்தி யினிதுவிளங்காநின்ற மத்தியதேயத் தைச்சார்ந்த சகத்திரபுரிக் கரசனான சூரசேன ராஜன் புண்ணியசீலை யெனுந் தனது நாயகியுடன் வாழ்ந்து அரசுசெய்துவருநாளில், விமான ரூடனாய் பூலோகத்திற்குவந்துமீளும் தேவேந்திரனைச் சந்தித்து; அவ னால் கணேசசதுர்த்தி விரத மகிமையினையும், மானிடர் தேவர்முதலாயதை யனுஷ்டித்துப் பேறடைந்த வரலாற்றினையும், சொல்லக்கேட்டவுடன் கணேசருலகத்திற்குச் செல்லும் புண்ணியர்ன்மாக்களையும், அவர்களா ரோகணித்த விமானத்தையுந் தரிசித்து பிர்மானந்தமாகி, வசிஷ்டமுனிவர் முன்னிலையில், மாசிமாத அமரபக்ஷ அங்காரகவாரத்தில் நேர்ந்த சங்கட சதுர்த்தி விரதத்தை, வேதாகமவிதிப்படியன்பாயனுஷ்டித்துக் கணேச மூர்த்தியைத் தியானித்து பூஜித்து அதுமுதலாய் மாதமாதம் சதுர்த்தி

தோறுமிடைவிடாமலாராதித்து வருகையில், அக்கடவுட் கிருபையால் வந்த விமானத்தில், தன்பிரிவிற்காற்றாராய் வருந்திநின்ற சுற்றத்தார், நகரத்தார், பரிசனங்களுடனுமேறாகணித்து அவர்களனைவரும் கணேச்சுரலோகத்தமர அரசன் சாயுச்சியபதத்தையடைந்தனன்.

---

பாலைச்சேர்ந்த சலமும், பூவைச்சேர்ந்த நாரும், பொன்னைச்சேர்ந்த நூலும், எங்ஙனம் பயனடைதலனுபவத்திற்குரியதோ, அவ்வண்ணம் நல்லோரையும், நன்மையையும்நாடிய அல்லது வாய்க்கப்பெற்ற ஆன்மாக்களும் பயனடைவதுண்மையென ஸ்திரப்படுத்தப்படுகிறது.

———✻———

## கணபதி மனுவின் மகிமை.

———

முன்சனனத்தில் கௌடதேயத்தில் பிராமணனான தவசீலனுக்கும், தனது மனைவி ஞானகித்தம், புதனென்னும் பெயருடன்பிறந்து, வனப்பிற்சிறந்த சாவித்திரி யென்பவளை மணந்து வாழுநாளில் தூர்த்தனுய்த் திரிந்சனமையைத் தடுக்கமுயன்ற, மாதா, பிதா, மனைவி, இம்மூவர்க்குந் தீமையை விளைவித்தவனாகி, தாலவன முனிவரின் பத்தினியாகிய, சுலபையின் சாபத்தினுற் பெருநோயுடன் வணிக குலத்திற் சனித்துத் துன்பமுற்றயருங் காலத்தில், அந்நகரத்தரசனான சூரசேனன் சங்கட சதுர்த்தி விரதத்தையாராதித்து கணேசர்க் கிருபையால்வந்த விமானத்தில்பலநடனேறிய அவ்வணிகனுல் அது பூமியைவிட்டெழாததினுலங்ஙன நேர்ந்தயிடுக்கணுல் பிரலாபிப்பதைக்கண்டவ்வரசன் விண்ணப்பத்திற்கிசைந்த தேவகணங்களனுவலுபின்படி கணபதி என்னுந் திருநாம மந்திரத்தை மூன்றுதரம் அவ்வணிகன்செவியிலுபதேசித்தவுடன் அவனும் புன்மைத்தேகநீங்கி, தெய்வசரீரம்பெற்று சுத்தபவித்திரனுயவ்விமானத்தின்மேற் கணேசசாலோகமடைந்தனன்.

---

இதனுல் எவ்வகையானத் தீமைகளையும், விநாயகப் பெருமானின் மந்திரவுருவாகிய,

> "கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
> கணபதி யென்றிடக் காலனுங் கைதொழும்
> கணபதி யென்றிடக் கரும மாதலால்
> கணபதி யென்றிடக் கரும மில்லையே" எனும் பிரமா

ணத்தின் பலனனது, கைப்புண்ணிற்குக் கண்ணாடி வேண்டுவதில்லை

யென யதார்த்தநிலையிற் பிரகாசித்தன. அஃதுடன் சதுர்த்தி விரதப் பயனைப் பூர்த்திப்படுத்தியதனால் எல்லாவிரதத்தினுஞ் சதுர்த்தி விரதஞ் சிறந்ததும், முத்தித்தரக்கூடியதுமென நிச்சயிக்கப்பட்டது. இப்புண்ணியவிரதமும், அதன்வன்மையும், அவரவர் கன்ம தன்மத்தினளவே சித்தியையானாலும், மித்தையையானாலுந்தருமென அனுபவிகட் கூறுகிற்பர். என்னெனின், மனம், வாக்கு, காயம், இம்மூன்றுட்பொருந்தி அகப்பற்று, புறப்பற்றின்றி சிரத்தையுடன் வணங்கவேண்டியதே முக்கிய தாத்பரியம். இவைநீங்கலாக வெளிடம்பாகாரசெருக்குற்று, மமதைக் குத் தலைவனாய் பெரும்பெயர்க்காசித்து கண்டோர், கேட்டோர், தன்னைப் புகழவேண்டிய வீணுபாசத்திற் பொருளைச் செலவழித்து விரத மூனுற்றினேனெனும் பொய்வேடதாரியானவனையும், அவனுள்ளத்தை யுங் கடவுளறிவாராதலான் "தெய்வமுளதென்பான் தீயச்செயற்புகின் தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்" எனு நீதிமொழிமெய சான்றாக யினிது முடித்துவிடும்

—*—

## பரசிராமன் பூசித்தது.

பலநல வளமைகட்செறிந்து விளங்காநின்ற சையவரைச் சாரலில் தவஞ்செய்துக்கொண்டிருந்த இரேணுகாதேவி நாசனான ஜமதக்கினி முனிவர்க்கு (விஷ்ணு, பிருகுமுனி சாபத்தால்) இராமனென்னும், பெயருடையப் புத்திரனாகவுதித்து தனக்கு மிக்காரொருவரில்லாதவனாகவும், தாய்தந்தைப்பணியிற் சிறந்தவனாகவு நற்கீர்த்திவாய்ந்து நைமிசாரண்யத் திற்குச்சென்று, அங்குள்ள முனிவருடன் சின்னாள் வசித்திருக்கையில் கார்த்தவீரியனென்னு மரசன் வேட்டைமார்க்கத்தினின்றுத் தனது பரிஜனங்களுடன் ஜமதக்கினி முனிவ ராச்சிரமத்திற்குவரலும், அம்முனிவர் காமதேனுவை யழைத்தவர்களுக்குபசரிக்கச் செய்ததைக்கண்டவ்வரசன் அத்தெய்வப் பசுவைத் தான்கொண்டுபோகும்படி விரும்பிகேட்டதற்கவரிணங்காமையின்மேல் * பலாத்காரமா யவ்வகைமுடிக்க நெருங்க, அதுகண்டவக்காமதேனு சினந்தெதிர்த்து அவர்களை முறிந்தோடச்செய்தவக் காரணமாகவே வயிரங்கொண்டிருந்த அக்கார்த்தவீரியன் சிலநாட்சென்ற பின்பவ்விடஞ் சென்று; தவஞ்செய்துக் கொண்டிருந்த அவ்விருடியை யோர்பாணத்தினால் மாய்த்துவிட; அதைக்கண்டாற்றா வம்முனிவர் மனைவிநொந்து வைததினிமித்தம் தன்னையுங்கொன்று சென்றதின்பின் நைமிசவனத்தினின்றும் வந்த இராமனோடவள் குற்றுயிருடனிருந்து

நடந்த தளைத்துமுணர்த்தி உயிரைவிட, குமாரனுகிய இராமன் மனம் வருந்தி, மாதா பிதாவிற்குரிய கடமையை தத்தாத்திரய முனிவரைக் கொண்டு முடித்தபின்போர்நாள் நினைத்தவுடன் தெய்வவுருக்கொண்டு வந்த தன்றாய்வாக்கிய்ப்பிரகாரம், கைலாயவரையையடைந்து துதிசெய் ததற்கிரங்கி காட்சிதந்த பரசிவத்தால் சடாக்ஷர மந்திரத்தை யுபதேசிக் கப்பெற்று, மயூரத்தலத்தெழுந்தருளிய கணேசர் திருவடியைப்பூஜித்து அம்மனுவையுச்சரித்து, அரியதவங்களைச்செய்ய பிரசன்னமான அக்கட வுளால் சத்துருகண்டனென்ன மாறு தவலிமையும், பரசாயுதமும், பரசி ராமனென்னுந் திருநாமமுடன் சிரஞ்சீவிப்பதமும், பெற்றவனுய் மீண்டு தன்பழைய பகையாகிய கர்த்தவீரியனுடனவனது வம்சபரம்பரை யோ ரையும் அறக்களைந்து மற்றுமெதிர்த்த வரசர்களையுஞ் சங்கரித்து அவர்க ளரசாட்சியை பிராமணர்கட்கு வழங்கி அதுமுதல் யோக சமாதியனுய் வசித்திருக்கின்றனன்.

---

✳ நன்மை செய்தார்க்கு நன்றியற்றுத்தீமையையும், பால்தர விடத் தையும், உண்டபினேரஞ்சொல்லி வொதுக்கலும், புண்ணியத்திற்குப் பாபத்தையும், கொள்வானைப்போன்று (அன்பினுல், அருளால், தயை யால், உண்மையால், உடன்பாட்டினுல், உழைப்பினுல், பரிபக்குவகா லத்தால், சாந்தத்தால், சட்பாவவிகார சிந்தையற்றயதார்த்தத்தால், சத்தி யத்தால், விடாமுயற்சியால், அளவளாவுமபிலாசையால், ஒடுக்கத்தால், பொறுமையாகக் காத்திருந்தடையவேண்டியபலனை) அதன்வழிமுறை யேயடையாது, அவசரமும், இச்சையும், தானெனுமமகாரமுமிருந்தபடி அவ்வரசன்றன்பமுற்றது சரிதானெனவிசாரணையிலேற்பட்டதாக ஸ்திர ஸ்த்ரமாம். ஆதலின் (நன்மையென்பதற்கு நாலுகோடி தத்து) என்பர் இதைப் பரியாலோசிக்கில், பசுவாகிய ஆன்மா சுகமடையவேண்டின் ஒடுக்கங்கைகூடும் வரையினும், அவசரப்படாது சற்குரு போதனும்ஸ வியாப்பியனுக, அறம், பொருள், இன்பம், வீடு, (நால்கு) சரிதை, கிரியை, யோகம், ஞானம், (நான்கு) சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சம், (நான்கு) ஆகுமிந்நான்கு தத்து (தத்துவயிடும்பு) இவைகளை உள்ளவித மாகக்கடந்து இரண்டற்றப் பதவியையடைவானெவனே அவன் சாந்த மாகிய தெய்வத்தை முதலாவது வசப்படுத்தி, தவம், மந்திரம், அனுஷ் டானம், விரதம், இவைகளை யினிதுமுடித்து நிரதிசயானந்தமாகிய பூரணநிலையை யடைதல்வேண்டுமென நிச்சயிக்கப்பட்டது.

---

## இராவணன் பூசித்தது.

முன்னொரு காலத்தில் இலங்கைக்கரசனாகிய இராவணன் எல்லாவுலகங்களுமழியுங்காலத்திலுந்தனது நகராகிய இலங்காபுரி யழியாதிருக்கத்தக்கதாக வரம்பெறவேண்டி கைலையங்கிரிக்குச்சென்று, அரியதவஞ்செய்ய சிவபெருமான் காட்சியுடனவன்வேண்டினவண்ணமெய்த வோர் சிவலிங்கங் கொடுத்தருளி, இதைமார்க்கமத்தியில் பூமியின்கண் வைக்கப்படாதென்றும், வைத்தால் நிலத்தூடழுந்தி விடுமென்றும், வாகனத்தேரூது கொண்டுபோயிலங்கையிற் பிரதிட்டைச்செய்து பூசித்துவரக்கடவையெனக் கட்டளையிட்டருளப்பெற்று மீண்டுமச் சிவலிங்கத்தைக் காத்திலேந்திச் செல்கின்றதை, இந்திரனறிந்தினி தேவகணங்களுக்கு இடருழக்கநேருமென் றமரலுற்று பிரார்த்தித்ததற் கிரக்கமுற்ற கணேசர் அவ்விராவணனுந்தியில் வருணனை யனுப்ப வதனாலவன் சகிக்கக்கூடாமல் வருந்த, அதை நிவர்த்திப்பான்போலவனெதிரிற்றனது வுருவைமறைத்து பிராமணப் பிள்ளையாய் வரக்கண்ட இராவணனவ்விலிங்கத்தைத் தான் ஜலஸ்பரிசத்திற்குப் போய்வருவளவும், வைத்திருக்கும்படி வேண்டிக்கொண்டபோதுரைத்தவண்ணம் முக்காலவனைக்கூவி நிலத்தில் வைத்துவிட, விரைந்தோடிவந்த இராவணன் தன்னாற்கூடினமட்டும் இருபது கைகளாலுந் தூக்கியும், தூக்கப்படாமல் மண்ணைத்தோண்டியும், அஃதூடுருவிநிற்கக்கண்டு மனவருத்தமுற்றுத் தனது பூரணவல்லமையினாலிழுத்ததற்கு அச்சிவலிங்கம் கைக்குவராமற் பசுவின் காதுபோற்குழைந்து பிரகாசித்ததால் கோபங்கொண்டு, அப்பிராமணப்பிள்ளை சிரமீதிற்குட்ட உடனே அவ்வடிவமாறி, தமது சொரூபத்தைக்கொண்டு, துதிக்கையினாலவனையெடுத்தண்டமுகட்டிற்படவீசியும், பாதலத்தழுந்தும்படித்தள்ளுகைக்குச்சகியாதவனாக உயிர்பிச்சைக்கேட்டு வருந்தி துதித்ததற்கிரங்கி திருவுளமிரங்கி நிலத்தில்விட்டபின்னர், அவ்விக்னேசன் திவ்யபுட்பங்களாலர்ச்சித்து, வேதாகமங்களாற் றுதித்து தன்தலையிற் குட்டிக்கொண்டு பணிந்து அக்கடவுளாற்பல வரங்களையும்பெற்றிலங்கைப்பதியையடைந்தின்புற்றிருந்தனன்.

கரும்பே கட்டுமாங் கனியே பழவினைக் கண்மறைக்க
யிரும்பாய்த் திருபிடித்தே காணமுடியா திருளதுவே
விரும்பினர்க் குற்றதி யாவுநீ யன்றோ விநாயகனே. (218)

மாசற்றிலகு மாமணியே தெய்வ மதிப்பிறையே
தேசுற்றிலகுந் திருவுளமே தொண்டர்த் தேடி யன்பாய்ப்
பூசும் வாசப் பொருளே திருநீறே புகழ்ந்திலர்மேன் து
வேசமே நலமே யாவுநீ யன்றோ விநாயகனே. (219)

ஒன்றிரண்டு மூன்று நான்கைந்தா றேழெட் டொன்பதுவே
அன்பே வம்பே அம்பே வைம்பத்தொன் றதுவே வாறுதாரத்து
ணின்றதுவே வினையாததுவே நினைவே பலவாய்
மின்னலே சசியே யாவுநீ யன்றோ விநாயகனே. (220)

முத்தரு முனிவிரு முக்கடற் றாண்டிய முன்னவருஞ்
சித்தருஞ் சித்திகட் டெளிந்த சீவேஸ்வரத் திண்கரும
பத்தரும் பத்தருட் பலித்திடுஞ் சிவஞானப் பாக்கியரும்
மித்திரரும் பகையுமி யாவுநீ யன்றோ விநாயகனே. (221)

ஆரமே வாரணமே வாரண்முக வைங்கரமே
சாரமே காரமே சச்சிதா னந்தமே சக்கிரஹமே
தீரமே சொலும்பல் நேரமே நிட்டையே தேகந்தரும்
வீரமே பூரமே யாவுநீ யன்றோ விநாயகனே. (222)

ஆட்சியே வாட்சிய மேயகண்டாதீத வறிவினுள் வாழ்ச்
சூட்சியே சூக்மமே தொடர்புந் தொக்காதத் தொம்பதமே
மாட்சியே காட்சியே மகத் துவஞான மனோரதமே
மீட்சியே மிதிலே யாவுநீ யன்றோ விநாயகனே. (223)

ஐயலையே வலையே சந்தேகமே வார்ப்பணமே
மையலே மாய்கையே வாயசமே மனவானரமே
தையலே தையலா யெதிர்ப்பட் டுயிர்க்கொல்லுஞ் சண்டனைக்கா
வெய்யலே குளிரே யாவுநீ யன்றோ விநாயகனே. (224)

ஆழ்ந்தறிந் தடங்கு மபரோட்சமே சுகமணைத் துணையே
சூழ்ந்தே சீவர்க்கு டுலக்கிடுஞ் சுக்ஞானச் சுடரொளியே
தாழ்ந்துந் தாழாதுத் தனைக்க ரொன்றிலாத் தற்பரமே
வீழ்ந்து மழிவிலா தியாவுநீ யன்றோ விநாயகனே. (225)

அம்பமே வம்பலமே வனுகதமே வாக்கினையுள்
தம்பமே சம்புவமே டம்பாகார சடவத்துவே
பிம்பமே வண்டபிண் டாண்ட பம்பரமே பீஜாட்சர
விம்பமே சம்பிரம மியாவுநீ யன்றோ விநாயகனே. (226)

மேலையே விசும்பே மினுக்கும் பயோதர வெடியுசரக்
காலையே மாலையே கடுமிரவே நடுக்காலமதே
ஆலையே வுயிர்களை யனர்த்தஞ் செய்யா தவனியிற் படைக்கும்
வேலையே முடிவே யாவுநீ யன்றோ விநாயகனே. (227)

பட்சமே பட்சணமே பரஹிதமே பராபரமே
சிட்சையே தீட்சையே செயுஞ்செயலற்ற சிரோரத்நமே
அட்சமே வட்சரமே ரட்சண்ணிய வத்தனேமா
விட்சமே விடனே யாவுநீ யன்றோ விநாயகனே. (228)

ஆண்டவனே யனுபவித்ததுவே யனுபவிப்பதே வூழ்த்
தாண்டினதே தாண்டவமே தாண்டவராயனே நற்
காண்டிபனே காண்டியே காண்டமே காணாக் கரையே
வேண்டி வேண்டாத யாவுநீயன்றோ விநாயகனே. (229)

அசனமே அடையே அடைவியே காடே வந்தரங்கப்
பசனமே பஜிக்கும் பஜனையுட்சாரமே பண்ணளக்குங்
கசமே கஜமே கயவுருவே காணாக் காங்கேயனே
விசனமே களிப்பே யாவுநீயன்றோ விநாயகனே. (230)

சாந்தமே சாட்சியே தற்சுதந்தரமே சருவவேதப்
போந்தமே மூர்த்தமே புண்ணியநதியே புகழ்ப்பதியே
யேந்துமன்னையே யீகையேமறுப்பே யேளனமே
வேந்தனே குருவே யாவுநீயன்றோ விநாயகனே. (231)

வானமே தானமே மானாபிமானமே மரணந்தரு
மீனமே நரகே யிருவினைக்கழிந்த யிருப்பிடமே
ஞானமேஞேய ஞாதுருவேபல நகைத்தொகையே
மீனமே மீனே யாவுநீயன்றோ விநாயகனே. (232)

ஒலியே சப்தமே வோதையே பேதையே வள்ளமகிழ்க்
கலியே கலியாணமே கபோலமதக் கபாலமே சொல்
லலியே நலியே வரற்றிடுஞ் செய்கையே வனைத்தினுக்கு
மெலிவே வியனே யாவுநீ யன்றோ விநாயகனே (233)

வித்தையே புத்தியே மனஞ்சித்த வகங்கார விலங்கதுவே
சத்தே யசத்தே சட்சுவாக் கிணையேமா தனூர்வதுவே
தத்தை யதத்துவே தத்வாதி கரணச் சடாயுவதே
மித்தையே குணமே யாவுநீ யன்றோ விநாயகனே. (234)

பொருப்பே பொற்பே பொறையே சிறுமையே புலாலுடம்புக்
கருப்பே கறுப்பே கனகப்பொன் நிறமே காமனெனு
நெருப்பே மும்மத மருப்பே மறுப்பே நினையில்மன
வெருப்பே திருப்பே யாவுநீ யன்றோ விநாயகனே. (235)

நிஜதத் துவபரா தினசங்கர பாஷ்ய நிருபணத் துட்
கஜாக்ரஜாய கணபத் மஞெனிலே யதனூற் கருதுமஹா
சுஜாதிக விஜாதிக பதத் துவசந்த்ர துவஜநெறி
விஜயமே ஜெயமே யாவுநீ யன்றோ விநாயகனே. (236)

அபயமே வுபயமே வனுட்டான வங்கமே வகமகிழுஞ்
சுபமே சுஷ்கிதமே துலாக் கோலே தூர்த்தரைக்கொல்
இபமே யிபமுகமே யிடரைக் கெடுக்காது யிசை
விபரீதமே வினைவே யாவுநீ யன்றோ விநாயகனே. (237)

நாட்களே நடிப்பே நங்கே நங்கூரமே திட்டந்தரு
மாட்களே வடுக்கே வகம்பிர்ம பாவனை யாணுவமே
கோட்களே குண்டுணிக் கூட்டமே கோட்டமே கொடியவினை
வேட்கையே பிறவே யாவுநீ யன்றோ விநாயகனே. (238)

வாதிட வாதவி வாதமே வாகட மணிமந்திரச்
சோதிட ரேகை விநாடிபட் சிகட்சித்தர் தொகையிலாது
ஓதிட நின்றவென் றவையிலா திருந்திடு முருவதுவே
மீதிட மெங்ஙன் யாவுநீ யன்றோ விநாயகனே. (239)

கழியே கழிவே கலப்பே கலப்பிலா காந்தளமே
சுழியே சுழுச்சியே தூங்காமற் றூங்குந் தூவெளியே
பழியே வழியே பார்த்தவ ருள்ளே பார்த்திருக்கும்
விழியே யெழிலே யாவுநீ யன்றோ விநாயகனே. (240)

அஞ்ஞானமே ஞானமே வ்வைகையோடு வறிந்தவர்க்கு
சுஞ்ஞான மாகத் துலங்கிடு மண்ணலே சோதனையு
னெஞ்ஞான மாக யெண்ணுவ ரப்படி யிலகுவதே
விஞ்ஞான போகமே யாவுநீ யன்றோ விநாயகனே. (241)

அடுப்பவனே யடுத் தேத்திப் பணிசெய்மெ யன்பர்க்கருட்
கொடுப்பவனே குண மறிந்தவைதைக் கொடுக்காக் கொடுமைதந்து
கெடுப்பவனே நன்மைத் தடுப்பவனே ஞானக் கெடிதலத்தில்
விடுப்பவனே யின்பே யாவுநீ யன்றோ விநாயகனே. (242)

பாதகமே பதமே யிதமே சொல்லும் பலசுருதி
சாதகமே ஜாதகமே சாதனைத் தனை யுணராப்
பேதகமே போதகமே பிரணவு பின்முனற்ற
மேதகமே யெழி லியாவுநீ யன்றோ விநாயகனே. (243)

பண்ணே பண்ணிசையே பயோதரமே பாக்கியமே
மண்ணே பொன்னே மாய்கையே வலியே மதிதருகு
மெண்ணே யெழுத்தே கண்ணே கருத்தே யெழிலொளிசூழ்
விண்ணே விளக்கே யியாவுநீ யன்றோ விநாயகனே. (244)

பரமே பராபரமே மனோகரமே பற்றற்றவர்
வரமே வரத்தினுக் கேற்ற வண்ணமுரு வாய்த்தகுணத்
தரமே தராதலமே சுகாதாரமே தனையறிந்தோர்
விரதமும் தவமு மியாவுநீ யன்றோ விநாயகனே. (245)

பதைப்பதைத்தே வுயிர்வாடுதற் கண்டும் பராமுகமாய்
சதைக்கு மென்புக்குஞ் சூரிக்கு முளபேதந் தானறிய
வதைத்தும் வதையாது வாழ்வித்து வாழ்விக்க வண்மைமிகு
விதைத்தும் விதைத்தறுப் பவனுநீ யன்றோ விநாயகனே. (246)

ஆழியு மலையு மடங்காத வெள்ளமு மருநரகப்
பாழியும் பள்ளமும் படைகொடை யிடருடைப் பாற்கடைமத்
தாழியும் தடையுந் தளர்ச்சியுங் குளிர்ச்சியுஞ் சகம்பிழைக்கும்
மேழியு மூழியு மியாவுநீ யன்றோ விநாயகனே. (247)

அங்கமும் வங்கமு மவைக்கு மேலாகு மபரஞ்சிதத்
தங்கமு மெனைப்பெற்றத் தங்கமுஞ் சங்கமுந் தானுணரு
லிங்கமு மெங்கணு மலரு ஞானகர லீலைமலி
வெங்கலித் துங்கமு மியாவுநீ யன்றோ விநாயகனே. (248)

களையுங் களைவுங் களவுங் களங்கமுங் கடபடமு
முளையு முள்ளது முள்ளமு முள்ளே யொளித்தொளித்து
அளையுங் கிளையு மள்ளலுந் துள்ளலு மலைவக் கைவரின்
விளையும் விளைவு மியாவுநீ யன்றோ விநாயகனே. (249)

காண்டலுங் காண்டிகைக் காண்டீபன் முன்னே கண்ணன்சொல்லித்
தூண்டலுந் தூண்டினத் தூமனைத் தொடுத்தலுந் தொல்லைவழித்
தாண்டலுந் தாண்டவ மாடலுங் கூடலுஞ் சைதன்யசீர்
வேண்டலு மீண்டலு மியாவுநீ யன்றோ விநாயகனே. (250)

தொகுத்தலுஞ் சூழ்தலுந் தொலைத்தலு நிலைத்தலுந் தொந்தபந்தம்
வகுத்தலு மதித்தலும் வாழ்த்தலுந் தாழ்த்தலு மதியறிந்துட்
புகுத்தலும் புணைத்தலு மணைத்தலு மிணைத்தலும் போற்றுமுயிர்
மிகுத்தலு நகுத்தலு மியாவுநீ யன்றோ விநாயகனே. (251)

அத்தனு மன்னனு மப்பனு மன்னையு மரசன்குரு
சத்தனசத்த னிசத்தின் வசத்தன் தனைமறந்தப்
பித்தனுன் மத்தனபுத்த னபத்தன் பிரபலங்கள் கொள்
வித்த னவித்த னியாவுநீ யன்றோ விநாயகனே. (252)

நகையும் நாணலும் பூணலுங் கோணலு நக்குமலிப்
பகையும் பழியும் பாபமுஞ் சாபமும் பற்றிலாதார்த்
தொகையுந் தொல்லையுஞ் சொந்தமு நிந்தையுஞ் சோர்வடைய
மிகையு மெலிவு மியாவுநீ யன்றோ விநாயகனே. (253)

பொருட்டனைச் செலவழித் திடுதற்கு யேற்றப் புகழிகழ்ச்சி
அருட்டனைப் பெற்றவ ராசார மரண்பணி யன்பு தவந்
தெருடெனத் திகழ்வித் திருவினைத் தீர்த்து சென்மமறு
விருதுயர் செயந்தரு பவனுநீ யன்றோ விநாயகனே. (254)

ஐயெனும் விழிச்சி ரடைதலு மடைத்தலு மவையிரண்டைச்
செய்தலுஞ் செய்தவைத் தெரிதலுந் தேர்தலுந் தெளிந்தவழி
வுய்தலு மோர்தலு முலகப் பகட்டைவிட் டோய்ந்திருக்கும்
மெய்தனை மெய்ப்படித் தருவநீ யன்றோ விநாயகனே. (255)

ஐயமேற் பவனுங் கொடுத்துங் கொடாம லகற்றுவனுங்
கைவரச் செயலுஞ் செய்கையுங் கண்டுக் களிப்பவனும்
பையுண் ணலுமரித் தலும்பிழைத் தலுமெலாம் படைத்தழிக்கும்
வெய்யக் குணமும் விவேகநீ யன்றோ விநாயகனே. (256)

அழிவிலா வருளு மன்புயர்ச் சிந்தையு மறிவடக்கங்
கழிவிலா வயதுங் காமனைக் காலனைக் காய்ந்து நல்லோர்ப்
பழிப்பிலாச் சிந்தையும் படைப்பிலா சனனமும் பாழடரும்
விழியிலா விழியு மியாவுநீ யன்றோ விநாயகனே. (257)

ஊதாரி யாதலு முனைந்து வாடலு முடல்வளர்க்கப்
பேதா பேதத்தினிற் பிணிப்படலு முண்மைப் பெரிதுணரின்
வாதாட் டமுமதன் வாய்மையு மாய்கையும் வகுத்தலிது
வேதாவுந் தாதாவு மியாவுநீ யன்றோ விநாயகனே. (258)

ஊத்தைக் கடத்தி லொளித்துளத் தத்துவ மொன்றுபட்டு
ணேத்திரம் பெற்று நித்திய சுகாரம்ப நிலையடைசற்
பாத்திர மானது வாய்த்துப் பேசாமௌனப் பரிசெனூஉம்
மேத்தகு நேர்மை யாவுநீ யன்றோ விநாயகனே. (259)

ஊக்கமு மாக்கமு முள்ளும் புறம்பு முள்ளதில்லா
நோக்கமு நூலுணர் நண்ணிய வறிவு நோன்பதனைத்
தேக்கலுந் தெளிதலுந் தெரிசித் தலுமதைச் சிந்தித்தலும்
மீக்கலு நீக்கலு மியாவுநீ யன்றோ விநாயகனே (260)

கிடைத்தற் கரிதானக் கிருபையு மனைநலங் கேட்டிடலுந்
தடைப்படா மாயைத் தன்வலி யொடுக்கிச் சமாதிநிலைப்
படைத்தலும் பணியெனப் பலுகலு மனுபவம் பற்றிடலும்
விடைத்தலுங் கடுத்தலு மியாவுநீ யன்றோ விநாயகனே. (261)

கூர்முனை யுள்ள வீட்டியர் யுயிர்களைக் கொன்றறத்தின்ற
சீர்மலையா முத்தி வீடணுகாதத் தீயநடை
யார்வமு மவ்வழிக்கே துணையாதலு மகன்றிடற்கு
வேர்க்கொண்ட வித்தும் வினைவுநீ யன்றோ விநாயகனே. (262)

கஞ்சமே கயமே கருணைமா மலையே கைலாயமே
சஞ்சமே சாமே சகஸ்ற்றிர ஞானச் சங்கீதமே
தஞ்சமே தற்பர தத்துவமே சருவ சாட்சியமே
விஞ்சமே விகிர்த மியாவுநீ யன்றோ விநாயகனே. (263)

சாந்தநற் சாந்தஞ் சதசத் சதாத்வ சகலகுணப்
பூந்தரும் பூம்பொழில் பூவனம் பூரணப் பொதுளியச்சீர்
மாந்தரும் வாரணரும் வரமுஞ் சாரும் அல்லுனவார்
வேந்தருஞ் சேந்தரு மியாவுநீ யன்றோ விநாயகனே. (264)

பாடமும் பாவடம் பாவினம் பாசுரம் பலிதமுறத்
தாவடந் தாழ்வடந் தானமுஞ் சங்கமுந் தத்துவமுக்
கோவடங் குணமடங் கொங்கண வங்கணங் கோவிந்தனார்
மேவட மீதட மியாவுநீ யன்றோ விநாயகனே. (265)

படமுங் கடமும் பங்கயப் பங்குஜ பாஷாண்டிக
னடமுந் தடமு மடங்க மாடங்கமு மகண்டிதச்சீர்க்
குடமுந் திடமுங் கோளகை யானடர்க் கோர்பமத
விடமும் புடமு மியாவுநீ யன்றோ விநாயகனே. (266)

சோதியே சுடருட் டுலங்கித் துலங்காதத் துறைமுகமே
ஆதியே வந்தமே யசைந்து மசையாத வம்புலியே
நீதியே நிஷ்கள நிரஞ்சனத் துவிதமே நிகரில்மௌன
வீதியே விதியே யாவுநீ யன்றோ விநாயகனே. (267)

பாடமே பாடலி னோடிசை வீணையே பல்லவமே
சேடமே தோடமே சாந்து பணக்குஞ் சேடமேஞான
வோடமே வொப்புயர் வில்லாததேவே வுலகை மயக்கா
வேடமே வேடிக்கை யாவுநீ யன்றோ விநாயகனே. (268)

கண்டதுங் காணாததுங் கண்டபேருளங் களித்துசதா
தொண்டதுந் தொண்டருக் தொகையிலாத் தொழும்பினர்சூழும் பூ
மண்டல மெண்டிசைக் கொண்டலைப்போ டவழ் வல்லுணருள்
விண்டிடு மிண்டமு மியாவுநீ யன்றோ விநாயகனே. (269)

சீருஞ் சிறப்புஞ் செல்வமுங் கல்வியுஞ் சிந்தைதவ
மேரும் விளக்கமும் விஞ்சையுஞ் செஞ்சொலு மின்னுநலப்
பாரும் பார்வையும் பரமும் வரமும் பலசனன
வேரும் பேரு மியாவுநீ யன்றோ விநாயகனே. (270)

உத்தம மத்திப மதமமூன் றென்பது முவமைப்படி
சத்தசத் தென்பதுஞ் சகலாப ரோக்ஷ தத்வமசி
யொத்திரண் டொன்று முயர்நிலைத் தருவது முள்ளதெனும்
வித்தக முத்தியுஞ் சித்திநீ யன்றோ விநாயகனே. (271)

சிந்தைத் தெளிந்த யிடத்திற் றெரிசிக்குஞ் சிவப்பிழம்பே
அந்தமிலா மிறை யழகனே யழகெலா மமைந்தவனே
தந்தையுந் தாயுமா யன்பரைக் காக்குந் தயாபரனே
விந்தையு மிந்திரிய மியாவுநீ யன்றோ விநாயகனே (272)

காயாமற் காய்க்குங் கனியே கருத்தினுட் கலந்துயிர்
மாயாமன் மாய்த்து மறையாமல் மறைக்கு வல்லமையு
டோயாமற் றோய்ந்துத் தொடராமற் றொடருந் தூவெளியே
மேயாமல் மேய்ப்பவ னியாவுநீ யன்றோ விநாயகனே. (273)

அழையாம லழைத்து வணையா தணைத்து வறிவினுளே
நுழையாம னுழைந்து துட்பங்க ளோதிலூழ் நோயகற்றி
தழையாம டமைத்து சமரசஞானத் தடவலாச்சீர்
விழையாமன் விழைத வியாவுநீ யன்றோ விநாயகனே. (274)

அன்பினுக் கேற்ற வார்வமே வபிஷேக வர்ச்சனையே
மன்னுஞ் சுகாதீத வத்துவே வத்துவின் மாறுதலே
சின்மயமே சிவானந்த நற்போக சிலாக்கியமே
மின்னலுங் காற்று மிடியுநீ யன்றோ விநாயகனே (275)

பன்னிரு கலையே கலையுட் பலித்திடும் பரஞ்சுடரே
இன்பமுந் துன்ப மென்ப தில்லாதவிறையவனே
பன்னகமும் விஷம் பாலு மொன்றாய் நிறைப் பாரியனே
வின்னமு நன்மையு மியாவுநீ யன்றோ விநாயகனே. (276)

சரிதைக் கிரிகை யோகமு ஞானமாய்ச் சாற்றுநெறிப்
பெரிதுணருங்வகைப் புண்ணியமு மவைப் பேணுநிலைத்
தெரிவரி யாதவ ருளத்துங் குடிகொண்டு சீரளித்த
விரிவுறுங் கருணைக் கடவுணீ யன்றோ விநாயகனே. (277)

உள்ளமு முணர்வு முற்சாகமு முண்மை யுடலழிக்குங்
கள்ளமும் வாதமுங் கட்டுரைப் பொய்மொழிக் காலனுயிர்க்
கொள்ளலுங் கோடலுங் குணப்படுஞ் சிந்தைக் கொடுத்துநலம்
விள்ளலு மெள்ளலு மியாவுநீ யன்றோ விநாயகனே. (278)

ஆட்டலு மடக்கலு மடங்கின தவைசுக மடைந்திடநேர்க
காட்டலுங் கணித்தலுங் கருதலுங் காணக் கருத்ததனை
யீட்டலும் வாட்டலு மோட்டலு மெதிர்ப்படி னிச்சைப்படி
வேட்டலும் விட்டலு மியாவுநீ யன்றோ விநாயகனே. (279)

சாற்று மளவிலாச் சொரூப வரூபமுந் தாண்டியன்பர்ப்
போற்று நிலைமைக் குகந்த வடிவெலாம் பொருந்திவினைக்
கூற்றுவந் தணுகா வரமுங் காட்சியுங் கொடுத்தனைபின்
வேற்றுரு மாற்றுவ தியாவுநீ யன்றோ விநாயகனே. (280)

புகழ்ந்தேத் தினர்முன் புகடர வெழுந்துப் பூசுரனுய்த்
திகழுங் கருணையுஞ் சிந்தியா தவர்விழித் தெரிவரியா
திகழுமப் படிமறைந் திடுக்கணு னெருக்கி யிடர்ப்படுத்தி
மிகமிகக் கூத்துசெய் பவனுநீ யன்றோ விநாயகனே. (281)

உயிர்ப்பிரா ணன்சிவ ஞன்மா வறிவென வோதுதலைப்
பயின்றும் பயில்வானும் அருட்சிவ மென்பதும் பார்த்திடினே
தயிர்மோர் வெண்ணெய்நெய் பாலின்றிலாத சாட்சியம் போல்
வியன்பெரும் பொருட்க ளியாவுநீ யன்றோ விநாயகனே. (282)

ஊட்டிடு லல்லாதுத் தானே யெடுத்துண்ண வூகமில்லா
நாட்டமுளச்சிறு குழந்தையைப் போல நலம் பொலவூழ்ச்
சேட்டைக ளற்றுத் தெரிவதொன் றின்றிச் சிரணுகும்
வீட்டைத் தருதலும் நீக்கனீ யன்றோ விநாயகனே. (283)

விருப்பக் கொடுத்து வினைவிலங் கிட்டு விற்றொழியக்
கருப்பா சயக்குழி காவலனாகிக் கண்பெற் றிவண்
மருப்புடை யால்வினைத் தீர்த்தாண் டுண்மை மலரடியில்
விருப்புடன் சேர்த்தாள் பவனுநீ யன்றோ விநாயகனே. (284)

பூவினிற் கலந்த வாசம் வேறாக்கப் போவதில்லை
நாவினின் றேவெளிப் பட்டதை யுட்கொள ஞாயமுண்டோ
தேவர்களிற் றலைவ நினையன்றித் தெரிபவரி யார்
மேவரிதுஞ் சிறி தியாவுநீ யன்றோ விநாயகனே. (285)

க்ஷாத்திர சூத்திரந் தனியுஞ் சமுசார சங்கமமும்
பாத்திர மபாத்திரங் தர்க்க மந்தரங்க பஹிரங்கமு
மாத்திக நாத்திக மிவை ரெண்டிலாடி யமர்ந்து நல
மேத்திக ழானந்த முடிவும்நீ யன்றோ விநாயகனே. (286)

சொல்லியுஞ் சொல்லாதுக் கேட்டுங் கேளாத சூக்மநிலை
அல்லும் பகலுமெனும் பிரிவினையுளத் தைமறைத்து
நெல்லுமி யின்றிப் பிழையா தனுபவ நினைமறந்தே
வெல்லும் வெல்லாது யாவுநீ யன்றோ விநாயகனே. (287)

பாடும் பண்களும் பண்ணுக் கிசைந்த பலநடன
மாடு மாட்டமு மவைக்கேற்ற வுருகொண் டறிவதனுட்
கூடுங் கூட்டமுங் குணங்கொள் வதுமதிற் கூடாமலே
வீடும் வீடன்றி விளங்கனீ யன்றோ விநாயகனே. (288)

எழுது மெழுத்து மெழுதா யெழுத்து மிதன்கருத்தை
முழுதுந் தெரிந்தவன் றெரிவித்தவன் பின்னுந் தெரிவிப்பவன்
விழுது மிலைகாய் வித்தென நிறையுமுன் வித்தைபெற
மெழுகு மனலாய்ச் செய்வோய்நீ யன்றோ விநாயகனே. (289)

ஐயந் திரிபறத் தெளிந்துயேத் திடவு மருள்வசத்தி
லுய்யு நெறியுங் கருத்தும் பூசனை யுயர் தவமுஞ்
செய்யுஞ் செய்யாது நிலையது கைவரச் செய்யும்படி
மெய்பொய் யிரண்டற் றவனுநீ யன்றோ விநாயகனே. (290)

நினைப்பு நினையா ததுநினை வேயத னேர்மைகட்போய்
வனைப்பும் வசமு மாரூட்ட முடனதில் வாழ்மனதின்
சினைப்புந் திவோகமுஞ் செனனமு மிவையிலாச் சீருளும்
மினைப்பும் வினைப்பும் விபரநீ யன்றோ விநாயகனே. (291)

அன்பெனுங் கயிற்றி லறிவெனும் பந்து வாடவது
மின்பமுந் துன்ப மிவ்வரெண்டு மற்று யெழின்மிருந்து
மன்னு மருளெனு மமுதத்தை மாந்தி வரம் பெற்றிவண்
மின்னுங் கருணைச் செயுந்தாய்நீ யன்றோ விநாயகனே. (292)

பண்டை வினையே பற்றா நிலையே பற்றற்றவர்க்
கண்ட வடிவமே கருவி கரணங்கட் கடந்ததுவே
திண்டிறன் வலியே நீண்டாத் திருமேனிச் செழித்ததுவே
விண்டிறட் சோதியு மியாவுநீ யன்றோ விநாயகனே. (293)

பசைபசி பாசையே பசுபாச மற்றப் பதியதுவே
இசையே பிராகமே யிராகத் துவேசமே யின்னல்மிகு
வசையே வாழ்த்தலே மனம்புள கிக்கு வளர்சுகமே
விசையே மெதுவே யாவுநீ யன்றோ விநாயகனே. (294)

பாழ்படுஞ் செயலே பயன்றரு நலமே படாடோபமே
வாழ்மனைக் கொளியே மகிழ்ச்சி யிகழ்ச்சி மதிபுகழ்ச்சி
யேழ்மையுந் தாழ்மை யிவையெலாம் வேண்டா யேகாந்தமே
வேழ்வியு மாழையு மூழைநீ யன்றோ விநாயகனே. (295)

தேவரு மூவருந் திகழ்பல நாமமுந் தினகரனு
மூவகைப் பாவ துவேசமா பாசமு முச்சுடருஞ்
சேவடி யேத்தின ருள்ளங் களிக்குந் தெய்வமுமாய்
மேவி விளங்கு விமலநீ யன்றோ விநாயகனே. (296)

இதமு மிதயமு மிவைக்கு ளொடுங்கிடு மின்பதுன்ப
மதமு மேகாதி வலிநலி யெனக்கொல்லு மனச்சனியின்
சதமுஞ் சங்கேதச் சஞ்சல வஞ்சக சகலரோக
விதமும் விபரீத மியாவுநீ யன்றோ விநாயகனே. (297)

தேடுங் கனகமே செழுமறைப் பொக்கிஷஞ் சேர்வரையே
ஆடம்பரமே யசைவிக்குஞ் சூத்திரமே யறிவினிடங்
கூடும் பொருளே குணக்குன்றே வுயிர்களுட் குலவிமோட்ச
வீடுங் காடு நாடுநீ யன்றோ விநாயகனே. (298)

கவியாசு மதுரஞ் சித்திரம் வித்தாரக் கலையுடன்முப்
புவியாகு ஞானமண் டலமே தழைக்கும் புரந்தரனே
அவியாத சோதி வைம்பத்தோ ரக்கர மதையறியார்
விவிலிய மாக மறைவநீ யன்றோ விநாயகனே. (299)

சாத்திரம் பற்பல குணங்குறி செயனடைச் சமரசமு
ணேத்திரந் தனிற்கண் டானந்தங் சொளுமய நிச்சயமுஞ்
க்ஷேத்திரந் தீர்த்த மூர்த்தமு மருவுரு செறிந்திலகு
மேத்தகை கோத்திர மியாவுநீ யன்றோ விநாயகனே. (300)

சக்கர மாயவன் சங்கரன் சதுர்முகன் றனைமுருகன்
திக்கெலாம் பணிசெயு மனந்த ரூபங்களாய்ச் சேர்ந்திருந்து
மக்குண மவ்வுரு வச்செயன் வேறென வமைந்தளிக்கு
மிக்கவு மகிமை யாவுநீ யன்றோ விநாயகனே. (301)

சமயமுஞ் சமயானுச் சாரமு நெறிசச்சி தானந்தமு
மமருநிட் டைகளு மதனுலே காணு மபரோட்சமுங்
கமழு முபாசனைக் கருத்தொன்றாய் நிலைக்குங் கடவுளுமாய்
விமரிசை யாமுரு வியாவுநீ யன்றோ விநாயகனே. (302)

நிரதி சயானந்த நித்திய லட்சணமு நிர்ச்சிந்தனைப்
பரங் கருணாநிதி பன்னிரு கலைமதிப் பகரறிய
சரணபங் கயத்திரு வருட்கொழித் தாளுந் தந்திமுக
விரணப கங்கணா திபனுநீ யன்றோ விநாயகனே. (303)

சைவா கமமும் பதினெண் புராணஞ் சத்தியநேர்க்
கைவருஞ் சுருதி ஸ்மிருதி மஹாவாக்கியங் கண்டசத்தி
தெய்வ வாதினைபன் னிருதிருமுறைத் தொண்டர் சித்தர்முத்தர்
மெய்ப்படு வேதஞ்சொ லியாவுநீ யன்றோ விநாயகனே. (304)

வேதவே தாந்தமே சித்தாந்த முடிவில் விளங்கவரு
நாத நாதாந்தமே நடுநா யகமே ஞானரசப்
போத போதாந்தமே புண்ணியமே புனிதமே போற்றவரும்
மேத யேகாந்தமே யாவுநீ யன்றோ விநாயகனே. (305)

அஞ்ஞான மாகு மசடனை யகற்றி யருளதனுன்
மெய்ஞ்ஞான மென்னும் வித்துள் விளைந்து விலையிலாதச்
சுஞ்ஞான மாகிச் சொல்லாமற் சொல்லுஞ் சுயம்ப்ரகாச
விஞ்ஞான மாமயு மியாவுநீ யன்றோ விநாயகனே. (306)

முக்குண முப்பகை முச்சுடர் முத்தொழின் முறையனைத்தும்
பக்குவப் பட்டமெய் யன்பர்க்கேற் றப்படிப் பலிப்பவனே
திக்கற்ற யேழைச் சிவஞானப் பரதேசி சிந்தைபடு
விக்கின நிக்ரஹ விமலநீ யன்றோ விநாயகனே. (307)

## விநாயகபுராணம்.

§

வேத காரணமுநீ வேதமோர் நான்குநீ
பாதமோர் நான்குநீ பதங்களோர் நான்குநீ
போதலை மயலமார் புவன காரணனுநீ
நாதநின் பெருமையை நவிலவல்லா ரெவர் (1)

புராதனப் பொருளுநீ புறம்பினும் உள்ளினும்
விராவுமெய்க் கரியுநீ யிருமுப நீடதநீ
சராசர குருவுநீ தத்துவ முழுதுநீ
பராபர நினதியல் பகரவல்லா ரெவர் (2)

மூவர் காரணனுநீ மூன்று காரணமுநீ
மூவகை யுலகநீ மொழியுமுச் சுடருநீ
மூவகை யுயிருநீ மூவகை யுருவுநீ
தேவனே நினதருட் டெளியவல்லா ரெவர் (3)

இந்திரி யங்களி லிசையதி தெய்வநீ
இந்திரன் முதலிய வெண்டிசை தேவர்நீ
அந்திநண் பகலுநீ யறுவகைப் பருவநீ
எந்தைநின் னுருவினை யியம்பவல்லா ரெவர் (4)

ஏகனீ யனேகநீ யிருளுநீ யொளியுநீ
போகிநீ யோகிநீ புகழ்கலை யுராவுநீ
சாகர மேழுநீ தடவரைக் குலமுநீ
மாகநின் னடிமலர் மருவவல்லா ரெவர் (5)

அறைபிர மேயநீ யப்பிர மேயநீ
பறையும் பாவனையுநீ பாவனா தீதநீ
நிறைபர ப்ரமநீ நிலமுத லைந்துநீ
யிறைவநின் னருளினை யெய்தவல்லா ரெவர் (6)

மிருதிநீ புராணநீ வேறுபல் கலையுநீ
வருணமோர் நான்குநீ வனமுப வனமுநீ
தருவொடு கொடியுநீ சகலசெந் துக்கணீ
யொருவநின் றன்னிய லுணரவல்லா ரெவர் (7)

காமமா திகளுநீ கடும்பசி தாகநீ
நாமநித் திரையுநீ நகுவிநோ தங்கணீ
ஏமமார் பொறையுநீ யின்பநீ துன்பநீ
வாமனே நின்கழல் மதிக்கவல்லா ரெவர் (8)

அருளுநீ மறமுநீ யன்புநீ வன்புநீ
தெருளுநீ மருளுநீ செல்வநீ வறுமைநீ
வெருளுநீ தேற்றநீ வேறுநீ யொன்றுநீ
குரவநின் குணங்களைக் குறிக்கவல்லா ரெவர். (9)

புண்ணியத் தலங்கணீ பொருவிறீர்த் தங்கணீ
வண்ணமூர்த் திகளுநீ வரந்தரும் வள்ளனீ
பண்ணியம் பலவுநீ பரமதப் பொருளுநீ
யண்ணலே நின்செய லறியாவல்லா ரெவர். (10)

செய்வினை முதலுநீ செயப்படு பொருளுநீ
செய்வினைத் தொழிலுநீ செய்கரு மப்பலன்
உய்வகை யவரவர்க் குதவவல் லவனுநீ
மெய்வலாய் நினதியல் விளக்கவல்லா ரெவர் (11)

குணமொடு குறிபல கொள்கைகொள் ளாயெனின்
அணிமலர் மணமென வாக்கையி னுயிரெனப்
பணியுயி ரறிவெனப் பயிலுமத் துவிதமாங்
கணபதி நினதியல் காணவல்லா ரெவர். (12)

இதுவுமது.

நிருவி கற்பமாய் நிறைந்த வானந்த பூரணமாய்
நிருவி காரமாய் நிர்க்குண மாயத்து விதமாய்
நிருவி சேடமாய் நிரஞ்சன மாகியொன் றாலு
நிருமி தப்படாக் கணேசநின் னீள்கழ லொழுதாம். (1)

பிரமமா யொளியாய் நிராகாரமாய்ப் பெரிதாய்த்
தரணியாதி தத்துவமெலாங் கடந்த தத்துவமாய்
வரமெலாந் தரு வள்ளலா யேகமாய் வதியும்
பரமனாகிய கணேசநின் பதமலர்த் தொழுதாம். (2)

என்று நீங்குறுத் திருவுரு வுடையதா யெங்கு
மொன்றி நின்றுணர்ந் திடுமறி வானந்த வுருவாய்த்
துன்றும் யோகியர் தியானிக்கப் படுஞ்சுக மாகிச்
சென்று சேர்தராக் கணேசநின் றிருவடி தொழுதாம். (3)

உலக காரண காரியமா யுயிர்க் குயிரா
யிலகு ஞானியர் தமையிழந் தெய்துநற் பேறாய்ப்
பலவுமாய்ப் பரபிரமமாய்ப் பரேசமாய்ப் பரமாய்த்
திலகமாகிய கணேசநின் றிருவடி தொழுதாம். (4)

சகலலோகமும் படைத்தளித் தழிக்குந் தற்பரமாய்
அகிலலோகத்தும் புகலிடந் தனக்கிலா வமைவாய்ப்
புகலுலோகங்க ளனைத்துக்கும் புகலிடந் தானாம்
பகவனாகிய கணேசநின் பதமலர்த் தொழுதாம்; (5)

உகத்துக்காதியாய்த் தேவருக் காதியா யுலவாச்
சுகத்துக்காதியாய்ச் சுரர்களுக் கீசராய்ச் சுடரு
மகத்துக்கீசராய்க் கணங்களுக் கீசராய் மதிப்போ
ரகத்துக்கூடிய கணேசநின் னடியிணை தொழுதாம். (6)

இராசதத்தொழி லாகிய சிருட்டியை யியற்ற
விராவிராசதத் திருக்கொடு பிரமனாய் மேலாய்ப்
பராவித்தைக ளனைத்திற்கும் பயில்பிறப் பிடமாய்
ஒராது நின்றருள் கணேசநின் னொளிர்ப்பதந் தொழுதாம். (7)

சோர்விலாதசாத் துவிதநற் றொழிலெனுந் திதிக்குச்
சார்வதான தாமதந்தனி லுருவுகொண் டரியாய்த்
தீர்விலாப்பகை யசுரரைச் செகுத்திருந் தேவர்க்
கார்வமேயருள் கணேசநின் னருட்பதந் தொழுதாம். (8)

தாமதத்தொழி லானசங் காரமாற் றுதற்குத்
தோமகற்றுசாத் துவிதத்திற் றோன்று ருத்திரனா
யேமமுற்றிமை யோர்முனி வோரெலா மிறைஞ்சச்
சேமவைப்பதாங் கணேசநின் சேவடி தொழுதாம். (9)

கிரணபந்தியாற் பயிரையுங் கிளர்சுவைப் பெருக்காற்
பரவுதேவர்க டம்மையு மகிழ்வித்துப் பார்ப்பார்க்
கரசனாயுல கத்துவெப் பறுத்திடுந் திங்கட்
சுருவமாகிய கணேசநின் றுணையடி தொழுதாம். (10)

ஒளிப்பிழம்பதாய் மேகவா யுவினுரு வாகி
விளிப்பில்காலங்க டெரிப்பதாய்த் தொழிலெலாம் விளைத்து
களிப்பதாய்ப்பல சத்திய தானசெங் கதிராய்த்
தெளிப்பநின்றருள் கணேசநின் சேவடி தொழுதாம். (11)

நிரப்பிறன்மமாய்த் துறக்கமாய் நிறைந்த தத்துவமாய்த்
தரைச்சொரூபமாய்ச் சமுத்திர மாய்த்திசைச் சுரராய்க்
கூரப்பிலாவுல கனைத்துமாய்க் கலந்துநின் றருளும்
பரப்பிரமமாங் கணேசநின் பாதங்க டொழுதாம். (12)

### இதுவுமது.

பந்த மகற்று மனந்தகுணப் பரப்பு மெவனைபா லுதிக்குமோ
வெந்தவுலகு மெவனிடத்தி லீண்டு யிருந்து சுரக்குமோ
சந்தமறை யாகமங்கலைக ளனைத்து மெவன்பாற் றரவருமோ
வந்தவிறையாங் கணபதியை யன்புகூரத் தொழுகின்றோம். (1)

உலகமுழுது நீக்கமற வொன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற்பிறக்கும் விகாரங்க ளுறாதமேலா மொளியாவ
னுலகம்புரியும் வினைப்பயனை யூட்டுங்களைக ணெவனந்த
வுலகமுதலைக் கணபதியை யுவந்துசரண மடைகின்றோம். (2)

இடர்கண் முழுது மெவனருளா லெரிவீழ்ப் பஞ்சு யெனமாயுந்
தொடருமுயிர்க ளெவனருளாற் சுரர்வாழ்பதியு முறச்செய்யுங்
கடவுண்முதலோர்க் கூறின்றி கருமமேவனுன் முடிவுறமத்
தடவுமருப்புக் கணபதிபொற் சரணஞ்சரண மடைகின்றோம். (3)

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர்கங்கை முதலான
தீர்த்தமாகி யறிந்தறியாத் திறத்தினு முயிர்க்குநல
மார்த்திநாளு மறியாமை யகற்றியறிவிப் பானெவனப்
போர்த்தக்கருணைக் கணபதியைப் புகழ்ந்துசரண மடைகின்றோம்.

செய்யும்வினையின் முதல்யாவன் செய்யப்படுமப் பொருள்யாவ
னையமின்றி யுளதாகு மந்தக் கருமப் பயன்யாவ
னுய்யும் வினையின் பயன்விளைவி னூட்டிவிடுப்பா னெவனந்தப்
பொய்யிலிறையைக் கணபதியைப் புகழ்ந்துசரண மடைகின்றோம். ()

வேதமளந்து மறிவரிய விகிர்தன்யாவன் விழுத்தகைய
வேதமுடிவி னடனவிலும் விமலன்யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கு நாதனெவனெண் குணனெவனப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்துசரண மடைகின்றோம். (6)

மண்ணினைந்தாங் குணமாகி வதிவானெவ னீரிடை நான்காய்
நண்ணியமர்வா னெவன்றீயின் மூன்றாய்நவில்வா னெவன்வளியி
னொண்ணுமிரண்டு குணமாகி யியைவானெவன் வானிடையொன்றா
மண்ணலெவனக் கணபதியை யன்பிற்சரண மடைகின்றோம். (7)

பாசவறிவிற் பசுவறிவிற் பற்றற்கரிய பரன்யாவன்
பாசவறிவுப் பசுவறிவும் பயிலப்பணிக்கு மரன்யாவன்
பாசவறிவும் பசுவறிவும் பாற்றிமேலா மறிவான
தேசனெவனக் கணபதியைத் திகழச்சரண மடைகின்றோம். (8)

---*---

## பதினேறவது.

## சீவன்முத்தர்களின் சிறப்புயர்கதிநிலை.

—§—

தன்னை மறந்து யிருக்கு நிலையே சமாதியதாம்
பின்னை யொரு சிறிதும் பிசகிலை மனம் பேதித்திடா
துன்னை யுள்ளபடி கண்டு வுபாதியற் றொடுங்கிடுவர்
மின்னலு மேகம்போ லாகுவர் முத்தர் விநாயகனே. (308)

ஒழிவிலா பக்தி வுயரறந் தவங்கண்மூ னுஞற்றினதா
லழிவிலாச் சமாதி நிரதி சயானந்த வாக்கைபெற்றார்
பழியிலாச்செயலுங் குணமுள்ளோ ரேத்திப் புணிபுரியுள்
விழியதை யடையுமுத்தர்க ளன்றோ விநாயகனே. (309)

செய்வதைச்செய் து விடுவதை விட்டுச் சிந்தையொன்றாய்
மெய்யதைக் கொண்டுப் பொய்யதை நீக்கும் விதமதைப்போல்
கையினு னெல்லிக கனியென ஞானக் கண்படைத்து
மெய்யழியா தென்றும் விளங்குவர் முத்தர் விநாயகனே. (310)

பொன்னி னருமைக் குணமுந் தெரிந்தால் பூஷணத்தின்
றன்மையும் பெருமையுந் தானறிவாரிதிற் சங்கையிலைத்
தன்னை யறிந்துத் தனியே யிருக்குஞ் சமாதிபெற்று
மென்மேலு மகிமையால் விளங்குவர் முத்தர் விநாயகனே,

அனியாயக் காரப் படுபாவி யாகுமைவர்களாஞ்
சனியின் றலையை பொடித்து மெய்ஞ்ஞானச் சாதனையு
டனியாக நின்றுத் தனையுள்ள படிக்கண்டு சகலத்தையும்
வினியோகஞ் செய்தென்றும் விளங்குவர் முத்தர் விநாயகனே.

பூதங்க ளற்றுப் பொறிபுல னற்றுமெய்ப் பொய்யுமற்று
நாதங்க ளற்று நானீ யெனலற்றஞ் ஞானமற்று
பேதங்க ளற்றுப் புகழிக ழற்றுப் பேச்சுமற்று
வேதங்க ளற்று விளங்குவர் முத்தர் விநாயகனே. (313)

காட்டையும் வீட்டையு மொன்றாக யெண்ணிக் கடத்தி னவ
வோட்டை யடைத்து வொருவழித் திறந்து வுலகனைத்தி
னாட்டமுஞ் சேட்டையுங் கண்டுங் காணாது ஞானமிழ்தை
மேட்டிமை யாயுண்டு விளங்குவர் முத்தர் விநாயகனே. (314)

சடைமுடி வெண்ணீறு மக்கமா பரணந் தானெனப்பூண்
டுடன்படு சைவந் தழைக்கவே மகிமை யுஞற்றி யன்பர்த்
திடப்படு வண்ணஞ் சித்திகண் முடித்து செகமாய்கைகள்
விடப்படு நேர்மையில் விளங்குவர் முத்தர் விநாயகனே. ()

செய்கையுஞ் சிந்தையு மொன்றாக நிற்குந் திறமுடனே
பையதை யுண்கினும் பாலா யினிக்கும் பற்றொழியும்
வையக வாழ்வும் வஞ்சக ருறவு மறைந்தொடுங்கும்
வெய்யகூற் றணுகாது விளங்குவர் முத்தர் விநாயகனே. (316)

பொய்யதை நீங்கிப் புண்ணியஞ் செய்துப் புலாலுடம்பை
தெய்வா லயமா யமைத்து வானந்த சிவமெனுஞ்சீ
ருய்துல கோரெலாந் துதிசெயுஞ் சிறப்பு வோங்கிநல
மெய்யழி யாது விளங்குவர் முத்தர் விநாயகனே. (317)

சகமுடன் சீவ பரமென்னு மூன்றுத் தன்மையினைத்
தகத்த காயச்சுட ராய்த்தன்னுட் கண்டு சாதுக்களா
யிகபர சாதன மியாவுமொன் றெண்ணி யின்னலற்று
விகற்ப மில்லாது விளங்குவர் முத்தர் விநாயகனே. (318)

ஒன்றுமூன் றைந்தா றெட்டொன்ப தைம்பத் தொன்றெனவு
நன்றுதீ துண்மைப் பொய்ச்சுக துக்கமு ஞானஞ்ஞான
மின்றைக்கு நாளைக்கு வேண்டிய தென்றெனு மெண்ணமெலாம்
வென்றுத் தனியே விளங்குவர் முத்தர் விநாயகனே. (319)

தன்னைத்தா னுள்ள படியறிந் தோர்மூலைத் தனித்திருந்து
முன்ன மிச்சித்தப் பொருட்க ளவாவினை முற்றுமறந்
தன்னையாய்ப் பெண்க ளனைவரையு முன்னி யாசைவிட்டு
வின்னமொன் றின்றி விளங்குவர் முத்தர் விநாயகனே. (320)

சொன்ன குருமொழி தனக்கானி யானதுத் தோன்றிடாது
மன்னுமவ் வழிசிறி தேனு நீங்காது மனதொடுக்கி
யின்பமுந் துன்பமு மொன்றாகவே நினைந் தொருநிலையில்
மின்னுவர் சித்தி விளங்குவர் முத்தர் விநாயகனே. (321)

மரணந் திரைநரை வினையது வந்து வாய்த்ததன்பின்
கரணங் கலங்கிச் சிரவணஞ் செய்வதிற் கார்யமிலென்
றரன்பணி யோகமெய்ஞ் ஞானங்க ளெய்திய தனுபவித்து
விரதமுந் தவம்போல் விளங்குவர் முத்தர் விநாயகனே. (322)

தொல்லைக ளற்றுச் சுகமென்ப தற்றுத் துன்பமற்று
நல்லது மற்றுத் தீமையு மற்றுபல நாட்டமற்று
சொல்லற்று சொல்லாது மற்று பேச்சற்று சுயம்பெறுமெய்
வெல்லத்தில் மூழ்கி விளங்குவர் முத்தர் விநாயகனே. (323)

பாடும் பனுவற் பலவோதி யஃதின் பயன்றெரிந்து
வோடும் பொன்னதை யொன்றென வுணர்ந்து வுண்மைநிலை
நாடுவ ரென்றுரை நாரணன் கீதையி னயப்படியே
வீடுங்கா டொன்றாய் விளங்குவர் முத்தர் கள்விநாயகனே. (324)

அறிவின் றிரமா யதுவதுவா யமைந் தறிவினிடஞ்
செறிந்த வடிவே செகமாய்கை யென்றுத் தெளிந்தவைக்குங்
குறியுங் குணமுங் குலங்கோத்ரங் கூறிடுங் கோணலற்று
வெறிஞான மதுவுண்டு விளங்குவர் முத்தர் விநாயகனே. (325)

உண்டவர் கட்பசி வோய்ந்தவர்த் தன்னை யுட்புறம்புங்
கண்டன ரொன்றாய்க் கலந்தன ரெங்குங் காட்சியுண்மைக்
கொண்டன ரெவ்வுயி ருந்தா னெனவெண்ணிக் கோதகன்று
விண்டவைப் போல்முத்தி விளங்குவர் முத்தர் விநாயகனே. (326)

பார்த்த விடங்க ளெலாம் பராபரமே பலித்ததென
சீர்த்தித் தருகுஞ் சிவஞான போதகஞ் செப்பினநேர்
மூர்த்தமுஞ் சேத்திரந் தீர்த்தங்கைக் கொண்டருண் மூழ்கியுளம்
வேர்த்துல கோர்முனம் விளங்குவர் முத்தர் விநாயகனே. (327)

தேகமோ பிராணன் சீவனன்ன மயத்தாற் சித்திப்பதை
யாகம வத்துவின் படியோர்ந்து பலத்தொழி லதைப்புரிந்து
மோகத்தை சாக்காட்டை முற்றுங் கடந்து முத்திக்குளே
மேகமு மின்னல்போல் விளங்குவர் முத்தர் விநாயகனே. (328)

வருஞ் சனனத் தோற்றத்தின் வாயடைத்துநன் மதியடைந்துப்
பெரும்பய னாகியத் தவந்தானந் தன்னாற் பீடுபெற்று
கரும்பிற் கினிப்புத் தன்சுதந் தரம்போற் கன்மந்தரும்
விருப்பும் வெறுப்பற்று விளங்குவர் முத்தர் விநாயகனே. (329)

கடைந்திடும் பாலில் மோர்த்தயிர் வெண்ணெய்நெய்க் காணுதற்போ
லிடைந்தமுன் சனனந் தனிற்செய்த வினைப்படி யெழின்வடிவை
யடைந்தத னிறுதிச் சுகம்வாய்க்க சமாதிச்சீ ரனுபவித்து
விடையின்றி மௌனத்துள் விளங்குவர் முத்தர் விநாயகனே. ()

அண்ட மிடிந்துத் தலைமேன் விழுந்து வழித்திடினுங்
கொண்ட விரதமு நிலைப்பழு தாகாக் குணம்படைத்து
யெண்டிசைப் போற்றிடு மேகாந்தபோக மெய்திடவே
விண்டிடசருவமராய் விளங்குவர் முத்தர் விநாயகனே. (331)

இன்ப நிறைந்த யிடங்கயி லாயமென் றெண்ணிபலத்
துன்ப நிறைந்த யிடம்நர கென்றுத் தொல்லைகளின்
வன்குண மற்று வாழ்வுதாழ் வெனுமிரு மயக்கமற்று
மின்னல்போல் மறைந்து விளங்குவர் முத்தர் விநாயகனே. (332)

அலைவேறு சலம்வே றாகுமென் றெண்ணு வறிவதுபோற்
கலைவேறு காட்சிக் கடவுளும் வேறெனிற் கன்மமென்று
நிலைவேறு முத்தி சமாதிவே றெனும்பல நியமமற்று
விலைரூபம் பொருளொன்றாய் விளங்குவர் முத்தர் விநாயகனே.

தத்துவ மிதுசாத் திரமிது சமயாச் சாரமஷ்ட
சித்துக ளிதுபுலன் றெரிந்தது மிவைத்தெரியாதநிலை
வத்துவி துத்தம மத்திப மதமமாம் வார்த்தையற்று
வித்துவுட் பொருட்போல் விளங்குவா முத்தீர் விநாயகனே. (334)

பசுபாசத் தன்மை சரிவறத் தெளிந்து பக்குவமா
யசுவத்தின் பேரி லேறியே சாரிவுந் தனைத்தும் வென்று
நிசிபக லென்ப திரண்டுமொன் றாகு நிலையினுடன்
விசுவாசம் போலெங்கும் விளங்குவர் முத்தர் விநாயகனே. ()

உண்ண னிமித்தந் தொழிற்செய்ரு வார்ப்பசி வோய்ந்துவிட்டா
லெண்ணமொன் றாகி யியாவையு மறந்து யெழினிட்டையை
நண்ணு வார்தனது நாட்டங்கை வரும்வரை ஞானியர்கள்
விண்ணுமண் ணொன்றாய் விளங்குவர் முத்தர் விநாயகனே (336)

சங்கமோ டிருந்துந் தனியே யிருந்துஞ் சமுசாரத்தி
லங்கமோ டிருந்து மவண்வரு மிருவினை யாண்டுமீண்டுந்
தங்கம் புடமிடக் களிம்பகல் வண்ணஞ் சமாதிநிலை
வெங்கலி நீங்கி விளங்குவர் முத்தர் விநாயகனே. (337)

பந்தங்க டருமகந் தைக்குண சேட்டைகட் பற்றிடலான்
வந்தகருப்பா சயக்குழிக் காட்பட வாய்க்குமெனத்
தொந்தமுஞ் சொந்தமு மணுகி யணுகாதத் தொடர்பதனுள்
வெந்தழி யாது விளங்குவர் முத்தர் விநாயகனே (338)

கையேந்தித் தின்றுஞ் சீடர்க டரவுண்டுங் கனகமென
வையமெலாந் தொழ வருந்தவும் பொருந்தி மகிமைபலச்
செய்துஞ் செய்யாமலுந் திகழ்வர்கண் ஞானச் சிந்தையெழு
மெய்நிலை மெய்யென விளங்குவர் முத்தர் விநாயகனே. (339)

மலைக்கு ளிருந்துங் குகையுட் புகுந்தும் வனத்திருந்து
மிலைக்குளே காய்மறைந் திருப்பனப் போலயில் லறமுனுற்றி
தலைப்படுந் தொழிற்படி நடத்தியுங் கிடைத்ததைத் தான்போசித்து
விலையில் மாணிக்கமாய் விளங்குவர் முத்தர் விநாயகனே. (340)

உண்டவன் ருசியறி யாதுண்ட தைமறந்த வுவமைநிக
ரெண்ணிய தவையறி வினினிலைக்காது யேகுதலான்
தண்ணிய காட்டங்க ளொன்றேனு மெதிர்ப்படா நாசமுற
விண்மண்ணும் போற்றவிளங்குவர் முத்தர் விநாயகனே. (341)

தெரிந்ததுந் தெரியா த்துபோலும் வேடக் தேடிலரா
யுரிமைப் படுநெறி யுள்ளம்விட் டசையா தோர்நிலையிற்
சரிபட் டெயருஞ் சமாதிக்கை வரும்வரைத் தாரணியில்
விரிதரு மயலற்று விளங்குவர் முத்தர் விநாயகனே. (342)

துதிநிலை யற்றுத் துன்ப மின்பமெனுஞ் சுகாசுகங்க
ளெதிர்ப்படி னவைநவை யொழியும் வரையிருந் திரண்டுமேற்று
பதிநிதி யென்ப தெலானீங்கி யாதொரு பற்றுமின்றி
விதிமதி யவையற்று விளங்குவர் முத்தர் விநாயகனே. (343)

## சீவன்முத்தர்களின் லட்சணார்த்தம்.

சீவன்முத்தர்கள் மனோவிகாரங்களை யுண்டுபண்ணுகின்ற யாதொரு வாசனைகளில்லாமலும், கர்த்துத்வ போக்ருத்வங்களில்லாமலும், சந்தேக விபரீதங்களில்லாமலும், மரண பயமில்லாமலும், பிராரத்வ வசத்தினால் வரும் நானாவித கஷ்டங்களுக்கு (காற்று, பனி, மழை, வெய்யல், அக்கினி முதலியவைகளுக்குச் சிறிதுஞ் சலியாதிருக்கு மலையைப்போலிருந்து) மனோவருத்தமில்லாமலும், நிகழ்கால விவகாரத்தைவிட வேறெத்தொழிலிலும் பற்றில்லாமலும், சாதுக்களினுடைய சன்மார்க்க நடக்கைகளுடையவராகியும், ஓட்டையும் பொன்னையும், உறவையும் பகையையும் கேட்டையுஞ் செல்வத்தையும், கீர்த்தியையும் நிந்தையையும், வீட்டையுங் காட்டையும், வேறுவேறாகப்பாராத சம திருஷ்டியை யுடையவராகியும், சுத்தசத்துவ விருத்தியுடன் கலந்த மனதையுடையவராகியும், சுவாதீன சித்தமுடைய்வராகியும், சூரியகிரணங்கள் சூரியனுக்கு வேறாகாததுபோலவும், சுவர்ண பூஷணங்கள் சுவர்ணத்துக்கு வேறாகாதது போலவும், சின்மாத்திரப் பிரபஞ்சஞ் சித்துக்கு வேறாகாமல் பழுதையே பாம்பாகத்

தோற்றுமதுபோல, பிராஞ்ஞாத்மஸ்வரூபமே, பிரபஞ்சமாகத் தோற்றி அன்னியமாகக்காணப்படும் உலகமென்னும் மாயா ஜாலவித்தைக்கு சாட்சிமாத்திரமாக யிருப்பவராகியும், எக்காலத்தும் புஞ்சிறிப்புமுகத்தை யுடையவராகியும், அல்லும் பகலும் ஆத்துமனைவிட்டகலாதடைந்துவரும் ஆனந்தபரவசராகியும், பிராரப்தானுபவமாகப் பிராப்தியாகிய தூல, சூக்ம காரணாதி, சரீரங்களினுடையவும், பதினான்கு இந்திரியங்களினுடையவும் விவகாரத்துடன் சர்வம் பிரமமயமாகக்காணும், அபரோக்ஷ சாக்ஷாத்கார நிலையையடைந்து பால உன்மத்த, பைசாச, சமானராகி சஞ்சரித்து வருவார்கள்.

இவர்கள் மனோநாச பேதத்தினால் ஜீவன்முத்தர்களென்றும், விதேக முத்தர்களென்றும், இருவித பிரிவினையுடையவர்களாவார்கள்.

எப்படியெனில்; மனோநாசமானது உருவநாசமென்றும், அருவநாச மென்றும், இருகூறுடையதாகும். இவைகளில் உருவநாசம் ஜீவன்முத் தர்களிடத்தும், அருவநாசம் விதேக முத்தர்களிடத்தும்பொருந்தி விளங் கும். இவற்றுள் (உருவமென்பது ஜெகஜீவபரம்) அருவமென்பது இந்த ஜெகஜீவபரங்களினது வாசனை.

ஆகையினால் (உருவ நாசமென்பது) மனத்தினது நிஜகுணமாகிய சத்துவத்துடன் அன்னியமாகிய இராசத, தாமத, குணங்களிரண்டும் வந்துகலந்து இம்மூன்று குணங்களுமொன்றாகப் பின்னப்பட்டிருக்குமவ சரத்து அதனிடத்தில் கானல் ஜலத்தில் அலையாதிகள் தோற்றுமதுபோ லத்தோற்றிக்கொண்டிருக்கும் ஜெஜீவபரமாதி திரவியங்களை அம்மனத் தினது யதார்த்த குணமாகிய சத்துவத்தையடைந்து, அதைமுன்னிட்டுக் கொண்டு, மத்தியில்வந்தரவுகலந்த, இராசத, தாமத, குணங்களிரண்டையு நீக்கி, முன்னிருந்த மனமென்னும், பெயரைப்போக்கி நிட்களங்கமாக விருந்து, சின்மாத்திரமாகக் கரைத்துத் தன்மயமாக விளங்குவதாகும்.

(அருவநாசமாவது) இவ்விதமாகத் தன்மயமாய் விளங்கு நிலையும், லிங்கசரீரத்துடன்பங்கமாகி, பரிபூரணமாதலாகும். மேற்கூறிய இரண்டு விதமுத்தருள் உருவநாச ஜீவன்முத்தர்கள் பிரமவேத்தனென்றும், வர னென்றும், வரியனென்றும், வரிஷ்டனென்றும் நான்குவிதங்களாவார் கள். இவர்களில்,

பிரமஞானத்தினால் சிதாகாயஸ்வரூபமாய் நீரிலிருந்தும் நீரினொட்டு தலில்லாத தாமரையிலையைப்போலும், சேற்றினிடத்திலேயே கிவாசஞ் செய்துவரும் பிள்ளைப்பூச்சிக்கு அச்சேற்றிலிருக்கும்பொழுது சேறொட்

டிக்கொண்டிருப்பதுபோற்காணப்பட்டு, அதினின்றும் வெளிப்படுங்கால் அதற்கு சேர்சிறிதும் ஒட்டுதலில்லாததுபோலவும், பிரபஞ்சத்தின்கண்ணிருந்தும், பிரபஞ்சத்தினதுபற்றொன்றுமில்லாமல் குடத்தினுள்ளிருக்குந் தீபம் தன்னைத்தானே பிரகாசிக்கச் செய்வதுபோல, சுயசாட்சி மாத்திரமாய் விளங்கிக்கொண்டிருக்கும்.

பிரமவேதத்தன் சர்வமுந் தன்மயமாய் விளங்குதலினால் நன்மை தீமை யாதிதுவந்துவங்களுக்கு மத்தியிலிருந்து விதிநிஷேதங்களை அனுசரித்து நானாவிவகார கிருத்தியங்களை நடத்திவந்து அவ்விவகார கிருத்தியங்களால் வருஞ்சுகதுக்காதிகளை சின்மாத்திரமாகக் கரைத்துக்கொண்டும், எப்பொழுதேனும், எந்தகாரணத்தினாலேனும், காமக் குரோதாதி மனோவிகாரங்கள் வருமாயின், வச்சிரகவசந் தரித்திருப்பவன் தன்மீது வந்துதாக்குறும் அம்புகளுக்கஞ்சாதிருப்பதுபோல, ஞானகவசந் தரித்திருக்குமிவனுஞ் சலனமற்றிருந்து அவைகளை அப்போதே நாசப்படுத்திக்கொண்டும், சர்வவித்தைகளுக்கும், ஆதாரமாகவிருக்கும், பிர்ம வித்தையில் பூரணபண்டிதனாகவிருந்தும், ஒன்றுந்தெரியாத மூடனைப்போலவும், பேசவே வராத ஊமையைப்போலவும், காணப்பட்டுக்கொண்டும், எப்போதுமிருதயத்தில் ஞாநாநந்த சுகத்தையனுபவித்துக்கொண்டும், பேதகருமத்தினால்வரும் பிராரப்தானுபவப்படி தபஞ்செய்துக்கொண்டும், (மாகர்த்தன், மாபோகி, மாத்தியாகி) என மூன்றுவித வைராக்கிய விரதங்களை அனுசரித்துக் கொண்டும், இராஜனாக பூமியை யாண்டுக்கொண்டும், பிட்சைபண்ணி சீவித்துக்கொண்டுமிருப்பார்கள்.

மேற்சொல்லிய மூன்றுவித விரதலட்சணங்களுள்;

(மாகர்த்தலட்சணம்) செய்கையும், செய்விக்கையுமில்லாதிருக்குங் காந்தக்கல்லின்முன் ஊசிகள் அசைந் தாடுவதைப்போலச் செய்கையும், செய்விக்கையுமற்ற என்முன் ஜடசூனியமாகிய இந்தப்பிரபஞ்சமியாவும், அசைந்தாடுகின்றமையினால் தேகாகாரமாகவிருக்கும், ஞானேந்திரிய கருமேந்திரியங்களின் காரணமாகநடந்தேறிவரும், நானாவிகல்பரூப விவகார கிருத்தியங்களுக்கும், இந்தசகலகிருத்திய விருத்திகளெல்லாந் தானாகவே விளங்கிக்கொண்டிருக்கும்.

ஆத்மசம்பந்தமாக நிகழுஞ் சொரூபசமாதிக்கும் (சகல பிராணிகளுந் தங்கள் தங்களுடைய நித்தியகருமங்களைச் செய்துகொள்வதற்காக பூதாகாயத்தில் பேதமின்றி சர்வசாட்சிமாத்திரமாய் பிரகாசித்துவருஞ் சூரியனுக்கொப்பாக) சிதாகாயத்தில் அபேதமாக சர்வசாக்ஷிமாத்திரனாய்ப் பிரகாசித்திருப்பவனொருவனேயென்று மாறுபடாத தீரவைராக்கியத்தில் நிலைத்திருப்பதாம்.

### மாபோகலட்சணம்.

அறுவித ருசிபதார்த்தங்களை உருசியெனவும், அருசியெனவும், சுத்தமெனவும், அசுத்தமெனவும், பத்தியமெனவும், அபத்தியமெனவும், போசன காரணமாக பாகித்தறியாமல் (தன்னெதிரிற் படுமவைகளத்தனையும், ஏகாகாரமாகவே தகிக்குங் காட்டுத் தீயைப்போல) நிகழ்காலத்தில் நேர்ப்பட்ட கூழ், காடி, முதலிய உண்டிகளைப் புசித்துவந்து பிராரப்தவசமாக வருஞ் சுகதுக்காதிகளையும் ஏகாகாரமாகவே அனுபவிக்கும்படியான தீர வைராக்கியத்தில் நிலைத்து நிற்பதாம்.

### மாத்தியாகலசட்ணம்.

பிராரப்த போகங்கள் சுலபமாகவாயினும், மகத்தாகவாயினும், தன்யாலதாகவாயினும், அன்னியமாகவாயினும், சுபமாகவாயினும், அசுபமாகவாயினும், சம்பவிக்கும்போது (தன்னிடத்திற் சுபாவமாகக் காணும் பிரதிபிம்பந் தானல்லாமலிருக்கும் ஸ்படிகக் கண்ணாடியைப்போல) அவைகள் சருவத்திலும் பற்றற்றிருக்கும்படியான தீரவைராக்கியநிலையில் நிற்பதாம்

இவ்விதங்களால் விளங்கும் பிரமவேத்தனீங்கலாக மற்ற மூன்றுவித சீவன் முத்தருள் (வரனும் வரீயனும்,) எக்காலத்திலுஞ் சொரூபசமாதியிலேயேயிருப்பார்கள். இவர்களில் (வரன்) மாத்திரந் தனது பசி நிமித்தியமாக சமாதியிலிருந்து வெளிமுகப்பட்டு பிறரிடந் தானேபோய்க் கேட்டு ஒருவேளையேனும் புசித்து மறுபடியும் முன்போலவே சமாதியிலிருப்பான். இவ்விதமாக இவன்மாத்திரந் தேசசஞ்சாரஞ்சிறிது செய்துவருவான்.

(வரீயன்) தேகசஞ்சாரமில்லாமலே சமாதிசெய்துவந்து தனது பசிபாதையை மறந்து மறவாமலிருக்குமிதை, அவன்மீதன்புடனவனருகிலிருக்குஞ் சீடர் முதலியோரால் தெரிந்துக்கொள்ளப்பட்டு, அவர்களுடைய பிரியவேண்டுகோளுக்கிணங்கி பசியைப்போக்கி மறுபடியுமெப்போதும்போலவே நிஷ்டைசெய்துக்கொண்டிருப்பான்.

(வரீஷ்டன்) பசிபாதையினுடைய நினைவில்லாமலே, தன்னாலாகிலும், பிறராலாகிலும், செய்யும் ஆகாரத்தைமறந்து சுத்ததன்மையானந்த நித்திரைசெய்திருப்பான். இதனால் தனது பசிபாதை தன்னாற்றானே யுணரப்பட்டு, பிரமநிஷ்டை செய்துவருமவன் (வரனென்றும், தனது பசிபாதை அன்னியராலுணரப்பட்டு பிரம நிஷ்டை செய்துவருமவன் (வரீயனென்றும்) இரவில் நித்திரையில் பலவந்தமாக அன்னமூட்டிய தாயை, நித்திரையினின்றும் விழித்தபிறகுகண்டு அம்மா! இராத்திரி

எனக்கேன் அன்னமிடவில்லையென்று வினவுஞ் சிறு குழந்தையைப் போல தான் புசித்ததுணர்வில்லாமல் தூங்காமற்றூங்குமவன் (வரிஷ்டனென்றும்,) தெரியவருகின்றதாயினும், இவர்களில், (வரன்) பசிநிமித்தியந் தனக்குத்தானே ஒருவரிடம்போ பிரந்துண்பவனாயினும், இவனது உணவு, தேகத்தை வளர்த்தற்கல்லாமல் பசிபாதையை நிவர்த்திக்கும் பொருட்டு மாத்திரமேயாகும். இதெப்படியென்றால், இவன் அந்த பசிபாதையை நிவர்த்திசெய்யாமற்போனால் இவனுடைய நிஷ்டைக்கு பங்கமுண்டாகும்.

இதாகவே முன்போல விஷயசுக துக்கங்களால் மொத்துண்டு கருமச்சேற்றிலே விழுந்து புரளவேண்டி வருமாகையினால் (வரனுடைய) ஊண் ஊன்விருத்தியின்பொருட்டல்லவாகும். இவ்விதமாக முத்தர்கள் பிராரப்தவசத்தினால் நானாவிதங்களாகக் காணப்படுவராயினும், இவர்களெல்லவர்க்கும் மோக்ஷப்பிராப்தி ஏகமாகவேயிருக்கும்.

இப்படிக்கிருந்தபோதிலும் பிரமவேதத்தன்) மாத்திரம் பிராரப்தத்தினாற் சம்பவிக்குஞ் சுகதுக்கங்களை அநுபவித்துக்கொண்டிருப்பான். மற்றமூவரும் நிரதிசயானந்த சுகானுபவிகளாயிருப்பார்கள்

இவர்களெல்லவர்க்கும் மோக்ஷசித்தி ஏகமேயென்பதெப்படியெனில் இவர்களெல்லவர்க்குஞ் சிதாகாயத்தைவிட வேறிடமின்மையால் மோக்ஷப் பிராப்தி ஏகமேயென்பது உண்மையாகும். ஆயினும், இவர்களில் (பிரமவேதந்தன்) மாத்திரம் பலவித விவகாரங்களில் சம்மந்திக்கின்றமையினால் அததற்கு தகுந்த லாபநஷ்டங்கள் தமக்குத்தாமேவந்துக்கொண்டிருக்கும். இவைகளின் பலனான சுகதுக்கங்கள் பிராப்தமாகிக்கொண்டிருக்கும்.

இந்த சுகதுக்காதிகளை அநுபவிக்கவேண்டியவன் தானேயல்லாமல், மற்றொருவரல்லவாகையினால் அவைகளை சமதிருஷ்டியினாலனுபவித்து வருவான். இவனிப்படி அநுபவித்துவந்தாலும், அவைகளொன்றிலும் பற்றுதலில்லாமல், சிதம்பரமாகிய தான் தன்னை எப்போதுமெட்டிப் பார்த்திருந்து சருவத்தையுஞ் சின்மயமாய்க் கரைத்து சிற்பரவெளியாகவே நிறைந்து விளங்கிக்கொண்டிருப்பான்.

ஸ்ரீமத் – திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

“அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கிஞானப்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும்புராணர்கோயி
றகவுடைநீர் மணித்தளத்துச் சங்குளவர்க்கந் திகழச் சலசத்தியுண்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணஞ்செய்யு மிழலையாமே”

### ஸ்ரீமத் - திருநாவுக்கரசு சுவாமிகள்.

"ஞானத் தாற்றொழு வார்சிவ ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்க டொழக்கண்டு
ஞானத் தாலுனை நானுந் தொழுவனே"

"முன்னை ஞான முதற்றனி வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை
என்னை ஞானத் திருளறுத் தாண்டவன்
தன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே"

### ஸ்ரீமத் - மாணிக்கவாசக சுவாமிகள்.

"பந்தவிகார குணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே
பாவனையாய கருத்தினில் வந்த பராவமு தாகாதே
யந்தமிலாத வகண்டமு நம்மு ளகப்படு மாகாதே
யாதிமுதற்பர மாயபரஞ்சுட ரண்ணுவ தாகாதே"

"வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் னுள்ளமும்போய்
நான்கெட்டவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

### திருமந்திரம்.

ஞானத்தின் மிக்க தவநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவால்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே"

"நண்ணிய ஞானத்தின் ஞானதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயங் கலர்ஞானங் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே"

### பிரபுலிங்கலீலை.

"நலமுறு மோர்சிவ ஞானி யில்லில்வாழ்
நிலையற மாகினு நீத்து நிற்குமோர்
தலையற மாகினுந் தரித்து ஞாலமே
விலைமறை காயென விருக்கு மென்பவே"

" வல்லனென் றிருப்பினு மிருக்கும் வண்மையோன்
றில்லனென் றிருப்பினு மிருக்கு மெள்ளுறப்
பல்லனென் றிருப்பினு மிருக்கும் புண்ணிய
நல்லனென் றிருப்பினு மிருக்கு ஞானியே "

### நிஷ்டாநுபூதி.

" இந்நிலையா மியபரம கேவலத்தி னாரு, மெழினிதித்தி யானத்தி ராமலிருந் திடுவோன், அந்நிலையே யுடலினொடு சீவன்முத்தி யடைகுவ னெவ்விதமென்னி லறைகுதுநீ கேளாய், துந்திய தோயத்தினொடு தோய முறல் போலுஞ் சுவைதரு நேத்தினொடு நீரமும்போற் கலந்தே, யந்நிலை யுந் தோன்றாம லிருந்திட வில்வுலகி லிறப்பினொடு பிறப்புமறுந் தினையி லின்பத் துறுவான்.

### ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகள்.

" கூடுத லுடன்பிரித லற்றுநிர்த் தொந்தமாய்க் குவிதலுடன் விரித லற்றுக் குணமற்று வரவினொடு போக்கற்று நிலையான குறியற்று மலமு மற்று, நாடுதலு மற்றுமேல் கீழ்நடுப் பக்கமென நண்ணுதலு மற்றுவிந்து நாதமற்றைவகைப் பூதபேதமுமற்று ஞாதுருவின் ஞானமற்று, வாடுதலு மற்றுமே லொன்றிரண் டற்று வாக்கற்று மனமுமற்று மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே வாய்மடுத்துண்ட வசமாய்த், தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே சித்தாந்த முத்திமுதலே சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே சின்மயானந்த குருவே.

"தானான தன்மயமே யல்லாலொன்றைத் தலையெடுக்கவொட்டாது தலைப்பட்டாங்கே, போனாலுங் கர்ப்பூர தீபம்போலப் போயொளிப்பதல்லாது புலம்வேறின்று, ஞானாகாரத்தினொடு ஞேயமற்ற ஞாதுருவு நழுவாம னழுவிநிற்கும், ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா ரதுவானா லதுவாவா ரதுவே சொல்லும்.

அதுவென்று லெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை யாதலினா லது வெனவு மறவேவிட்டு மதுவுண்ட வண்டெனவுஞ் சனகனாதி மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தாரென்றும், பதியிந்த நிலையெனவு மென்னை யாண்ட படிக்குநேரு விகற்பத்தாற் பரமானந்த, கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூ ரிந்தக் கதியன்றி யுறங்கேன்மேற் கருமம்பாரேன்.

### சச்சிதானந்தவிளக்கம்.

" பாழுமிது பொருளுமிது வழியுமிது தெளிவுமிது பதினாலு லோக மிதுவே பாசவினை யாலெனது மோசமே மோசமிது பாழுறவுபாழானதே

உரமுயரு மாலோசை யிரவுபக லரேறியே யுட்சராசரமுமதிலே யொளிவெளிய லொளியாகி யுபநிடத நடனமா யூழிவிதி யாழியெனவே, சிரமகுட முடியிலே கனகமணி யிசையிலே சிவஞான தீபமதுபார், திருமருவு சிவசேதி மதிபெருகு கதிவீடு தெரிசனைகளாகி முடியும், சரமுமது பதிசேவை சகலகலை யனுராக சாயுச்சிய பாதமருள்வாய் தற்பரானந்தசபை நிஷ்கானந்தசிவ சச்சிதானந்த குருவே"

## உபநிடதம்.

"தேகமே தானெனல் சீவத்தெய்த மதுபோய்த் தெளிவுவரி லாகாயத்திவ வடிவேதானய்ப், போகமாந் தனுகரணம் வாயுவைப்போலியங்கப் பொருந்துமவனே யீசனப்பொலிவு தன்னிரி, லேகமா யண்டமெலாங் கடுகளவாத் தோன்று மவையகண்டா காரமது வேயீசத்தெய்த, மாகமாமகண்டாகா ரமுநீங்கிக் கடுகா வண்டமுந் தோன்றாதவிடத் தத்துவித நிலையே.

## கைவல்லியநவநீதம்.

" ஞானமார் சீவன்முத்தர் நால்வகை யாவர்களாய்
வானிகர் பிர்மவித்து வரன்வரி யான்வரட்ட
னுனவர் நாமமீதா மவர்களின் பிரமவித்தின்
ஞனமு மற்றைமூவர் தாரதம்மியமுஞ் சொல்வேன் "

" தீராய்ப் பிரமவித்தாய்த் தெளிந்தவர் தெளியுமுன்னர்
வாரமா யிருந்ததங்கள் வருணமாச் சிரமஞ்சொன்ன
பாரகா ரியமானுலும் பலர்க்குப காரமாக
நேரதாச் செய்வார்தீர்ந்த நிலைவிடாச் சீவன்முத்தர் "

" காமமாதிகள் வந்தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்றார்
தாமரையிலைத் தண்ணீர்போற் சகத்தொடுங் கூடிவாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டா
ரூமரு மாவாருள்ளத் திவகையாஞ் சீவன் முத்தர் "

" பேதகன் மத்தால்வந்த பிராரத்வ நாகாவாகு
மாதலால் விவகாரங்க ளவரவர்க் கானவாகு
மாதவஞ் செயினுஞ் செய்வர் வாணிபஞ் செயினுஞ் செய்வர்
பூதலம் புரப்பரையம் புகுந்துண்பர் சீவன்முத்தர் "

" சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
னின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுதுவீழ்ந்தும்
பொன்றின சவம்வாழ்ந் தாலும் புதுமையா வொன்றும்பாரார்
நன்றுதீ தென்றுர்சாட்சி நடுவான சீவன்முத்தர் "

" விவகார வேளையெல்லாஞ் சமாதியென்றால் விகற்பமன்றோ மனமலைந்து விடாதோ விட்டரல், அவதான நழுவுமன்றோ வென்றாயாகி லதற்கொரு திட்டாந்தங்கே ளாசைகொண்டு, நவமாகப் பரபுருடன் றன்னைக்கூடி நயந்திதுசுக மனுபவித்த நாரிநெஞ்சத், தவமான மனைத்தொழில்கள் செய்யும்போதுந் தழுவியனுபவித்தசுகந் தனைவிடாதே "

## ஆத்மபோதம்.

"சிரவண மனன நிதித்தியா சனமுஞ் சிறந்திடப் புரிந்து நன்றாகத்
திரமுறக் கனன்ற ஞானவா ரழலாற் சிதாபாசன் சுவர்னம்போ லுருகிப்
புரையுறு மலமாங் கருமசமகன்று புனிதமா முத்தனாய்த் தானே
வரசமாதியிற் சாட்சாத்கார மருவி வயங்குறும் பூரணமாக"

" நித்ய சுகந்தந் தமலமதாய் நிறைந்தெப்போது நிரஞ்சனமாஞ்
சுத்தவாத்ம தீர்த்தந்தைத்தோய்ந்தோன் கிரியை யெலாம்விடுத்து
வைத்ததிசை தேசகால மருவு மபேக்ஷை வேண்டாமே
முத்தனாய் சர்வஞ்ஞியனா முழுதும் வியாபித் திலங்குவனே

## வாக்கியசுதையென்னுந் திர்க்குதிரிசியவிவேகம்.

" நாமரூபங்க ளிரண்டெனு நவையற விடுத்தே
ஓமெனும்பர சச்சிதா னந்தமே யுணர்வாய்
ஏமமாரித யாம்புயந் தனிற்புறத் தெனினும்
தாமருஞ் சமாதியைச்சதா புரிதாத் தகுமே"

" துகளர் சுவானு பூதிரசத் ததியா னந்த பூரணத்தால்
சகமாந் திர்சியஞ் சத்தமொடுஞ் சாராதமைந்த யோகிக்கே
சுகமாய்த் தோன்றி நிவாதத்தலச் சுடர்போற்றிதமாய் நிற்கின்ற
இகமார் சமாதி நிருவிகற்ப மென்னுந் துரிய நிலையமதே"

## திருக்கூவப்புராணம்.

" இச்சிறைப் பவங்க ணீங்கி யிணையிலா முத்தி யெய்தின்
மெய்ச்சிவ ஞானத் தன்றி வேறுள கருமத் தாகா
தச்சிவ ஞானம் பெற்றோ ரயனது கற்ப வீற்றிற்
சச்சிதா னந்த முத்தி சார்குவ ரென்ப மாதோ"

## ஒழிவிலொடுக்கம்.

நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்—தோயார்
பெருமை சிறுமையில்லை பின்னுமுன்னு மில்லை
வலிரவற்று வேண்டியசெய் வார்.

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங்
காட்டுவது ஞானக் களவுதான்—தேட்டமர்ந்தோன்
பூரணன்காண் சிற்றறிவன் பொய்பாச மென்றறிந்தார்க்
கோர்வடிவும் வார்த்தையு முண்டோ.

## சிவஞானதீபம்.

"எண்டருமெய்ஞ் ஞானிகடா நன்மை தீமை யியற்றினுமப் பலனுகரா ரிவர்தம்மேனி, கண்டுதொழு வாரிகழ்வார் தம்பா லெய்துங் கருமுகிலின் செயல்போலக் கருதாரொன்றும், பண்டிகலும் வினையுடலிற் பலிப்பினுலே பகர்காலந் திசைகளருந் தவங்கள்சீலம், கொண்டதியா னஞ்செபங்கள் பூசையாவுங் குறித்திடினுமொழித்திடினுமவர்க்கமலன்பணியே

## ஞானவாசிட்டம்.

"உன்னுருவை நீகாணு ஞானக்கண்ணி லொன்றலா வாசையெனுங் காசமூறும், அன்னதுதீர்த் துளக்கமலத் துள்ளே தொய்ய வறிவுடைய வுன்மனத்தா லுன்னுலுன்னை, இன்னபடி யெனநோக்கி மயக்கமெல்லா மிறையுமற வொழித்தின்ப மெய்தி நிற்பாய், பின்னவனே யென்முன் னே னுரைத்தானென்று பெருந்தகைக்கு வசிட்டமுனி பேசினனே"

## சந்நிதிமுறை.

"அலையிலாத சாகரம்போ லனிலஞ்சேரா விளக்கதுபோ
லருங்க லிரும்பொன் சமமாகி யயான தாசி னுனியதுபோல்
நிலையொன் றியாந் சமாதியுற்று நின்றூட் கமலத் தெழும்பிரச
திறைவா ரிதியிற் புகுந்ததனி னேசித்தடியே னிருப்பேனோ
விலையின் மகுடத் திருமுடியாய் மிளிர்குண் டலங்கள் செறிகாதா
வியன்கேயூரத் திருத்தோளா விஞ்சுஞ் சதங்கை சூழ்தாளா
புலையுங் கொலையுங் களவுமில்லாப்புனிததவத்தோர் தொழுதேத்தும்
புராரி குமரா வுமை சிறுவா போரூர் முருகப் பெருமாளே"

## அத்துவிதானுபவம்.

"சகலமறிந் தாசையில்லா மெய்ஞ்ஞானி யெத்தொழில்க டான்செய்தாலும், மிகசாம்பி ராச்சியமுதல் பரமபதத் துள்ளசுகமெல்லாஞ்சேர்வான் அகல்கரும மொன்றுண்டோ பிறவியுண்டோ விரண்டுண்டோ வவித்தையுண்டோ, சுகமயமோ மெய்யறிவோ சற்குருவோ வவன்மகிமை சொல்லொணுதே"

## பட்டணத்துப்பிள்ளையார்.

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

—§—

## சுத்தபிர்ம நிலையையடையும் பக்குவவழிபாட்டைக் கூறுதல்.

—•—

பரமசிவனுருடைய பராசத்தி யருளினாலே குடிலையில் நாதமும், நாதத்தில் விந்துவும், விந்துவில் சாதாக்கியமும், சாதாக்கியத்தில் மஹேசவரமும், மஹேசுவரத்தில் சுத்தவித்தையுந்தோன்றும். இவ்வைந்தினுள் விந்திவிலே நாலுவாக்கும், ஐம்பத்தோரக்ஷரமும், எண்பத்தொருபதமும் இருநூற்றிருபத்திநான்கு புவனமும், சப்த்கோடி மஹாமந்திரமும், சகலசாஸ்திரமும், விஞ்ஞானகலர், பிரளயகாலரும் சுத்தனுகரண புவனபோகங்களும், சரியை, கிரியை, யோகங்களில் நின்றோர்க்குச் சாலோக, சாமீப, சாரூபமென்னும் பதமுத்திகளும், பஞ்சகலைகளுந் தோன்றும். இவை சுத்தமாயையின் தோற்றமாம்.

அனந்ததேவனருளாலே அசுத்தமாயையிலே நின்றுங் காலமும், நியதியும், கலையுந் தோன்றும். கலையில் வித்தையும், வித்தையில் இராகமுந் தோன்றும். உருத்திரதேவனருளினாலே முன்சொன்ன கலையிலேமூலப்பிரகிருதி தோன்றும். முக்குணங்களுந் தோன்றாது நின்றவிடம் அவ்வியக்தம்.

இந்த அவ்வியக்தத்திலே சித்தமும் புத்தியுந் தோன்றும். புத்தியிலே அகங்காரந்தோன்றும். அது, யான் எனதென்று விகற்பித்துவரும், அது தான் தைசசாங்காரமென்றும், வைகாரிகாங்காரமென்றும், பௌதாதிகாங்காரமென்றும், மூன்றுவிதமாயிருக்கும்.

தைசசாங்காரத்திலே சத்துவகுணத்தினுடைய மனமும், புத்தியும், சுரோத்திராதிகளைந்துந் தோன்றும். வைகாரிகாங்காரத்திலே, இராஜோகுணத்தின் வாக்காதிகளைந்துந்தோன்றும். பௌதாதிகாங்காரத்திலே தமோ குணத்தினுடைய தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளைந்துந்தோன்றும். சத்தத்திலே ஆகாயமும், பரிசத்திலே வாயுவும், ரூபத்திலே தேயுவும், இரசத்திலே அப்புவும், கந்தத்திலே பிருதிவியுந் தோன்றும்.

ஒடுங்குங்காலத்துத் தோன்றின வடைவே ஒடுங்கும். உள்நிலைக்கருவிகள் முப்பத்தாறு, புறநிலைக்கருவிகள் அறுபது, ஆகத் தத்துவம் தொண்ணூற்றாறுமாகிய தேகத்துடனேகூடிநின்று ஆத்மா புசிக்கும். அவசரத்திலுணர்த்துமுறைமை எங்ஙனமெனில், கீழாலவஸ்தைக்கு நிற்குங் கருவிகள் தத்துவ முப்பத்தைந்தும், மேலாலவஸ்தைக்குத் தத்துவம் முப்பத்தாறுமாம்.

இனிச்சுத்தாவஸ்தையென்பது பூதங்களைத்தரிசிக்கில் தூலதேகமிலதென்பதும், இந்திரியங்களைத்தரிசிக்கில் பூதங்களிலதென்பதும், அந்தக்கரணங்களைத் தரிசிக்கில் இந்திரியங்களிலவென்பதும், கலாதிகளைத் தரிசிக்கில் அந்தக்கரணங்களிலவென்பதும், சுத்ததத்துவங்களைத் தரிசிக்கில் கலாதிகளிலவென்பதும், அருளைத் தரிசிக்கில் சுத்ததத்துவங்களிலவென்பதுமாம்.

இதற்குப் பசுகரணங்கள் சிவகணங்களாயிருத்தலே நின்மல சாக்கிரமெனவும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றுப்பொருந்துவனவெல்லாம் மனதிற்கோசரியாமலிருத்தலே நின்மல சொப்பனமெனவும், இந்தப்பேறுபெற்றோமென்னும் நிராசையால் பரிணாமத்தையடைதலே நின்மல சுழுத்தியெனவும், தனக்குஇன்பம்பிறந்து சம்பூரண திசையடைதலே நின்மல துரியமெனவும், நீரிலே முழுகிவிட்டவனைப்போலிருத்தலே நின்மல துரியாதீதமெனவும், தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூபம், ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், என்னுந் தசகாரியங்களெனவுங் கூறுகின்ற சைவாகம சித்தாந்தமுறைப்படியே, சிவஞானதேசிகரால் அந்தர்முகத்திற்பெறுகின்ற ஞானநிஷ்டையின் வழித்தாய்நின்று ஆணவாதி மலங்களில்நின்று நீங்கி ஆன்மா அருளோடுகலந்து சுத்தபிரமநிலையை யடைதல்வேண்டும்.

இதற்கமைந்துள்ள பிராயசித்தமுள்ளவற்றை உள்ளபடி குருமுகத்தினிச்சயித்துக்கொள்ளவும்.

## ஞானநிட்டையினிலைமையைக் கூறுதல்.

பரிபாகிகள் சற்குருவையடைந்து, பிரமநிஷ்டையைக் கைக்கொள்வாராயின் அந்தநிஷ்டையை இடைவிடாமல் சாதனஞ்செய்துவந்தால், அங்ஙனம் அருட்போதமாகிய ஞானாக்கினி சதோதயமாய் மென்மேலும் விளங்காநிற்கும். அதனாற் பொறிபுலனற்று மனோலயமுற்று, ஜடத்துவம், ஜீவத்துவம், ஈசத்துவம், சாக்ஷித்துவம், ஆகிய இந்நான்குங் கழன்று, அதீதமுத்தியடைவார்கள்.

### சிவானந்தமாலை.

" பூதஞ்சுழலும் பொறிபுலனந்தக் கரணம்
போதங்கழித்து நாட் போக்காதே—போதச்
சிறையா நிறைவகலச் சின்மய நேயத்தே
நிறையா நிறைவாகி நில்.

### ஞானவாசிட்டம்.

மனமணி பேதச்சேற்றின் மறைந்தொரு வருக்குந்தோன்று
தனமுற விவேகநீராற் கழுவினுற் சித்திகாட்டும்
வினவுறு விவேகவன்பான் மெய்ம்மையை மதியாற்கண்டு
இனமுறு பொறியைவென்று தீர்வரும் பிறவிதீர்வாய்.

### மௌனதரிசனம்.

"அருமையென்ற மௌனத்தை மூட்டுமூட்டு வடங்காத கரணமைந்து மடங்கிப்போகும், இருமையென்ற விந்திரிய மாண்டுப்போகு மிருண்மலம் போந் திரோதையில்லை மயக்கநீங்கும், வெருவுபல கோடிசன்மங் கணத்தி னீங்கும் வெளியினுள்ளே யொளிதோன்றும் நாதங்கேட்கும், உரிமையுடன் மௌனசித்தி யாகவாக வுருவுமுனக் கானந்த வுருவமாமே"

### நிஷ்டானுபூதி.

" உலையாப்பொறியும் புலனடக்கி யொன்று மனத்தி லுன்னாதே
தலையாகிய பேரானந்தத் தலைப்பட்டதனில் தான்மூழ்கி
அலையாயோக மம்புவிடு நோமரைமாத் திரையேனும்
நிலையா நிற்போர் வீடடைவர் நிலத்திற் பிறவா ரிறவாரே"

### சாந்தலிங்க சுவாமிகள்.

" பொல்லாத னெஞ்சமோ ரைந்து புலன்கடம்பா
லல்லாதரை மாத்திரையு னின்னடிக்க ணன்பாய்
நில்லாதி தற்கென் செய்கேனிதை நின்றிடென்றே
சொல்வாய் திருத்தில்லை யுண்மேவிய சோதிநீயே"

### ஒழிவிலொடுக்கம்.

சுட்டுப்போதங்கழன்ற சுத்தமரை மாத்திரையின்
மட்டேத்தானற்ற நிட்டை வாய்க்குமாற்—கெட்டேன்
தலைச்செய்யு மானந்தஞ் சற்றே பால்வாரி
முலைக்கண்ணிற் றேன்று முறை.

## பன்னிரண்டாவது

# முத்திவைராக்கிய சத்தியகதி நிலை.

வானிற் பறந்தென்ன மண்ணுட் புகுந்தென்ன வாயுவதைத்
தானே புசித்தென்ன சருவமும் விட்டென்னத் தழைத்துமென்ன
ஆனேறி மன்ன வுலைமெழு காயுயி ரோடுமுன்னே
மீனேறு வண்ண நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (344)

மூல மறிந்தென்ன முன்வினை யோர்ந்தென்ன மூடமன்ஞ்
சால்மூக் தந்திர மந்திரங் கற்றுமென் சனனமெனு
மாலமே யுண்டுவீ ணேபிறவாச்சிவ னருண்வாய்த்திட
வேலையைச் செய்து நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (345)

எத்தனைக்கோடி யுபதேசம் பெற்றாலு மென்ன பயன்
சத்துரு மித்துருத் தன்னை யல்லாண்வேறு சாட்சியமுண்டோ
பத்தரும் பாபியுங் கற்பூர முப்பெனப் பார்த்துணரும்
வித்தக ஞான நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (346)

கலைபலக் கற்றென்னக் கனதனம் பெற்றென்னக் காரணமது
நிலைகின் றொருபடித் தாகிவணங்கு நெறியறியா
தலையிற் றிரும்பா யலைகின்ற சேட்டை யதுவடங்கி
விலையிலா ஞான நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (347)

நாட்டமென் செய்யு நாடக மென்செய்யு நமனுடையத்
தேட்டமென் செய்யுந் திகைப்புமென் செய்யுந் தெளிந்தவர்முன்
கோட்டமென் செய்யுங் குறும்புயென் செய்யுங் குற்றமற்று
வீட்டை யடையு நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (348)

தேகமென் செய்யுஞ் சிந்தையென் செய்யுந் தெரிவையர்கண்
மோகமென் செய்யு மூர்க்கமு மிடுக்கு மோனமிலார்ப்
போகமென் செய்யும் பொய்மெ யென்செய்யும் புந்தியலையவி
வேகமென் செய்யு நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (349)

போற்றிடி லென்னப் புகழ்வதி லென்னப் பொய்கதைகட்
சாற்றிடி லென்னச் சந்தோஷந் துக்கந் தனையறிவான்
மாற்றிடலாகா சன்னக் கூற்றின் வஞ்சமற்று
வேற்றுமை யற்று நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (350)

அழுதாவ தென்னத் தொழுதாவ தென்ன வன்பவிழப்
பழுதென்ப தின்றி புள்ளங் களித்துப் பரவசமா
யெழுபிறவித் தோற்ற மியாவுங் கடந்து யின்பமன்னும்
விழிமித ஞான நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (351)

படித்தாலு மென்னப் படியாததா லென்னப் பலவிஷத்தைக்
குடித்தாலு மென்ன விடுத்தாலுமென்னக் குணச்செயலை
முடித்தாலு மென்ன முடியாததா லென்ன மூடமனம்
வெடித்தாலு மென்ன நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (352)

வாழ்ந்தாலு மென்ன வாழாததி லென்ன வலியவினைச்
சூழ்ந்தாலு மென்னத் தொல்லையினு லென்னச் சொல்லிலென்னத்
தாழ்ந்தாலு மென்னத் தனியாகி லென்னச் சங்கடத்தில்
வீழ்ந்தாலு மென்ன நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (353)

பாட்டென்னச் செய்யும் பழிகளென் செய்யும் பாழுடலி
னூட்டமென் செய்யு நஞ்சுயென் செய்யு நாணமிலார்க்
கூட்டமென் செய்யுங் கொடுமையெல் செய்யுங் குண்டலியாம்
வீட்டினுள் வாழு நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (354)

கண்ணற்று லென்னக் காதற்று லென்னக் கருத்தழியா
யெண்ணற்று லென்ன யெழுத்தற்று லென்ன யிலக்கணமும்
மண்ணற்று லென்ன வாழ்க்கையற்று லென மலமகன்று
விண்ணுற்ற மின்னல்போல் நிலைப்பெறன் முத்திவிநாயகனே.

நாடிச் சடைமுடி வைத்துமெ னீக்கினென் சங்கையினில்
வாடி யலுத்தென்ன வாயை யடக்கினென் மலைக்குகையி
லோடி யொளித்தென்ன வுடலிளைத் தென்ன வுண்மைகண்டு
வீடின்பம்வர நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (356)

அழித்தாலு மென்ன வழிகின்ற தேகத்தை யசடர்க்கட்டிப்
பிழித்தாலு மென்ன மனைமக்கட் சுற்றம் பிரியமுளோர்
பழித்தாலு மென்ன வொழித்தாலு மென்ன பாரனைத்தும்
விழித்தாலு மென்ன நிலைப்பெறன் முத்தி விநாயகனே (357)

குண்டுயென் செய்யுங் குண்டுணி யென்செய்யுங் கோளென்செயுந்
தண்டுயுன் செய்யுந் தண்டமென் செய்யுஞ் சற்குணரை
மிண்டுயென் செய்யும் விவாதமென் செய்யும் வினையொழிசீர்
விண்டு மெய்ஞ்ஞான நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (358)

ஆர்க்கூடி யென்ன வனுறுவாகிலுமசை வனையிலமெய்
ஊர்க்கூடி யென்ன வுறவற்றுமென்ன வுதாசினராய்
தேர்க்கூடி யென்னத் தெருவிலட்டென்ன செய்தவினை
வேர்க்கூடிடாமல் நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (359)

உலக மெலாந்தன் வசமாகி லென்ன வொழிந்துமென்ன
நலமென்றுத் தீமையை நடத்திலென் முடித்துமென் ஞானியர்கள்
குலங்கோத் திரமெனக் கூறினென் கீறினென் குணச்சேட்டையை
விலகி மெய்ஞ்ஞான நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (360)

பந்தமென் செய்யும் பௌதிக மென்செய்யும் பாரனைத்து
நொந்தென்னச் செய்யு மோன்பென்னச் செய்யு நூலளவின்
சந்தமென் செய்யுஞ் சரணமென் செய்யுங் கலையற்று
வெந்தழியா ஞான நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (361)

நினைவென்னச் செய்யு தேசமென் செய்யு நெறியகன்று
றினமென்னச் செய்யு வேதமென் செய்யு மிடருட்படு
மனமென்னச் செய்யு மாற்றுனென்செய்யு மரணந்தரு
வினையற்ற ஞான நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (362)

வில்லென்னச் செய்யும் விதியென்னச் செய்யும் வீணரின்கைக்
கல்லென்னச் செய்யுங் களவென்னச் செய்யுங் கபடமாஞ்
சொல்லென்னச் செய்யுஞ் சொல்லாமல் மௌன சுகத்திடாக
வெல்லமா ஞான நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (363)

சாது யென்செய்யுஞ் செழித்தது யென்செய்யுஞ் சிறப்புமலி
போது யென்செய்யும் பெருமைக ளென்செய்யும் பிரபலஞ்சூழ்
காது வென்செய்யும் பூவது வென்செய்யு காற்றவுடல்
வீரங்க ளொடுங்கி நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (364)

மாயமென் செய்யும் வைசிக மென்செய்யு மண்ணுண் ணுமிக்
காயமென் செய்யுங் காமமென் செய்யுங் கரணங்களின்
வாயதென் செய்யு மறலியென் செய்யு மௌனமுடன்
மேயவை யாழ்ந்து நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (365)

நெருப்புயென் செய்யு நீரென்னச் செய்யு நிட்டைகாணா
இருப்புயென் செய்யு மெழுத்தென்னச் செய்யு மிழுக்குறுமுகத்
திருப்புயென் செய்யுஞ் சேனையென் செய்யுஞ் செகத்தின்மாய
விருப்பு வெறுப்பற்று நிலைப்பெறன் முத்தி விநாயகனே. (366)

## பட்டணத்துப்பிள்ளையார்.

காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
யோடே யெடுத்தென்ன வுள்ளன்பிலாதவ ரோங்குவிண்ணோர்
நாடே யிடைமருதீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.

மாத்தா னவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ நித்தனன்பு கொண்டு
வேர்த்தாற் குளித்து பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர் பற்றற்றவரே.

பேய்ப்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்டப் பிச்சையெல்லா
நாய்ப்போ லருந்தி நரிபோ லுழன்று நன்மங்கையரைத்
தாய்ப்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மைசொல்லிச்
சேய்போ லிருப்பர்கண்டீ ருண்மை ஞானந் தெளிந்தவரே.

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
மஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள் செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டும்
புஞ்சக் களைபறித்தேன் வளர்த்தேன் சிவ போகத்தையே.

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசை யன்றோ குருநாதன் மொழிந்ததுவே.

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்து நின்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென்றோ கயிலாயத்தனே.

நினைத்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைத்தது மற்று நினையாமையு மற்று நிர்ச்சிந்தனாய்த்
தனித்தனி யேயிருந் தானந்த நித்திரை தாங்குகின்ற
வனத்தனி லென்றிருப்பே னத்தனே கயிலாயத்தனே.

பூதங்க ளற்றுப் பொறியற்றுச் சாரம் புலன்களற்றுப்
பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முன்னற்றுக்
காதங் கரணங்களுமற்ற வானந்தக் காட்சியிலே
சேதங் களைந்திருப்பே னிறைவா கச்சியேகம்பனே.

## பதின்மூன்றவது

## அன்புசெயன்பர் ஞானந்தகதிநிலை.

அன்புஞ் சிவமு மிரண்டென் றெண்ணாத கரப்தருணைத்
தின்பம் பெருகி யெல்லா மவனுரு வென்று நினைந்
தன்னை யிடமுந் தந்தனை மாந்திய வருள் வழியே
யின்னாவ ரவர்பணி விளங்கு மெங்கணுமே விநாயகனே. (367)

உள்ள துள்ளபடியே நிலைக்குமென் றுறுதிகொண்டு
வள்ளலைப் போல சிவப்பணிக்கே பொன் வழங்கிமனக்
கள்ளக் குரங்கினைக் கட்டிவிட் டானந்தக் கண்ணுகிய
வின்று மவரன்பு விளங்கு மெங்கணுமே விநாயகனே. (368)

நினைநேர மியாவுந் * திருநீறுப் பூசி நிர்ச்சிந்தையா
யனைத்து நின்செய லின்பொரு ளெனவுணர்ந் தருளடைய
பனைத்துண்டம் போலப் பாதத்தில் வீழ்ந்திரு பற்றகன்று
வினையற் றவருண்மை விளங்கு மெங்கணுமே விநாயகனே. (369)

## * விபூதியணியு முறைமை.

சமயதீக்ஷைப்பெற்றவன் பிராதகாலத்தில் பாகியங்களுக்குப்போய் தந்தாவனஞ்செய்து, நித்திய கர்மானுஷ்டானத்துக்கு தேகசுத்திசெய்து விபூதியெடுத்து, இடதுகையில்வைத்து மூலமந்திரத்தால் சிரசு, நெற்றி, தேகங்களில் உத்தளமாகத்தரித்து கிழக்குமுகமாயிருந்து (கணபதியே நமஹ:) வென்று குட்டிக்கொண்டு, (சிவகுருவேநமஹ:) வென்று கும்பிட்டு, ஜலத்தை நிரீக்ஷணமாகப்பார்த்துத் தாடனஞ்செய்து திக்குபந்தனம் ஜலத்தைவழித்து எட்டுத்திக்கில் தொடுத்து கவசத்தால் வளைத்து, தேனுமுத்திரைக்கொடுத்து (ஆத்மதத்வாதிபதே சிவாயநமஹ: வித்யாதத்துவாதிபதே சிவாயநமஹ: சிவதத்துவாதிபதே சிவாயநமஹ:) வென்று மிளகுப்பிரமாண ஜலத்தினால், ஆசமனஞ்செய்து அங்கநியாசஞ்செய்து இடதுகையிலிருக்கின்ற விபூதியை, வலது கையால்மூடி (நிவிர்த்திகலாயநமஹ: பிரதிஷ்டாகலாயநமஹ: வித்தியாகலாயநமஹ: சாந்திகலாயநமஹ: சாந்தீதகலாயநமஹ:) வென்று பஞ்சகலை சத்திமந்திரங்களால் அபிமந்திரித்து, கொஞ்சம் விபூதியை யெடுத்து, மேற்கே (ஸத்யோஜாதாயநமஹ:)

வென்று, பெலிகொடுத்து அஸ்திர மந்திரத்தால் கரைத்து சிரசினுச்சியில் (ஓம் சதாசிவாயநமஹா:) வென்று ஓரங்குலப்பிரமாணம் மூன்றுபுள்ளியாக விபூதி தரிப்பது) நெற்றியில் திரிசூலமாக ஒன்றிலொன்று தட்டாமல் வளையாமல் ஆறங்குல நிகளமும், மூன்றங்குலவகலமும், (ஓம் மகேஸ்வராயநமஹ:) வென்று மூன்று விரலால் விபூதிதரிப்பது) நாலங்குல நிகளமும் மூன்றங்குல வகலமுமாக (ஓம் ருத்ராயநமஹா:) வென்று மூன்று விரலால் தரிப்பது, விபூதி நடுமார்பில் கபிஸ்தானத்தில் ஓரங்குலப் பிரமாணம் மூன்று விரலால் (ஓம் விஷ்ணுவே நமஹா:) வென்று விபூதிதரிப்பது முழங்காலிரண்டிலும் மூன்று விரலால், (ஓம் பிர்மணேநமஹா:) வென்று விபூதிதரிப்பது. இந்த ஐந்துவிடமும், பஞ்சகர்த்தாக்களுடைய ஸ்தானமானதால் அந்த தேவதைகளைத் தியானித்து விபூதி தரித்தலால் அவர்களைப் பூசித்தபலன் சித்திக்கும்.

தேகத்தில் வலது தோளுக்கு ஆறங்குல நிகளமும் மூன்றங்குலவகலமுமாக, மூன்று விரலால் ஒன்றோடொன்று தட்டாமல் (ஓம் மனோன்மணியேநமஹா:) வென்று விபூதி தரிப்பது. இடது தோளுக்குமவ்வளவு பிரமாணமாகவே அந்த சத்திமந்திரத்தால் விபூதி தரிப்பது. வலது முழங்கை மணிக்கட்டுக்கும் ஓரங்குலப் பிரமாணமாக மூன்று விரலால், (ஓம் மகேஸ்வரியே நமஹா:) வென்று விபூதி தரிப்பது. இடது முழங்கை மணிக்கட்டுக்கும், அவ்வளவு பிரமாணமாகவே அந்த சத்தியின் மந்திரத்தால் விபூதி தரிப்பது. வலதுகை மணிக்கட்டுக்கு ஓரங்குலப் பிரமாணமாக மூன்று விரலால் (ஓம் ருத்திரியே நமஹா:) வென்று விபூதி தரிப்பது இடதுகை மணிக்கட்டுக்கும், அவ்வளவு பிரமாணம் அந்த சத்தியின் மந்திரத்தால் விபூதி தரிப்பது. வலது இடது, விலாப்பக்கங்களுக்கும், ஓரங்குலப் பிரமாணமாக மூன்று விரலால் (ஓம் மஹாலட்சுமியே நமஹா:) வென்று, விபூதி தரிப்பது முதுகினடியில் ஓரங்குல நிகள மூன்று விரலால் (ஓம் சரஸ்வதியே நமஹா:) வென்று விபூதி தரிப்பது. இந்தப்பஞ்ச சத்திகளையும், பஞ்சகர்த்தாக்களையும், தாங்கள் வேண்டியிஷ்டங்களைக் குறித்து, மந்திர விதிவத்தாய்த் தியானங்கள், பூசைகள் செய்தாலும், வேண்டியிஷ்டங்களையுங் கொடுப்பார்கள். முடிவாக கழுத்துக்கு (ஓம்நீலகண்டாய நமஹா:) வென்று விபூதி தரிப்பது.

பிற்கு விபூதி தரித்த இரண்டு கைகளையுஞ்சேர்த்து கும்பமுத்திரையாகப் பிடித்து, பதினொரு மந்திரங்களையுஞ்சொல்லி அதில் மந்திரத்துக்கொருதரம் ஆத்ம ஜெதர்ப்பணமும், விபூதி ஸ்நானமும், தேகசத்தியுஞ் செய்தபிறகு அங்க நியாசஞ்செய்யவேணும், அஸ்தாஙது காகந்திசெய்து

அஸ்திர

(சிவாயநமஹ: சிவமூர்த்தியே நமஹ:) வென்று ஏகாங்க நமஸ்காரஞ்செய்து (நேத்திரோப்பியே நமஹ:) வென்று நேத்திரங்காட்டிப்பார்த்து, தர்ச்சனி விரல், பவுத்திரவிரல், இரண்டையுங்கூட்டி, (ஈசானமூர்த்தியே நமஹ:) வென்று தாள்வாய், நியாசம், (தற்புருஷவக்திராயநமஹ:) வென்று நாசிப் புறங்கள் நியாசம், (அகோரவிருதயாயநமஹ:) வென்று இரண்டு நேத்திரங்கள் நியாசம் (வாமதேவ குய்யாயநமஹ:) வென்று தொப்புள் நியாசம் (சத்தியோசாத மூர்த்தியேநமஹ:) வென்று இரண்டு முழங்கால் நியாசம், (இருதையாய நமஹ:) வென்று, இருதைய நியாசம் (சிரசேநமஹ:) வென்று சிரசு நியாசம் (சிகேநமஹ:) வென்று சிகை நியாசம் (கவசே நமஹ:) வென்று இரண்டு கைகள் தோள்பக்கத்தில் மேல்நீட்டி, கீழாக இழுப்பது (நேத்திரோப்பியோநமஹ:) வென்று நேத்திரங் காட்டுவது (அஸ்திராய நமஹ:) வென்று சிரசை சுற்றிநொடிப்பது.

(சிவாயநமஹ: சிவமூர்த்தியேநமஹ:) வென்று ஏகாங்கவந்தனஞ்செய்வது (அஸ்திராயபடு சுவாஹா: அஸ்திராய சுவாஹா:) வென்று இரண்டு கையின் மூன்பின் நியாசம் (ஈசானமூர்த்தியே நமஹ:) வென்று தர்ச்சனி விரலால் சுண்டுவிரல் நியாசம். பவுத்திரவிரலே (தற்புருஷ வக்திராய நமஹ:) வென்று நியாசம் (அகோரவிருதயாயநமஹ:) வென்று பாம்பு விரல் நியாசம் (வாமதேவகுய்யாயநமஹ:) வென்று ஆள்காட்டிவிரல் நியாசம் (சத்தியோஜாத மூர்த்தியேநமஹ:) வென்று கட்டைவிரல் நியாசம் (இருதையாயநமஹ:) வென்று சுண்டுவிரல்நுனி நியாசம் (சிரசேநமஹ:) வென்று பவுத்திரவிரல்நுனி நியாசம். (சிகேநமஹ:) வென்று நடுவிரல் நுனிநியாசம் (கவசேநமஹ:) வென்று ஆள்காட்டிவிரல் நுனிநியாசம் (நேத்திரோப்பியோநமஹ:) வென்று கட்டைவிரல்நுனிநியாசம், கட்டைவிரல்கள் நடுவிரல்கள் சுண்டுவிரல்களை நீட்டி மற்றவிரல்களைமடக்கி நேத்திரங்காட்டிப் பார்க்கின்றது. (அஸ்திராயநமஹ:) வென்று கைகளைச் சுற்றுகின்றது.

புதிதெனுருமந்திரங்களை மனதில்நினைந்து தியானித்து வாயுவை மூக்கினுள்ளே ரேசிக்கின்றது (ரேசகம்) அம்மந்திரங்களை தியானித்து வாயுவை கண்டத்தினுள்ளே பூரிக்கின்றது (பூரகம்) வாக்கினுல்சொல்லி மென்ன வெளியில் விடுகின்றது (கும்பமாம்) இந்த ரேசகப்பூரககும்பங்களை விதினத்தாய் செய்யவேண்டியது.

## முதலாமங்கம்.

ஜலங்கையிலெடுத்து பிராணாயாமஞ்செய்து யீதிஜலத்தை, இன்றையதினஞ்செய்த பாபஹாமென்று வலது பெருங்கட்டைவிரலில் விடுகின்றது பாவவிமோசனம்.

### இரண்டாமங்கம்.

முன்போலவே தத்துவத்திரயஞ்செய்து, அங்கநியாசங் கரநியாசங் களையுஞ்செய்து (சிரசேநமஹா:) வென்று சிரசைச் சுற்றிநொடித்து பதினொருமந்திரத்தால், மந்திரத்திற்கொருதரம் இரண்டுகைகளையுஞ்சேர்த்து ஜலமெடுத்து (ஈசானமூர்த்தியே நமஹா:) முதல் (அஸ்திராயநமஹா:) வரையில் சொல்லி பிதிர்தர்ப்பணமாகக் கையிலெடுத்த ஜலத்தை வலதுக்கைப் பெருவிரலால் கீழே விடுகிறது

### மூன்றாமங்கம்.

முன்போலவே தத்துவத்திரயஞ்செய்து, அங்கநியாசம், கரநியாசஞ்செய்து, ஜலத்தால் சிரசை (கவசாயநமஹா:) வென்று வளைத்து சூரியமண்டல மத்தியஸ்தம் (சிவசூரியாயநமஹா:) வென்றுசொல்லி இரண்டுகைகளாலுஞ் சலத்தையெடுத்து தலைக்குமேலாக விடுகின்றது. மறுபடியுஞ் (சதாசிவாய சூரியாயநமஹா:) வென்றுசொல்லி முன்போலவே ஜலத்தை விடுகின்றது (மஹேஸ்வராய சிவசூரியாயநமஹா:) வென்றுசொல்லி முன்போலவே ஜலத்தை விடுகின்றது (ருத்திராய சிவசூரியாயநமஹா:) வென்று ஜலத்தை விடுகின்றது இது சூரியதர்ப்பணம்,

### நான்காமங்கம்.

ஜலத்தினின்று இவ்வளவு செய்த ஆத்மா, வலதுகையில் கொஞ்சம் ஜலமெடுத்துக்கொண்டு கரையில்வந்து (அஸ்திராயநமஹா:) வென்று பூமியை சுத்திசெய்து ஆசனம்போட்டு அதிலிருந்து செம்புஜலத்தை யுத்தரணியாலெடுத்து ஆசமனஞ்செய்து, அங்கநியாசம், கரநியாசஞ்செய்து நூற்றெட்டுதரம் குருசொன்னமந்திரத்தை செபித்து சிவாத்வைத நிட்டைகூடி கூடுமான காலமநுஷ்டிக்கவேண்டியது.

### ஒழிவிலொடுக்கம்.

சட்டப் போதங்கழன்ற சுத்தமறை மாத்திரையின்
மட்டுத்தானற்ற நிட்டை வாய்க்குமாற்—றெட்டேன்
றலைச்செய்யு மான்றசஞ் சநசேரு பால்வாரி
மூலைக்கண்ணிற் றோன்று முறை.

## திருநீற்றின் பெருமையைப்பற்றியது,

### சூதசங்கிதை.

"பகர்புனித நீறணியார் ஞானமடையார்கோடி பவமானாலும், நகர்தலுறூர் சமுசார மாபாவமுமுடையராய்த் தாழ்வார் கும்பி, புகரில்வரு ஞாச்சிரம பலமுறா ரவரியற்றும் புனிதமான, நிகரறிய புண்ணியமும் பாதகமாமென்றுமறை நிகழ்த்துமாலோ"

"புலைஞர்ப் பாவியருக்கே நீற்றில்வெறுப் புண்டாகும் பண்பார் நீற்றைக், குலவுவதா ரேல்லா மாபாவ ரெனத்திரித்து கொள்ளவேண்டு, நலமுறுமிம்மாண் மியஞ்சொல்லெவம் மாநூமற்றெம் முடையகுரு நாதனுநூ, மலர்புகழீர் முடிவுமோ முடிபாமெக் காலத்தும் வாய்மையீதே"

வாயுசங்கிதை.

"பண்ணிடு பாவம் பற்றறப் பறியப் பதித்தலாற் பசுமமென் றுரைப்பார், மண்ணவிச்சுசிவம் வழங்குந் தன்மையினான் மாசறு விபூதியென் றுரைப்பர், இன்னினே புரத்தில் செய்தலாலிரக்ஷை யென்பரசற் செல்வமென் னெடுத்தின், இன்னவெண் ணீற்றை யணிந்துநல்விரத மாற்றுவோன் சிவனெனப் படுவன்"

காஞ்சிப்புராணம்.

"கைசெவி சென்னி கழுத்திவெனப் போதாக் கண்டிகை யணிதல் வெண்ணீறு, மெய்யெலாம் பூசியைந்தெழுத்தும் விலக்குறுப் புண்டாம் பொறித்தல், வைதிகச் சைவர் மரபென மறைநூல் வகுத்திடு மாதலி னிவற்றைக், கைவிடாதென்றுங் கடைப்பிடித்திடுக விகழ்ந்திடிற் கடையரே யாவர்"

தணிகைப்புராணம்.

"படையணி மன்னவப்ன் மந்திரத்தினே, மிகையறன் கடையுள வெருட்டியிக்கிடர், வலகையெனைத் தையுமற மாற்றியாவர்க்குந், தகைநல மளிப்பது தகைநீறரோ"

பேரூர்ப்புராணம்.

"நீறுதரித்தவர் தமையாதி நிரம்பச் செவிநூ றுவர் வித்திற், கூறுபாவரின் முழ்பூதி கொண்டோர் வானாடிருந்திடினும், வீறுதவமா திகளிரம்ப விளைத்தோராயினர் தெண்புலைத்தார்க், கேதுநின்றது னீறிடுவார்க் கிமற்றிற் பூசைப் பயனனைத்தும்"

ஸ்ரீகாளத்திப்புராணம்.

"புழுதுசெஞ் சாந்தினைப் புனைந்த புன்மல, மொழுகுமென் பான்றனை யுடம்பை யொன்றரி, பழுதுசெய்திடின் பலகைலுமேவபரன், முழுது வெண்ணீற்றிடின் முத்துமாகுமே"

## பஞ்சாட்சர சொரூபலட்சணத்தைப்பற்றியது.

சாட்சாத்கார சிவஞான சொரூப லட்சணத்தையடைய விரும்பும் ஆன்மாக்களுக்கின்றியமையாதப் பெருஞ்செல்வமாகப் பெறவேண்டிய திருமேனியாகிய விபூதியும், பரமசிவத்தினக்கமாகிய ருத்ராக்ஷமணியும் எல்லா நன்மையுந் தரக்கூடியது பஞ்சாக்ஷரமாம். இப்பஞ்சாக்ஷரமானது, மந்திரங்களுள்ளே அரசாயுள்ளது. எப்படியென்றால், எல்லாமந்திரங்களும் வேதத்துள்ளே யமைந்துள்ளது. அவ்வேதமெல்லாம் இருக்கு யஜுசு, சாமம், என்ற மூன்றுவகைப்படும். அதர்வணம் இவற்றுளடங்கும், அம்மூன்றுமேதத்துல், அறம், பொருள், இன்பமென்ற புருஷார்த்த மூன்றிலே, பொருளெப்படி சிறந்ததோ, அப்படி யஜுர்வேதம் சிறந்தது. அவ்வேதம் ஏழுகண்டமாம். அவ்வேழினுள்ளே நான்காங் கண்டத்து நடுவேயுள்ளது ஸ்ரீருத்திரம் என்றமந்திரம், அந்தமந்திரத்தினடுவே யுள்ளது சிவபஞ்சாட்சரம்.

ஸ்தூல பஞ்சாக்ஷரம், சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம், காரணபஞ்சாக்ஷரம் மஹாகாரண பஞ்சாக்ஷரம், அதிசூக்ஷ்ம பஞ்சாக்ஷரம், அல்லது மஹா மனுவென ஐந்துவகைப்படும் இவற்றை பக்குவியானவன் குருமூர்த்தி லக்ஷணத்தன்மைப்பொருளாக விளங்குவதாலும், இப்பஞ்சாக்ஷரம் செபநியமான ஆசார, அனுஷ்டான, பக்திசிரத்தை, தவம், விரதமென்பவனைத்துஞ் சிவமூர்த்தநுரும்படியான இரண்டற்றப்பதவியாகும் சோதிசயனைப்பூர்ண வாழ்வைத்தருதற் கின்றியமையாத் மெய்ச்சாதன சொரூபமாக விளிது பெறப்பட்டு நிற்றலாலும், இப்பஞ்சாக்ஷரமானது சிவபெருமானின் சகள மேனியாதலாலும், இதற்கு நிகருள்ளவோர்ப்பொருளானது வேறில்லை. சாத்திரமெங்குங்கிடையாதென்பது, அறிவிலறிந்து அநுபவஞானமாக நிற்றலெனுஞ் சொல்லினைத்தையுங்கடந்து, தனது யதார்த்த வடிவத்துடன், ஒப்பும், உவமையுமற்றெக்குணச்செயலுஞ்சின்றவுமற்ற சொம்பத தத்துவ யோகபோக ஞானானுபவ, நிராதார நின்மயமாற்றல் லெட்சியத்தையும் அழியாது, சச்சொரூபாத்ம சேகரானுபவர்களாகும் முமுக்ஷுகளாம் பெத்தமுத்தராலிவ்வழியே பெற்றனராதலாலும், இதற்கு சரிதையுள்ளபடி கேட்டுத்தெளிந்து நடந்து, மனோலயப்பட்டுத்தனுடைய ஸ்வரூபத்தை யடைதலே முக்தர்க்குரிய மோக்ஷமுக் கடமையென மூர்க்கருமறிந்திடலா மவற்றை விளக்கமெடுத்தானப்பட்டது.

பிருதுவிதத்துவமாய்க் கர்த்தவிஷயமாய், வெண்ணிறமாய்ப் பூமியை யாய், நிவர்த்திகலையாய்ச் சத்தியோசாதமாய்க் கர்மசாதாக்கியமாய், நான்

முக ரூபமாய்ச் சிருஷ்டியைத்தருகின்ற மறைப்பையுடைய, திரோபயகூர மாகிய (ந) காரத்துடனே அப்புவி தத்துவமாய் ரசவிஷயமாய்க் கருநிற மாய்ச் சலமயமாய்ப் பிரதிஷ்டாகலையாய், வாமதேவமாய்க் கர்த்துருசா தாக்கியமாய், விஷ்ணுரூபமாயத் திதியைத்தருகின்ற மயக்கத்தையுடைய மலாக்ஷரமாகிய (ம) காரமானது, ஆன்மாக்களுக்குத் தேகத்தைக்கொடுப் பதற்கேதுவாய்த்தோன்றும். தியானிப்பதற்குரிய இவ்விரண்டக்ஷரங்க ளும் ஒடுங்குகிறதற்கு வாயுதத்துவமாய்ப் பரிசவிஷயமாய்ப் புகைநிற மாய் காற்றுமயமாய்ச் சாந்திகலையாய்த் தற்புருஷமாய், மூர்த்திசாதாக் கியமாய் மகேஸ்வர ரூபமாய்த் திரோபவத்தைத் தருகின்ற சத்திவடிவத் தையுடைய பரையக்ஷரமாகிய (வ) காரத்திலே முதலிற்சொல்லிய (நகார மும்) ஆகாயதத்துவமாய், சத்விஷயமாய், நீலநிறமாய்ச் சுத்தவெளியாய்ச் சாந்தியாதீதகலையாய், ஈசானமாய்ச் சிவசாதாக்கியமாய்ச் சதாசிவ ரூப மாய் அனுக்கிரஹத்தைத் தருகின்ற சிவவடிவத்தையுடைய சிவாக்ஷரமாகிய (ய) காரத்திலே (மகாரமும்) ஒடுங்கும். அருமையாகிய தேயுதத்துவ மாய், ரூபவிஷயமாய்ச் சிவந்த நிறமாய் அக்கினிமயமாய், வித்தியாகலை யாய், அகோரமாய், மூர்த்திசாதாக்கியமாய், உருத்திரசொரூபமாய், சம் சாரத்தைத்தருகின்ற ஞானசூரியப் பிரகாசத்தையுடைய, பதியக்ஷரமா கிய (சிகாரமந்திரத்தினாலே, யகாரம் லயத்தையடையும். மேற்சொல்லிய பதியக்ஷரமாகிய) சிகாரத்திலே வகாரமும் ஒடுக்கமாகும். அந்தப் பதி யக்ஷரந் தானேயொடுக்கச் சீவன்முத்திவரும். இவற்றுள்,

(ஓம்)என்னும் பிரணவமயமாக (கணபதி) மூலாதாரத்திலும், (பிர மா) சுவாதிட்டானத்திலும், (மஹாவிஷ்ணு) உந்திக்கமலமாம் மணிபூர கத்திலும், (ருத்திரன்) இருதயக்கமலமாம் அனாகதத்திலும், (மஹேச்சு ரன்) கண்டத்தானமாம் விசுத்தியிலும், (சதாசிவம்) நெற்றியாம் ஆக் ஞையிலும், வீற்றிருப்பார்கள்.

ஓங்காரத்தின் அர்த்தசரூபமாயுள்ளது பஞ்சாட்சரம் இப்பஞ்சாட்சர மானது (சிவ) என்னும் ஆணெழுத்தும் (நம) என்னும் பெண்ணெழுத் தும் (ய) எனனும் அலியெழுத்துஞ் சேர்ந்து (பதிபசுபாசத்திலடங்கும்) இது உச்சரிக்கிற முறைமையினாலே ஸ்தூலபஞ்சாட்சரமென்றும், சூக்ஷ ம பஞ்சாட்சரமென்றும், காரண பஞ்சாட்சரமென்றும், மஹாகாரண பஞ்சாட்சரமென்றும், அதிசூக்ஷ்ம பஞ்சாட்சரமென்றும் அல்லது, மகா மநு என்றும் ஓதுவகைப்படும்.

இவை, நமசிவய வென்பது ஸ்தூல பஞ்சாட்சரமெனவும், சிவய நம வென்பது சூக்ஷ்ம பஞ்சாட்சரமெனவும் பெறப்படும்.

சிவம் (சிகாரமாகவும்), அருள் (வகாரமாகவும்) ஆத்மா (யகாரமாகவும்) திரோதை (நகாரமாகவும்) மலம் (மகாரமாகவும்) ஆகிய (சிவயநம) என்னும் சூக்ஷ்ம பஞ்சாட்சரமாதலான், இந்த முறைமையை யுணர்ந்து ஊனநடனமாகிய (நகார, மகாரத்திலே) சென்று ஜனன, மரணப் பட்டுப்போகாமல், ஞான நடனமாகிய (சிகார, வகாரத்தைப்) பொருந்தி சிகார முதலாக உச்சரித்து, அப்படி உச்சரிக்கிற முறைமையையும்விட்டு வகாரமாகிய ஞானந்தானாய் நிற்கவே, சிகாரமாகிய ஞேயத்திலே சத்தியாகிய வகாரம் சிவமாகிய சிகாரத்தினிடையிலழுந்த சீவன்முத்திவரும்.

---

## ஸ்ரீமத் – திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

### திருப்பஞ்சாக்கரப்பதிகம்.

துஞ்சலுந் துஞ்ச லிதாத போழ்தினு, நெஞ்சகநைந்து நினைமினுநாடொறும் வஞ்சகமற்றடி வாழ்த்த வந்தகூற், றஞ்சவுதைத்தன வஞ்செழுத்துமே.

மந்திரநான்மறை யாகிவானவர், சிந்தையுணின்றவர் தம்மையாள்வன செந்தழலோம்பியசெம்மைவேதியர்க் கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர், ஞானவிளக்கினையேற்றிநன்புலத் தேனைவழிதிறந் தேத்துவார்க்கிட, ரானகெடுப்பன வஞ்செழுத்துமே

"நல்லவர்தீய ரெனாது நச்சினர், செல்லல் கெடச்சிவ முத்திகாட்டுவ கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத், தல்லல் கெடுப்பன வஞ்செழுத்துமே"

"தும்ம லிரும லெழுடர்ந்த போழ்தினும், வெம்மை நரகம் விளைந்த போழ்தினு, மிம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினு, மம்மையினுந் துணை யஞ்செழுத்துமே"

### நமச்சிவாயத்திருப்பதிகம்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி, யோதுவார்தமை நன்னெறிக் குய்ப்பதும், வேதநான்கினு மெய்ப்பொருளாவது, நாதனுமநமச்சிவாயவே

"கொல்வாரேனுங் குணம்பல நன்மைக, ளில்லாரேனு மியம்புவராயிடி, லெல்லாத்தீங்கையு நீங்குவரென்பரா, னல்லார்நாம நமச்சிவாயவே.

"மந்தரம்மன்ன பாவங்கண்மேவிய, பந்தனையவர்தாமும் பகர்வரேற் சிந்தும் வல்வினை செல்வமுமல்குமா, னந்திநாம நமச்சிவாயவே"

"நரகமேழ்புக நாடினராயினு, முறைசெய்வாயின ராயினுருத்திரர், விரவியே புகுவித்திடு மென்பரால், வரதனும நமச்சிவாயவே"

## ஸ்ரீமத் - திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

### நமச்சிவாய அற்புதப்பதிகம்.

———✻———

" சொற்றுணை வேதியன் சோதிவானவன், பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக், கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே.

" பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை, யாவினுக் கருங்கல மரனஞ் சாடுதல், கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது, நாவினுக்கருங்கல நமச் சிவாயவே "

" விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ, லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம், பண்ணிய வுலகினிற் பயின்றபாவத்தை, நண்ணி னின் றறுப்பது நமச்சிவாயவே "

" இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தியாரையும், விடுக்கிற் பிரானெ ன்று வினவுவோ மல்லோம், மடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளினுமுற்ற, நடுக்கத்தை கெடுப்பது நமச்சிவாயவே "

" சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கெல்லா, நலமில நாடொறு நல்கு வானவன், குலமில ராகிலுங் குலத்திற்கேற்பதோர், நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே "

" இல்லக விளக்கது விருள்கொடுப்பது, சொல்லக விளக்கது சோதி யுள்ளது, பல்லக விளக்கது பலருங் காண்பது, நல்லகவிளக்கது நமச்சி வாயவே "

" நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும், நமச்சிவாயவே நானறிவிச்சை யும், நமச்சிவாயவே நானவின் றேத்துமே, நமச்சிவாயவே நன்னெறி காட் டுமே "

———✻———

## ஸ்ரீமத் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

மற்றுபற்றெனக் கின்றிநின்றிருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

அஞ்சினார்க்கர ணாதியென்றடி யேனுநான்மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கரு ணல்கினாய் கழிக்கின்றதென்

பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந் தாடும் பாண்டிக்கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கிலுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.
விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டன
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடும் பாண்டிக்கொடுமுடி
விரும்பனே யுனை நான்மறக்கிலுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

---*---

ஸ்ரீமத்-மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்.

"போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல்கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றிபோற்றி"
"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
றேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
றானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தா
னூனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே"

திருமந்திரம்.

"ஐம்பதெழுத்தே யனைத்து வேதங்களு, மைம்பதெழுத்தே யனைத் தாகமங்களு, மைம்பதெழுத்தி னடைவை யறிந்தபி, னைம்பதெழுத்தே யஞ்செழுத்தாமே"

"தென்னமுதூறச் சிவாய நமவென்று, வுள்ளமுதூற வொருக்கா லுரைத்திடும், வெள்ளமுதூறல் விரும்பியுண்ணுதவர், துள்ளிய நீர்போற் சுழல்கின்றவாரே"

"குருவழியாய குணங்களினின்று, கருவழியாய கணக்கையறுக்க வரும்வழிமான மறுக்கவல்லார்கட், கருள்வழிகாட்டுவ தஞ்செழுத்துமே"

எட்டுமிரண்டு முருவான லிங்கம்
நட்டம் புகல நவிலக்கேள்—சிட்டா
சிவயநமவென்று திருவெழுத்தைந்தால்
அப்பயமற நின்றாடினன்.

பெரியபுராணம்.

"இருவினைப் பாசமு மலக்க லார்த்தனின், வருபவக் கடலில்வீழ் மாக்களேறிட, வருளுமெய் யஞ்செழுத் தாசைபிக்கடல், ஒருகன்மேலேற் றிட வுரைக்கவேண்டுமோ"

"ஓதிய மும்மல மெல்லா மொழித்திட்டவ், வாதி தனைவிட் டிறை யருட்சத்தியாற், நீதில் சிவஞான யோகமே சித்திக்கும், ஓதுஞ் சிவாய மலமற்ற வுண்மையே"

"நமவென்று நாமத்தை நாவி லொடுக்கிச், சிவவென்று நாமத்தைச் சிந்தையுளேற்றிப், பவமது தீரும் பரிசுமதற்றால், அவமது தீருமறுபிறப் பன்றே"

## சிவதருமோத்தரம்.

"ஆதிதனி லோமென்னும் பதமதாக வந்தமதிற் சிவாயவொலியணைந்து நிற்க, வோதியவா றெழுத்தினையு முடைத்தே யமைந்த வோமென்னும் பதப் பொருடா னுயிர்கட்கெல்லாம், போதகனாய்ப் பொருவிலியாய் நிற்குமீசன் புனிதனவன் சத்திவித மைந்து மற்றை, யேதமிலா வஞ்செழுத்தின் பொருளே யெண்ணி லிருபயனு முயிரணையு மிவ்வாறென்றும்"

"ஓமென்னும் பதமதனில் வேதமாதி யுற்பவிக்கு மாலவித்தி னுதிக் குமாபோ, லோமென்னும் பதமதனை யுரைத்தார்தாமே யோதினர்கள வேதாதி யுரைகளெல்லா, மோமென்னும் பதப்பொருளை யுணர்ந்தார் தாமே யுணர்ந்தாரும் வேதாதி யொருமைகூர, வோமென்னும் பதமொழித்தஞ் செழுத்துமாதர்க் கொழுங்குடைய சூத்திரர்க்கு முரைக்கலாமே"

## திருமந்திரம்.

"ஓமென்னு மோங்காரத் துள்ளே யொருமொழி, ஓமென்னுமோங் காரத் துள்ளே யுளபேதம், ஓமென்னு மோங்காரத் துள்ளே யுருவரு, ஓமென்னு மோங்கார மொண் முத்தி சித்தியே"

## வாயுசங்கிதை.

"உரைத்தவஞ் செழுத்தின்வீறிங் கொருநூறு கோடியாண்டு
விரிக்கினும் விரிக்கலாகா தாயினும் விமலற் போற்றிச்
சுருக்கமா யுரைப்பா முன்னைத் துகளறு குடிலையோடு
மிருக்குமா றெழுத்தாயீறி லிறைவனஞ் செழுத்துமன்றே"

"ஆதலா லெங்குமாகி யழிந்திடா வனுதியாகி, யோதுநான் மறையி னுச்சி யுணர்ந்திடு சிவனிங்குண்டாற், றீதிலா வவனைநாடித் தேர்ந்துற வுணர்ந்து சொல்லுங், கோதின்மந்திரம் யாதென்னிற் குறிக்குமஞ்செழுத் துத்தானே"

"அண்ணலா மீசன்சொன்ன மந்திர மநேகமுண்டா
லெண்ணிலவ் வஞ்செழுத்தோ டிணையில தாகுமொன்றும்
பண்ணமை வேதநான்கும் பழுதில் சாத்திரங்களாறு
நண்ணு மா லெவைக்குமேலா நவையிலஞ் செழுத்தின்மன்றே"

" மறையொரு நான்கும் வல்லோர் மாசிலஞ் செழுத்தைவல்லோர்
நெறியிலாப் பதிதரேனு நிகழ்த்துமஞ் செழுத்தையோதி
லுறைதரு பாவநீங்க வுயர்கதி சேர்வரென்னாக்
கறைமிடற் றிறைவன் றேவி தன்னொடுங் கழறினானே "

" வள்ளிதழ்க் குவளைபோல வரிபரந் தகன்ற கண்ணா
யுள்ளியஞ் செழுத்தை யோதின் முத்திவீ டுறுவார் வெய்ய
கள்ளுணீ ரேனுமன்பில் கடுங்கொலை யாளரேனு
மெள்ளிய குலத்தோ ரேனு மிசைத்தவிவ் வுகத்திலென்றான்

### பிரமோத்தரகாண்டம்.

"முக்கணாயக னமரருண் முதல்வனா மதுபோற், றக்கமந்திர மெவற்றினுந் தலைமையைந் தெழுத்தே, தொக்க நான்மறைப் பிரணவ மாதியாத் தொடங்கி, யொக்க வோதியே பரகதி யளப்பில ருற்றார்"

" இன்னமந்திரத் தோரெழுத் தின்பய னெல்லை, யன்னவூர்தியுந் திருமறு மார்பனு மறியார், முன்னை நான்மறை தனித்தனி மொழிவதி மிதுவே, மன்னி யெங்கணுஞ் சிவன்றிரு வுருவமாய் வயங்கும் "

" ஐந்தெழுத்தினுண் ணெறிவினா மாருயிர்ச் சென்று, சிந்தைகாணருஞ் சிவபதஞ் செறிந்திடுந் திறத்தா, லிந்த மந்திர நிலைபரப் பிரமமே யென்பர், வந்தனைத் தொழிற் சச்சிதா னந்தசின் மயத்தோர் "

"கருப்ப யோனியிற் சுழிப்படு பவக்கடல் கடப்பப், பொருப்பினெம் பிரா னுயிர்க்கெலாம் புணையெனப் புகன்ற, விருப்ப ஞானவஞ் செழுத் தினை யுளத்திடை வித்திற், றரும்பை சுட்டிடும் வேள்வியேன் றானமேன் றவமேன் " எனவும்,

### உபதேசகாண்டம்.

" இனைய மந்திரத் தியல்புணர்ந் தோர்பொழு திலசப்போர், அனையர் தம்முழைப் புண்ணியம் யாவையு மடங்கும், வினையுநீங்குவர் மேதினி புரந்தினி தளிப்பார், புனையுமேற்பதம் புகுவர்முத் தேவரிற் பொலிவார்"

" அஞ்செழுத்தெனு மருமறை மந்திரமதனை, நெஞ்சழுத்தவர் முழு முதற் றேவனை நிகர்ப்பார், பஞ்ச பாதகர் மீதுமற் றவர்கழற் படிதூஉஞ், செஞ்சவேயவர்க் காண்கினும் பவந்தொலை செல்வம் "

" ஆதி யருளுருவம் பெற்றெடுத்த வஞ்செழுத்தை, யோதியுணர்ந் தாரை யுள்ளத் துணர்ந்தாலுந், தீதபிறப் பறுப்பா ரன்னவர்க்குத் தீங்கிழைப்பார், போது நரகினுக்கு மன்னுறைத்தல் போகாதே "

### கடம்பவனபுராணம்.

"அஞ்செழுத்தினு ளோரெழுத் தின்பயனளவைக், கஞ்சநாண்மலர்க் கண்ணனுங் கண்ணனுங் காணார், செஞ்சவே பிரணவத்தொடுஞ் சேர்த்தி யுச்சரிக்கிற், பஞ்சபாதக ராயினும் பரனெனப் படுவார்"

"மூன்றுகாலமு மாலயத் தணுகிமுக் கணன்றா, ளூன்றியே தொழு துள்ளத்தவ் வஞ்செழுத் தெண்ணிற், றோன்று புண்ணிய மியாவும்வந் தடங்குந்தொல் வினைபோ, மேன்றபார்புரந் திருக்கதி மூவரிற்பெறலினார்

### சிவஞானதீபம்.

"அஞ்செழுத்தே மும்முதலு மாகுமென விறைநூ லறையுமதிற் றிரோதையரு ளரியசிவம் பதியாம், விஞ்சுமுயிர்த் தொகைபசுவாம் பாச மிருண் மலமாம் வித்தாகும் பெத்தமுத்தி யிரண்டினுக்கு மிதுவே, வஞ்ச முற்ற பவக்கடலி லெடுத்துயிர்கட் கருளான் மதிப்பரிய சிவானுபவ மளிப்பது மிதுவே, யஞ்செழுத்தே யைந்தொழிலு மெந்தைபிரான டமு மாதலினா லிதனுண்மை யோதரிதென் றுணரே" எனவும்,

### கருவைக்கலித்துறையந்தாதி.

"கருத்துறு மாயை யிருளுக்குத் தீபங் கழிபிறவிப்
பெருத்தெழு நோவுக் கமர்த சஞ்சீவினி பேதித்துள்ளம்
வருத்திடு துன்பத் திரைவாரிதிக்கு வடவைமன்றத்
தருத்தியி னாடுங் கருவைப் பிரான்றிரு வஞ்செழுத்தே"

### பதிபசுபாசவிளக்கம்.

"அஞ்செழுத்தினி லொருபுடை பதியென வமரும், வஞ்சமூற்றுள வொருபுடை பாசமாய் வதியுந், தஞ்சலின்றிய விடையினிற் பசுவெனத் துலங்கு, மஞ்செழுத்தினின் மும்முத லறிந்தவர் பிறவார்"

### மெய்க்கண்டசாத்திர சிவஞானபோதம்.

"ஊனக்கண் பாச முணராப் பதியை, ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி, யுராத்துனைத் தேர்ந்தெனப் பாசமொருவத், தண்ணிழலாம் பதி விதி யெண்ணுமஞ் செழுத்தே"

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமக் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு.

" இந்துவிற் பானுவி விராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன் கண்ணா—முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாணு மோதஞ் செழுத்து.

வாதவூர்ப்புராணம்.

" எவர்க்கு மெய்ஞ்ஞானமா மஞ்செழுத்தையு முணர்த்தவேண்டி, வவத்தொழி லகற்றியாளுஞ் சிவத்தைமுன் னாகமாறித், தவப்பெரு வடிவங் கொண்டார் தண்டமிழ்ப்பாடுமென்பர், செவிப்புலன் வழியே சிந்தையுறைத்திரு வாய்மலர்ந்தார் "

உண்மைவிளக்கச்சிந்தனை.

" சிவனருளாவி திரோதலமைந்து, மவனெடுத்தஞ்சி னலடவாம்—இவனின்று, நம்முதலா யோதிலரு ணடாது நாமெருட், சிம்முதலா யோதுநீ—சென்று.

" அண்ணன் முதலா யழகா ரெழுத்தஞ்சம், எண்ணிராப் பகலின் பத்தே—நண்ணி, யருளானது சிவத்தை யாக்குமணுவை, யிருளானகல் தீர—வின்று "

திருவருட்பயன்.

" சிவமுதலே யாமாறுஞ் சேருமேற்றீரும் பவநீ யோதும்படி. "

திருவிளையாடற்புராணம்.

" சூக்கமாமஞ்செழுத்தினிற் சுற்றிய பாசநீக்க, நீக்கிமெய் யானந்த விளைநிலத் தய்த்துப், போக்குமீட்சியுட் புறம்பிலாப் பூரணவடிவ, மாக்கி னொன்றொரு தீவகம்போல்வரு மண்ணல் "

பஞ்சாட்சரப் பசுபதிபாச விளக்கம்.

" பானுவா மிறையெழுத்து வதனொளியே பரையெழுத்து
வானயில் கண்மணியாகு முயிரொனுர் தனியெழுத்துத்
தீனயில் வினக்கே யாகுஞ் செப்பிய திணர்யெழுத்து
காணெனுமிருளேயாகு நவையுற மவ்வெழுத்தே "

(காரணபஞ்சாட்சரம்) கண்ணுடையவள்ளல்.

" அஞ்சக் கரமன்றி வேறொரு மந்திர மாயினில்லை, அஞ்சிலிறையரு ளாவி திரோதையில் லாணவமந், தஞ்சிலிரண்டை யருளா லகற்றிடி லாவியந்த, வஞ்சிலிரண்டை யிணையுமென்றான் கச்சியேகம்பனே "

"ஒருதலை மாணிக்க முன்ன ரெனக்குப தேசஞ்செய்தான்
இருதலை மாணிக்கம் பின்னரும் பேசி யிருளறுத்தான்
இரிதலை மற்றை யயன்றலை சூட்டிய கங்கையின்மூ
வெரிதலைச் சூலத் தொடு நடிப்பான் கச்சி யேகம்பனே"

"நகரமாகிய சேரியை நஞ்சென வெறுத்து, மகரமாகிய மயலெலாம் வேரொடு மறுத்து, வகரமாகிய வனத்தினி லிருந்திளைப்பாறிச், சிகரமாகிய நகரினை யடைந்தனன் சிவன்"

திருமந்திரம்.

"அஞ்சு நடுவே யழியாத் தலங்காட்டி, நெஞ்சிநடுவே நிறுத்தினனென் னந்தி, பஞ்சாக்கரத்தைப் பகர்ந்து பதிகாட்டி, அஞ்சிலிரண்டை யறுத்தன னந்தியே"

(மகாகாரணம்) திருமந்திரம்.

"வாசிவாவென்று வாசியை வைத்து, வாசியோ டோன்ற வகையறி வாரில்லை, வாசியோ டோன்ற வகையறி வாளர்க்கு, வாசியோ டீசன் மகிழ்ந்திருந்தானே"

பஞ்சாட்சர பதிபசுபாசவிளக்கம்.

"பாசமாகிய விரண்டையும் படிறெனத் தள்ளி, நேசமாகிய விரண்டையு நெஞ்சிடை யழுத்திக், காசநீங்கிய கண்ணெனை முத்தியைக் காண்பாய், ஆசைநீங்கிய நிலையிது விதற்கிலை யையம்"

கல்லுடையவள்ளல்.

"மந்திரமாவது மஞ்செழுத்தே யந்த மந்திரத்தில், ஐந்து பொருளையுங் காட்டி யிரண்டின் வழியுடைத்து, மூன்றுமிரண்டின் வழியைத் திறந்துயர் முத்தி தந்தான், கந்தன் கணபதிக்கப்பன் கலிக்கச்சி யேகம்பனே"

தாயுமானசுவாமிகள்.

"ஆரண மார்க்கத் தாகமவழி யற்புதமாய் நடந்தருளும், காரணமுணர்த் துங் கையுமென் மெய்யுங் கண்கண்முன் றடையவென் கண்ணே, பூரண வறிவிற் கண்டிலமதனாற் போற்றியிப் பொங்கியோ டிருந்து, தாரணியுள்ள மட்டுமே வணங்கத் தமியனேன் வேண்டிடத் தகுமே"

திருவருட்பயன்.

"வாசி யருளியவை வாழ்விக்கு மற்றதுவே, யாசிலுருவமுமா மங்கு"

### திருவாசகம்.

" தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத் தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக், கனியைநேர் துவர்வாயா ரென்னுங்கா லாற் கலக்குண்டு காமவான் சுறவின் வாய்பட், டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை முனைவனே முதலந்த மில்லாமல்லற் கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேர்க்கே "

### நிஷ்டானுபூதி.

" அஞ்செழுத்தின் விதி யெவ்வித மென்னி லரிய தூலமொடு சூக்குமமேவும், பிஞ்செழுத்தினைத் தள்ளியே நின்ற பெரியெழுத்தினைப் பின்மூனு கிறுவி, எஞ்சவில்லுயிர் நடுவினினிலவ விசைத்தல் காரணமாகு மென்றறிதி, விஞ்சு நல்லருளிறையதாயிதனை விளங்குபக்குவர்க் கருள்வது விதியே "

(இதை தியானிப்பவர்க ளிவரெனல்.) நிஷ்டானுபூதி.

"பதின்மரி லொருவர் நூற்றினி லொருவர் பகருமாயிரத்தினிலொருவர், அதிகமா யிலக்கந் தன்னிலே யொருவ ரறியகோடிகளினி லொருவர் கதிதரு சூக்ஷ வஞ்செழுத்தினையே கருதிடு பவர்களென் றறிதி, விதிதரு பருவத் தவர்கள் காரணத்தை விளங்குறச் செபித்திடத் தகுமால்"

இம்மனுவையுள்ளத்தி லடக்காதவர்கள் செய்வன யாவும் பயன்படா தென வெடுத்துரைத்தல்.

### நிஷ்டானுபூதி.

" பதியெழுத்தை விடுத்தவர்கள் பண்ணும் பூசை யவமாகும்
பதியெழுத்தை விடுத்தவர்கள் பண்ணுஞ்செபமு மவமாகும்
பதியெழுத்தை விடுத்தவர்கள் பண்ணுந்தவமு மவமாகும்
பதியெழுத்தை விடுத்தவர்கள் பண்ணுமறங் ளவமாமே "

### ஆச்சாபுரத்தலபுராணம்.

" புனிதவஞ்செழுத்தி னுண்மைப் பொருளுணர் மேன்மையோர்க, டனிதரு பிறவி நீங்கிச் சோதிதன் பதத்தைச் சேர்வர், மனவுணர்வினிக்கு மெட்டாச், சிவானந்த மயமதாகு, மினியவஞ் செழுத்தும் "

"மன்னிய மறைநீடங்கம் வளர்த்திடு சிவாகமங்க, டுன்னியகலைகளியா வுஞ் சொல்வதஞ் செழுத்தேயாகு, மன்னவஞ் செழுத்தைநாளு மிதமுறச் செபித்துளோர்கள், பன்னுமெக் குலத்தோரேனும் பரனடிநீழல் சேர்வார்"

"நிலவுமஞ் செழுத்தை யன்பாய் நெஞ்சினி லிருத்துவோரைக், கலையினர் திங்கள் கங்கை கடுக்கைவாளரவு சூடுந், தலைவனென் றன்னவல்வேண்டுஞ் சாற்றுமிவ் வாறன்றுதிவ், வுலகினில் மனிதரென்ன வுன்னில் வெம்பவங்களெய்தும்"

"பரனது வடிவமாகப் பகருமஞ் செழுத்தை நெஞ்சிற்
கருதினன் குணர்ந்தோர் தம்மைக் கருத்திடைக் குறித்துளோருந்
திருகுவெம் பவங்க டீர்வர் தீங்கிவர்க் கியற்றினோர்க
ளருநர கடைந்து வாழ்வ ரறைதரு கற்பகாலம்"

"ஓதிடு மறையி னுபநிடதத்தி லோங்குமுட் பொருளதா யிலங்கு, மாதியு நடுவு மந்தமுமாகி யமர்ந்தினி துறையு மஞ்செழுத்தின், வேதனுங் கரியமாலு மோரெழுத்தின் விரிபொருளறிவுறா ரென்னிற், பூதலந்தன்னி லெவரதன் மகிமை புலப்பட விரித்துரைத் திடுவார்"

"இன்ப வீட்டினுக்கு மருவிடுந் துணையா மினையவஞ் செழுத்தினை மனத்து, ளன்பொடு நினைப்போர் தமக்குவேண் டியதங் களித்துளோ ரவர்தமைக் கண்டோர், மன்பயி லவர்தநிழலிற் பட்டோர் மற்றிவர் தாங்களுநீடு, துன்புறு பிறவிக் கடலினை நீந்திச் சுகந்தரு முத்தியை யடைவார்"

## பிரபுலிங்கலீலை.

"நறியபுகை செழுஞ்சுடர்மென் சிவிறியொடு வெண்கவரி நாடமோடி நெறிமுறையி னெடுங்கடல்போ லியமுழங்க நின்றுதவி நிமலன்றன்னைப் பிறைநுதலிவ் வகைபூசை புரிந்து துதிபலசெய்து பெருகுமன்பான் மறைபுகலு மஞ்செழுத்து மறைந்து வலம் வந்துமுனம் வணங்கி"

"பெருருவில் யாகமம் புகன்ற மந்திரக், கிரியைகள் வழுவறக் கிளக்கு நல்லருட், குருபர னருளினாற் கொண்டு செய்குநர், பரசிவ பூசனைப் பயனை நண்ணுவார்"

"நெறிமுறை நிருமல னீறுசாத்தியே, யறிவரு மஞ்செழுத் தறைந்து மெய்யுணர், குறியினை தரித்தனன் குழவியாகிய, பெரிதிகர் வுறுமொரு புதல்விக்கென்பவே".

"இலங்கு * நீறெனுங் கவசமிட் டக்கமென் றியும்பு, மலங்கல் வாகைவேய்ந் தஞ்செழுத் தத்திர மடுத்த, கலங்கொள் வீரராம் பத்தர்த மறுகமணல்லார், கலங்குபாசறை போன்றெதிர் நிகழ்வது காணாய்"

" புண்டரந்திரு நெற்றியிற் பூசிமெய்க், கண்டி யென்னுங் கலனணி வார் சிலர், பண்டை நான்மறையின் பயனாகவே, கொண்ட வஞ்செழுத் துங் குறிப்பார் சிலர் "

திருப்பாதிரிப்புலியூர்த் தேவாரம்.

" கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தரித்துணர் நாமம் பயின்றிங் குனதருளால்
திருவாய்ப் பொலியுஞ் சிவயநமவென்று நீறணிந்தால்
தருவாய் சிவகதிநீ பாதிருப்புலி யூரரனே "

* விபூதி - சீராவும், ருத்ராட்சம் - வெற்றிமாலையும், பஞ்சாட்சர மென்னு மைந்தெழுத்து பாணங்களுமாக உருவகஞ்செய்யப்பட்டது.

---

சிவவாக்கியர்.

" அம்பலத்தை யம்புகொண் டசங்கென்று லசங்குமோ
கம்பமற்ற பாற்கடல் கலங்கென்றுங் கலங்குமோ
இன்பமற்ற யோகியை யிருளும்வந் தணுகுமோ
செம்பொனம் பலத்திலே தெளிந்ததே சிவாயமே "

சூக்ஷ்ம பஞ்சாக்கரத்தைப்பற்றியது.

" சிவாயமஞ் செழுத்திலே தெளிந்துவான மாளலாம்
சிவாயமஞ் செழுத்திலே தெளிந்துலோக மாளலாம்
சிவாயமஞ் செழுத்திலே தெளிந்துஞானஞ் சேரலாம்
சிவாயமஞ் செழுத்தையுந் தெளிந்துபாரு மும்முளே "

" சிவாயமென்ற வட்சரஞ் சிவனிருக்கு மட்சரம்
உபாயமென்று நம்புவோர்க்கு வுண்மையான வட்சரங்
கபாடமிட்ட வாசலைக் கடந்துபோகும் வாயுவை
உபாயமிட் டழைக்குமே சிவாயமஞ் செழுத்துமே."

நல்வழி.

" சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க், கபாய மொருநாளு மில்லை, உபாய—மிதுவே மதியாகு மில்லாத வெல்லாம் விதியே மதியாய் விடும்.

அருணகிரியந்தாதி.

" அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே—யஞ்சதலைக்
கொன்றறுத்து நாலா வொருகுறையா நின்றதலை
யின்றறுப்பான் சோணேச னென்று.

பட்டினத்தடிகள்.

"தவியாதிரு நெஞ்சமே தில்லை மேவிய சங்கரனைப், புவியார்ந்திருக்கின்ற ஞானகரனைப் புராந்தகனை, யவியா விளக்கைப்பொன் னம்பலத்தாடியை யைந்தெழுத்தாற், செவியாம லீசெவித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே"

" அஞ்சக்கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும், வஞ்சப்புலக்கட்டை வேரறவெட்டி வனங்கள் செய்து, விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப், புஞ்சக் களைபறித்தேன் வளர்த்தேன் சிவ போகத்தையே"

தாயுமானசுவாமிகள்.

"கண்ணிற் காண்பதுங் காட்சிக் கையாற்றொழில், பண்ணல் பூசைப் பகர்வது மந்திரம், மண்ணுடைந்தும் வழங்குயி ரியாவுமே, அண்ணலே நின் னருண்வடிவாகுமே"

இச்செய்யுளிற் குறித்துள்ள மந்திரமென்பது சிவஞான மூர்த்த அருள்வடிவமாகிய பஞ்சாக்ஷரமேனும் ஐந்தெழுத்தையெனச் சொல்லாதுமையும்.

---

ஒழியாத பக்தி யுடையாரே நல்ல வுறவுடையா
ரழியாதச் செல்வஞ் சிவஞானச் செல்வமென் றன்புகூர்ந்துப்
பழிபாவ மச்சங் கரண வாதனையற்று பரமானந்த
விழிபெற் றவர்நலம் விளங்கு மெங்கணுமே விநாயகனே. (370)

தொண்டர்க்குத் தொண்டு செய்வதே தொழிலாய்த் துணைப்பிடித்
யெண்டிசை யும்ஒடி ஓடி வாலயப்பணி யெதிர்ப்பட்டிடின் [து
வண்டுணுக் தேனைப்போ லுளங்கொண்டுமுடித்ததன்வரம்பலித்து
மிண்டுகெ ளற்றன்பு விளங்கு மெங்கணுமே விநாயகனே. (371)

கண்ணதைப் பாது கார்ப்பதைப்போலக் கடவுட்பணி
வுண்மைக் குத்தார மாகவுஞற்றி வுடலுயிருந்
திண்ணியச் செல்வமுங் கொடுத்து வதீதச் சிந்தையராய்
விண்மணும் போற்ற விளங்கு மெங்கணுமே விநாயகனே. (372)

அச்சுத கேசவ னரிதாமோதர னனந்த வன்ப
ருச்சித மாய்ப்பூசைச் செய்தன ரென்ற வுயர்மொழியின்
சொச்சொரு பந்தனைக் கண்டுப் பணிசெயுஞ் சொந்தநிலை
மெச்சிட வாழ்த்த விளங்கு மெங்கணுமே விநாயகனே. 373)

சந்ததம் வந்தனைச் செய்து கண்ணீர்விட்டுத் தானழுது
தந்தையை மைந்தன் வரங்கேட்கும் வண்ணஞ் சரணருகி
ஞெந்துத்தன் பாபப் படியேற வேண்டி நோன்புற்றசிர்
விந்தையுங் கேண்மையும் விளங்கு மெங்கணுமே விநாயகனே.

திருநீறு யீசன் றேகமா மென்றுஞ் செடரோகமாங்
கருநீறு போக்கிக் காமனைக் காலனைக் கடந்துநலப்
பெருநீறு ஞானப் பிரம வானந்தமாய்ப் பேசிடுவார்
வெருநீறுயென்றெணர் விளங்குமெங்கணுமே விநாயகனே (375)

அடியவ ரெங்கே வரன்பணி யெங்கே வமைந்திடுமோ
குடிமுழு தாண்டுக் குறைதீர்க்குஞ் சற்குரு குணமடக்கப்
படிமிசைக் கிடைக்குமோ யெனத்தேடிப் பணிசெய்து பண்படைந்து
மிடிநீங்கி போற்ற விளங்கு மெங்கணுமே விநாயகனே. (376)

இருப்பதுப் பொய்யும் போவது மெய்யென யெழுதினவர்க்
கருத்தை யறிந்தவர் மாய்மாலஞ் செய்வரோ கனகசபை
நிருத்தமதைக் கண்டு நிர்ச்சிந்தை யாய்த்தொழு நெறியுடையார்
விருத்தரும் பாலராய் விளங்கு மெங்கணுமே விநாயகனே. (377)

தொழும்புச் செய்வதா லுண்டாகுங் கருணைத் தொல்லைமலிந்
தழும்புச்செய் பாப மடியற்றுப் போகுமிஃ தாணையென
எழும்பிய வேதத் திருநெறி சிவமொழிக் கிருதயமே
விழுமியக் கோயிலாய் விளங்கு மெங்கணுமே விநாயகனே. ()

அன்னங் கொடுத்து வன்பர் வருகைக்கே யாசைவைத்து
சன்மநோய்த் தீர்ந்து முத்தி சாயுச்சியந் தனையடைய
நன்மை யென்பதென சொலுங்குரு மொழியெலா நடத்தியதால்
மென்மேலு மவர் பக்தி விளங்கு மெங்கணுமே விநாயகனே. ()

ஆதியர் தருமத் யமுமிலா பரசிவ னருளியவி
பூதியை யணிபவர்ப் புண்ணியர்ப் பூசுதற் புண்ணியமெனு
நீதியை யெவ்வவ தரத்தும் விடாது நிறைப்பணியாய்
மேதினி போற்ற விளங்கு மெங்கணுமே விநாயகனே. (380)

கண்மணி யாகு முருத்திரன் ருத்ராக்ஷங் கணகொளியை
யெண்மணி யெழுத்திலக் கணமணி யிறையவ னெதிருக்தமா
யுண்மணி குண்டலி யோங்கார வுருவுகொண் டுள்ளதென
விண்மணி யெனப்பூண விளங்குமெங்கணுமே விநாயகனே (381)

சாற்றும் பலவிதச் சமயத்துட் சைவந் தலைமையென
யேற்றுங் குணமு மிரவு பகற்சதா யெண்ணம் விடா
தாற்றும் பணியு மந்தரங்க சேவை யதிலாசையும்
வேற்றுமை யின்றி விளங்கு மெங்கணுமே விநாயகனே. (382)

தங்கமு மண்ணுமற் றொன்றுக்கொன் றுயர்வத் தாழ்வுயெனுஞ்
சங்கைக ளின்றிச் சருவமுஞ் சிவமே தனையறிய
மங்களத் திருவுரு விளையாட லெனயேத்தி வணங்கியே யூழ்
வெங்கலி நீங்கி விளங்கு மெங்கணுமே விநாயகனே. (383)

உடற்பொரு ளாவி மூன்றுநன் மனத்துட னொப்படைத்து
யிடம்பொரு ளேவ வெளிதாய்ப் படைத்து யீசனுக்கு
நடம்புரி வாலய மண்டப மடம்பல நடத்தி வைத்து
விடப்படா பக்தியால் விளங்கு மெங்கணுமே விநாயகனே. ()

தேமலர் மாலையுஞ் செழுமணி மாலையுஞ் சிந்தை மகிழ்ப்
பாமலர் மாலையும் பல்லிசை மாலையும் பக்திமலித்
தாமலர் மாலையுஞ் சாத்தியே மந்திரஞ் சாற்றினரம்
மேமலர் மாலைகண் விளங்கு மெங்கணுமே விநாயகனே. (385)

எல்லை யில்லாதத் திருப்பணி யுஞற்றி யேகாந்தமாய்ச்
சொல்லற்கு மெழுதற்கு மேத்துதற்கு முடியாத் தோத்திரங்கட்
சல்லாப மாய்ப்பாடி சஞ்சித வாசனைத் தனையனைத்தும்
வெல்லாமல் வென்று விளங்கு மெங்கணுமே விநாயகனே. ()

சமய மிழந்தப்பின் சார்ந்திடுஞ் சுகமெங்ஙன் ருனுளது
அமரரு மசுரரு மாசையும் பூசையா லருளடைந்து
நமனையும் பிறவியு நாடாத சாயுஜ்ய நாட்டமுற்ற
விமரிசை பக்தியால் விளங்கு மெங்கணுமே விநாயகனே. (387)

வேத நெறிதழைத் திடதன்னைத் தத்தமாய் விடுத்து சைவப்
போத நெறியுண்மைப் போதித்துஞ் சாதித்தும் புனிதமிகு
சாதனைத் தன்னையெவ் விதத்தும் விடாது சற்குருசொல்
மேதகையாய் நின்று விளங்கு மெங்கணுமே விநாயகனே (388)

உயிர்க்கானி வருகினும் பொய்யொன்றைச் சொல்லா தொழித்துவுள்
மயிர்ப்பாலந் தாண்டி யதற்குள் மறைந்திருக்கு மணிகலையை [ளே
நயமுடன் கண்டு ஞானானந்தப் பரவச நன்மையினில்
வியன்பெறு பக்தி விளங்கு மெங்கணுமே விநாயகனே. (389)

கல்லாலுஞ் செம்பாலு மஞ்சள் விபூதி கனகத்தாலும்
புல்வளந் தழைதரு வெள்ளியெண் மலரறுகு பவளத்தாலும்
வில்லாலுஞ் சொல்லாலும் மண்ணாலும் பலவுரு விளைவித் தேத்தி
வெல்லா வினைவென்று விளங்கின ரெங்கணும் விநாயகனே. ()

கைமணக்கும் வாசங் கருத்து மணக்குங் கடவுட் புகழ்
ஐமணக்குங் கண்ட வப்போதே யளவிலா வானந்தத்தி
மெய்மணக்கு மிருதய விளக் கெரிய நெடி துணரின்
மெய்மணக்கும் பக்தி விளங்கின ரெங்கணும் விநாயகனே. (391)

தேவாரமுந் திருவாசகம் பன்னிருத் திருமுறைகட்
பாவாதீதப் பழம் பொருளென வுலகம் பலுகிடவு
நாவாரப் பாடி யாடினோர் நாடினோர் ஞான நிலை
மேவாப்போல் மேவிவிளங்கின ரெங்கணும் விநாயகனே. (392)

அழகாலப் பூசை வொருவேளை யுண்டி யாசரித்து
பெறுமைப் பூஷணமும் புலனைந்தும் படையலாய்ப் புகலரிய
யிறுமைக் கண்ணீர்க் காசி தீர்த்த மன்பே தூப மெனவளித்து
யிறுமையி லுட்பதி விலங்கின ரெங்கணும் விநாயகனே. (393)

வெண்ணீறு தன்னைக் கண்டபோதே தேக மிகு சிலிர்த்து
கண்ணாரக் காணுங் கடவுளை வந்ததாய்க் கருதி போற்றி
அண்ணா வெனவன்ன மளித்துண்ட வுச்சிட்ட மதைப்பொசித்து
விண்ணாட ரேத்த விளங்கின ரெங்கணும் விநாயகனே, (394)

பூசை யிளதவ னுண்பன மலமெனும் போதமதைப்
டாசைப் பசுவற பதிபுக நினைத்துப் பற்றுவிடா
வாசையெலாம் பர மானந்த மாமென வருட்குழைத்தி
மேசுக பக்தியால் விளங்கின ரெங்கணும் விநாயகனே. (395)

நிலையிற் பிரியா திருந்தென்றும் பெரியோர் நேசமுமெய்க்
கலைகட் பலவாய்ந் தடங்கியுள் ஞானக் கண்படைத்துத்
தலைவனுங் குருவை யடைந்துசத் சங்கந் தனையமைத்தி
விலகா தழைத்து விளங்கின ரெங்கணும் விநாயகனே, (396)

பண்டை வினையைப் பற்றற யெண்ணிப் பதிநிலையைக்
கண்டவ ருரைத்த முதுமொழி யேற்றுக் கருணையடித்
தெண்டனிட் டன்பரை சேவித்துத் திருப்பணி செய்து நலம்
விண்டு பக்தியினால் விளங்கின ரெங்கணும் விநாயகனே (397)

அக்கர நின்னுரு வட்சயமும் விழி யறிவதனிற்
தொக்கிய கலைபனி ரெண்டின் முடிவாஞ் சுழுச்சி சுகம்
பக்கியாய்ப் பறந்தவ னருந்தாச் சிவஞானப் பாலைமாந்தி
மிக்க பேராளராய் விளங்கின் ரெங்கணும் விநாயகனே. (398)

அசர சரங்க ளனைத்திலுந் தங்கி யாட்டுகின்ற
நிசரூபங் கண்டு நிட்டை புரிந்து நிர்ச்சிந்தையாய்க்
குசவன் றடிக்கார னிருவரைப் பார்த்துக் குணமடைந்து
விசயனைப் போல விளங்கின ரெங்கணும் விநாயகனே. (399)

பார்த்த தெலாஞ் சிவம் பணிந்ததெலாங் கோயில் பாபமதைத்
தீர்த்த தெலாநதி சிந்தை யெல்லா மன்பு திருவருளிற்
பூர்த்த தெலாம் புட்பம் புகழ்ந்த தெல்லாங்கவி புந்திநைந்து
வேர்த்த தெலாம் விரதம் விளங்கின ரெங்கணும் விநாயகனே.

பஞ்ச கௌவியத்தால் பன்னீர்வெண் ணீற்றால் பலபுட்பத்தால்
மஞ்சட் சந்தனத்தா லறுகுடன் வன்னி மந்தாரையாற்
கொஞ்சுங் கிள்ளைபோ லின்புடன் பூசையுங் குணம்படைந்து
விஞ்சும் புகழுடன் விளங்கின ரெங்கணும் விநாயகனே (401)

அடியவர் வேண்டும் பொருளெலாம் போற்றி யனுக்ரஹித்து
துடிதுடித் தேகண்ணீர்ச் சொரியப் பண்பாடித் தோத்திரித்து
நடித்து வானந்தக் கடலதில் மூழ்கியு நமனைவென்று
வெடித்தப்பூ மணம்போல் விளங்கின ரெங்கணும் விநாயகனே.

பாவங்கட் போக்கிப் பரகதி யளிக்கும் §பஞ்சாக்கரத்தை
யாவலாயோதி யறிவாந் தூபதீப மதைக்கொடுத்து
சேவைசெய் திலரைத் திருவெண்ணீ றணியாரைச் சேராமற் றனி
மேவிநற் பக்தியால் விளங்கின ரெங்கணும் விநாயகனே. (403)

பத்தராய்ப் பணிந்தும் பரமார்த்த நிலையினுட் படுந்துறங்கி
முத்தராய் முனிவராய் மோனத்தி லழுந்தியு மூவுலகுட்
சித்தராய் மகிமைகட் செய்துஞ் சேர்ந்தவர்ச்சிக்ஷைத் தெரிந்தபடி
வித்தகந் தந்தும் விளங்கின ரெங்கணும் விநாயகனே. (404)

அரனடி யவரை யாப்தரை நல்லோரை யந்தணரைத்
தரணிமே லிகழ்ந்தார்த் தமையாலைக் கழுவினுந் தலைப்பொடித்து
யிரவியிற் களங்க மாறுதென்றே நாவை யிழுத்தரிந்து
விரதங்கண் முடித்து விளங்கின ரெங்கணும் விநாயகனே. (405)

முப்போது மன்பாய்த் திருமேனித் தீண்டி முடிவணங்கி
அப்பாலுக் கப்பா லாரூதாரங்கடந் தந்தரங்கஞ்
செப்பரு ஞானப் பான்மாந்தி யுண்மைச் சிறப்பினராய்
விப்பிரர் போற்ற விளங்கின ரெங்கணும் விநாயகனே. (406)

ஆலயப் பணிவிடை யடியவர் சேவை யருளளிக்குங்
கோலவெண் ணீறுக் கண்மணி தாழ்வடங் குண்டலங்கட்
சீலஞ் சடைமுடி சிவமயத் தெளிவெனத் தெரிந்து வண்மை
வேலைபோ னடத்தி விளங்கின ரெங்கணும் விநாயகனே. (407)

எங்கோடி னும்பய னிலையென யிருந்த யிடத்தினிலே
தங்கி சிவானந்தன் றன்னைத் தனக்குளே சந்தித்தாழ்
மங்கி யணைந்திடுந் தீபம்போ லாக்கி மாதவத்தால்
வெங்கலி நீங்கி விளங்கின ரெங்கனும் விநாயகனே. (408)

சா துசங் கங்களுஞ் சத்கா ரியமுஞ்சன் மார்க்கமதை
யீத லெனுங்குணந் தன்னையா பரணமா யினிதணிந்து
போத முடன்குரு நெறிபூண் டுலகப் பொய்யகன்று
மேதகையாளர் விளங்கின ரெங்கணும் விநாயகனே. (409)

நாத மொலித்திடும் பூரி சிலம்பு கடனபத
மேதகு டமரக் மணிதாளங் கைக்குடா வியன் சங்குடன்
காதன் மிகும்பேரி யிவைதனுட் கேட்டுக் கடவுளராய்
வேதம்போற் றீர்த்தி விளங்கினரெங்கணும் விநாயகனே (410)

§ பஞ்சாக்கரத்தைப்பற்றியது. (நிஷ்ட்டானுபூதி)

——*——

"நகரமொடு மகரமது சடங்குருங் காரணமா நாடுமவை நீங்கியிடு வகையைய நவிலுதுங்கேள், வகரமதி னகரமுதல் யகரத்திற்றுனே மகாமு நீங்கிடுமரிய சிகரமனு தன்னால், யகரலயம் வகாமுந்தான் சிகரத்திலொடுக்க மாகுமிறை நீங்கவுயிர் முத்தியெய்து மென்றே, தகாநறுங் கரியகுழ னகமாதுக்கிறைவன் றனது திரு வுளமகிழ்ந்து சாற்றினனன் குணர்ந்தே"

பிருதுவிதத்துவமாய்க் கந்தவிஷயமாய், வெண்ணிறமாய்ப் பூயிமய மாய், நிவர்த்திநிலையாய்ச் சத்தியோஜாதமாய்க் கர்மசாதாக்கியமாய், நான்

முகரூபமாய்ச் சிருஷ்டியைத் தருகின்ற மறைப்பையுடைய திரையக்ஷர மாகிய நகாரத்துடனே, அப்புதத்துவமாய் ரசவிஷயமாய்க் கருநிறமாய் சலமயமாய்ப் பிரதிஷ்டாகலையாய், வாமதேவமாய்க் கர்த்துரு சாதாக்கிய மாய் விஷ்ணுரூபமாய்த் திதியைத்தருகின்ற மயக்கத்தையுடைய மலாக்ஷர மாகிய மகாரமானது ஆன்மாக்களுக்குத் தேகத்தைக் கொடுப்பதற்கேது வாய்த்தோன்றும், தியானிப்பதற்குரிய இவ்விரண்டக்ஷரங்களும் சொல்லு கிறேன் கேட்பாயாக,

வாயுதத்துவமாய்ப் பரிசவிஷயமாய்ப் புகைநிறமாய்க் காற்றுமயமாய் சாந்திகலையாய்த் தற்புருஷமாய், அமூர்த்திசாதாக்கியமாய், மகேஸ்வர ரூபமாய் திரோபவத்தைத்தருகின்ற சத்திவடிவத்தையுடைய பரையக்ஷர மாகிய வகாரத்திலே முதலிற்சொல்லிய நகாரமும், ஆகாயதத்துவமாய்ச் சத்தவிஷயமாய், நீலநிறமாய்ச் சுத்தவெளியாய்ச் சாந்தியாதீதகலையாய் ஈசானமாய்ச் சிவசாதாக்கியமாய்ச் சதாசிவரூபமாய் அநுக்ரஹத்தைத் தரு கின்ற சிவவடிவத்தையுடைய சீவாக்ஷரமாகிய யகாரத்திலே மகாரமும் ஒடுங்கும். அருமையாகிய தேயுதத்துவமாய் ரூபவிஷயமாய்ச் சிவந்தநிற மாய் அக்கினிமயமாய், வித்தியாகலையாய், அகோரமாய், மூர்த்திசாதாக் கியமாய், உருத்திரசொரூபமாய், சம்மாரத்தைத் தரும் ஞானசூரியப்பிர காசத்தையுடைய பதியக்ஷரமாகிய, சிகாரமந்திரத்தினாலே யகாரம லயத் தையடையும்.

மேற்கூறிய (பதியக்ஷரமாகிய) சிகாரத்திலே வகாரமும் ஒடுக்கமாகும் அந்தப்பதியக்ஷரந் தானேயொடுக்கச் சீவன்முத்தி வருமென்று மயிர்ச் சாந்தையணிந்த வாசனைப்பொருந்திய கறுத்தக்கூந்தலையுடைய உமைத் துப் பரமசிவனார் தமது திருவுளங் களிகூர்ந்து செவ்வையாக அநுக் ரஹஞ்செய்தார்.

### திருப்புலியூர் வெண்பா.

பத்தரைக்கொண் டேபேசா பாவைதனைப் பேசுவித்தும்
புத்தரையாட் கொள்ளும் புலியூரே—முத்திதரும்
பஞ்சாக் கரனார் பணிவார் வினையகலப்
பஞ்சாக் கரனார்—பதி.

மூலம் ஸ்ரீ நடேசமூர்த்தியின் திருமேனி சிவசத்தியான ஞானதேகம் துடிக்கை சிகரம் வீசுகை வகரம் அபையகரம் யகரம் மழுக்கை நகரம் ஊன்றியதாள் மகரம் இது ஆகமபஞ்சாக்கரம்.

• வேதபஞ்சாக்கரமாவது:—நாடுந்திருவடி நகரம்மகரம் வளர்தோள் சிகரம் திருமுகம் வகரம் அபையகரம் யகரம் வேதாகமசமநிலை நடேச

மூர்த்திரூபம். ரூபாரூபம் ரகசியம், சோதிமயம், சிதாகாயம், இந்தரூபாரூபம் சிவசிதம்பரம், நடேசருடைய பஞ்சகிருத்திய தெரிசனமாவது துடிக்கை சிருட்டி, அபையகரம் திதி, மழுக்கை சங்காரம், ஊன்றிய தாள் திரோதானம், குஞ்சிதபாதம் அனுக்கிரகம், திருவாசி ஓங்காரம் பஞ்சாக்கர திருத்தவனுபூதி, ஏகரசமான அன்பே தெரிசனம்.

### சந்நிதிமுறை காப்புப்பருவம்.

### பஞ்சாட்சரம்.

“ கருதரிய பலவுயிர்கட் பந்தனைக் கார்க்கடற் கரையிவர வருகலனை யன்பருட் காட்சியை, யருமறையு மறிவரிய வஞ்சுகப் பேற்றினை யரிய சிவனுரிய பெயரைந்தினைப் போற்றுதுங், குரவுகமழ் குறவனிதைகொண் கனைக் கார்த்திகை குடமுலையி னமுதகட லுண்டகத் தேக்கலைத், தருண குமரனையினிய தண்டலைச் சீர்ப்பொலி சமரபுரி தனினிலவு கந்தனைக் காக்கவே ”

—※—

## பதிநான்காவது

## பக்தியாற்சனைப் பற்றொழிகதி நிலை.

—§—

சந்ததம் வந்தனைச் செய்துக் கண்ணீர்விட்டுத் தானழுது
பந்தம தாற்படும் பாடுகளனைத்தும் பாட்டிசைத்து
சிந்தைநொந் தேமிக வயர்ந்தே னியாவுந் தெரிந்தனை நீ
விந்தைசூழ் பக்திதந் தாலினிப் பிறவேன் விநாயகனே. (411)

கயமுகா சூரனெனு மூஷிகன்மேல் கருணைவைத்து
செயசெய வென்றண்ட ரன்பர்த் தொழவூர்ந்துத் திருவடியி
னயமளித் தாயுன்ற னுமத்தைப் பூசிக்கு நாயினுக்கு
வியன்மலி பக்திதந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (412)

எண்ணிய வெண்ண மெலாந்தெரிந் தாட்கொளு மிபமுகனே
கண்ணின் மணியே கைநிறைப் பொருளே காரணமே
விண்ணி னொளியே வேதங்கட் கரிய வித்தகனே
வெண்ணீறும் பக்திதந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (413)

தஞ்சங் கொடுக்குந் தயாநிதியே ஞானத் தற்பரனே
வஞ்ச மனக்குரங்கான் மறந்தேனெங்ஙன் வாழ்வடைவேன்

குஞ்சித பாதமருட் செயும் புண்ணியக் குஞ்சரமே
விஞ்சையும் பக்தி தந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (414)

உபரதி வைராக்கிய முத்தர்க் கனந்த வுபாசனையின்
றபத்தினுக் கேற்றப் பலமூர்த்த மாகத் தழைத்தவனே
அபத்தமிலாச் செயலுஞ் சிந்தையோடுண்மை யன்பரன்பும்
விபூதனே பக்திதந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (415)

எல்லாங்கடந்த மறைப்பிழம்பே மாமஹேச்சுரனு
ருல்லாசப் பார்வைத் தனின்வந்த வோங்கார வுயர்வடிவே
பொல்லா தவரைவர் சேட்டையும் வினையும் பொய்மயக்கம்
வெல்லும் பக்திதந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (416)

கனக மகாமலையே சிவஞானக் கண்மணியே
தினகரோ தயச்சுடரே செல்வமே மெய்த் திருவுளமே
சனகன்மு னைபோற் றேன்றியே போதித்தசற்குருவே
வினவிய பக்திதந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (417)

தஞ்சமென் றேத்திச் சந்ததம் போற்றுந் தகையடிய
ரஞ்சில ரைந்தையொன் றாக்கி குண்டலிக்கு ளருவுருவின்
குஞ்சிதப் பாத நிழலண்டிக் கும்பிட்டுக் குறையகன்றா
மிஞ்சிடும் பக்தி தந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (418)

அடைக்கல மென்று வந்தித்து முன்னே ரருளடைந்தா
ருடைக்கலந் தன்னைச் சுமந்து சோறூட்டி வுலுத்தனனே
படைக்கலமா யெமன் பற்றுமு னுன்சீர்ப் புதமுமெழின்
விடைக்கல பக்திதந்தா லினிப்பிறவேன் விநாயகனே, (419)

பரமசந் தோஷ வாக்கியமே சர்வப் பாக்கியமே
பிரணவ மாமஹா மந்திரமே பொல்லாப் பிள்ளையரே
கரதலாக் கமலம் போலியாவுங் கண்டுட் கலந்தவனே
விரதமாம் பக்தி தந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (420)

சாற்றிடு மாகமப் புராணச் சுருதி சாற்றுவபோல்
வீற்றிருந் தியாவினு மரசசெய் தருட்டுரும் விமலனெனப்
போற்றிடும் வரமடி யவர்க்கேண்மைப் புண்ணியப் போதநிறை
வேற்றிடும் பக்தி தந்தா லினிப்பிறவேன் விநாயகனே. (421)

* பன்னிருத் திருமுறை யதிலன்பு முண்மை பயங்கரத்தோ
டென்றும் பாராயணஞ் செய்பவ ருளத்தி லினிதுநடந்

தன்னைப் புரிந்தருட் சங்கரனுர்மகிழ்த் தந்திமுகா
வின்னமில் பக்திதந்தா வினிப்பிறவேன் விநாயகனே. (422)

*பன்னிருந்திருமுறை :—சமையாசாரியர்களாகிய, திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், இவர்களருளிய தேவாரமாகிய (ஏழு திருமுறை) மாணிக்கவாசக சுவாமிகளருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் (எட்டாந்திருமுறை) சேந்தனுர் முதலிய ஒன்பதின்பர் செய்தருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டும், (ஒன்பதாந்திருமுறை) திருமூலநாயனுரருளிய திருமந்திரம் (பத்தாந்திருமுறை) திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், நக்கீரர், கபிலர், பாணர், சேரமான்பெருமான்நாயனுர், பட்டினத்துப்பிள்ளையார், நம்பியாண்டார் நம்பிகள் முதலியவரருளியவை (பதினோராந்திருமுறை) சேக்கிழார் சுவாமிகள் செய்தருளிய பெரியபுராணம் (பன்னிரண்டாந் திருமுறை) என்பதாம். பரமசிவனுரருளிய வேதங்களும், இருபத்தெட்டு சிவாகமங்களாகிய முதனூல்களும், தமிழிலிவைத் தழுவியது.

—*—

மடைத்திறந் தோடும் வெள்ளமெனக் கண்ணீர் வடிந்துமன
மிடைந்திடா வண்ண மொருநிலையாகி யேத்திதொழாக்
கடையவ னென்றெண்ணிக் கைவிடவேண்டாங் கணேச்சுரனே
மிடிதீரும் பக்திதந்தா வினிப்பிறவேன் விநாயகனே. (423)

சாதனை யன்றிச் சாதிப்பதொன்றிலைத் தரணியிலென்
றோதிடுங் கைவல் யத்தின் றிருமொழி யுணர்ந்தவர்கட்
பேதித்திடுமன வழிச்சென் றுன் றுள்விட்டுப் பிரிகுவரோ?
வேதைதீர் பக்திதந்தா வினிப்பிறவேன் விநாயகனே. (424)

எல்லா நினதுச் செயலென் றெண்ணி யேத்தி தொழாப்
பொல்லா தவன்கலைக் கல்லாதவன் விதிப் போக்குநெறி
நில்லா தவனுண்மைச் சொல்லாதலையு நீச்சன்வினை
வெல்லுன்ன் பக்திதந்தா வினிப்பிறவேன் விநாயகனே. (425)

ஒழிந்திடுமோ சன்ம மோடிடுமோ வுயிரோரிடத்தி
லழிந்திடுமோ வகலாதுப்பின் னேர்கடந் தடைந்திடுமோ
கொழுந்துவிட் டெரியுந் தீமரகந்தனைக் கொடுத்திடுமோ
விழுந்தெழா பக்திதந்தா வினிப்பிறவேன் விநாயகனே. (426)

இருந்த விடத்தைவிட் டெங்கும் போகாது னெழிலடியிற்
பொருந்தி யெஞ்ஞான்றும் வாழ்கின் றவருண்மலர்ப் பூத்திடுமோ?
வருந்தி வருந்திய நெஞ்சமேழைத்துயர் மாற்றமுத்தி
விருந்தாகும் பக்திதந்தா வினிப்பிறவேன் விநாயகனே. (427)

## பதினைந்தாவது.

## உள்ளதையுணர்த்து முத்தமகதி நிலை.

---

சத்திய வந்தனை யுலகெலாம் போற்றுஞ் சரணடையும்
மித்திரனென்று யாவருஞ் சேருவர் வினைமிகும் பொய்க்
குத்திரமுங் கொலைக் கோட்பகை யகலுங் குணந்தழைக்கும்
வித்தின் பயனென மேலோருரைப்பர் விநாயகனே. (428)

பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிரெனப் போதித்தநூ
லெல்லவரும் படித்தார்க ளென்கினுமவ் வெழின்மொழியை
நல்லாருணர்ந்தசந் நெறிநின்று பக்தியு ஞானமுற்றோர்
மெல்ல நினைக்கின் விவேக சூட்சியமே விநாயகனே. (429)

இச்சை யெழுந்துப் பலவாய் நடித்து யிருகடலில்
மச்சமலைக்குட் படும்பாடுக் கொண்டு மயங்கிடினே
சொச்சொரு பந்தனைக் கண்டிடலாமோ துகணிலையை
மெச்சுவ தியாரே யுள்ளதைக் கெடுத்தால் விநாயகனே. (430)

கனங்கெட்டுப் போனார்க் காலத்தைப்போலக் கௌரவமு
மினங்கெட்டுப் போனா லவைக்கேற்றவகையி லேந்திக்கொள்வர்
மனங்கெட்டுப் போனா லியாரிதை மாற்ற வல்லவர்காண்
வினைக்கெட்டப் பின்னே பிறப்பற்றுப்போகும் விநாயகனே. ()

நித்திரை வந்திடி லெண்ணமுஞ் செய்கையும் நின்றுவிடுஞ்
சத்துரு வந்திடிற் றன்னைமறந்துசஞ் சலமுறுவர்ப்
பித்து மிகுந்திடி லியாதொன்றின் மேலும் பிரியம்வரா
வித்தை மிகுந்திடின் வினைவழி யடைப்பன் விநாயகனே. (432)

கடித்தநாய்த் தன்னைக் கடித்தவரா ரதைக் காண்பவரா
ரடித்த வடியத னேய்மா றினுங்காய மதுமறையா
குடித்தவை யேப்பத்தில் வருமென லனுபவங் கொடுந்துயர்செய்
மிடிக்கு மறைவதே வித்தகர் சிறப்பாம் விநாயகனே (433)

அற்புதக் கற்பனைப் பொற்புயர்ச் செயலுக் காட்பட்டவர்
தற்பரஞ் சோதி சுகாரம்ப வாழ்விற் றுன்கலந்தார்
சொற்பக் குணத்தினர் தவம்பக்தி ஞானத் தூய்மையிலார்
விற்பனர்க் கன்றே சிவஞானந் தேக்கும் விநாயகனே. (434)

தவத்தளவே வந்து வாய்ப்பதல்லான் வேறு சார்வதிலைப்
பவத்தளவே வுண்டு மாய்வதந்தோ யிந்தப் பாழுடலுஞ்
சிவத்தளவேசீவ னின்றிடு மோய்ந்திடுஞ் சித்தியெட்டும்
விவகாரம் போலக் கண்டனர் முன்னோர் விநாயகனே. (435)

எள்ளுக்கு ளெண்ணெ யிருப்பதைப் போலெங்கு மிலகுபவா
கள்ள மனத்துடை யேன்சொல்லும் வாய்மொழிக் கண்டனைநீ
வுள்ளது வுள்ளப் படியாகுமாறு தொருவினையும்
வெள்ளுள்ளி நாற்றம் பன்னீரிற் போமோ விநாயகனே. (436)

வந்தது தேகம் விந்தின் கூற்று வளர்ப்பிறையாய்த்
தந்தது யின்பந் தழைத்தன வாழ்க்கை தடித்துவுள்
நொந்தது பொய்யை யுவன்றது முடிவாய் நொடிப்பொழுதில்
வெந்ததுத் தீயில் விலகின சீவன் விநாயகனே. (437)

ஆடிக் கயிற்றி லசைவது போல்வினை யாற்சனனம்
வாடிக்கை யாய்வந்து மாய்கின்றதாலுளம் வாடினதே
பாடிப் படித்தறஞ் செய்து முத்திப் பெற்றார்ப் பற்றற்றவர்
வேடிக்கையும் பகட்டும் வேண்டிலரே விநாயகனே. (438)

சொந்தமு மன்னிய மென்ப தெலாமனத் தோற்றமதே
யெந்த வகைக்கிவைத் துணையாகுமென்று யெண்ணிடினே
சிந்தை யயர்ந்து சீவனடங்கி தேகமது
வெந்து மடிந்தப்பின் விரதமெங் குண்டு விநாயகனே. (439)

எண்ணிய வெண்ண மதுவே வவரவ ரெதிரினிலே
நண்ணிடு மன்றி வேறொரு வத்துவு நாடிடுமோ
பண்ணியப் பயிராற் புண்ணியந் தெரியும் பயன்றருகும்
விண்ணினு மண்ணினும் வித்தின் விளைவே விநாயகனே. (440)

தேவர்க ளாகினுஞ் சீவர்க ளாகினுமுன் செய்ததவப்
பாவனை யானதே வந்து பலித்திடும் பறைவதிலென்
காவன மொன்றே மலர்க்கனி சுவைபலக் காண்பதுவே
மேவரிதாம் பொருண் விரதத்தா லடைவர் விநாயகனே. (441)

அனலதில் விழுந்த வுயிர்ப்பிழைத் திடுவ தாச்சரியம்
மனையதுக் காய்ந்தான் மெழுகிக் குடிப்புகல் வழக்கமுண்டு
மனமது நழுவி லவையொரு நிலைவர வலியுளதோ
வினையை விதைத்தவன் வேறென் னருப்பான் விநாயகனே. ()

தேங்காய்த் தனையுடைத் தப்பின்னர்க் குடுமியைத் தேடுவாரியார்
பாங்குள ஞானப் பாலுண்டார்க் குலகப் பற்றுளவோ
தூங்காமற் றூங்கிச் சுழுச்சியி னின்பஞ் சூழ்ந்தவரை
வேங்கை நிகர்க்கலி வேட்கையென் செய்யும் விநாயகனே. ()

கற்றவ ரியாரன்னைத் தந்தையைக் குருவைக் கனஞ்செயுஞ்சீர்ப்
பெற்றவ ரியார்ச்செல்வங் குன்றினு நிமைப்பிரி யாதவரியா
ருற்றவ ரியார்த்தமை யறிந்தவர்க் காபத்தி லுடலுயிரை
விற்றவ ரியார்த்தெரியே னியாவுந் தெரிவாய் விநாயகனே. (444)

இடுகின் றவனவ னிட்டே யிருப்ப னென்வரினுஞ்
சுடுகின் றவனவன் சுட்டே யிருப்பன் சுகதுக்கத்தை
நடுகின் றவனவ னட்டே யிருப்ப னவில் மும்மலம்
விடுகின் றவனவன் விட்டே யிருப்பன் விநாயகனே. (445)

தகுந்த விசாரணை யிருந்த யிடத்தினிற் சங்கைகட் போம்
வெகுநா ளுழைத்தப் பலனொரு நிமையில் விளங்கிடுங்காண்
சொகுசுள நடையுடைப் பாவனை யெல்லாந் தொலைந்துவிடும்
விகற்ப சிந்தைக்குள் விஞ்சை யுண்டாமோ விநாயகனே. (446)

சுகதுக்க மொன்றெனச் சொல்லலா மவ்வணஞ் சொன்னவர்க
ளிகலின்றி யவ்வழி நிற்பதாய்க் கண்டா லிகழ்ச்சியிலை
புகலலாஞ்செய்வ தரிதெனும் பெரியோர்ச்சொல் பூரணமே
மிகபடக் கூறிடின் வெகுளியே சொந்தம் விநாயகனே. (447)

ஒழியுநாள் வந்தா லென்னென்னவோபல வுருவினைகட்
செழித்துயிர் நீங்க வுடலைப் பிணமாய்ச் செய்துவிட்டுப்
பழியோ பவமோ புகழோ யிகழோ பாடையின்பின்
விழிநோக்க லின்றி யுடன்செல்லு மென்றார் விநாயகனே. (448)

கோடியி லொருவ ராயிரத் தினிலொருவர் குருமொழியை
நாடியே வுழைத்து நம்பனென் றிறுதிவரை நம்பிநின்றக்
கூடியே நன்மை யடைதலனுபவங் குணங்கொளார்கண்
வேடிக்கையும் பெருமை வேண்டியறிவர் விநாயகனே. (449)

சமய நெறியிலார் றனக்கொரு மார்க்கமுஞ் சாதனையேன்
சமரச மான சுக ஞான நிலையுளார்ச் சம்மதியார்
கமழ்மண மில்லா மலரதுப் பூத்தென்னக் காரியமோ?
விமல மனத்துளே விளங்கிடு முண்மை விநாயகனே. (450)

—— * ——

## பதினாறுவது
## சிந்தித்துழைக்கினுஞ் சித்தியாகதி நிலை.

செட்டைக்கு ளடங்கியப் பறவைப் பெரிதாய்த் திறமுற்றபின்
வட்டமிட்டே வெளிச் செல்வ தனுபவம் வழக்கமிதுப்
பட்டம்பகலைப் போற்றெரி யாதெவர்ப் பயன்றருகும்
மெட்டுடைந்தால் வீணைப் பேசுதற்காமோ விநாயகனே. (451)

ஒன்றேனு நன்மைத் திருஞ்செய்கைச் செய்யா தோடியாடிப்
பன்றியைப் போலுறு மிப்பல காரியம் பரப்பிடிலென்
நன்றித் தருமென நம்பியுழைத்தவர் நட்டமுற்றார்
வென்றிடுங் கொன்றிடும் வேலெமன்றானே விநாயகனே. (452)

உலகம் பலவித மென்றுரைத் தனைவரு மொதுங்கிநிற்பர்
நலம்பொல மின்னவர் பாலுளொன் றக்காண ஞானமிலை
அலகதி னாலம்சப் பட்சியுஞ் சலம்பிரித் தமிர்தமுண்ணும்
விலகிய வுயிர்க்கு வேழ்வியென் செய்யும் விநாயகனே. (453)

சபலமதாகி மனங்கெட்டு வாடித் தயங்கும்படி
வுபகாரஞ் செய்ததற் கபகாரம் பலர்காண வுதிப்பதினா
வபிதானமற்று மவதான முற்றப்பி னழிந்ததெலாம்
விபரீதம் பேசிடின் மெய்யெவர்த் தெரிவர் விநாயகனே. (454)

தானாய்க் கனிந்தப் பழச்சுவையே சுவைத் தருந்ததென்பர்
வானாட ரென்கினு மாதவ ரென்கினு மறப்பதிலை
ஆனாலுந் தீமைக்கு நன்மை விளைவ தாச்சரியம்
மேனாளிற் செய்ததோ சேர்க்கையோ மதியோ விநாயகனே (455)

முன்னோர்கட் செய்த நற்றிருச்செயலை முரண்படுத்திப்
பின்னொன் றுச் செய்க வெண்ணிடு மெண்ணம் பிசகலவோ?
கன்னலங் கனியுஞ் சர்க்கரைக் கசக்குமோ கருதுவரார்
மின்னலென்றாலு மொளி சுதந்தரமே விநாயகனே. (456)

கரடக வஞ்ச மனத்துளன் பார்வையில் கண்ணைமறைத்
தரஹர சிவசிவ யெனைத் தொடாதே தூர மகலுமென
பிரமிக்கச் சொல்லினுஞ் சூதறிந்தோரிதைப் பின்பற்றிலார்
விரத மிருந்திடின் வினைத்தானே கொல்லும் விநாயகனே. (457)

பழநீ யெனவெடுத்தே பெரசித்தார்கட் பசியகன்றூர்
கழகந் தனிலாடு மாய்மால வித்தையைக் காட்டினர்க்கு
முழக்கை யாழாக்கு யெனச்சொலி யேயப்பவர்க்குழைத்ததெலாம்
விழலுக்கு முத்துலைக் கட்டின நீலையே விநாயகனே. (458)

அயனன்று சிருட்டிக் காலத்திலே வந்த வசுரர்களாற்
றயருற்று யேத்தித்தொழநன்மைத் தந்தத் தும்பிமுகா
உயரப் பறக்கினூர்க் குருவிப் பருந்தாகா துண்மையிலான்
வியன்மிகு பக்தியும் பணியும் வீண்தானே விநாயகனே. (459)

ஆசைக் குகந்தப் படியெலாம் வாய்ஞான மரைவதுபோற்
காசிக்கும் ராமே சுரத்திற்குமோடிக் கலங்குவீர்காண்
பாசையு ணுழைந்துப் பழிச்செய்தோன் ஞானம் பற்றுவனோ
மீசை வழித்தென்ன வேட்கை நீங்கிடுமோ விநாயகனே. (460)

நேசமிகுந்துப் பணிச்செய் தணிவது நிசமெனினும்
மாசற விற்றுக் கடனை யொழிப்பது வழக்கமதே
மோசக் குணமுள மூர்க்கரை வெறுப்பது முறைமையன்றோ?
வேசையைப் போன்ற மினுக்கரவ்வணமே விநாயகனே. (461)

உண்மை யிலார்க்கு வொருகோடிச் சாத்திர மோதியென்ன
யெண்ணியே செய்த நன்மையெலாம் பாழ்பட் டேகிடினே
கண்ணியங் கௌரவம் வேண்டி யுழைத்திடிற் கார்யமிலை
விண்ணுக்குமண்ணுக்கும் விமலநீ யறிவாய்விநாயகனே. (462)

சத்தியந் தன்னைக் கடந்து நடந்திடுந் தகையினரை
வுத்தம பத்தர்க ளூறவதுக் கொள்ள வொப்புவரோ
மித்திரர்ச் சத்துரு வானப்பி னன்மை விளைந்திடுமோ
வித்தக முத்தர்கண் வெறுத்தன ருண்மை விநாயகனே. (463)

தனங்கல்வி மேன்மை படைத்தன ரென்கினுந் தன்மமதை
மனமுற வழுவி நிற்பவரை நல்லோர் வாஞ்சிப்பரோ
தனக்குடம் படைத்தோ ராயினு மிதனைத் தான்சகியார்
வினைப்பழுந் திடுமலான் சித்திக ளின்றே விநாயகனே. (464)

கோவிலுங் குருவுங் கும்பிடுங் குலவிடுங் குணம்படைத்தோர்ப்
பாவிக்க வேண்டியப் படிப்படிப் பிடித்துப் பயனடைவர்
ஆவிக்கு நஷ்டமாய்க் கூவியழைக்கினு மற்பருன்னூர்
மேவரிதாகிய சிவஞானந் தன்னை விநாயகனே. (465)

ஆதவன் முன்ன மகப்பட்ட பொருட்க ளனைவயழியும்
போதனை கட்பல வாய்க்கினும் பூரியர்ப் போற்றுவரோ
காதக நெஞ்ச முடையவர் வாஞ்சையுங் கட்டுடையும்
வேதந் தெரியான் சிலைறப்பட்டானன்றோ விநாயகனே. (466)

பலநாட் பழகினு முழைக்கினுந் தீக்குணம் பயன்றருகா
தலவென்று வலிய வடைகினுந் துக்க மனுபவமே
கலகக் குருவித்தன் னினமென்கினும்பார்த்துக் கண்ணைக்குத்தும்
விலகினும் பின்வந்து சேர்ந்துக் கெடுக்கும் விநாயகனே. (467)

பெருந்தடித் தேவர்ச் சிறியப்பாம்பெனினும் பீதியினு
லருங்குணத் தோரு மற்பருக் கஞ்சுவ ரருள்வழிபோற்
கருங்குழித் தாண்டப் பணிபுரிந்தோரதைக் கையகன்று
வெருவல ஞனற் சித்தி யெவ்விடமோ விநாயகனே. (468)

கூலிக்கு வேடமெடுப்பார் தமைப்போன்றக் கொள்கையரின்
சோலித்தனை விட்டுத் தனியாகிப் பெரியோர்ச் சுகமடைந்தார்
வாலிகைப் பட்ட யிடமெலாம் நாசமிதை மாற்றுவரார்
வேலியை வெட்டிடிற் பயிரோங்கிவிளையுமோ விநாயகனே. (469)

ஏசிபிடும்படி போதிப்பவர்க ளெங்கு மில்லைப்
பூசிப்பதும் பொய்யை நீக்கலும் பூர்வப் புண்ணியமே
மாசிப்படர்ந்த மனத்திலுண் ஞானம் வளர்ந்திடுமோ
வீசிய வாள்பட்ட வுயிர்ப்பிழைத் திடுமோ விநாயகனே. (470)

வேதாகமப் புராணேதி காசங்கண் மெய்த்தவமுஞ்
சாதனையோடு சன்மார்க்கமுஞ் சாயுஜ்யந் தரும்
பேதமனத்தினி லீசன் றங்குவனே பேசுவனே
வேதை மலிந்திடின் சுகமெப்படிவரும் விநாயகனே. (471)

மீசையுள் ளாண்பிள்ளைச் சிங்கங்கள் வெளிவரல் வேண்டுமென
தேசிகனுகிய மௌனக் குரங்குடிச் செப்பியதென்
பாசமகன்ற மனத்துளரே யிதன் பயனடைவர்
வீசையில் லாமல் மணங்கெங்கு னுண்டாம் விநாயகனே. (472)

அண்டி பிழைத்தோர்மே தாவியர்ப் பார்வையா லரசடைவர்ச்
கண்டுத் தெளிந்த மஹான்கட் சுருதியிற் காட்டிவிட்டார்
மண்டை யதைப்புடைத்துக் கொளினு முண்மை வசப்படுமோ
விண்டு லிங்கப்பூசைச் செய்தன ரன்றோ விநாயகனே. (473)

புராதனக் காரியந் தன்னையோர் மூலையில் போட்டுவிட்டுத்
தராதலம் போற்ற வேறொரு கன்மத்தைத் தான்முடிப்போன்
சராசரியாயிடைக் காட்டினுந் தக்கவர் சம்மதியார்
விராலி மலைமேன் மூடவ னேறவனோ விநாயகனே. (474)

கோணமற் காணிக் கொடுத்தலே நன்மைக் குற்றமில்லை
ஆணெனும் பெண்ணெனு மின்ப மனுபவித்துப்
பூணாதுப் பூண்டு வுண்ணாது வுண்டும் புகழிலையேல்
வீணாரவார முடிவில் மித்லைதயதே விநாயகனே. (475)

மனைமக்கட் சுற்றம் வைதிடுமோய வாழ்க்கையினில்
வினைமுகத் தோடு வலைவதினா லென்ன மேன்மையதோ
பனைமுகத் திற்காய்த்தக் காயுருளும் வண்ணம் பதைப்பதைத்து
மினுக்குற்ற தெல்லா மையகோ விறுதா விநாயகனே. (476)

---

## பதினேழாவது
## நீங்காப்பழியு ணிலைப்படுகதி நிலை.

---

மெய்யின்ன தென்று வனுபவத்திற் கண்ட விழுமியர்கட்
பொய்யான தீச்செயல் பொருந்துவரோ வீணர்ப் போற்றுவர்காண்
தெய்வமே சிறின் கைதவமாளு மெனுந் திறத்தை
மெய்யென்றுக் கொள்ளார் விழுவார் நரகில் விநாயகனே. (477)

நல்லோரை யேசிச் சிவனடியாரை நங்குச்செய்து
யெல்லாந் தெரிந்து யேப்பமிட்டோமென யெண்ணிக் கொண்டு
பொல்லாச் செயலுக்குப் பொருடந்துப் பாபத்திற் பொங்கினவர்
வெல்லார் வினையை விழுவார் நரகில் விநாயகனே. (478)

தவத்தினர் பெரியோர் குருதந்தைத் தாயின் சாபமது
உவரி சலத்தின் குணமாறு வண்ண மூழனுகும்
அவசரக் காரன் புத்திமட் டவன்வீ டருநரகே
விவகாரம் பேசில் தனைவிட்டுப் போமோ விநாயகனே. (479)

அருமை யறிந்தோ ரிடம்பெறு மரைக்காசு மாயிரம்போ
லொருமனப் பாடே னன்பு செய்தாரே வுறவினர்காண்
திருப்பணி புரிந்தோர் தேவராணாதற்குத் தீமைச்செயின்
விருதை யொடித்து நரகில் விடுக்கும் விநாயகனே. (480)

இடுகின் றவன்சதா யிட்டு மகிழ்வா னிடாதவனைக்
கொடுகொடு வென்றுப் பலகால் கும்பிடினுங் கொடுப்பதில்லை
அடுத்தவரைக் கெடுத்தோன் கொண்ட சாபத்திற் களவுளதோ
விடுத்தாலும் நரகை விடுபடா தொழிவான் விநாயகனே. (481)

தன்பழியை யுணரான் பிறரின்பழி சாற்றுவதுங்
கன்ம தன்மநூல் படித்து மறிவற்றுக் கலங்குவதுந்
துன்மந் திரியா லரசனின் கீர்த்தித் தொலைவதுபோல்
மின்னுக் கெலாம்பின் மழைபோலாஞ் சாபம் விநாயகனே ()

பஞ்சத்தி னுண்டிப் பரம்பரை யாண்டிப் பாரிலுண்டு
தஞ்சங் கொடுத்தாரைத் தலைவெட்ட வெண்ணிய சாபமது
மிஞ்ஞையாய் வான்கோழி நடித்தாலுந் தீவினை மறைவதில்லை
விஞ்சை யுளார்க்கிந்த வுண்மை விளங்கும் விநாயகனே. (483)

அருளாள ருன்ற ஞசீரைப் பெற்று வானந்த முற்றூர்
மருளால் மயங்கித் தலைதெரியா துன் மார்க்கமதான்
பொருளால் கர்வித்து நல்லோர்கட் சாபமாம் புயலதர்க்கு
விருந்தானப் பின்பு சுகபோகம் பொய்யே விநாயகனே. (484)

நல்லோர்க ளென்னு நின்னடி யாரை நங்கு சொல்லி
பொல்லாச் செயலுட னில்லா தசைச்சூட்டிப் புறங்கூறியே
வல்லாண்மை யாய்க்கொண்ட மஹனியர் சாபம் மறைந்திடுமோ
வில்லம்பு மாறுஞ் சொல்லம்பு மாறு விநாயகனே. (485)

மீசை முறுக்கினென் மெய்ஞ்ஞானம் பேசினென் மிருகங்கர்ப்
பாசமுற்றே யிறுமாந்துக் குரைத்துமென் பாபமிகு
மோசக் குணத்தினுல் முன்பினறியாது மூடமாய்து
வேசஞ் செயில்வினை விட்டொழிந் திடுமோ விநாயகனே (486)

கைவிட் டொழிந்தப் பொருள்வரக் கசிந்துக் கசிந்து வுள்ளம்
வையகம் விட்டு வான்செல் கினுமது வாய்த்திடுமோ
பொய்சத் தியன்காசி ராமேச் சுரஞ்சென்றேன் போற்றியுமென்
வெய்யக் குணத்தன் பழிநீங் குவதில்லை விநாயகனே. (487)

ஆடாதுமாடி யவிசாரியான வறிவிலனைப்
பாடாதும் பாடின் பவிசுளதோ வதன் பய னுணரான்
கோடாரிக் காம்புக் குலத்தைக் கெடுக்குங் குணமதென
மேடேறி னும்வினைத் தொடர்ந்தவண் கொல்லும் விநாயகனே.

கத்தபங் குங்கிலி யஞ்சுமந்தேகைலைக் கதியடைய
யெத்தவஞ் செய்தனவோ வென்று வன்பரேத்தினரே
சத்தியங் கைவிட்டு சாபந் தலைக்கொண்டோன் றமதுப்பொய்
மெத்த வேதனையுடன் வினைப்பட்டழிவான் விநாயகனே (489)

வாய்ஞானம் பேசி முன்னோர்க ணூலை மறுதளித்துப்
பேய்ப்படும் பாடு தலையேற்றி யாடிப் பிணத்திடினே
நாய்க்கேனுந் தன்னைச மானன்மே லன்புண்டு நன்மையற்று
மேய்க்கின்றவர்க்கிடுக்கண்செயில் வினையே விநாயகனே (490)

பொய்யரைச் சூதரை வஞ்சகக் கோள்ளரைப் புத்தி சொன்னால்
வைதிடுங் கோணரை வுறவாடிக் கெடுக்கு மாணவரைச்
செய்திடுஞ் செய்கையிற் றீமையைக் காட்டிடுந் திண்ணியலா
வெய்யரை நீங்காப் பழியதே கொல்லும் விநாயகனே. (491)

வற்றாச் சமுத்திர வலைபோல வூழ்வினை வந்தடுத்துச்
சுற்றா கிலுநிலைக் கொள்ளாமலையோ சஞ்சலமே
சுற்றமாய்ச் சூழ்ந்துக் கொல்லக்கண் கண்டுந் தூயர்மேல்பொய்
விற்று ஜீவிப்பவன் றனைப்பழி விடுமோ விநாயகனே. (492)

எங்கெங்கு வோடினு மென்செய்ய லாகு மெடுத்தகடந்
தங்கிட வோரிடங் கண்டுச் சமாதி சாதுக்களுற்றார்
பொங்கி வழிந்திடும் பரீல்போற் கொதித்துப் புங்கவர்க்கு
வெங்கலி யாற்செய்த வினைநீங்கிப் போமோ விநாயகனே (493)

தன்னிடம் வந்தவர்க் கிட்டதை யேசி சர்க்குணரை
அன்னியஞ் சொந்த மெனப்பேசி நீங்கியவமதித்து
சின்னத் தனமென யெண்ணாது கவிபலத் தீட்டினவை
மின்னினும் பின்னால் வினைச்சுமைதானே விநாயகனே (434)

திரியோதனன் பஞ்ச பாண்டவர்க்குச் செய்தத் தீமையதைப்
பரிவா யறிந்துங் கேட்டும்பி னவ்வழிப் பற்றுவரே
லரிதான மானிடம் பெற்றும் நன்மைச்செய்யாரந்தோவந்தோ
விரிவான வேத போதமு நரகைத் தரும் விநாயகனே. (495)

எட்டுட னென்றுள வாய்க்கொண்ட தேக மெடுத்தெடுத்து
மட்டுப் படாதக் கொள்கையா லுளமாறி மதி பிறழ்ந்துக்
கட்டுப் படாதக் காளையாய்த் திரிந்துசெய்க் கன்ம மெல்லாம்
விட்டொழிந்தா லன்றி முத்தி வாய்க்காது விநாயகனே. (496)

கருணைக் கிருப்பிட நின்கழற் பாடிக் கனிந்து நல
வருட்பெற் றனர்முதி யோரடியார் சுக மனுபவித்தா
ரிருட்கிணற் றினிலிழிந்தோன் கரை யேறவ தெங்ஙனங்காண்
விருட்சமும் வித்துள வரைக்கனி போகா விநாயகனே. (497)

அண்ட மிடிந்துத் தலைமேல் வீழினு மசத்தியத்தைக்
கண்டதைக் கற்றப் பண்டிதனேனுங் கருதுவரோ?
பிண்டம் பிணமாய்க் கிடக்குநாள் வருமெனப் பெரிதுணரா
மிண்டு விளைத்திடின் விதிபழி நீங்கா விநாயகனே. (498)

பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிரெனப் போதித்தநூ
லெல்லவரும் படித்தார்க ளென்கினுமவ் வெழின் மொழியை
நல்லா ருணர்ந்தந் நெறிநின் று பக்தியு ஞான முற்றார்
வெல்லா ரெலாம் வினை மாற்ற தழிவர் விநாயகனே. (499)

அவரவர்ச் செய்த நன்மையுந் தீமையு மவரவர்க்கே
தவமெனினு மின்பத் துன்பங்க ளெனினுந் தானே வரும்
புவனத்தின் கீர்த்திப் பொருந்திடி லவைவிட்டுப் போய் விடுமோ?
விவகாரம் பின்னே யனுபவங் காட்டும் விநாயகனே. (500)

நொய்யரிசிக் கொதித் தாங்காது யென்ற நூலளவைத்
தெய்வ மொழியெனக் கொண்டனு பவிப்பரே திறமுடையார்
வைவதுஞ் சமய மாறி வணங்கலும் மமதை யெல்லாம்
மெய்யழி யாப்படி நிலைநின் றுக் கொல்லும் விநாயகனே. (501)

சேர்க்கை யியற்கை யெனயிரு பேசுஞ் செப்பினுமி
யார்க்கு மயக்கமு மஞ்ஞான மகங்கார மதிகமதோ
தோர்க்கப் படாவினைச் சூழ்ந்தெக்க நேரத்துந் தொல்லைதரும்
வேர்க்கு சலம்விட்டு விளைப்பது போலாம் விநாயகனே. (502)

தோதக மும்பல பேதமும் வாது தொகுத்து வெகு
பாதகஞ் செய்வதிற் பலவானுய்த் திரிந்து பழி முடிக்கப்
போதக னும் புலமையிற் மிக்கப் புகழ் கொளினும்
மேதகு நீங்காப் பாவம் விட்டிடுமோ விநாயகனே. (503)

கொடுஞ்செயல்படைத்துக்குணமிகுநல்லோர்க்குக் குறைமுடித்து
படுபாவி யென்னும் பட்டத்தைப் பெற்றுப் பார்த்தவர்க்கு
நடுநீங் கிக்கள்ள மாய்நடித் தாலும் நன்மை யுண்டோ
விடுமோ பழிசற்று மெய்ஞ்ஞானம் பேசின் விநாயகனே (504)

## பதினெட்டாவது

## பயன்றராக் கல்வியின் பரிதாபக் கதிநிலை.

பொய்யலைத விற்றுப் புந்திக் களித்தன்பர்ப் பூரித்திட
மெய்யை மறைத்து வெகுளியைப் பெருக்கி வீண் மொழியை
வையக மீதெழுதுங் கல்வி முடிவினன் மணந்தருமோ
வெய்யநோய்க் கொண்டழிவதுசத்யமன்றோ விநாயகனே (505)

எல்லை யிலாக்கல்வி கற்றன யியாவு மேப்பம் விட்டேன்
வல்லுன ரெங்ஙணு மிலையென்னு வாய்ஞ்ஞானி வலிதுடனே
கல்லுங் கரையும் விதமிதம் பேசுங்கபட மொழி
வில்லினுஞ் சொல்லுயிர்த் தனைவாங்கும்வாளாம் விநாயகனே.

கேதாரம் போல வான்கோழி நடிக்குங் கீர்த்தியைப்போ
லாதார மாறுங் கடந்தப்பா னிற்பபோ லரைந்திடினும்
மூதாக்கூட் சொல்லையும் நல்லோரை யேசிட முயன்றக் கல்வி
வேதாந்த மாகினென் விழலே முடிவில் விநாயகனே. (507)

இலக்கண மென்ப திலட்சண முனதரு வென வுணரி
னலக்கழித் தோதியு மெழுதியே பலவகைக் காட்படுமோ
மலக்குசொற் றேடுவ ரவர்க்கிவர்த் தலைவராய் மன்னுவரே
விலக்குவ ரியாரெனி லுண்மை விஞ்சையரே விநாயகனே (508)

பையை யுடைத்தானப் பாம்புக்கு நிகராய்ப் பவிசுயிலாப்
பொய்யைப் பொருளாகக் கொண்டுக் குறைகூறிப் புலம்பியந்தோ
செய்வ தனைத்தும் பெரியோர்ச்குத் தீமையாய்ச் செறிந்தகலை
மெய்யெனப் போற்றினு மாறாது ஊழ்வினை விநாயகனே (509)

தனையறிக் தடங்குங் கல்வியைக் கற்குதற் சதுரிதமே
பினையென வோங்கும் பழிபாவ சன்மம் பங்குளதாய்
நினைவெலா மாலி நிகர்க்கொள்கைப் பூண்டால் நிலையெதுகாண்
வினைவழி தானே கொண்டுபோய் விடுக்கும் விநாயகனே (510)

ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவென ஔவை சொன்ன
செவ்வியத் திருமொழி யுணர்ந்தவரே கல்வி சிறப்பினராம்
வௌவியத் தன்குணந் தனைப்பிறர் மேற்சாற்றம் வாணரென்கொல்
வெவ்விட மதாம தாவது விந்தையே விநாயகனே. (511)

உள்ளதை யெழுதி வுரைத்துசீ ரடைருவ ருயர்க்கலைஞர்
வள்ள லிவரென வுலகெலாம் போற்றும் மகிமை தரும்
எள்ளுக்கு டபில மிருப்பதைப் போல பொய்யே நிறைந்தால்
விள்ளும் வள்ளுவர்த் திருக்குற ளுண்மை விநாயகனே. (512)

பாவ மகன்றிட பக்தி விளங்கிடப் பாரனைத்துஞ்
சீவர்க ளோங்கிடத் திருவரு டங்கிடத் தினகரன்போல்
தேவர்க ளென்று சேவைசெயுங் கலை சிறக்கத் தந்து
மேவினர் முன்னோர் விகற்பமுண் டாமோ விநாயகனே (513)

நோன்பென்ப தெல்லாஞ் சருவமும் பொருந்துமெய் நூலளித்து
சான்றோ ரெனத்தனைச் சார்ந்தோர்க் கருளீந்து சத்துசித்து
டோன்றுமா னந்தச் சுருதிகட் பணித்தனர் தூயவர்கண்
மேன்மை வீணுங்கலை மித்தையர்க் குண்டோ விநாயகனே (514)

கற்றவர்க் கண்ணுடை யாரெனுந் தமிழ்மறைக் கணித்ததனை
வெற்றுரையா யெண்ணுவார்க் காகம் வேம்பை விரும்புதற்போ
லுற்றவை யற்றிட வொருபோது மறக்க வுவமை யுண்டோ
விற்பதும் வாங்குத னேர்மாய வித்தை விநாயகனே. (515)

கல்விக் கரையில கர்பவர் நாட்சிலக் கருத்ததனுண்
மெல்ல நினைக்கிற் பிணிபல வென்றவம் மெய்ம்மொழியைச்
செல்வமாய்ப் பெற்றுச் சிறந்தனர் முன்னோர் செகம்புகழ
வில்வத் தழைசாத்தித் தொண்டர்கட் போற்றும் விநாயகனே ()

கற்றன மென்றுக் களியற்க வென்றுங் கனிவுரையாஞ்
சிற்றுளி யான்மலைத் தகிர்க்கப் படுமெனத் தெளிந்தவரே
உற்ற கலைப்படி நின்று யாவர்க்குஞ்சீ ரோதினர்காண்
விற்பன ரென்றவர்க் கென்றுஞ் சிறப்பே விநாயகனே. (517)

கல்லா தவர்களே நல்லோ ரெனச்சொன்னக் கருணீகர்சொ
லெல்லாருங் கண்டு நடப்பதற்காமோ யெழிலுணர்ந்த
வல்லாள ரன்றோ சிவபக்தி மெய்ஞ்ஞான வாழ்வை யுற்றார்
வெல்லப் படான்கையி லுள்ள வாயுதம்வீண் விநாயகனே. (518)

அளவுபடாதக் கோடானுக் கோடி வாப்தரெலா
முளவறிந் தன்பு வாசாரம் பூசையுண் மைப்பொறுமை
களங்கமிலாமனத் தோரருட் பெற்றோர்க் கற்றிலராய்
விளங்கனிப் போன்றுல கனைத்தையும் வென்றார் வீநாய்கனே.

அருமைத் தெரிந்தவர்பா னின்றக் கல்வி யருளுடைத்து
கிருபா கரமிகு விசும்பெனப் பொழிந்துக் கீர்த்தியுடன்
பெருமை யடைந்தன வஃதிலார்க் கற்றவை பேடியின்கை
விருது பெருசூரி யைப்போன்ற வாறே விநாயகனே. (520)

அலையு மனத்தையு மடங்காத வூழ்வலி யவித்தைகளை
நிலைப்பெறச் செய்து வொடுக்கியே முத்தி நெறியினின்பத்
தலைமைப்பே றுற்றச் சாதுக்கட் கல்வியே தகுந்தபடி
விலையிலா மாணிக்க மழியாத ஞானம் விநாயகனே. (521)

கைப்பொரு டனக்கே கௌரவங் கருத்துங் காலமதை
வைப்பிட மாக வைத்துழைத் திடிலென் மதிவருங்கா
ணுப்புயர் வில்லா சிவஞான போத மூதித்திடுமோ?
மெய்ப்படு நாண்வரின் வெட்ட வெளிச்சம் விநாயகனே. (522)

சூத்திரங் கற்றுச் சுழிமுனை யுற்றுமுத் தொல்லை யற்று
[illegible]த்திரம் பெற்று நிரதி சயானந்த நிட்டைக்கொண்டோர்
சாத்திரக் குப்பையைத் தத்துவப் பொள்ளலைத் தானகற்றி
மேத்தகு வைபவ மடைந்ததன்றோ கல்வி விநாயகனே. (523)

சின்னஞ் சிறியார் விளையாடு மணற்சோற்றைச் சேர்ந்ததென
மன்னுங் கலைஞான மார்க்கமென்றே முந்நாள் வகுத்த நலோர்த்
தன்மையை யோர்ந்தவர்த் தானெனும் விடமுண்டுச் சாவர்களோ
மின்னுக் கெலாம்பின்னே மழையெனற் பொய்யோ விநாயகனே

வேடம் வேண்டாது மினுக்கு வேண்டாது வெளிடம்ப வீண்
சேடம் வேண்டாதுபல் சித்தி வேண்டாது செகமயக்குந்
தோடம் வேண்டாது சுகபோக முத்திச் சூழ்ந்திடினே
மேடத்தை மீனவன் விழுங்குதன் மித்தையே விநாயகனே ()

குமுணனைப் போலத் தலையைக் கொடுத்துக் குணமலர்ந்து
சமரசமாகத் தனைப்போற் சன்மானந் தானுளுற்று
நிமலக் கலையன்றோ நித்யவாழ் வுத்தருளேயமிகு
விமலர்க ளென்றுல கந்தொழு தேத்தும் விநாயகனே. (526)

காரண மின்றி யைவர்க் கலகங்கட் காண்ப ரென்பவர்
பூரணப் பாண்டித்ய மெய்க்கலைக் கற்றவர்ப் பொருந்துவரோ?
தாரணி மேலெளவை வள்ளுவரால் சங்கந் தானழிந்த
வீரந் தெரிந்தவர்க் கன்றோ நேர்முத்தி விநரகனே. (527)

படித்தவைக் கேட்டவை யாலுயர்ஞானப் பாகமதின்
முடிவைத் தெரிந்திடா தேங்கிய சனகர்முன் முதற்கடவுட்
கடிகை நேரத்துட் கல்லாலி னடியிற் காட்டினரால்
வெடித்தப்பி னன்றோ மணமெங்கும் வீசும் விநாயகனே. (528)

நற்கீர ருக்கே யெதிர்வந்த யீசனை நமஸ்கரித்து
பொற்பூவின் வாச மெனவிளங் காமற் போனதென்று
லிற்பக் கலைமதி யறிவீன மாண்மையி லகப்படுமோ
விற்பவ ரியாரதை வாங்குவ ரியார்ப் பொய்யை விநாயகனே. ()

நல்ல சரக்குள கடைக்கும் வ்யாபாரிக்கும் நஷ்டமில்லை
யல்ல யிவைகட்கு மாறா யிருந்திடி லழிந்திடுங்காண்
சொல்லள் வல்ல வனுபவி கட்குமுன் டுலங்கி நிற்கும்
வெல்லுமோ மெய்யைப் பொய்யது தானே விநாயகனே. (530)

படித்தப் படிப்பினைப் போல நடக்கப் படிக்கறியார்
முடிக்கு முடி தரித் தென்ன முக் கட்டு மொட்டைய்தாய்த்
தடித்துல கெல்லாந் தன்வச மாக்கினென் சடத்துளுயிர்
விடுபட்டப் போழ்து யெல்லாம் விழலே விநாயகனே. (531)

என்னிலக் கணத்தை யின்னதென் றறிந்தா லீசனே நீ
மன்னு மிலக்கணந் தனைக்கண்டு நின்னுடன் வாழ்ந்திருப்பேன்
பின்னை வே றொருயிலக் கணம்பேசி வீணே பிதற்றுவனோ
மின்னுக்குச் சந்திரன் சிறிதென்ப ரியாரே விநாயகனே. (532)

சூட்ச மறிந்துண்மைச் சோதியுட் கலந்து சுகநிலவு
மாட்சி பெற்றோர் கற்றக் கல்வியே யருளே மானந்தமாம்
காட்சி யில்லா ஞானக் கண்ணனென் பான்போன் றக்கரணமதின்
மீட்சி யடங்கிலான் படித்தவை விருதா விநாயகனே. (533)

சல்லாப் புடவைக் குளிர் தாங்கிடா நடுச் சந்தையிலே
செல்லாப் பணமது செல்லா தெனுமொழி சிறக்க கல்லா
ருல்லாசம் பேசி வுயர்நடை யிழந்து வொதிமரமாய்
வெள்ளத்திற ருனே விழுந்ததை யொப்புவர் விநாயகனே. (534)

வெட்டெனப் பேசி வெருளியை விளைவுசெய் வீண் பகட்டு
தட்டெனப் பொட்டென விழுந்துடை ஞத்தை சடமதனோ
டொட்டி யிருந்தென்ன வொட்டாதுப் போயென்ன வோசைதரு
மெட்டுடைந்தால் வீணைப் பேசுவதுண்டோ விநாயகனே ()

நூலளவே நடையுங்குண மன்பு நோன்பு தவஞ்
சால நலந்தருஞ் சாந்தமும் பக்தி சத்திய மென்பார்
ஆலவித் தானது சிறிதெனற் போற்கற்ற வருங்கலையு
மேலான சித்விலா சந்தனிற் கூட்டும் விநாயகனே. (536)

நைவினை நணுகே லெனுமுதி யோர்ச்சொல்லி னாட்டம் வைத்தா
லெய்பவ ரெதிற்படி னுந்தலை யிறங்கி யிதமுரைப்பார்
துய்ய ஞானியர்வாய்த் திறவாது மௌனியாய் தூரச்செல்வார்
வெய்ய காலனைப்போல் விறவாது விஞ்சை விநாயகனே (537)

கீழோ ராயினுந் தாழவுரை யென்றூர்க் கிரௌஞ்சன் றனை
யாழவழுத்தி யிருதுண்ட மாக்கினு ராறுமுகனார்
சோழன் மகளுக்குத் துணைப்போனக் கவிஞரின் றெருந்த மென்னே
மேழிகொண் டுழைத்தபி னன்றோ விளைவு விநாயகனே. (538)

கல்விக் களவில்லைக் கற்றோ ரவ்வழிக் கருத்திலுன்னிப்
பல்லோர்ச் சுகம்பெற நன்னெறி நாட்டிப் பயனடைந்தார்
பொல்லாக் குணமுளப் புலையரப் புலமைப் புகழுடையார்
வெல்லார்த் தன்பவம் நில்லா ரொருபால் விநாயகனே. (539)

சொல்லாமற் சொல்லுங் குருமொழி யொன்றே துணையெனவே
நல்லவ ரெல்லவரும் வருத்தாரிந்த ஞானமொழி
வெல்லாத வூழ்வலி வென்று சாகாத வீடருளும்
மெல்ல நினைத்திடிற் புண்யமென் றேற்படும் விநாயகனே. (540)

ஈதலு மின்புற வாழ்தலு மிருடியர்க் கேற்றதுயிங்
தோதலு மவ்வழி நிற்றலு மாய வுததியின்முப்
பாதக நீங்கலு நூனெறி வளமெனப் பறைந்தனரேன்
மேதகு சித்தியு முத்தியுங் கைவரும் விநாயகனே. (541)

கலைவாணி முத்தமிழ் சங்கத்தார் நடுவிற் கைசைகையா
லுலைவாயை மூடுதற் போற்செய்த பாடலி னுளவறிந்தா
லலையொழி யாதென வீணர வாரத்தி லாட்படுகோர்
விலைமாதர் வேடமும் விபரீத ஞானம் விநாயகனே. (542)

சிறுபிள்ளை யன்று கற்றபண் டிதனை செயித்ததுவுங்
குறுகுறு குத்தால மாக்கி வகத்தியர்க் குணங்கொண்டதும்
வறுமையாற் சருமர் மருதரை மகவாக மன்னியதும்
வெறுப்போ விருப்போ கலைநெறி யருளோவிநாயகனே. (543)

படித்தப் படிக்கு நடக்கின்றையோ யிப் பழஞ்செருப்பா
லடிக்கட்டுமோ வெனக் குணங்குடி யார்ச்சொன்ன வாழ்ந்தகலைப்
படியினின் றுழைத்துப் பயனடைந்தா ரன்றோ பருணிதர்காண்
விடியுமு னிருளி லெதுவெனத் தெரியும் விநாயகனே. (544)

சனகன்முன் னோன்றி செய்துள்ள மகத்துவ சமர்த்துவத்தை
யினதென் றறிந்திடாப் படியிருந் தேங்கிப்பி னெழிலடைந்தக்
கனமிகு ஞானக் கலையொன்றலோ முத்தி காட்டுவிக்கும்
வினவுவோ னின்றெனின் வாய்ஞானம் விழலே விநாயகனே ()

மூர்த்தமுந் தீர்த்த முறையாய் நடத்திய மோனருக்கோர்
வார்த்தை யுரைத்துத் தன்மயமாக்க வல்லசிவன்
பார்த்திப குருவாய் வருவரென் றுரைத்சப் பண்புமொழி
வேர்க்கொண்ட வினைவா யடைத்தருட் கொடுக்கும் விநாயகனே.

நற்கலைக் கற்றத ஞற்றொல்லைப் போமோ நாற்குலச்சீர்
பெற்றத னாலே பிறவிநோய்ப் போமோ பெரிதுணரி
லுற்றநின் றாளை யுளமுன்னோர்க் கென்ன வூதியமோ?
வெற்றி யடைந்தப்பி னன்றோ சுகங்காண் விநாயகனே. (547)

தனைமுத்த னுக்குங் கல்வியுந் தனமுஞ் சதுரிதமே
சினமுத்த னுக்கத் தேர்ந்துதான் கற்றுதிற் சித்தி யென்கொல்?
மனமுத்த னுக்கு சாக்காடுத் தாண்டிடின் மகிமையதே
வினைமுத்த னுக்கின் விதிப்போய் விடுமோ விநாயகனே. (548)

கல்விக் களஞ்சியங் கைவந்துள் ஞானக் கண்படைத்தோ
ரெல்லை யிலாத திருநெறி மறைகளை யெழுதினர்காண்
அல்லா தவர்ப்பல வறிவீன வகையினி லழுத்தி வைத்தார்
வெல்லப் படையின்றித் தின்னும் படையே விநாயகனே (549)

எண்ணு மெழுத்து மிலக்கண நீயன்றி யில்லையெனப்
புண்ணிய வசத்தோ டுதித்தவ ராய்ந்துப் போற்றினரால்
கண்ணின்றிக் காண்பவ ரிலையென்ப தனுபவக் காட்சியதே
விண்ணின்றிமாரியும் விளைவெங்ஙனுண்டாம் விநாயகனே (500)

பழிபாவ நீக்கிப் பற்றற்று நீர்க்குணப் பரிசளித்து
சுழுச்சியின் முடிவிற் றூங்காமற் றூங்குஞ் சுகம்வரினே
அழியாப் பதவியு மருண் ஞானக் கல்விபி னற்புதமே
விழிபடைத்தாற்கண்டு விளங்கியேவாழ்வார் விநாயகனே (551)

பத்தொன்பதாவது

## பகட்டுரைமாயப் படாடோபக் கதிநிலை.

மயக்கந் தருமூன்றுப் பேய்களைத் தனக்குள் வயப்படுத்தி
நியமம் வழாத முத்தரன்றோ ஞான நிலையடைவர்
அயன்செய்த சிருஷ்டித் தனைமாற்றி வேட மதையணிந்து
வியக்கச்செய் நாடக மதுநன்மைத் தருமோ விநாயகனே (552)

தலைநாட்டி சுரத கீதசங் கீதந் தனை யொலித்துக்
கலைநாட்டிக் கையை நீட்டிப்பல் லோர்க்கண்டுக் காதலிக்க [ல்
வலைநாட்டி சமயத்தி னுண்மையை வெளியோட்டி வொப்பாரிபோ
விலைநாட்டி நடிக்கும் பாட்டிலென் னுண்டாம் விநாயகனே. ()

உடற்பொரு ளாவி மூன்றையுங் குருவுக் கொப்புவித்து
மடமைதீர்ந் துண்மை ஞானச்சீ ரடைந்தார் மஹனியர்கள்
நடன வாபாசப் பகட்டுரை யதனி னுட்கழித்தோன்
விடமுண் டிறந்த வன்றனக் குரியோன் விநாயகனே. (554)

பாட்டினா லென்னப் பாடுவதா லென்னப் பயனுளதோ
ஆட்டினா லென்ன வாடுவதா லென்ன வக்ரமத்தை
யோட்டினா லன்றோ வுண்மை ஞானம் பக்தி வுதித்திடுமெய்
வீட்டினில் வாழ விளையுஞ் சன்மார்க்கம் விநாயகனே. (555)

பக்தியு மன்பு மறிவு நல்லோர் சேர்க்கைப் பலித்திடினே
சித்தியுண் டாகும் புத்தியு முத்தியிற் றிரப்படுத்தும்
தத்தித் தாவெனத் தலையாட்டி யாடிச் சைகை மிகு
வித்தை யெல்லாம்பின் விழலாய் முடியும் விநாயகனே. (556)

ஆசாபா சத்தையு மாடவ ரணங்கைபோ லழகுமிகப்
பூசாரி போல மாய்மாலங் காட்டி புத்திகெட
நேசானு சாரியாய் நடிப்போன் சைவநெறி யிஃதெனக்கை
வீசாது வீசின் விடுமோ பாழெண்ணம் விநாயகனே. (557)

சரித்திரந் தெய்வச் சாத்திர மிதுவெனச் சாற்றி நடம்
பரிவுட னாற்றினும் பக்குவப் படாதப் பாதகத்திற்
கரியச் செயல்படைத் தமிழ்ந்தவை கணக்கிங் கார் கொடுப்பார்
விரியன் குட்டியென் கினும் விடம் போமோ விநாயகனே. (558)

கலப்பாலி லோர்த்துளி நஞ்சுப் போதுமென்றார்க் கற்றவர்கள்
மலமாயை மாய யென்னென்னவோ பாடு வகுத்து வைத்தார்
பலமுள்ளப் போழ்துப் பந்துப்போ லாடிப் பவங்குடித்து
விலகுநாண் வந்தா லாட்டங்க ளெங்கே விநாயகனே. (559)

தையல ராகி மையல்கொண் டாடினேன் றனைக்கண்டவர்
வையாது வாழ்த்தி வணங்கி சன்மான வரிசைத் தந்து
வுய்வ ரென்றாலு முத்தம மார்க்கத்திற் கூனமதே
மெய்கண் டழிவது வலகநே ரன்றோ விநாயகனே. (560)

அந்தரங்க மென்ன வாடையான் மூடி யரோசிகமாய்ச்
சிந்தையுற் றோர்க்கன்றி மற்றோர்க்கு நாணயமாய்த் தெரிந்திருக்க
பந்தம் பிடித்திடப் பந்தம் பிடித்தாடும் ப்ரபந்தமது
விந்தையென் றாலும் வெகுளிக டானே விநாயகனே. (561)

சத்தியம் பக்தி பூசைகண் விரதந் தனையருளி
மித்தையைப் போக்கும் வழிநின்ற பேரே வெகுண்டரெனின்
உத்தம வெண்ணத்தை கீழாக்கிக் கெடுக்கு முலகநடை
வித்தினைப்போல வளர்ந்தின்னல் கொடுக்கும் விநாயகனே. ( )

புலியதைப் பார்த்துப் பூனையுஞ் சூடுப் போட்டதென்ப
ரிலையெனினு மனுபவிகளுக் கோர்கா லேற்படுங்காண்
கலியுங் கலவியுங் காதலு மோதுங் கதையதுவி
லியநூ லல்லாற் சமய நூலாமோ விநாயகனே. (563)

புண்ணிய தவப்படி பொய்வேட மற்றுப் போற்றிச்சதா
வெண்ணீ றணிந்துத் திருப்புகழ்ப் பாடுவர் வீண்கவியை
யெண்ணு திருப்பதுஞ் சத்தியஞ் சாந்தம்பக்தி யெய்திடலும்
விண்ணொளி போலுண்மைக் காண்பதே நடனம் விநாயகனே.

சமயநே ருணர வேண்டுதற்காவ சகச நிட்டை
யமர்ந்துல கனித்திய மதைசற்று மெண்ணு தருள்வழியி
விமைநேர நீங்கா திருப்பவரே மாயை யிடர்ப்படினே
விமலக் குணமிலார் வேடத்தில் மயங்குவர் விநாயகனே. (565)

உண்டவை யேப்பந் தனின்வரு மென்ப துண்மையேகண்
கண்டவை கருத்திற் றங்கா தெனல்கட்டுக் கதையதுவே
தொண்டர்க ளென்கினும் வேடிக்கையில் மனந் தொந்தமுற்றால்
விண்டவையும் விழலாய்த் தரும் வினையே விநாயகனே (566)

ஆடவ ஞடவியாய் நடிப்பதுவரி தழுகேனினுங்
கேடனைத் தையும்விட் டருண்வழி யேறக் கிடைத்திடினும்
பாடனைத்தும் விட்ட போதன்றோ சிவஞானம் பலிதமுறும்
வீடதைப் பெறுவோள் வீணுடல் விரும்பான் விநாயகனே (567)

நடுவதை நட்டு நடனஞ்செ யுன்ற னளிணபதங்
தொடுவதைத் தொட்டு சுயஞான மாமுன் றாயறிவான்
கெடுவதைக் கெடுத்துக் கிளைக்குஞ் சனனக் கிரீடையதில்
விடுவதை விட்டபோ தன்றோநன் முத்தி விநாயகனே. (568)

இரவியினுங் களங்க மிருக்கு மென்று ரிருடியர்கட்
பரவைக்கு வலைகட் சுதந்தர மவைப்போல பற்றியவை
சரணங் கொடுத்தாலு நீங்காது தடித்துத் தழைத்துக் கொல்லும்
விரதங் கோடியை வினையொன்று நசிக்கும் விநாயகனே (569)

அஞ்ஞானந் தன்னையு மணங்கையர் மோகத்தை யதிகரித்து
கஞ்சா பிடித்தவன் மயக்கம்போல் புத்தியைக் கலக்கிவிடு
மிஞ்சின வதிரச சுகராக வேடத்தின் விருப்பமது
விஞ்சையெனுஞ்சிவஞானத்தைத் தருமோ விநாயகனே (570)

அசையா மனமு மையகோ வாடலி லச்சமின்றிப்
பசைவாய்ப் பற்றிட பட்டவை நட்டவைப் பாழ்படுமே
இசையா தவர்களு மெளிதில் வயப்பட்டு யேமாறுவர்
விசைபோல தானே பொம்மையும் நடிக்கும் விநாயகனே. (571)

முன்னோர்கட் பட்ட பாட்டையுங் கேட்டையு முக்கனிபோல்
பின்னவர்க் காக யெழுதிஞருண்மைப் பிசகிலையே
லுன்னதப் பதவிய தாமுத்தி நன்மையை யுகந்திடுமோ
வின்ன மல்லாடெரு வேடிக்கைத்தானே விநாயகனே (572)

தெய்வக் கதையெனத் தெருசுற்றிப் பாடினென் சிறப்புறுமோ
ஐவரை யொடுக்கி யமலவீ டடைகுவ ரறிவுடையோர்
செய்வது வொன்றுஞ் சிந்தைவே ருயின் றீங்கருளி
வெய்யவன் போல விடுபடா தழிக்கும் விநாயகனே. (573)

தையலர்ப் போல வேடக்கட் பூணுஞ் சமர்த்தவமு
மையகோ தெரியார் மயங்கியே தீமைக் காட்படலு
முய்யு நெறியெண கற்றந லுத்தம ரொப்புவரோ [னே
மெய்யென்று மெய்மெய் பொய்யென்றும் பொய்பொய் விநாயக

காமத்தைப் பெருக்கிக் காளைகளுளையாய்க் கருத்திழந்து
நேமமு நிட்டை பக்தியுனின்று நெறியை விட்டுப்
பாமரர்ப் போலப் பண்டிதர் நாடகம் பற்றினரேல்
மீமருஞ் சமய மெங்ஙனுந் தோன்றும் விநாயகனே. (575)

நெருப்பரு கினிற்பஞ் சிருந்திடின் வேகா நிலைப்படுமோ
கருத்துடன் கண்ணுங் கபோல மதத்தினிற் கட்டுப்படும்
விருத்தமுங் தேமும் விமலநின் கீர்த்தியை விளம்பினதேல்
மிருத்தையு நீங்கிடும் விளங்கிடு ஞானம் விநாயகனே. (576)

முதியோ ரெழுதியத் தோத்திரத் தினிலொன்றை முறைப்படியுட்
பதியவைத் ததனின் பயன்றெரிந் தடைவதே பலிதமென
நிதிதவ ழர்ச்சுனன் றனக்கு கிருஷ்ணபிரா னிட்டை சொன்னார்
விதிபோக்கி வாழ்வா ரிதைமறுப்பாரோ விநாயகனே. (577)

ஆடலைச் செய்தவ னம்பலவாண னருட்குலவும்
பாடலைச் சொன்னவர் குருநால்வ ரளவிலா பத்தர்களே
தேடரும் பாக்கிய மாபரணமுடைத் திருவெண்ணீறு
வீடருட் படியி லுழைத்தோர்க்கே விளங்கும் விநாயகனே. ()

ஆட்டைப்போல் வேட மெடுத்தவவ் வசுர னமரர்கட்கு
சேட்டைகட் செய்து பலவுயிர்க் கொன்றதை சிவசண்முகன்
நாட்டங்கொள் முனிவ ரன்றே செயித்தனர் நவில்வதென்கொல்
வேட்டைநாய்த் தரும்பலன் வெறிநாய்த் தருமோ விநாயகனே. ()

மடுவில் விழுந்தவன் கரையேறி வருவது மாதுர்லபம்
கொடுமையில் மறைந்தவன் குணப்பட லரிதாகக் கூறுதற்போ
லடுத்திடும் பக்திசி ரமர்ந்தவ னுட்டத்தை யாசிப்பனோ
விடுத்திடு நரகிலென் றஞ்சினர் மேலோர் விநாயகனே. (580)

சமயப் பற்றது சற்றே நழுவிடின் சங்கைவந்து
நிமைப்பொழு தேனுங் குடியிருந்தாற் கொண்ட நிட்டைகட்போம்
நமனுடைதட் பட்டது முனிமகன் செயித்தது நற்சாட்சியே
விமல குணத்தவர் வெளிடம்பம் வேண்டார் விநாயகனே. (581)

இருக்கின்ற தத்துவத் தின்குண மெவைக்கு மிருக்குமதைத்
தருக்கித்துப் பாடலோ டாடி சமிக்கைசெய் சங்கற்பமா
மிருத்துவத்தா லெவ்வணத் தவ ஞானமு மெரிந்துவிடும்
விருப்பம் வெறுப்பான போதன்றே விளங்கும் விநாயகனே. ()

நல்லோர்க ளாஞ்சிவ ஞானிக ளுலகை நாடகமாய்ச்
சொல்லாமற் சொல்லி மறைந்தோடி மலக்குகைச் சொந்தமென்ருர்
எல்லாம் வெளிமயக் கந்தனை யன்றிவே றில்லை யென்று
வெல்லாமன் மாயையை வென்றருட் பெற்ருர் விநாயகனே. ()

ஒப்புக்கு வுன்னை வுறவுக்கு னக்கா ளுகந்ததெனச்
செப்புதற் போலச் சிந்தை மலத்திடின் சென்மம் வரும்
அப்பர் சுவாமியெனு மருணீக்கி சைவநே ரற்றதனுல்
வெப்புநோய்க் கொண்டது விளம்பரந்தானே விநாயகனே. ()

சிவவேடந் தானே திருநீறு ருத்ராக்கஞ் சிறந்த தென்பா
ரவவேட மின்றிச் செழியன் வண்ணுன்றனை யடிபணிந்தான்
தவவேடங் கொண்ட சாதுக்கள் பத்தர்க டானறிவார்
விவவேடம் பின்னே பிறவியைக் கொடுக்கும் விநாயகனே. (585)

சத்துடன் சித்தானந்த மூவகையைத் தானறிந்துச்
சித்தமொன் ருகித் தீச்செயல் குணத்தைச் சிதரடித்து
பத்தர்க ளோடுப் பணிந்தன்புச் செய்தார்மெய்ப் பருணிதர்கள்
மெத்தசிலாகிப்பர் வெலும்பொய்யை வீணர் விநாயகனே (586)

சித்தர்கட் கோவைக் காயத்திரி மந்திரந் தேகபந்தஞ்
சத்தபோகம் பஞ்ச தசப்பிர கரணந் தர்க்கமௌனப்
புத்தமிழ்தாகு மீமாம்ச சூாதாரம் பொலிந்த ஞான
வித்தகர் விவிலிய வேடத்தை விரும்பார் விநாயகனே. (587)

சோதிடங் கண்டுட் சோதியிற் கலந்தார்த் தூய முன்னேர்
வாதிடங் கொண்டு மயங்கினர்க் கிங்கிலை வாய்த்திடுமோ
நீதிடங் காண்பதெல்லாம் வேறு வேருய்ச் சிதரிடலான்
மேதிடங் கொண்டார் வெளிமாயை வேண்டார் விநாயகனே ()

கிரக நட்சத்திரந் திதியோக கரணங் கேட்டை சகங்
சரம்பார்க்கும் ரேகை மச்சம் பட்சிநாடி கனவாருடம்
தரமிகு சகுனக் குறடுள்ளான் விலாரி சத்தபங்கும்
விரத மிகுந்தமெய்த் தொண்டர்முன் விளங்காவிநாயகனே (589)

துலங்கு மணிமா லகிமாப் பரகாயத் தொந்தமுடன்
கலங்காத சுத்த சாதாக்கிய ஞானக் கருத்துடையோர்
சலத்தை விடாத அலைநிகர் மாயைச் சாருவரோ
விலகாத பத்தர்முன் வேடிக்கை விழலே விநாயகனே. (590)

## பயன்றராக்கல்வி பகட்டுரைமாய விஷயார்ப்பித நிறைவு.

### ஸ்ரீமத் - திருஞான சம்பந்த சுவாமிகள்.

"பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையு, முண்ணின்றதோர் சுவையும் முறுதாளந் தொனிபலவு, மண்ணும் புனலுயிரும் வருகாற்றுஞ் சுடர்மூன்றும், விண்ணுமுழு தானானிடம் வீழிம்மிழலையே"

"கல்வியாளர் கனகமழன்மேனி, புல்குகங்கை புரிபுன் சடையானூர் மல்கு திங்கட் பொழில்சூழ் நறையூரிச், செல்வர் சித்தீச்சரஞ் சென்றடை நெஞ்சே"

"நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு, மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை, யாலடைந்த நீழல்மேவி யருமறை சொன்னதென்னே, சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே"

"ஆடல் நாக மசைத்த வில்லதோர், வேடங் கொண்டவன் வெற்காடு பாடியும் பணிந்தா ரிவ்வுலகினிற், சேடராகிய செல்வரே"

"பறையினொடொலி பாடலு மாடலும் பாரிட, மறையினொடியன் மல்கிடுவார் மங்கலக்குடிக், குறைவிலா நிறைவே குணமில்குணமே யென்று, முறையினால் வணங்கும்மவர் முன்னெறி காண்பரே"

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து, முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கண், மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப், பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே"

"விண்டலர் பொழிலணி வெங்குரு மேவிய, வண்டமர் வளர்சடையீரே, வண்டமர் வளர்சடையீருமை வாழ்த்துமத், தொண்டர்க டுயர்பிணியிலரே"

"வெந்தவெண் பொடியணி வெங்குரு மேவிய, வந்தமில் பெருமையினீரே, யந்தமில் பெருமையி னீருமை யலர்கொடு, சிந்தை செய்வார்வினை சிதைவே"

"ஈனஞானிக டம்மொடு விரகனே யேறு பல்பொருண் முத்தமிழ் விரகனே, யான காழியுண் ஞான சம்பந்தனே யாலவாயினின் மேயசம்பந்தனே, யானவானவர் வாயிலுளத்தனே யன்பரானவர் வாயிலுளத்தனே நானுரைத்தன செந்தமிழ் பத்துமே வல்லவர்க்கிவை நற்றமிழ்பத்துமே"

திருஏகடாதம்.

புண்டரிகத்தவன் மேவிய புகலியே

(பொழிப்புரை) ஆன்மாக்களுக்கு இரக்ஷையாக முண்டம்போலிருந்த திருநீற்றையணியப்பட்ட மிக்க கருணையானவனே யான்பாடும் பாடலை யுவந்துள்ளவன் (எ-ம்.)

செருக்குவா யப்புடையான் சிரபுரமென்னில்

(பொழிப்புரை) ஒருகாற் சிரபுரமென்று சொன்னவிடத்துப் பஞ்சேந்திரியங்களையும் அவியப்பொருது சிவனுடைய திருவடியிலே அடையா நிற்பன் (எ-ம்.)

கோச்சைமண்ணலைக் கூடகிலாருடன் மூடரே

(பொழிப்புரை) பராச முனிவராற் பூசிக்கப்பட்டு அவன்பெயரால், பெயர்பெற்றுள்ள கொச்சை நகரென்னுந் திருப்பதியிலே எழுந்தருளியிரானின்ற தலைமையோனை உள்ளபடி தரிசனம் பண்ணி வழிபடமாட்டார்களது நினைவு எவ்வாறிருக்குமெனில், மழைக்கா லிருளும் வெளிதென இருண்ட மயக்கத்தையுடைய ஆணவபோதமாயிருக்கும் (எ-ம்)

---

ஸ்ரீமத் - திருநாவுக்கரசு சுவாமிகள்.

" இல்லக விளக்கது விருள்கெடுப்பது, சொல்லகவிளக்கது சோதியுள்ளது, பல்லக விளக்கது பலருங்காண்பது, நல்லக விளக்கது நமச்சிவாயவே"

" குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள், பிணங்கித் தம்மிற் பித்தரைப்போலப் பிதற்றுவார், வணங்கி நின்று வானவர் வந்து வைகலு, மணங்க ளூராதிரை நாளாலது வண்ணம்"

" பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி, யெத்திறாற் பத்தி செய்கே னென்னைநீ யிகழவேண்டாம், முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற, அத்தாவுன் னுடல்காண்பா னடியனேன் வந்தவாறே.

"பூதங்கள் பலவும் வைத்தார் பொங்குவெண்ணீறும் வைத்தார், கீதங்கள் பாட வைத்தார் கின்னரந் தன்னை வைத்தார், பாதங்கள் பரவ வைத்தார் பத்தர்கள் பணிய வைத்தார், ஆதியுமந்தம் வைத்தா ரையனை யாறனாரே"

" ஆலலா லிருக்கையில்லை யருந்தவ முனிவர்க்கன்று, நூலலா னொடியுமில்லை நுண்பொரு ளாய்ந்து கொண்டு, மாலுநான் முகனுங்கூடி மலரடி வணங்க வேலை, ஆலலாலமுதமில்லை யையனை யாறனார்க்கே"

"மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச், சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகடலோடும்போது, மதனெனும் பாறைத் தாக்கி மறியும்போ தறிய வொண்ணு, துனையுனு முணர்வை நல்கா யொற்றியூ ருடையகோவே"

"சித்தராய் வந்து தன்னைத் திருவடி வணங்குவார்கள், முத்தனை மூர்த்தியாய முதல்வனை முழுதுமாய, பித்தனைப் பிறருமேத்தப் பெருவேளூர் பேணினானை, மெத்தனே யவனைநாளும் விரும்புமா றறிகிலேனே

"வாக்கினா லின்புரைத்து வாழ்கிலார் தம்மையெல்லாம், போக்கினாற் புடைத்தவர்க ளுயிர்தனை யுண்டு மால்தான், றேக்குநீர் செய்தகோயில் திருவிராமேச்சரத்தை, நோக்கினால் வணங்குவார்க்கு நோய்வினை நணுகுமன்றே"

"கற்றிலேன் கலைகள்ஞானங் கற்றவர் தங்களோடும், உற்றிலேனாதலாலே யுணர்வுக்குஞ் சேயனானேன், பெற்றிலேன் பெருந்தடங்கண் பேதைமார் தமக்கும் பொல்லேன், எற்றுளே னிறைவனேநா னென்செய்வான் றோன்றினேனே"

"சித்தத்துருகிச் சிவனெம் பிரானென்று சிந்தையுள்ளே, பித்தூப் பெருகப் பிதற்றுகின்றார் பிணி தீர்த்தருளாய், மத்தத் தரக்க னிருபது தோளு முடியு மெல்லாம், பத்துற் றூரநெறித்தா யெம்மையாளும் பசுபதியே"

---

ஸ்ரீமத் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

"கல்லே னல்லே னின்புகழடிமை கல்லாதே பலகற்றேன், நில்லே னல்லே னின்வழி நின்றார் தம்முடை நீதியைநினைய, வல்லே னல்லேன் பொன்னடி பரவமாட்டேன் மறுமையை நினைய, நல்லே னல்லே னானுமக் கல்லா னாட்டியத்தான்குடி நம்பி"

"கண்ணாயேழுலகுங் கருத்தா யருத்தமுமாய்ப், பண்ணாரின் தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே, மண்ணோர் பூம்பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே, யண்ணா நின்னையல்லா லினியாரை நினைக்கேனே"

"தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ் சார்வினுந் தொண்டர் தருகிலாப், பொய்ம்மை யாளரைப் பாடாதேயெந்தைப் புகலூர்பாடுமின் புலவீர்காள், இம்மையே தருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம், அம்மையேசிவ லோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே"

"மற்றுப் பற்றெனக் கின்றிநின் றிருப் பாதமே மனம் பாவித்தேன் பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன், கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறை யூரிற்பாண் டிக் கொடுமுடி, நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே"

"விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை, யடையி லன்புடையானை யாவர்க்கு மறியொண்ணு, மடையில் வாளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச், சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே"

"அறையும் பைங்கழலார்ப்ப வரவாட வனலேந்திப், பிறையுக்கங்கை யுஞ்சூடிப் பெயர்ந்தாடும் பெருமானுர், பறையுஞ் சங்கொலியோவாப் படி றன்றன் பனங்காட்டூ, ருறையு மெங்கள் பிரானுரை யுணராதா ருணர் வென்னே"

"தண்ணார்மா மதிசூடித் தழல்போலுந் திருமேனிக், கெண்ணார் நாண் மலர்கொண்டங் கிசைந்தேத்து மடியார்கள், பண்ணார் பாடலறாத படிறன்றன் பனங்காட்டூர்ப், பெண்ணாய பிரானைப் பேசாதார் பேச் சென்னே"

"வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப், பஞ்சிற்சீ றடியாளைப் பாகம்வைத் துகந்தானை, மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங் காட்டூர், நெஞ்சத் தெங்கள் பிரானை நினையாதார் நினைவென்னே"

—§—

ஸ்ரீமத் – மாணிக்க வாசக சுவாமிகள் திருவம்மானை.

"கல்லா மனத்துட் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பல மன்னு
மொல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய்"

பரமானந்த நிருத்த தரிசனம்.

"கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாளனாய் வந்து வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காணவென் றன் பசுபாச மறுத்தானை
யெல்லோரு மிறைஞ்சுதில்லை யம்பலத்தே கண்டேனே"

"பத்திமையும் பரிசுமிலாப் பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றாற் றிருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லைக் கண்டேனே"

### ஒழியாவின்பத்துவகை.

"பத்திலே னேனும் பணிந்தில னேனுமுன் னுயர்ந்தபைங் கழல்காணப், பித்திலனேனும் பிதற்றிலனேனும் பிறப்பறுப்பாயெம்பெருமானே முத்தனையானே மணியனையானே முதல்வனே முறையோவென், றெத்தனையானும் யான்றொடர்ந்துன்னை யினிப்பிரிந் தாற்றேனே"

### அனுபவ வழியறியாமை.

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப், பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணஞ், சித்தமல மறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட, வத்தனெனக் கருளியவா றார்பெறுவாரச்சோவே"

---

## ஸ்ரீமத் - திருமூல நாயனர் திருமந்திரம்.

### கல்வி.

"குறிப்பறிந்தே னுடலுயிரது கூடிச், செறிப்பறிந் தேன்மிகு தேவர்பிரானை, மறிப்பறியாது வந்துள்ளம் புகுந்தான், கறிப்பறியா மிகுங் கல்வி கற்றேனே"

"நிற்கின்ற போதே நிலையுடையான் கழற், கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள், சொற்குன்ற லின்றித் தொழுமின் றொழுதபின் மற்றொன் றிலாத மணிவிளக்காமே"

"நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார், பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங், கோலொன்று பற்றினாற் கூடாப் பறவை கண், மாலொன்று பற்றி மயங்குகின்றாரே"

"பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின், முற்றதுவெல்லா முதல்வனருள்பெறில், இற்ற விரகிற் கிளரொளி வானவர், கற்றவர் பேரின்ப முற்று நின்றாரே"

### கேள்விகேட்டமைதல்.

"அறங்கேட்டு மந்தண ராய்மொழி கேட்டு, மறங்கேட்டு வானவர் மந்திரங் கேட்டும், புறங்கேட்டும் பொன்புரை மேனியெம் மீசன், றிறங்கேட்டும் பெற்ற சிவகதிதானே"

"மயன்பணி கேட்பது மாநந்தி கேட்பி, னயன்பணி கேட்ப தரன் பணியாலே, சிவன்பணி கேட்பவர் தேவருமாவர், பயன்பணி கேட்பது பற்றதுவாமே"

"சிறியார் மணற்சோற்றிற் றேக்கிடு மாபோற், செறிவா லனுபோகஞ் சித்திக்கு மென்னிற், குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை, யறியா திருந்தா ரவரவரன்றே"

## கல்லாமை.

"நில்லாது சீவ னிலையன் றெனவெண்ணி, வல்லாரறத்துந் தவத்துளு மாயினர், கல்லா மனிதர் கயவருலகினிற், பொல்லா வினைத்துயர் போகஞ்செய்வாரே"

—*—

## ஸ்ரீமத் – திருவள்ளுவ நாயனர் திருக்குறள்.

"கற்றதனலாய பயனென்கொல்வாலறிவ னற்றூடொழா அரனின்"
"மலர்மிசை யேகினன் மாணடிசேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்"
"பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்க நெறிநின்றார்நீடுவாழ்வார்"
"கோளில்பொறியிற்குணமிலவேயெண்குணத்தான் றாளைவணங்காத்தலை"
"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா ரிறைவனடி சேராதார்"
"பொருளல்லவற்றைப்பொருளென் றுணரு மருளானுமாணாப்பிறப்பு"
"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்தலைப்படுவர் மற்றீண்டுவாராநெறி"

## ஔவையார்க் குறள்.

"உடம்பினைப்பெற்றப் பயனுவதெல்லா முடம்பினி லுத்தமனைக்காண்"
"பத்தியாலுள்ளே பயின்றரனை யர்ச்சிக்கின் முத்திக்கு மூலமது"
"நல்லானைப் பூசித்து நாதனெனவுருகி னில்லாதோ வீசநிலை"
"நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிது யெல்லையிலாத சிவம்"

---

## பகவத்கீதை.

"பாடும் பனுவல் பலவோதி யவற்று லறியும் பயனுணர்ந்து, நீடும் புலன்க ளவைவென்று நிலையிற் கலக்கற் கரியானு, யோடும் பொன்னு மொருபொருள்போ லொக்கப்பார்க்கு மவனேயிங், காடும்பெரிய மாயக் கூத் தாடத் துகண்டமைந்திருப்பான்"

"எல்லாத் தவமு மியற்றிநின் றோனினு, மெல்லாக் கலைகளுங் கற்றுணர்ந்தோனினுஞ், செல்லாக் கருமமெல்லாஞ் செய்தவனினு, நல்லாளியோகியே நீயவை நண்ணுவாய்"

" அறிவினு லென்னையேயாக வறிந்துகொண் டமைதியாலே, பொறி வழி யடைத்தெப்போது மென்னையே போற்றி செய்து, நெறியினால் வழுத்திவாயா லென்னையே நினைந்து நெஞ்சாற், செறிதருமவரே கண்டாய் தேவரிற் றெரியப்பட்டார் "

---

## பிரபுலிங்கலீலை.

"அறத்துறப் பெய்தினு மன்பினாலறம், சிறப்புறச் செய்தலிங்கரிது செய்யினும், புறச்சம யங்களைப் போக்கியாகம, நெறிச் சமயங்களை யரிது நேர்தலே "

" ஆகமம் புகனெறி யடைவ தாயினுஞ், சோகமில் சைவநற் றுறையை நன்றெனச், சேர்ந்தலரித்து சேர்வனாயினும், ஏகலிங் கபிக்யனா குதலன் றெண்ணையே "

" புண்ணிய முதிர்வினாற் பொருந்தி யங்கையில், கண்ணுற நிகழ்வுறு சிவலிங்கத்தினை, எண்ணிய மனமுட னென்றும் வந்தனை; பண்ணிய முயல்பவன் பத்தனென்பவே "

"அருளெனும் புனலினை யாட்டிச் சாந்தமாம், வரைநறுஞ் சந்தொடு மருவ விந்திய, விரைமலர் புனைந்தறி வினையருத்தரிற், பரமனை யவன் சிவ பத்தனாகுவான் "

" காலமுங் கருமமுங் கடந்தகாரணன், பாலுறும் பரிசறப் பார்மடந்தையர், கோலமும் பொருளையுங் குறித்து நச்சுநர், சீலமும் விரதமுந் தீயவென்பரால் "

---

## கைவல்லியநவநீதம்.

"சொரூப ஞானமும் விருத்தி ஞானமுமென்று சோதிஞானம திரண்டாஞ், சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாத் தோன்றும் வேறிலை மைந்தா, சொரூப ஞானமஞ் ஞானசத் துருவென்று சுழுத்தியிற் கண்டாயே, சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும் விருத்தியின் ஞானம் "

" சடமதாகிய தியான மெய்யாகிய சர்வ முத்தியை நல்குந், திடமதான தெப்படியெனி லவரவர் தியானமே பிறப்பாகு, முடலமாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்களாகுவர் மைந்தா, தொடர் பவங்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூபமாகுவர் மெய்யே "

## ஸ்ரீமத் - தாயுமானசுவாமிகள்.

" கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள் கற்றுமறி வில்லாத வென் கர்மத்தை யென்சொல்வேன் கதியையென் சொல்லுவேன் கைவல்ய ஞானநீதி, நல்லோருரைக்கிலோ கர்ம முக்கியமென்று நாட்டுவேன் கர்ம மொருவ னாட்டிலோ பழைய ஞானமுக் கியமென்று நவிலுவேன் வடமொழியிலே, வல்லா னொருத்தன்வரவுந் திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன் வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன், வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த வித்தையென் முத்திதருமோ வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே "

" கல்லாமை யெத்தனை யகந்தை யெத்தனை மனக் கள்ளமெத்தனை யுள்ளசற் காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை கதிக்கென் றமைத்த வருளிற், செல்லாமை யெத்தனை விர்தாகோஷ்டி யென்னிலோ செல்வமெத்தனை முயற்சி சிந்தை யெத்தனைசலன மிந்த்ரசாலம் போன்ற தேகத்தில் வாஞ்சை முதலா, யல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை யானே னிவைக்குமாளோ வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி யானந்தமான பரமே "

" கல்லாத வறிவுமேற் கேளாத கேள்வியுங் கருணைசிறி தேதுமில்லாக் காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாய்க் காதலித் திடுநெஞ்சமும், பொல்லாத பொய்ம்மொழியு மல்லாது நன்மைகள் பொருந்துகுணமேதுமறியேன் புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும் புருஷார்த்தமேதுமில்லேன் "

## பொன்னைமாதரை.

" கற்று மென்பலன் கற்றிடு நான்முறை, சொற்ற சொற்கள் சுகாரம்பமோ நெறி, நிற்றல் வேண்டு நிருவிகற்பச் சுகம், பெற்ற பேர்பெற்ற பேசாப் பெருமையே "

## பாயப்புலி.

" கூற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே, சுற்றுந் தொழில் கற்றுச் சிற்றின்பத்தூடு சுழலி னென்னுங், குற்றங்குறைந்து குணமே விடுமன்பர் கூட்டத்தையே, முற்றுந் துணையென நம்பு கண்டாய் சுத்த மூட நெஞ்சே "

## நின்றநிலை.

" கற்றதுங் கேட்ட துந்தானே யேதுக்காகக் கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான், குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு குணங்குறியற் றின்பநிட்டை கூடவன்றோ "

### வள்ளலார் சாத்திரம், பதிபசுபாசவிளக்கம்.

“ மாசறப் படித்தானேனு மயலறத் தெளிந்தானேனு, மாசறத் துறந்தானேனு மஞ்செழுத் துணர்ந்தானேனு, மீசன்வே றியான்வே றென்னு மிருமையுங் கழலானுகிற், பாசமுங் கழல்வதின்றும் பதித்துவந் தானு மின்றே ”

“ ஞானத்தைத் தவிரபாவக் குழாங்களை நாசஞ்செய்யு, ஞானம்வே றில்லை யிந்த ஞானம்போ னலமொன் றில்லை, ஞானசா தகத்தையன்றி நவையுறு குடும்பம் போக்கு, ஞான்சாதனம் வேறில்லை நன்னெறி யறிமாணுக்கா ”

“ பாதக மனைத்தும்நீங்கும் பக்குவச் சித்தத்தார்க்கு, மேதகு ஞானத் தின்கண் விருப்பமும் வியப்புமுண்டாம், பாதகத்தாற் கட்டுண்ட பதித சித்தத்தார்க் கெல்லா, மேதகு ஞானவார்த்தை கிடைக்குமோ விளம்புங் காலே ”

“ யாவனொருவ னஞ்ஞானச் சேற்றைஞான விரும்புனலா, லோவக் கழுவுவா னவனே யொளிசே ரமல சதாசுத்தன், மூவுகரும தற்பரனுய்த் தபன்னெழுமுன் றரியானு, யாவலோடுங் கங்கைமுதற் படிந்தானேனு மசுத்தனே ”

“ ஞானநீராற் சுத்தனுய் நண்ணுங்கிருத கிருத்தியனுய், ஞானவாளு யமர்ந்திருக்கும் யோகிக்கிந்த ஞாலத்தி, லானகரும மணுவேனு மில்லை யுண்டு போற்றேன்றின், ஞானந்தன்னை யுள்ளபடி யறிந்தஞானி யல்லனவனே ”

---

### சிவஞானப்பிரகாச வெண்பா.

பாடப் படிக்க வெழுதப் பயன்சொல்லக்
கோடாமல் வந்துங் குணமில்லை—சீடாகேள்
சித்திர தீபம்போலச் சிந்தைதனை நிறுத்திச்
செத்தசவம் போலே—திரி.

“ கல்லைப் பொன்னுக்கிக் கடுமுதலை வாய்ப்பிள்ளை
மெல்ல வழைத்து வெறுக்கையினைச்—சொல்லுகின்ற
வாற்றிலிட்டு மீட்டு மருங்குளத்திற் கண்டதுவுஞ்
சாற்றிற் சிவகரணந்—தான் ”

“ என்னைப் பெண்ணுக்கி யிரும்பாலை நெய்தலா
யும்பர் மகிழ்ந்திடவன் றோதியதுஞ்—சம்பிரான்

கதவ மடைக்கக் கழறியது மெல்லாம்
பதிகரண மென்றுணரப்—பா"

"அரவங் கடித்திறந்தா னுருயிரை மீட்டுந்
திருமறைக் காட்டிற்பின் றிறந்துங்—கரமலையை
நீற்றறையை வேகமற நீராகப் பாடியதுங்
கூற்றுதைத்தான் போதமெனக்—கொள்"

"ஊமையினை மாற்றி யுணர்மொழியைச் செய்ததுவுங்
காமனையென் றேனெழுதக் கற்றதுவு—மாமையைப்போ
லைந்தடக்கி யீசனருளிற் கலந்ததுவு
முந்தும் பசுகரண—மோ"

———

ஸ்ரீமத் - தண்டபாணிசுவாமிகள் சிறப்புநூல்.

"எத்திறமை யில்லா ரெனினு மிறையிடத்துப்
பத்தி கொண்டோராயிற் பழுதுறார்—சித்தியெட்டுஞ்
செய்து களித்துத் திரும்பாத வீட்டினும்போ
யெய்துவரென் றேதுமுல—கே.

சித்தாந்த பத்தி.

"பத்தி நிலையிற் பதியாத பாமரர்க்குச்
சித்தியொடு முத்தி சிறிதுமில்லைக்—கத்திகொண்டு
வெட்ட வரினுமொரு மெய்ப்பொருளுண் டென்பவருக்
கிட்டமுற்று மெய்துவதுண்—டோ"

"ஆலயத்தி லன்புசெய்தா லவ்வச் சமையத்துச்
சீலமிகு தெய்வத்தின் றேட்டமுண்டாஞ்—சால
வருந்தி யுழைத்தான் மனம்போல் வடிவம்
பொருந்திவரு மொன்றிலன்பு—போம்"

கல்விப்பொருள்.

"செல்வ முதிர்ந்தாற் செருக்குண்டாந் தேடரிய
கல்வி முதிர்ந்தாற் கவியுண்டாம்—பல்விதத்தாற்
குன்றி யழியுநீ கொடுஞ்செருக்குப் பாமாலை
யென்று மழியாத—தே"

"கல்வியிலார் செய்தவமுங் கைதவமே காதலிக்கு
நல்வினையுந் தீவினையே நன்குணர்ந்த—வல்வினையோர்
செய்கொலையும் புண்ணியமே தீவினைப்பு நன்னினைப்பே
மெய்கொள் பல நூலுரைக்கு—மே"

" நாய்போற் சினந்து நரிபோற் பயம்பெருக்கிப்
பேய்போற் பறந்து பிணங்காமற்—றூய்போ
லிரவுபக லற்றானை யெண்ணித் தினமும்
பரவுவதே கல்விப்—பயன் "

—§—

ஸ்ரீமத் – பட்டினத்துப்பிள்ளையார்.

" பொல்லாதவனெறி நில்லாதவனைம் புலன்கடமை
வெல்லாதவன் கல்வி கல்லாதவன் மெய் யடியவர்பாற்
செல்லா தவனுண்மை சொல்லாதவனின் றிருவடிக்கன்
பில்லாதவன் மண்ணிலேன் பிறந்தேன் கச்சியேகம்பனே "

" கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையு நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே "

" பொருளுடை யோரைச்செயலினும் வீரரைப் போர்க்களத்துந்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோ
லருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பி
லிருளறு சொல்லினுங் காணத் தகுங்கச்சி யேகம்பனே "

" ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்பெற்றத்
தாயாரை வைவர் சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்க
ளாயார் பிறர்க்குப காரஞ்செய்யார் தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே "

" கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங்கொடார் குரு சொன்னபடி
நில்லா ரறத்தை நினையார் நின்னும நினைவிற்சற்று
மில்லா ரிருந்தென் னிறந்தென் புகல்கச்சி யேகம்பனே "

" சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனையால் வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூ
லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி யேகம்பனே "

———

## குணங்குடி மஸ்தான்சாஹிபு அவர்கள் பாடல்.

" சாதனையி லேற்றவும் வாதனையை மாற்றுமோர் சாயுச்சிய மருள் புரியவுஞ் சட்டக்குழப்ப மெல்லாம்விட்டு நன்நிஷ்டை சாதித்தருள்புரியவுங், காதிலுப தேசங்க ளோதவும் மாதவங் கைக்களித் தருள்புரியவுங் கரதலா கமலமென வென்னுக்கு ளென்னையுங் காட்டிவிட் டருள்புரியவும், போதனைக் கெட்டாத போதனைக் கைக்கொண்டு போதித்துனருள் புரியவும் புத்திக்கு மெட்டாத மத்திபத்தீபம் பொருத்திவைத் தருள்புரியவும், மாதாபிதா வனைய தவராஜ சிங்கமே வரவேண்டு மென்றனருகே மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே மௌன தேசிகநாதனே "

### கட்டளைக்கலித்துறை.

" எண்சா ணுயரத் திருக்கும் பனையி னிறக்கி யுண்ணும்
பஞ்சாட் சரமெனும் பாரிய வாளினைப் பாய்ந்தெடுத்துத்
தஞ்சாவூ ராளு மகராஜன் பாதந் தனைப்பணிந்தால்
கெஞ்சாக் குணங்குடி கொள்வா யிதுபுத்தி கேணெஞ்சமே "

" படிக்கும் படிக்கு நடக்கின்றையோவிப் பழஞ்செருப்பா
லடிக்கட்டுமோ வுனக் கொத்தாசை யாரறை பாவி நெஞ்சே
முடக்கிப் படுத்துக்கொள் மூச்சந்தி குப்பையின் மோடுகளி
லடக்கிக் குணங்குடி கொள்வா யது பரமானந்தமே "

### நேரிசை வெண்பா.

" கள்ளினங்க ளுண்ணுங் கழுதைகா ளென்சொலினு
மெள்ளளவு நும்மிதயத் தெய்திலையே—உள்ளம்
இணங்கா மடமாந்த ரெக்கேடு தான்கெடினுங்
குணங்குடியார்க் குண்டோ குறை "

" நாசி நுனியி னயனத் திடைவெளியிற்
றேசிகனா ராடுந் திருநடனம்—வாசிகொடுத்
தோரா யெழுவா யுணர்வா யருணெஞ்சே
பாராய்க் குணங்குடியின்—பால் "

### மட்டு விருத்தம்.

" வஞ்சவேல்கொடு மார்பி லெறியினும், விஞ்சவே தணல் மீட்டி யெரிக்கினு, நஞ்சினூ ரழனுக நலியினும், அஞ்சிடாதவ ரானந்தமாவரே "

---

### சிவானந்தபோதம்.

" பெண்ணாலும் பொன்னாலும் பூமியாலும் பெருக்கவே யிச்சைக் கொண் டொன்றுக் கொன்று, தின்னார்க ளூறுவாடிச் செத்தா ரல்லாற்

சேர்ந்துமன மொன்றாகிச் சிறந்திட்டாரோ? கண்ணாலே பார்த்துநீ சுகங் கண்டாயே கவலைக்கே யாளாகிக் கருத்திழந்தும், புண்ணாகிப் பிறப்பிறப்பிற் புகுந்திட்டாய்நீ பூமலர்த்தா டுணையென்று புகழ்வாய் நெஞ்சே"

வெண்பா.

"தேக மெடுத்ததுவுஞ் சிந்தை யுடைத்ததுவும்
போக சமுசாரத்திற் புக்கதுவும்—தாகமது
கொண்டு தவிர்த்ததுவுங் கூறுங் கனவெனவே
கண்டு சொல்லும் நூலதனைக்—காண்"

"ஒருவர்தின வொருவர்சொறிந் துற்றபோது வுற்றவர்க்கோ சொறிந்தவர்க்கோ வுற்றுப்பாரு, மருவுமந்த சொப்பனத்திற் கண்டகாட்சி மகிழ்ந்தவர்க்கோ கேட்டவர்க்கோ மதித்துப்பாரு, உருசியுட னறுசுவைகொண் டுண்டவர்க்கோ வுவமையுடன் கண்டவர்க்கோ வூன்றிப்பாரு, தெரிசன முங் கண்கண்டு சிந்தையற்ற சிவஞான மவரவர்க்கே தெளியுந்தானே"

"சேறுபோல் தளதளென வலைபூமிக்குள் திடமான கம்பத்தைகாட்டினக்கால், மாறுகொண்டு விழுந்திடுமென றதனைச் சுற்றி மணற்கல்லைக் கெட்டித்து முறைக்குமாபோல், கூறுகின்ற சாத்திரத்தின் சாட்சிதந்து குலைந்திடாத் திடமுற்றுக் குறித்துநின்று, வீறுகொண்டு நெஞ்சேநீ யனுபவித்தால் மெய்ஞ்ஞான வீடதனில் விளங்குவாயே"

"சன்னியாசி யானதிலு மூடருண்டு சமுசாரஞ் செய்வதிலு ஞானியுண்டு, முன்னாலே யேதுவாம் பிராரத்துவங்கள் மூட்டிவிட்டு ஞானிக்கு முறைத்தப்பாது, பின்னாலே யிருவினையுந் தொடரச்செய்து பெற்றிடுவோ ராசான்றன் கிருபை கொண்டு, பின்னு பின்னங்களா லென்றெண்ணாதே பெருஞ்சோதி முத்திரையைப் பேணிக்கூடே"

---

சிவசிவ வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா.

கல்வி.

"பார்க்கவன்பாற் கல்வி பயின்றகயன் பார்க்கவனோய்
தீர்க்க வரம்பெற்றான் சிவசிவா—வேற்கநன்றாக்
கற்கக் கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத்—தக"

"சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோஞ் சார்ந்தவப்ப
தம்பிரிவி னுள்ளதுவுஞ் சோமேசா—நம்பி
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர்—தொழில்"

## கல்லாமை.

" புத்தர் மிகவாது புகன்றதுபோய் வாதவூர்ச்
சித்தர்மு னேதானூர் சிவசிவா—வொத்தநெறி
கல்லாதவரு நனிநல்லர் கற்றூர்முற்
சொல்லா திருக்கப்—பெறின் "

" மெய்த்ததிரு வள்ளுவனூர் வென்றுயர்ந்தார் கல்விநலந்
துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசா—வுய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்று ரனைத்திலர் பாடு "

## கேள்வி.

" வெய்யமரப் பேருரைத்த வேடனும் வான்மீகியெனுந்
தெய்வமுனி யானான் சிவசிவா—துய்ப்
செவியுணர்விற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றூரோ டொப்பர்—நிலத்து "

" ஊனுக்கூ னென்னு முரைகண் டுவந்தனரே
தூநற்சீர்க் கண்ணப்பர் சோமேசா—வானதனுற்
கற்றிலனாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றூந்—துணை "

—※—

## தண்டலையார் பழமொழிவிளக்கம்.

" ஓதரிய வித்தைவந்தா லுரியசபைக் கழகாகு மூலகிலியார்க்கு, மீத லுடனறிவுவந்தா லினியகுணங் களுக்கழகா யிருக்குமன்றூே? போதமி குந் தண்டலையார்த் திருநீறு மெய்க்கழகாய்ப் பொலிந்து தோன்றுங், கா தினுக்கே கடுக்கனிட்டால் முகத்தினுக்கே யழகாகக் காணுந்தானே "

" தண்ணமரு மலர்ச்சோலைத் தண்டலைநீ நெறியார்மேற் றமிழைப் பாடின், எண்ணின்மிக யிம்மையினு மறுமையினும் வேண்டியதுண் டிதையோராமல், மண்ணின்மிசை நரஸ்துதிகள் பண்ணியலைந்தேதிரிவர் வருத்தமின்றி, வெண்ணெய்தம திடத்திருக்க நெய்தேடிக் கொண்டலை யும் வீணர்தாமே "

—※—

## இளசைப்பதிற்றுப்பத்தந்தாதி.

"பதிக்கப் பெற்றே னுளத்தையவன் பாதாம்புயத்தி லெஞ்ஞான்றுந் துதிக்கப் பெற்றே னைந்தெழுத்துஞ் சூழப்பெற்றே னிளசைநகர், மதிக் கப்பெற்றே னவனன்றி மற்றூோர் தெய்வ மிலையென்றே, யுதிக்கப் பெற் றேன் சிவஞான மின்னும் பெறம்பே றுன்றுளதோ "

"நிட்டையாவது கெட்டுயிர்ப் பெறவுட னிமிர்த்துவாள் விழிமூடிப், பட்டவாயினீர் வறந்திட வடதிசை பார்த்துறைந்திடும் யோகோ, சட்டசத் தினைப் பிரித்துளப் பதைப்புறச் சாக்கிராதீதத்தே, சுட்டிறந்துநின் றிளைசைகா யகன்கழல் சூழ்ந்திடுஞ் செயலன்றே"

—§—

கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

"உடைந்து ளைந்து நெக்குநெக் குணங்குழைந்து சின்மயத்
தடைந்து கண்ண சும்பிருந்து தாரைபாய வன்புநீர்
குடைந்துவாழு மன்பர் சிந்தை கோயில்கொண்டு வாழ்வரால்
மடந்தை பாகமாய்க் கலைசை வாழ்சிதம்ப ரேசரே"

"அண்டரண்ட மூடறுத் தகம்புறம்பு மேகமாய்
மண்டி யெங்கணும் பரந்த வின்பவாரி தன்னுளே
தண்டலைக் கலைசைவாழ் சிதம்பரேசர் தம்முருக்
கண்டுகொண்டு போற்றவல்ல காட்சியாளர் செல்வரே"

ஸ்ரீமத் - பட்டினத்துப்பிள்ளையார் கோயினான்மணிமாலை.

"நெறிதருகுழலை யறலென்பர்க ணிழலெழுமதிய நுதலென்பர்க
ணிலவினும்வெளிது நகையென்பர்க ணிறம்வருகலசமுலையென்பர்க
ளறிகுவ தரிதிவ் விடையென்பர்க ளடியிணை கமல மலரென்பர்க
ளவயவ மினைய மடமங்கைய ரழகிய ரமையு மவரென்செய
மறிமழுவுடைய கரனென்கிலர் மறலியை முனியு மரனென்கிலர்
மதிபொதிசடில தரனென்கிலர் மலைமகண்மருவு புயனென்கிலர்
செறிபொழினிலவு தில்லையென்கிலர் திருநடநவிலு மிறையென்கிலர்
சிவகதியருளு மரசென்கிலர் சிலர்நர குறுவ ரறிவின்றியே"

மும்மணிக்கோவை.

"இன்றிருந்து நாளை யிறக்குந் தொழிலுடைய
புன்றலைய மாக்கள் புகழ்வரோ—வென்றுமே
வாளுடையான் றெய்வ மருதுடையா னுடையேனை
யாளுடையான் செம்பொ—னடி"

திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

அலங்காரம்.

"எல்லார்க்கு மேலவ னீயென் றறிந்துனை யேத்தியன்பாய்ப்
பொல்லாக் கருமலந் தீர்ந்தான் பொதியப் புகழ்முனிவன்

சொல்லாற் புனைதொங்க னக்கீரன் சாத்தித் துனிகடந்தா
னல்லார்க்கு நல்லவனே சமீராபுரி நாயகனே "

" ஆயன் குழலிசை கேட்கும் பணாமுடி யாடரவம்
வாயையங் காத்து மணிகாலுதல் வள்ளல் பாடல்கொண்டு
தூய கொடைகொடுத் தாங்குறும் போரிச் சுராதிபனை
நாயகனைக் குமரேசனை நாடுவர் ஞானிகளே "

———*———

## ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகள்

## பாடுகின்றபனுவல்.

பாடுகின்ற பனுவலோர்க, டேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்று, ளாடுகின்ற வழகனே. (க)

அத்தனென்ற நின்னையே, பத்திசெய்து பனுவலால்
பித்தனென்று பேசவே, வைத்ததென்ன வாரமே. (உ)

சிந்தையன்பு சேரவே, நைந்து நின்னை நாடினேன்
வந்துவந்து ளின்பமே, தந்திரங்கு தானுவே. (௩)

அண்டரண்டம் யாவுநீ, கொண்டுநின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகணீர், கண்டநெஞ்சுகரையுமே (ச)

அன்னைபோல வருண்மிகுத்து, மன்னுஞான வரதனே
யென்னையே யெனக்களித்த, நின்னையானு நினைவனே. (ரு)

———

## ஸ்ரீமத் - சாந்தசித்த சிவலிங்க நாயனுர்

## பூரணாநந்தோதயம்.

" மனமுருக சுனைபெருக வினைகுறுக துணைமருவ மண்ணும்விண்ணொன்றாகியே மகின்மயுற சுகவுவகை திகழ்பெற பகைமையற மகிழ்வுதரு பரகுருவருள், நினைவினொடு மறதிகெட குணமிலக வுணருமுணர்நீக்கமற் றொளியையுமிழ நிராமயம தாகிவெளி நின்றபொரு ளாகியிமைநேயமீ தூரியேக, முனைநெடிக வெனைநழுவி யுணவமுத முதவுசிவ முக்யவாநந்தோதய முகிவுவனு வுருவில்வர புவியே மொருங்கூர்ந்து முரசமறை யோலமிடநீள், கனகிரி சிகரமுதி தொனியோயவி னிர்க்குணங்கலவுவது மென்றுபுகலாய் கருணைவிழி பரவைசிக ரறிவிலறிவாய் முளைக்கண்ணுடைய வள்ளல்குருவே "

" பாடவறியா வெனைத் தமிழ்கற் றுணர்ந்தபா வாணர்முன் னேன்படைத்தாய் பத்மா சனத்தினி லிருந்துனை தொழாதவெனை பக்தர்முன்

னேன் படைத்தாய், நாடிநின் றிருவருளை யடைகிலாக் கொடியனேனை நானாக வேன்படைத்தாய் நத்தி நடனங்காணு முத்தமர்கண் முன்னிந்த நாயேனை யேன்படைத்தாய், கூடாத நெற்றிவிழி சூடாத வெனைநின் குழாங்குலவ வேன்படைத்தாய் குருநினரு ளினியெனினும் வருதல்மெய் யெனினமனக் குரங்கொடுற வேன்படைத்தாய், காடேகவேவளர்க் கின்ற வுடலேனைநிற் காளாக்க மனமிசைவையோ கருணைவிழி பரவைநிக ரறிவி லறிவாய்முளைக் கண்ணுடைய வள்ளல்குருவே"

"கல்லாத தீதனரு ளில்லாத தீதன்முற் கர்மமொழியாத தீதன் கன வினிலு நல்லறிவை நாடாத தீதன்முழு கவலைகுடி கொண்ட தீதன், பொல்லாத வஞ்சமன வுல்லாச மாப்பிறர்ப் பொருளைகவர் கின்றதீதன் புகலருஞ் சற்சனரை சேராத தீதன்வினை பூராயமான தீதன், எல்லாவகந் தைக்கு மிசைகின்ற தீதனுன ரேக்கமில்லாத தீதன் என்போலு மொரு தீத னெங்குமிலை யப்பனே யென்செய்வே னுன்கு பேர்க்குக், கல்லானி ழற்கணுரை தேசிகா வென்னைநீ கைதூக்குதற் கருமையோ கருணைவிழி பரவைநிக ரறிவிலறி வாய்முளைக் கண்ணுடைய வள்ளல்குருவே"

"பாடவருமோ பொருளை நாடவருமோ வருளை பக்திவருமோ கன் மனம் பதறவருமோ பொறிகள் கதறவருமோ நெறிகள் பலிக்கவருமோ வறிவதும், கூடவருமோ விழியை நாடவருமோ மொழியை குறிக்க வருமோ தானதாய்க் கொள்ளவருமோ வமுதமெள்ளவருமோ வெளிதில் குறி நிராசனமீதினுங், தேடவருமோ குருவை கூடவருமோ கருவை தெளிய வருமோ சிவமெனுஞ் சிந்தையுறுமோ மோன முந்தவருமோ கியானந் திருவருள் சொரூபமாமோ, காடுடல மேகுமுன் வீடதித ஞானங் கதிக்க வருமோ புகலுநூல் கருணைவிழி பரவிநிறையறிவிலரு ளறிவில்வரு கண்ணுடைய வளல்சின்மயமே"

"ஞானிமா ரெனச்சொல வனேகம்பேரை நானறிந்தேன் பூமிமிசை நடனங் காணேன், தேனென வானந்தமுத மணிநாவுண்ணச் சிவயவறு பூதிதனிற் றெளிந்த முத்தர், மோனமெனுங் கண்டதையு நீங்கிமேலும் முக்கிய வானந்தமய மாவரல்லால், ஈனசுக மமதையற விந்நூற்றேர்ந்தோர் ஏகபத முத்தியெனும் வீடுளாரே"

வெண்பா.

"பேரற்றார் பூதம் பிறப்பற்றார் பேர்முடிந்த
வூரற்றார் பாழி னுருவெளியே—பேரில்
திகம்பரினா யாடுந் திருக்கூத்தரிய
அகம்புறந் தன்னை—யறி"

" பாருங்கள் பூரணா நந்தம்பாரும் பரமகுரு வள்ளலருட் பாலிப்புண்டாம் யாரப்பா வனுபவா நந்தோலதய வாச்சாரியஞ் சம்பந்த ரருளாற் சொல்ல, தேரப்பா நூலையருட் டேவியாலே தெக்ஷணாமூர்த்தியிடந் தெரியும்பாரு நேரப்பா கயிலையிடம் நீயேயாவாய் நீடுழி கற்பங்கோள் நினைவிலாகும், சாரப்பா பூரணமே சாரநீயும் சத்துசித்துந் தன்மைத்துட் சர்வாநந்தம் வேரப்பா வேறின்றி வேதாந்தத்தின் வெளியாகி யொளியாகி வீடுமாகி, பேரப்பா பெற்றவர்க்கே பிறவியேது பேசாதவிடமாமே பேராநந்தக் கூரப்பா குருமொழியாற் குறித்த சூக்ஷங் கூறினேன் குருவருளாற் கூர்ந்துப்பாரே"

"பாரப்பா பத்தருண்டு சித்தருண்டு பண்பான பரசிவன் முத்தருண்டு காரப்பா அவர்கள் சொல்லைக் கருத்திலூணு கயிலாய மிடமுனக்குக்காணியாகும், யாரப்பா வெனவுமதை யகங்காரத்தால் அறியாமல் யெதிர்த்து மிக வநர்த்தந் தேடிச்சேராதே பாழ்நரகு ஜென்மா ஜென்மம் தீராத கன்மவினைத் தீராதப்பா, ஊரேதுப் பேரேதுவுற்றாரேது ஒருவர் துணை யில்லையப்பா வுற்றுப்பாரு போரேது நின்றதத்வம் பொய்தான் பொய்யாய் போகாதே எமனிடம் பொறுப்பதேது, தேரப்பா சிவமயத்தை தினமும் போற்றித் தேர்ந்தடியா ரடிசேர் திருவருளைநோக்கிச் சாரப்பா சற்குருவின் வழித்தாய்ச்செல்ல சாயுச்ச பதமதுவுஞ் சாருந்தானே"

" சித்தனென்ற பேர்யார்க்குத் தெளிந்திட்டோர்க்கு ஜெகமாய்கை சித்தானோன் சித்தனாகும், கர்த்தனென்ற பேர்யார்க்கு கடந்தஞானி கருவானோன் காரணனே கர்த்தனாகும், பித்தனென்ற பேர்யார்க்கு பிரமாநந்தன் பேசாத யிடமறிந்தோன் பித்தனாகும், முத்தனென்ற பேர்யார்க்கு மவுனயோகி முப்பாழு மொன்றானோன் மவுனியாகும் சுத்தனென்ற பேர்யார்க்கு சிவயோகிக்கு சுருதி முடித்தானோன் சுத்தன் சுத்தன், சத்தனென்ற பேர்யார்க்கு சர்வக்கியானி சத்யமெதானானோன் சத்தனாகும், நித்தனென்ற பேர்யார்க்கு நிறைந்த ஜோதி நிர்விகற்பயந்தானோன் நித்தனாமே இத்தனையுந் தானாகி யிருந்த ஒன்றே யெனையறிய சின்மயந்தாம் யெங்குந்தாமே"

---

## உபநிடதம்.

" முத்தரையும் பெத்தரையு முகக்குறியா னகக்குறியான் முழுதுந் தேரின், மெத்தெனவாகிய மொழியு மானந்த பரவசத்தான் மிகுந்தசோர்வுஞ், சித்தநிலை திரியாத செல்வுமுமாயிருப்பர்நல்லோர் தீயோரெல்லா, மித்தகைமை யோர்களையே யிகழ்ந்துபுகழ்ந் தோர்க்குறவா யிருப்பர்தாமே"

## கடவுள்மாலை.

### தாழிசை.

" பத்தியோடுநெறி பற்றிநிட்டைபுரி பத்தரும்பல பலஸ்தலம் பார்த்துழன்றெவையும் பரமனென்றுதுதி பண்ணிடுஞ்சருவ புல்லரும், வெற்றி பெற்றிட பலக்கலைக்களுழல் வீணருந் தன்மதம் மெய்யெென விகடதர்க்கமிடு பாதகர்பரம விமலநானெனசொல் இத்தரைப், பித்தருங்கடவுளொருவரென்றுபுகழ் பேசிடுஞ்சருவ வித்தரும் பிரியமோடுலக வேட்கையற்றுதவழ் பெட்பரும்பெரியர் சிறியரும், அத்தனைப்பெய ரகத்திலுன்னலனவாகியேகபரி பூரண அண்டரண்டபகி ரண்டமேவிதுரி யங்கடந்திடு மநாதியே "

" திருமகத்வமுறு முமதுபொற்புகர சேவடிக்கன்பெற வவனியில் தினசிரத்தையொடு சருகுபக்ஷணைசெய் தேகசித்திநிலை கற்பமுண், பெருமையுற்றதவ முனிவர்சித்தர்குழு பெட்பொடுச்சிகரி குகைகளுள் பிரமகற்பதிரி துகள்களைந்துபொறி பிறழ்புலன்குரூரமற்றுவாழ், பரிவொடுப்பலர்களிகவரத்தினசை பற்றினுந்துகளியரிட்டமேற் பக்கமொப்பரகசித்தமும் மிசைநல் பக்திகேடன்பலவேட்பிருள், அரணுறப்பதத நறுவழிப்பிறழும் அசடனுகிலுங் கிர்பைப்புரி அண்டரண்டபகி ரண்டமேவிதுரி யங்கடந்திடு மநாதியே "

### விருத்தம்.

" இல்லில்லை வக்கணைக்கள்இல்லை நன்மொழி யிசைத்தில்லை தசபொருத்தம் என்பதுஞ் சற்றில்லை மங்கலத்துற்றில்லை யீதுபுன் கவியாழ்ந்தநற், சொல்லில்லை தொடர்புகட் டில்லில்லை மிகவழுத்தோன்றது சீர்கள்விட்ட துத்தளைதட்டுதது முற்றிலுங்கெட்டதிது சதியிலக்கணமிலக்ய, வில்லில்லை யெனபன்னி விகடிப்பர்சாமநா வித்தகா நீருமவைபோல் விள்வையோ? பிழையெனத் தள்வையோ? வருளாது விடுவையோ ஆதியந்தம், அல்லில்லை ஜகசோதி துல்லியா! பன்மதத்தன்பருக் கன்பராகி அங்குமிங் கெங்குமொரு துங்கமாய்நிறைசித்தி யானந்த பரிபூர்ணமே "

." ஐயனே நின்பதமருச்சனைச் செயவெஞ்ணி லக்கணத்திலாயிரம் அல்லலாம் பன்னினைவு புல்லுதே செய்வது மவப்பத்தியாய்போருதே, பொய்யென் றிகந்துறந் தையவனவாசியாய்ப் போகலாமென வெண்ணிஞல்பூதியத்தாசைகள் வாதித்துமுற்றும் பொருந்தாது பேதிக்குதே, வையகத்திற்பலர்கண் ,மாளகாண்பொழுதிலிவ் வாழ்க்கைசத மல்லவென்று வாதிக்குதேமநமு மெக்காலம் மருளேத்ரென் மனநும்மிசையொட்டுமோ நையும்சனி பேதையான் செய்வகைக ளொன்றருளநாதியே! இருவரத்து

நல்லோ ரொடுக்கொடிய பொல்லாரை கார்க்குங்கரு ணைம்ப்ரஸாக்ஷாத் கடவுளே"

## வண்ணத்தாழிசை.

"நெஞ்சிற்பல வஞ்சந்தவழ் புஞ்சங்களை யோட்டி நெறியேசம ரசசர்க்குண நேயங்களை மாட்டி, மிஞ்சுந்துடி சலமக்கினி விளைவற்றிடநீக்கி விரலற்புலை யெண்மர்களின் வீரங்களைப்போக்கி, அஞ்சற்புரி யெந்தைப் பரனருளுற்றிடநீயே அவனீசனி லிலகுங்கலை யறிவுற்றிடுவாயே, உஞ்சற்புவி வம்புக்களை யோட்டித்திநந் திநமே உண்மைக்கொடு வொன்றிப்பிடி யுறுதிப்படுமநமே"

"துரியாதீத வொளியாகிய சூக்ஷப்பெரு மனையில் சொக்குச்சத ரவி நற்கர மிக்கச்சிறமைகளில், அருமைக்கமழ் மதியாமூர்த மண்டித்தழை மோநம் அதைப்பற்றிடில் நிதசம்ப்ரம மாகப்பெறும் ஞானம், சிரலாகிலு மிகவிச்சைக ளனுகாதவைவெட்டிச் செல்லுத்தட மல்லுக்களை வெல்லுச் சரிகட்டி, உரியச்சுழி முனைகண்டு யொளிர்சுந்த்ரனை திநமே உண்மைக் கொடு வொன்றிப்பிடி யுறுதிப்படுமநமே"

"வித்தைச்சில கற்றுச்சக விசடர்க்குழுகூடி வெகுசம்ப்ரம மொடுடம்பபுன் வேடங்களைதேடி, பத்திநெறி யற்றுத்தரை குக்கற்பயில்பேசி பகடேற்றிடு கெருவத்தன பெருமைக்குணஞ்சிசீ, நத்திப்பெரு நரகக்குழி நட்புக்களைநாடி நனிமெய்ப்பிணி பரவிச்சுழ னலமற்றெனஜாடி, உத்திப்பரி வுற்றுத்தட வொளிசுந்த்ரனை திநமே உண்மைக்கொடு வொன்றிப்பிடி யுறுதிப்படு மநமே"

---

## முத்துறைமுப்பத்தாறு.

"ஓதிமுகப் பத்தியிரோ ரோருக *நவாதிமணிச்
சோதிரக்ஷக் கல்விபுரட் சுந்தரிபால்—நீதிநடு
அம்பகத்து வாய்மையெனு மையகோ காப்பிலிமை
வம்படியாம் யாதுபிற—மற்று"

---

* நவரசங்களாவன :—அற்புதம், கருணை, சாந்தம், வீரியம், பெருநகை, இரௌத்திரம், குற்சை, பயம், சிங்காரமென ஒன்பதுவகைப்படும். இவற்றில் அற்புதம்-அதிசயம் விளங்கப்பாடுதல், கருணை-கிருபைவெளிப்படப்பாடுதல், சாந்தம் - விடவேண்டியதை விலக்கவும், கைக்கொள்ள வேண்டியதைக் கைக்கொள்ளவும் ஏதுவாகயிருந்து ஞானதீக்ஷையுண்டு பண்ணிச் சமரசமுண்டாகப்பாடுதல். வீரியம்-வைராக்கியங்காட்டப்பாடு

தல். பெருநகை-பெருநகையுண்டாகப்பாடுதல். இரௌத்திரம்-உக்கிரங்களைத் தூண்டிப்பாடுதல். துற்சை - நிந்திப்பை யெடுத்துப்பேசுதல். பயம்-பயங்களையுண்டாகப் பாடுதல். சிங்காரம்-ஸ்திரீ விஷயந்தோன்றப்பாடுதலாம். இந்தச் சிங்காரம் ஞானநூலினுந்தோன்றப்பாடுதல் எங்ஙனமென இக்கவிக்குத் தோஷங்கூறுவண்ணம் ஞானநூற்களில் இறைவன் அடியார்களைப் பெண்ணாகக் கூறியிருக்கும் வழக்கத்தையே இங்கு எடுத்தாண்டு "ஓதிமுகப் பக்தியிரோ ரோருக நவாதிமணிச், சோதிரசக் கல்விபுரட் சுந்தரிபால்" எனவும்; இறைவபக்தியுள்ளவர்களே சரியான அறிவாளிகளென்னும் நோக்கத்துடன் அவர்களைப் பெண்ணாக உருவகஞ் செய்து கூறினர். ஆடவன் ஆடவியைத் தனக்காயிக்கமாகச்செய் தனுபவிப்பதைப்போல, அறிவெனும்புருஷன் மனமென்னும்பெண்ணைத் தன் வசத்திலொடுக்கி ஞானாநந்த சித்விலாச சுகத்திலின்புறுதலென்பதாம்.

---

## இருபதாவது
## ஆபாசச்சாதக அவத்தானகதிநிலை.

பூணாரம் பூண்டுப் பொத்தலை மூடிப் பொய்மலிந்து
வேணாக் குணமுடன் வித்தார டம்பமு மிகப்படைத்து
காணாமற்பின்னே கட்டுரைபேசிக் களித்துழன்று
வீணாரவாரஞ்செய் பவைகண் மித்தையதே விநாயகனே. (591)

வான்றேடுஞ் சைவ மறைத்தேடுஞ் சதுர்முகன் வானவருந்
தான்றேடு மஹானிய ரடியவர் முனிவரர் சாதுக்களு
மேன்றேடி ஞானி லவர்ப்பெற்ற நன்மை யெளிதலமால்
மீன்றே டினவுண்மைத் தெரியார் செயல்மித்தை விநாயகனே.

சந்திரனைப் பார்த்து நாய்க்குரைத் தாலென்னத் தாழ்ச்சி யுண்டோ
மந்திப்பற் காட்டி குதித்திளித்தா னன்மை வாய்த்திடுமோ
சிந்தை யொருவழி நில்லாப்பணியிற் சிறப்புளதோ
வெந்தழிவே னெண்ண மியாவு மித்தையதே விநாயகனே. (593)

ஆசைக் குகந்தப் பணிச்செய் தணிவது வழகெனினும்
மோசக் குணமுன மிவையெலா முரண்பட முந்திநிற்கும்
பாசமெத்கால முளதோவந் நாள்வரை பற்றுவிடா
வீச மாசுச்செய லனைத்து மித்தையதே விநாயகனே. (594)

தேடுவ துன்றாட் பாடுவ துன்புகழ் சிந்தையொன்றாய்
நாடுவ துன்மெய் யடியார் களைத்தின நன்மைப் பெறக்
கூடுவ தில்லாக் கொள்கை யாசாரங் கூற்றன்வா
வீடு யெரியுங்கா னெருப்புயேன் மித்தையே விநாயகனே. 595)

காலமு முலகம் பலவித மென்றக் கதைப்படிப்பர்
காலமுங் காலனு மொன்றாருக் தன்மையைக் கண்டறியார்
மூலப் பிரணவ முச்சந்தித் தன்னில் முடங்கின நன்
மேலவர் முன்னஞ் சருவ மித்தையதே விநாயகனே. (596)

சோதனை யென்பர்ச் சுகதுக்க மென்பர் பலத்தோற்றமென்பர்
பாதாதிகேச மொன்றாகிற் பரநிலைப் பலிக்குமென்பர்
ஆதார மாதேய முனையன்றி யிலையென லனையன்றோ?
வேதாவுங் கண்ணன் வேண்டித் தொழுத விநாயகனே. (597)

தொல்லையி தென்பர் வெளியென்பர் ஞானச் சூன்யமென்பர்
கல்லிற் சிறந்தது மாணிக்க மென்பர்க் கருங்கல்லதை
யெல்லைப் பிடாரி பலமூர்த்தமாய் வைத்து யேத்தினர்க்கு
வெல்லம்போ லினித்தது வினையர்க்கு மித்தையே விநாயகனே.

பொல்லாக் குணம்படைத் தார்க்கல்வி செல்வம் பூசைதபம்
நல்லா ரனுபவித்த சுகமுத்தியை நல்கிடுமோ
கல்லார் முதற்கற் றவர்களு மிப்பதிக் காண்பதுண்மை
வெல்லும் படையின்றே லுளரல் மித்தையதே விநாயகனே. (599)

ஓடும்பொன்னு மொன்றெனப் போதிப்ப துலகியற்கை
பாடுப்படுவ தெல்லா மதற்கேவேறு பற்றுளதோ
மேடுப்போ லுயர்ந்த வினைத்தரை யானக்கால் விடுபடலான்
வேடுவன் வலைப்படு முயிர்ச்செயன் மித்தை விநாயகனே (600)

தொண்டை யிலாதா னெமகண்டம் பாடத் துணிந்ததென
மண்டையுண் மூளையைப் பாசமறைத்திடின் மதிவருமோ
கண்கண்டதை மறைத்துப் பொய்யைச்சொலிற்கண் மங்கடந்திடுமோ?
விண்டதெலா மனுபவத்தில் மித்தையதே விநாயகனே. (601)

தலையிலா முண்டங் கதைச் சொல்லு மென்பர்ச் சனியனென
நிலையிலாக் காரியந் தன்னை வாதிட்டு நீதியற்றுக்
கலைகட் படித்திருட் கண்மூடி வாபாசக் கடைபரப்பி
விலையின்றி விற்று லுமுடிவில் மித்தையதே விநாயகனே. (602)

ஓடலா மோடி யூரூர்களோடோ மூழைத்தலுத்துத்
தேடலாந் திரவிய மனைவியொழிக் தாலையோ சிந்தை நைந்து
வாடலா மலர்போ லுதிர்ந்துயண் குகைக்குண் மறைந்து விட்டால்
வீடன்றிக் குடித்தனஞ் செய்தன்மித்தையதே விநாயகனே (603)

உட்லைவ ருதிரப் புறச்சுவர்க் குறுநிலை யுண்டுபெண்ணிக்
கட்செவி யெனமாயக் கட்டுரைப் பேசியக் கயவருண
மட்டுப்படுவது மிலையதன் வாய்ப்பட மங்கிடுங்கை
வெட்டுண்டப் போழ்து நிலையென்ன மித்தையே விநாயகனே.

உள்ளூரிலே யெலியைப் பிடிக்காதவ ளோகோவோடி
வள்ளலிற் றலைவன் வலியினிலியானையாய் வாய்மதத்தா
வெள்ளாது வெளியிற் புலியைப் பிடிப்பேனென்பா னீனமதி
வெள்ளத்தி லாழ்ந்திடக் குணச்செயன் மித்தையே விநாயகனே ()

கோடி தானத்தையுந் தவத்தையு ஞானக் குணத்தினையும்
மோடியைப் போன்ற வொருதீமைக் கெடுத்து மோசமிகு
மாடியைப் போலப் பறந்துக் கயிறற வதோகதியாய்
வேடிக்கை முன்னே வித்தைநேர்ப் பின்னே விநாயகனே (606)

இல்லாப் பொருளதை யுண்டெனு மீனனு மிழிகுலனும்
பொல்லாதவனுஞ் சண்டாளனும் வேறெனப் புகலுவரியார்
நல்லார் வெறும்பொய்யை யஞ்ஞானக் கட்டுரையை நம்புவரோ
வில்லினுஞ் சொல்லம்புவீணெனல் மித்தையேவிநாயகனே (607)

ஊர்க்குருவிப் பருந்தென விண்ணிற் பறக்கினு மோகோயிது
யார்க்குத் தெரியா தப்பப்பா மாவண்மை யாமதுநேர்
சீர்விட்டு தெய்வப் பணிவிட்டு மாய்மாலஞ் செப்ப லென்கொல்?
வேர்விட்டும் வித்து விடாதென்னன் மித்தையே விநாயகனே

ஆலத்தை யுண்ப ரவினை யாட்டுவ ரவதானங்கட்
சாலவே செய்து சகத்தை மயக்குவர்த் தனையறியு
நூலளவி னின்று மரணத்தை வெல்லும் நோன்புயிலான்
வேலையும் பூக்தியும் விபரீத மித்தையே விநாயகனே. (609)

சித்தர் கணமெனச் சித்தெலாஞ் செய்யத் திரமையுண்டு
எத்தாலுஞ் சாகாது மண்ணுக்கு ளடங்காதா ரெங்ஙனுளா
ரத்தகையோர் மாய வழிநிற்போர் கண்முனகப்படுதன்
மெத்த வரிதன்றோ வீண்பேச்சு மித்தை விநாயகனே. (610)

பொருளைப் பொருளாகக் கொள்வதே யறிவெனப் புங்கவராக்
திருவள் ளுவர்மொழி யுணராதார்க் கற்றத் திறமென்னவோ
ஒருவருக்குத் தீங்கு செய்யா தவரன்றோ வுத்தமர்காண்
வெருவல் ஞட்டமும் பாட்டுரை மித்தையே விநாயகனே. (611)

சாக்காடு தன்னைத் தாண்டிப் பிழைத்துள சமர்த்தரெங்கே
பீக்காடு நீக்கிப் பிறப்பற் றுயிராய்ப் பேசுவதியார்
தீக்காடு போல வினைச்சூழ்ந்து சனனந் தேக்குவதால்
வேக்காடிலா தழிவது யெனன் மித்தையே விநாயகனே (612)

செனனமே செனனஞ் சவுக்கியம் பூர்வதவச் செயலெனவே
மனமலி வண்ணமு னெழுதிய சோதிடம் வாய்த்தடலோ
டினமன் னுஞ் சிவனு யிருந்தவ ரிருப்பவ ரெவ்விடத்தே
வினவிடி லந்தகோ விடையவை மித்தையே விநாயகனே (613)

† யுகமூன் றொழிந்தன பின்னவைத் திகழ்வதா யோதிடுநூண்
மிகவாய்ந்திடின் சரித்திரஞ் சத்திரங்கோயில் வித்தை சித்து
இகத்தினில் வழிவழிக் கண்டுச் சொல்வதுயென யேற்படலான்
விகற்ப மயக்க மொழியெனல் மித்தையே விநாயகனே (614)

கொய்தக் கனியைக் கொய்யாக் கனியெனக் கூறுதற்போற்
செய்தத் தீங்கினைச் செய்திலை யென்பான் சிந்தையொன்றே
எய்தவ னேயிலை யெனப்பெரும் பொய்யை யிசைத்தலினால்
மெய்யினிற் பட்ட வம்பரைக் காணின் மித்தையே விநாயகனே. ()

நன்மைக்குத் தீமை நடத்துத லதுவொரு ஞானமன்றோ ?
பன்னகந் தனக்குப் பாலூட்டினும் விடம் பற்றறுமோ
இன்னலுக் கின்ன லெதிர்ப்பட்டு நிற்கினு மெவருணர்வார்
மின்னல் மறையினும் பின்வரு மித்தையே விநாயகனே (616)

கோடி வித்தைகளு மலசலமாயோடிக் குப்பையினி
னேடிக் கிடப்பதும் பிண்டங்கட் பிணமாக நிலைப்பதுவு
மாடியுங் காற்றி லகப்பட்டுக் கிழிதலு மறியாரெவர்
மேடிட்டு நிற்றலா லெண்ணங்கண் மித்தையே விநாயகனே (617)

† யுகம் :—கிரேதாயுகம் ௧௭௨அ௰௲ 1728000 பதினேழுலட்சத்து இருபத்தெட்டாயிரம். திரேதாயுகம் ௧௩௯௬௰௲ 1396000 பதின்மூன்று லட்சத்து தொண்ணூற்றாறாயிரம். துவாபரயுகம் அ௬௪௲ 864000 எட்டு லட்சத்து அறுபத்திநாலாயிரம். கலியுகம் ௪௩௨௲ 432000 நாலு லட்சத்து முப்பத்திரண்டாயிரம்.

உண்ணலுடுத்தலுக்கே சாத்திரமோதி வொழிந்தன நாள்
பண்ணல் படுத்த லொழிந்திட பக்குவம் பறைவதென்கொல்?
மண்ணன்றி வோரிட மனுபவத்தில் வந்து வாய்க்காததால்
விண்ணொளி காட்சி மற்றவை மித்தையே விநாயகனே. (618)

பொன்வெள்ளித் தாளக மூப்புடன் சுன்னம் பூவழலை
மன்னுயிர்க் கண்டு மயங்கிட விழையு மாற்றலெல்லா
மென்னையிவ் வுயிர்விட் டேகாது நிலைப்பதற் கிடந்தருமோ
மின்மினிப் புழுசசியெனின் மித்தையே விநாயகனே. (619)

செத்தப் பிணத்தையினிச்சாம் பிணங்கட் சேர்ந்துக்கொண்டு
வொத்துப் புலம்புவதாய்த் திருவெண்காட ரோதினரே
சத்தசலாதி சித்துகற் றவரன்றோ சதுரிதருன்
வித்தையைப்பரப்பிவெருளன் மித்தையதேவிநாயகனே (620)

என்றைக் கிருந்தாலு மண்ணுக் கிரையென வியம்பின சொற்
றன்மையைக் கண்டு வுழைத்தருட் பெற்றவர்த் தன்வடிவங்
கன்மவூழ்ச் சேற்றி னூளையிற் கிடப்பவர்க் காண்பதெங்ஙன்
மென்மேலும்வேடிக்கை மினுக்கெலாமித்தையே விநாயகனே (621)

ஆதியி லுற்பவ கர்பனை யறிந்தமு னுப்தரெலாஞ்
சோதியு நீதியு மொன்றாக வெண்ணியே சுகமடைந்து
§ சாதிமயக்கஞ் சண்டாளர்க் காமெனத் தள்ளிவிட்டார்
மேதகையாளர் விரும்பினு மித்தையே விநாயகனே. (622)

---

## இருபத்தோராவது

## சாதிசமுக்குரை சத்திலாகதி நிலை.

கற்றவரேத்துங் கலைமணியே ஞானக் கற்பகமே
பற்றொன்று மில்லாப் பருணிதர்க் கண்டேத்தும் பழம்பொருளே
விற்பன மில்லாப் புலாலுடம்பிற் கந்தோ வெடுவெடுக்கு
வெற்றுரை சாதியென் பார்க்கென் விதியோ விநாயகனே (623)

தோலதைப் போர்த்து நாற்றத்தை மூடியத் தொல்லையெனுக்
காலதைக் கட்டிச் சுகம்பெற வறியாக் கன்மருண
சாலம தாயினை மண்ணதற் கோர்பெயர் சாதிப்பரியார்
வேலை விழிச்சியர் கபடரே ரன்றோ விநாயகனே. (624)

புழுவு ளெளிக்கிடப் பொத்தலொன்பதனைப் போர்வையினு
லழுகிடு மென்றவோ ரந்தரங் கத்திற்கோ ரடைப்படைத்து
ஒழுகிடுஞ்சீ மூதிரத்தை நன்ருக்க வுண்மை கொள்ளார்
விழுந்தழிபிணத்திற்குசாதிவொன் றுண்டோ? விநாயகனே. (625)

காணக் கிடையா நின்பணிச் செய்துன் கழல்வருத்தி
பூணக கிடையாத் திருநீறப் பூசி பொய்யகன்று
வேண வரம்பெற்ற நல்லோர்முன் சாதிசொல் விகற்பமதே
வீணர்க்குங் கோணர்க்கும் விஞ்சையிலார்க்காம் விநாயகனே ()

சோற்றுத் துருத்தியை சோங்கேது மாயச் சூகரத்தை
நாற்றப் பிணத்தை நங்கையர் போகியை நாளெனுமுடஞ்
சேற்றுக் கடத்தினிற் சாதியொன் றளதாய்த் தெளிந்தவரியார்
வேற்றுமை நெஞ்சினர் விருப்பமிதன்ருே? விநாயகனே. (627)

சண்டாள நீசக் கயவக் குணமதைச் சார்ந்தவர்கட்
குண்டாகுந் தீயச் செயலிற் றலைமையென் ருேதிவைத்த
மிண்டுடையப் பாவப் பொய்மொழி சாதிச்சொல் வெறுத்தவரே
விண்டன ருண்மைநூற் கண்டெழி லுற்றனர் விநாயகனே. ()

பொய்யேயென் றும்பொய்யலான்மெய்யாகும்வண்மைப்பொருந்திடுமோ
ஐயகோ? அந்தகோ? யிதைப்போ லொருதீமை யமைப்பதெவண்
துய்ய நல்லோரொருப் போதும் வேண்டாச்சாதித் தொடர்வலிமுன்
வெய்ய யெமன்கூற்று வெகுசிறி தாமால் விநாயகனே. (629)

புலாலினும் கொண்டப் புலால்புன் புலாலெனப் புகன்றநிலைத்
துலாவில் வைத்தேகண்டப் பேரிதற் குள்ளுள சூட்சமதை
சிலாசா சனமென யெழுதிவைத்தா ரிதைத்தெரிந்துக்கொளார்
விலாப்புடைக் கத்தின்று சாதிமேல் விடுத்தார் விநாயகனே ()

சொல்லள வாகக் கிடக்கின்ற சாதிச் சூருவளி
நல்லறி வாளர்மெய்ஞ் ஞானிய ராப்தர்மு னடைபெறுமோ?
பொல்லாப் பதடர்கன் தன்செயல் மறைக்கப் புகன்றதென
வெல்லாது போலவென் றகீ ழொடேக்கினர் விநாயகனே. (631)

மண்ணுய்ப் பிறந்து மண்ணில் வளர்ந்து மண்ணில்விளை
யெண்ணுப் பொருளெலாந் தனதென்று வுண்டு யேப்பமிட்டு
கண்ணுரக் காண வொருபிடி சாம்பராய்க் கழிந்திடுதே
விண்ணுடொன் றெங்கே வெகுளியர்க் குண்டு விநாயகனே. ()

சாதித் தனர்முனஞ் சாதிப் பதுபினுநற் சமயவுண்மை
சாதித் திடவறி யாப்புலா லுடம்பெதைச் சாதித்திடும்
சாதித்து தனையறிந் தொடங்குஞ் சிவஞானந் தனையனுகார்
வேதிக்கச் சொலுஞ்சாதி வெற்றுரைக் கொடிதே விநாயகனே. ()

ஆண்பெண் ணிரண்டு நலம்பொல மிரண்டு வறிவதனைக்
காண்கண் ணிரண்டிட். கண்ணென்றார்க் காணுக் கலதியர்கள்
மாண்டுப் பிணமான வசையரென்னத்தை வாரி சென்றார்
வேண்டுவரியார்சா தி யெனுமாயக் கூற்றை விநாயகனே (634)

இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுல யீனரெனக்
கட்டாய மாகக் கலைவாணி கூறியக் கருத்தறியாப்
பட்டாங் கடித்துப் பகலை யிரவெனும் பாதகரை
விட்டொழிந் தாலன்றி நன்மை யுண்டாகா விநாயகனே. (635)

பேதமெனுந் தந்திர மாய்மால வசத்தியப் பேய்பிடித்து
வாதனைப் பட்டிறந்தார் கணக்குண்டோ மாபாவிக
ளேதக் குணஞ்செயு மிம்சையின் மேற்கொலை யெவர்மொழிவர்
மேதக்க விழுமியர் சாதிபொய் யென்றார் விநாயகனே. (636)

அஞ்ஞானப் படுகுழித் தனிலிறங் கினவர்களை யாதரிக்க
மெய்ஞ்ஞான மூர்த்திகள் குருவடிவாய் வந்து வேண்டிய நாற்
சுஞ்ஞான மாய்த்தந்து மகிமைகண் விழைந்தவைச் சொலவெளிதோ
விஞ்ஞான மில்லார் விழுவது நரகே விநாயகனே. (637)

தனைப்போ லனைத்தையும் பார்ப்பதே மானிடத் தன்மமென
முனைப்போரி னின்று வென்றாராய் மஹனியர் மொழிந்தமொழி
தினையள வேனு நினையாதப் பாதகர் தீமை செயும்
வினைப்பூச்சி யென்றலோ வெறுத்து காடேற்றார் விநாயகனே ()

ஆசைப் பிசாசுக் கடிமையானவன் பொலா வந்தகனே
மாசுற்ற நெஞ்சத்து ளருள்தயை நோன்பன்பு வாய்த்திடுமோ ?
பாசைப் படர்ந்திடர்ப் படும்படி யெவர்சொல்வர்ப் பழியலவோ?
வேசைக்குப் பிறந்தோர் முனியானு ரன்றோ விநாயகனே (639)

உள்ளத்தைக் கழுவியு ளுள்ளதைப் பார்த்து வுறவுகொண்டாற்
றள்ளருஞ் சள்ளையுஞ் சாதி யெனும்பொய்ச் சமத்வமருண்
வெள்ளத்தில் மூழ்கிடும் வெகுளிகட் போம்ஞான வீடடைவன்
விள்ளலுந் துள்ளலு மெள்ளலும் விலகும் விநாயகனே (640)

உண்ணு துடுக்காது வொருத்தொழிலு மின்றி வுயிரொன்றையு
மெண்ணு திருந்தந்த நிலையினு முடல்விடா திருப்பரெங்கே
கண்ணுங் கருத்துமொன் றுயினர்முனஞ் சாதிக் கட்டுரைகண்
விண்டிட வொருக்காலும் முடியா துண்மையதே விநாயகனே ()

கொல்லான் புலாலை மறுத்தானை யெவ்வுயிருங் கும்பிடலா
யெல்லாங் கடந்தத் திருவள் ளுவர்மொழியி னிரகசியத்தைக்
கல்லார்த்த னுயிரை யடக்கார் காமச்செயல் கைவிட்டிலார்
வெல்லார் மும்மலஞ் சாதிச்சொல் விழலே விநாயகனே. (642)

புலாலெனு மிந்திரிய மாம்விந்து தன்னைப் புனிதமிகுங்
கலாசத்தி யோடு கலந்தொருப் பிறவியைக் கணித்திடாம
லுலாக்கொண்டுலவாப்படிதனித்தைம்பொறியை யொடுக்கினர்முன்
வெலாப்பொருளாஞ்சாதியழிந்தொழிவதுவேவிநாயகனே (643)

வெளிப்பார் வையினு லுட்கண்ணுங் கெட்டு விந்தெதிர்ப்பட்
டுளப்பெண் ணிடத்து மிருகராக் கதத்து முயிரதைப்பெற்
றளவிலா சனனம தாயின் புலான்சமரை யறிந்தவரியார்
விளங்குவ தெங்கே சாதிப்பொய்க் கூற்று விநாயகனே (644)

சாப்பா டதற்கே கூப்பாடு போட்டலைத் தன்மையுடன்
மோப்பம் பிடித்தங்கு மிங்குழல் வதிலென்ன முத்தியுண்டு
காப்பதைக் கார்த்துக் கடப்பதைக் கடந்தார்க் காரியமே
மேப்படையாஞ் சாதி யெனல்வெறுஞ் சொல்லே விநாயகனே ()

சீலமுஞ் சிறப்புந் திகழி னலமெலாஞ் சித்திக்குமென்
றோல மிடுமறை யுடனனு பவிகளு முரைத்தனரே
கால னெனவண்டிக் கலங்கச்செய் சாதிப்பொய்க் கட்டுக்கதை
மேலறிவாளர்முன் விகற்ப சங்கற்பம் விநாயகனே. (646)

கேட்டவுடன் மனந் திடுக்கிட்ச் செய்யுங் கெடுமொழியை
நாட்டக மாக சாதியொன் றுண்டெனச் சாற்றுவர் வாய்ப்
பூட்டிட் டடைத்துண்மைப் போதிக்குமெய் நூலைப்போற்றுநலோர்
மேட்டிமை வெகுளியை வெறுத்தன ரன்றோ விநாயகனே (647)

சாதி யெனும்வெறும் பொய்க்கட் டுரையது சர்க்குணமு
நீதி யாசாரஞ் சருவசீ ருள்ளவர்மு னிலைப்பெறுமோ
ஓதியுணர்ந்து முரைத்துந் தனைக்காணு வுலுத்தர்களே
மேதினிச் செயலி லிதைமுதலாய்க் கொள்வர் விநாயகனே ()

அன்ன மயத்தாற் பிராண மயமதா வகைவதெனி
லின்னவை நீக்கி சிவனி நுப்பதிங் கியாரிடத்து
புன்புலா லியாக்கைப் பொசித்த தெலாமலம் போக்கினதியார்
மின்ன மெலாம்பின்னே மழைக்கடை யாளம் விநாயகனே (649)

எதையெதுத் தின்றது யெதையெதுக் கொன்ற தெதிரிற்பட்ட
தகையது வுண்டவ னெழுந்த வனல்தனை யடக்கினதே
பதைபதைத் திடவுயிர் வதைத்ததும் புதைத்ததும் பற்றற்றதும்
விதைவிதைத் தவனன்றோ விளைவை யனுபவிப்பன் விநாயகனே

பசையதுத் தானே பசியாய் வலிதுடன் பாசையென
யிசைந்தெலா சனன மிடத்துங் குடிகொண்டு யிருப்பதனுன்
வசைச்சொலி நிந்திக்குஞ் சாதியா மொருபெயர் வாய்ச்சொல்லது
விசைகொண்டு மோதலா னலம்பொலம் விடுமோ விநாயகனே. ()

தற்கொலைச் செய்வதைப் போலிந் திரியத்தைத் தான்கெடுத்து
பற்பல வுயிராய் வந்துரு வெடுப்பதைப் பார்த்திருந்தும்
பிற்கொலை யுண்டெனப் பெரிதாகப் பேசிடும் பேய்குணத்தர்
விற்பதும் வாங்கலு மெதையென வறியார் விநாயகனே. (652)

உண்டுண் டொழிந்தன வொழிவன வொழிவ துடல்வலுக்கக்
கண்டு மதற்கொரு கதைச்சொலிக் கலந்துணுங் கயவர்கள்முன்
பண்டு முளைப்ப தரிசியானாலும் பலிப்பதற்கு
விண்டுமி மூலமென் றுணரறி விலரே விநாயகனே. (653)

சத்துளத் தழையிலைக் காயுண்ட வுயிர்களின் றனதுதிர
மெத்தவத் தோர்களு மெதவ்ஷடமா யருந்தி யிருக்குமுயிர்
சித்தத் துணர்ந்தோ ரசத்துக்கு சாதிப்பேர் செப்புவரோ?
மெத்த சிலாகிப்பர் வீணாரவாரர் விநாயகனே. (654)

தாயுண் டதைச்சிசுத் தானுண்டுப் பிறந்த சமர்த்துவமு
நாயுண்டப் பாலைச் சேயுண்டு வோங்கிய நாடகமும்
பேயுண்ட வாசையிற் பிணைப்பட்டுழல்கின்ற பிரமலை
வேயுண்டக் காடுபோ லழிந்தால் விளங்கும் விநாயகனே. (655)

ஒருவரை யொருவர்த் தாழ்த்துவதே வுல குற்றதென
பெருமித வறிவா ளிகளெனும் பெரியோர் பேசிவிட்டார்
கருவினி லுற்றதைக் கடக்கரியான் சாதிக் கண்டதெவன்
விருத்தனும் பாலனுனற் சுகமன்றோ விநாயகனே. (656)

நாறுஞ் சடலத்தை நல்கும் புலன்புலா ஞரியர்பாற்
சேறு மூத்தைக்குழி யுதிரமல்லா லுதித்த தேகமெவண்
கூறுமா பாச மாய்மாலக் கட்டுரையைக் குணித்தவரியார்
வீறுஞ் சாதிப்பெயர் வீணர் தந்திரமே விநாயகனே. (657)

தவருந் தவஞ்செய்வ ரிடத்தே விளங்குதற் சத்தியமே
அவமு மவக்குணத் தோரிடம் பிறப்பதோ ரற்புதமோ
நவநவப் பெயருடன் சாதியெனும் பெயர் நட்டுக்கொண்டு
விவகாரம் பேசினும் விழலன்றோ? நல்லோர்முன் விநாயகனே.

அறிவுள சனனங்க ளறிவிலா மிருகங்க ளுமதமுண்டு
குறிகுல கோத்திரம் பலபேத வர்ணமாய்க் கூச்சீலிட
நெறிநிலை சாந்தஞ் சத்திய முளோ ரிவையெலாம் நீக்கிவிட்டார்
வெறிநாயி னுவ்வரும் வேட்டைகள் விறுதா விநாயகனே (659)

பானைச்சோ றெல்லாம் பால்பழங் காயிலைப் பண்டமும் நி
தான முடனடைத் ததியாவு மறைத்து சாதியபி
மான மெனக்கூறு மதியி லெங்கே யீசன் மன்னுவன்காண்
மீனதைக் கழுவினு நாற்றஞ் சொந்தமலோ விநாயகனே (660)

வேண்டினும் வேண்டாமை யிலானன்றோ ஞான விமலனென
வாண்டனு பவித்த வாண்டவர் மஹனிய ரருள்விதித்தார்
தூண்டிலின் மச்சமாய்ப் பரடுறச் சொலுஞ்சாதிச் சுட்டுப்பெயர்
மீண்டு மீண்டுக் தேகம் விளைக்கச்செய் வித்தாம் விநாயகனே. ()

கொல்லா விரதியர் விந்துவாஞ் சீவனைக் குணஞ்செய்தவ
ரல்லார்ப் புலாலி லறிந்ததென்னே மாயவா னுவஞ்செய்வழிச்
செல்லா தவரெவர் சிந்தைக் கெடாதவர் தேகமெங்கே
மெல்லப்புல் தின்கினும் பசிநோயுண் டலவோ விநாயகனே ()

பற்றற்ற போதே முத்திவாய்த் திடுதனற் பாக்கியமென
முற்றத் துறந்த பெரியவர் ஞானியர் மோனர் மெய்நூல்
கற்றவ ருரைத்தக் கருணைப்பெறுர் சாதிக் கள்ளச்சொல்லை
விற்று லு மொருப்போழ்தும் வாங்கிவிற் பவரியார் விநாயகனே ()

ஊனுக்கு வூனிட்டுக் கண்ணப்பன் செய்ப்பூசை வுண்மையென்ன
மானுக்கும் பூனைக்கு மாறிலா வொன்றாய் வழங்கலெங்கே?
பானுக்குட் பனியொடுங் குதற்போல சாதிச்சொல் பறந்திடுமே
மேனுக்கு வாசனை யுள்ளே தூர்க்கந்தம் விநாயகனே, (664)

### சூதசங்கிதை.

மட்டுவார்வன மார்பசருமம்போற், றெட்டுவானைச் சுருட்டுவ ருண்டெனிற், பெட்டுஞானம் பெறுத பேரின்பமே, யொட்டுமுத்தி யுறுநரு முண்டரோ.

### தேவிகாலோத்திரம்.

கருத்தடங்கின் முத்திபது கையாலிற் கட்டாகும்,விரித்தபொருளிது வென்ன வறிவுடைய மேதக்கோர், இருத்தருநல் லறிவாலே சித்தத்தைத் திறம்பாம, லருத்தியுட னிலைநிறுத்து மதுவறிவின் பயனுமால்.

மருவிய பொருண்மே லன்பாய் வாரணம்போற் சரித்துத், திரியுமச் சித்தந்தன்னைத் திரித்துச் சூனியத்தேநின்றால், மருவினோர்ப் பிறிதலின் றி வானவரறிவுக் கெட்டாப், பொருவிலா சித்தசுத்த பொருளினை யடைவரன்றே.

மந்திரஞ் செபந்தியானம் பூசனைவணக்கம்வேண்டாம், அந்தமிலாத முத்திக் குபாயமே யறிதல் வேண்டுஞ், சிந்தனை புரமே செல்லிற் றுயரமே திரியமீட்கிற், பந்தமாந் துன்பநீக்கிப் பரமான வின்பஞ் சேர்வாய்.

ஆராத சித்தமான தோர்காலத் தடங்குமானுற், பேராமல் வருந்திக் காத்துப் பின்னைச் சிந்தனைகள் சென்று, சாராமல் வல்லவாறு தடுத்து சார்வான வெல்லாஞ், சேராமன் மயக்க நீக்கித் திரமாகச் செய்துகொள்வான்.

### பதிபசுபாசவிளக்கம்.

ஞானத்தைத் தவிரப்பாவக் குழாங்களை நாசஞ்செய்யு, ஞானம் வேறில்லையித்த ஞானம்போ னலனொன்றில்லை, ஞான் சாதகத்தையன் றிநவையுறு கும்பம்போக்கு, ஞானசாதனம் வேறில்லை நன்னெறியறி மானுக்கா.

பாதக மனைத்து நீங்கும் பக்குவ சித்தந்தார்க்கு, மேதகு ஞானத்தின்கண் விருப்பமும் வியப்பு முண்டாம், பாதகத்தாற் கட்டுண்ட பதிதசித்தந்தார்க் கெல்லா, மேதகு ஞானவார்த்தை கிடைக்குமோ விளம்புங்காலே.

ஞானியேபுருடோத்தமனாதலால், வானவர்டரும் மத்து வணங்குவா, ரேனைநாடரு மேவலி னிற்பர்காண், ஞானிபூச்சிய மென்பதற் கையமோ.

செந்தழல் விளக்கமது சிறிய தாயினும், மந்த காரத்தினை யகற்றுமாறு போற், சித்தலில் ஞானமுஞ் சிறிய தாயினு, மந்தமில் பாவக்க ளனைத்தும் போக்குமால்.

ஒளிவளர் பெருநெருப் புலர்ந்த காட்டமுங், தளிர்பசுங் காட்டமுந் தகிக்கும் பான்மைபோ, லளிர்மதி யனைய வோர் ஞானவங்கியுக், களவிரு வினையையுங் கணத்தில் வாட்டுமால்.

மந்திரங் வல்லவன் வலியபாம்பொடு, தொந்தனை யாயினும் விடக்தொடப்படா, னிந்தியப் பாம்பொடு விணங்கி நிற்பினு, நந்திய ஞானியு நவை தொடப்படான்.

### அகஸ்திகமுனிவர்.

வையஞ்சலமங்கி கால்வான் பலவுயிர் வான்முடியோ டெய்யும்பசு முதற் சார்வதெல்லா மெம்பிரான்முருகா, தெய்யென நின்றநின் றிருட் சிலம்போசைத் திருவிளையாட், டையநின்னங்கமெ தென்னங்கமாய் நின்ற வானந்தமே.

### தாயுமானசுவாமிகள்.

தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த் தாயனைய கருணைகாட்டித், தாளிணையென் முடிசூட்டி யறிவித் சமாதியே சாசுவித சம்பிரதாயம், ஓராமன் மந்திரமு மூன்றுமன் மூத்திநிலை யொன்றோ டிரண்டெனுமை, லொளியெனவும் வெளியெனவு முருவெனவு நாதமா மொலியெனவு முணர்வுறாமல், பாராது பார்ப்பதே யேது சாதனமற்ற பரமவனுபூதிவாய்க்கும், பண்பென் றுணர்த்தியது பாராம லங்நிலை பதிந்தநின் பழவடியர்தம் சீராயிருக்க நினதருள் வேண்டு மையனே சித்தாந்த முத்திமுதலே, சிரகிரி விளங்கவருந் தக்ஷிணாமூர்த்தியே சின்மயா னந்தகுருவே.

### கடவுளந்தாதி.

அன்பருக்கன்பு தரும்பரஞ் சோதியை யாத்துமத்தோ, டென்புருகக் கலந் துள்ளேயுருகி யிரவு பகல், தம்புரு வீணை சரமண்டலத்தொனி தானதித்தி, மின்பெருகுங்கொஞ்ச் சிங்காரங் கண்டிரு மெய்ம்மகிழ்ந்தே.

### ஒழிவிலொடுக்கம்,

தத்துவம்போய்க் கேவலம்போய் தான்போ யருள்கழன்று
சுத்தபரையாய்த்தன் சுதந்தரம் போய்ச்—சத்தி
யொழிவிலே போதம்போ யொன்றாகா வொன்றி
னழிவிலே யின்பவதீ—தம்.

---

### நீஷ்ட்டாநுபூதியில் கூறியுள்ள பழிசேர்முத்திக ளிவையெனல்.

உலகாயுதனுக்கு மகளிரிடத்துண்டான போகமே முத்தி யெனவும், புத்தனுகிய சவுந்தராந்திகனுக்கு உருவம், வேதனை, குறிப்பு, பாவனை விஞ்ஞான மென்கின்ற பஞ்சகந்தங்கெடுகிறதே முத்தி யெனவும், அமணனுகிய நிகண்டவாதிக்கு முக்குணங்களுங் கெடுகிறதே முத்தியெனவும், பிரமாகானுக்கு எங்கும்விரிந்த காமியகன்மங் கெடுகிறதே முத்தியெனவும், அகச்சமயத்தில் பேதவாதிக்கு ஆணவமலங் கெடுகிறதே முத்தியெனவும், அகச்சமயத்தில் சமவாதிக்கு சுத்தமாயாசரீர மழியாது நித்திய

யிருக்கிறதே முத்தியெனவும், மாயாவாதிக்கு சரீரதொந்தனைப்பட்டு கிற்கிற ஜீவாத்மாவுக்கு விவேகஞான முண்டாகிறதே முத்தியெனவும், மாயாவாதத்தில் பாற்கரியனுக்கு ஆத்மாகெடுகிறதே முத்தியெனவும், அகச்சமயத்தில் சங்கிராந்தவாதி பசுகரணங்கெட்டுச் சிவகரணமாகிறதும் அஷ்டமாசித்தியு மென்கின்றதுவே முத்தியெனவும், பாஷாணவாதிக்கு ஆத்மா கேவலத்திற் கிடக்குந் தன்மைபோல் முத்தியிலும் ஒன்றுமறியாமல் பாஷாணம்போலக் கிடக்கிறதே முத்தியெனவும், கூறப்படும், இவையன்றி இன்னுமனந்தமுள அவைகளைப் பலநூல்களாலுங் குருமுகத்தாலும் நிச்சயித்தறிதல் வேண்டும்.

சசிவன்னபோதம்.

ஐயறி வறிந்தவை யடங்கினர் களேனும்
மெய்யறி விலாதவர்கள் வீடது பெறுரே.

——:※:——

இருபத்து நான்காவது

## சைவமுஞ் சைவன் சமயநேர் கதிநிலை.

—:§:—

சீலமுந் தானந் தவநோன்பு வாய்மை சித்தசுத்தம்
ஞாலமு ஞாலத்தின் வாழ்வையுந் தாழ்வையு நன்குணர்ந்து
மூலப் பிரணவ வோங்கார வட்டத்தின் முத்திநிலை
மேலுளப் பாலுண்ண லதுஞான சைவம் விநாயகனே. (706)

மன்னிய சோரன் றன்னிட மன்புச்செய் மங்கையைப்போல்
தன்மனஞ் சிவத்திற் கூடிக் குலவிவாழ்த் தன்மைகொண்டு
நன்மையுந் தீமையு மொன்றென வெண்ணு ஞானமுடன்
மின்னிகர் மாயையை வெறுத்தவன் சைவன் விநாயகனே. ( )

தத்துவக் குப்பையை பலபலச் சமையமாய்ச் சாற்றுகின்ற
வித்தைசூழ் மார்க்க விபரீதப் போராட்ட விகற்பமதின்
சத்தசத் தோர்ந்து செயலெலா மறந்துத் தனையறிந்து
வித்தக னுகுநா ளதுநல்ல சமயம் விநாயகனே. (708)

வேடுவ ரைவர்த் தங்களால் விளையும் வீண்சேட்டையிற்
கூடுதலால் வருஞ் சனனமாங் கூற்றின் கொடுவாதனைப்
பாடுக ளுள்ளவை குருமூர்த்தி யாற்கேட்டுப் பற்றற்றுமெய்
வீடுற்றுத் தன்னை யறிந்ததே சைவம் விநாயகனே. (709)

மனம்புத்திச் சித்த மகங்கார மிவைகள் வல்லபத்தை
தினகரன் முன்பனி யொடுங்குதற் போலகற் றியானமதி

லனவர தமுஞ்சிந்தை நிலைத்தவ ஞானந்த வற்புதச்சீர்
வினவாம னிட்டையி னிற்பவன் சைவன் விநாயகனே. (710)

சஞ்சங் கொடுத்த சற்குரு போதத்திற் சாந்தமுற்று
வஞ்சச் செயலற்று மரணவா தனையற்று மறுபிறவி
யெஞ்சி வராப்படி யெடுத்த சனனத்தி லெழில்வடைந்து
விஞ்சையும் பக்குவங் கைகூடற் சமயம் விநாயகனே. (711)

பொய்மெய் யுணர்த்திப் போதங்க ணீங்கிப் புலானிறைந்த
மெய்யது நாத விந்துவில் சுக்கில மேலிட்டதால்
வையமேல் வந்ததும் மாய்வது மோய்வதின் வளமனைத்தும்
மெய்கொண்டு தன்னைக் காட்டுதற் சைவம் விநாயகனே. (712)

கண்டது முண்டதுங் கட்டிக் கழற்றியக் கலைகளையும்
பண்டைநா ளுற்பவக் கற்பனை சற்பனைப் பலநேர்மையுங்
கொண்டவை யனைத்து மித்தையென் றுய்ந்து குருவருளால்
வீண்டுண்மை நிலையில் விளங்குவன் சைவன் விநாயகனே. ( )

தரணியு மவையுள் விளங்கு முயிரெலாந் தாமெனவும்
பிரம சந்தோடச் சிவஞான முத்தியைப் பாவித்துசீர்
வரவந்த நெறியிற் கூடாமற் கூடி மகிழ்ந்திடற்கு
விரதமுடிந்து கைக் கூடலே சமயம் விநாயகனே. (714)

உள்ளமதைக் கோயிலாக்கி சிவஞான வுருவறிவை
யுள்ளப்படி நிலை நிறுத்தி வோம்எனும்போத வுயர்வரையில்
கள்ள மனத்தை யொடுக்கி மெய்யோர்ந்துக் கருணைமிகு
வெள்ளத்தின் மூழ்க விடுப்பது சைவம் விநாயகனே. (715)

பஞ்ச பூதத்தைப் பலகார மாக்கிப் பாழ்மனதை
யெஞ்சிடாப்படி வாடுபலியாக்கி யறிவை யெழில் தூபமாய்
மஞ்சுருதீபமாய் கவிமாலை சூடி வணங்கி மாயை
மிஞ்சாது லடக்கி விளக்குவன் சைவன் விநாயகனே, (716)

பதியற்று மும்மலப் பாசங்களற்றுப் பய னெனக்கொ
ணிதியாசை யற்று நினைந்தது நினைந்திடு வினைவுமற்றுத்
துதியற்று பலபுல தோடங்களற்று நேர்த்தொந்த மதாய்
விதியற்று நிட்டைகைக் கூடுதற் சமயம் விநாயகனே, (717)

எல்லாப் பொருளிடத்து மன்பே சிவமா யிருப்பதனு
லெல்லாரு மிவ்வுண்மை யறிவது மிகவு மெளிதலவே
வல்லாண்மை யூழை யொடுக்கித் தன்னைக்காணும் வரமளித்து
வெல்லாப்படி வெல்லும் வித்தையே சைவம் விநாயகனே, (718)

ஞானம்பதியா விழிகுலத்தோர் காட்டித்பிரித்தே சாதிரன்னி
யீனசாதியா ரென்றே யிகழ்ந்தார் முத்தர்பத்தரையும்
ஆனபெரியோர் தவகளையு மவரிலொன்றாய்க் குறித்துக்கொண்
டீனமுரைத்தே யுருநரகி விழிந்துபோனார்கித்தோரே,

பெரியாரை யிகழ்ந்தவர்கள் பெற்றலாபம் பேசக்கேள் நெஞ்சகமே பெருமையாக, பரியேறிப்போனவன்றான் றீயில்வீழ்ந்து பதைத்தது போலடிவயிற்றில் நெருப்பைக்கூட்டி, எரிவாயில் பொருஞ்பறிக்கு மின்பம் போல நகைத்திகழ்ந்தே யெரிவாயி னரகம்புக்கு, விரிவான வெழுநரகில் விழுந்திளைத்து மெலிந்திடுவா ரென்றமறைவீசுந்தானே,

### சிவபோகசாரம்.

அறியார் கனவினிலு மானந்தரூப
மறியார்தமையு மறியா—ரறிவார்கட்
கில்லாத தீங்கே யெடுத்துரைப்பா ரிப்பாரிற்
பொல்லார் தலையிற்—பொறி

தனையறியா ரீசன் றனையறியார் பாச
வினையறியா ரானந்த மேவார்—தனையுஞ்
சிட்டர்தமக் கில்லாத தீங்குரைப்பார் பொல்லாத
துட்டர்தமக் குள்ள—தொழில்

### சங்கராசாரிய சுவாமிகள் உடலறிவிளக்கம்,

சாதிகுல மரபுரையார் விரதநோன்பு தனைவிரும்பி யுடல்வெறுத்து தவங்கள் செய்யார், நீதிபுரா ணங்கள்பல நூல்கள்பாரார் நிட்டைதொழில் முறைநமையருந் தீர்த்தமாடார், கோதிமுடியாசனச்சுகிகள்பண்ணார் கொடியதொழில் தனைவிரும்பிப் பணிகள்செய்யார், வீதிமனைத் துடைய ருலகத்தோடொத்து விழிதுயில்வர் புளியோடு பழம்போலொத்தே.

### பாய்ச்சலூர்ப்பதிகம்.

ஓதிய நூலும்பொய்யே யுடலுயிர் தானும்பொய்யே, சாதியுமொன்றதாகுஞ் சகலமும் வேறதாமோ, வேதியன் படைத்ததல்லால் விதிதனை வெல்லலாமோ, பாதியே பரமேரூழும் பாய்ச்சலூர் கிராமத்தாரே.

உறக்கமோ வூனமுள்ளம் உள்ளமோ புறம்போசிவன், இறப்பது முன்னேபின்னே சென்றது பெண்ணே வாணே, கறப்பது முலையோபாலோ காண்பது மீனயோகண்ணே, பறப்பது இறகோவாலோ பாய்ச்சலூர்கிராமத்தாரே.

கொக்குமேற் குமிகண்டேன் கோழிமேற் குடுக்கண்டேன், சேற் குறிவாலுங் கண்டேன் நீரின்மே னெருப்புக்கண்டேன், சற்குலமென்று சொல்லிச்சதுர்மறை பேசவேண்டாம், பக்குவமறிந்துபாரும் பாய்ச்சலூர் கிராமத்தாரே.

வித்தொரு மரத்தையீனும் மரமொரு வித்தையீனும், பெற்றதாய் பிள்ளையீனும் பிள்ளையு மதலையீனும், உற்றபாற் றயிரையீனும்உதிரஞ்சுக் கிலத்தையீனும், பற்றிநின் றலைவதேனோ பாய்ச்சலூர் கிராமத்தாரே.

ஸ்ரீமத்- தண்டபாணி சுவாமிகள் – போதநூல்.

எல்லா மிறைவடிவே யென்றுணரு மெய்ஞ்ஞானம்
பொல்லா ருளத்திற் பொருந்ாது—நல்லார்க்குத்
தானேவந் தெய்துமதிற் சத்தியமுந் தோய்ந்திருக்கு
நானே யென் றோதாது—நா.

ஸ்ரீமத்- திருமூலநாயனார் –திருமந்திரம்.

பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென், விரித்தபொருட் கெல்லாம் வித்தாவ துள்ளம், பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கு, மருத்தமு மேத்தனை யாய்ந்துகொள் வார்க்கே.

தரிக்கின்ற நெஞ்சஞ் சகளத்தி னுள்ளே, யரிக்கின்ற வைவரை யாருமுணரார், சிரிக்கின்ற வாறு சிலபலபேசில், வரிக்கொண் டமைசூழ் வரையதுவாமே.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும், பெறுதற்கரிய பிரானடி பேணார், பெறுதற்கரிய பிராணிகளெல்லாம், பெறுதற் கரியதோர் பேறிழுக்தாரே.

ஒன்றே குலமு மொருவனே தேவனு, நன்றே நினைமி னமனில்லை நாணுமே, சென்றே புகுங்கதி யில்லைநுஞ்சித்தத்து, நின்றே நிலைபெற நீர் நினைந்துய்மினே.

தன்னை யறிந்திடுந் தத்துவஞ்ஞானிகள், முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள், பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள், சென்னியில் வைத்த சிவனருளாலே.

ஞானவெட்டி.

சுக்கில சுரோணிதமீது யிலகுபரி பூரணத்தின் செயல்தன்னாலே, எக்குலமும் சாதவிந்தா லெய்தும்வகை வளப்பமெல்லா மிடரில்லாமல், பக்குவமா யகத்தியர்தன் னுபதேச மருளபரிபாஷையாய்ந்து, திக்குமெட்டெப் பதினாறு கோணமதி லண்டபிண்டந் திசையு மொன்றே.

ஒன்றான மனிதர்பலசெகமொன்றசெக்குவொன்றுவுலகமொன்று நின்றிலங்கும் வானமொன்று புவியுமொன்றுவண்டரண்டம் நிலைதானொன்று, இன்றுமன்றுக் கதிர்மதியு மின்னல்விடிக் காற்றுமழையெல்லாமொன்று, தென்றல கெலாம்படைத்த காதவிந்தா லெடுத்தவுயிர்செகநமொன்றே,

கலித்துறை

ஊத்தைக்குழிதனி லூதவிந்தூறி யுடலெடுத்தால், நாற்றமென் சாணுட லவ்வழிக்கேமன நாடிடுங்காண், சோற்றுத்துருத்தி பெரிகும்பிமாய்கை துலைத்துவிட்டார், காற்றுவசப்படா ஞான சகாதிதங் காண்கிலரே.

வெண்பா.

எங்கள் குலவித்தி லெறும்புகடை யானைமுதல்
செங்கமல வம்மிசத்திற் சேருமே—உங்கள்குலம்
வந்துதித்த வண்மை வரவாறு நிரு வள்ளுவனால்
அந்தவிதி கண்டறியா—தே.

உள்ளம் பெருங்கோயி லூற்றுணர்வ தாமாகில்
என்னளவுஞ் சொன்னமறப் பென்னமயம்—உள்ளபடி
ஒன்றென் றலகு வுன்குலமு மென்குலமுங்
கண்டறிவ தென்மொழியில்—காண்.

கொச்சகம்.

பராபரையொன் றுலெடுத்த பஞ்சகர்த்தா வைவரையும், தராதலமீ ரேழுமுயிர் ஜாதியொன்றன் பெண்ணலவோ, நீராதமத்துள் ளொயிலகும் சீர்மேனெருப்பென் றறியார், துராகதமாய் வெவ்வேறு சொன்னார் சுலோகமதே.

அம்புவியின் மானதனை பரிவாரகம்புணர. கும்பி லுருவாயெதங் குட்டி யளிக்குமோதான், கம்பிறவி யந்தணரே ஞானமுள்ள சூத்திரரே, வம்புரைத்தி ரென்குலத்தை மநுவவுரு வாகாதே.

கலித்துறை.

குட்டிக்கிடாவும் பசுமேல்மருவக் குறியென்னகாண், முட்டியெருது முதிப்பதுண்டோ செகமூடர்களே, மட்டிக்கிடாவுக்கு மாவின்பிறவிக்கும் வாறறிந்தால், எட்டிக்கனியக் தெலுமிச்சையாகுமோ சீனர்களே.

வெண்பா.

முல்லைமலர்க் கம்பநாட்டு மூக்காலு நீர்தெளித்தால்
மல்லிகைப்பூ வாசம் வருமோதான்—தொல்லுலகில்
சோதிவிக்கு நாதக் துளியிலுயி ராமவர்க்கு
ஜாதிகுல பேதமில்லைத்—தான்.

### கலித்துறை.

ஈரேழுலோகம் பதினாலுயர்ந்திரு காலுயர்ந்த, நேரானஜாதி ஆண்பெண்ணிரண்டும் நிரந்தரமாம், பேரானே செங்கதிர் சந்திரனுண் டண்ட பிண்டமுண்டு, சீரான அன்னமுந் தண்ணீருமுண்டு தெய்வ மொன்றே,

### சிவவாக்கியர்.

சாதியாவதேதடா சலந்திரண்டநீரலோ, போதவாசமொன்றலோ பூதமைந்து மொன்றலோ, ஓதும்வேதகீதமு மூனுதக்கமொன்றலோ சாதியாவதென்பதேது சாவுவாழ்வு திண்ணமே.

### திருவெவ்வுட் கலம்பகம்.

செய்விரதஞ் செறிதானஞ் செபவோமா திகள்செயினுஞ் சிறந்தநன்மை, எய்கலைகள் பயின்றிடினு மிசையுறு வேதியர்சன்ம மெடுத்தோரேனும், உய்திடச்செய் துறங்குருவா லுயர்கொளட்டாக்கரப்பொருளையுணர்ந் தெப்பாலும், பெய்தளிக்கு மெவ்வுளுறை பெருமானைப் போற்றுதார்பிறவியோவே.

### நன்னெறி.

ஆக்கு மறிவா லலது பிறப்பினுன்
மீக்கொ ளுயர் விழிவு வேண்டற்க—நீக்கு
பவரா ரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின்—கடு

### சொருபசாரம்.

சுத்த சடமான சக்கிலங்கொர்ப் பிகரித்துச்
சித்தத் துவங்கலந்து சீவித்துச்—சத்தியம்போல்
வந்தபொழு தீதெல்லா மாயையென்றே தற்சொருபஞ்
சிந்தை செய்வா ரன்றே—சிவம்.

### சுப்ரமண்யர் ஞானம்.

கேளடா சாதிவகை யொன்றேயாகும் கெடியான ஜனங்களெல்லாமொன்றேயாகும், ஆளடா நாமமெல்லா மொன்றேயாகும் அவனிசராசரங்களெல்லா மொன்றேயாகும், நாளடா வேதமெல்லாமொன்றேயாகும் நால்கென்ற சாதியெலா மொன்றேயாகும், வாளடாவிதையறிந்து மைந்தா நீயும் வஸ்தான வஸ்துவையும் பூசைக்கொள்ளே,

———*———

### இருபத்திரண்டாவது

## குருவருளொருமொழி, திருநிறை கதிநிலை.

குருவரு ளொன்றே யெல்லாநன்மை யீந்து குணந்தரலா
லருளென்ப தவ்வழித் தானேவந் தனுகு மானையடே
இருவினை யற்று சாந்தங்கொண் டன்பி லிணைந்தவர்தண்
மிருத்துவ நீங்கிச் சுகமுத்திச் சேர்வர் விநாயகனே. (673)

சொல்லாமற் சொல்லித் தோற்றும ரேற்றுஞ் சுழுச்சிநிலை
யெல்லாரு மனுபவித் திடமுடிந் திடுமோ யில்லையில்லை
நல்லா னெனவருந் தேசிகர்த் திருமொழி நம்பினரே
வெல்லாம டிவினை வென்று சுகிப்பர் விநாயகனே (674)

சொன்னய மிருந்தா லென்னயங் கூடாதுத் தொந்தமிகு
மின்னியஞ் சொந்தமென் பதைவேண்டா தாட்கொளு மாசிரியர்
அன்புவைத் தேசொல்லு மொருவார்த்தை சருவசி ரதைத்தருகும்
மென்மேலு மானந்தம் விழைவ துண்மையதே விநாயகனே (675)

ஆட்டி யலக்கழித் தேகெடுத் திடுசன்ம மகல்வதற்குஞ்
சாட்டி யிலாதபம் பரம்போ லோய்ந்துத் தனி சார்வதற்கும்
நாட்டிடு மொருமொழி குருவருள்வா ரெனின் ஞானமுணர்
மேட்டிமை யாம்பொரு ளுளதெனல் வீணே விநாயகனே (676)

சூத்திரந் தன்னை யறிந்து மெய்ஞ்ஞானச் சுகநிலையை
நேத்திரந் தன்னுள் காட்டியாட் கொளுங்குரு நிமலனையோர்
மாத்திரைப் பொழுது நீங்காது கார்த்திட மன்னுமருள்
மேத்தகை யாளரன்றோ வண்மைக் காண்பர் விநாயகனே (677)

ஈசனே முந்நாட் கல்லா லடிக்கீ ழெழுந்தருளி
நேசமுடன் சனகாதியர் நால்வர் நேமமுற்ற
பாசமற் றோங்க சொல்லாமற் காட்டியப் பதித்துவமே
வேசறு மோர்மொழி விஞ்சைக்கு வித்தாம் விநாயகனே (678)

எல்லா வரமுந் தவமு முமூட்சுக விலக்கணமுஞ்
சல்லாப மாய்குரு சொல்லுமொரு வார்த்தைத் தானளிக்கும்
பொல்லா தவர்களு நல்லவ ராகுவர்ப் பொய்யலவே
வில்லினுஞ் சொல்லதிக விசேடமதே விநாயகனே (679)

யூக மனுபவஞ் சுருதியென் பதுவெலா முயர்தேசிக
ராகமம் போன்ற வார்த்தை யினுலவை யகப்படுங்காண்
போகமும் யோகமும் மோகமு மிவைகட் பொடிபடுமே
மேகத்தைப் பார்க்கினும் வியனருட் பெரிதே விநாயகனே (680)

பீடு பெறும்படி விழிசாய்த்தாள் குரவர்க்குப் பிணைப்படினே
நாடும் பலபல ஆழவை யாவு நசுங்கிடுமே
ரேடுந் திருவரு ணிலைக்கு மெய்ப்போத நிசமிதுவே
வீடுயெனு முத்தி,ஞானத்தின் முடிவே விநாயகனே (681)

வெள்ளி பொன்னுக்கு நவரத்தினங் கட்டு விலையுள து
உள்ளத்தைக் கண்டு வொருங்கு செய்குருமொழி யொன்றினுக்கு
தெள்ளிய நன்விசு வாச மல்லால்விலைத் தெரிந்தவரியார்
வெள்ளத்தின் முன்னே யணையென்னச் செய்யும் விநாயகனே()

தேசிக மூர்த்தியைச் சிவமாக யெண்ணி சேவைசெய்து
மாசிலா ஞான வாழ்வடைந்தார் நல்ல வர்முடையார்
ஏசிடும் பாபிக ளெவரேனு நரகலா லென்னடைவர்
மீசை பேடிக்கிருந் தென்னிரா தென்பயன் விநாயகனே (6‍33)

குருமொழி யொன்றைக் குணங்கொண் டர்ச்சிக்கிற்கொடும்பழிக
ளொருபோது நிற்கா தொடுங்கிசி ரடையு முயர்ந்தநிலைத்
தருகுஞ் சராசர மியாவுந் தானுருநேர்த் தனையடைந்து
விருதுகூறி யெங்கும் போற்ற விளங்குவர் விநாயகனே (684)

## ஒருமொழிக் கிலக்கண முரைத்தல்,

### நிஷ்டானுபூதி.

ஒருமொழியாலே சுருதியாகமநூ லுயர்புராணமுமெலா மொழியும், ஒருமொழியாலே சரிதைகற்கிரியா யோகபாவனையெலா மொழியும், ஒருமொழியாலேயாண்டபூதங்களொடுங்கிடுந்தன்னிலைதோன்றும்,ஒருமொழி சும்மா விருத்தலாமதனு லொப்பிலாச்சிவபத மடைவர்.

சரிதையின் றொழிலினுலுஞ்சற்கிரி யையினும்யோகம், புரிதருமுயற் சியானும்பொருந்தொணு தெனபர் மேலோர், உரிய தேசிகனுரைக்குமொ ருமொழி யுண்மையாலே, அரியமெய்ஞ் ஞானவீடிங் கடைவது திண்ண மாமே.

### பதிபசுபாசவிளக்கம்.

தாரணி யவர்க்குமேலாஞ் சத்தினி பாதமெய்த, வுகுணி போலத் தோன்றி யொருமொழியா லெனக்குக், கோரணிகாட்டுமாறு சமயத்தின் கோளைநீக்கிப், பூரண சொருபங் காட்டும் புண்ணியன் பொலன்றுள் போற்றி

### ஞானிகள் நிலைமை.

குருபதத்தஞ் சலிகூப்பி யாதனத்தினுறைந்து சுருமந் கூறியவோர் மொழியுள்ளத் திருத்திக், கருவிவெலா மொழித்துக் காண்பான்காட்சி

யொழித்து காணாத கண்டொளி யாதுகளித் துவப்பார், பொருவருநிட் களசுத்த மேகமென விளக்கும் போக்குவரவில்லாத புனித பூரணத்தை' இருவகை வாசனையுமிழர் திருக்குமவன் ஞானி யவர்க்குப் பிறவியுமுண் டெனவிளம்பலாமோ.

## கடவுளந்தாதி.

பாதத்திலேமனம் பற்றுவர் முற்றவர் பாசமற்றோர், நீதத்திலேநிலை பேராமற் சாதிப்பர் சித்துவித்தை, வாதத்திலேபொரு ளொன்றாகக் காண்பர் மனதுநெறி, நீதத்திலேகுரு சொல்லாற் சொன்ன நிலறயிதுவே.

## சிற்றம்பலநாடிகள்.

மொழியாலுரைக்கிற் குறிக்கப் படுமென் றமூதறிவால், ஒழியாநிறைவு மானந்த வாழ்வையு மொண்புகலின், அழியாவிரதஞ் சிற்றம்பலநாடி யக மகிழ்ந்து, விழியாலெனக் களித்தான் விடுத்தேனின்ப மேவிட்டதே.

## மஹாவாக்கியம்.

இழிவிழிக ளுலகறிந்துந்தனையறியா ததுபோ லியானறியும் பொருளலதிங் கெனையறியா மையினால், கருவிடைபுக் கின்பதுன்பக் கடலிடையே சுழன்று கண்கலக்கப் படுவேனைக் கருணைவிழி யதனால், அருவினைக ளறநோக்கி யாணவமே போக்கி யகமகமென் றிருந்ததெலா மறிவுகொண்டே நீக்கிப், பருவமதிற் பதந்தாக்கிக் கற்பனைகளியாவும் பாழாக்கித் தாணுக்கும் பாகுருவைப் பணிவாம்.

## சிவஞானதீபம்.

சாத்திரம் புத்தகம்பூசை சமயமதந் தருக்கம் தந்திர மந்திரயோகந் தவம்விரதஞ் சீல, மேத்தரிய பாவனையெண் சித்திகளே முதலா மெய்ப்பயனு முத்திவிலக் கெனவொருசொல் லதனால், தீர்த்தவன்மெய்த் தேசிகனு மவனருளா லகலாச்சித்தமல மறுத்துலகிற் றீமைநன்மை செயினும், வாய்த்தகதி ரன்செயல்போ லிசைந்திசையா தொழுகும் வண்மையரே மெய்ஞ்ஞான வுண்மை நிலையினரே.

## நிஷ்டாநுபூதி.

கட்டறத் துறந்தே யுயிர்பொருட்சார்பைக் கருதிமேம் வாசனை யனைத்தும், ஒட்டறவிடித்து ஞானநூலனைத்து மோர்ந்திடி னென்பயனுதவும், எட்டெற்கரிய சற்குரு வருளா லியம்புமோர் மொழியினைப் பெற்றே, நிட்டை சாதித்தே சகலகேவலங்க ணீங்கிடிற் பிறப்பிறப்பறுமே.

## ஔவைக்குறள்.

குருவினடி பணிந்து கூடுவ தல்லார்க் கருவமாய் நிற்குஞ் சிவம்.

## ஞானாசாரிய ராவாரினைய ரெனல்.

—*—

### திருக்கதிரீசிய விவேகம்.

புகழ்ப்பெருமை செல்வம் பொருளைகுடி சர்வ
மிகழ்வாதி யின்றி யெவர்க்குந்—தகும்விடையிற்
கன்னனு மலையாழி காரருக்கன் சியமுழை
யன்னவன்கா ணாசிரிய—னாம்.

சரியைகிரி யாயோகந் தன்மயமா ஞான
மொருநான்கின் காட்சி யொருங்கே—மருவினுந்தான்
ஞானமே மேலிட்டு நற்சுகவாழ் விற்பிறழா
தானவனே யாசிரிய—னாம்.

அறம்பொரு ளின்பம்வீ டாயவோர் நான்கின்
திறந்தெரிந்திங் கொன்றாக்கிச் சிந்தை—கறங்கென்ன
வாடாது நிற்றக் கருநெறியெல் லாமுறையில்
கோடா தளிப்போன்—குரு.

### பதிபசுபாசவிளக்கம்.

பூசையால் விரதந்தன்னாற் புண்ணியந் தீர்த்தந்தன்னா. லாசறுதருமந் தன்னா லளவறு வேள்விதன்னாற், பாசபந் தங்கள்பொன்றா பாரிடை நம்போல்வந்த, தேசிக னருளுஞான தீக்கையாற் பொன்றுமன்றே.

சீடன்றன் பவநோய்க்குத் தேசிகன்வாய்மொழிமருந்தா, மாடகமா மலையேறி யானந்த மடைந்தான்போ, னாடரிய வுயர்முத்தன் ஞானத்தா லடைந்தோரை, வீடுபுகக் குடியேற்றும் வித்தகனு மிவனாமால்

### கந்தானுபூதி.

ஆனாலமுதே யயில்வே லரசே, ஞானாகரனே நவிலத் தகுமோ, யானாகிய வென்னை விழுங்குவெறுந், தானாய் நிலைநின்றது தற்பரமே.

வானோபுனல்பார் கனன்மாருதமோ, ஞானோதயமோ நவினான்மறையோ, யானோ மனமோ வெனையாண்டவிடந், தானோ பொருளாவது சண்முகனே,

### சிவஞானப்பிரகாச வெண்பா.

குருவே திருமாலாங் கோகனகத் தாளுங்
குருவே யுரையிறந்த கோவாங்—குருவேயிங்
கெல்லாமா யல்லவுமா யெங்கு நிறைவானும்
வல்லாள னாகு—மதி.

ஞானவிளக்கம்.

அடிக்கரும்பு காட்டுகின்ற வாராத வின்பை
முடிக்கரும்பு காட்டுமோ மூட—மிடிக்கின்ற
மெய்ஞ்ஞானி காட்டுகின்ற மெய்ஞ்ஞானந் தன்னையொரு
பொய்ஞ்ஞானி காட்டுவித்தல்—பொய்.

சரிதையிலே யீசன் சடவடிவாய் நின்றான்
கிரியையிலே மந்திரத்திற் கிட்டி—யருகிருந்தா
ஞானயிலா யோகத்தி லுள்ளொளியா யேநின்றான்
ஞானமதி ஞானி—ஞான்

—:※:—

இருபத்துமூன்றாவது,

## ஞானச் சமாதி தனிமுத்தி கதிநிலை.

—:§:—

நாடுதற் கரிய பரிபூரண மதி ஞட்டமதா
யோடும்பொன் னுஞ்சம மாயெண் ணுமுளமு மூன்றாக்கம்
நீடுஞ்சிந் தையற்று சுழிச்சியி னெருங்கி நிகழானந்த
வீடுபுகுந்து விளங்குதற் சமாதி விநாயகனே, (685)

அனைத்துந் தன்னுரு வாய்நினைக் தந்நினை வற்றுசதா
தனையு மறந்து தத்துவ மியாவையுந் தானகன்றுத்
தினைத் துணையேனும் பற்றுக ளில்லாத் திறமையுமூழ்
வினையற்றுத் தானாய் விளங்குதற் சமாதி விநாயகனே, (686)

பூதமு மவைசட் புகுமிடந் தனுவெனும் பூதியமு
நாத நாதாந்த வெறும்வெளிப் பாழெனு நாடசனிற்
போதமும் வேதமும் பொய்யுமெ யற்றின்ப போகமுற்று
மேதக்க மூர்த்தியாய் விளங்குதற் சமாதி விநாயகனே. (687)

பகலிர வென்றும் பாபமும் புண்ணியப் பற்றுகளாஞ்
சுகதுக்க மென்ப தொருசிறி துளத்திற் றோன்றிடாது
புகழிகழ் நாம ரூபமு மில்லாதப் புனிதநிலை
யகந்தனை மறந்து விளங்குதற் சமாதி விநாயகனே. (688)

சத்துரு மித்துரு வன்னியஞ் சொந்தஞ் சாற்றுகின்ற
வுத்தம மத்திப மதமங் குணங்குணி வுபாயமுடன்
நித்திய மநித்திய புத்தியுஞ் சித்தமு நிறைவுற்றவை
வித்திலா வுருவாய் விளங்குதற் சமாதி விநாயகனே. (689)

வான்வளி வன்னி நீர்மண் முதலாய் வழங்குகின்ற
ஊனுட லுயிராய் மலை சமுத்திரமா யுறவுபகைத்
தேனுடன் கைப்பு முதலவை யெல்லாஞ் சேர்ந்துளவம்
மேன்மையெலாந் தானாய் விளங்குதற் சமாதி விநாயகனே ()

காண்பொரு ளியாவினுங் கலந்துங் கலவாது கருத்ததுபோய்
வீண்டம்பந் தன்னிலே விழுகினும் விழாது விதந்தலைத்து
தூண்டா விளக்கெனத் தூங்காமற் றூங்கி தோந்தபந்தம்
வேண்டாதுத் தானாய் விளங்குதற் சமாதி விநாயகனே (691)

பார்த்தவை யெல்லாம் பார்த்தும் பாராப்படிப் பார்வையற்று
கீர்த்தியும் பெருமை கிளர்த்தும் பலவாசைக் கேண்மையவைப்
பூர்த்து வுதிர்ந்திடும் பூவென நீங்கிப் புலாலுடம்பில்
வேர்த்திடாமற் றானாய் விளங்குதற் சமாதி விநாயகனே. (692)

உண்டவன் ருசியறி யாதது போலு முயர்மனைச்சீர்
கொண்டவன் பெண்போகந் தெரிந்திலான் போலுங் குருவடியைக்
கண்டவ னனுபவித் தவைமறந் தான்போன்றுக் காணுநிலை
விண்டயாவுந் தானாய் விளங்குதற் சமாதி விநாயகனே. (693)

தேகாபி மானந் தேசாபி மானந் திகழ்சமய
மோகாபி மானம் பத்தியுஞ் சித்தியு முத்தியெலா
மேகாபி மானமா யெழுந்தவை யழித்து யெவையுமின்றி
மேகமு மின்னல்போல் விளங்குதற் சமாதி விநாயகனே (694)

தத்துவக் குப்பையை சாதி போராட்டத் தலைச்சுமையை
பித்துப் பிடித்தலைக்கச்செய்யு மஞ்ஞானப் பேய்க்குணத்தை
சித்து வித்தைத்தந்திர மந்திரம் பலபல சேட்டையெலாம்
வித்தின்றி மாய்த்து விளங்குதற் சமாதி விநாயகனே. (695)

சஞ்சலஞ் சந்தோஷ நரைதிரை வினைமூப்பச் சாக்காடுடன்
வஞ்சனைக் குரோத மதமுடன் லோப மற்றவைகள்
வெஞ்சினப் பாபக் குழியென் றவைகளை வெறுத்துதன்னை
விஞ்சைபினுற் கண்டு விளங்குதற் சமாதி விநாயகனே. (696)

சமரச ஞானச் சுகாதீத வாழ்விற் றுன்துலவி
இமயவ ரிருடிய ரன்மா லிந்திர ரெல்லவரும்
அரிக்கை யாயிருந் தர்ச்சிக்கு நிலையி லரசபுரி
விமலனாய்த் தானாய் விளங்குதற் சமாதி விநாயகனே, (697)

தோற்றமு மொடுக்கஞ் சொல்லுஞ் சுருதியுஞ் சூட்சுமமு
மாற்றமு மாறாத வொன்று மிலாதுமன மியப்பெண்ணை

யாற்றலு மாற்றலு மில்லா தெலாமொன்றா யகக்கண்ணிடம்
வேற்றுமை யின்றி விளங்குதற் சமாதி விநாயகனே. (698)

விட்டில் பூச்சியது விளக்கினில் மாயும் விதமதைப்போல்
சுட்டது சட்டி விட்டது கையெனத் தொல்லையெல்லாம்
பொட்டெனத் தொலைத்துப் புலன்வழி யடைத்துப் போதமற்று
வெட்டெனப் பேசாமன் விளங்குதற் சமாதி விநாயகனே, (699)

பொய்யா விளக்கே விளக்கென வள்ளுவர்ப் புகன்றமறை
தெய்வ மொழியெனத் தவமவமற்றுச் செய்கை யற்று
வைதலும் வாழ்த்தலு நினைவின்றித் தன்னை மறந்துசதா
மெய் யழியாது விளங்குதற் சமாதி விநாயகனே. (700)

மழித்தலு நீட்டலும் வேண்டா மெனச்சொன்ன வள்ளலைப்போற்
செழித்தலு முழைத்தலும் பழித்தலு மிவைகாணுஞ் சிந்தைதன்னை
கழித்தலுங் கூட்டலு மில்லாப் படிநின்று கடமழியா
விழித்தும் விழியா விளங்குதற் சமாதி விநாயகனே. (701)

சரவசர மெலாந் தானிலா திலையெனுஞ் சாட்சிகொண்டு
சிரம்பிர தானம்போ னிட்டைக்கு ளாய்ந்து சிந்தைநெறி
தரம்பிரித் தவையாவு மொன்றாக்கி வடயோகந் தானுமின்றி
விரதங்கள் வேண்டா விளங்குதற் சமாதி விநாயகனே, (702)

சூரியனைக் கண்ட பனிவொடுங்குதற்போற் றூயகுரு
ஆரியனைக் கண்ட மாணவ னருட்பெற் றானந்தமுற்று
பாரிசை வேட்கைக ளற்று ஞானந்தன்னைப் பற்றுவனோர்
வீரிய மொன்றின்றி விளங்குதற் சமாதி விநாயகனே. (703)

ஆடங்கம் வேண்டி யலைப்போல் விடாதலை யந்தகர்க்குப்
பாடனைத்தும் விடாப் படிமுத்தி சுகநிலைப் பற்றிடுமோ
கேடனைத்தும் விட்டு பசுபாச மற்றுண்மை கீர்த்திவேண்டும்
வேடங்க ளொன்றின்றி விளங்குதற் சமாதி விநாயகனே (704)

*சைவமாய்ச் சைவ னாகவுஞ் சமயனுஞ் சமயமுமாய்
வெய்யலைப் போலெரித் தெப்பொருளையு நடும் விஞ்சைகுரு
தெய்வமொழி *தத்வமசி யெனு மதுவாகி சிறந்துசதா
மெய்க்கொண்டு தானாய் விளங்குதற் சமாதி விநாயகனே (705)

*சைவம்:—உடல், பொருள், ஆவி, இம்மூன்றினையுந் தத்தஞ்செய்து குருமூர்த்தியி னனுக்ரஹத்தால் தன்னையின்னதென்றுத் தெளியுநிலை.

சைவன்:—தன்னையுள்ளபடி அறிந்து அவைக்கேற்ற வழிபாட்டில் வழுவின்றி சதா நித்தியமாயிருப்பவன்.

**சமயம்:**— தன்னையுள்ளபடி அறிந்தநிலை வழுவாத பக்குவப்படும் வேளை, அதாவது :வஸ்து பர்சோதினு விளக்கநேரம, சமுச்சிசாதனை கைவந்து முற்றுப்பெற்ற நிரதிசயானந்த போகமுத்தி முதிர்ந்த காலம்.

இவைக்கைக்கூடி ஒன்ருய்க் கலந்துத்தானுய் சருவமாய் விளங்குதல் அழிவிலா மங்களமாதலால், அம்மங்கள கலியாணகுணமாகும் அறிவானந்த சொரூபமே சிவமென்பர். அனுபவியைக் குறித்து ஆண்பாலாக வுருவகப் படுத்தி தத்வார்த்தலட்சண விலக்கணத்தை பிரமமாக்கி அவற்றையே சிவஞகமுற்றுப் படுத்த சிவனென்பார். ஏகாந்த லயக்கிரம சோதனையுட்பட்டு ஒன்றித்து வுருவகப்பரிச்சின்ன விஸ்ராந்தியேர்படலான் சொரூபசித்து தோற்றுதோற்றங்கள் வேறுபடாது சமத்வநிலையில் (சலம் பாலில் கலந்த வண்ணம்) சருவம் சிவத்திலொடுங்கி நிற்றலால் சிவமெனவும் சிவமயமெனவும், யதார்த்த வுருவகமேற்பட்டுள்ளதை குருமுகத்தில் விசாரித்துத்தெளிதல் வேண்டுமெனப் பெறப்பட்டது (சிவம் சத்து - சவம் அசத்து)

***தத்வமசி:**—சாமவேதமுடிவாகிய தத்வமசி யென்னும் மகாவாக்கியார்த்த அனுபவம் அவ்வர்த்தத்தை யுணர்த்துங்கால் அதாவது அவை போதிக்கிற முறைமையில் அதுநீயாகின்ருயென்றும் அதுநீயானுயென்றும் பொருர் கொண்டிருக்கும் (நிஷ்ட்டாநுபூதி)

## ஞானமுத்திக் கிலக்கணமுரைத்தல்.

### தாயுமானசுவாமிகள்.

பக்திநெறி நிலைநின்று நவகண்டபூமிப் பரப்பைவலமாகவந்தும், பரவையிடை மூழ்கியு நதிகளிடை மூழ்கியும் பசிதாகமின்றி யெழுநா, மத்தியிடைநின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை வன்பசிதனக் கடைத்து, மௌனத்திருந்து முயர்மலை நுழைவு புக்கியு மன்னுதசநாடி முற்றுஞ், சுத்திசெய்தும்மூல பிராணனோ டங்கியைச் சோமவட்டத் தடைத்து, சொல்லரிய வமுதுண்டு மற்புடல்கற்பக டோறுநிலைநிற்க வீறு, சித்தி செய்துஞ் ஞான மலதுகதிகூடுமோ சித்தாந்த முத்திமுதலே, சிரகிரி விளங்கவரு தக்ஷணாமூர்த்தியே சின்மயானந்த குருவே.

### ஒழிவிலொடுக்கம்.

நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்—சேயார்
பெருமை சிறுமையிலை பின்னுமுன்னு மில்லை
வரைவற்று வேண்டியசெய்—வார்.

### சூதசங்கிதை.

மட்டுவார்வன மார்ப சருமம்போற், றொட்டுவானைச் சுருட்டுவ ருண்டெனிற், பெட்டுஞானம் பெறாது பேரின்பமே, யொட்டுமுத்தி யுறுநரு முண்டரோ.

### தேவிகாலோத்திரம்.

கருத்தடங்கின் முத்தியது கையாலிற் கட்டாகும், விரித்தபொருளிது வென்ன வறிவுடைய மேதக்கோர், திருத்தகுநல் லறிவாலே சித்தத்தைத் திறம்பாம, லருத்தியுட னிலைநிறுத்து மதுவறிவின் பயனாமால்.

மருவிய பொருண்மேலன்பாய் வானரம்போற் சரித்துத், திரியுமச் சித்தந்தன்னைத் திருத்துச் சூனியத்தேநின்றால், மருவினோர்ப் பிறிதலின்றி வானவரறிவுக் கெட்டாப், பொருவிலா சித்தசுத்த பொருளினை யடைவரன்றே.

மந்திரஞ் செபந்தியானம் பூசனைவணக்கம் வேண்டாம், அந்தமிலாத முத்திக் குபாயமே யறிதல் வேண்டுஞ், சிந்தனை புரமே செல்லிற் றுயரமே திரியமீட்கிற், பந்தமாந் துன்பநீங்கிப் பரமான வின்பஞ் சேர்வாய்.

ஆராத சித்தமானதோர் காலத் தடங்குமானாற், பேராமல் வருந்திக் காத்துப் பின்னைச் சிந்தனைகள் சென்று, சாராமல் வல்லவாறு தடுத்து சார்வான வெல்லாஞ், சேராமன் மயக்கநீக்கித் திரமாகச் செய்துகொள்வான்.

### பதிபசுபாசவிளக்கம்.

ஞானத்தைத் தவிரப்பாவக் குழாங்களை நாசஞ்செய்யு, ஞானம்வே றில்லையிந்த ஞானம்போ னலனொன்றில்லை, ஞான சாதகத்தையன்றிநவை யுறு குடும்பம்போக்கு, ஞானசாதனம் வேறில்லை நன்னெறியறி மாணாக்கா.

பாதக மனைத்து நீங்கும் பக்குவ சித்தத்தார்க்கு, மேதகு ஞானத்தின் கண் விருப்பமும் வியப்புமுண்டாம், பாதகத்தாற் கட்டுண்ட பதிதசித்தத் தார்க்கெல்லா, மேதகு ஞானவார்த்தை கிடைக்குமோ விளம்புங்காலே.

ஞானியேபுரு டோத்தம னாதலால், வானநாடரும் வந்து வணங்குவா, ரேனைநாடரு மேவலி னிற்பர்காண், ஞானிபூச்சிய மென்பதற் கையமோ.

செந்தழல் விளக்கமது சிறிய தாயினும், மந்த காரத்தினை யகற்றுமாறு போற், சிந்தவில் ஞானமுஞ் சிறிய தாயினு, மந்தமில் பாவங்க ளனைத்தும் போக்குமால்.

ஒளிவளர் பெருநெருப் புலர்ந்த காட்டமுந், தளிர்பசுங் காட்டமுந் தகிக்கும் பான்மைபோ, லொளிர்மதி யனைய வோர் ஞானவங்கியுங், களவிரு வினையையுங் கணத்தில் வாட்டுமால்.

மந்திரம்வல்லவன் வலியபாம்பொடு, தொந்தனையாயினும் விடந்தொடப்படா, னிந்தியப் பாம்பொடு விணங்கி நிற்பினு, நந்திய ஞானியு நவை தொடப்படான்.

### அகஸ்திகமுனிவர்.

வையஞ்சலமங்கி கால்வான் பலவுயிர் வான்முடியோ டெய்யும்பர முதற் சார்வதெல்லா மெம்பிரான்முருகா, தெய்யென நின்றநின் றருட் சிலம்போசைத் திருவிளையாட், டையநின்னங்கம தென்னங்கமாய் நின்ற வானந்தமே,

### தாயுமானசுவாமிகள்.

